
# 1972 அவ்யக்த முரளி



**<u>பொருளடக்கம் - 47</u>**


**18.01.1972 பாபா வரவில்லை!**

**21.01.1972 நிரந்தர யோகி ஆவதற்கான சுலபமான விதி!**

**02.02.1972 அன்பான புத்தியின் அடையாளங்கள்!**

**03.02.1972 தன்னை தெரிந்து கொள்வதினால் சுயக்கட்டுப்பாடு (நன்னடத்தை) மற்றும் நேரத்தை (முக்கியத்துவத்தை) தெரிந்து கொள்ளுதல்!**

**05.02.1972 நஷா மற்றும் நிஷானா!**

**27.02.1972 புனித அன்னப்பறவை ஆவதற்கான நினைவுச்சின்னம் தான் ஹோலிப் பண்டிகை!**

**28.02.1972 நேரத்திற்காக காத்திருக்காமல் எவரெடியாக (தயார் நிலையில்) இருப்பவர் தான் உண்மையான முயற்சியாளர்!**

**04.03.1972 அதிகாரி ஆவதற்காக அடிமைத்தனத்தை விடுங்கள்!**

**12.03.1972 வெற்றியின் ஆதாரம் சேகரிக்கும் சக்தி மற்றும் போராடும் சக்தி!**

**15.03.1972 தியாகம் மற்றும் பாக்கியம்!**

**02.04.1972 மகிமைக்குரியவராக எப்படி ஆவது?**

**27.04.1972 லக்கி (அதிர்ஷ்டசாலி) மற்றும் லவ்லி (மிகவும் அன்பானவர்) ஆவதற்கான முயற்சி!**

**03.05.1972 'லா-மேக்கர்' (சட்டத்தை உருவாக்குபவர்) ஆகுங்கள், 'லா-பிரேக்கர்' '(சட்டத்தை மீறுபவர்) ஆக அல்ல!**

**09.05.1972 தன்னுடைய முகத்தோற்றத்தின் மூலமாக எதிர்காலத்தை காண்பியுங்கள்!**

**10.05.1972 சுவமானத்தில் (சுயமரியாதையில்) இருப்பதன் மூலம் ஃபர்மானத்தின் (பாபாவின் கட்டளைகள்) பாலனை!**

**15.05.1972 உயர்ந்த நிலையை உருவாக்குவதற்கான சாதனம் மூன்று வார்த்தைகள் -நிராகாரி, அலங்காரி மற்றும் கல்யாணகாரி!**

**17.05.1972 சங்கடன் (குழுவாக செயல்படுவது) என்ற கோட்டையை உறுதியாக்குவதற்கான சாதனம்!**

**20.05.1972 சார ஸ்வரூபம் ஆவதால் எண்ணம் மற்றும் நேரத்தில் சேமிப்பு!**

**24.05.1972 மாற்றத்திற்கான ஆதாரம் உறுதியான எண்ணம்!**

**27.05.1972 ராவணனிடம் இருந்து விலகி தந்தையின் எதிரில் இருங்கள்!**

**31.05.1972 எதிர்காலத்தில் அஷ்ட தேவதை மற்றும் பக்தியில் இஷ்ட தேவதை ஆவதற்கான முயற்சி!**

**08.06.1972 சம்பூர்ண நிலையை அறிதல்!**

**10.06.1972 சூட்சும அபிமானம் மற்றும் அறியாத நிலை!**

**12.06.1972 ரிஃபைன் (சுத்திகரிக்கப்பட்ட) நிலையை அறிதல்!**

**14.06.1972 சுயநிலையில் நிலைத்திருப்பதற்கான முயற்சி மற்றும் அடையாளங்கள்!**

**16.06.1972 முகமலர்ச்சியாக இருப்பது தான் பிராமண வாழ்க்கையின் விசேஷ சம்ஸ்காரம்!**

**21.06.1972 விஷ்வ மகாராஜன் ஆகக்கூடியவர்களின் விஷ்வ கல்யாணகாரி (நன்மை செய்யும்) நிலை!**

**24.06.1972 எவரெடி ஆகி கடைசி நேரத்தை வரவழையுங்கள்!**

**26.06.1972 'டிஃபெக்ட்'ல் (பாதிப்பிலிருந்து) இருந்து பாதுகாப்பாக இருப்பது என்றால் 'பர்ஃபெக்ட்' (குறையற்றவர்) ஆவது!**

**11.07.1972 நிர்ணய சக்தியை அதிகரிப்பதற்கான உரைகல் -சாகார பாபாவின் சரித்திரம்!**

**12.07.1972 இறந்து உடலில் இருக்கிறேன் (மறுபிறவி) என்ற நினைவினால் குடும்பஸ்தன் மற்றும் இல்லறத்தை மறந்த நிலை (அதர்குமாரர்களின் பட்டியில்)!**

**14.07.1972 இறுதி சேவைக்காக நடமாடும் யோகி ஆகுங்கள்!**

**16.07.1972 சுத்தமான மற்றும் ஆத்மீக பலம் உள்ள ஆத்மா தான் ஆகர்ஷண மூர்த்தி ஆக இருப்பார்!**

**18.07.1972 பலஹீனங்களின் நிறைவு விழா கொண்டாடுபவர்கள்தான் தீவிர முயற்சியாளர்கள்!**

**19.07.1972 கூட்டாக இருப்பதின் (குழுவின்) மகத்துவம் மற்றும் கூட்டுக்குழுவின் மூலம் சான்றிதழ்!**

**22.07.1972 நஷ்டமோகா (பற்றுதலை வென்ற நிலை) ஆவதற்கான பல்வேறு யுக்திகள்!**

**28.07.1972 தூய்மையின்மை மற்றும் (வியோகம்) யோகமற்ற நிலையை அழிக்கும் சக்திகள் தான் அசுரர்களை அழிப்பவைகள்!**

**02.08.1972 ஒவ்வொரு காரியத்தையும் விதிப்பூர்வமாக செய்வதினால் ஸித்தியின் (வெற்றியின்) பிராப்தி!**

**04.08.1972 சர்விசபல் (சேவைக்குத் தகுதியானவரின்), சென்சிபல் (விவேகமானவரின்) மற்றும் எசன்ஸ்ஃபுல்லின் (சாரம் நிறைந்தவரின்) அடையாளங்கள்!**

**06.08.1972 உள்உணர்வில் சஞ்சலம் இருப்பதற்கான காரணம் விரதத்தில் உறுதியற்ற நிலை!**

**19.09.1972 கட்டாயங்களை முடிவுகட்டுவதற்கான வழி உறுதியான நிலை!**

**09.11.1972 ஞான நட்சத்திரங்களின் சம்மந்தம் ஞான சூரியன் மற்றும் ஞான சந்திரனோடு இருக்கிறது!**

**12.11.1972 அலௌகீக காரியம் செய்வதற்கான கலை!**

**20.11.1972 மனநிலையை பிரதிபலிக்கும் கண்ணாடி -சேவை!**

**22.11.1972 இறுதி சேவையின் இறுதி சொரூபம்!**

**23.11.1972 சக்தி தளத்தின் விசேஷங்கள்! (மதுபன் நிவாசிகளின் எதிரில் பாப்தாதாவால் கூறப்பட்ட மகாவாக்கியங்கள்)**

**04.12.1972 மகாவீர் ஆத்மாக்களின் ஆன்மீக டிரில் (பயிற்சி)!**

**24.12.1972 சங்கம யுக உயர்ந்த ஆத்மாக்களின் பொறுப்பு!**

**தனிப்பட்ட சந்திப்புகள் -பார்ட்டிகள் etc**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

## 18.01.1972: பாபா வரவில்லை!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 21.01.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிரந்தர யோகி ஆவதற்கான சுலபமான விதி!

எப்படி ஒரு நொடியில் சுவிட்ச் ஆன் மற்றும் ஆஃப் செய்யப்படுகிறதோ அதே போல் ஒரு நொடியில் உடலின் ஆதாரம் எடுத்து, பின்பு ஒரே நொடியில் உடலிலிருந்து விலகிய அசரீரி நிலையில் நிலைத்திருக்க முடியுமா? இந்த நேரம் உடலில் வந்தீர்கள் மற்றும் அடுத்த நேரம் அசரீரி ஆகி விட்டீர்கள் என்ற இந்தப் பயிற்சியைச் செய்ய வேண்டும். இதைத் தான் 'கர்மாதீத்' (பாவகர்மங்களை அழித்த நிலை) நிலை என்று கூறப்படுகிறது. அந்த மாதிரி அனுபவம் இருக்கும். எப்பொழுது விரும்பினாலும் யார் எப்படிப்பட்ட ஆடையை அணிவது மற்றும் அணியாமல் இருப்பது என்பது அவர் கையில் இருக்கிறது. அவசியம் ஏற்பட்டது அணிந்தார், அவசியம் ஏற்படவில்லை என்றால் உடலை விட்டு விலகி விட்டார். அந்த மாதிரி அனுபவம் இந்த உடல் என்ற ஆடையில் இருக்கட்டும். காரியம் செய்து கொண்டும் ஏதோ ஒரு ஆடை அணிந்து காரியம் செய்து கொண்டிருக்கிறோம் என்ற அந்த மாதிரி அனுபவம் இருக்க வேண்டும். காரியம் முடிவடைந்தது, உடன் ஆடையிலிருந்து விலகி விட்டோம். உடல் மற்றும் ஆத்மா இரண்டிற்குமான வித்தியாச நிலை பொதுவான காரியம்

செய்து கொண்டிருக்கும் போதும் அனுபவம் ஆக வேண்டும். எப்படி ஏதாவது பயிற்சி ஏற்பட்டு விடுகிறது இல்லையா? அது போல் இருக்க வேண்டும் ஆனால் இந்தப் பயிற்சியை யாரால் செய்ய முடியும். யார் உடலையும் சேர்த்து மற்றும் சரீர உறவுகளின் என்னென்ன விஷயங்கள் இருக்கின்றனவோ உடலின் உலகம், உறவு மற்றும் என்னென்ன அனேக பொருட்கள் இருக்கின்றனவோ அவற்றிலிருந்து முற்றிலும் விலகி இருப்பாரோ, அவரால் செய்ய முடியும். எப்பொழுது கொஞ்சம் கூட பற்றுதல் இல்லாமல் இருக்கிறதோ அப்பொழுது விலகியவராக ஆக முடியும். ஒருவேளை சூட்சும எண்ணத்தில் கூட லேசான நிலை இல்லை என்றால் விடுபட்டிருக்க முடியாது அதாவது விலகிய நிலையின் அனுபவம் செய்ய முடியாது. மஹாரதிகள் இப்பொழுது இந்தப் பயிற்சி செய்ய வேண்டும். முற்றிலுமே விலகிய நிலையின் அனுபவம் ஏற்பட வேண்டும். இதே நிலையில் இருப்பதால் மற்ற ஆத்மாக்களுக்கும் உங்களிடமிருந்து விலகிய (பற்றற்ற) நிலையின் அனுபவம் ஏற்படும். அவர்களும் உணருவார்கள். எப்படி யோகாவில் அமர்ந்திருக்கும் நேரம் இந்தப் பயிற்சியை செய்விப்பவர் விலகிய நிலையில் இருக்கிறார் என்ற அனுபவம் ஏற்படுகிறது இல்லையா அதே போல் முழு நாள் நமது நடைமுறை காரியங்களுக்கிடையே ஃபரிஷ்தா நிலையின் சாட்சாத்காரம் ஏற்படும். இங்கு இருந்து கொண்டிருந்தாலும் அனேக ஆத்மாக்களுக்கு யார்யார் தங்களுடைய சத்யுக குடும்பத்தின் நெருக்கத்தில் வருபவர்களாக இருப்பார்களோ அவர்களுக்கு உங்களுடைய ஃபரிஷ்தா ரூபம் மற்றும் எதிர்கால ராஜ பதவி இரண்டின் சாட்சாத்காரம் சேர்ந்தே ஏற்படும். எப்படி தொடக்கத்தில் பிரம்மாவின் சம்பூர்ண சொரூபம் மற்றும் ஸ்ரீகிருஷ்ணர் இரண்டின் சாட்சாத்காரத்தையும் (திவ்ய காட்சி) சேர்த்தே பார்த்தீர்களோ, அப்படி இப்பொழுது அவர்களுக்கு

உங்களுடைய இரட்டை ரூபத்தின் சாட்சாத்காரம் ஏற்படும். வரிசைக்கிரமமாக இந்த விலகிய நிலையில் வந்து கொண்டே இருக்கிறீர்கள் என்றால் உங்களுக்கும் இந்த இரட்டை சாட்சாத்காரம் ஏற்படும். இப்பொழுது இந்த முழு பயிற்சி ஏற்பட்டு விட்டது என்றால், அங்கங்கே இருந்து இதே செய்தி வரத் தொடங்கி விடும். எப்படி தொடக்கத்தில் நெருக்கத்தில் வரக்கூடிய அனேக ஆத்மாக்களுக்கு வீட்டிலிருந்தபடியே சாட்சாத்காரம் ஏற்பட்டது இல்லையா? அதே போல் இப்பொழுதும் சாட்சாத்காரம் ஏற்படும். இங்கே அமர்ந்திருந்த போதிலும் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் உங்களுடைய சூட்சும சொருபம் சேவை செய்யும். தற்பொழுது இந்த சேவை தான் இன்னும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. சாகார பாபாவில் அனைத்து முன்னுதாரணங்களையும் பார்த்து விட்டீர்கள். அனைத்து விஷயங்களும் நாடகப்படி வரிசைக்கிரமமாக ஏற்பட வேண்டும். எவ்வளவிற்கு எவ்வளவு சுயம் தான் ஒளி வடிவ உடலுடைய ஃபரிஷ்தா சொரூபமாக ஆவீர்களோ, அவ்வளவு உங்களுடைய பரிஷ்தா ரூபம் சேவை செய்யும். ஆத்மாவிற்கு முழு உலகத்தையும் சுற்றி வருவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கிறது? அப்படி இப்பொழுது உங்களுடைய சூட்சும சொருபமும் சேவை செய்யும் ஆனால் யார் இந்த விலகிய நிலையில் இருப்பாரோ, சுயம் ஃபரிஷ்தா ரூபத்தில் நிலைத்திருப்பாரோ அவருடைய சாட்சாத்காரம் ஏற்படும். ஆரம்ப காலத்திலும் அனைத்து சாட்சாத்காரமும் ஏற்பட்டது. ஃபரிஷ்தா ரூபத்தின் சம்பூர்ண நிலை மற்றும் முயற்சி செய்பவரின் நிலை இரண்டும் தனித்தனியாக சாட்சாத்காரம் ஏற்பட்டது. எப்படி சாகார பிரம்மா மற்றும் சம்பூர்ண பிரம்மாவின் சாட்சாத்காரம் தனித்தனியாக ஏற்பட்டதோ அதே போல், நெருக்கமான குழந்தைகளின் சாட்சாத்காரமும் ஏற்படும். எப்பொழுது குழப்பமான சூழ்நிலை

இருக்குமோ அப்பொழுது சாகார உடல் மூலமாக எதையும் செய்ய முடியாது மேலும் இந்த சேவை மூலமாகத் தான் பிரபாவமும் ஏற்படும். எப்படி ஆரம்பத்தில் கூட சாட்சாத்காரத்தினால் தான் பிரபாவம் ஏற்பட்டது இல்லையா? பார்த்தும், பார்க்காமலும் அனுபவம் பிரபாவத்தை ஏற்படுத்தியது, அதே போல் கடைசியிலும் கூட இதே சேவை தான் நடக்கும். தன்னுடைய சம்பூர்ண சொரூபத்தின் சாட்சாத்காரம் தனக்குத் தானாகவே ஏற்படுகிறதா? இப்பொழுது சக்திகளை அழைப்பது ஆரம்பம் ஆகி விட்டது. இப்பொழுது பரமாத்மாவைக் குறைவாக அழைக்கிறார்கள், சக்திகளை அழைப்பது மிக வேகமாகத் தொடங்கி விட்டது. எனவே இந்த மாதிரி பயிற்சி இடையிடையே செய்ய வேண்டும். பழக்கம் ஏற்பட்டுவிட்டால் பின்பு மிகுந்த ஆனந்தம் தானாகவே அனுபவம் ஆகும். ஒரு நொடியில் ஆத்மா உடலை விட்டு விலகியதாக ஆகி விடும், பயிற்சி ஏற்பட்டு விடும். இப்பொழுது இந்த முயற்சி தான் செய்ய வேண்டும். நல்லது.

தற்சமயம் முயற்சி செய்வதில் மூன்று நிலைகள் இருக்கின்றன. அந்த மூன்று நிலைகளையும் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய சக்திக்கேற்றபடி கடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த மூன்று நிலைகள் யாவை? ஒன்று வர்ணனை, இரண்டாவது சிந்தனை மற்றும் மூன்றாவது மூழ்கிய நிலை. பெரும்பான்மையோர் வர்ணனையில் அதிகமாக இருக்கிறார்கள். சிந்தனை மற்றும் மூழ்கிய நிலையின் குறைவு இருக்கும் காரணத்தினால் ஆத்மாக்களின் மனோபலம் குறைவாக உள்ளது. வர்ணனை மட்டும் செய்வதினால் வெளிமுகமான சக்தி தென்படுகிறது ஆனால் அதன் மூலம் பிரபாவம் ஏற்படுவதில்லை. சிந்தனை செய்யவும் செய்கிறார்கள் ஆனால் உள்நோக்குமுகமாகி சிந்தனை

செய்வது குறைவாக உள்ளது. பாய்ண்டுகளை (ஞானத்துளிகளை) சிந்திக்கிறார்கள் ஆனால் ஒவ்வொரு பாய்ண்ட் மூலமாக சிந்தனை மற்றும் கடைந்தெடுப்பதினால் சக்தி சொரூபமான வெண்ணெய் வெளியாக வேண்டும். அதன் மூலம் சக்தி அதிகரிக்கும். திட்டம் என்னவோ தீட்டுகிறார்கள். அதன் கூடவே அனைத்து சக்திகளின் ஒப்பனை என்ன இருக்க வேண்டுமோ அது இல்லை. ஏதாவது ஒரு பொருள் எவ்வளவு தான் விலைமதிக்க முடியாததாக இருந்தாலும் அதை ஒருவேளை அதன் தரத்திற்கேற்றார் பொல் ரூபத்தில் அலங்கரித்து வைக்காவிட்டால், அந்த பொருளின் மதிப்பு தெரிய வருவதில்லை. இதே முறையில் ஞானத்தின் சிந்தனை என்னவோ ஓடுகிறது ஆனால் தன்னுள் ஒவ்வொரு ஞானத்துளியின் மூலமாக சக்தி என்ன நிரப்ப வேண்டுமோ அதை குறைவாக நிரப்புகிறீர்கள். எனவே உழைப்பு அதிகம் ரிசல்ட் குறைவாக இருக்கிறது. மனதில், திட்டமிடுவதில் உற்சாகம் மிக அதிகமாக இருக்கிறது ஆனால் நடைமுறை ரிசல்ட்டைப் பார்த்தோம் என்றால், மனதில் அழியாத ஊக்கம் உற்சாகம் இருப்பதில்லை. ஒரே சீரான சக்தியின் என்ன நிலை இருக்க வேண்டுமோ அது இருப்பதில்லை. ஒவ்வொரு ஞானத்துளியையும் சிந்தனை செய்வதன் மூலமாக தன்னுடைய ஆத்மாவில் சக்தி எப்படி நிரப்பப்படுகிறது என்ற இந்த அனுபவத்தை அறியாதவர்களாக இருக்கிறார்கள். எனவே உள்நோக்குமுகமான நிலை, அதீந்திரிய சுகத்தின் பிராப்தியை அனுபவம் செய்வதில்லை. எதுவரை அதீந்திரிய சுகம் மற்றும் பிற பிராப்திகளின் உணர்வு இல்லையோ அதுவரை அற்பகாலத்தின் ஏதாவது பொருள் தன் பக்கம் அவசியம் ஈர்க்கத்தான் செய்யும். அப்படி தற்சமயம் சிந்தனை சக்தி மூலமாக ஆத்மாவில் அனைத்து சக்திகளையும் நிரப்புவது அவசியமாகும். அப்பொழுது தான் மூழ்கிய நிலை

நினைவில் இருக்கும் மற்றும் தடையும் அகலும். எப்பொழுது ஆன்மீக நிலையின் சக்தி குறைந்து விடுகிறதோ அப்பொழுது தடைகள் வருகின்றன. தற்சமயம் சிவராத்திரியின் சேவைக்கு முன்பு தன்னுள் சக்திகளை நிரப்புவதற்கான வேகம் வேண்டும். யோகாவின் நிகழ்ச்சிகளை வைக்கிறீர்கள் ஆனால் யோகா மூலமாக சக்திகளை அனுபவம் செய்வது, செய்விப்பது அந்த மாதிரி வகுப்புக்களின் அவசியம் இப்பொழுது தேவைப்படுகிறது. நடைமுறையில் தன்னுடைய நன்மைக்கான ஆதாரத்தினால் மற்றவர்களுக்கு நன்மை கொடுக்க வேண்டும். வெளி சேவைகளின் திட்டத்தை மட்டும் யோசிக்கக் கூடாது, ஆனால் அனைத்து பக்கங்களிலும் முழுமையான பார்வை தேவை யாக இருக்கிறது. பொறுப்பிலிருப்பவர்களுக்கு நம்முடைய இந்த பக்கத்தின் மலர்த்தோட்டம் எந்த விஷயத்தில் பலஹீனமாக இருக்கிறது என்ற சிந்தனை ஓட வேண்டும். எந்த முறையிலாவது தன்னுடைய மலர்த்தோட்டத்தின் பலஹீனங்கள் மீது கடுமையான பார்வை வைக்க வேண்டும். நேரம் செலவழித்துகூட பலஹீனங்களை அழிக்க வேண்டும். சக்திகளின் பிரபாவத்தின் குறை ஏற்படுவதின் காரணமாக நடைமுறையில் அனைத்து விஷயங்களிலும் தொய்வு வந்து விடுகிறது. எனவே வினாஷத்தின் ஏற்பாடுகள் கூட மிக வேகமாக ஆரம்பித்து பின்பு தொய்வடைந்து விடுகிறது. ஸ்தாபனையில் வேகம் இல்லை என்றால், வினாஷத்தில் கூட வேகத்தை எப்படி அதிகரிக்க முடியும். எப்படி தொடக்கத்தில் உங்களுக்கு சக்தி நிலையின் போதை எவ்வளவு இருந்தது. தன் மீது கடுமையான பார்வை இருந்தது. இந்த தடை என்பது ஒன்றுமேயில்லை. மாயா ஒன்றுமேயில்லை என்று எவ்வளவு கடுமையான போதை இருந்தது ஆனால் தற்பொழுதோ தன் மீது மிகவும் கவனம் வைக்க வேண்டும். தன்னுடைய கர்மத்தின் விளைவுகளின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

நாடகப்படி வரிசைக்கிரமமானவராகவோ ஆகத்தான் வேண்டும். ஏதாவது காரணத்தினால் வரிசை எண் கீழே போகத்தான் செய்யும் ஆனாலும் சக்தியை நிரப்பும் காரியத்தை செய்ய வேண்டும். எப்படி சாகார பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள், இந்த மாதிரி ஏதாவதொரு அலை வரும்பொழுது, இரவு பகல் சக்தி கொடுப்பதற்கான விசேஷ சேவை, விசேஷ திட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பலமற்ற ஆத்மாக்களுக்கு, சக்தியை நிரப்புவதற்கான விசேஷ கவனம் இருந்தது. அதன் மூலம் அனேக ஆத்மாக்களுக்கு அனுபவமும் ஏற்பட்டது. இரவிலும் நேரத்தை ஒதுக்கி, ஆத்மாக்களுக்கு சக்தி நிரப்பும் சேவை நடந்தது. நிரப்ப வேண்டும் என்றால், இப்பொழுது விசேஷமாக சக்தி கொடுப்பதற்கான சேவை செய்ய வேண்டும். லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆகி, பிரத்யேகமாக இந்த சேவை செய்ய வேண்டும். அதன் மூலம் நாலாபுறமும் லைட், மைட்டின் பிரபாவமும் பரவி விடட்டும். இப்பொழுது இதன் அவசியம் இருக்கிறது. எவரேனும் செல்வந்தர் இருக்கிறார் என்றால் தன்னுடைய நெருங்கிய உறவினர்களுக்கு உதவி செய்து உயரே தூக்கி விடுகிறார். அதே போல் தற்சமயம் எந்தவொரு பலஹீனமான ஆத்மாக்கள், தொடர்பில் இருக்கிறார்களோ அவர்களுக்கு விசேஷ சக்தியை வழங்க வேண்டும். நல்லது.

நிரந்தரமாக தேக உணர்வை மறந்து விட வேண்டும்; அதற்காக ஒவ்வொருவரும் அவரவர்கள் சக்திக்கேற்றபடி வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். படிப்பின் லட்சியமே தேக அபிமானத்திலிருந்து விலகி, ஆத்ம அபிமானி ஆவதாகும். தேக அபிமானத்திலிருந்து விடுபடுவதற்காக முக்கியமான யுக்தி இது தான் -எப்பொழுதும் தன்னுடைய சுவமானத்தில்

(சுயகௌரவத்தில்) இருந்தீர்கள் என்றால், தேக அபிமானம் விடுபட்டுக் கொண்டே இருக்கும். சுவமானத்தில் சுவ (தன்னுடைய) மானமும் (உணர்வும்) இருக்கிறது. அதாவது ஆத்மாவின் உணர்வு. சுவமானம், நான் யார்? தன்னுடைய இந்த சங்கமயுகத்தின் மற்றும் எதிர்காலத்தினுடைய அனேக விதமான சுவமானங்கள் என்னென்ன என்று அவ்வப் பொழுது அனுபவம் செய்விக்கப்பட்டிருக்கிறதோ அவற்றிலிருந்து ஏதாவது ஒரு சுவமானத்தில் நிலைத்திருந்தீர்கள் என்றால் கூட, தேக அபிமானம் விலகிக் கொண்டே இருக்கும். நான் உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமணன் ஆவேன், இதுவும் சுவமானம் ஆகும். முழு உலகத்தில் பிரம்மாண்டம் மற்றும் உலகத்தின் அதிபதி ஆகக்கூடிய ஆத்மா நான், இதுவும் சுவமானம் ஆகும். எப்படி ஆரம்பத்தில் நீங்கள் பெண் என்ற தேக உணர்விலிருந்து விலகிச் செல்வதற்கான லட்சியம் இருந்தது. 'நான் ஆத்மா' ஆண் ஆவேன். இந்த ஆணின் சுபாவத்தில் நிலைத்திருக்கச் செய்வதினால் பெண் என்ற உணர்வு வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் விலகிச் சென்றது. அதே போல் தன்னுடைய புத்தியினுள் தற்சமயம் மற்றும் எதிர்காலத்தின் சுவமானத்தின் நினைவு இருந்தது என்றால் தேக அபிமானம் இருக்காது. சொல், வார்த்தை மாறுவதினால் சுவமானத்திலிருந்து சுவபாவமும் நல்லதாகி விடுகிறது. சுவபாவத்தின் (சம்ஸ்காரம்) மோதலே எப்பொழுது ஏற்படுகிறது என்றால், எப்பொழுது தான் தனது சுயத்தின் உணர்வில் இருப்பதில்லையோ, அப்பொழுது தான். அப்படி சுவமானம் என்றால் சுயத்தின் மான் (சுய மரியாதை) அதன் மூலம் முதலில் தேக அபிமானம் நீங்கி விடுகிறது. மேலும் சுவபாவத்தில் வர மாட்டார்கள். கூடவே யார் சுவமானத்தில் நிலைத்திருக்கிறாரோ அவருக்கு தானாகவே மரியாதையும் கிடைக்கிறது. இன்றைய உலகத்தில் கூட மரியாதை மூலமாக

சுயமரியாதை கிடைக்கிறது இல்லையா? ஜனாதிபதி இருக்கிறார் என்றால், அவருக்கு மரியாதை அதிகமாக இருக்கும் காரணத்தினால் சுயமரியாதையும் அந்த மாதிரி இருக்கிறது இல்லையா? சுயமரியாதை மூலமாகத் தான் 'உலக மகாராஜன்' ஆவீர்கள் மேலும் அவருக்கு உலகம் மரியாதை செலுத்தும். அப்படி தன்னுடைய சுவமானத்தில் நிலைத்திருப்பதினால் அனைத்து பிராப்திகளும் தானாகவே கிடைக்கின்றன. யாருக்கு அனேக் விதமான சுவமானங்களைக் கேட்டிருக்கும் அனுபவம் இருக்குமோ, அவரால் தான் இந்த சுவமானத்தில் நிலைத்திருக்க முடியும். "நான் சிவ சக்தி ஆவேன்" இதுவும் சுவமானம் ஆகும். ஒன்று கேட்பது, இன்னொன்று அந்த சுவமானத்தின் சொரூபத்தில் நிலைக்கும் அனுபவம். அப்படி அனுபவத்தின் ஆதாரத்தில் ஒரு நொடியில் தேக அபிமானத்திலிருந்து சுவமானத்தில் நிலைத்து விடுவீர்கள். யார் அனுபவிமூர்த்தியாக இல்லையோ, கேட்டு மட்டும் பயிற்சி செய்து கொண்டிருக்கிறார் ஆனால் இதுவரை அனுபவியாக ஆகவில்லை என்றால், அவர்களுடைய நிலை அப்படித் தான் இருக்கிறது. ஒன்று தன்னுடைய சுவமானத்தின் பட்டியலை எடுத்தீர்கள் என்றால், பட்டியல் மிக நீளமானது. அந்த ஒவ்வொரு விஷயத்தையும் எடுத்து அனுபவம் செய்து கொண்டே சென்றீர்கள் என்றால். மாயாவின் சிறு சிறு விஷயங்கள் பலஹீனமாக ஆக்காது. மாயா பலஹீனமாக ஆக்குவதற்கு முதலில் தேக அபிமானத்தில் கொண்டு வருகிறது. தேக அபிமானத்திலேயே வரவில்லை என்றால் பலஹீனம் எங்கிருந்து வரும்? எனவே அனைவருக்கும் தன்னுடைய சுவமானத்தை நினைவூட்டுங்கள் மற்றும் அந்த சொருபத்தின் அனுபவிகளாக ஆக்குங்கள். நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று நினைக்கிறீர்கள், அப்படி நினைத்தவுடனேயே நிலை உருவாகி விடுகிறது இல்லையா?

ஆனால் யாருக்கு அனுபவம் இருக்குமோ அவருக்குத் தான் அந்த மாதிரியான நிலை உருவாகும். அனுபவம் இல்லை என்றால் நிலைத்திருந்து நிலைத்திருந்து அவர் தங்கியே போய் விடுவார், நிலை உருவாக முடியாது மேலும் களைப்பு, கடினமான மார்க்கம் என்று தான் அனுபவம் ஏற்படும். எப்படி செய்வது? என்ற இந்த கேள்வி எழுகிறது ஆனால் யார் அனுபவி மூர்த்திகளாக இருப்பார்களோ அவர்களுக்கு கடுமையான சோதனை வரும் நேரத்திலும் தன்னுடைய சுவமானத்தில் நிலைத்திருப்பதினால் சுலபமாக அதை வெட்டி விட முடியும். எனவே சுவமானத்தை நினைவூட்டுங்கள். அனுபவிமூர்த்தி அவதற்கான வகுப்பை எடுங்கள். யார் உங்களுடைய மிக நெருக்கத்தில் வருகிறார்களோ அந்த ஆத்மாக்களுக்கு இந்த அனுபவம் செய்விக்கும் உதவியைக் கொடுங்கள். இப்பொழுது ஆத்மாக்களுக்கு இந்த சகயோகம் (உதவி) தாருங்கள். எப்படி சாகார பாபா மூலமாக அனுபவிமூர்த்தி ஆக்குவதற்கான சேவை நடந்து கொண்டே இருந்தது. அதே போல் இப்பொழுது உங்களுடைய நெருக்கத்தில் இருக்கும் ஆத்மாக்களுக்கு அவருடைய பலமற்ற நிலையை. பலஹீனங்களை தன்னுடைய சக்திகளின் சகயோகத்தினால் அவர்களையும் அனுபவிமூர்த்திகளாக ஆக்குங்கள். எந்த ஆத்மாக்களுக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்களோ அந்த ஆத்மாக்கள் சுவமானத்தின் நிலையின் அனுபவிகளா? என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை இல்லை என்றால், அவர்களை ஆக்க வேண்டும். இந்த உழைப்பை செய்ய வேண்டும். ஒருவேளை ராஜ்யத்தின் நெருங்கிய உறவில் வரும் ஆத்மாக்களே பலஹீனமாக இருக்கிறார்கள் என்றால் பிரஜைகள் என்னவாக இருப்பார்கள்? அந்த மாதிரி பலஹீனமான ஆத்மாக்கள் சம்மந்தத்தில் வர முடியாது. இப்பொழுது உங்களுடைய

ராஜ்யத்தை விரைவாகத் தயார் செய்யுங்கள். பிற்காலத்தில் வரும் பிரஜைகளோ விரைவில் உருவாகி விடுவார்கள் ஆனால் யார் ராஜ்யத்தின் சம்மந்தத்தில் நெருக்கத்தில் வரக்கூடியவர்கள் அவர்களை இந்த மாதிரி ஆக்க வேண்டும் இல்லையா? இந்த மாதிரியான கவனத்தை ஒவ்வொரு இடத்திலும் பொறுப்பாளராகியிருக்கும் உயர்ந்த ஆத்மாக்களுக்குக் கொடுக்க வேண்டும். உங்களுடைய நெருக்கத்தில் வரும் எந்த வொரு ஆத்மாவும் இந்த நிலையிலிருந்து வஞ்சிக்கப்பட்டவராக இருக்கக் கூடாது இந்த கவனம் வைக்க வேண்டும். தானே தன்னுள் ஒருவேளை ஏதாவது சக்தியின் அனுபவம் செய்யவில்லை என்றால் மற்றவர்களுக்கு என்ன சக்தி கொடுக்க முடியும்? எந்த ஆத்மாக்கள் விரும்புகிறார்கள். நெருக்கத்தில் வருகிறார்கள் நேரம் கொடுக்கிறார்கள், சகயோகி ஆகியிருக்கிறார்கள், அந்த மாதிரியான ஆத்மாக்களுக்கு இப்பொழுது தாய் தந்தை மூலமாகவோ பாலனை கிடைக்க முடியாது. எனவே பொறுப்பிலிருக்கும் அனுபவி மூர்த்திகள் மூலமாக மட்டுமே இந்த பாலனை கிடைக்கக் கூடும். ஒருவேளை இந்த சோதனையை வைத்தீர்கள் என்றால் எத்தனை ஆத்மாக்கள் அந்த மாதிரி சக்தி சாலியானவர்களாக வெளிப்படுவார்கள். அரை பங்கு வெளியாவார்கள். யார் நேரடி பாலனை எடுத்திருக்கிறார்களோ அவர்களிடம் அனுபவங்களின் சாறு நிரம்பியிருக்கிறது. மற்றவர்களுக்கு இந்த பாலனை கொடுப்பது அவசியம் என்றால், ஒவ்வொரு டீச்சரும் கவனத்தை தன்னுடைய வகுப்பின் மீது வைக்க வேண்டும். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 02.02.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அன்பான புத்தியின் அடையாளங்கள்!

அனைவரும் அவ்யக்த ரூபத்தில் (உடல் நினைவற்ற நிலையில்) நிலைத்திருக்கிறீர்களா? அவ்யக்த சந்திப்பை அவ்யக்த நிலையில் நிலைத்திருப்பதினால் தான் செய்ய முடியும் என்பதையோ தெரிந்திருக்கிறீர்கள். அவ்யக்த நிலையில் நிலைத்திருப்பதின் அனுபவி மூர்த்தியாக எதுவரை ஆகியிருக்கிறேன்? என்று உங்களை நீங்களே கேளுங்கள். அவ்யக்த நிலையில் நிலைத்திருப்பவர்களுடைய ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு காரியமும் எப்பொழுதும் அலௌகீகமாக (ஆன்மீகமாக) இருக்கும். அந்த மாதிரி வியக்த தேசத்தில் மற்றும் காரியத்தில் இருந்த போதிலும் அவ்யக்த உணர்வில் இருப்பவர் தாமரை மலருக்குச் சமமாக விலகிய மற்றும் ஒரு தந்தையின் அன்பானவராக எப்பொழுதும் இருக்கிறார். அந்த மாதிரி அலௌகீக அவ்யக்த நிலையில் எப்பொழுதும் இருப்பவரே அல்லாவின் (இறைவனின்) மனிதர்கள் என்று கூறப்படுகிறார்கள். பட்டங்களோ இன்னும் இருக்கின்றன. அந்த மாதிரியானவரைத் தான் அன்பான புத்தியுடையவர் என்று கூறப்படுகிறது. அன்பான புத்தி மற்றும் விபரீதமான புத்தி இரண்டின் அனுபவிகளாக நீங்கள் இருக்கிறீர்கள். எனவே விநாச காலத்தில் அன்பான புத்தியுடைய பாண்டவர்களே வெற்றி அடைந்தார்கள் மற்றும் விநாச காலத்தில் விபரீத புத்தியுடையவர்கள் அழிந்தார்கள் என்ற முக்கிய சுலோகனை நீங்கள் எழுதுகிறீர்கள். அப்படியானால் முழு நாளும் எவ்வளவு நேரம் அன்பான புத்தி உடையவராக அதாவது வெற்றி அடைபவராக ஆகிறேன் மற்றும் எவ்வளவு நேரம் விபரீத புத்தி ஆனதினால் தோல்வி அடைந்து விடுகிறேன் என்று இந்த சுலோகனை உங்களுக்காக பயன்படுத்துகிறீர்களா? மாயாவிடம் தோல்வி அடைகிறீர்கள் என்றால் அன்பான புத்தியுடையவர்களாக இருக்கிறீர்களா? அன்பான புத்தியுடையவர் என்றால் வெற்றி அடைபவர். அப்படி விநாச நேரத்தில் விபரீத புத்தியுடையவராக ஆகாதீர்கள், அன்பான புத்தியுடையவராக

ஆகுங்கள் என்று எப்பொழுது நீங்கள் மற்றவர்களுக்கு கூறுகிறீர்கள் என்றால் உங்களை நீங்களே பார்க்கிறீர்களா இந்த நேரம் அன்பான புத்தியுடையவனாக இருக்கிறேனா அல்லது விபரீத புத்தி உடையவனா? அன்பான புத்தியுடையவர் ஒருபொழுதும் ஸ்ரீமத்திற்கு புறம்பான ஒரு எண்ணத்தைக் கூட உருவாக்க முடியாது. ஒருவேளை ஸ்ரீமத்திற்குப் புறம்பாக எண்ணம், சொல் மற்றும் காரியம் நடக்கிறது என்றால் அவரை அன்பான புத்தியுடையவர் என்று சொல்ல முடியுமா? அன்பான புத்தி என்றால் புத்தியின் ஈடுபாடு மற்றும் அன்பு, அன்பான ஒருவரோடு எப்பொழுதுமே இணைந்திருப்பது. எப்பொழுது ஒருவருடன் நிரந்தர அன்பு இருக்கிறது என்றால் வேறு எந்த நபர் மற்றும் சாதனங்களுடன் அன்பு ஏற்பட முடியாது, ஏனென்றால் அன்பான புத்தியுடையவர் என்றால் எப்பொழுதும் பாப்தாதாவை தன்னுடைய எதிரில் அனுபவம் செய்வார். தந்தை எப்பொழுதுமே எதிரில் இருக்கிறார் என்றால் அந்த மாதிரி எதிரில் இருப்பவரிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொள்ள முடியுமா? முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்கள் என்றால் தந்தை எதிரில் இல்லை என்பதாகும். அன்பான புத்தியுடையவர் எப்பொழுதும் தந்தையின் எதிரிலிருக்கும் காரணத்தினால் அவருடைய வாயிலிருந்து, அவருடைய உள்ளத்திலிருந்து, உன்னோடு தான் சாப்பிடுவேன், உன்னோடு தான் அமர்ந்திருப்பேன், உன்னோடு தான் பேசுவேன், உன்னிடமிருந்து தான் கேட்பேன். உன்னிடம் மட்டும் தான் அனைத்து உறவுகளையும் வைத்துக் கொள்வேன், உன்னிடமிருந்து அனைத்து பிராப்திகளையும் அடைவேன் என்ற இந்த வார்த்தைகள் தான் எப்பொழுதும் வெளியாகும். அவருடைய கண்கள், அவருடைய முகம் பேசாவிட்டாலும் பேசும். அப்படியானால் அந்த மாதிரி விநாச காலத்தில் அன்பான புத்தியுடையவராகி இருக்கிறீர்களா? அதாவது ஒருவரின் நினைவிலேயே மூழ்கியிருக்கும் ஒரே சீரான நிலை உடையவராகி இருக்கிறீர்களா? சாகார ரூபத்தில், சாகார தேசத்தில் கர்ம பூமியில் (மதுபனில்) எதிரில் வருகிறீர்கள் என்றால், எப்படி (பாபாவிட மிருந்து) கேட்டீர்களோ அதே போல் எப்பொழுதும் அன்பான புத்தியின் அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? உங்களுடைய அனுபவத்தைக் கூறுகிறீர்கள் இல்லையா? அதே போல் புத்தியின் நினைவு மூலமாக எப்பொழுதும் பாப்தாதாவின் எதிரில் இருப்பதற்கான பயிற்சி செய்தீர்கள் என்றால், எப்பொழுதும் அன்பான புத்தியுடையவர்களாக ஆக முடியாதா என்ன? யாருடைய எதிரில் எப்பொழுதும் பாப்தாதாவே இருக்கிறார் என்றால் சூரியனை எதிரில் பார்ப்பதினால் சூரியனின் கிரணங்கள்

அவசியம் வருகின்றன. இந்த விதத்தில் ஒருவேளை ஞான சூரியன் தந்தையின் எதிரில் எப்பொழுதும் இருக்கிறீர்கள் என்றால் ஞான சூரியனின் அனைத்து குணங்களின் கிரணங்கள் தன்னுள் அனுபவம் ஆகாதா? ஞான சூரியனின் கிரணங்கள் விரும்பாவிட்டாலும் தன்னுள் தாரணை ஆவதை அனுபவம் செய்வீர்கள் ஆனால் அதுவும் எதுவரை தந்தையின் எதிரில் எப்பொழுதும் இருப்பீர்களோ அப்போது தான். யார் எப்பொழுதும் தந்தையை எதிரில் அனுபவம் செய்கிறாரோ அவருடைய முகத்தில் எப்பொழுதும் என்ன தென்படும்?. அதன் மூலம் இவர் எப்பொழுதும் தந்தையின் எதிரில் இருக்கிறார் என்பதை நீங்களாகவே புரிந்து கொள்வீர்கள். யார் சாகாரத்தில் கூட எதிரில் இருக்கிறார்களோ அவர்களுடைய முகத்தில் என்ன இருக்கிறது? சாகாரத்தில் எதிரில் இருப்பதற்கான அனுபவத்தை சுலபமாக செய்ய முடியும். மிகப் பழைய வார்த்தை ரிவைஸ் கோர்ஸ் (நடந்த பாடத்தை மீண்டும் நினைவூட்டுவது) நடந்து கொண்டிருக்கிறது இல்லையா? அப்படி பழைய வார்த்தையும் ரிவைஸ் ஆகிக் கொண்டிருக்கிறது. இதுவும் புத்திக்கான பயிற்சியாகும். புத்தியில் சிந்தனை செய்வதற்கான சக்தி வந்து விடும். நல்லது - ஒன்றோ அவருடைய முகத்தில் உள்நோக்குமுகத்தின் மற்றும் உள்நோக்குமுகமாக இருப்பதின் ஜொலிப்பு இருக்கிறது மற்றும் இன்னொன்று தன்னுடைய சங்கமயுகத்தின் மற்றும் எதிர்காலத்தின் அனைத்து சுயமரியாதையின் பொலிவு இருக்கிறது. புரிந்ததா? ஒன்று ஜொலிப்பு தென்படுகிறது. இன்னொன்று பொலிவு தென்படுகிறது. அப்படி எப்பொழுதும் பொலிவு மட்டும் தென்படாமல் ஜொலிப்பும் தென்படட்டும். மலர்ந்த முகத்துடன் உள்நோக்கு முகமும் தென்படட்டும். அந்த மாதிரியானவரைத்தான் எப்பொழுதும் தந்தையின் எதிரில் இருக்கக்கூடிய அன்பான புத்தியுடையவர் என்று கூறப்படுகிறது. இந்த உடலின் விநாசம் எப்பொழுது வேண்டுமானாலும் ஏற்படலாம் என்ற இந்த நினைவு எப்பொழுதும் இருக்கிறது என்றால், விநாச காலம் நினைவில் இருப்பதினால் அன்பான புத்தி தானாகவே உருவாகி விடும். எப்பொழுது விநாஷ நேரம் வருகிறது என்றால் அஞ்ஞானி கூட தந்தையை நினைவு செய்வதற்கான முயற்சியை அவசியம் செய்கிறார் ஆனால் அறிமுகம் இன்றி அன்பு இணைக்கப்பட முடிவதில்லை. ஒருவேளை இது கடைசி நேரம், கடைசி ஜென்மம் இல்லை, கடைசி நேரம் என்று எப்பொழுதும் நினைவில் வைத்தீர்கள் என்றால் வேறு ஏதாவது நினைவில் வருமா? அப்படியானால் எப்பொழுதுமே அன்பான புத்தியுடையவராக

# 1972 அவ்யக்த முரளி

இருக்கிறீர்களா? ஸ்ரீமத்திற்குப் புறம்பாக நடந்து கொண்டிருக்கவில்லையே? ஒருவேளை மனதிலும் ஸ்ரீமத்திற்கு புறம்பான வீணான எண்ணம் மற்றும் தீய எண்ணம் வருகிறது என்றால் அன்பான புத்தி என்று சொல்ல முடியுமா? அந்த மாதிரி எப்பொழுதும் அன்பான புத்தி உடையவராக இருக்கக்கூடிய வெற்றி இரத்தினம் ஆக முடியும். வெற்றி இரத்தினமாக ஆவதற்காக தன்னை எப்பொழுதும் அன்பான புத்தியுடையவராக ஆக்குங்கள். இல்லையென்றால் உயர்ந்த பதவி அடைவதற்குப் பதிலாக குறைந்த பதவி அடையப் பெறுவோர்களாக ஆகி விடுவீர்கள். அப்படியானால் அனைவரும் தன்னை வெற்றி இரத்தினம் என்று நினைக்கிறீர்களா? எங்காவது, எந்த விதமாகவாவது, யாருடனும் அன்பு கொண்டிருக்க வேண்டாம். இல்லையென்றால் விபரீத புத்தி உடையவர் என்ற பட்டியலில் வந்து விடுவீர்கள். எப்படி மக்களுக்கு காண்பிக்கும் கண்காட்சியில் சங்கமயுகத்தின் படத்தின் மேல் நிறுத்தி வைத்து நீங்கள் இப்பொழுது இங்கிருக்கிறீர்கள் மற்றும் நீங்கள் யார் என்று கேட்கிறீர்களா? சங்கமயுகத்தில் நிறுத்தி வைத்து ஏன் கேட்கிறீர்கள்? ஏனென்றால் சங்கமயுகம் உயர்ந்ததிலும் உயர்ந்த இடம் மற்றும் யுகம். இதே போல் தன்னைத் தானே உயர்ந்த நிலையில் நிறுத்தி வையுங்கள், மேலும் தன்னிடமே நான் எப்பொழுதும் அன்பான புத்தியுடையவனாக இருக்கிறேனா அல்லது இல்லையா? அல்லது சில நேரம் அன்பான புத்தி என்ற பட்டியலில் வந்து சில நேரம் வெளியாகி விடுகிறீர்களா? என்று கேளுங்கள். ஒருவேளை இதுவரை எப்பொழுதும் அன்பான புத்தியுடையவராக ஆகவில்லை, அதாவது எங்கோ சூட்சும ரூபத்தில் மற்றும் ஸ்தூல ரூபத்தில் யாருடனாவது, எங்காவது அன்பு ஏற்பட்டிருக்கிறது என்றாகிறது தற்சமயம் படிப்பின் பாடம் முடிவடைந்து ரிவைஸ் கோர்ஸ் நடந்து கொண்டிருக்கிறது என்றால், இதன் மூலம் பரீட்சையின் நேரம் எவ்வளவு அருகில் இருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். எப்படி இன்றைய நாட்களில் அரசாங்கம் கூட இடையிடையே பரீட்சை வைத்து குழந்தைகளின் மதிப்பெண்களை கடைசி பரீட்சையில் சேர்த்துக் கொள்கிறார்கள். இதே விதமாக தற்சமயம் என்னென்ன காரியம் செய்கிறீர்களோ அதை நடைமுறை பரீட்சை எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று புரிந்து கொள்ளுங்கள். மேலும் இந்த நேரத்தின் பரீட்சையின் முடிவு கடைசி பேப்பரில் சேமிட்டாகி விடுகிறது. ஏதாவது பாவம் செய்பவருக்கு சூட்சும ரூபத்தில் தண்டனை அனுபவம்

ஆகும் என்ற இதையும் கொஞ்ச காலத்தில் அனுபவம் செய்வீர்கள், எப்படி அன்பான புத்தியுடையவர் அனைத்து காரியங்களையும் செய்து கொண்டே தந்தை, தந்தையின் சரித்திரம் மற்றும் தந்தையின் காரியத்தின் நினைவில் இருப்பதால் தந்தையின் சந்திப்பை நடைமுறையில் அனுபவம் செய்கிறார்கள். அதே போல் விடரீத புத்தியுடையவர்கள் தந்தையை விட்டு விலகியிருக்கும் காரணத்தினால் சூட்சும தண்டனைகளை அனுபவம் செய்வர்கள். எனவே பாப்தாதா இருந்தாலும் அந்த தண்டனைகளின் அனுபவம் மிகக் கொடியதாக இருக்கும் என்று முன்பாகவே கூறுகிறார். அவருடைய முகத்திலிருந்து இந்த நேரம் இந்த ஆத்மா தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறது என்று ஒவ்வொருவரும் அனுபவம் செய்ய முடியும். எவ்வளவு தான் தன்னை மறைக்க முயற்சி செய்தாலும் மறைக்க முடியாது. அந்த ஒரு நொடியின் தண்டனை அனேக ஜென்மங்களின் துக்கத்தை அனுபவம் செய்விக்கக் கூடியதாகும். எப்படி தந்தையின் எதிரில் வருவதினால் ஒரு விநாடியின் சந்திப்பு ஆத்மாவின் அனேக ஜென்மங்களின் தாகத்தைத் தணித்து விடுகிறது. அது போலவே விலகிச் சென்றவர்களுக்கும் அனுபவம் ஆகும். பின்பு அந்த தண்டனைகளிலிருந்து விடுபட்டு தன்னுடைய அந்த நிலையில் வருவதற்கு மிகுந்த உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கும். எனவே இப்பொழுது பரீட்சைக்கான நேரம் நடந்து கொண்டிருக்கிறது என்று முன்பாகவே எச்சரிக்கை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பின்பு எங்களுக்கு என்ன தெரியும்? இந்த காரியத்திற்கு இவ்வளவு ஆழமான விளைவுகளா? என்று முறையீடு செய்யாதீர்கள். எனவே சூட்சும தண்டனைகளிலிருந்து தப்பிப்பதற்காக தன்னைத் தான் எப்பொழுதும் எச்சரிக்கையாக வையுங்கள். இப்பொழுது தவறு செய்யாதீர்கள். ஒருவேளை கொஞ்சமாவது தவறு செய்தீர்கள் என்றால், பழமொழியும் இருக்கிறது. ஒன்றிற்கு நூறு மடங்கு லாபமும் கிடைக்கிறது மேலும் ஒன்றிற்கு நூறு மடங்கு தண்டனையும் கிடைக்கிறது இந்த வார்த்தைகள் இப்பொழுது நடைமுறையில் அனுபவம் ஆகக்கூடியவை. எனவே எப்பொழுதும் தந்தையின் எதிரில், எப்பொழுதும் அன்பான புத்தி உடையவராகி இருங்கள். நல்லது.

எப்பொழுதும் எதிரில் இருக்கக்கூடிய அதிர்ஷ்ட நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவும் நமஸ்காரம் செய்கிறார். நல்லது.

**வரதானம்: மூன்று காலத்தையும் தெரிந்த நிலையின் மூலமாக வீனான கணக்கை முடிக்கக்கூடிய எப்பொழுதும் வெற்றியாளர் ஆகுக!**

மூன்று காலத்தையும் தெரிந்த நிலையில் நிலைத்திருப்பது என்றால் ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் செயல் செய்வதற்கு முன்பு இது வீணானதா அல்லது சக்திசாலியானதா என்று முதலில் சோதனை செய்வதாகும். வீணானது ஒரு நொடியில் பல மடங்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. சக்திசாலியானவர் ஒரு நொடியில் பல மடங்கு வருமானத்தை செய்கிறார். ஒரு நொடியின் வீணானது கூட சம்பாத்தியத்தில் மிகுந்த நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. அதன் மூலம் செய்த வருமானம் கூட மறைந்து விடுகிறது. எனவே ஒரு காலத்தை மட்டும் பார்த்து காரியம் செய்வதற்குப் பதிலாக மூன்று காலத்தையும் தெரிந்த நிலையில் நிலைத்திருந்து செய்தீர்கள் என்றால் வீணானது முடிவடைந்து விடும் மற்றும் எப்பொழுதும் வெற்றியாளராக ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: மதிப்பு, மரியாதை மற்றும் சாதனங்களின் தியாகம் தான் மகான் தியாகம் ஆகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 03.02.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தன்னை தெரிந்து கொள்வதினால் சுயக்கட்டுப்பாடு (நன்னடத்தை) மற்றும் நேரத்தை (முக்கியத்துவத்தை) தெரிந்து கொள்ளுதல்!

அவர் என்னவாக இருக்கிறார், எப்படி இருக்கிறார் அப்படியே அவரைத் தெரிந்து கொள்பவர்கள் அனைத்து பிராப்திகளையும் அடைய முடியும் என்று தந்தையைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. அதே போல் தன்னைத் தெரிந்து கொள்வதற்காகக் கூட நான் என்னவாக இருக்கிறேன், எப்படி இருக்கிறேன் அப்படியே தெரிந்து ஏற்றுக் கொண்டு முழு நாளும் நடந்து கொண்டிருக்கிறீர்களா? ஏனென்றால் எப்படி தந்தையை அனைத்து சொரூபங்கள் மற்றும் அனைத்து சம்மந்தங்களினால் தெரிந்து கொள்வது அவசியமாக இருக்கிறதோ அதே போல் தந்தை மூலமாகத் தன்னையும் அவ்வாறே தெரிந்து கொள்வது அவசியமாக இருக்கிறது. தெரிந்து கொள்வது என்றால் ஏற்றுக் கொள்வது. நான் என்னவாக இருக்கிறேன். எப்படி இருக்கிறேன் என்று அப்படியே ஏற்றுக் கொண்டு நடந்தீர்கள் என்றால் என்ன மனநிலை இருக்கும்? உடலில் இருந்து கொண்டே உடலற்ற நிலை, வியக்தத்தில் இருந்தும் அவ்பக்த நிலை, போகும் பொழுதும் வரும்பொழுதும் ஃபரிஷ்தா நிலை மற்றும் காரியம் செய்து கொண்டே கர்மாதீத் நிலை இருக்கும். ஏனென்றால் எப்பொழுது தன்னை நல்ல முறையில் தெரிந்து மற்றும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றால், இவ்வாறு யார் தன்னைத் தெரிந்திருக்கிறாரோ அவர் எந்தவொரு சுயக்கட்டுப்பாட்டு விதியிலோ அதாவது நியமங்களிலோ கீழே மேலே போக முடியாது. சுயக்கட்டுப்பாட்டை தெரிந்து கொள்வது என்றால் சுயக்கட்டுப்பாடோடு நடந்து கொள்வது. தன்னை ஏற்றுக் கொண்டு நடந்து கொள்பவர்களிடம் இயல்பாகவே சுயக்கட்டுப்பாடும் இருக்கிறது. அவருக்கு இது சுயக்கட்டுப்பாடா அல்லது இல்லையா? என்று யோசிக்க

வேண்டியது இருக்காது ஆனால் தன்னுடைய நிலையில் நிலைத்திருக்கக்கூடியவர்கள் என்ன காரியம் செய்கிறார்கள், என்ன வார்த்தைகள் பேசுகிறார்கள். என்ன எண்ணத்தை உருவாக்குகிறார்கள். அதுவே சுயக்கட்டுப்பாடாக ஆகி விடுகிறது. எப்படி சாகார பாபா தன்னுடைய நினைவில் இருப்பதினால் என்ன காரியம் செய்தாரோ அதுவே பிராமண பரிவாரத்தின் சுயக்கட்டுப்பாடாக ஆகி விட்டது இல்லையா? இந்த சுயக்கட்டுப்பாடு எப்படி உருவானது. பிரம்மா மூலமாக என்னென்ன நடந்ததோ அதுவே பிராமண பரிவாரத்திற்காக சுயக்கட்டுப்பாடு ஆனது. அப்படி தனது நினைவில் இருப்பதினால் ஒவ்வொரு காரியமும் சுயகட்டுப்பாடாக ஆகியே விடுகிறது. மேலும் நேரத்தைத் தெரிந்து கொள்வதும் அவர் எதிரில் எப்பொழுதும் தெளிவாக இருக்கிறது. எப்படி பெரிய அதிகாரிகளின் எதிரில் முழுத் திட்டமும் இருக்கிறது, அதைப் பார்த்துக் கொண்டே அவர்கள் அவரவருடைய காரியங்களை செய்விக்கிறார்கள். அதே போல் விமானம் மற்றும் கப்பலை ஓட்டுபவர்களிடம் அவரவர்களின் திட்டங்கள் இருக்கிறது. அதன் மூலம் அவர்கள் செல்லும் பாதையை தெளிவாகப் புரிந்து கொள்கிறார்கள். இதே போல் யார் தன்னைத் தெரிந்திருக்கிறாரோ அவரிடம் சுயக்கட்டுப்பாடு தானாகவே இருக்கிறது. மேலும் நேரத்தைத் தெரிந்து கொள்வது கூட மிகவும் தெளிவாக இருக்கிறது. முழு நாளும் தான் என்னவாக இருக்கிறேன் எப்படி இருக்கிறேன் அப்படியே நினைவு இருக்கிறது. எனவே நான் என்ன காரியம் செய்வேனோ என்னைப் பார்த்து அனைவரும் செய்வார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அப்படி தன்னைத் தெரிந்து கொள்பவர் என்ன காரியம் செய்வாரோ அதுவே சுயக்கட்டுப்பாடு ஆகி விடுகிறது. அவரைப் பார்த்து அனைவரும் பின்பற்றுவார்கள். அந்த மாதிரி நினைவு எப்பொழுதும் இருக்கட்டும், முதல் நிலை என்னவாக இருக்கிறதோ அதில் முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொரு அடியிலும் இது சரியா அல்லது தவறா, இது நம்முடைய சுயக்கட்டுப்பாடா அல்லது இல்லையா என்று யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. எப்பொழுது தன்னுடைய நினைவில் நிரந்தரமாக இருக்கிறார்கள் என்றால் அது இயற்கையாக ஆகி விடுகிறது. பின்பு இப்படி யோசிப்பதற்கான அவசியம் இருப்பதில்லை. ஒருபொழுதும் எந்தக் காரியமும் சுயக்கட்டுப்பாடு இன்றி நடக்க முடியாது. எப்படி சாகார பாபாவிடம் தன்னுடைய போதை இருந்த காரணத்தினால் ஒருவேளை சாகார பாபா மூலமாக ஏதாவது காரியம்

தவறாகக் கூட நடந்து விட்டாலும் அதைக் கூட சரி செய்து விடுவோம் என்று அதிகாரத்தோடு சொல்ல முடிந்தது. இது அதிகாரம் தான் இல்லையா? அவ்வளவு அதிகாரம் எப்படி இருந்தது. தன்னுடைய போதை மூலமாக தன்னுடைய சொரூபத்தின் நினைவில் இருப்பதினால் எந்தவொரு காரியமும் தவறாக நடக்கவே முடியாது என்ற இந்த போதை இருந்தது. அந்த மாதிரி போதை வரிசைக்கிரமமாக அனைவரிலும் இருக்க வேண்டும். எப்பொழுது தந்தையைப் பின்பற்ற வேண்டும் என்றிருக்கிறது என்றால் பின்பற்றி நடப்பவர்களிடம் இந்த நிலை வர முடியாதா? இதையும் பின்பற்றுவார்கள் இல்லையா? சாகார ரூபத்தில் இருந்தாலும் முதல் ஆத்மாவாக இருந்தது இல்லையா. முதல் ஆத்மா நிமித்தமாக எதைச் செய்து காண்பித்தாரோ அதை இரண்டாவது, மூன்றாவது என்று யார் யார் வரிசைக்கிரமமான ஆத்மாக்கள் இருக்கிறார்களோ அவர்கள் அனைத்து விஷயங்களில் பின்பற்றி நடக்க முடியும் நிராகார சொரூபத்தின் விஷயம் வேறு ஆகும். சாகாரத்தில் நிமித்தமாகி என்னென்ன செய்து காண்பித்தாரோ அதை அனைவரும் வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் பின்பற்றிச் செய்ய முடியும். இது தான் தன் மேல் சம்பூர்ண நிச்சயபுத்தி என்று கூறப்படுவது. எப்படி தந்தை மேல் நூறு சதவிகிதம் நிச்சயபுத்தி உடையவராக ஆகிறீர்களோ அது போன்று தந்தையின் கூடவே தன் மேலும் அந்த அளவு நிச்சயபுத்தி உடையவராக ஆக வேண்டும். ஆக உங்களது நினைவின் போதை எவ்வளவு இருக்கிறது? எப்படி சாகார ரூபத்தில் நிமித்தமாகி ஒவ்வொரு காரியத்தையும் சுயக்கட்டுப்பாட்டின் ரூபத்தில் செய்து காண்பித்தாரோ அதே போல் நடைமுறையில் நீங்களும் பின்பற்ற வேண்டும். அந்த மாதிரியான நிலை இருக்கிறதா? எப்படி வண்டி ஒருவேளை தண்டவாளத்தில் சரியாகச் சென்று கொண்டிருக் கிறது என்றால் விபத்து நடக்க முடியாது என்ற நிச்சயம் இருக்கிறது. கவலையின்றி ஒட்டிக் கொண்டே இருக்கிறார்கள். அதே போல் ஒருவேளை தன்னுடைய நினைவின் போதை இருக்கிறது, அஸ்திவாரம் சரியாக இருக்கிறது என்றால் காரியம் மற்றும் வார்த்தைகள் சுயக்கட்டுபாடில்லாததாக இருக்கவே முடியாது. அந்த மாதிரி நிலை அருகில் வந்து கொண்டிருக்கிறது. இதைத் தான் சம்பூர்ண நிலையின் அருகாமை என்று கூறப்படுவது. இந்த சுயமரியாதையில் நிலைத்திருப்பதினால் அபிமானம் வருவதில்லை. எந்தளவு சுயமரியாதையோ அந்த அளவு பணிவான நிலை. எனவே அவருக்கு அபிமானம் இருக்காது. எப்படி

நிச்சயமுடையவரின் வெற்றி அவசியம் இருக்கிறது. இதே போல் அப்படி நிச்சயபுத்தி உடையவரின் ஒவ்வொரு காரியத்தில் வெற்றி இருக்கிறது அதாவது ஒவ்வொரு காரியமும் சுயக்கட்டுபாட்டில் இருக்கிறது என்றால் வெற்றி இருக்கவே இருக்கிறது. அப்படி நான் எவ்வளவு இந்த நிலையின் அருகில் வந்திருக்கிறேன் என்று தன்னைத்தானே சோதனை செய்யுங்கள். எப்பொழுது நீங்கள் அருகில் வருவீர்களோ அப்பொழுது மற்றவர்களின் எண்ணும் அருகில் வரும். நாளாக நாளாக இந்த மாதிரி மாற்றத்தில் அனுபவமோ ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். ஒருவர் இன்னொருவருக்கு மரியாதை கொடுப்பது, வேறு விஷயமாகும் ஆனால் தன் மேல் நிச்சயம் வைத்து யாரிடமாவது கேட்பது வேறு விஷயமாகும். இதை சோதித்துப் பாருங்கள். அவர் என்ன காரியம் செய்வாரோ அதில் நிச்சயபுத்தி இருக்கும். தந்தை கூட குழந்தைகளுக்கு மரியாதை கொடுத்து அறிவுரை கூறுகிறார் இல்லையா? அந்த மாதிரி நான் எவ்வளவு அருகில் வந்திருக்கிறேன் என்ற அந்த நிலையைப் பார்க்க வேண்டும். பின்பு இது சரியா அல்லது தவறா என்ற இந்த எண்ணம் வராது. இந்த எண்ணம் அகன்று விடும். ஏனென்றால் நீங்கள் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள். தன்னுடைய போதையில் குறை இருக்கக்கூடாது. காரியங்களின் கட்டுப்பாட்டின் பிரமாணம் ஒருவர் இன்னொருவருக்கு மரியாதை கொடுப்பது இதுவும் ஒரு சுயக்கட்டுப்பாடாகும். எப்படி ஒரு உதாரண ரூபத்தில் பார்த்தீர்கள் இல்லையா? அந்த மாதிரியான நிலை இருக்கிறதா? அப்படி சாகார பாபா மூலமாக பார்த்த விஷயங்களைப் பின்பற்றி நடப்பதோ சுலபம் தான் இல்லையா? அந்த மாதிரி நிலை சமமாக ஆவதற்காக வருகிறது இல்லையா? இப்பொழுது அந்த மாதிரி மகான் மற்றும் ஆழமான வேகமுடைய முயற்சி நடக்க வேண்டும். சாதாரண முயற்சி இருக்க வேண்டாம். சாதாரண முயற்சி செய்வதோ குழந்தைப் பருவத்தில் செய்யக்கூடியது இப்பொழுது விசேஷ ஆத்மாக்களுக்காக விசேஷமே தான். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 05.02.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நஷா மற்றும் நிஷானா!

ஒரு நொடியில் தன்னை தன்னுடைய அடைய வேண்டிய சம்பூர்ண இலக்கில் மற்றும் போதையில் நிலைத்திருக்கச் செய்ய முடியுமா? சம்பூர்ண இலக்கு எது என்பதை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? எப்பொழுது சம்பூர்ண இலக்கில் நிலைத்திருந்து விடுகிறீர்கள் என்றால் போதை இருக்கவே தான் இருக்கிறது. ஒருவேளை இலக்கில் புத்தி நிலைத்திருக்கவில்லை என்றால் போதையும் இருக்காது. இலக்கில் நிலைத்திருப்பதற்கான அடையாளம் போதை ஆகும். அப்படியானால் அந்த மாதிரியான போதை எப்பொழுதும் இருக்கிறதா? யார் தானே போதையில் இருக்கிறாரோ அவர் மற்றவர்களையும் போதையில் நிலைத்திருக்கச் செய்ய முடியும். எப்படி யாராவது எல்லைக்குட்பட்ட போதைப் பொருளை குடிக்கிறார் என்றால் அவருடைய நடத்தை, அவருடைய பார்வை, முகம் இவற்றிலிருந்து இவர் குடித்திருக்கிறார் என்று எவரும் தெரிந்து கொள்வர். இதே விதமாக அனைத்து போதைகளிலும் உயர்ந்த போதையாக இருக்கிற எது ஈஸ்வரிய போதை என் கூறப்படுகிற இதில் நிலைத்திருப்பதினால்கூட தூரத்திலிருந்தே இவர் ஏதோ ஈஸ்வரிய ஈடுபாட்டில் இருக்கக்கூடிய ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்யும் அளவிற்கு அந்த மாதிரி நிலை இருக்க வேண்டும். அந்த மாதிரி தன்னை உணருகிறீர்களா? எப்படி நீங்கள் எங்காவது செல்கிறீர்கள் என்றால் மனிதர்கள் பார்த்தே இவர்கள் ஏதோ பிரபுவின் அன்பிற்குரிய வித்தியாசமான ஆத்மாக்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும், அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? பக்தி மார்க்கத்தில் கூட அந்த மாதிரி ஆத்மாக்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய பார்வை, முகத்தில் இருந்து பிரபு மேல் அன்பு வைத்திருப்பவர் என்று பார்க்கத் தென்படும். அந்த மாதிரி இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டே. இந்த மாதிரி காரிய விவகாரங்களில் இருந்து கொண்டே உங்களுடைய அந்த மாதிரி நிலை இருக்கும் என்று நினைக்கிறீர்களா அல்லது கடைசியில் காட்சி கொடுப்பவரின் நிலை இருக்குமா? கடைசி வரை சாதாரண ரூபமே

இருக்குமா அல்லது இந்த ஜொலிப்பு முகத்தில் இருந்து தென்படுமா அல்லது கடைசி நேரத்தில் திரைக்குப் பின்னால் தயாராகி பின்பு திரை விலகுகிறது, மேலும் காட்சி எதிரில் வந்து முடிவடைந்து விடுகிறது என்று அந்த மாதிரி இருக்குமா? கொஞ்ச நேரம் இந்த ஜொலிப்பு தென்படுமா? பொறுப்பிலிருந்த முதல் மற்றும் இரண்டாம் ஆத்மாக்கள் கூட சாதாரண மறைவான முறையில் தன்னுடைய சாகார ரூபத்தின் பாகத்தை முடித்து விட்டு சென்று விட்டார்கள் என்றால் எங்களுடைய ஜொலிப்பு என்னதான் தென்படும் என்று சிலர் அப்படியும் நினைக்கிறார்கள் ஆனால் அப்படியில்லை. மகன் தந்தையை வெளிப்படுத்துவார் என்று பாடப்பட்டுள்ளது. அப்படி தந்தையின் வெளிப்படுத்துதல் குழந்தைகள் நடைமுறையில் கொண்டு வருவதினால் தான் செய்ய முடியும். ஆஹா! பிரபு என்ற கூக்குரல் ஆத்மாக்களிடமிருந்து வெளியாகும் மற்றும் ஆத்மாக்களிடமிருந்து வரும் வேதனை அலைகள் எப்பொழுது மற்றும் எப்படி வரும்? யார் சாகாரத்தில் அனுபவமே செய்யவில்லை, அவர்களுக்குக் கூட தந்தையின் அறிமுகத்தினால் நாம் பாடாவின் குழந்தைகள் என்று எப்பொழுது ஏற்றுக் கொள்வார்கள் என்றால், தந்தை அவசியம் வந்திருந்தார் ஆனால் நாங்கள் எதையும் அடையவில்லை என்று உணரும்பொழுது தான். அந்த மாதிரி இந்த நடைமுறை ஆன்மீக ஜொலிப்பு மற்றும் ஃபரிஷ்தா நிலையின் பொலிவு முகத்திலிருந்து, நடத்தையிலிருந்து தென்படட்டும். தன்னை மற்றும் பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்கள் உங்களின் நிலையைப் பார்த்து தந்தை இவர்களை என்னவாக ஆக்கி விட்டார் என்று அனுபவம் செய்வார்கள். பின்பு வேதனைப் படுவார்கள். ஒருவேளை இந்த ஜொலிப்பை பார்க்கவில்லை என்றால் என்ன புரிந்து கொள்வார்கள்? ஞானத்தின் மூலமாக உங்களைத் தெரிந்து கொள்வதற்காக இவ்வளவு காலம் ஞானத்தையோ எடுக்க மாட்டார்கள். அப்படி இந்த நடைமுறை முகத்திலிருந்து ஜொலிப்பு மற்றும் பொலிவு தென்படும். நான் குழந்தைகளின் எதிரில் பிரத்யக்ஷம் ஆகிறேன் என்பதோ தந்தையின் மகாவாக்கியம் தான் ஆனால் உலகத்தின் எதிரில் யார் வெளிப்படுத்துவார்கள். அது சாகாரத்தில் தந்தையின் கடமையாக இருந்தது, நடைமுறையில் குழந்தைகளின் கடமை வெளிப்படுத்துவதற்கானது. மேலும் தந்தையின் கடமை முதுகெலும்பாக ஆவது. குப்த (மறைவாக) ரூபத்தில் உதவியாளர் ஆவதின் காரணம் கூட எப்படி தாய், தந்தையின் குப்தமான பாகம் நடந்து முடிந்ததோ அதே போல் கடைசி வரை குப்தமான சூழ்நிலை இருக்கும்

என்று அப்பபடியும் இல்லை. வெற்றி முழக்கம் சக்திகளினுடையதாக மஹிமை பாடப்பட்டிருக்கிறது. மேலும் ஆஹா! பிரபு என்ற கூக்குரல் தந்தைக்காகப் பாடப்பட்டிருக்கிறது. எப்பொழுது விசேஷமான கவனம் தன்னுடைய இலக்கு மற்றும் போதைக்கானது இருக்கிறது என்றால் எவ்வளவு பெரிய சபையில் நீங்கள் அமர்ந்திருந்தாலும் கூட அனைவருக்கும் விசேஷமாக ஏதாவது அவசியம் தென்படும் என்பதை நீங்களும் உங்களுக்குள் ஒருவர் இன்னொருவரின் அனுபவம் செய்வீர்களாக இருக்கும். இந்த நேரம் நினைவில் மிக நன்றாக அமர்ந்திருக்கிறேன் என்று உணர்வீர்கள். இப்பொழுது சாதாரண கவனமாக இருப்பது மாறி இயற்கையான விசேஷ கவனமாக ஆகி விடும். மேலும் முகம் மூலமாக ஜொலிப்பு மற்றும் பொலிவு தென்படும். நினைவை மட்டும் சக்திசாலியானதாக ஆக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: சாகார தந்தையைப் (பிரம்மாபாபாவை) பின்பற்றி முதல் எண் எடுக்கக்கூடிய சம்பூர்ண ஃபரிஷ்தா ஆகுக!**

முதல் எண் எடுப்பதற்கான சுலபமான சாதனமானது பிரம்மாபாபா நம்பர் ஒன்னில் இருக்கிறார், அவர் ஒருவரை மட்டும் பாருங்கள். அனேகர்களைப் பார்ப்பதற்குப் பதிலாக ஒருவரைப் பாருங்கள் மற்றும் ஒருவரை பின்பற்றுங்கள். நான் தான் ஃபரிஷ்தா ஆகுபவன் என்ற மந்திரத்தை உறுதி செய்து கொண்டீர்கள் என்றால் வித்தியாசம் அகன்று விடும். பின்பு அறிவியல் இயந்திரங்கள் தன்னுடைய காரியத்தைத் தொடங்கி விடும். மேலும் நீங்கள் சம்பூர்ண ஃபரிஷ்தா தேவதையாகி புது உலகத்தில் அவதரிப்பீர்கள். அப்படி சம்பூர்ண பரிஷ்தா ஆவது என்றால் சாகார தந்தையை பின்பற்றுவது.

**சுலோகன்: சிந்தனை செய்வதினால் குஷி என்ற வெண்ணெய் உருவாகிறது. அதுவே வாழ்க்கையை சக்திசாலி ஆக்குகிறது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 27.02.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புனித அன்னப்பறவை ஆவதற்கான நினைவுச்சின்னம் தான் ஹோலிப் பண்டிகை!

நீங்கள் எப்பொழுதும் தந்தையின் தொடர்பில் இருக்கக்கூடிய, ஆன்மீக வண்ணத்தில் வண்ணமாக்கப்பட்டிருக்கும் ஆத்மாக்கள், புனித அன்னப்பறவைகள் (ஹோலிஹன்ஸ்) ஆவீர்கள். யார் எப்பொழுதும் ஹோலியாக (தூய்மையாக) இருக்கிறார்களோ அவர்களைப் பொறுத்தளவில் எப்பொழுதுமே ஹோலிப் பண்டிகை தான். அப்படியானால் எப்பொழுதும் தந்தையின் அன்பு, சகயோகம் மற்றும் அனைத்து சக்திகளின் வண்ணங்களில் தந்தைக்குச் சமமாக இருக்கக்கூடிய ஆத்மாக்கள் எப்பொழுதும் ஹோலி கொண்டாடுகிறீர்களா அல்லது அற்பகாலம் தான் கொண்டாடுகிறீர்களா? ஹோலி கொண்டாடுபவர்கள் எப்பொழுதும் தந்தையுடன் சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். எப்பொழுதும் அதீந்திரிய சுகத்தில் மற்றும் அழியாத குஷியில் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரியான நிலையில் நிலைத்திருக்கக்கூடிய புனித அன்னப்பறவைகளா நீங்கள்? மனிதர்கள் தன்னை உற்சாகத்தில் கொண்டு வருவதற்காக ஒவ்வொரு உற்சவத்திற்காக (பண்டிகைக்காக) காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் உற்சவம் அவர்களில் அற்பகால உற்சாகத்தைக் கொண்டு வருகிறது ஆனால் உயர்ந்த ஆத்மாக்களாகிய உங்களைப் பொறுத்தளவில் ஒரு நாள் என்ன, ஒவ்வொரு விநாடியும் உற்சவம்தான் அதாவது உற்சாகம் கொடுக்கக்கூடியது தான். அழியாத அதாவது நிரந்தர உற்சவமே உற்சவம்தான், ஏனென்றால் உங்களுடைய உற்சாகத்தில் மாற்றம் வருவதில்லை. அப்படியானால் நிரந்தரம் ஆகி விட்டது இல்லையா, அப்படியானால் ஹோலி கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்களா அல்லது ஹோலி ஆகி ஹோலியஸ்ட் (மிகவும் தூய்மையான) மற்றும்

# 1972 அவ்யக்த முரளி

ஸ்வீட்டஸ்ட் (மிகவும் இனிமையான) தந்தையோடு சந்திப்பை ஏற்படுத்துவதற்காக வந்திருக்கிறீர்களா அல்லது எப்பொழுதும் அவருடைய தொடர்பிலேயே இருப்பதற்கான வண்ணமாக்கப் பட்ட தன்னுடைய ஆன்மீக ரூபத்தைக் காண்பிப்பதற்காக வந்திருக்கிறீர்களா? ஹோலி பண்டிகையில் அற்ப காலத்தின் போதையில் போதை ஏறியவர்கள் ஆகி விடுகிறார்கள். அப்படியானால் தன்னுடைய அழியாத ஈஸ்வரிய போதையின் சொரூபத்தை அனுபவம் செய்கிறீர்களா? எப்படி ஹோலியின் போதையில் மூழ்கியிருக்கும் காரணத்தினால் தன்னுடைய சம்மந்தத்தில் அதாவது பெரியவர் சிறியவர் என்ற உணர்வை மறந்து விடுகிறார்கள், அவர்களுக்குள் சமமானவர்கள் என்று நினைத்து போதையில் விளையாடுகிறார்கள், மனதின் உள்ளே என்னென்ன பகைமையின் சம்ஸ்காரம் ஒருவர் இன்னொருவருக்காக இருக்கிறதோ அதை அற்ப காலத்திற்காக அனைவரும் மறந்து விடுகிறார்கள். ஏனென்றால் மங்களமான சந்திக்கும் நாளைக் கொண்டாடுகிறார்கள். இந்த அழியாத பழக்க வழக்கம் எப்பொழுதிலிருந்து கடைபிடிக்கப்படுகிறது. இந்தப் பழக்கம் ஏற்படுவதற்காக யார் காரணமானார்கள். பிராமணர்கள் நீங்கள் தான். இப்பொழுது கூட எப்பொழுது ஹோலி அதாவது தூய்மையின் நிலையில் நிலைத்திருக்கிறீர்கள் மற்றும் தந்தையின் தொடர்பு என்ற வண்ணத்தில் வண்ணமாக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறீர்கள் என்றால் இந்த ஈஸ்வரிய போதையில் இந்த உடலின் உணர்வு மற்றும் விதவிதமான உறவின் உணர்வு, சிறியவர்கள் பெரியவர்கள் என்ற உணர்வு மறந்து ஒரே ஒரு ஆத்ம சொரூபம் என்ற உணர்வு இருக்கிறது இல்லையா? அப்படி உங்களுடைய சதா காலத்தின் நிலையின் நினைவுச்சின்னத்தை உலகத்து மனிதர்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பிரத்யக்ஷ நிலையின் சொரூபத்தின் இந்த நினைவுச்சின்னத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று அந்த மாதிரி போதை மற்றும் குஷி இருக்கிறதா? நினைவுச் சின்னத்தைப் பார்த்து தன்னுடைய சென்ற கல்பத்தில் செய்த செயல்களின் நினைவு வருகிறதா மற்றும் தற்சமயம் நடைமுறையில் தாம் செய்த ஈஸ்வரிய சரித்திரத்தின் சாட்சாத்காரமாக இந்த நினைவு என்ற கண்ணாடியில் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களா? தன்னுடைய சரித்திரங்களின் நினைவுச் சின்னங்களை பார்க்கிறீர்கள் தான் இல்லையா? தன்னுடைய நிலையின் வர்ணனையை மற்ற ஆத்மாக்கள் மூலமாக மகிமையின் ரூபத்தில் கேட்கிறீர்கள் தான்

இல்லையா? தன்னுடைய சைத்தன்ய ஆன்மீக ரூபத்தின், சரித்திரங்களின் நினைவுச் சின்னத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த அனைத்தையும் பார்த்துக் கொண்டே, கேட்டுக் கொண்டே என்ன அனுபவம் செய்கிறீர்கள். இது நானே தான் என்று அப்படி நினைக்கிறீர்களா? அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா அல்லது இந்த நினைவுச் சின்னமோ ஏதோ விசேஷ ஆத்மாக்களினுடையது என்று அப்படி நினைக்கிறீர்களா? எப்படி சாகார பாடாவில் தன்னுடைய எதிர்கால நினைவுச்சின்னத்தைப் பார்த்து நானே தான் இது என்ற இந்த நிச்சயத்தை ஒவ்வொரு காரியத்திலும் பார்க்க முடிந்தது, மேலும் இதே போதை மற்றும் குஷி எப்பொழுதும் இருந்தது, அதே போல் உங்கள் அனைவருக்கும் நினைவுச்சின்ன படங்களை, சிலைகளைப் பார்த்துக் கொண்டே மற்றும் சரித்திரத்தைக் கேட்டுக் கொண்டே மற்றும் குணங்களின் மகிமையைக் கேட்டுக் கொண்டே இது

நானே தான் என்ற போதை மற்றும் குஷி இருக்கிறதா? இப்பொழுது நாம் பிரத்யக்ஷ ரூபத்தில் நம்முடைய பாகத்தை செய்து கொண்டிருக்கிறோம் மற்றும் இப்பொழுதே, தான் செய்த பாகத்தின் நினைவுச்சின்னத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பது எப்பொழுதும் நினைவு இருக்க வேண்டும். முழு கல்பத்திலும் தன்னுடைய நினைவுச்சின்னத்தையும் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த மாதிரியான ஆத்மாக்கள் யாராவது இருப்பார்களா? முழுக் கல்பத்தினுள் தன்னுடைய நினைவுச்சின்னத்தை தன்னுடைய நினைவில் பார்க்கும் மாதிரி அந்த மாதிரி ஏதாவது ஆத்மாக்கள் இருக்கிறார்களா? அனைவரும் பார்க்கவோ செய்கிறார்கள் ஆனால் நினைவோ இருப்பதில்லை தான் இல்லையா? ஆத்மாக்கள் நீங்கள் மட்டும் தான் இந்த நினைவோடு தன்னுடைய நினைவுச்சின்னத்தை பார்க்கிறீர்கள். மேலும் உங்களுக்கு மட்டும் தான் இந்த மாதிரியான பங்கு இருக்கிறது. அப்படியானால் நினைவோடு தன்னுடைய நினைவுச்சின்னத்தை பார்த்துக் கொண்டே என்னவாக வேண்டும்? (ஒரு சிலர் பதில் கூறினார்கள்) வெற்றி அடைபவர்களாகவோ இருக்கவே இருக்கிறீர்கள். வெற்றியின் திலகம் இடப்பட்டிருக்கிறது. எப்படி குருக்களிடம் மற்றும் பண்டிதர்களிடம் செல்கிறார்கள் என்றால் அவர்கள் திலகம் இடுவார்கள். இங்கேயும் வந்தவுடனேயே, குழந்தை ஆனவுடனேயே முதன் முதலில் சுயநினைவு மூலமாக எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆவதற்கான திலகம் பாப்தாதா மூலமாக இடப்பட்டே

விடுகிறது. எனவே பண்டிதர்களும் திலகம் இட்டு விடுகிறார்கள். அனைத்து பழக்கமும் பிராமணர்கள் மூலமாகத் தான் இப்பொழுது நடக்கிறது. பிராமணர்களின் தந்தை படைப்பவரோ கூடவே இருக்கவே இருக்கிறார். குழந்தை வார்த்தையே தந்தையை நிரூபணம் செய்வித்து விடுகிறது. பலிஹார் (முழுமையாக பலி) ஆபவருக்கு ஹார் (தோல்வி) ஏற்படுவதில்லை. நினைவு, சக்தியைக் கொண்டு வருகிறது மேலும் சக்தியில் வருவதினாலேயே காரியம் வெற்றி அடைந்து விடுகிறது. மேலும் ஏற்கனவே கூறியது போல் குஷி, போதை மற்றும் இலட்சியம் அனைத்தும் ஏற்பட்டு விடுகிறது. இந்த அனைத்து விஷயங்களும் மறந்து போவதற்கான காரணம் பலமின்மை ஆகும். மறந்த நிலையின் காரணமாக சக்தியற்ற நிலை இருக்கிறது. அப்படி நினைவினால் சக்தி வருவதினால் அனைத்து வெற்றியும் பிராப்தி ஆகி விடுகிறது, அதாவது அனைத்து காரியங்களும் நிறைவேறி விடுகிறது. அனைத்து நினைவிலும் இருக்கக்கூடியவர் எப்பொழுதும் என்ன காரியம் செய்தாலும் எந்த எண்ணத்தை உருவாக்கினாலும் அதில் அவருக்கு இந்தக் காரியம், இந்த எண்ணம் வெற்றி அடைந்தே இருக்கிறது என்ற நிச்சயம் இருக்கிறது. அதாவது, அந்த மாதிரி நிச்சயபுத்தி உடையவர் தன்னுடைய வெற்றி நிச்சயிக்கப்பட்டது என்று புரிந்து நடந்து கொள்கிறார். அப்படி நிச்சயம் வெற்றி அடைவோம் என்று புரிந்து நடந்து கொள்பவரின் நிலை எப்படி இருக்கும்? அவருடைய முகத்தில் விசேஷமாக என்ன ஜொலிப்பு தென்படும்? வெற்றி நமக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்ற நிச்சயம் இருக்கும் என்று நிச்சயத்தைப் பற்றி கூறினோம் ஆனால் அவருடைய முகத்தில் என்ன தென்படும்? எப்பொழுது வெற்றி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்றால் அவர் கவலையின்றி இருப்பார் இல்லையா? எந்த விஷயத்திலும் கவலையின் ரேகை தென்படாது. அப்படி நிச்சயபுத்தி உள்ளவராகி வெற்றி அடைபவர், நிச்சயம் உடையவர் மற்றும் எப்பொழுதும் கவலையின்றி இருப்பவராக இருக்கிறீர்களா? ஒருவேளை இல்லை என்றால் 100 சதவிகிதம் நிச்சயபுத்தி யுடையவர் என்று எப்படிக் கூற முடியும்? 100 சதவிகிதம் நிச்சயபுத்தி என்றால் நிச்சயமாக வெற்றி அடைபவர் மற்றும் கவலையற்றவர். இப்பொழுது இதன் மூலம் 100 சதவிகிதம் அனைத்து விஷயங்களில் நிச்சயபுத்தி இருக்கிறதா என்று உங்களை நீங்களே பாருங்கள். தந்தை மேல் இருக்கும் நிச்சயத்தை மட்டும் நிச்சயபுத்தி உடையவர் என்று கூற முடியாது. தந்தை மேல் நிச்சயபுத்தி, கூடவே தன்

மேலேயே நிச்சயபுத்தி இருக்க வேண்டும். மேலும் கூடவே நாடகத்தில் ஒவ்வொரு விநாடியும் செயல்கள் மீண்டும் அதே போல் நடந்து கொண்டிருக்கின்றன என்ற இதன் மேலும் 100 சதவிகிதம் நிச்சயபுத்தி வேண்டும். இதைத் தான் நிச்சயபுத்தி உடையவர் என்று கூறப்படுகிறது. எப்படி தந்தை மேல் 100-சதவிகிதம் நிச்சயபுத்தி உடையவராக இருக்கிறீர்கள் இல்லையா -இதில் சந்தேகத்திற்கான விஷயம் இல்லை. ஒன்றில் மட்டும் பாஸ் ஆக வேண்டாம். தன் மேலும் நான் அதே சென்ற கல்பத்து ஆத்மா, தந்தையுடன் பங்கை செய்து கொண்டிருக்கும் உயர்ந்த ஆத்மா ஆவேன். மேலும் கூடவே நாடகத்தின் ஒவ்வொரு பங்கையும் இதே நிலையிலிருந்து பார்த்து ஒவ்வொரு பங்கும் உயர்ந்த ஆத்மாவாகிய எனக்காக நன்மை செய்பவை என்று இந்த அளவே நிச்சயம் இருக்க வேண்டும். எப்பொழுது இந்த மூன்று விதமான நிச்சயத்தில் எப்பொழுதுமே தேர்ச்சி அடைகிறார்களோ அந்த மாதிரி நிச்சயபுத்தி உடையவர்கள் தான் முக்தி, ஜீவன்முக்தியில் தந்தையுடன் இருக்கிறார்கள். அந்த மாதிரி நிச்சயபுத்தி உடையவருக்கு ஒருபொழுதும் கேள்வி எழாது. ஏன், என்ன என்ற சொற்கள் நிச்சயபுத்தி உடையவரினுடையது இல்லை. க்யோன் (ஏன்) என்பதற்கு பின்னால் க்யூ (வரிசை) ஏற்படுகிறது என்றால் க்யூவில் பக்தர்கள் நிற்பார்கள், ஞானிகள் இல்லை. உங்கள் எதிரிலோ க்யூ ஏற்பட வேண்டும் இல்லையா? க்யூவில் காத்திருக்க வேண்டியதாக இருக்கிறது. காத்திருக்கும் காலம் இப்பொழுது முடிவடைந்து விட்டது. காத்திருக்கும் காலம் பக்தர்களுடையது. ஞானம் என்றால் பிராப்தியின் நேரம், சந்திப்பின் நேரம். அந்த மாதிரி நிச்சயபுத்தி உடையவர்கள் தான் நீங்கள் இல்லையா? அந்த மாதிரி நிச்சயபுத்தி உடைய ஆத்மாக்களின் நினைவுச்சின்னம் இங்கேயே காண்பிக்கப்பட்டிருக்கிறது, உங்களுடைய நினைவுச் சின்னத்தை பார்த்திருக்கிறீர்களா? அச்சல் கர் பார்த்திருக்கிறீர்களா? யார் எப்பொழுதும் அனைத்து எண்ணங்களையும் சேர்த்து பாப்தாதா மேல் பலியாகி இருக்கிறார்களோ அவர்களின் எதிரில் மாயா ஒருபொழுதும் போரிட முடியாது. அந்த மாதிரி மாயாவின் போரிலிருந்து காப்பாற்றபட்டவர்களாக இருக்கிறார்கள். பச்சே பன் கயே (குழந்தைகள் ஆகி விட்டார்கள்) என்றால் பச் கயா (காப்பாற்றப்பட்டார்கள்). குழந்தைகள் ஆகவில்லை என்றால் மாயாவிடமிருந்தும் காப்பாற்றப்பட முடியாது. மாயாவிடமிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான மிக சுலபமான யுக்தி இது தான். குழந்தை ஆகி விடுகிறீர்கள். மடியில் அமர்ந்து விடுகிறீர்கள்

என்றால் காப்பாற்றப்பட்டு விடுவீர்கள். முதலில் பாதுகாப்பாக இருப்பதற்கான வழி கூறுகிறார் பின்பு (சேவைக்காக) அனுப்புகிறார். பலசாலி ஆக்குவதற்காகத் தான் அனுப்புகிறாரே அன்றி தோல்வி அடைவதற்காக அல்ல. விளையாட்டு விளையாடுவதற்காக அனுப்புகிறார். எப்பொழுது ஆன்மீக வாழ்க்கையில் இருக்கிறீர்கள் ஆன்மீக காரியம் செய்பவர்களாக இருகிறீர்கள் என்றால் ஆன்மீக வாழ்க்கையில் அனைத்தும் பொம்மைகள், ஆன்மீகமானவை அவற்றை இந்த ஆன்மீக யுகத்தில் மட்டும் தான் அனுபவம் செய்கிறீர்கள், இதுவோ பொம்மை ஆகும். அதோடு விளையாட வேண்டுமேயன்றி தோல்வி அடையக்கூடாது. ஆரோக்கியமாக இருப்பதற்காகவும், உடல் சக்திக்காகவும் விளையாடச் சொல்லப்படுகிறது இல்லையா? ஆன்மீக யுகத்தில் ஆன்மீகத் தந்தை மூலமாக இது ஆன்மீக விளையாட்டாகும். அப்படி புரிந்து விளையாடினீர்கள் என்றால் பயப்பட மாட்டீர்கள். தொந்தரவில் வர மாட்டீர்கள், தோல்வி அடையமாட்டீர்கள். எப்பொழுதும் இந்த மதிப்பிலேயே இருங்கள். அப்படி இந்த ஆன்மீகப் பொம்மைகள் விளையாடுவதற்காகத் தான். இந்த ஈஸ்வரிய மதிப்பில் இருப்பதினால் சுலபமாகவே தேகத்தின் உணர்வு முடிவடைந்து விடும். ஈஸ்வரிய மதிப்பிலிருந்து கீழே இறங்குவதினால் தான் தேக அபிமானத்தில் வருகிறீர்கள். எனவே தொடர்பினால் தொடர்பின் வண்ணத்தை நிரந்தரமாகப் பூசங்கள். ஒவ்வொரு விநாடியும் தந்தையோடு சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டு ஒவ்வொரு நாளும் அமிர்தவேளையில் நெற்றியில் இடப்பட்டிருக்கின்ற வெற்றித் திலகத்தைப் பாருங்கள். தன்னுடைய சார்ட் என்ற கண்ணாடியில், எப்படி அமிர்தவேளையில் எழுந்து உடலை அலங்கரிக்கிறீர்கள். அதே போல் முதலில் தந்தை மூலமாக கிடைத்திருக்கும் அனைத்து சக்திகளினால் ஆத்மாவின் அலங்காரம் செய்யுங்கள். யார் அலங்கரிக்கப்பட்டவராக இருப்பாரோ அவர்தான் வதை செய்பவராகவும் இருப்பார். முழு உலகத்திலும் அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாக்கள் தான் நீங்கள் இல்லையா? உயர்ந்த ஆத்மாக்களின் அலங்காரமும் உயர்ந்ததாக இருக்கும். உங்களுடைய ஜடச்சிலைகள் எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டவையாக இருக்கின்றன. சக்திகள் மற்றும் தேவிகளின் சிலைகள் அலங்கரிக்கப்பட்ட மூர்த்திகளாகவும் வதை செய்யும் மூர்த்திகளாகவும் இரண்டுமாகவும் இருக்கிறார்கள். அப்படி தினந்தோறும் அமிர்தவேளை சாட்சியாக இருந்து தன்னுடைய ஆத்மாவை அலங்காரம் செய்யுங்கள். செய்பவரும் நீங்கள் தான்,

செய்வதும் உங்களுக்கு நீங்களே தான். பிறகு எந்த விதமான சூழ்நிலையிலும் மேலே கீழே போக மாட்டீர்கள், ஆடாதவர்களாக இருப்பீர்கள். அந்த மாதிரியானவரை புனித அன்னப்பறவை என்று கூறப்படுகிறது. மனிதர்கள் ஹோலி கொண்டாடுகிறார்கள் ஆனால் நீங்கள் சுயம் ஹோலி ஹன்ஸ் (புனித அன்னப்பறவைகள்) ஆவீர்கள். நல்லது. அந்த மாதிரி புனித அன்னப்பறவைகளுக்கு மிகவும் புனிதமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**வரதானம்: ஆன்மீகத்தின் உயர்ந்த நிலை மூலமாக சூழ்நிலையை ஆன்மீகமாக ஆக்கக்கூடிய சுலபமான (புருஷார்த்தி) முயற்சி செய்பவர் ஆகுக!**

ஆன்மீகத்தின் நிலை மூலமாக தன்னுடைய சேவை நிலையத்தை அந்த மாதிரி ஆன்மீக சூழ்நிலையுடையதாக ஆக்குங்கள். அதன் மூலம் தனக்கும் மற்றும் வரக்கூடிய ஆத்மாக்களுக்கும் சுலபமாக முன்னேற்றம் ஏற்படட்டும். ஏனென்றால் யார் யார் வெளியுலக சூழ்நிலையில் களைப்படைந்து வருகிறார்களோ அவர்களுக்கு அதிகப்படியான சகயோகத்தின் அவசியம் இருக்கிறது. எனவே அவர்களுக்கு ஆன்மீக சூழ்நிலையின் சகயோகம் கொடுங்கள், சுலபமாக முயற்சி செய்பவர் ஆகுங்கள் மற்றும் ஆக்குங்கள். வரக்கூடிய ஒவ்வொரு ஆத்மாவும் இந்த இடம் சுலபமாகவே முன்னேற்றத்தை அடைவதற்கான இடம் என்று அனுபவம் செய்யட்டும்.

**சுலோகன்: வரம் அளிப்பவராகி சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்களின் வரதானத்தைக் கொடுத்துக் கொண்டே இருங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.02.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நேரத்திற்காக காத்திருக்காமல் எவரெடியாக (தயார் நிலையில்) இருப்பவர் தான் உண்மையான முயற்சியாளர்!

பரீட்சையின் நேரம் அருகில் வந்து கொண்டே இருக்கிறது என்றால் தன்னுடைய சம்பூர்ண நிலையின் பிரத்யக்ஷமான சாட்சாத்காரம் மற்றும் அனுபவம் வெளிப்படை ரூபத்தில் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறதா? எப்படி நம்பர் ஒன் ஆத்மா (பிரம்மாபாபா) தன்னுடைய சம்பூர்ண நிலையின் நடைமுறை ரூபத்தை போகும் பொழுதும் வரும்பொழுதும் அனுபவம் செய்தார். அதே போல் உங்களுக்கும் உங்களுடைய சம்பூர்ண நிலை முற்றிலும் அருகில் மற்றும் தெளிவாக அனுபவம் ஆகிறதா? முயற்சி செய்யும் பிரம்மா மற்றும் சம்பூர்ண பிரம்மா இருவரின் நிலை தெளிவாக இருந்தது இல்லையா? அதே போல் உங்களுக்கு உங்களுடைய சம்பூர்ண நிலை இவ்வளவு தெளிவாக மற்றும் அருகில் அனுபவம் ஆகிறதா? இந்த நேரம் இந்த நிலை, பிறகு அடுத்த நேரம் அந்த நிலை, இந்த மாதிரி அனுபவம் ஏற்படுகிறதா? எப்படி சாகார பாபாவில் எதிர்காலத்தின் அனுபவம் கூட அடிக்கடி ஏற்பட்டது இல்லையா? எவ்வளவு தான் காரியத்தில் முழுமையாக ஈடுபட்டிருந்தாலும் எதிர்காலத்து அந்த நிலைக்கு இப்பொழுது வந்தே சேர்ந்து விட்டோம் என்று எப்பொழுதும் தன் எதிரில் சம்பூர்ண நிலை இருக்க வேண்டும். எப்பொழுது நீங்கள் சம்பூர்ண நிலையை அருகில் கொண்டு வருவீர்களோ அப்படியே நேரமும் அருகில் வரும். நேரம் உங்களை அருகில் கொண்டு வருமா அல்லது நீங்கள் நேரத்தை அருகில் கொண்டு வருவீர்களா? என்ன நடக்க வேண்டும்? அந்தப் பக்கத்திலிருந்து நேரம் அருகில் வரும், இந்தப் பக்கத்திலிருந்து நீங்கள் அருகில் இருப்பீர்கள். இரண்டின் சந்திப்பு ஏற்படும். நேரம் எப்பொழுது வந்தாலும் சரி ஆனால் சம்பூர்ண நிலையை அருகில்

கொண்டு வருவதற்கான முயற்சியில் நேரத்திற்காக காத்திருக்க வேண்டியதில்லாத அளவிற்கு தன்னை எப்பொழுதும் தயாராக வைத்திருக்க வேண்டும். முயற்சி செய்பவருக்கு எப்பொழுதும் எவரெடியாக இருக்க வேண்டும். யாருக்காவது காத்திருக்க வேண்டியது. அவசியம் இல்லை தன்னுடைய முழுமையான ஏற்பாடுகளை செய்திருக்க வேண்டும். நான் நேரத்தை அருகில் கொண்டு வருவேனேயன்றி நேரம் என்னை அருகில் கொண்டு வராது என்ற இந்த போதை இருக்க வேண்டும். எவ்வளவு தன் எதிரில் சம்பூர்ண நிலை அருகில் வந்து கொண்டே இருக்குமோ அந்த அளவு உலகின் ஆத்மாக்களின் எதிரில் உங்களுடைய கடைசி கர்மாதீத் (பாவங்களை முழுமையாக அழித்த) நிலையின் சாட்சாத்காரம் தெளிவாக ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இதன் மூலம் தான் சாட்சாத்கார மூர்த்தியாகி உலகின் எதிரில் சாட்சாத்காரம் செய்விக்கும் நேரம் அருகில் இருக்கிறதா அல்லது இல்லையா என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளலாம். நேரமோ மிக வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. நேரத்தின் வேகம் அதிகமாக இருக்கிறது என்ற அனுபவம் ஆகிறது இல்லையா. இந்த கணக்குப்படி தன்னுடைய சம்பூர்ண நிலை கூட தெளிவாகவும் அருகிலும் இருக்க வேண்டும். எப்படி ஸ்தூலமாகவும் ஏதாவது ஒரு நிலை இருக்கிறது என்றால் எதிரில் பார்த்தவுடனேயே அதை சென்று அடைய வேண்டும் என்று புரிந்து கொள்கிறார்கள். இதே மாதிரி சம்பூர்ண நிலையும் சுலபமாக அனுபவம் ஆக வேண்டும். இதுவோ ஒரு நொடிக்கான விஷயம் தான். இப்பொழுது ஒரு நொடியில் அருகில் கொண்டு வருவதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். திட்டம் போடுவதில் நேரம் செலவாகும் ஆனால் அந்த நிலையில் நிலைத்து விட்டீர்கள் என்றால் நேரம் செலவாகாது. பிரத்யக்ஷதா அருகில் வந்து கொண்டிருக்கிறது என்ற இதைப் புரிந்து கொண்டீர்கள் தான் இல்லையா?. சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் உள்உணர்வுகள் மாற்றத்தில் வந்து கொண்டிருக்கிறது. இதிலிருந்து கூட பிரத்யக்ஷதாவின் நேரம் எவ்வளவு வேகமாக அருகில் வந்து கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். கடினமான விஷயம் சரளமாக ஆகிக் கொண்டிருக்கிறது. எண்ணமும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. பயமற்ற நிலை மற்றும் எண்ணத்தில் திடத்தன்மை இது தான் சம்பூர்ண நிலையின் அருகாமையின் அடையாளம். இந்த இரண்டுமே தென்பட்டுக் கொண்டிருக்கிறது தான் இல்லையா?. எண்ணத்தின் கூடவே உங்களுடைய ரிசல்ட்டும் தெளிவாகத்

தென்படட்டும். இதன் கூடவே பலனின் பிராப்தியும் தெளிவாகத் தென்படட்டும். இந்த எண்ணம் இது இதனுடைய ரிசல்ட், இந்த காரியம் இது இதனுடைய பலன் என்று அப்படி அனுபவம் ஆகிறதா? இதைத் தான் உடனடிப் பலன் என்று கூறப்படுவது.

எப்படி தந்தையின் மூன்று ரூபங்கள் பிரசித்தி பெற்றதோ அப்படி உங்களது மூன்று ரூபங்களின் சாட்சாத்காரம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறதா? எப்படி தந்தைக்கு தன்னுடைய மூன்று ரூபங்களின் நினைவு இருக்கிறதோ அதே போல் நான் மாஸ்டர் திரிமூர்த்தி என்று உங்களது மூன்று ரூபங்களின் நினைவு போகும்பொழுதும் வரும்பொழுதும் இருக்கட்டும். மூன்று காரியங்களும் சேர்ந்து கூடவே நடக்க வேண்டும். ஸ்தாபனையின் காரியம் செய்வதற்கான நேரம் வேறு, விநாச காரியத்தின் நேரம் வேறு என்று அப்படி இல்லை. புது படைப்பை படைத்துக் கொண்டே இருக்கிறீர்கள், கூடவே பழையது விநாசம் செய்து கொண்டே இருக்கிறீர்கள். அசுர சம்ஸ்காரம் மற்றும் என்னென்ன பலஹீனங்கள் இருக்கின்றனவோ அவற்றின் விநாசத்தையும் கூடவே செய்து கொண்டே இருக்க வேண்டும். புதிய சம்ஸ்காரத்தைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம், பழைய சம்ஸ்காரம் அழிந்து கொண்டிருக்கிறது. அப்படி சம்பூர்ண சக்தி ரூபம் மற்றும் அழிப்பவரின் ரூபம் இல்லாத காரணத்தினால் வெற்றி ஏற்பட முடிவதில்லை. இரண்டும் சேர்ந்தே இருப்பதினால் வெற்றி ஏற்பட்டு விடுகிறது. இந்த இரண்டு ரூபம் நினைவிருப்பதினால் தேவதா ரூபம் தானாகவே நினைவுக்கு வந்து விடும். இரண்டு ரூபங்களின் நினைவைத் தான் முயற்சி செய்யும் கடைசி நிலை என்று கூறலாம். இந்த நேரம் பிராமண ரூபம். அடுத்த நேரம் சக்தி ரூபம். எந்த நேரம் எந்த ரூபத்தின் அவசியம் இருக்கிறதோ அந்த நேரம் அதே ரூபத்தை தாரணை செய்து காரியத்தில் ஈடுபட்டுவிட வேண்டும். அந்த மாதிரி பயிற்சி தேவையாக இருக்கிறது. எப்படி ஒரு நொடியில் ஆத்ம அபிமானியாக ஆவதற்கான பயிற்சி இருக்கிறதோ அப்படி இந்தப் பயிற்சியையும் செய்ய முடியும். தன்னுடைய புத்தியை எங்கே விரும்புகிறீர்களோ அங்கே ஈடுபடுத்த முடிய வேண்டும். அந்த மாதிரியான பயிற்சி மிக அவசியமாகும். அந்த மாதிரியான பயிற்சி உள்ளவர் அனைத்து காரியத்திலும் வெற்றி அடைகிறார். யாரிடம் தன்னை வளைத்துக் கொள்வதற்கான சக்தி இருக்கிறதோ அவர் தான் உண்மையான தங்கத்திற்குச் சமமானவர் என்று புரிந்து கொள்ளுங்கள்.

எப்படி ஸ்தூல கர்மேந்திரியங்களை எங்கு விரும்புகிறீர்களோ அப்படி வளைக்க முடியும் இல்லையா?. ஒருவேளை வளையவில்லை என்றால் அதை நோயுற்றது என புரிந்து கொள்வீர்கள். புத்தியையும் அந்த மாதிரி சுலபமாக வளைக்க வேண்டும். புத்தி நம்மை வளைத்து கொண்டு செல்லட்டும் என்று அந்த மாதிரி இருக்க வேண்டாம். அந்த மாதிரி சம்பூர்ண நிலையின் மகிமை செய்யப்பட்டிருக்கிறது. நாளாக நாளாக தன்னில் மாற்றத்தை அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? சம்ஸ்காரம், சுபாவம் மற்றும் குறைகளைப் பார்க்கிறீர்கள் என்றால் கீழே வந்து விடுகிறீர்கள். எனவே ஒவ்வொரு நாளும் இப்பொழுது இந்த மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். யாருடைய சுபாவ, சம்ஸ்காரத்தைப் பார்த்துக் கொண்டும், தெரிந்து கொண்டும் புத்தியின் நினைவு அந்தப் பக்கம் செல்ல வேண்டாம். மேலும் அந்த ஆத்மாவிற்காக இன்னும் அதிகமாக சுபபாவனை இருக்கட்டும். ஒரு பக்கத்திலிருந்து கேட்டீர்கள் இன்னொரு பக்கம் அழிந்தது. நல்லது.

**வரதானம்: பலமற்ற, மனமுடைந்து போன சக்தியற்ற ஆத்மாக்களுக்கு அதிப்படியான பலம் கொடுக்கக்கூடிய ஆன்மீக இறக்க மனமுடையவர் ஆகுக!**

யார் ஆன்மீக இரக்கமனமுடைய குழந்தைகளாக இருக்கிறார்களோ அவர்கள் மகாதானியாகி முற்றிலும் நம்பிக்கை இழந்தவர்களிலும் நம்பிக்கையை உருவாக்கி விடுகிறார்கள். பலமற்றவரை பலம் நிரம்பியவராக்கி விடுகிறார்கள். தானம் எப்பொழுதும் ஏழைக்கும் ஆதரவற்றவருக்கும் கொடுக்கப்படுகிறது. அப்படி யார் பலமற்ற, மனமுடைந்து போன சக்தியற்ற பிரஜை தரத்தை உடைய ஆத்மாக்களாக இருக்கிறார்களோ அவர்களுக்காக ஆன்மீக இரக்க மனமுடையவராகி மகாதானி ஆகுங்கள். உங்களுக்குள் ஒருவர் இன்னொருவருக்காக மகாதானி ஆக வேண்டாம். அதுவோ சகயோகி, துணைவர்களாக இருப்பதாகும், சகோதரன் சகோதரனாக இருக்கிறீர்கள். அனைவரும் சமநிலையில் இருக்கும் முயற்சி செய்பவர்களாகவும் இருக்கிறீர்கள். சகயோகம் கொடுங்கள், தானம் கொடுக்க வேண்டாம்.

**சுலோகன்: எப்பொழுதும் ஒரு தந்தையின் உயர்ந்த தொடர்பில் இருந்தீர்கள் என்றால் வேறு யாருடைய தொடர்பின் பிரபாவமும் ஏற்பட முடியாது!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 04.03.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அதிகாரி ஆவதற்காக அடிமைத்தனத்தை விடுங்கள்!

இன்று முக்கியமாக எதற்காக வந்திருக்கிறோம் என்று தெரிந்திருக்கிறீர்களா? எதிர்காலத்தில் விசேஷங்களைக் காண்பிக்கக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்காக வந்திருக்கிறோம். தன்னை விசேஷ ஆத்மாக்கள் அதாவது விசேஷத்தை காண்பிக்கக் கூடியவர் என்று நினைக்கிறீர்களா? அந்த மாதிரி இதுவரை எந்தக் குழுவும் செய்து காண்பிக்காத எந்த விசேஷமான காரியத்தை செய்து காண்பிக்கப் போகிறீர்கள்? இதற்காக ஏதாவது திட்டத்தை யோசித்திருக்கிறீர்களா? மதிப்புடன் தேர்ச்சி பெறுவதற்கான லட்சியம் மற்றும் தந்தையை வெளிப்படுத்தக்கூடிய லட்சியம் அனைவருடையதாக இருக்கவே இருக்கிறது ஆனால் நீங்கள் விசேஷமாக என்ன புதுமையைக் காண்பிப்பீர்கள்? எந்தவொரு தடையிலும் மற்றும் எந்தவொரு காரியத்திலும் கடுமையான உழைப்பு செய்யாமல் அதற்கும் மேல் மற்ற ஆத்மாக்களையும் தடையற்றவராக மற்றும் ஒவ்வொரு காரியத்தில் உதவியாளராக ஆக்கிக் கொண்டே சுலபமாகவே வெற்றி அடைபவராக ஆவீர்கள் மற்றும் ஆக்குவீர்கள் என்ற இந்தப் புதுமை மற்றும் விசேஷத்தைத் தான் காண்பிக்க வேண்டும் மற்றும் காண்பிப்பதற்கான நிச்சயத்தை செய்ய வேண்டும். அதாவது எப்பொழுதும் சகஜயோகி, எப்பொழுதும் தந்தையின் அன்பானவர், தந்தையின் காரியத்தில் சகயோகி, எப்பொழுதும் அனைத்து சக்திகளையும் தாரணை செய்து கொண்டே அலங்கரிக்கப்பட்ட மூர்த்தி, ஆயுதங்கள் ஏந்திய சக்தியாகி தன்னுடைய உருவத்தின் மூலம், நடத்தை மூலம் தந்தையின் சரித்திரம், காரியத்தைப் பிரத்யக்ஷம் செய்ய வேண்டும். அந்த மாதிரி உறுதிமொழியை தனக்குத் தானே எடுத்திருக்கிறீர்களா? சின்ன சின்ன விஷயங்களுக்காக கடுமையாக உழைக்கமாட்டீர்கள்தானே? எந்தவொரு மாயாவின் கவர்ச்சிகரமான ரூபத்தின் ஏமாற்றத்தை அடைய மாட்டீர்களே? யார் தானே ஏமாற்றம் அடைந்து விடுகிறாரோ அவர்

மற்றவர்களை ஏமாற்றத்திலிருந்து விடுவிக்க முடிவதில்லை. 'நான் துக்கத்தை நீக்கி சுகம் கொடுப்பவரின் குழந்தை' என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். யாருடைய துக்கத்தையாவது லேசாக ஆக்குபவருக்கு ஒருபொழுதும், ஒரு விநாடி கூட எண்ணம் மற்றும் கனவில் துக்க உணர்வு வர முடியாது. ஒருவேளை எண்ணத்தில் துக்க உணர்வு வருகிறது என்றால், சுகக்கடல் தந்தையின் குழந்தை என்று எப்படி அழைக்கப்படுவீர்கள்? தந்தையின் மகிமை செய்கையில் சுகக்கடல் நீங்கள் சில நேரம் துக்க உணர்வும் வந்து விடுகிறது என்று எப்பொழுதாவது வர்ணிக்கிறீர்களா? தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் இல்லையா? துக்கத்தின் உணர்வு வருகிறது என்றால், எங்கேயோ மாயா ஏமாற்றி விட்டிருக்கிறது. எனவே அந்த மாதிரி உறுதிமொழி எடுக்க வேண்டும். சக்தி ரூபமாக நீங்கள் இல்லையா என்ன, சக்தி எப்படி கிடைக்கும்? ஒருவேளை எப்பொழுதும் புத்தியின் சம்மந்தம் ஒரே ஒரு தந்தையோடு மட்டும் இணைக்கப்பட்டிருக்கிறது என்றால், சம்மந்தத்தின் மூலம் அனைத்து சக்திகளின் ஆஸ்தி அதிகாரத்தின் ரூபத்தில் அவசியம் பிராப்தி ஆகிறது ஆனால் அதிகாரி (உரிமையுள்ளவர்) என்று புரிந்து ஒவ்வொரு காரியமும் செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால், சொல்வதிலும் மற்றும் எண்ணத்திலும் கேட்க வேண்டும் என்ற ஆசை இருக்காது. அதிகாரம் பிராப்தி ஆகாத காரணத்தினால் ஆங்காங்கே ஏதேனும் அடிமைத்தனம் இருக்கிறது. அடிமைத்தனம் இருக்கும் காரணத்தினால் அதிகாரம் பிராப்தி ஆவதில்லை. தன்னுடைய உடல் உணர்வின் அடிமைத்தனம், பழைய சம்ஸ்காரத்தின் அடிமைத்தனம், ஏதாவது குணத்தின் தாரணைக் குறைவின் காரணமாக பலமற்ற நிலை மற்றும் பலஹீனத்தின் அடிமைத்தனம், என அப்படி எதுவாக இருந்தாலும் அதிகாரத்தை (சக்தி நிலை) அனுபவம் செய்ய முடிவதில்லை. எனவே நாம் அடிமை இல்லை, அதிகாரிகள் என்று எப்பொழுதும் நினைத்துக் கொள்ளுங்கள். பழைய சம்ஸ்காரங் களின் மீது மற்றும் மாயாவின் மீது வெற்றி அடையும் அதிகாரியாக இருக்கிறேன். நம்முடைய உடலின் உணர்வு மற்றும் உடலின் சம்மந்தம் மற்றும் தொடர்பு எதுவாக இருந்தாலும் அதன் மேல் வெற்றி அடையக்கூடிய அதிகாரியாக இருக்கிறேன். ஒருவேளை இந்த அதிகாரியாகும் நிலை எப்பொழுதும் நினைவில் இருக்கிறது என்றால், தானாகவே அனைத்து சக்திகளின் பிராப்தியின் அனுபவம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். அதிகாரி நிலை மறந்து விடுகிறதா? யார் அடிமையாக இருப்பாரோ அவர் எப்பொழுதும்

யாசித்துக் கொண்டே இருப்பார், அதிகாரியாக இருப்பவர் எப்பொழுதும் அனைத்து பிராப்திகளின் சொரூபத்தில் இருக்கிறார். தந்தையிடம் இருக்கும் அனைத்து சக்திகளின் பொக்கிஷம் யாருக்காக இருக்கிறது? அப்படியானால் யாருடைய பொருளோ, அதை அவர் அடையவில்லை என்றால், அது எப்படி? அனைத்து சக்திகளுமோ நம்முடைய பிறப்புரிமை என்ற இந்த போதை எப்பொழுதும் இருக்கட்டும். அப்படி அதிகாரியாகி நடந்து கொள்ளுங்கள். அந்த மாதிரி புத்தியில் எப்பொழுதும் உயர்ந்த எண்ணம் இருக்க வேண்டும். ஒருவேளை எண்ணம் உயர்வாக இருக்கிறது என்றால், வார்த்தை மற்றும் காரியத்திலும் வர முடியாதா? எனவே எண்ணத்தை உயர்வானதாக ஆக்குங்கள் மற்றும் எப்பொழுதும் சர்வசக்திவான் தந்தையுடன் புத்தியின் தொடர்பு இருக்கட்டும். அந்த மாதிரி எப்பொழுதும் சங்கத்தின் (தொடர்பின்) வர்ணத்தில் வர்ணமயமாக்கப்பட்டிருக்கிறீர்களா? அனுபவம் செய்கிறீர்களா அல்லது திரும்பி ஊர் சென்ற பிறகு அனுபவம் செய்வீர்களா? யோசிக்க வேண்டுமானாலும், சொல்வதானாலும், செய்வதானாலும் அதிசயமானதாகத் தான் இருக்க வேண்டுமேயன்றி, சாதாரணமானாதாக இருக்கக்கூடாது என்று எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை சாதாரண எண்ணத்தை வைத்தீர்கள் என்றால், பிராப்தியும் சாதாரணமாகவே இருக்கும். எப்படி எண்ணமோ அப்படித்தானே படைப்பும் இருக்கும் இல்லையா? ஒருவேளை எண்ணமே உயர்ந்ததாக இல்லை என்றால், நீங்கள் படைக்கக்கூடிய உங்களுடைய புது உலகத்தின் பதவியும் சாதாரணமானதாகத் தான் கிடைக்கும். எனவே உருவான என்னுடைய எண்ணம் சாதாரண மானதா அல்லது உயர்ந்ததா? என்று எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். சாதாரண எண்ணத்தையும் மற்றும் நடத்தையையும் பிற ஆத்மாக்கள் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். ஒருவேளை சர்வ சக்திவானின் குழந்தை ஆன பிறகும் சாதாரண எண்ணம் மற்றும் காரியம் நடந்தது என்றால், உயர்ந்த நிலை மற்றும் விசேஷமாக என்ன இருந்தது? நான் விசேஷ ஆத்மா ஆவேன், இந்தக் காரணத்தினால் என்னுடைய அனைத்தும் விசேஷமானதாக இருக்க வேண்டும். தன்னுடைய மாற்றத்தின் மூலமாக ஆத்மாக்களை தன் பக்கம் மற்றும் தன்னுடைய தந்தையின் பக்கம் கவர்ந்திழுக்க முடிய வேண்டுமேயன்றி, தன்னுடைய உடலின் பக்கம் அல்ல. தன்னுடையது என்றால், ஆத்மாவின் ஆன்மீகத்தன்மையின் பக்கம். உங்களுடைய மாற்றம் உலகை மாற்றத்தில் கொண்டு வரும்.

உலக மாற்றம் கூட உயர்ந்த ஆத்மாக்களின் மாற்றத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறது. மாற்றத்தையோ கொண்டு வர வேண்டும் இல்லையா அல்லது சாதாரண வாழ்க்கையே நன்றாக இருக்கிறதா? இந்த நினைவு, உள்உணர்வு மற்றும் பார்வை இம் மூன்றும் ஆன்மீகமானதாக ஆகி விட்டது என்றால், இந்த உலகத்தின் எந்தவொரு நபரோ, எந்தவொரு பொருளோ உங்களை கவர்ந்திழுக்க முடியாது. ஒருவேளை கவர்ந்திழுக்கிறது என்றால் நினைவில், உள்உணர்வில் மற்றும் பார்வையில் ஆன்மீகத்தன்மையின் குறை இருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் குறையை ஒரு நொடியில் மாற்றத்தில் கொண்டு வர வேண்டும். இந்த குரூப் ஒரு நொடியில் தன்னுடைய சம்ஸ்காரம் மற்றும் எண்ணத்தை மாற்றத்தில் கொண்டு வந்து காண்பிக்க வேண்டும் என்ற இந்த விசேஷத்தைத் தான் காண்பிக்க வேண்டும், அந்த மாதிரி தைரியம் இருக்கிறதா? யோசிப்பதில் கூட இவ்வளவு நேரம் செலவாகிறது, ஆனால் செய்வதில் இவ்வளவு நேரம் எடுக்க வேண்டாம். அந்த மாதிரி தைரியம் இருக்கிறதா? இந்த குரூப் துணிச்சலான குரூப் ஆகும். அப்படி யார் துணிச்சலை வைப்பவர்களோ அவர்களுடன் தந்தை எப்பொழுதும் சகயோகியாக இருக்கிறார். எனவே ஒருபொழுதும் துணிச்சலை விடக்கூடாது. தைரியம் மற்றும் உற்சாகம் எப்பொழுதும் இருக்கட்டும். தைரியத்தினால் எப்பொழுதும் முகமலர்ச்சியுடையவர்களாக இருப்பீர்கள். உற்சாகத்தினால் என்னவாகும்? உற்சாகம் எதை அழிக்கிறது? சோம்பேறித்தனத்தை. சோம்பேறித்தனம் கூட முக்கியமான விகாரம் ஆகும். முயற்சி செய்பவர் முயற்சி செய்யும் மார்க்கத்தில் செல்ல ஆரம்பித்திருக்கிறார் அவர்களின் எதிரில் தற்சமயம் மாயா சோம்பேறித்தனத்தின் ரூபத்தில் விதவிதமான முறைகளில் முற்றுகையிட வருகிறது. எனவே இந்த சோம்பேறித்தனத்தை அழிப்பதற்காக எப்பொழுதும் உற்சாகத்தில் இருங்கள். வருமானம் செய்ய வேண்டும் என்று எப்பொழுது யாருக்காவது உற்சாகம் ஏற்பட்டால் பிறகு சோம்பேறித்தனம் அழிந்து விடுகிறது. இப்பொழுது கூட ஏதாவது ஒரு காரியத்திற்காக தன்னுடைய உற்சாகம் இல்லை என்றால் அவசியம் சோம்பேறித்தனம் இருக்கும். எனவே சோம்பேறித்தனத்தின் வசமாகி மற்றும் உயர்ந்த காரியம் செய்வதிலிருந்து வஞ்சிக்கப்பட்டு விடுகிற மாதிரி ஒருபொழுதும் உற்சாகத்தை குறைக்க கூடாது. சோம்பேறித்தனம் கூட அனேக விதமானதாக இருக்கிறது. தன்னுடைய முயற்சியில் முன்னேறிச்

செல்வதில் சோம்பேறித்தனம் மிகுந்த தடையாகி விடுகிறது. பேசும் போது இப்படி கூறுகிறீர்கள் இல்லையா? நல்லது, பார்ப்போம், இந்தக் காரியத்தை செய்வோம்! செய்து விடலாம்! இவையெல்லாம் சோம்பேறித்தனத்தின் அடையாளங்கள். செய்வோம். செய்தே விடுவோம். அதெல்லாம் ஆகி விடும்; அப்படியில்லை; செய்வதில் இறங்கி விட வேண்டும். என்ன ஞானம் மற்றும் தாரணைகள் கிடைத்திருக்கிறதோ அவற்றை புத்தியில் தாரணையோ செய்திருக்கிறீர்கள் இல்லையா? ஆனால் நடைமுறையில் வருவதில் தடை ரூபமாக என்ன வருகிறதோ அது தன்னுடைய சோம்பேறித்தனம். நல்லது நாளை முதல் எடுத்துச் செய்வோம். இன்னார் செய்தால் நானும் செய்வேன். இன்று யோசிக்கிறேன் நாளையிலிருந்து செய்வேன். இந்தக் காரியத்தை முடித்து விட்டு பிறகு இதைச் செய்வேன், அந்த மாதிரியான எண்ணம் தான் அலட்சியத்தின் ரூபமாகும். என்ன செய்ய வேண்டுமோ அதை இப்பொழுதே செய்ய வேண்டும். எவ்வளவு செய்ய வேண்டுமோ அதை இப்பொழுதே செய்ய வேண்டும். மற்றபடி செய்து விடலாம், யோசிப்போம் இந்த வார்த்தைகளின் பின்னால் வரும் எழுத்துக்கள் 'வோம், போம்' இருக்கின்றன இல்லையா, இந்த வார்த்தைகள் குழந்தைத்தனத்தின் அடையாளம். சின்னக் குழந்தைகள் வோம், வோம் ஓசை எழுப்புகிறார்கள் இல்லையா, இவை அலட்சியத்தின் அடையாளம். எனவே ஒருபொழுதும் சோம்பேறித்தனத்தின் ரூபத்தை தன்னிடம் வர விடாதீர்கள். மேலும் எப்பொழுதும் தன்னை உற்சாகத்தில் வைக்க வேண்டும். ஏனென்றால், பொறுப்பிலிருப்பவராக ஆகிறீர்கள் இல்லையா? பொறுப்பிலிருப்பவராக ஆகியிருப்பவர் எப்பொழுதும் முயற்சி செய்வதின் உற்சாகத்தில் இருக்கிறார்கள் என்றால் அவரைப் பார்த்து மற்றவர்களும் உற்சாகத்தில் இருக்கிறார்கள். காலப்போக்கில் முயற்சியில் களைப்பு வருவது மற்றும் காலப்போக்கில் முயற்சி சாதாரண வேகத்தில் ஆகி விடுவது, இது எதன் அடையாளம்? தடை இருக்கவில்லை; ஆனால் ஆர்வமும் உயர்ந்ததாக இல்லை என்றால் கூட அதையும் சோம்பேறித்தனம் என்றே கூறுவோம். சிலர் அந்த மாதிரியும் அனுபவம் செய்கிறார்கள் தடை கூட இல்லை. சரியாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது; ஆனால் ஆர்வமோ, உற்சாகமோ விசேஷமான எந்த ஊக்கமோ இல்லை என்றால் இதுவும் சோம்பேறித்தனத்தின் அடையாளமே! சோம்பேறித்தனமும் அனேக விதமானது. இந்த சோம்பேறித்தனத்தை ஒருபொழுதும் வர விடாதீர்கள். சோம்பேறித்தனம் முதலில் மெதுமெதுவாக சாதாரண முயற்சி

செய்பவராக ஆக்கும். பிறகு (பாபாவின்) நெருக்கத்தில் இருந்து தூரமாக்கும் பின்பு தூரம் ஆக்கி ஆக்கி ஏமாற்றியும் விடும். பலஹீனமானவராக ஆக்கி விடும். பலமற்றவராக ஆக்கி விடும். பலமற்ற மற்றும் பலஹீனமானவராக ஆவதினால் குறைகளின் பிரவேசம் ஆரம்பம் ஆகி விடுகிறது. எனவே எனது புத்தியின் ஈடுபாடு தந்தை மற்றும் தந்தையின் காரியத்திலிருந்து கொஞ்சமாவது தூரமாக இல்லையே, முற்றிலும் அருகாமையில் மற்றும் கூடவே இருக்கிறதா? என்ற இதை எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். இன்றைய உலகத்தில் யாராவது யாரையாவது கொலை செய்கிறார் என்றால், மற்றும் அல்லது தாழ்ந்த காரியம் ஏதேனும் செய்கிறார் என்றால், முதலில் அவரை (தாக்க நினைப்பவரை) தூரமாக விரட்டி அழைத்துச் செல்வார். அவரை தனிமையில் பலஹீனமானவராக்கி விட்டு பின்பு அவர் மேல் முற்றுகை இடுவார். அப்படி மாயாவும் சாதுர்யமானது. முதலில் சர்வசக்திவான் தந்தையிடமிருந்து புத்தியை தூரமாக்குகிறது. பின்பு எப்பொழுது பலஹீனமாகுகிறாரோ அப்பொழுது முற்றுகை இடுகிறது. பின்பு யாரும் உடன் இருப்ப தில்லை. எனவே என்ன ஆனாலும் சரி, தன்னுடைய புத்தியை ஒருபொழுதும் தந்தையின் துணையிலிருந்து தூரமாக்கக் கூடாது. எப்பொழுதாவது யார் மேலேயாவது முற்றுகை நடக்கிறது என்றால், அவரிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, தன்னை தூரமாக எடுத்துச் செல்ல முடியாத அளவிற்கு எப்படி கதறுகிறார்கள், எப்படி அலறுகிறார்கள், இங்கு மாயா என்னுடைய புத்தியின் தொடர்பை தந்தையிடமிருந்து தூரமாக்குவதற்கு முயற்சி செய்கிறது என்று எப்பொழுது தெரிகிறதோ உடனே உங்களுக்குள் தந்தையின் குணத்தை பாட ஆரம்பித்து விட வேண்டும். மகிமை செய்ய வேண்டும். மகான் காரியங்களில் (சேவை) ஈடுபட்டு விடுங்கள். கதறாதீர்கள். பக்தியில் கூட குணத்தை பாடுகிறார்கள் இல்லையா? இந்த நினைவுச்சின்னம் எங்கிருந்து உருவானது? இவ்வாறு மனதால் குணத்தைப் பாடுவதை அவர்கள் வார்த்தையில் கொண்டு வந்து விட்டார்கள். சரியான முறையில் குணத்தைப் பாடுவதை உங்களால்தான் செய்ய முடியும் இல்லையா! இப்பொழுது சரியான ரூபத்தில் மனதின் எண்ணம் நினைவு சொரூபத்தில் குணத்தைப் பாடிக் கொண்டே இருக்கிறீர்கள் மேலும் பக்தியில் ஸ்தூலத்தன்மையில் வந்து விடுகிறீர்கள் என்றால் வாய் மூலமாக பாட ஆரம்பித்து விடுகிறீர்கள். அனைத்து பழக்க வழக்கங்களின் தொடக்கமும் இங்கிருந்து தான்

ஆரம்பமாகிறது இல்லையா? அப்படி குணத்தைப் பாட ஆரம்பித்து விடுங்கள். தன்னை அதிகாரி என்று புரிந்து அனைத்து சக்திகளையும் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். பின்பு ஒருபொழுதும் மாயா உங்களுடைய புத்தியின் ஈடுபாட்டை தூரமாக ஆக்க முடியாது. தூரமாகவும் ஆக மாட்டீர்கள், பலஹீனமாகவும் ஆக மாட்டீர்கள், தோல்வியும் அடைய மாட்டீர்கள். பிறகு எப்பொழுதுமே வெற்றி அடைபவராக ஆவீர்கள். எனவே நான் அனேக தடவை வெற்றி அடைந்தவன். இப்பொழுதும் வெற்றி அடைந்தே காண்பிப்பேன் என்ற இந்த சுலோகனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். யார் அனேக தடவை வெற்றி அடைந்தவரோ அவர் இப்பொழுது தோல்வி அடைவாரா என்ன? ஒருபொழுதும் இல்லை: தோல்வி அடைவது என்பது நடக்கவே கூடாது. எப்படி அஞ்ஞான ஆத்மாக்களுக்கு வெற்றி அடைவது அசம்பவமாக அனுபவம் ஆகிறதோ, இந்த விதத்தில் ஞான ஆத்மாவிற்கு தோல்வி அடைவது அசம்பவமாக அனுபவம் ஆக வேண்டும். அந்த மாதிரியான மனோபலத்தை தன்னுள் நிரப்பி இருக்கிறீர்களா? யாருடைய எண்ணத்தில் கூட சரீர உணர்வு இல்லையோ, தேக அபிமானம் இல்லையோ அவரைத் தான் 'அனைத்தையும் சமர்ப்பணம் செய்தவர்' என்று கூறலாம். தன்னுடைய தேக உணர்வையும் அர்ப்பணம் செய்ய வேண்டும். நான் இன்னார் என்ற இந்த எண்ணமும் அர்ப்பணம் ஆக வேண்டும். அவரைத் தான் சர்வ சமர்ப்பணம் மற்றும் குணங்களினால் சம்பன்னமானவர் (நிறைந்தவர்) என்று கூறப்படுகிறது. அனைத்து குணங்களினால் சம்பன்னமானவரைத் தான் சம்பூர்ணமானவர் என்று கூறப்படுகிறது. எந்தவொரு குணத்தின் குறையும் இருக்க வேண்டாம். இப்பொழுது இந்தக் குறை இருக்கிறது என்று வர்ணனை செய்கிறீர்கள் இல்லையா? இதன் மூலம் சம்பூர்ண நிலை இல்லை என்பது நிரூபணம் ஆகிறது. சர்வ குணங்கள் நிரம்பியவர்களாக ஆகியிருக்கிறீர்களா? சர்வ சமர்ப்பணமாகி, சர்வ குணங்கள் சம்பன்னம் ஆகி, சம்பூர்ண நிலையை பிராப்தி செய்தே தீருவோம் என்ற இந்த லட்சியத்தை வைத்துக் கொள்ள வேண்டும். இந்த மாதிரி முயற்சி செய்பவர்களுக்கு தந்தையும் எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆகுக! என்ற வரதானத்தையும் கொடுக்கிறார். ஒவ்வொரு எண்ணத்திலும் அதிசயம் செய்து காண்பியுங்கள்! இதே விசேஷத்தைக் காண்பியுங்கள்! வாழ்க்கையில் ஒரு முடிவு எடுத்து வந்திருக்கிறீர்கள் இல்லையா? உங்களுக்கு நீங்களே முடிவு எடுத்து வந்திருக்கிறீர்கள்! எனவே, எந்த ஒரு சம்ஸ்காரத்தின் வசமாக வேண்டாம். யார் உலகத்தை

வென்றவராகவே இருக்கிறாரோ, அப்படிப்பட்டவர் யாருடைய வசமாகவும் ஆக முடியாது. யார் அனைத்து ஆத்மாக்களுக்கும் பார்வையாலேயே மகிழ்ச்சி (திருப்தி) செய்பவராக இருக்கிறாரோ, அவருடைய பார்வை வேறு எங்கும் போக முடியாது. அந்த மாதிரி திட நிச்சயபுத்தி உடையவராக இருக்கிறீர்களா? தன்னுடைய அனைத்து பலஹீனங்களையும் பட்டியில் சுவாஹா செய்தாகி விட்டதா அல்லது செய்ய வேண்டுமா? இன்னும் கொஞ்சம் மீதம் இருக்கிறது என்று அப்படி சொல்ல மாட்டீர்கள் இல்லையா? தன்னுடைய மனம் என்ற பையை மிக நன்றாக சோதனை செய்யுங்கள் ஏதாவது மூலையில் கொஞ்சம் ஏதாவது தங்கியிருந்து விடவில்லையே மற்றும் தெரிந்தே கைச்செலவுக்காக கொஞ்சம் வைத்திருக்கவில்லையோ இதை நல்ல முறையில் பாருங்கள். நம்பிக்கைக்குரிய குரூப் ஆக இருக்கிறீர்களா அல்லது இதையும் விட உயர்ந்தவர்களா? அதையும் விட உயர்வாக என்ன இருக்கிறது? நம்பிக்கைக்குரிய வராகவும் இருக்கிறீர்கள் மற்றும் வெற்றி அடைபவர்களாகவும் இருக்கிறீர்கள். அப்படி இது அனேக தடவை வெற்றி அடைந்த குரூப் ஆகும். வெற்றி அடைபவர்களாகவோ இருக்கவே இருக்கிறீர்கள். நம்பிக்கைக்கான விஷயம் இல்லை. அந்த மாதிரி வெற்றி அடைபவர் தான் வெற்றி மாலையின் மணியாக ஆகிறார். நம்பிக்கை மட்டும் இல்லை ஆனால் 100-சதவிகிதம் நிச்சயமாக நாம் வெற்றி அடைபவர்களே தான்! பார்த்துக் கொள்ளுங்கள். மாயாவும் குறைந்தது அல்ல. மாயாவும் பெரிய சுறுசுறுப்பானது தான்! அனைத்து தரப்பிலிருந்தும் அனைத்து ரூபத்திலும் மாயாவின் ஞானத்தையும் தெரிந்து கொண்டீர்கள். மாயா வினுடையது என்னவாக இருக்கிறது? அது எந்த ரூபத்தில், எப்படி வருகிறது? இந்த முழு ஞானத்தையும் எடுத்துக் கொண்டீர்களா? இந்த விஷயத்தில் எங்களிடம் ஞானம் இல்லாமல் இருந்தது என்று அப்படி கூற மாட்டீர்கள் தான் இல்லையா? அப்படி அறியாதவராய் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டாம். சிலர் இந்த மாதிரியும் இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியாது, என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள், அறியாதவர்களாக இருக்கும் காரணத்தினாலும் ஏமாற்றத்தில் வந்து விடுகிறார்கள் ஆனால், மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக இருக்கிறீர்கள் என்றால், அறியாமை இருக்க முடியாது. எனக்கு இந்த விஷயத்தில் ஞானம் இல்லை என்ற இந்த வார்த்தை வெளியாகிறது இல்லையா? இதுவும் பலஹீனம் தான். ஞானி என்றாலே ஞானி தான்! ஏதாவது ஒரு விஷயத்தின் அஞ்ஞானம்

இருக்கிறது என்றால் ஞானி என்று கூற முடியுமா? ஞான சொருபமானவர் எந்தவொரு விஷயத்தின் அஞ்ஞானத்திலும் இருக்க மாட்டார். யார் யோக சொரூபமாக இருப்பாரோ அவருக்கு அனுபவம் இல்லாத போதிலும் முதலிலேயே அனைத்தையும் தெரிந்தவர் மாதிரி அனுபவம் ஆகும். மூன்று காலத்தையும் தெரிந்தவர் எப்படி அறியாதவராக ஆக முடியும்? எனவே மாஸ்டர் ஞானம் நிறைந்தவராகவும் ஆக வேண்டும் மற்றும் வெற்றி அடைபவராகவும் ஆக வேண்டும் என்றால், தோல்வியே ஏற்படாது என்ற அனுபவம் தான் ஏற்படும் இல்லையா? இந்த குரூப் எப்படி தனது ஜொலிப்பைக் காண்பிக் கிறது என்று இப்பொழுது பார்க்கலாம். உங்களுடைய ஜொலிப்பின் மூலம் அனைவருக்கும் தந்தையின் ஜொலிப்பு தென்பட வேண்டும். பாவம் ஆத்மாக்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள், தந்தையின் ஜொலிப்பு கொஞ்சமாவது தென்பட்டது என்றால், அனைத்து பிராப்திகளும் ஏற்பட்டு விடும். எனவே இப்பொழுது தந்தையின் ஜொலிப்பை தன் ஜொலிப்பின் மூலம் காண்பியுங்கள். புரிந்ததா? அப்படி இது வெற்றி அடைபவர்களின் குரூப் ஆகும். உற்சாகத்தின் மூலம் சோம்பேறித்தனத்தை விரட்டக்கூடியவர்கள் நீங்கள். இப்பொழுது நடைமுறையில் பார்ப்போம். பயிற்சியை நடைமுறையில் எவ்வளவு கொண்டு வருகிறீர்கள் என்பதும் தெரிய வந்து விடும். எந்தெந்த இடத்திற்குச் செல்வீர்களோ, யாருடன் சேர்ந்து சேவையின் உதவியாளர் ஆவீர்களோ அவர்களுக்கு அதிசயத்தை தவிர வேறு எதுவுமே தென்பட வேண்டாம். அந்த மாதிரி இப்பொழுது நீங்கள் அதிசயத்தைக் காண்பிக்க வேண்டும். ஒரு வரியில் அதிசயத்தை எழுதட்டும் அப்பொழுது தான் வெற்றி அடைந்த குரூப் என்று சொல்லுவோம். தந்தைக்குச் சமமாகி காண்பியுங்கள். உண்மையிலேயே இந்த குருப் தடையற்றது; எப்பொழுதும் தந்தையின் லயிப்பில் மூழ்கி இருப்பவர்கள் என்று பெரியவர்களும் தந்தையின் குணத்தைப் பாடுகிற மாதிரி அதிசயத்தை செய்து காண்பியுங்கள். ஒருவரைத் தவிர வேறு எதுவுமே ரசிப்பதில்லை. தந்தை மேல் உள்ள ஈடுபாடு தந்தையின் காரியத்தின் (சேவை) மேல் உள்ள ஈடுபாடு என்கிற இதைத் தவிர வேறு எதுவுமே ரசிப்பதில்லை. உலகத்தில் வேறு எந்த நபர் அல்லது பொருள் மீதும் இந்த அனுபவமே இருக்க வேண்டாம். அப்படி ஒரு ஈடுபாடு, ஒருவர் மீது நம்பிக்கை, ஒரே சீரான நிலை முன்னேறும் கலையில் இருக்கக்கூடியவராகிக் காண்பியுங்கள். அப்பொழுது தான் அதிசயம் என்று கூறுவோம். 'ஏன்' என்பதையே முற்றிலும் சாம்பலாக்கிச் செல்ல

வேண்டும். ஏதாவது காரணம் எதிரில் உருவாகிறது என்றால், அந்தக் காரணத்தையும் மாற்றி நிவாரண ரூபம் ஆக்கி விடுங்கள். பின்பு இந்தக் காரணம் இருந்தது இல்லையா என்று அப்படி கூறாதீர்கள். எவ்வளவு தான் காரணங்கள் இருந்தாலும் நான் நிவாரணம் செய்யக்கூடியவனே அன்றி காரணத்தினைப் பார்த்து பலஹீனமாகுபவர் அல்ல! காரணத்தை நிவாரணத்தில் மாற்றம் செய்யக் கூடிய குரூப் நீங்கள். இதைத் தான் வெற்றி அடைபவர் என்று கூறப்படுகிறது. இந்த மாதிரி உயர்ந்த லட்சியம் உடையவர் எதிர் காலத்தில் லட்சுமி ரூபம் ஆகிறார். லட்சுமி என்றால் லட்சணம் உடையவர். எனவே இப்பொழுதும் கூட முகத்தில், நடத்தையில் அந்த பிரகாசம் தென்பட வேண்டும். இப்பொழுதோ இங்கு கற்றுக் கொண்டிருக்கிறோம்; அங்கு சென்று காண்பிப்போம் என்று அப்படி இல்லையே? எப்பொழுது இங்கு நிரூபணத்தை கொடுத்துச் செல்வீர்களோ, அப்பொழுது தான் அங்கும் நிரூபணம் கொடுக்க முடியும். புரிந்ததா?

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 12.03.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வெற்றியின் ஆதாரம் சேகரிக்கும் சக்தி மற்றும் போராடும் சக்தி!

தன்னை எப்பொழுதும் வெற்றியடையும் மூர்த்தியாக நினைக்கிறீர்களா? மற்றும் சுலபமாகவே வெற்றி கிடைத்துக் கொண்டிருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுதும் மற்றும் சுலபமாகவே வெற்றி அடைபவராக ஆவதற்காக முக்கியமாக இரண்டு சக்திகளின் அவசியம் இருக்கிறது. அந்த இரண்டு சக்தகிளின் ஆதாரத்தினால் எப்பொழுதும் மற்றும் சுலபமாகவே வெற்றி அடைபவராக ஆக முடியும். அந்த இரண்டு சக்திகள் எவை? நிச்சயபுத்தியுடையவராகவோ ஆகியேவிட்டீர்கள் இல்லையா? இப்பொழுது வெற்றி அடைவதற்கான முயற்சியில் முக்கியமாக எந்த சக்திகள் தேவையாக இருக்கின்றன. ஒன்று போராடும் சக்தி மற்றும் இன்னொன்று சேகரிக்கும் சக்தி சேகரிப்பதில் மனிதர்களை சேகரிப்பதும் வந்து விடுகிறது. அனைத்து விதமான சேகரிப்பு. அப்படி ஒன்று போரிடுவது இன்னொன்று சேகரிப்பது இந்த இரண்டு சக்திகளும் இருக்கின்றன என்றால் தோல்வி அடைவது ஆக முடியாது. எந்தவொரு காரியத்தில் மற்றும் தன்னுடைய முயற்சியில் தோல்வி அடைவதற்கான காரணம் என்னவாக இருக்கிறது? ஒன்று சேகரிக்கத் தெரியவில்லை மற்றும் போரிடவும் தெரியவில்லை. ஒருவேளை இந்த இரண்டு சக்திகளும் வந்து விடுகின்றன என்றால் எப்பொழுதும் மற்றும் சுலபமாகவே வெற்றி கிடைத்து விடுகிறது. எனவே இந்த இரண்டு சக்திகளை தன்னுள் நிரப்புவதற்கான முயற்சி செய்ய வேண்டும். எந்தவொரு காரியம் எதிரில் வந்தாலும் காரியம் செய்வதற்கு முன்பு இந்த இரண்டு சக்திகளும் நினைவில் இருக்கிறதா என்று தன்னைத் தானே சோதனை செய்யங்கள். சக்திகள் இருக்கவும் செய்கின்றன, ஆனால் காரியம் செய்யும் நேரத்தில் சக்திகளை உபயோகிப்பதில்லை, எனவே வெற்றி கிடைப்பதில்லை. இந்த மாதிரி செய்திருந்தால் இப்படி நடந்திருக்கும் என்று செய்த பின்பு யோசிக்கிறீர்கள். இதன் காரணம் என்ன? தேவையான நேரத்தில் சக்தியை உபயோகிக்கத் தெரிவதில்லை.

நல்ல நல்ல ஆயுதங்கள் எத்தனை தான் இருந்தாலும், சக்திகள் எத்தனை தான் இருந்தாலும் எந்த நேரம் எந்த ஆயுதம் மற்றும் சக்தியை காரியத்தில் கொண்டு வர வேண்டுமோ அதைக் காரியத்தில் கொண்டு வருவதில்லை, எனவே வெற்றி கிடைப்பதில்லை. இந்தக் காரணத்தினால் எந்தவொரு காரியம் தொடங்குவதற்கு முன்பு தன்னை சோதனை செய்யுங்கள். எப்படி புகைப்படம் பிடிக்கிறீர்கள், புகைப்படம் பிடிப்பதற்கு முன்பு அதற்காக தயாராகிறீர்கள் இல்லையா! புகைப்படம் பிடிக்கப்பட்டது மற்றும் அது எப்படி இருந்தாலும் சரி நிரந்தரமான நினைவுச்சின்னம் ஆனது, அதே போல் இதுவும் எல்லைக்கப்பாற்பட்ட கேமரா ஆகும். அதில் ஒவ்வொரு விநாடியின் புகைப்படம் பிடிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. புகைப்படம் பிடித்த பிறகு தன்னைத் தானே சரி செய்தீர்கள் என்றால் அது வீணானது தான் இல்லையா? இதே போல் முதலில் தன்னை சக்தி சொரூபத்தின் நிலையில் நிலைத்திருக்கச் செய்த பிறகு எந்தவொரு காரியத்தையும் தொடங்க வேண்டும். மேடையில் இருந்து கீழே இறங்கி ஒருவேளை யாராவது நடித்தார் என்றால் அவர் எவ்வளவு தான் நன்றாக நடித்தாலும் பார்ப்பவர்கள் எப்படி பார்ப்பார்கள். இதுவும் அதே போல் தான் ஆகிறது. முதலில் மேடையில் இருக்க வேண்டும் பின்பு ஒவ்வொரு நடிப்பையும் செய்தார் என்றால் அப்பொழுது தான் மிக சரியானதாகவும் மற்றும் பாராட்டுக்குத் தகுதியான நடிப்பாகவும் இருக்க முடியும். நிலையிலிருந்து இறங்கி சாதாரண முறையில் காரியம் செய்யத் தொடங்கி விடுகிறார்கள். பின்பு யோசிக்கிறார்கள் ஆனால் அந்த நிலையோ இருக்கவில்லை இல்லையா. நேரம் கழிந்தது புகைப்படமோ பிடிக்கப்பட்டு விட்டது. எனவே இந்த இரண்டு சக்திகளும் எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் இருக்க வேண்டும். சில நேரம் போரிடுவதற்கான வேகம் வருகிறது, சேகரிப்பது மறந்து விடுகிறது. சில நேரம் சேகரிப்பதற்கு யோசிக்கிறீர்கள் என்றால் முற்றுகை இடுவது மறந்து விடுகிறது. இரண்டுமே சேர்ந்தே இருக்க வேண்டும். அனைத்து சக்திகளை உபயோகப்படுத்தினால் முடிவாக என்ன வரும்? வெற்றி. அவருடைய எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றாக இருக்கும். இதைத் தான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூறுவது. எண்ணம் மிக உயர்வாக இருக்கிறது. திட்டங்களையும் உருவாக்கிக் கொண்டே இருக்கிறார்கள், வாய் மூலம் வர்ணனையும் செய்து கொண்டே இருக்கிறார்கள் ஆனால் செய்யும் நேரத்தில் செய்ய முடியவில்லை என்றால் மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆனாரா? மாஸ்டர்

# 1972 அவ்யக்த முரளி

சர்வ சக்திவானின் முக்கியமான இலட்சணமே அவருடைய எண்ணம், சொல் மற்றும் செயல் மூன்றும் ஒன்றாக இருக்கும். இப்பொழுது செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தோம் ஆனால் செய்ய முடியவில்லை என்ற வார்த்தை அவ்வப்பொழுது வெளியாகிறது. திட்டம் மற்றும் நடைமுறையில் இடைவெளி தென்படுகிறது ஆனால் மாஸ்டர் சர்வ சக்திவான் மற்றும் யார் எப்பொழுதும் வெற்றி அடைபவராக இருப்பாரோ அவருடைய திட்டமாக என்ன இருந்ததோ அது தான் நடைமுறையிலும் இருக்கும். வெற்றி அடைபவராக ஆகவோ அனைவரும் விரும்புகிறார்கள். எப்பொழுது விருப்பம் மற்றும் இலட்சியம் உயர்ந்ததாக இருக்கிறது என்றால் லட்சியத்தின் கூடவே சொல் மற்றும் செயல் அதையும் உயர்ந்த நிலையில் இருந்து திட்டத்தை உயர்ந்ததாக உருவாக்குவார்கள் ஆனால் நடைமுறையில் வரும்பொழுது ஏதாவது பலஹீனம் இருக்கும் காரணத்தினால் திட்டம் எப்படியோ அப்படி வடிவம் கொடுக்க முடிவதில்லை. ஏனென்றால் முற்றுகை இடுவதற்கு மற்றும் அந்த விஷயங்களில் மக்களின் சேகரிப்பு செய்யும் சக்தி குறைவாகி விடுகிறது. எப்படி அந்தக் காலத்து யுத்த மைதானத்தில் எதிரி எதிரில் வருகிறார்கள் என்றால் ஒரு கையில் வாளையும் பிடிக்கிறார்கள், கூடவே இன்னொரு கையில் கேடயமும் இருக்கிறது. அப்படி வாள் மற்றும் கேடயம் இரண்டும் அதன் அதன் காரியத்தை செய்யட்டும். இந்த பயிற்சி தேவையாக இருக்கிறது. இரண்டையும் சேர்ந்தே உபயோகிக்கும் பயிற்சி தேவையாக இருக்கிறது. தன்னை மாஸ்டர் (குழந்தை) என்று நினைக்கிறீர்கள் என்றால் அனைத்து விஷயத்திலும் மாஸ்டர் (அறிந்தவர்) ஆக வேண்டும். எப்படி தந்தையின் பெயராக திரிமூர்த்தி சிவன் என்று கூறுகிறீர்கள் இல்லையா? அதே போல் நீங்கள் அனைவரும் கூட மாஸ்டர் திரிமூர்த்தி சிவன் தான் இல்லையா? உங்களுடையதும் மூன்று காரியங்கள் இருக்கிறது இல்லையா? அதன் ஆதாரத்தில் முழு காரியத்தையும் மற்றும் சேவையும் செய்கிறீர்கள். உங்களுடைய மூன்று ரூபங்கள் எவை? ஒன்று பிராமண ரூபம், அதன் மூலம் ஸ்தாபனையின் காரியம் செய்கிறீர்கள். இன்னும் ஒன்று சக்தி ரூபம் அதன் மூலம் வினாஷத்தின் காரியம் செய்கிறீர்கள் மற்றும் ஜெகத்மாதா மற்றும் ஞான கங்கை மற்றும் தன்னை மகாதானி, வரதானி ரூபத்தில் புரிந்து கொள்வதினால் பாலனை செய்கிறீர்கள். வரதானி ரூபத்தில் ஜகத்பிதாவின் ரூபமும் வந்தே விடுகிறது. அப்படி இந்த மூன்று ரூபங்களும் நினைவில் இருக்கிறது என்றால் உங்களுடைய காரியங்களில் கூட அதே குணம் தென்படும்.

எப்படி தந்தைக்கு தன்னுடைய மூன்று ரூபங்களின் நினைவு இருக்கிறதோ அதே போல் நாள் முழுவதும் காரியம் செய்து கொண்டே நான் மாஸ்டர் திரிமூர்த்தி என்று தன்னுடைய மூன்று ரூபங்களின் நினைவு இருக்கட்டும். மூன்று காரியங்களும் சேர்ந்தே கூடவே தேவையாக இருக்கிறது. ஸ்தாபனையின் காரியம் செய்யும் நேரம் வேறு, வினாஷக் காரியத்தின் நேரம் இன்னும் வர வேண்டும் என்று அப்படியில்லை. புதிய படைப்பை படைத்துக் கொண்டே செல்லுங்கள் மற்றும் பழையதை அழித்துக் கொண்டே செல்லுங்கள். அசுர சம்ஸ்காரம் மற்றும் என்னென்ன பலஹீனங்கள் இருக்கின்றனவோ அவற்றைக் கூடவே அழித்துக் கொண்டும் செல்ல வேண்டும். புதிய சம்ஸ்காரத்தை கொண்டு வருகிறோம், பழைய சம்ஸ்காரத்தை அழித்துக் கொண்டிருக்கிறோம். அனேகரில் படைப்பைப் படைப்பதின் குணம் இருக்கிறது, ஆனால் சக்தி ரூபம் மற்றும் வினாச காரியம் செய்யும் ரூபம் இல்லாத காரணத்தினால் வெற்றி ஏற்படுவதில்லை. எனவே இரண்டும் சேர்ந்தே தேவையாக இருக்கிறது. இந்தப் பயிற்சி எப்பொழுது ஒரு நொடியில் ஆத்ம அபிமானி ஆவதற்கான அப்பியாசம் இருக்குமோ அப்பொழுது இருக்க முடியும். அந்த மாதிரி பயிற்சி உள்ளவர் அனைத்து காரியத்திலும் வெற்றி அடைகிறார். தன்னை மஹாதானி மற்றும் வரதானி, ஜகத்மாதா. ஜகத்பிதா மற்றும் பதீத பாவனி ரூபத்தில் நிலைத்திருக்கச் செய்து ஒருவேளை நீங்கள் எந்தவொரு ஆத்மாவிற்கும் திருஷ்டி கொடுத்தீர்கள் என்றால், திருஷ்டி மூலமாகக் கூட அவர்களுக்கு வரதானத்தின் பிராப்தியை செய்விக்க முடியும். உள்உணர்வு மூலமாகக் கூட பிராப்தி செய்விக்க முடியும். அதாவது பாலனை செய்விக்க முடியும் ஆனால் இந்த ரூபத்தின் நினைவு எப்பொழுதும் இருக்கட்டும் பிராமணன் கதை மற்றும் ஞானம் சொல்லி ஸ்தாபனையையோ மிக விரைவில் செய்து விடுகிறார்கள் ஆனால் அழித்தல் மற்றும் பாலனையின் காரியத்தில் கவனம் தேவையாக இருக்கிறது. பாலனை செய்யும் நேரத்தில் நன்மை செய்யும் பாவனை மற்றும் உள்உணர்வு வைத்து எந்தவொரு ஆத்மாவிற்கும் பாலனை செய்தீர்கள் என்றால் எப்படிப்பட்ட அபகாரி ஆத்மாவாக இருந்தாலும் தன்னுடைய பாலனை மூலமாக அவரை உபகாரி ஆக்க முடியும். எப்படிப்பட்ட தூய்மையில்லாத ஆத்மாவும் பதீத பாவனியின் உள்உணர்வினால் தூய்மை ஆக முடியும். ஒருவேளை அவருடைய தூய்மையில்லாத நிலையைப் பார்த்தீர்கள் என்றால் இதைச் செய்ய முடியாது. எப்படி தாய் ஒருபொழுதும் குழந்தைகளின்

பலஹீனங்களை மற்றும் குறைகளைப் பார்ப்பதில்லையோ அவருக்கு சரி செய்யும் காரியம்தான் இருக்கிறது. அப்படி இந்த பாலனை செய்யும் காரியம் இந்த ரூபத்தில் எப்பொழுதும் நிலைத்திருப்பதினால் சரியாக நடக்க முடியும். எப்படி தாயிடம் சகித்துக் கொள்வது மற்றும் உள்ளடக்குவது என்ற இரண்டு விசேஷ சக்திகள் இருக்கின்றன. அதே போலவே ஒவ்வொரு ஆத்மாவை பாலனை செய்யும் நேரத்திலும் இந்த இரண்டு சக்திகளை உபயோகித்தீர்கள் என்றால் வெற்றி அவசியம் ஏற்படும் ஆனால் தன்னை ஜெகத்மாதா மற்றும் ஜெகத்பிதா ரூபத்தில் நிலைத்திருக்கச் செய்தால் தான் அது முடியும். ஒருவேளை சகோதரன் சகோதரியின் ரூபத்தை பார்த்தீர்கள் என்றால் அதில் வேறு எண்ணம் வர முடியும், ஆனால் தாய் தந்தைக்கு சமமாக புரிந்து கொள்ளுங்கள். தாய் தந்தையர் குழந்தைகளுக்காக எவ்வளவு சகித்துக் கொள்கிறார்கள். உள்ளே அடக்கிக் கொள்கிறார்கள் அப்பொழுது தான் அவர்களை பாலனை செய்து அவர்களை தகுதியானவர்களாக ஆக்க முடியும். அப்படி எப்பொழுதும் ஒவ்வொரு காரியம் செய்து கொண்டு இருக்கும் நேரத்தில் தன்னுடைய இந்த மூன்று ரூபங்களையும் நினைவில் வைக்க வேண்டும். எப்படி நினைவோ அப்படி சொரூபம். மேலும் எப்படி சொரூபமோ அப்படி வெற்றி மூன்று ரூபத்தின் நினைவினால் தானாகவே சக்தி வந்து விடுகிறது. இதுவும் பொசிஷன் (பதவி) தான் இல்லையா. அப்படி பொசிஷனில் நிலைத்திருப்பதினால் சக்தி மற்றும் பலம் வந்து விடுகிறது. தந்தையின் பெயர் நினைவு வருகிறது என்றால் தன்னை மாஸ்டர் என்று அவசியம் நினைத்துக் கொள்ளுங்கள். பெயரையோ அனைவருக்கும் நினைவு செய்விக்கிறீர்கள். எத்தனை தடவை தந்தையின் பெயர் மனதால் மற்றும் வாயினால் உச்சரிப்பீர்களாக இருக்கும். எப்படி தந்தையின் பெயரோ அப்படி நானும் மாஸ்டர் திரிமூர்த்தி சிவன் ஆவேன், இந்த நினைவு இருக்கிறது என்றால் வெற்றி ஏற்படும். அப்படி எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆகுங்கள். இப்பொழுது தோல்வி அடைவதற்கான நேரம் இல்லை. ஒருவேளை பத்து தடவை வெற்றி கிடைத்தது, ஒரு தடவை தோல்வி ஏற்பட்டாலும் அதை தோல்வி என்றே கூறுவோம். அப்படி காரியம் மற்றும் சொரூபம் இரண்டும் சேர்ந்தே நினைவில் இருக்கிறது என்றால், பின்போ அதிசயம் தான் இல்லையென்றால் என்ன ஆகிறது உழைப்பு அதிகமாகிறது, பிராப்தி மிகக் குறைவாக இருக்கிறது. மேலும் பிராப்தி குறைவாக இருக்கும் காரணத்தினால் தான் பலஹீனம் வருகிறது. உற்சாகம் குறைந்து

விடுகிறது. தைரியம், உற்சாகம் குறைந்து விடுகிறது. காரணம் தன்னுடையதேதான், தன் காலிலேயே கோடாலியால் வெட்டுகிறார், எனவே அவரே பொறுப்பாகிறார் என்றால் எப்பொழுதும் கவனம் இருக்க வேண்டும். எனவே இன்றிலிருந்து கடந்ததை கடந்ததாக்கி, நினைவில் தன்னுள் பலத்தை கொண்டு வந்து எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆகுங்கள். பின்பு இந்த வித்தியாசம் இருக்கிறது இல்லையா?. இன்று ஊக்கம், உற்சாகம் அதிகமாக இருக்கிறது, நாளை பின்பு குறைந்து விடுகிறது என்ற வித்தியாசம் அகன்று விடும். எப்பொழுதும் ஊக்கம் உற்சாகம் மற்றும் எப்பொழுதும் தன்னில் பிராப்தியின் அனுபவம் செய்வீர்கள். மாயாவை, இயற்கையை தாசியாக்க (வேலைக்காரன்) வேண்டும். சத்யுகத்தில் இயற்கையை தாசி ஆக்குகிறீர்கள் என்றால் சோர்வு வருவதில்லை. சோர்வின் காரணம் இயற்கை மற்றும் மாயன் தாசன் ஆவது. ஒருவேளை அவரின் தாசன் ஆகவே இல்லை என்றால் சோர்வு வர முடியுமா? எனவே ஒருபொழுதும் மாயாவின் தாசன் மற்றும் தாசி ஆக வேண்டாம். இங்கு அதிகமாக மாயா மற்றும் இயற்கையின் தாசன் ஆனீர்கள் என்றால் அவருக்கு அங்கேயும் (சத்யுகத்திலும்) தாசன், தாசி ஆக வேண்டியதிருக்கும். ஏனென்றால் சம்ஸ்காரமே தாசன், தாசிக்கானதாக ஆகி விட்டது இல்லையா, இங்கு தாசனாகவும் இருந்தார், சோர்வானவராகவும் இருந்தார். பின்பு அங்கும் தாசனாவது என்ன லாடம்?. எனவே சோர்வு வருகிறது என்றால் அவசியம் எங்காவது மாயாவின் தாசனாக ஆகியிருக்கிறேனா என்று சோதனை செய்யுங்கள். தாசன், தாசியாக ஆகாமல் சோர்வு ஏற்பட முடியாது. எனவே முதலில் பகுத்தறியும் பின்பு மாற்றம் செய்வதின் சக்தியும் தேவையாக இருக்கிறது. அப்பொழுது ஒருபொழுதும் தோல்வி அடைபவராக ஆகக்கூடாது. உங்களுடைய பிற்காலத்து பிரஜை மற்றும் பக்தர்கள் அந்த மாதிரி ஆவார்கள். ஒருவேளை உலக இராஜ்யத்தை செய்பவர் கூட தோல்வி அடைந்தார் என்றால் வெற்றி அடைபவராக யார் தான் ஆவார்கள்? நல்லது.

ஒவ்வொரு நாளும் தன்னுள் மாற்றம் கொண்டு வர வேண்டும். யாருடைய சுபாவ சம்ஸ்காரத்தை பார்த்தும், தெரிந்தும் புத்தியின் நினைவு அந்தப் பக்கம் செல்ல வேண்டாம். அந்த ஆத்மாவிற்காக இன்னும் அதிகமாக சுப பாவனை இருக்கட்டும். ஒரு பக்கத்திலிருந்து கேட்டோம் இன்னொரு பக்கமாக வெளியேற்றி விட்டோம். அதற்கு புத்தியில் இடம்

கொடுக்காதீர்கள். அப்பொழுது தான் ஒரு பக்கமாக புத்தி நிலைத்திருக்க முடியும். பலஹீனமான ஆத்மாவின் பலஹீனத்தைப் பார்க்காதீர்கள். விதவிதமான ஆத்மாக்கள் இருக்கிறார்கள் என்ற இந்த நினைவு இருக்கட்டும். ஆத்மீகப் பார்வை இருக்கட்டும். ஆத்மாவின் ரூபத்தில் அவரை நினைவில் கொண்டு வருவதினால் சக்தி கொடுக்க முடியும். ஆத்மா பேசிக் கொண்டிருக்கிறது, ஆத்மாவின் இந்த சம்ஸ்காரம் என்ற இந்தப் பாடத்தை உறுதியாக்க வேண்டும். ஆத்மா வார்த்தை நினைவில் வருவதினாலேயே ஆன்மீகத்தன்மை, சுபபாவனை வந்து விடுகிறது, தூய்மையான பார்வை ஏற்பட்டு விடுகிறது. ஒருவர் தீய வார்த்தைகளினால் திட்டிக் கொண்டிருந்தால் கூட இந்த ஆத்மா கீழ்த்தரமான பங்கை செய்து கொண்டிருக்கிறது என்ற இந்த நினைவு இருக்கட்டும். தனக்கு தானே ஆசிரியராகி அந்த மாதிரி பயிற்சி செய்ய வேண்டும். இந்தப் பாடத்தை உறுதி செய்வதற்காக மற்றவர்களிடமிருந்து உதவி கிடைக்க முடியாது. தன்னுடைய முயற்சியின் உதவி மட்டும் தான் இருக்கிறது. நல்லது.

**வரதானம்: ஐந்து தத்துவங்கள் மற்றும் ஐந்து விகாரங்களை தன்னுடைய சேவாதாரி ஆக்கக்கூடிய மாயாவை வென்ற சுயராஜ்ய அதிகாரி ஆகுக!**

எப்படி சத்யுகத்தில் உலக மாகாராஜா மற்றும் உலக மகாராணியின் இராஜ ஆடையை தாச தாசிகள் பின்னாலிருந்து தூக்கிப் பிடிக்கிறார்கள், அதே போல் சங்கமயுகத்தில் குழந்தைகள் நீங்கள் எப்பொழுது மாயாவை வென்று சுயராஜ்ய அதிகாரி ஆகி பட்டங்கள் என்ற ஆடையினால் அலங்கரிக்கப் பட்டு இருப்பீர்களோ அப்பொழுது இந்த ஐந்து தத்துவங்கள் மற்றும் ஐந்து விகாரங்கள் உங்களுடைய ஆடையை பின்னாலிருந்து தூக்கிப் பிடிப்பார்கள். அதாவது அடிமையாகி நடந்து கொள்வார்கள். இதற்காக உறுதியான எண்ணம் என்ற பெல்ட்டினால் பட்டங்கள் என்ற ஆடையை டைட்டாகப் போடுங்கள், விதவிதமான ஆடை மற்றும் அலங்காரத்தின் செட் மூலமாக அலங்கரிக்கப்பட்டு தந்தையின் கூடவே இருந்தீர்கள் என்றால் இந்த விகாரம் மற்றும் தத்துவம் பரிவர்த்தனை ஆகி சகயோகி சேவாதாரியாக ஆகி விடுவார்கள்.

**சுலோகன்: எந்த குணங்கள் மற்றும் சக்திகளின் வர்ணனை செய்கிறீர்களோ அவற்றின் அனுபவங்களில் மூழ்கிப் போய் விடுங்கள். அனுபவம் தான் அனைத்தையும் விட பெரிய அதிகாரம் ஆகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 15.03.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தியாகம் மற்றும் பாக்கியம்!

தன்னை தியாகி, தபஸ்வி மூர்த்தியாக நினைக்கிறீர்களா? அனைத்தையும் விட பெரிய கடினமான தியாகம் எது? (தேக அபிமானம்) ஞானத்தின் அபிமானம் மற்றும் புத்தியின் அபிமானம் கூட ஏன் வருகிறது? பழைய சம்ஸ்காரங்களின் தியாகத்தைக் கூட ஏன் செய்ய முடிவதில்லை, அதற்கான முக்கிய காரணம் தேக அபிமானம் ஆகும். தேக அபிமானத்தை விடுவது மிகப் பெரிய தியாகம் ஆகும். இதைத் தான் ஒவ்வொரு நொடியிலும் தன்னைத் தானே சோதனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. மற்ற என்னென்ன ஸ்தூல தியாகங்கள் இருக்கின்றனவோ அவற்றை யாராவது ஒரு முறை தியாகம் செய்த பிறகு அதிலிருந்து விலகி விடுகிறார்கள் ஆனால் இந்த தேக அபிமானத்தின் தியாகம் இருக்கிறது இல்லையா அதில் ஒவ்வொரு நொடியும் தேகத்தின் ஆதாரத்தை எடுத்துக் கொண்டே இருக்க வேண்டியதாக இருக்கிறது ஆனால் இதில் இருந்து கொண்டே விலகியவராக ஆக வேண்டும். இந்த காரணத்தினால் ஒவ்வொரு விநாடியும் ஆத்மாவிற்கு உடலோடு ஆழமான சம்மந்தம் இருக்கும் காரணத்தினால் தேகத்தின் அபிமானமும் மிக ஆழமானதாக ஆகி விட்டது. இப்பொழுது இதை அகற்றுவதற்காக கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அனைத்து விதமான தியாகம் செய்திருக்கிறேனா? என்று தன்னைத் தானே கேளுங்கள். ஏனென்றால் எவ்வளவு தியாகம் செய்வீர்களோ அவ்வளவே தற்சமயத்திலும் மற்றும் எதிர்காலத்திலும் கூட பாக்கியத்தையும் பிராப்தி செய்வீர்கள், சங்கமயுகத்தில் தியாகம் மட்டும் செய்ய வேண்டும் மற்றும் எதிர்காலத்தில் பாக்கியத்தை அடைய வேண்டும் என்று அப்படி நினைக்காதீர்கள். அந்த மாதிரி இல்லை. யார் எவ்வளவு தியாகம் செய்கிறாரோ மற்றும் எந்த நேரம் தியாகம் செய்கிறாரோ அதே நேரத்தில் எவ்வளவு தியாகம் செய்திருந்தாரோ அதன் பலனாக அவருக்கு பாக்கியம் அவசியம் பிராப்தி ஆகிறது. சங்கமயுகத்தில் தியாகத்தின் பாக்கியமாக பிரத்யக்ஷ ரூபத்தில் என்ன கிடைக்கிறது என்று தெரிந்திருக்கிறீர்களா?

உடனடி பாக்கியமாக என்ன கிடைக்கிறது? சத்யுகத்திலோ ஜீவன்முக்தி பதவி கிடைக்கும், இப்பொழுது என்ன கிடைக்கிறது? உங்களுக்கு உங்களுடைய தியாகத்தின் பாக்கியம் கிடைக்கிறது. சங்கமயுகத்தில் தியாகத்தின் பாக்கியமாக பிரத்யக்ஷ ரூபத்தில் என்ன கிடைக்கிறது என்று தெரிந்திருக்கிறீர்களா? உடனடி பாக்கியமாக என்ன கிடைக்கிறது? சத்யுகத்திலோ ஜீவன்முக்தி பதவி கிடைக்கும், இப்பொழுது என்ன கிடைக்கிறது? உங்களுக்கு உங்களுடைய தியாகத்தின் பாக்கியம் கிடைக்கிறது, சங்கமயுகத்தில் மிகப் பெரிய பாக்கியமாக சுயம் பாக்கியத்தை உருவாக்குபவர் பாபா தன்னுடையவர் ஆகி விடுகிறார் என்ற இது தான் கிடைக்கிறது. இது அனைத்தையும் விட பெரிய பாக்கியம் ஆனது இல்லையா? சுயம் பகவான் தன்னுடையவர் ஆகி விடுகிறார் என்ற இது சங்கமயுகத்தில் மட்டும் தான் பிராப்தி ஆகிறது. ஒருவேளை தியாகம் இல்லை என்றால் தந்தையும் தன்னுடையவர் இல்லை. தேகத்தின் உணர்வு இருக்கிறது என்றால் தந்தையின் நினைவு வருமா என்ன? எப்பொழுது தேக உணர்வை தியாகம் செய்கிறீர்களோ அப்பொழுது தான் தந்தையின் நெருக்கமான சம்மந்தத்தின் அனுபவம் ஏற்படுகிறது. தேக உணர்வை தியாகம் செய்வதினால் தான் ஆத்ம அபிமானி ஆவதினால் முதல் பிராப்தியாக என்ன இருக்கிறது. நிரந்தரமாக தந்தையின் நினைவிலேயே இருந்து கொண்டு இருக்கிறீர்கள் அதாவது ஒவ்வொரு நொடியின் தியாகத்தினால் தந்தையின் அனைத்து சம்மந்தத்தை, அனைத்து சக்திகளை தன்னுடன் அனுபவம் செய்கிறீர்கள். அப்படியானால் இது அனைத்தையும் விட பெரிய பாக்கியம் இல்லையா? இது எதிர்காலத்தில் கிடைக்காது. எனவே தான் இந்த சகஜ ஞானம் மற்றும் சகஜ இராஜயோகம் எதிர்கால பலன் இல்லை ஆனால் உடனடி பலன் கொடுக்கக்கூடியது. எதிர்காலமோ தற்சமயத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது ஆனால் அனைத்தையும் விட உயர்ந்த பாக்கியம் முழு கல்பத்திற்குள் வேறு எங்கும் பிராப்தி ஆவது இல்லை. இந்த நேரம் தான் தியாகம் மற்றும் தபஸ்யா மூலமாக தந்தையின் துணையை ஒவ்வொரு நொடியும் அனுபவம் செய்கிறீர்கள் அதாவது தந்தையை அனைத்து சம்மந்தங்களினால் தன்னுடையவர் ஆக்கி விடுகிறீர்கள். இந்த மாதிரி அவரை அழைத்தது இல்லை. அழைத்ததோ வேறு ஒன்றாக இருந்தது ஆனால் பிராப்தியாக என்ன கிடைத்து விட்டது. எதை எண்ணத்திலும் கனவிலும் நினைக்க வில்லையோ அந்த பிராப்தி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது இல்லையா!

அப்படி எது எண்ணத்திலும், கனவிலும் இல்லாத விஷயமாக இருந்தது அது கிடைத்து விட்டது என்றால் அதைத் தான் பாக்கியம் என்று கூறுவது. எது கடின உழைப்பு மூலமாக பிராப்தி ஆகிறதோ அதை பாக்கியம் என்று கூறப்படுவதில்லை. தானாக கிடைப்பதினால் அசம்பவம். சம்பவம் ஆகி விடுகிறது. நம்பிக்கையிழந்தவரிலிருந்து நம்பிக்கைக்குரியவர் ஆகி விடுகிறார். எனவே இதை பாக்கியம் என்று கூறப்படுகிறது. இந்த பாக்கியம் கிடைக்கவில்லையா? அழைத்ததோ வேறு ஒன்றாக இருந்தது. என்னை தன்னுடைய ஏதாவது ஒன்றாக ஆக்கி விடுங்கள் என்று தான் அழைத்து வந்தீர்கள். இவ்வளவு உயர்ந்தவராக ஆக விரும்பவில்லை ஆனால் என்ன கிடைத்தது? நீங்களோ ஆகி விட்டீர்கள் ஆனால் தந்தையையும் தன்னுடைய அனைத்துமாக ஆக்கி விட்டீர்கள், அப்படி இது பாக்கியம் இல்லையா? சங்கமயுகத்தின் உயர்ந்த பாக்கியம் இதே தியாகத்தினால் கிடைக்கிறது. ஒருவேளை தேக உணர்வின் தியாகம் செய்யவில்லை அதாவது ஆத்ம அபிமானியாக ஆகவில்லை என்றால் பாக்கியத்தையும் தன்னுடையதாக ஆக்க முடியாது. அதாவது சங்கமயுகத்தினுடைய உயர்ந்த பாக்கியத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டவராக ஆகி விடுவேன் என்ற இதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை உதாரணமாக முழு நாளில் கொஞ்ச நேரத்திற்காக தேக அபிமானத்தின் தியாகம் இருக்கிறது மற்றும் கொஞ்ச நேரம் கீழே இறங்குகிறீர்கள் அதாவது தேக உணர்வின் தியாகம் இல்லை என்றால் அந்த அளவே சங்கமயுகத்தில் உயர்ந்த பாக்கியத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டு விடுகிறார்கள். பாக்கியத்தை உருவாக்கும் தந்தை ஒவ்வொரு நொடியிலும் பாக்கியத்தை உருவாக்கும் விதியை எப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கிறார் என்றால் என்ன செய்ய வேண்டும். அந்த விதி மூலமாக அனைத்து சித்திகளையும் (வெற்றிகளையும்) பிராப்தி செய்ய வேண்டும். விதியை கடைபிடிக்காத காரணத்தினால் ரிசல்ட்டாக என்ன ஆனது? மனநிலையின் வளர்ச்சியும் அடைவதில்லை மற்றும் அனைத்து பிராப்திகளின் சித்தியும் ஏற்படுவதில்லை. அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? உருவாக்குபவர் மூலமாக கிடைத்திருக்கும் விதிகளை எப்பொழுதும் உபயோகிக்க வேண்டும் அதன் மூலம் வளர்ச்சியும் இருக்கும், வெற்றியும் கிடைக்கும். எனவே எண்ணத்தின் ரூபத்தில் வீணான எண்ணங்களை எவ்வளவு தியாகம் செய்திருக்கிறீர்கள் என்று சோதனை செய்யுங்கள். உள்உணர்வு எப்பொழுதும் சகோதரன்-சகோதரனுடையதாக இருக்க

வேண்டும் அந்த உள் உணர்வை எவ்வளவு கடைபிடிக்கிறீர்கள். மேலும் உடலில் இருந்து கொண்டே உடலில் இருப்பவரின் உணர்வை எவ்வளவு தியாகம் செய்திருக்கிறேன்? நான் மைசூரை சேர்ந்தவன் என்று நினைக்கிறீர்களா? இன்றோ முக்கியமாக இவர்களோடு சந்திப்பதற்காக வந்திருக்கிறோம் இல்லையா ஏனென்றால் இவ்வளவு தூரத்திலிருந்து, கஷ்டப்பட்டு அன்போடு வந்திருக்கிறார்கள் என்றால் தந்தைக்கும் தூர தேசத்திலிருந்து வரவே வேண்டியதாக இருக்கிறது. அப்படியானால் குஷி ஏற்படுகிறது இல்லையா? இன்று முக்கியமாக தூர தேசத்திலிருந்து வரக்கூடியவர்களுக்காக தூர தேசத்திலிருந்து தந்தையும் வந்திருக்கிறார். அப்படி யார் மேலேயாவது அன்பு இருக்கிறது என்றால் அன்பிற்குரியவரின் அன்பில் தியாகம் செய்வது ஒரு பெரிய விஷயமே இல்லை. விகாரங்களின் அன்பில் வந்து தன்னுடைய உணர்வுகளையும் தியாகம் செய்தீர்கள் என்றால் தன்னுடைய உடலையும் தியாகம் செய்தீர்கள். குழந்தைகளின் அன்பில் தாய் உடலையும் தியாகம் செய்கிறார் இல்லையா! தேகதாரியின் சம்மந்தத்தின் அன்பில் தன்னுடைய கிரீடம், ஆசனம் மற்றும் தன்னுடைய உண்மையான சொரூபம் அனைத்தையும் விட்டு விட்டீர்கள் இல்லையா! அப்படியானால் எப்பொழுது நீங்கள் தந்தையின் அன்பிற்குரியவராக ஆகியிருக்கிறீர்கள் என்றால் இந்த தேக அபிமானத்தை தியாகம் செய்ய முடியாதா என்ன? கடினமாக இருக்கிறதா? அற்ப கால சம்மந்தத்தில் இவ்வளவு சக்தி இருந்தது. உங்களை மேலே இருந்து கீழே கொண்டு வந்தது என்று இதை யோசிக்க வேண்டும். மேலிருந்து கீழே அதனால் தான் வந்தீர்கள் இல்லையா. மேலும் இப்பொழுது தந்தை கூறும்பொழுது மற்றும் தந்தையோடு அனைத்து உறவுகளையும் இணைத்திருக்கிறீர்கள் என்றால் தந்தையின் அன்பில் இந்த தலைகீழான தேக அபிமானத்தை தியாகம் செய்வது என்ன பெரிய விஷயமா? சிறிய விஷயம் தான் இல்லையா. இருந்தும் ஏன் செய்ய முடியாமல் இருக்கிறீர்கள்? இதையோ ஒரு நொடியில் செய்து விட வேண்டும். குழந்தை ஒருவேளை ஒரு மாதம் நோயுற்று இருக்கிறார். அவருடைய தாய் என்ற அற்பகால சம்மந்தம் இருக்கிறது. உடலின் சம்மந்தமாக இருந்தாலும் தாய் ஒரு மாதத்திற்காக அனைத்தையும் தியாகம் செய்து விடுகிறார். உடலின் நினைவு சுகத்தை தியாகம் செய்வதில் காலம் தாழ்த்துவதே இல்லை. கடினம் என்று கூட நினைப்பதில்லை. அப்படியானால் இங்கு என்ன செய்ய வேண்டும்? இங்கோ நிரந்தரமான சம்மந்தம் மற்றும் அனைத்து சம்மந்தமும்

இருக்கிறது, அனைத்து பிராப்திக்கான சம்மந்தம் என்றால் இங்கு தியாகம் வதில் ஒரு நொடி கூட காலம் தாழ்த்தக் கூடாது ஆனால் எத்தனை வருடங்கள் எடுத்துக் கொண்டீர்கள்? தேக உணர்வை தியாகம் செய்வதில் எத்தனை வருடங்கள் எடுத்தீர்கள்? எத்தனை வருடங்கள் ஆகி விட்டது (2010ல் 74-வருடங்கள்) ஒரு நொடி தான் ஏற்பட்டிருக்க வேண்டும் ஆனால் இத்தனை வருடங்கள் எடுத்துக் கொண்டீர்கள் (அரை கல்பத்தின் அப்பியாசம் ஊறிப்போய் இருக்கிறது. மேலும் அந்த அரைக் கல்பம் தேக உணர்விலிருந்து மற்றும் விகாரங்களிலிருந்து விலகியிருந்தீர்கள். அந்த அரை கல்பத்தின் அப்பியாசம் ஒரு நொடியில் மறந்து விட்டதா? இதில் நேரம் எடுத்ததா என்ன? (திரேதா யுகத்தில் கூட இரண்டு கலை குறைந்து விடுகிறது) இருந்தாலும் விகாரங்களிலிருந்து விலகியவராகவோ இருக்கிறீர்கள் இல்லையா? சத்யுகம், திரேதாயுகத்தில் நிர்விகாரிகளாகவோ இருந்தீர்கள் இல்லையா? இரண்டு கலை குறைந்த பிறகும் கூட திரேதாயுகத்தில் விகாரங்கள் அற்றவர் என்று தான் கூறுவோம் இல்லையா? விகாரங்களின் கவர்ச்சியிலிருந்து விலகியிருந்தீர்கள் இல்லையா? இதுவும் அரை கல்பத்தின் சம்ஸ்காரம் ஆகி விட்டது என்றால் அது ஏன் விரைவில் நினைவில் வருவதில்லை? ஆத்மாவின் உண்மையான சொரூபம் கூட என்ன? ஆத்மா உங்களுடைய உண்மையான சம்ஸ்காரம் மற்றும் குணம் எவை? எது தந்தையிடம் இருக்கிறதோ அதுவே தான் இல்லையா? தந்தையின் குணமாகிய ஞானக்கடல், சுகத்தின் கடல், அமைதியின் கடல் என்று அவர் கடலாக இருக்கிறார் ஆனால் நீங்கள் சொரூபமாகவோ இருக்கிறீர்கள். அப்படி ஆத்மாவின் உண்மையான குணமாக என்ன இருக்கிறதோ அந்த அமைதி சொரூபமானவராகவோ இருக்கிறீர்கள் இல்லையா? தீய சேர்க்கையின் பாதிப்பினால் மாற்றத்தில் வந்து விட்டீர்கள் ஆனால் உண்மையில் ஆத்மாவின் சொரூபத்தில் என்ன குணம் இருக்கிறதோ அதுவோ தந்தைக்கு சமமானது இல்லையா? அது கூட ஏன் விரைவில் நினைவில் வரக்கூடாது. அந்த மாதிரி தன்னோடு பேசுங்கள். புரிந்ததா? அந்த மாதிரி தன்னோடு பேசிப் பேசி அதாவது ஆன்மீக உரையாடல் செய்து செய்து ஆன்மீகத்தில் நிலைத்திருந்து விடுவீர்கள். துவாபரயுகத்தின் பழைய சம்ஸ்காரங்கள் இவை, எனவே இந்த மாதிரி நடந்து விட்டது என்று அப்படி நினைக்காதீர்கள். இதற்குப் பதிலாக ஆத்மா என்னுடைய ஆதி சம்ஸ்காரம் மற்றும் அனாதி சம்ஸ்காரம் எவை என்று அதை யோசியுங்கள். படைப்பின் தொடக்கத்தில் ஆத்மாக்கள் எப்பொழுது

வந்தனவோ அப்பொழுது அவற்றின் சம்ஸ்காரம் என்னவாக இருந்தது? தெய்வீக சம்ஸ்காரம் இருந்தது இல்லையா? அப்படி தொடக்கத்தில் ஆத்மாவின் சம்ஸ்காரம் மற்றும் குணம் எவையாக இருந்தன என்று இதை யோசியுங்கள். மத்திய காலத்தினுடையதை யோசிக்காதீர்கள். அனாதி மற்றும் ஆதி சம்ஸ்காரங்களை யோசித்தீர்கள் என்றால் என்னவாகும். இடைக்காலத்து சம்ஸ்காரம் இடையிடையே வெளிப்படுகிறது இல்லையா? அவை தணிந்து விடும். சொல்கிறார்கள் இல்லையா? இவருடைய நடத்தை மிகவும் மென்மையானது என்று அப்படி இடைக்காலத்து சம்ஸ்காரம் அமைதியாகி விடும் மற்றும் அனாதி மற்றும் ஆதி சம்ஸ்காரமாக என்ன இருக்கிறதோ அது பிரத்யக்ஷ ரூபத்தில் தென்படும். புரிந்ததா எப்பொழுதும் அனாதி மற்றும் ஆதியை மட்டும் யோசியுங்கள். எப்படி எண்ணத்தை உருவாக்குவீர்களோ அப்படியே நினைவு இருக்கும். மேலும் எப்படி நினைவு இருக்குமோ அப்படி ஒவ்வொரு காரியத்திலும் சக்தி வரும். எனவே நினைவை எப்பொழுதும் உயர்ந்ததாக வையுங்கள். அப்படியானால் இப்பொழுது என்ன செய்வீர்கள். ஒவ்வொரு விநாடியின் தியாகத்தினால் ஒவ்வொரு விநாடியின் பிராப்தியை செய்து கொண்டே செல்லுங்கள். ஏனென்றால் இந்த சங்கமயுகம் தான் பாக்கியத்தை பிராப்தி செய்வதற்கானது. இப்பொழுது என்ன பாக்கியத்தை உருவாக்குகிறீர்களோ அது உயர்ந்ததாக இருந்தாலும் அல்லது தாழ்ந்ததாக இருந்தாலும் அதை முழு கல்பத்திலும் அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது ஆனால் இந்த சங்கமயுகத்தில் மட்டும் தான் பாக்கியத்தை உருவாக்க முடியும். எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு உருவாக்கக் முடியும். ஏனென்றால் பாக்கியத்தை உருவாக்க கூடிய தந்தை உடன் இருக்கிறார். பின்பு இந்த தந்தை உடன் இருக்க மாட்டார். மேலும் பிராப்தியும் இருக்காது. பிராப்தி செய்விப்பவரும் இப்பொழுது இருக்கிறார் மேலும் பிராப்தியும் இப்பொழுது இருக்க வேண்டும். இப்பொழுது இல்லையேல் எப்பொழுதும் இல்லை" இந்த சுலோகனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சுலோகன் எழுதப்பட்டோ இருக்கிறது இல்லையா. இந்த சுலோகன் எனக்காகத் தான் இருக்கிறது என்று அப்படி நினைக்கிறீர்களா? இப்பொழுது இல்லையேல் எப்பொழுதும் இல்லை என்ற நினைவு ஒருவேளை எப்பொழுதும் இருக்கிறது என்றால் பின்பு என்னவாகும். என்ன செய்ய வேண்டுமோ இப்பொழுது செய்து விட வேண்டும் என்று எப்பொழுது யோசிப்பார். எனவே எப்பொழுதும் இந்த சுலோகனை

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தன்னுடைய நிலையை எப்பொழுதும் தியாகம் மற்றும் நிரந்தர பாக்கியசாலியாக ஆக்குவதற்காக சோதனையோ செய்ய வேண்டும் ஆனால் சோதனையில் கூட முக்கியமான சோதனையாக என்ன இருக்கிறது அந்த சோதனை செய்வதினால் தானாகவே மாற்றம் வந்து விடுகிறது. என்ன சோதனை செய்ய வேண்டும். அதற்காக ஒரு சுலோகன் இருக்கிறது அது எந்த சுலோகன். அதை அனேக தடவை கேட்டிருக்கிறீர்கள். குறைந்த செலவில் அதிக நன்மை, இப்பொழுது குறைந்த செலவில் அதிக நன்மை அடைபவராக அவர்களோ ஸ்தூல பணத்தில் குறைந்த செலவு செய்து அதிக நன்மை அடைவதற்கான முயற்சி செய்கிறார்கள் ஆனால் உங்களை பொறுத்தவரை சங்கமயுகத்தில் எத்தனை விதமான பொக்கிஷங்கள் இருக்கின்றன, அது தெரியுமா உங்களுக்கு? நேரம், எண்ணம், மூச்சோ பொக்கிஷங்களாக இருக்கவே இருக்கின்றன ஆனால் அதனுடன் அழியாத ஞான ரத்தினங்களின் பொக்கிஷமும் இருக்கிறது மேலும் ஐந்தாவதாக ஸ்தூல பொக்கிஷத்தினுடனும் இதற்கு சம்மந்தம் இருக்கிறது. எண்ணத்தின் பொக்கிஷத்திலும் கூட குறைந்த செலவு செய்து நன்மை அடைபவராக ஆகியிருக்கிறீர்களா என்று சோதனை செய்யுங்கள். அதிகம் செலவு செய்யாதீர்கள். தன்னுடைய எண்ணத்தின் பொக்கிஷத்தை வீணாக இழக்கவில்லை என்றால் சக்திசாலியான மற்றும் உயர்ந்த எண்ணம் இருக்கும். உயர்ந்த எண்ணத்தின் மூலம் பிராப்தியும் உயர்ந்ததாக இருக்கும் இல்லையா? அதே போல் சங்கமயுகத்தின் நேரத்தின் பொக்கிஷம் இருக்கிறது. இந்த சங்கமயுக நேரத்தை ஒருவேளை வீணாகச் செலவழிக்கவில்லை என்றால் என்னவாகும்? ஒவ்வொரு நொடியிலும் அனேக ஜென்மங்களின் வருமானத்திற்கான வழியை ஏற்படுத்த முடியும். எனவே இந்த நேரத்தை வீணாக இழக்கக்கூடாது. அதே போல் மூச்சு அதாவது ஒவ்வொரு மூச்சிலும் தந்தையின் நினைவு இருக்கட்டும், ஒருவேளை ஒரு மூச்சில் கூட தந்தையின் நினைவு இல்லை என்றால் அது வீணாகச் சென்றது என்று புரிந்து கொள்ளுங்கள். அப்படி மூச்சையும் வீணாக இழக்கக்கூடாது. அதே போல் ஞானத்தின் பொக்கிஷத்திலும் ஒருவேளை பொக்கிஷத்தை பாதுகாக்கத் தெரியவில்லை என்றால், கிடைத்தது முடித்து விட்டோம் என்றால் அது வீணாக சென்றது. சிந்திக்கவில்லை இல்லையா. சிந்தித்த பிறகு அந்த பொக்கிஷத்திலிருந்து என்ன குஷி பிராப்தி ஆகிறதோ அந்த குஷியில் நிலைத்திருப்பதற்கான பயிற்சி

செய்யவில்லை என்றால் வீணாகச் சென்று விட்டது இல்லையா? எப்படி உணவு அருந்தினீர்கள், ஜீரணம் செய்வதற்கான சக்தி இல்லை என்றால் வீணாக சென்றது இல்லையா? இதே விதமாக இந்த ஞான பொக்கிஷத்தை உங்களுக்காக மற்றும் மற்ற ஆத்மாக்களுக்காக தானம் செய்வதற்காக ஈடுபடுத்தவில்லை என்றால் வீணாகச் சென்றது இல்லையா? அதே போல் ஸ்தூல செல்வத்தையும் ஒருவேளை ஈஸ்வரிய காரியத்தில், ஒவ்வொரு ஆத்மாவின் நன்மைக்கான காரியத்தில் மற்றும் தன்னுடைய முன்னேற்றத்திற்கான காரியத்தில் ஈடுபடுத்தாமல் வேறு ஏதோ ஸ்தூல காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் வீணாகச் சென்றது இல்லையா?. ஏனென்றால் ஒருவேளை ஈஸ்வரிய காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் அந்த ஸ்தூல செல்வம் ஒன்றுக்கு லட்சக்கணக்கான மடங்காகி பிராப்தி ஆகிறது. மேலும் ஒருவேளை ஒன்றை வீணாக இழந்தீர்கள் என்றால் வீணாக ஒன்று செல்லவில்லை ஆனால் லட்சம் சென்றது. இதே போல் சங்கமயுகத்தில் என்னென்ன பொக்கிஷங்கள் இருக்கின்றனவோ அந்த அனைத்து பொக்கிஷங்களில் ஏதாவது வீணாகச் சென்று கொண்டிருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். அப்படி குறைந்த செலவு செய்து அதிக நன்மை அடைபவராக ஆகியிருக்கிறீர்களா அல்லது இதுவரை அலட்சியத்தன்மை இருக்கும் காரணத்தினால் வீணாக இழந்து விடுகிறீர்களா? யார் அலட்சியமாக இருக்கிறாரோ அவர் வீணாக இழக்கிறார் மேலும் யார் புத்திசாலியாக இருக்கிறார், ஞானம் நிறைந்தவராக இருக்கிறார் மற்றும் விவேகமானவராக இருக்கிறார் அவர் ஒரு சிறிய பொருளைக் கூட வீணாக இழப்பதில்லை அந்த மாதிரியானவரைத் தான் குறைந்த செலவு செய்து அதிக நன்மை பெறுபவர் என்று கூறப்படுவது. அந்த மாதிரி நீங்கள் இருக்கிறீர்களா? எப்படி சாகார பாபா குறைந்த செலவு செய்து அதிக நன்மை அடைபவராக செய்து காண்பித்தார். அப்படியானால் தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டாமா என்ன? எந்தவொரு ஸ்தூல செல்வம், ஒருவேளை ஸ்தூல செல்வம் இல்லை என்றால் யார் யக்ஞ நிவாசியாக (வசிப்பவராக) இருக்கிறாரோ அவரைப் பொறுத்தளவில் இந்த ஸ்தூல யக்ஞத்தின் ஒவ்வொரு பொருளும் ஸ்தூல செல்வத்திற்கு சமமானது. ஒருவேளை யக்ஞத்தின் ஏதாவது ஒரு பொருளை வீணாக இழக்கிறார் என்றால் கூட குறைந்த செலவு செய்து அதிக நன்மை அடைபவர் என்று சொல்ல முடியாது. எப்படி குடும்பத்தில் இருப்பவர்கள் ஸ்தூல செல்வத்தினால் தன்னுடைய பதவியை உயர்ந்ததாக ஆக்க

முடியும், அதே போல் யக்ஞ நிவாசி (வசிப்பவர்) கூட ஒருவேளை யக்ஞத்தின் ஸ்தூல பொருட்களை குறைந்த செலவு செய்து அதிக நன்மை அடைபவராகி தனக்காக மற்றும் மற்றவர்களுக்காக உபயோகிக்கிறார் என்றால் இதற்கும் இந்த கணக்குபடி எதிர்காலத்தில் மிக உயர்ந்த பதவி அடைகிறார். ஸ்தூல செல்வமோ குடும்பத்தில் இருப்பவர்களுக்கான சாதனம் என்று அப்படியில்லை ஆனால் யக்ஞ நிவாசிகளுக்கு யக்ஞத்தின் சேவையும் யக்ஞத்தின் பொருளின் சிக்கனமாக செலவழிக்கும் செல்வம் ஸ்தூல செல்வத்தையும் விட அதிக வருமானத்திற்கான சாதனம் ஆகும். எனவே எப்பொழுது யக்ஞத்தின் ஒரு பொருளைக் கூட யதார்த்த ரூபத்தில் ஈடுபடுத்துகிறீர்கள் மற்றும் பாதுகாக்கிறீர்கள். வீணாக ஆவதிலிருந்து மிச்சப்படுத்துகிறீர்கள் என்றால் எதிர்கால பிராப்திக்கான சக்தி வருகிறது. வீணாவதிலிருந்து மிச்சப்படுத்தினார் தன்னுடைய எதிர்காலத்திற்கான பிராப்தி ஏற்பட்டது இல்லையா. எனவே ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதனை செய்ய வேண்டும். தன்னை குறைந்த செலவு செய்து அதிக நன்மை அடைபவராக எவ்வளவு ஆக்கியிருக்கிறோமா? வீணானதிலிருந்து பாதுகாப்பு செய்யுங்கள், சக்திசாலி ஆகுங்கள். எங்கு வீணானது இருக்கிறதோ அங்கு சக்திசாலியான நிலை கொஞ்சம் கூட இல்லை மேலும் எங்கு சக்திசாலியான நிலை இருக்கிறதோ அங்கு வீணாகச் செல்லும் என்பது இருக்க முடியாது. ஒருவேளை பொக்கிஷம் வீணாகச் செல்கிறது என்றால் சக்தி வர முடியாது. எப்படி ஏதாவது கசிந்து கொண்டிருக்கிறது என்றால் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் கசிவின் காரணமாக சக்தி நிரம்ப முடியாது. அப்படி வீணானதும் கசிவு இருக்கும் காரணத்தினால் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் எவ்வளவு தான் கடின உழைப்பு செய்தாலும் சக்திசாலி ஆக முடியாது எனவே கசிவை சோதனை செய்யுங்கள். கசிவை சோதனை செய்வதற்காக மிகுந்த திறமைசாலியாக இருக்க வேண்டும். அனேக தடவை கசிவை கண்டுபிடிக்க முடிவதில்லை. மிகுந்த திறமைசாலியாக இருப்பவர் அதைப் பற்றிய ஞானம் நிறைந்தவர் கசிவை கண்டுபிடிக்க முடியும். ஞானம் நிறைந்தவராக இல்லை என்றால் கசிவைத் தேடிக் கொண்டே இருப்பார்கள். எனவே இப்பொழுது ஞானம் நிறைந்தவராகி சோதனை செய்தீர்கள் என்றால் வீணானதிலிருந்து சக்திசாலியானவர் ஆகி விடுவீர்கள். புரிந்ததா?

**வரதானம்: சுயநிலை மூலமாக சூழ்நிலைகள் மேல் வெற்றியடையக்கூடிய சங்கம யுகத்து வெற்றி ரத்தினம் ஆகுக!**

சூழ்நிலைகளின் மேல் வெற்றி அடைவதற்கான சாதனம் சுயநிலை. இந்த உடல் கூட மற்றவர்களுடையது, தன்னுடையது அல்ல. சுயநிலை மற்றும் சுயதர்மம் எப்பொழுதும் சுகத்தின் அனுபவம் செய்விக்கிறது. மேலும் இயற்கையின் தர்மம் அதாவது வேறு தர்மம் அல்லது உடலின் நினைவு ஏதாவது வேறு விதமான துக்கத்தின் அனுபவம் செய்விக்கிறது. அப்படி யார் எப்பொழுதும் சுயநிலையில் இருக்கிறார் அவர் எப்பொழுதும் சுகத்தின் அனுபவம் செய்கிறார் அவரிடம் துக்கத்தின் அலை வர முடியாது. அவர் சங்கமயுகத்து வெற்றி இரத்தினம் ஆகி விடுகிறார்.

**சுலோகன்: மாற்றம் செய்யும் சக்தி மூலமாக வீணான எண்ணங்களின் ஓட்டத்தின் சக்தியை முடிவு கட்டுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 02.04.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகிமைக்குரியவராக எப்படி ஆவது?

எப்பொழுதும் உபராம் (விலகிய) நிலையில் இருப்பதற்காக விசேஷமாக எந்த இரண்டு விஷயங்கள் அவசியமாக இருக்கிறது? ஏனென்றால் தற்சமயம் உபராம் நிலையில் இருப்பதற்காக ஒவ்வொருவரும் வரிசைக்கிரமமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த இரண்டு அவசியமான விஷயங்கள் யாவை அதன் மூலம் சுலபமாகவே உபராம் நிலையில் நிலைத்திருக்க முடியும்? நினைவோ இருக்கிறது ஆனால் அதில் கூட இரண்டு விஷயங்கள் யாவை, அதைக் கூறுங்கள். இரண்டு விஷயங்களை இரண்டு வார்த்தைகளில் கூறுங்கள். இப்பொழுதோ முழு ஞானத்தின் விஸ்தாரத்தை சார ரூபத்தில் கொண்டு வர வேண்டும் இல்லையா? சக்திகள் விஸ்தாரத்தை சாரத்தில் சுலபமாகக் கொண்டு வர முடியுமா? தன்னுடைய அனுபவத்தினால் கூறுங்கள். உபராம் நிலை மற்றும் சாட்சியாக இருக்கும் நிலை இரண்டுமே ஒன்று தான். அதற்காக இந்த இரண்டு விஷயங்கள் கவனத்தில் இருக்கட்டும் ஒன்று நான் ஆத்மா மகான் ஆத்மா ஆவேன், இரண்டாவது நான் ஆத்மா இந்த பழைய உலகத்தில் மற்றும் பழைய உடலில் மெஹ்மான் (விருந்தினர்) ஆக இருக்கிறேன். அப்படி மகான் மற்றும் மெஹ்மான் இந்த இரண்டின் நினைவில் இருப்பதினால் இயல்பாக மற்றும் சுலபமாகவே எந்த பலஹீனங்கள் மற்றும் பற்றுதலின் காரணமாக உபராம் நிலையில் இல்லாமல் கவர்ச்சியில் வந்து விடுகிறீர்கள் அந்தக் கவர்ச்சி முடிவடைந்து விட்டால் உபராம் ஆகி விடுவீர்கள். சம்ஸ்காரங்களின் வசமாகி என்னென்ன சாதாரண காரியம் மற்றும் சாதாரண எண்ணங்கள் நடக்கிறது மற்றும் ஓடுகிறது. அவை அனைத்தும் தன்னை மகான் ஆத்மா என்று புரிந்து கொள்வதினால் மாற்றத்தில் வந்து விடும். மகான் என்ற நினைவு இருப்பதின் காரணமாக சம்ஸ்காரம் மற்றும் எண்ணம், வார்த்தைகள் மற்றும் காரியம் அனைத்தும் மாறி விடுகின்றன. எனவே எப்பொழுதும் மகான் மற்றும் மெஹ்மான் என்று புரிந்து நடந்து கொள்வதினால் தற்சமயத்தில் மற்றும் எதிர்காலத்தில் மேலும் பின்பு

பக்தி மார்க்கத்தில் கூட மகிமைக்குரியவர் ஆகி விடுவீர்கள். ஒருவேளை மெஹ்மான் மற்றும் மகான் என்று புரிந்து கொள்ளவில்லை என்றால் மஹிமைக்குரியவராகவும் ஆக முடியாது. மகிமை பக்தியில் மட்டும் இருப்பதில்லை ஆனால் முழுக் கல்பத்தில் ஏதாவது ரூபத்தில் மகிமைக்குத் தகுதியானவராக ஆகுகிறீர்கள். சத்யுகத்தில் மகான் என்றால் உலகின் மஹாராஜன் மற்றும் மஹாராணி ஆகிறார்கள். அவர்கள் பிரஜை மூலமாக மகிமைக்குரியவர்களாக ஆகிறார்கள். பக்தி மார்க்கத்தில் தேவி மற்றும் தேவதா ரூபத்தில் மகிமைக்குரியவர்களாக ஆகிறார்கள் மேலும் சங்கமயுகத்தில் யார் மகான் காரியம் செய்து காண்பிக்கிறார் என்றால் பிராமண பரிவாரம் மூலமாகவும் மற்றும் அன்னிய ஆத்மாக்கள் மூலமாகவும் மகிமைக்குரியவராகவும் ஆகிறார். அப்படி இந்த நேரம் மெஹ்மான் மற்றும் மகான் ஆத்மா என்று புரிந்து கொள்வதினால் மட்டுமே முழுக் கல்பத்திற்காக தன்னை மகிமைக்குரியவராக ஆக்க முடியும். ஒவ்வொரு காரியம் மற்றும் எண்ணம் மகானாக இருக்கிறதா மற்றும் மெஹ்மான் ஆகி நடந்து கொண்டிருக்கிறேனா மற்றும் காரியம் செய்து கொண்டிருக்கிறேனா? என்று சோதனை செய்யுங்கள். பிறகு அட்டாச்மென்ட் (பற்றுதல்) விலகி விடும். மெஹ்மானாக இந்த உலகத்தில் மட்டும் இல்லை ஆனால் இந்த உடல் என்ற வீட்டில் கூட மெஹ்மானாக இருக்கிறீர்கள். எப்பொழுது தன்னை மெஹ்மான் என்று புரிந்து கொள்கிறீர்களோ அப்பொழுது உடல் உணர்வின் கவர்ச்சி என்ன இருக்கிறது மற்றும் நினைவு ரூபத்தில் என்ன சம்ஸ்காரம் மிச்சம் இருக்கின்றனவோ அவை மிகவும் சுலபமாகவே அகல முடியும். உங்களுடைய வீட்டை ஏதோ காரணத்திற்காக விற்று விடுகிறீர்கள், விற்று விட்டீர்கள் என்றால் தன்னுடையது என்பது அகன்று விடுகிறது. பிறகு அதே இடத்தில் வசித்தாலும் கூட விருந்தினர் என்று புரிந்து இருப்பீர்கள். அப்படியானால் தன்னுடைய என்று நினைத்து வசிப்பதில் மற்றும் விருந்தினர் என்று நினைத்து வசிப்பதில் எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. அப்படி இந்த உடல் எதை என்னுடைய உடல் என்று நினைத்தீர்கள் இதை இப்பொழுது இது என்னுடையது இல்லை என்று அப்படி புரிந்து கொள்ளுங்கள். இப்பொழுது என்னுடையது என்று கூறுவீர்களா? இப்பொழுது இந்த உடல் உங்களுடைய தாக இருக்கவில்லை, உடலிலிருந்து கொண்டே இறந்து விட்டவர் ஆகி விட்டீர்கள் என்றால் இந்த உடல் உங்களுடையதாக இருக்கவில்லை. உடலை அர்ப்பணம் செய்து விட்டீர்களா அல்லது

என்னுடையது என்று நினைக்கிறீர்களா? இப்பொழுது இந்த பழைய உடலின் ஆயுளோ முடிவடைந்து விட்டது. இதுவோ டிராமாபடி ஈஸ்வரிய காரியத்திற்காக உடல் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே நீங்கள் இப்பொழுது இது என்னுடைய உடல் என்று சொல்ல முடியாது. இந்த உடலில் கூட என்னுடையது என்பது முடிவடைந்து விட்டது. இப்பொழுது தந்தை ஆத்மாவிற்கு காரியம் செய்வதற்காக இதைத் தற்காலிகமாக கடன் ரூபத்தில் கொடுத்திருக்கிறார். எப்படி தந்தை இது தன்னுடைய உடல் இல்லை என்று நினைக்கிறார், கடனாக எடுத்து காரியம் செய்வதற்காக தன்னுடைய பங்கை செய்து கொண்டிருக்கிறார் என்றால் நீங்களும் தந்தைக்குச் சமமானவர்கள் தான் இல்லையா? என்னுடைய உடல் என்று நினைப்பீர்கள் என்றால் அனைத்து விஷயங்களும் வந்து விடும். என்னுடைய என்ற வார்த்தையின் கூடவே அனேக விஷயங்கள் இருக்கின்றன. என்னுடையது என்பதே முடிவடைந்து விட்டது என்றால் அனேக அதனுடன் சேர்ந்து இருப்பவை அனைத்தும் முடிவடைந்து விட்டன. உபராம் ஆகி விடுவீர்கள். ஈஸ்வரிய காரியத்திற்காக இந்த உடலை கடனாக எடுத்திருக்கிறீர்கள். இந்த உடல் வேறு எந்த காரியத்திற்காகவும் இல்லை. அப்படி தன்னை விருந்தினர் என்று புரிந்து நடந்து கொள்வதினால் ஒவ்வொரு காரியமும் இயல்பாகவே மகான் ஆகி விடும். எப்பொழுது உடல் கூட தன்னுடையது இல்லை என்றால் உடலின் சம்மந்தத்தில் என்னென்ன நபர்கள் மற்றும் சாதனங்கள் இருக்கின்றன அவைகளும் தன்னுடையது என்று இருக்கவில்லை, எனவே எப்பொழுதும் அப்படி புரிந்து நடந்து கொள்ளுங்கள். அந்த மாதிரி புரிந்து நடந்து கொள்பவர்கள் எப்பொழுதும் போதையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இயல்பாகவே தன்னுடைய வீட்டின் நினைவு இருக்கிறது. வீடு மட்டும் இல்லை ஆனால் தந்தைக்காக நீங்கள் கூறும் ஆறு விஷயங்கள் அவை அனைத்தும் இயல்பாகவே நினைவில் இருக்கிறது. எப்படி தந்தையின் அறிமுகம் கொடுப்பதற்காக சார ரூபத்தில் கூறுகிறீர்கள் அதில் முழு ஞானம் வந்து விடுகிறது அப்படி சாரமாக ஆறு விஷயங்களில் கூறுகிறீர்கள். தன்னை ஒருவேளை விருந்தினர் என்று புரிந்து நடந்து கொண்டீர்கள் என்றால் தன்னுடைய ஆறு விஷயங்களும் எப்பொழுதும் நினைவில் இருக்கும். பெயர் - சர்வோத்தம பிராமணன், ரூபம் - சாலிகிராமம், இதே போல் நேரத்தின் நினைவு, வீட்டின் நினைவு காரியத்தின் நினைவு, ஆஸ்தியின் நினைவு இயல்பாகவே இருக்கிறது. முழு ஞானத்தை விஸ்தாரமாக இவ்வளவு காலம் என்ன சொல்லி

வந்திருக்கிறீர்களோ அவை சார ரூபத்தில் வந்து விடுகிறது. என்ன வார்த்தை பேசுகிறீர்களோ மற்றும் காரியம் செய்கிறீர்களோ அதில் சாரம் நிரம்பியதாக இருக்கும், வீணானதாக இருக்காது. அப்படி உங்களுடைய ஒவ்வொரு வார்த்தை மற்றும் காரியத்தில் முழு ஞானத்தின் சாரம் இருக்கட்டும். எப்பொழுது முழு ஞானத்தின் சாரம் புத்தியில் இருக்குமோ அப்பொழுது தான் அது இருக்கும். எப்பொழுதும் போதையில் இருப்பதினால் தான் இலக்கை நோக்கிச் செல்ல முடியும். ஒருவேளை போதை இல்லை என்றால் இலக்கை நோக்கிச் சென்றடைய முடியாது. முழு ஞானத்தின் சாரம் ஆறு வார்த்தைகளில் புத்தியில் வருவதினால் முழு ஞானம் மீண்டும் ரிவைஸ் ஆகி விடுகிறது. அப்படி போதை குறைவாக இருக்கும் காரணத்தினால் இலக்கு மேலே கீழே ஆகி விடுகிறது. இந்த நேரம் முழு சக்தியுடன் போதை இருக்கிறது அடுத்த நேரம் இடைநிலை ஆகி விடுகிறது. கீழான நிலையோ முடிவடைந்து விட்டது இல்லையா.

கீழான நிலை என்றால் என்ன என்று அதை அறியாத நிலை இருக்க வேண்டும். மற்றபடி உயர்ந்தது மற்றும் இடைப்பட்ட நிலை. இடைப்பட்ட நிலையில் வரும் காரணத்தினால் ரிசல்ட் மற்றும் இலக்கும் இடைப்பட்ட நிலையானதாக இருக்கும். தற்சமயம் தன்னுடைய நினைவின் நிலையில் சேவையின் நிலை இரண்டிலும் ஒருவேளை பார்த்தீர்கள் என்றால் ரிசல்ட்டாக இடைப்பட்ட நிலை தென்படுகிறது. எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவு இல்லை என்று பெரும்பான்மையோர் கூறுகிறார்கள். அந்த இடைப்பட்ட நிலையின் ரிசல்ட்டுக்கான முக்கிய காரணம் மத்திய காலத்து சம்ஸ்காரங்களை இதுவரை முழுமையான முறையில் பஸ்மம் ஆக்கவில்லை. எனவே இந்த மத்திய காலத்து சம்ஸ்காரம் துபாவரயுகத்திலிருந்து எந்த தேக அபிமானம் மற்றும் பலவீனங்களின் சம்ஸ்காரம் நிரம்பி வந்தனவோ அவற்றின் வசமாகும் காரணத்தினால் இடைப்பட்ட ரிசல்ட் தென்படுகிறது. விரும்பவில்லை ஆனால் சம்ஸ்காரம் வெகு காலத்தினுடையதாக இருக்கும் காரணத்தினால் அப்படி ஆகி விடுகின்றது என்று புகாரிலும் இதைத் தான் கூறுகிறார்கள். இந்த மத்திய காலத்து சம்ஸ்காரங்களையும் முழுமையாக பஸ்மம் செய்யவில்லை. டாக்டர்கள் கூட நோயின் கிருமிகளை முழுமையாக அழிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். ஒருவேளை ஒரு அம்சமாவது இருந்து விட்டது என்றால் அம்சத்திலிருந்து வம்சம் உருவாகி

விடுகிறது. இதே போல் மத்திய காலத்து சம்ஸ்காரம் அம்ச ரூபத்தில் கூட இருக்கும் காரணத்தினால் இன்றைய அம்சம் நாளைய வம்சம் ஆகி விடுகிறது. இதன் வசமாகி விடும் காரணத்தினால் உயர்ந்த ரிசல்ட்டாக என்ன வர வேண்டுமோ அது வருவதில்லை. யாரிடமாவது உங்கள் மேலேயே நீங்கள் திருப்தியாக இருக்கிறீர்களா, தன்னுடைய முயற்சியில், தன்னுடைய சேவையில் மற்றும் தன்னுடைய பிராமண பரிவாரத்தின் நெருக்கத்தில் திருப்தியாக இருக்கிறீர்களா என்று கேட்டால் யோசிக்கிறார்கள். ஆம் என்று கூறவும் செய்கிறார்கள் ஆனால் யோசித்து சொல்கிறார்களேயன்றி உடனடியாகச் சொல்வதில்லை. தன்னுடைய முயற்சியில், சேவையில், நெருக்கத்தில் மூன்றிலுமே அனைத்து ஆத்மாக்கள் மூலமாக திருப்தியின் சான்றிதழ்கள் கிடைக்க வேண்டும். சான்றிதழ் ஏதோ காகிதத்தில் எழுதியதாக கிடைக்காது ஆனால் ஒவ்வொருவர் மூலமாக அனுபவம் ஏற்படும். அப்படி அனைத்து ஆத்மாக்களின் நெருக்கத்தில் தன்னை திருப்தியாக வைத்துக் கொள்வது மற்றும் அனைவரை திருப்தி படுத்துவது இதில் யார் வெற்றி அடைகிறார்களோ அவர்கள் தான் அஷ்ட (எட்டு) தேவதையாக வெற்றி இரத்தினம் ஆகிறார்கள். இரண்டு விஷயங்களில் சரியாக இருக்கிறார்கள். மற்றபடி மூன்றாவது விஷயத்தில் அவரவர்கள் சக்திக்கேற்றபடி வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். அனைத்து விஷயங்களிலும் வரிசைக்கிரமமாகவோ இருக்கிறார்கள் ஆனால் இந்த விஷயத்தில் அதிகமாக இருக்கிறார்கள். ஒருவேளை மூன்றிலும் திருப்தி இல்லை என்றால் உயர்ந்த மற்றும் அஷ்ட இரத்தினத்தில் வர முடியாது. கௌரவமாக தேர்ச்சி பெறுவதற்கு அனைவர் மூலமாக திருப்தியாக இருப்பதற்கான பாஸ்போர்ட் கிடைக்க வேண்டும். நெருக்கத்தில் வரும் விஷயத்தில் குறைவு ஏற்பட்டு விடுகிறது. நெருக்கத்தில் திருப்தியாக இருப்பது மற்றும் திருப்தி படுத்தும் விஷயத்தில் தேர்ச்சி பெறுவதற்காக எந்த முக்கியமான விஷயம் இருக்க வேண்டும்? நெருக்கத்தில் திருப்தி இல்லாமல் ஏன் ஆகிறார்கள் என்று அனுபவத்தின் ஆதாரத்தில் பாருங்கள். அனைவரையும் திருப்தி படுத்துவதற்காக, மற்றும் தன்னுடைய நெருக்கத்தில் வருபவர்களை திருப்தி படுத்துவதற்காக, மேலும் தன்னுடைய நெருக்கத்தை உயர்ந்ததாக ஆக்குவதற்காக முக்கிய விஷயமாக தன்னுள் சகித்துக் கொள்வதற்கான மற்றும் உள்ளடக்குவதற்கான சக்தி தேவையாக இருக்கிறது. திருப்தியில்லாமல் இருப்பதற்கான காரணமாக இதுவாகத் தான் இருக்கிறது - யாருடைய

வார்த்தை மற்றும் சம்ஸ்காரம் மற்றும் காரியத்தை பார்க்கிறீர்கள் அது தன்னுடைய விவேகத்தை பொறுத்தவரை சரியானதாகப்படவில்லை. இந்தக் காரணத்தினால் மற்ற ஆத்மா திருப்தியில்லாமல் ஆகும் அளவிற்கு அந்த மாதிரி வார்த்தை அல்லது காரியம் நடந்து விடுகிறது. யாருடையவாவது ஏதாவது சம்ஸ்காரம், வார்த்தை மற்றும் காரியத்தைப் பார்த்து இது சரியில்லை மற்றும் இருக்கக்கூடாது என்று நீங்கள் நினைக்கிறீர்கள் இருந்தாலும் ஒருவேளை அந்த நேரம் உள்ளடக்கும் சக்தி மற்றும் சகித்துக் கொள்ளும் சக்திகளை தாரணை செய்தீர்கள் என்றால் உங்களுடைய சகித்துக் கொள்ளும் சக்தி மற்றும் உள்ளடக்கும் சக்தி தானாகவே அவருக்கு தன்னுடைய சரியில்லாத நடத்தையின் சாட்சாத்காரம் செய்விக்கும் ஆனால் என்ன நடக்கிறது வார்த்தை மூலமாக, கண் மூலமாக அவரை உணர வைப்பதற்காக மற்றும் சாட்சாத்காரம் செய்விப்பதற்காக நீங்களும் உங்களுடைய சம்ஸ்காரத்தின் வசமாகி விடுகிறீர்கள். இதன் காரணமாக சுயம் தானும் திருப்தியில்லை மற்றவரும் திருப்தியாக இருப்பதில்லை. அதே நேரம் ஒருவேளை உள்ளடக்கும் சக்தி இருக்கிறது என்றால் அதன் ஆதாரத்தில் அல்லது சகித்துக் கொள்ளும் சக்தியின் ஆதாரத்தில் அவருடைய காரியம் மற்றும் சம்ஸ்காரத்தை கொஞ்ச நேரத்திற்காக தவிர்த்து விட்டீர்கள் என்றால் உங்களுடைய சகித்துக் கொள்ளும் சக்தி மற்றும் உள்ளடக்கும் சக்தி அந்த ஆத்மாவின் மேல் திருப்தியின் அம்பை எய்த முடியும். இது இல்லாத காரணத்தினால் திருப்தியின்மை இருக்கிறது. அப்படி அனைவரின் நெருக்கத்தில் அனைவரையும் திருப்தி படுத்துவதற்கு மற்றும் திருப்தியாக இருப்பதற்கு இந்த இரண்டு குணங்கள் மற்றும் இரண்டு சக்திகளின் மிக அவசியம் இருக்கிறது. இதன் மூலமாகத் தான் உங்களுடைய குணம் மஹிமை பாடப்படுகிறது. அந்த நேரம் வெற்றி தென்படாமல் இருக்கலாம், தோல்வி தென்படலாம் ஆனால் அந்த நேரத்து தோல்வி அனேக ஜென்மங்களுக்காக உங்களுடைய கழுத்தில் மாலையை அணிவிக்கும். எனவே இந்த தோல்வியையும் வெற்றி என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் குறை இருக்கும் காரணத்தினால் இந்த பாடத்தில் எவ்வளவு வெற்றி இருக்க வேண்டுமோ அவ்வளவு இருப்பதில்லை. புத்தியில் ஞானம் இருந்த போதிலும் எந்த நேரம் எந்த ரூபத்தில் யாருக்கு ஞானம் மற்றும் யுக்தியோடு விஷயம் கொடுக்க வேண்டும் அந்த அறிவும் இருக்க வேண்டும். நான் அவருக்குக் கற்றுக் கொடுத்தேன் என்று நினைக்கிறார்கள் ஆனால் சரியான காலம் இல்லை

அவருக்கு சக்தி இல்லை என்றால் அவருடைய கற்றுக் கொடுத்தல் காரியம் செய்யாது. எப்படி நிலத்தைப் பார்த்து காலம் பார்த்து விதை விதைக்கப்படுகிறது என்றால் வெற்றியும் கிடைக்கிறது, சரியான காலம் இல்லை, நிலம் சரியாக இல்லை என்றால் எவ்வளவு தான் உயர்ந்த தரமான விதை விதைத்தாலும் அந்தப் பலன் கிடைப்பதில்லை. இதே போல் ஞானத்தின் விஷயங்கள், அறிவுரை மற்றும் வழிமுறை கூறுவதாக இருந்தால் நிலம் மற்றும் காலத்தை பார்க்க வேண்டும். நிலம் என்றால் அந்த ஆத்மாவின் பலத்தை பாருங்கள், காலத்தையும் பாருங்கள். அப்பொழுது அறிவுரை என்ற விதை பலன் கொடுக்க முடியும். புரிந்ததா.

எனவே தற்சமயம் அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாக்களுக்கு மஹாவீர் மஹாவீரனிகளுக்கு இந்த விசேஷ முயற்சியின் பக்கம் கவனம் கொடுக்க வேண்டும். இது தான் மஹாவீரத்தன்மை. திருப்தியாக இருப்பவர திருப்தியாக வைத்துக் கொள்வது மஹாவீரத்தன்மை இல்லை, அன்பானவருக்கு அன்பு கொடுப்பது மஹாவீரத்தன்மை இல்லை, சகயோகியுடன் சகயோகி ஆவது மஹாவீரத்தன்மை இல்லை ஆனால் எப்படி அபகாரிகளுக்கும் உபகாரம் செய்கிறார், யார் எவ்வளவு தான் சகயோகம் செய்யாதவராக இருந்தாலும், தன்னுடைய சகயோகத்தின் சக்தியினால் சகயோகியாக இல்லாதவரையும் சகயோகி ஆக்குவது இதைத் தான் மஹாவீரத்தன்மை என்று கூறப்படுகிறது. இந்த காரணத்தினால் இது நடப்பதில்லை என்பதல்ல. இவர் முன்னேறிச் செல்வதில்லை அப்பொழுது இது நடப்பதில்லை. அவர் முன்னேறுகிறார் அல்லது முன்னேறவில்லை ஆனால் நீங்களோ முன்னேற முடியும் இல்லையா? இதுவும் சம்மந்தத்தின் அன்பு என்று அப்படி புரிந்து கொள்ள வேண்டும். யாராவது சம்மந்தத்தில் இருப்பவர் ஒருவேளை ஏதாவது விஷயத்தில் பலஹீனமாக இருக்கிறார் என்றால் பலஹீனமானவரை பலஹீனமானவர் என்று நினைத்து விட்டு விடுவது மரியாதை என்று கூறப்படுவதில்லை. பலஹீனமான வரை பலஹீனமானவர் என்று விட்டு விடாமல் இருப்பது தான் ஈஸ்வரிய மரியாதை ஆகும் ஆனால் அவருக்குப் பலம் கொடுத்து பலம் நிரம்பியவராக ஆக்குவது மற்றும் துணைவனாக்கி அந்த மாதிரியான பலஹீனமானவரை உயரே தாண்டிச் செல்வதற்கு தகுதியானவராக ஆக்கினால் அப்பொழுது தான் மஹாவீர் என்று கூறலாம். அப்படி இந்த பாடத்தின் மேல் கவனம் வைப்பதினால் சேவைக்கான என்னென்ன திட்டம் உருவாக்குகிறீர்களோ அந்த சேவைத்

திட்டங்கள் என்ற நகைகளில் இந்த வைரங்கள் மின்னிக் கொண்டிருக்கும். தங்கம் மட்டும் தூரத்திலிருந்து இவ்வளவு கவர்ச்சி செய்வதாக இருக்காது. ஒருவேளை தங்கத்தில் வைரம் பதிக்கப்பட்டு இருக்கிறது என்றால் அது தூரத்திலிருந்தே தன் பக்கம் கவர்ச்சி செய்யும். திட்டத்தை நன்றாக உருவாக்குகிறீர்கள் அதையோ உருவாக்குங்கள். திட்டத்தில் இந்த வைரம் இருக்கிறது இல்லையா அதை ஒவ்வொருவரும் பதித்து பின்பு திட்டத்தை நடைமுறையில் செய்தீர்கள் என்றால் பின்பு முழு உலகத்திலும் செய்தியைப் பரப்ப விரும்புகிறீர்கள் இல்லையா அதில் வெற்றி கிடைத்து விடும். தொலை தூரத்திலிருக்கும் ஆத்மாக்கள் இந்த வைரத்தினால் கவரப்பட்டு விடுவார்கள். புரிந்ததா. நல்லது. ஓம் சாந்தி,

**வரதானம்: அனைவருக்கும் புகலிடம் கொடுக்கக்கூடிய இரக்க மனமுடைய தந்தையின் குழந்தைகள் இரக்க மனமுடையவராக ஆகுக!**

இரக்க மனமுடைய தந்தையின் இரக்க மனமுடைய குழந்தைகள் யாரையாவது பிச்சைக்காரன் ரூபத்தில் பார்த்தால் இந்த ஆத்மாவிற்கும் புகலிடம் கிடைத்து விடட்டும், இவருக்கும் நன்மை ஏற்பட்டு விடட்டும் என்று அவர்களுக்கு இரக்கம் வரும். அவருடைய நெருக்கத்தில் யார் வந்தாலும் அவருக்கு தந்தையின் அறிமுகத்தை அவசியம் கொடுப்பார். எப்படி யாராவது வீட்டிற்கு வந்தார்கள் என்றால் முதலில் அவருக்கு குடிக்க தண்ணீரால் உபசரிக்கப்படுகிறது. அப்படியே குடிக்காமல் சென்று விட்டார் என்றால் நல்லதாக நினைப்பதில்லை. அதே போல் யார் நெருக்கத்தில் வந்தாலும் அவருக்கு தந்தையின் அறிமுகம் என்ற தண்ணீர் அவசியம் உபசரிக்கப்படுகிறது. அதாவது வள்ளலின் குழந்தைகள் வள்ளலாகி ஏதாவது கொடுங்கள் அதனால் அவருக்கும் புகலிடம் கிடைத்து விடட்டும்.

**சுலோகன்: சரியான வைராக்கிய உள் உணர்வின் சுலபமான அர்த்தம் எவ்வளவு விலகியவரோ அவ்வளவு அன்பானவர்!**

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

# 27.04.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# லக்கி (அதிர்ஷ்டசாலி) மற்றும் லவ்லி (மிகவும் அன்பானவர்) ஆவதற்கான முயற்சி!

தன்னை லவ்லியஸ்ட் (மிகவும் அன்பானவர்) மற்றும் லக்கியஸ்ட் (மிகவும் அதிர்ஷ்டசாலி) அப்படி இரண்டுமானவர் என்று நினைக்கிறீர்களா? லவ்லியாகவும் இருக்க வேண்டும் மற்றும் லக்கியாகவும் இருக்க வேண்டும், இந்த இரண்டுமே நான் என்று நினைப்பதினால் எப்பொழுதும் தடையற்றவராக முழு ஈடுபாட்டில் மூழ்கியிருக்கக்கூடிய நிலையை அனுபவம் செய்வீர்கள். ஒருவேளை லக்கியாக மட்டும் இருக்கிறேன் லவ்லியாக இல்லையென்றால் கூட எப்பொழுதும் முழு ஈடுபாட்டில் மூழ்கியிருப்பீர் கள் ஆனால் தடையற்ற நிலையை அனுபவம் செய்ய மாட்டீர்கள் மேலும் லவ்லியாக மட்டும் இருக்கிறீர்கள் லக்கியாக இல்லை என்றால் கூட மேலே கூறிய நிலையின் அனுபவம் செய்ய முடியாது. எனவே இரண்டின் அவசியம் இருக்கிறது. லவ்லி மற்றும் லக்கி இரண்டின் பிராப்திக்காக முக்கியமாக மூன்று விஷயங்களின் அவசியம் இருக்கிறது. ஒருவேளை அந்த மூன்று விஷயங்களையும் தன்னுள் அனுபவம் செய்தீர்கள் என்றால் லக்கி மற்றும் லவ்லியாக அவசியம் இருப்பீர்கள். அப்படி இந்த இரண்டு நிலையின் அனுபவத்தை சுலபமாகவே செய்ய முடிகின்ற மாதிரியான அந்த மூன்று விஷயங்கள் எவை? அதிர்ஷ்டத்தை உருவாக்க முடியுமா? மற்றும் ஏற்கனவே உருவாக்கப்பட்டதாக இருக்குமா? தன்னை அதிர்ஷ்டசாலியாக ஆக்க முடியுமா? அல்லது முன்பே யார் அதிர்ஷ்டசாலியாக ஆகியிருக்கிறாரோ அவர் தான் ஆக முடியுமா? தன்னுடைய அதிர்ஷ்டத்தை உருவாக்க முடியுமா? அல்லது ஏற்கனவே உருவாக்கப்பட்டதின் அடிப்படையில் நடந்து கொள்ள வேண்டியதாக இருக்குமா? அதிர்ஷ்டத்தை மாற்ற முடியுமா அல்லது முடியாதா? அதிர்ஷ்டமில்லாதவராக இருப்பதிலிருந்து அதிர்ஷ்டசாலியாக ஆக முடியுமா? அதிர்ஷ்டத்தை உருவாக்குவதற்காக

செய்யும் முயற்சியில் வாய்ப்பு இருக்கிறதா? (ஆம்) அதிர்ஷ்டத்தை எழுப்பி விட்டு வந்திருக்கிறீர்களா அல்லது அதிர்ஷ்டத்தை எழுப்புவதற்காக வந்திருக்கிறீர்களா? எழுப்பி விட்ட அதிர்ஷ்டத்தை உடன் எடுத்து வந்திருக்கிறீர்கள் இல்லையா, பின்பு என்னவாக ஆவீர்கள்? எந்த அதிர்ஷ்டத்தை எழுப்பி விட்டு வந்திருக்கிறீர்களோ அதன் அனுசாரம் தான் தந்தையின் குழந்தையாக ஆகியிருக்கிறீர்கள் ஆனால் தந்தையின் குழந்தைகயாக ஆவதில் கூட அதிர்ஷ்டத்தின் விஷயம் இருக்கிறது இல்லையா? அதிர்ஷ்டத்தை உருவாக்கியும் வந்திருக்கிறோம் மேலும் உருவாக்கவும் முடியும் என்று அப்படியா? எப்பொழுது ஏதாவது விஷயத்தில் அதிகமாக முயற்சி செய்து விடுகிறீர்கள் என்றால் உங்கள் உள் மனதில் என்னுடைய அதிர்ஷ்டத்திலோ இது தான் தென்படுகிறது என்று எப்பொழுதாவது எண்ணம் வருகிறதா? முயற்சி செய்த பிறகும் வெற்றி ஏற்படுவதில்லை என்றால் அதிர்ஷ்டத்திலேயே அப்படித்தான் இருக்கிறது என்று நினைக்கிறீர்கள் இல்லையா? வெற்றி கிடைக்காததற்கான காரணம் என்ன? தன்னுடைய முறைப்படி முயற்சி செய்தீர்கள், இருந்தும் வெற்றி கிடைக்கவில்லை என்றால் பின்பு என்ன கூறுகிறீர்கள்? டிராமாவில் அப்படித் தான் இருந்தது என்று கூறுகிறீர்கள் இல்லையா? அப்படியானால் டிராமாவில் உருவாக்கப்பட்டிருந்த அதிர்ஷ்டத்தைத் தான் கொண்டு வந்திருக்கிறீர்கள் இல்லையா? முயற்சி செய்பவருக்கு தன்னுடைய முயற்சி செய்த பிறகும் தோல்வியும் ஏற்பட முடியும் என்று ஒருபொழுதும் நினைக்கக் கூடாது. என்ன முயற்சி செய்தோமோ அது ஒருபொழுதும் வீணாகச் செல்ல முடியாது என்றுதான் எப்பொழுதும் நினைக்க வேண்டும். ஒருவேளை சரியான முறையில் முயற்சி செய்திருந்தீர்கள் என்றால் அதன் வெற்றி இப்பொழுது இல்லையென்றாலும் எப்பொழுதாவது அவசியம் கிடைக்கும். தோல்வியின் ரூபத்தைப் பார்த்து இது எனக்கு வந்த பரீட்சை இதை கடந்து சென்ற பிறகு பரிபக்குவ நிலை வரப்போகிறது என்று அப்படி நினைக்க வேண்டும். எனவே அது தோல்வி இல்லை ஆனால் என்னுடைய முயற்சியின் அஸ்திவாரத்தை உறுதியாக்குவதற்கான ஒரு சாதனம் ஆகும். எப்பொழுதாவது ஏதாவது பொருளை உறுதியாக்க வேண்டியதாக இருந்தால் அதனுடைய அஸ்திவாரத்தை நன்றாக அடித்து அடித்து உறுதியாக்கப்படுகிறது. அந்த மாதிரி அடிப்பதுதான் பரிபக்குவ நிலைக்கான சாதனம் ஆகும். எனவே தன்னுடைய தனிப்பட்ட முயற்சியில் அல்லது குழுவில் நெருக்கத்தில் அல்லது ஈஸ்வரிய சேவையில் அப்படி

# 1972 அவ்யக்த முரளி

மூன்று விதமான முயற்சியில் வெளியில் பார்ப்பதற்கு தோல்வியின் ரூபம் தென்பட்டாலும் கூட இது தோல்வி இல்லை, ஆனால் பரிபக்குவ நிலைக்கான சாதனம் ஆகும் என்று அப்படிப் புரிந்து கொள்ள வேண்டும். எப்படி புயலை புயல் என்று புரிந்து கொள்ளாமல் ஒரு பரிசு என்று புரிந்து கொள்ள வேண்டும் என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம் இல்லையா? படகில் வெடிப்புகள் வருகின்றன ஆனால் அது முன்னேறிச் செல்வதற்கான ஒரு சாதனம் ஆகும். இந்த வகையில் தோல்வியில் வெற்றி அடங்கியிருக்கிறது என்று புரிந்து முன்னேறிச் செல்ல வேண்டும். ஒருவேளை முயற்சி சரியாக இருக்கிறது என்றால் "தோல்வி" என்ற வார்த்தையே புத்தியில் வரக்கூடாது.

நல்லது. லக்கி மற்றும் லவ்லி ஆவதற்காக எந்த மூன்று விஷயங்களின் அவசியம் இருக்கிறது என்று கூறிக் கொண்டிருந்தோம். அதிர்ஷ்டம் எப்படி உருவாக முடியும் என்று முதலில் இதை யோசியுங்கள். நான் அதிர்ஷ்டசாலியா, அன்பானவரா என்று தன்னையே பார்த்துக் கொள்ளுங்கள். தன்னுடைய அதிர்ஷ்டத்தை ஏன் எழுப்ப முடியவில்லை? அதற்கான மூல காரணம் ஞானம் நிறைந்தவராக இருப்பதில்லை. ஞானம் நிறைந்த நிலையில் அனைத்து விதமான ஞானம் வந்து விடுகிறது. எவ்வளவிற்கு ஒருவர் ஞானம் நிறைந்தவராக இருப்பாரோ அவ்வளவு அதிர்ஷ்டசாலியாக இருப்பார் ஏனென்றால் ஞானத்தின் ஒளி மற்றும் சக்தி மூலம் முதல், இடை, கடையை தெரிந்து என்னென்ன முயற்சி செய்வாரோ அதில் அவருக்கு வெற்றி அவசியம் கிடைக்கும். வெற்றி கிடைப்பது இதுவும் அதிர்ஷ்டத்தின் ஒரு அடையாளம் ஆகும். ஒன்றோ அவர் ஞானம் நிறைந்தவராக இருப்பார் அதாவது முழு ஞானம் இருக்கும். முழுமையில் ஒருவேளை ஏதாவது குறை இருக்கிறது என்றால் மிகவும் அதிர்ஷ்டசாலியில் கூட வரிசைக்கிரமம் இருக்கிறது. ஞானம் நிறைந்தவராக இருக்கிறார் என்றால் மிகவும் அதிர்ஷ்டசாலியிலும் நம்பர் ஒன் - ஆக இருப்பார். செய்யும் கர்மத்தின் ஞானமும் இருக்கிறது மற்றும் தன்னுடைய படைப்பவர் மற்றும் படைப்பின் ஞானமும் இருக்கிறது. பரிவாரத்திலும், ஞானி ஆத்மாக்களின் நெருக்கத்திலும் எப்படி வர வேண்டும் என்ற இதன் ஞானமும் இருக்கிறது. ஞானம் படைப்பவர் மற்றும் படைப்பிற்கானது மட்டும் இல்லை ஆனால் ஞானம் நிறைந்தவர் என்றால் ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தை மற்றும் ஒவ்வொரு கர்மத்திலும் ஞான சொரூபம் இருக்கும். இப்படிப்பட்டவரைத் தான்

ஞானம் நிறைந்தவர் என்று சொல்வது. இன்னொரு விஷயம் எவ்வளவு ஞானம் நிறைந்தவராக இருப்பாரோ அவ்வளவே கவனம் நிறைந்தவராகவும் இருப்பார். எவ்வளவு கவனம் நிறைந்தவராக இருப்பாரோ அவ்வளவே அதன் அடையாளமாக மலர்ந்த முகமுடையவராக இருப்பார். ஒருவேளை யாராவது மலர்ந்த முகமுடையவராக இல்லை என்றாலும் லவ்லியாகவும் இருக்க மாட்டார். ஒருவேளை யாராவது கவனம் நிறைந்தவராக இல்லை என்றாலும் லவ்லியாகவும் தென்பட மாட்டார்.

யார் கவனம் நிறைந்தவராக இல்லையோ அவர் மூலமாக அவ்வப்போது தன்னோடு அல்லது மற்றவர்களின் நெருக்கத்தில் வருவதினால் ஏதாவது சிறிய அல்லது பெரிய தவறு ஏற்படும் காரணத்தினால் தானும் லவ்லியாக இருக்க முடியாது, மற்றவர்களையும் லவ்லியாக ஆக்க முடியாது. எனவே யார் கவனம் உள்ளவராக இருப்பாரோ அவர் அவசியம் மலர்ந்த முகமுடையவராகவும் இருப்பார். யார் கவனம் நிறைந்தவராக இருப்பாரோ அவர் தன்னுடைய முயற்சியில் அதிகமாக மூழ்கியிருக்கும் காரணத்தினால் மலர்ந்த முகமுடையவராக இருக்க முடியாது என்று அப்படியும் நினைக்காதீர்கள், அந்த மாதிரியான விஷயம் இல்லை. கவனமாக இருப்பதின் அடையாளம் மலர்ந்த முகமாக இருப்பது. அப்படி இந்த மூன்று தகுதிகளும் மற்றும் விஷயங்களும் ஒருவேளை இருக்கிறது என்றால் லக்கி மற்றும் லவ்லி அப்படி இரண்டுமாக ஆக முடியும். ஒருவர் இன்னொருவரின் சகயோகத்தினால் கூட தன்னுடைய அதிர்ஷ்டத்தை உருவாக்க முடியும் ஆனால் எப்பொழுது கவனம் உள்ளவராகவும் மலர்ந்த முகமுடையவராகவும் இருப்பீர்களோ அப்பொழுது தான் மற்றவர்களின் சகயோகம் கிடைக்கும். ஒருவேளை மலர்ந்த முகமுடையவராக இல்லை என்றால் வெற்றி நிறைந்தவராகவும் இருக்க மாட்டார். கவனம் உள்ளவர் மற்றும் மலர்ந்த முகம் உடையவராக இருக்கிறார் என்றால் வெற்றி நிறைந்தவர் அதாவது அதிர்ஷ்டசாலி ஆவார். அப்படி இந்த மூன்று விஷயங்களையும் தனக்குள்ளே பாருங்கள், ஒருவேளை மூன்றுமே சரியான சதவிகிதத்தில் இருக்கிறது என்றால் நான் லக்கி மற்றும் மிகவும் லவ்லி இரண்டுமாக இருக்கிறேன் என்று புரிந்து கொள்ளுங்கள். ஒருவேளை சதவிகிதத்தில் குறை இருக்கிறது என்றால் பிறகு இந்த நிலை இருக்க முடியாது. அடையாளம் என்னவென்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? வாய் மூலமாக ஞானம் சொல்வதினால் இவ்வளவு

பிரபாவத்தை ஏற்படுத்த முடியாது. எப்பொழுதும் மலர்ந்த முகமுடையவராக இருங்கள், துக்கத்தின் அலை எண்ணத்தில் கூட வர வேண்டாம். இதைத் தான் மலர்ந்த முகம் உடையவர் என்று கூறுவது. அப்படி தன்னுடைய மலர்ந்த முகம் மூலமாக சேவை செய்ய முடியும். படி காந்தம் மாதிரி, இரும்பு தானாகவே வரப்பட்டு அதன் பக்கம் செல்கிறது அதே போல் எப்பொழுதும் மலர்ந்த முகமுடையவர் தானே காந்தத்தின் சொரூபம் ஆகி விடுகிறார். அவரைப் பார்த்ததுமே அனைவரும் அருகில் வருவார்கள். இன்றைய உலகத்தில் எப்பொழுது நாலாபுறமும் துக்கம் மற்றும் அமைதியின்மையின் மேகம் மூடப்பட்டிருக்கிறது அந்த மாதிரி சுற்றுப்புற சூழ்நிலையில் இவர் எப்பொழுதும் மலர்ந்த முகமுகமாக இருக்கிறார் என்று புரிந்து கொள்வார்கள். இவர் ஏன் மற்றும் எப்படி இருக்கிறார் என்று பார்ப்பதற்கான உற்சாகம் இருக்கும். எப்படி எப்பொழுது மிகுந்த புயல் அடிக்கிறது மற்றும் மழை பெய்கிறது என்றால் அந்த நேரம் மக்கள் மழை புயலின் பாதுகாப்பான இடத்தைப் பார்க்கிறார்கள் என்றால் விரும்பாவிட்டாலும் அந்த இடத்திற்கு ஓடுவார்கள். தன்னை தானே காட்டாற்றிக் கொள்வதற்காக அந்த இடத்தின் ஆதாரத்தை எடுக்கிறார்கள். இழுக்கப்பட்டு வந்து விடுகிறார்கள் இல்லையா? அப்படியே தற்சமயம் நாலாபுறங்களிலும் மாயாவின் புயல் மற்றும் துக்கத்தின் மேகம் கர்ஜித்துக் கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். அந்த மாதிரி நேரத்தில் பாதுகாப்பிற்கான சாதனத்தைப் பார்த்து உங்கள் பக்கம் கவரப்படுவார்கள். அந்த மாதிரி கவரக்கூடியவரின் வெளிமுகமான ரூபம் என்னவாக இருக்கும்? மலர்ந்தமுகம். எனவே லவ்லி மற்றும் லக்கி இரண்டுமே தேவையாக இருக்கிறது. சிலர் ஞானம் நிறைந்தவர் மற்றும் கவனம் உள்ளவராகவும் இருக்கிறார் ஆனால் மலர்ந்த முகமுடையவராக இருப்பதில்லை. கவனம் வைக்கிறார்கள், கவனம் வைத்து வைத்து இருக்கையை விட்டு விடுகிறார்கள் என்றால் மலர்ந்தமுக உடையவராக ஆக முடிவதில்லை. எனவே முக்கியமான முயற்சி மற்றும் கவனம் எந்த விஷயத்தில் இருக்க வேண்டும் அதன் மூலமாக இந்த மூன்று விஷயங்களையும் சுலபமாக தன்னுள் கொண்டு வர முடியும் என்பதை தெரிந்திருக்கிறீர்களா? கவனமுள்ளவராகவோ இருக்கத் தான் வேண்டும் ஆனால் முக்கியமாக எந்த விஷயத்தில் கவனம் வைக்க வேண்டும்? கவனம் நிறைந்தவராக எந்தெந்த விஷயங்களில் இருக்கிறார்கள்? (விதவிதமான பதில் கிடைத்தது). தந்தை என்ன கவனம் வைத்தார் அதன்

மூலம் இந்த மாதிரி ஆனார்? அந்த முக்கியமான விஷயம் எது? உங்களுடைய மகிமை பாடப்படுகிறது இல்லையா அதனுடைய முழுமையான வர்ணனை செய்யுங்கள் - அனைத்து குணங்கள் நிரம்பியவர், 16-கலைகள் சம்பூர்ணமானவர், சம்பூர்ண நிர்விகாரி, மரியாதா புருஷோத்தமன்... எப்பொழுது மரியாதைகளில் தவறுகள் ஏற்படுகிறதோ அப்பொழுது தான் கவனக்குறைவானவராக ஆகிறார்கள். உங்களுடைய சம்பூர்ண நிலைக்கான மகிமை இருக்கிறது, எப்படி சீதையை மரியாதை என்ற கோட்டின் உள்ளே இருப்பதற்கான கட்டளை இருந்தது, இது மரியாதை என்ற கோடேயன்றி வேறொன்றும் இல்லை. ஒருவேளை ஈஸ்வரிய மரியாதைகளின் கோட்டிற்கு வெளியே வந்து விடுகிறீர்கள் என்றால் ஒன்றுமில்லாதவர் ஆகி விடுகிறீர்கள் அதாவது என்னென்ன பிராப்தி இருக்கின்றனவோ அவை இல்லாதவராக ஆகி விடுகிறீர்கள். பின்பு கதறுகிறார்கள் எப்படி பிச்சைக்காரர்கள் - பணம் கொடு, துணி கொடு கதறுகிறார்களோ அப்படி. அதே போல் யார் மரியாதை என்ற கோட்டை மீறுகிறார்களோ அவர்களுடைய நிலை பிச்சைக்காரர்களுக்கு சமமானதாக ஆகி விடுகிறது. அவர் கிருபை செய்யுங்கள், ஆசீர்வாதம் கொடுங்கள், சகயோகம் கொடுங்கள், அன்பு கொடுங்கள் என்று கூறுவார்கள். அதாவது பிச்சைக்காரர் ஆகி விட்டார்கள் இல்லையா? ஆனால் என்னுடைய அதிகாரமாகும் என்று கூறுபவர்களே குழந்தை மற்றும் எஜமானத்தன்மை உடையவர் என்று கூறப்படுகிறது. அடிமையாகி கேட்பது, பிறகு ஏதாவது ஒரு பொருளைக் கேட்பவரை பிச்சைக்காரன் என்றே கூறப்படுகிறது. இதுவோ மரியாதைகளின் கோடு. ஒருவேளை அதிலிருந்து வெளியே வந்து விட்டீர்கள் என்றால் பிச்சைக்காரன் ஆகி விடுகிறீர்கள். பின்பு பிறர் உதவியை நாட வேண்டியதாக இருக்கிறது. ஒரு வகையில் தந்தையின் குழந்தை ஆகியிருக்கிறீர்கள் என்றால் லக்கியாகவும் லவ்லியாகவும் இருக்கவே இருக்கிறீர்கள். அவர் சுயம் ஈஸ்வரிய காரியத்தில் உதவி செய்பவராக இருக்கிறாரேயன்றி பிறர் உதவியை நாடுபவராக இருப்பதில்லை. உங்களுடைய உதவியாளர் ஆனதற்கான படமும் இருக்கிறது உதவி கேட்பதற்கான படம் இல்லை. பக்தர்களின் படம் கேட்பதற்கானதாகத் தான் இருக்கிறது. குழந்தையிலிருந்து அதிபதியாக யார் ஆகிறாரோ அவர் எப்பொழுதுமே உதவி செய்பவர் தான். யார் அவரே உதவி செய்பவராக இருக்கிறாரோ அவர் வேறு யாரிடமும் உதவியைக் கேட்க முடியாது. அவர் கொடுப்பவர், எடுப்பவர் இல்லை. வள்ளல்

# 1972 அவ்யக்த முரளி

ஒருபொழுதும் யாரிடமும் எதையும் பெறுவதில்லை, வள்ளல் கொடுப்பவராக இருக்கிறார். அப்படி தன்னை ஒரு தந்தையின் அதாவது இராமனின் உண்மையான சீதை என்று புரிந்து அனைத்து மரியாதைகளின் கோட்டிற்கு உள்ளே இருங்கள். இந்த கவனம் வைத்தீர்கள் என்றால் கவனமுள்ளவராக இருப்பீர்கள். கவனமுள்ளவரிலிருந்து தானாகவே மலர்ந்த முகமுடையவராக ஆவீர்கள். அப்படி இந்த மரியாதைகள் என்னென்ன இருக்கின்றன அவையனைத்தும் புத்தியில் இருக்க வேண்டும்.

காலையிலிருந்து இரவு வரை எந்தெந்த மரியாதைகளை எந்தெந்த காரியத்தில் வைக்க வேண்டும் என்ற அந்த அனைத்து ஞானம் தெளிவாக இருக்க வேண்டும். ஒருவேளை ஞானம் இல்லை என்றால் கவனமுள்ளவராகவும் இருக்க முடியாது. அப்படி சீதை என்று புரிந்து இந்த கோட்டின் உள்ளே இருங்கள். அதாவது யார் கவனமுள்ளவராக இருப்பார், மரியாதைகளின் கோட்டிற்கு உள்ளே இருப்பார் அவர் தான் புருஷோத்தமன் ஆக முடியும். எப்பொழுது மலர்ந்த முகமுடையவராக இருக்க முடியவில்லை என்றால் அவசியம் ஏதோ மரியாதைகளை மீறியிருக்கிறீர்கள். எண்ணத்திற்கான மரியாதையும் இருக்கிறது. வீணான எண்ணத்தையும் உருவாக்கக் கூடாது ஒருவேளை இந்த கோட்டிற்கு வெளியே வீணான எண்ணம், தீய எண்ணம் உற்பத்தி ஆகிறது என்றால் எண்ணத்தின் மரியாதைகளின் மீறல் செய்திருக்கிறீர்கள் அப்பொழுது தான் மலர்ந்த முகமுடையவராக இருக்க முடிவதில்லை. அதே போல் வாய் மூலம் என்ன வார்த்தை பேச வேண்டும் மேலும் என்ன நிலையில் நிலைத்திருந்து வாய் மூலம் பேச வேண்டும், இது வார்த்தைகளுக்கான மரியாதை ஆகும். ஒருவேளை வார்த்தையிலும் ஏதாவது மரியாதை மீறல் இருக்கிறது என்றால் மலர்ந்த முகமுடையவராக இருக்க முடியாது. தன்னுடைய வீணான எண்ணம், தீய எண்ணம் தான் தன்னை மலர்ந்த முகமுடைய நிலையிலிருந்து கீழே இறக்கி விடுகிறது ஏனென்றால் மரியாதைகளை மீறியிருக்கிறீர்கள். ஒருவேளை தன்னை மரியாதைக் கோட்டிற்குள் உள்ளே எப்பொழுதும் வைத்திருக்கிறீர்கள் என்றால் இந்த இராவணன் மாயா மற்றும் தடை இந்த மரியாதைக் கோட்டிற்கு உள்ளே வருவதற்கு தைரியம் வைக்க முடியாது. எந்தவொரு தடை மற்றும் புயல், பிரச்சனை மற்றும் சோர்வு வருகிறது என்றால் எங்கோ மரியாதைக் கோட்டிற்கு வெளியே தன்னுடைய பத்தி என்ற கால்

வந்து விட்டது என்று புரிந்து கொள்ள வேண்டும். எப்படி சீதை கோட்டிற்கு வெளியே கால்களை வைத்தார். புத்தியும் கால்கள்தான் அதன் மூலம் யாத்திரை செய்கிறீர்கள். எனவே புத்தி என்ற காலை கொஞ்சமாவது மரியாதை கோட்டிற்கு வெளியே வைத்தீர்கள் என்றால் அப்பொழுது தான் இந்த அனைத்து விஷயங்களும் வருகிறது மேலும் என்னவாக ஆக்கி விடுகிறது? தந்தையின் லக்கி மற்றும் லவ்லியானவரை பிச்சைக்காரன் ஆக்கி விடுகிறது. பிச்சைக்காரன் ஆவதின் அடையாளம் - ஒன்றோ ஆத்மாக்களிட மிருந்தும், தந்தையிடமிருந்தும் ஆதரவைக் கேட்பார்கள். தன்னுடைய சக்திகளின் பொக்கிஷம் முடிவடைந்து விடும். லக்கீர் கா ஃபக்கீர் (அடிமை வாழ்க்கையில் இருப்பவர்) என்ற பழமொழி இருக்கிறது. அப்படி அந்த மாதிரி யார் பிச்சைக்காரன் ஆகிறாரோ அவர் லக்கீர் கா ஃபக்கீர் ஆகி விடுகிறார். அந்த சக்திசாலியான நிலை முடிவடைந்து விடுகிறது. ஞானத்தையோ சொல்லிக் கொண்டே இருப்பார். முயற்சி செய்து கொண்டே இருப்பார் ஆனால் லக்கீர் கா ஃபக்கீருக்குச் சமமாக ஆகி விடுகிறார் தன்னுடைய பிராப்தியின் போதை, சக்தியின் போதையாக என்ன இருக்க வேண்டுமோ அது இருப்பதில்லை. பக்தி மார்க்கத்தில் கூட லக்கீர் கா ஃபக்கீர் இருக்கிறார்கள் இல்லையா அப்படி இந்த மரியாதையின் கோட்டை மீறுபவர்கள் இரண்டு விதமான பிச்சைக்காரர்கள் ஆகி விடுகிறார்கள். எனவே ஒருபொழுதும் பிச்சைக்காரன் ஆகாதீர்கள். இந்த நேரம் யார் உலக மகாராஜா ஆகிறாரோ அவருக்கும் மகாராஜாவாக ஆகுகிறீர்கள். எப்படி இராஜாக்களுக்கெல்லாம் இராஜா என்று கூறப்படுகிறது. அதுவோ உலக இராஜாவாக எப்பொழுது ஆவீர்கள் அப்பொழுது அந்த நேரத்தின் நிலையை இராஜாக்களுக்கெல்லாம் இராஜா என்று கூறப்படுகிறது ஆனால் இந்த நேரத்தில் பிராமணன் என்ற நிலை இருக்கிறது மற்றும் நேரடியாக தந்தை மூலமாக ஞானம் நிறைந்தவராக ஆவதின் நிலை உயர்ந்தது அப்படி அந்த மாதிரி நிலை ஆவதை விட்டு ஒன்றுமில்லாதவராக ஆவது நன்றாக இல்லை அல்லவா? எனவே ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தில் வெளியேவோ வந்து விடுவில்லையே என்ற சோதனை மற்றும் கவனம் வையுங்கள். அந்த மாதிரி தன்னை மரியாதா புருஷோத்தமன் ஆக்குங்கள், அந்த மாதிரி மரியாதா புருஷோத்தமன் ஆவதற்கான தீவிர முயற்சி செய்பவர், ஞானம் நிறைந்தவர், கவனம் நிறைந்தவர் மற்றும் மலர்ந்த முகமுடைய உயர்ந்த ஆத்மாக்களுக்கு நமஸ்காரம். நல்லது.

**வரதானம்: மூழ்கியிருக்கும் நிலையின் அனுபவம் மூலமாக மாயாவை தன்னுடைய பக்தனாக்கக்கூடிய மாயாவை வென்றவர் ஆகுக!**

மூழ்கிய நிலையின் அனுபவம் செய்வதற்காக தன்னுடைய அனேக பட்டங்கள் மற்றும் சொரூபங்கள், அனேக குணங்களின் அலங்காரம், அனேக விதமான குஷியின், ஆன்மீக போதையின், படைப்பவர் மற்றும் படைப்பின் விஸ்தாரத்தின் ஞானத் துளிகள், பிராப்திகளின் ஞானத் துளிகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எது உங்களுடைய விருப்பமானதோ அதில் சிந்தனை செய்தீர்கள் என்றால் மூழ்கிய நிலை சுலபமாக அனுபவம் ஆகும். பின்பு ஒருபொழுதும் நிர்பந்தப்படுத்தப்பட மாட்டீர்கள், மாயா நிரந்தரமாக நமஸ்காரம் செய்யும். சங்கமயுகத்தின் முதல் பக்தனாக மாயா ஆகி விடும். எப்பொழுது நீங்கள் மாயாவை வென்று மாஸ்டர் பகவான் ஆவீர்களோ அப்பொழுது மாயா பக்தனாகும்.

**சுலோகன்: உங்களுடைய பேச்சு மற்றும் நடத்தை பிரம்மாபாபாவிற்கு சமமாக எப்பொழுது இருக்கிறதோ அப்பொழுது தான் உண்மையான பிராமணன் என்று கூறப்படுவோம்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 03.05.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# 'லா-மேக்கர்' (சட்டத்தை உருவாக்குபவர்) ஆகுங்கள், 'லா-பிரேக்கர்' '(சட்டத்தை மீறுபவர்) ஆக அல்ல!

தன்னை லௌஃபுல் (அன்பு நிறைந்தவர்) மற்றும் லா ஃபுல் (சட்டப்படி நடப்பவர்) அப்படி இரண்டுமாக நினைக்கிறீர்களா? எவ்வளவு லௌஃபுல்லாக இருக்கிறீர்களோ அவ்வளவே லாஃபுல்லும் இருக்கட்டும். எப்பொழுது லௌஃபுல்லாக ஆகுகிறீர்கள் என்றால் லாஃபுல்லாக ஆக முடியுமா? மேலும் எப்பொழுது லாஃபுல் ஆகிறீர்கள் என்றால் லௌஃபுல்லாக ஆக முடியாதா? இரண்டுமே சேர்ந்தே ஒரே நேரத்தில் செய்யும் காரியத்தில் மற்றும் சொரூபத்தில் தென்பட முடியுமா? ஏனென்றால் எதுவரை லா (சட்டம்) மற்றும் லௌ (அன்பு) இரண்டுமே சமநிலை ஆகவில்லையோ அதுவரை காரியத்தில் வெற்றி மூர்த்தி ஆக முடியாது. வெற்றி மூர்த்தி மற்றும் சம்பூர்ண மூர்த்தி ஆவதற்காக இந்த இரண்டின் அவசியம் இருக்கிறது. லாஃபுல் தனக்காகவும் ஆக வேண்டியதாக இருக்கிறது, மற்றவர்களுக்காக மட்டும் லாஃபுல் ஆக வேண்டியதாக இருக்கிறது என்று அப்படியில்லை. யார் தானே தனக்காக லாஃபுல் ஆகிறாரோ அவர் தான் மற்றவர்களுக்காகவும் லாஃபுல் ஆக முடியும். ஒருவேளை தானே தனக்காக ஏதாவது ஒரு சட்டத்தை மீறுகிறார் என்றால் அவர் மற்றவர்கள் மேல் சட்டத்தை செலுத்த முடியாது. எவ்வளவு தான் மற்றவர்களுக்காக லாஃபுல்லாக ஆவதற்கான முயற்சி செய்தாலுமே ஆக முடியாது. எனவே தனக்காகவும் மற்றும் மற்ற ஆத்மாக்களுக்காகவும் லாஃபுல்லாக ஆகியிருக்கிறேனா என்று தன்னைத் தானே கேளுங்கள். காலையில் இருந்து இரவு வரை மனதில் எழும் எண்ணங்களில் மற்றும் காரியத்தில், தொடர்பில் மற்றும் ஒருவர் இன்னொருவருக்கு சகயோகம் கொடுப்பதில் மற்றும் சேவையில் எங்காவது சட்டத்தை மீறி செய்யவில்லையே? யார் பிரேக்கராக (மீறுபவராக) இருப்பாரோ அவர் புது உலகத்தின் மேக்கர்

(உருவாக்குபவர்) ஆக முடியாது. பீஸ் மேக்கர் (அமைதியை ஸ்தாபனை செய்பவர்) மற்றும் நியூ வேர்ல்ட் மேக்கர் (புது உலகை படைப்பவர்) ஆக முடியாது. எனவே நான் நியூ வேர்ல்ட் மேக்கர், பீஸ் மேக்கர். லா மேக்கராக இருக்கிறேனா அல்லது லா பிரேக்கராக இருக்கிறேனா? என்று தன்னைத் தானே பாருங்கள். யார் தானே லா மேக்கராக இருக்கிறாரோ அவரே ஒருவேளை சட்டத்தை மீறுகிறார் என்றால் அந்த மாதிரியானவரை லா மேக்கர் என்று சொல்ல முடியுமா? ஈஸ்வரிய சட்டங்கள் மற்றும் ஈஸ்வரிய நியமங்கள் என்ன என்று அவை அனைத்தையும் தெளிவாக தெரிந்து கொண்டீர்களா? அல்லது இனி மேல் தான் தெரிய வேண்டுமா? தெரிந்து கொள்வதின் அர்த்தம் என்னவாக இருக்கிறது? தெரிந்து கொள்வது என்றால் அதன் படி நடப்பது. தெரிந்து கொண்டதற்கு பிறகு ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஏற்றுக் கொண்ட பிறகு அதன் படி நடக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் இங்கு யார் யார் அமர்ந்திருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் தெரிந்து கொண்டார்கள் அதாவது அதன்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று அப்படி புரிந்து கொள்ளலாமா?

அமிர்தவேளையிலிருந்து என்னென்ன தினசரி காரியங்களை செய்கிறீர்களோ அவை அனைத்தும் ஈஸ்வரிய சட்டத்தின் படி செய்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது அதில் ஏதாவது குறைபாடு இருக்கிறதா? தெரிந்து கொள்வதில் சதவிகிதம் (குறைபாடு) இருக்கிறதா? ஒருவேளை தெரிந்து கொள்வதில் சதவிகிதம் இல்லை மற்றும் தெரிந்து கொண்டு நடப்பதில் சதவிகிதம் இருக்கிறது என்றால் அதை தெரிந்து கொண்டது என்று எப்படி கூற முடியும். சரியான ரூபத்தில் தெரிந்து கொள்ளவில்லை அதனால் நடக்க முடியவில்லை அல்லது தெரிந்து கொண்டீர்கள் மற்றபடி அதன்படி உங்களால் நடக்க முடியவில்லை என்று அப்படியா, என்னவென்று கூறலாம். எப்பொழுது இங்கு தெரிந்து கொள்வது, ஏற்றுக்கொள்வது, நடப்பது ஒன்றே தான் என்று கூறுகிறீர்களோ பின்பு வித்தியாசம் ஏன் வைக்கப்பட்டிருக்கிறது? உங்களுக்குத் தெரியும் நாம் ஆத்மாக்கள் ஆனால் அதை ஏற்றுக் கொண்டு நடப்பதில்லை என்று அஞ்ஞானி ஆத்மாக்களுக்கு புரிய வைக்கிறீர்கள். உங்களுக்கும் தெரியும் இது ஈஸ்வரிய நியமம், இது ஈஸ்வரிய நியமம் இல்லை என்று. தெரிந்த பிறகு அப்படி நடந்து கொள்வதில்லை, இந்த நிலையை என்னவென்று கூறுவது? முயற்சி

செய்யும் வாழ்க்கையில் தவறு செய்வது மன்னிக்கப்படும் என்று அப்படியா? எப்படி நாடகம் என்ற கிளை ஆதாரம் கொடுக்கிறது. அதே போல் "முயற்சி செய்பவர்" என்ற வார்த்தை தான் தோல்வி அடைவதற்கு, வெற்றியை இழப்பதற்குமான மிக நல்ல ஒரு கிளையாகும். அலங்காரங்களில் இந்த கிளை காண்பிக்கப்பட்டிருக்கிறதா? அந்த மாதிரியானவரை முயற்சி செய்பவர் என்று கூற முடியுமா? புருஷாரத் (முயற்சி) என்ற வார்த்தையின் அர்த்தமாக என்ன செய்கிறீர்கள். இந்த இரதத்தில் (உடலில்) இருந்து கொண்டே தன்னை புருஷ் அதாவது ஆத்மா என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். இதைத் தான் புருஷார்த்தி (முயற்சி செய்பவர்) என்று கூறப்படுவது. இந்த மாதிரி முயற்சி செய்பவர் அதாவது ஆத்மீக நிலையில் இருக்கக்கூடியவர் இந்த இரதத்தின் புருஷ் அதாவது எஜமானன் யார். ஆத்மா தான் இல்லையா. அப்படி புருஷாரத்தி (முயற்சி செய்பவர்) என்றால் தன்னை இரதி (இரதத்தை ஓட்டுபவர்) என்று புரிந்து கொள்பவர். அந்த மாதிரி முயற்சி செய்பவர் ஒருபொழுதும் தோல்வி அடைய முடியாது. எனவே புருஷாரத் என்ற வார்த்தையை இந்த முறையில் உபயோகம் செய்யாதீர்கள். எப்பொழுது நாம் முயற்சி செய்யாமல் இருக்கிறோமோ அப்பொழுது தோல்வி அடைந்து விடுகிறோம் என்று அப்படிச் சொல்லுங்கள். ஒருவேளை முயற்சி செய்வதில் சரியாக ஈடுபட்டுக் கொண்டிருந்தால் தோல்வி ஏற்பட முடியாது. தெரிந்து கொள்வது, நடப்பதில் ஒருவேளை வித்தியாசம் இருக்கிறது என்றால் அந்த மாதிரி நிலை உள்ளவரை முயற்சி செய்பவர் என்று கூற முடியாது. முயற்சி செய்பவர் அடைய வேண்டிய இலக்கை எப்பொழுதும் எதிரில் வைத்துக் கொண்டு நடந்து கொள்வார்கள். அவர் ஒருபொழுதும் நின்று விடுவதில்லை. இடையிடையே செல்லும் வழியில் காட்சிகளைப் பார்ப்பதில் ஈடுபட்டு விடுகிறார்கள் ஆனால் நின்று விடுவதில்லை. பார்க்கிறீர்கள் மற்றும் பார்த்துக் கொண்டே பார்க்காமல் இருக்கிறீர்களா? எந்த விஷயம் எதிரில் வந்தாலும் அதைப் பார்த்து ஒருவேளை நிற்கிறீர்கள் என்றால் அந்த மாதிரி நிலையில் நடந்து கொள்பவர்களை முயற்சி செய்பவர் என்று கூற முடியாது. முயற்சி செய்பவர் ஒருபொழுதும் தன்னுடைய தைரியம் மற்றும் உற்சாகத்தை விடுவதில்லை. தைரியம் மற்றும் உற்சாகம் எப்பொழுதும் உடன் இருக்கிறது என்றால் வெற்றி எப்பொழுதுமே இருக்கவே இருக்கிறது. எப்பொழுது தைரியமற்றவர்களாக ஆகிறீர்கள் மற்றும் உற்சாகத்திற்கு பதிலாக ஏதாவது ஒரு வகையில் சோம்பேறித்தனம் எப்பொழுது

வருகிறதோ அப்பொழுது தான் தோல்வி ஏற்படுகிறது. மேலும் சிறிய தவறு செய்வதினால் லாஃபுல் ஆவதற்கு பதிலாக தானே லா மேக்கராக இருந்த போதிலும் சட்டத்தை உடைப்பவராக ஆகி விடுகிறீர்கள். அந்த சின்ன தவறு எது? ஒரு எழுத்துப்பிழையால் ஏற்பட்ட தவறாகும். ஒரு எழுத்துப்பிழையால் லா மேக்கருக்கு பதிலாக லா பிரேக்கராக ஆகி விடுகிறார்கள். அந்த ஒரு பிழையின் வித்தியாசத்திற்குரிய வார்த்தை "சிவம்" என்பதற்கு பதிலாக 'சவம்" என்று பார்க்கிறீர்கள். சவத்தை பார்ப்பதினால் சிவத்தை மறந்து விடுகிறீர்கள். சிவம் வார்த்தை மாறி "விஷம்" ஆகி விடுகிறது. 'விஷம்' விகாரங்களின் விஷமாகும். ஒரு எழுத்துப்பிழை வித்தியாசத்தினால் தலைகீழாக ஆகி விடுவதினால் விஷம் நிரம்பி விடுகிறது. அதன் விளைவு கூட அப்படியே வெளிப்படுகிறது. தவறுதல் ஆகி விட்டால் விளைவு கூட அவசியம் தவறானது தான் வெளியாகும். எனவே ஒருபொழுதும் சத்தைப் பார்க்காதீர்கள் அதாவது இந்த உடலைப் பார்க்காதீர்கள். இதைப் பார்ப்பதினால் மற்றும் உடல் உணர்வில் இருப்பதினால் சட்டம் மீறப்படுகிறது. ஒருவேளை இந்த சட்டத்தில் அதாவது சவத்தைப் பார்க்கக்கூடாது சிவனைப் பார்க்க வேண்டும் என்பதில் எப்பொழுதும் தன்னைத் தானே நிலைத்திருக்கச் செய்தீர்கள் என்றால் ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் தோல்வி ஏற்பட முடியாது. மாயா உங்கள் மேல் போரிடாது. எப்பொழுது மாயா போரிடுகிறது என்றால் தோல்வி ஏற்படுகிறது. ஒருவேளை மாயா போரிடவே இல்லை என்றால் தோல்வி எப்படி ஏற்படும். எனவே தன்னைத்தானே தந்தை மேல் ஒவ்வொரு எண்ணத்திலும் பலியானவராக ஆக்குங்கள். எண்ணத்தில் கூட ஒருவேளை தந்தை மேல் பலியானவராக இல்லை என்றால் எண்ணம் காரியத்தில் வந்து தோல்வியை கொடுத்து விடுகிறது எனவே ஒருவேளை தன்னை சட்டத்தை உருவாக்குபவர் என்று நினைக்கிறீர்கள் என்றால் ஒருபொழுதும் இந்த சட்டத்தை மீறாதீர்கள்.

இப்பொழுது என்ன எண்ணம் உருவானதோ அது தந்தை மேல் பலியாவதற்கு தகுதியானதாக இருக்கிறதா? என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை வீணான எண்ணம், தீய எண்ணம் இருக்கிறது என்றால் தந்தை மேல் பலி ஆக முடியாது. தந்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது. உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை முன்பு என்ன காணிக்கை கொடுக்க வேண்டும் என்பதையோ புரிந்திருக்கிறீர்கள் இல்லையா.

ஒவ்வொரு எண்ணத்திலும் உயர்ந்ததை நிரப்பிக் கொண்டே செல்லுங்கள், ஒவ்வொரு எண்ணத்தையும் தந்தை மற்றும் தந்தையின் காரியத்தில் காணிக்கையாக அளித்துக் கொண்டே செல்லுங்கள் பின்பு ஒருபொழுதும் தோல்வி அடைய முடியாது. ஏதாவது வீணானது மற்றும் அசுத்த எண்ணம் இப்பொழுது இருந்தாலும் அதற்கான வெளிப்படையான ரூபத்தில் எந்த தண்டனையும் கிடைப்பதில்லை ஆனால் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு செய்த காரியத்தின் விஷயத்தை விட்டு விடுங்கள் ஆனால் அசுத்த மற்றும் வீணான எண்ணம் என்ன இருந்ததோ அதன் மூலம் செய்த கர்மத்தின் விளைவாக வெளிப்படையான தண்டனையின் அனுபவத்தையும் செய்வீர்கள். ஏனென்றால் எப்பொழுது வீணான எண்ணத்தை உருவாக்குகிறீர்கள் என்றால் எண்ணமும் பொக்கிஷமாகும். பொக்கிஷத்தை யார் வீணாக இழக்கிறாரோ அவருடைய நிலைமை என்னவாகிறது? வீணாக செல்வத்தை இழப்பவருடைய முடிவு என்னவாகிறது? திவாலா ஆகி விடுகிறார். அதே போல் இந்த உயர்ந்த எண்ணங்களின் பொக்கிஷத்தை வீணாக இழந்து இழந்து தந்தை மூலமாக என்ன ஆஸ்தி பிராப்தி ஆக வேண்டுமோ அந்த பிராப்தியின் அனுபவம் இருப்பதில்லை. எப்படி யாராவது திவாலா கொடுக்கிறார் என்றால் அவருடைய நிலைமை என்னவாகி விடுகிறது. அந்த மாதிரி நிலையின் அனுபவம் ஏற்படும் எனவே இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் மிக எச்சரிக்கையோடு செல்ல வேண்டும். ஏனென்றால் இப்பொழுது யாத்திரிகர் வந்து வந்து உயர்ந்த இலக்கில் வந்து அடைந்து விட்டார். அப்படியானால் உயர்ந்த இலக்கில் ஒவ்வொரு அடியிலும் மிகுந்த கவனம் வைப்பதற்கான அவசியம் இருக்கிறது. ஒவ்வொரு அடியிலும் சோதனை செய்வதற்கான அவசியம் இருக்கிறது. ஒருவேளை ஒரு அடியில் கூட கவனம் குறைவாக இருந்தது என்றால் முடிவாக என்னவாகும்? உயர்ந்த இடத்திற்கு பதிலாக கால்கள் வழுக்கி வழுக்கி கீழே வந்து விடுவார்கள். அப்படியானால் தற்சமயம் இவ்வளவு கவனம் இருக்கிறதா அல்லது கவனக்குறைவு இருக்கிறதா? முந்தைய காலம் வேறாக இருந்தது அந்த காலம் கடந்து சென்று விட்டது. இப்பொழுது இரக்க மனமுடையவராக இல்லை. ஒருவேளை இதுவரையிலும் இரக்க மனமுடையவராக ஆகிக் கொண்டே இருந்தோம் என்றால் ஆத்மாக்கள் தன் மேல் இரக்க மனமுடையவராக ஆக முடியாது. எப்பொழுது தந்தை இவ்வளவு உயர்ந்த நிலையின் எச்சரிக்கை கொடுத்தால் தானே குழந்தைகளும் தன் மேல்

இரக்க மனமுடையவராக ஆக முடியும். எனவே இந்தக் காரணத்தினால் இப்பொழுது தந்தையோ இரக்க மனமுடையவர் எனவே என்னென்ன நடந்ததோ அதன் மேல் தந்தை இரக்கம் காட்டிவிடுவார் என்று அப்படி நினைக்காதீர்கள், இல்லை. இப்பொழுதோ ஒரு தவறுக்கு ஆயிரம் மடங்கு தண்டனையின் கணக்கை முடிக்க வேண்டும். எனவே இப்பொழுது கொஞ்சம் கூட தவறு செய்வதற்கான நேரம் இல்லை. இப்பொழுது முற்றிலும் தன்னுடைய ஒவ்வொரு அடி மே சரிக்கை வைத்துக் ண்டே ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானம் செய்து கோடீஸ்வரனாக ஆகுங்கள். பல கோடி மடங்கு பாக்கியசாலி என்ற பெயர் இருக்கிறது இல்லையா. எனவே எப்படி பெயரோ அப்படியே காரியமும் இருக்க வேண்டும். ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானம் செய்து பலமடங்கு செல்வந்தராக ஆகியிருக்கிறேனா என்று பாருங்கள். ஒருவேளை பலமடங்கு செல்வந்தன் ஆகவில்லை என்றால் பலகோடி மடங்கு பாக்கியசாலி என்று எப்படி கூற முடியும். ஒரு அடி கூட பலமடங்கு வருமானம் இன்றி செல்ல வேண்டாம். அந்த மாதிரி சோதனை செய்கிறீர்களா அல்லது அனேக அடிகள் வீணாக சென்ற பிறகு உணர்வு வருகிறதா? எனவே இருந்தாலும் முன்பாகவே எச்சரிக்கை செய்கிறார்.

கடைசியின் சொரூபம் சக்தி நிலைக்கானது. சக்தி ரூபம் இரக்க மனமுடையதற்கானதாக இருப்பதில்லை. சக்தியை எப்பொழுதும் சம்ஹாரம் செய்யும் ரூபத்தில் காண்பிக்கிறார்கள். அப்படி சம்ஹாரத்தின் சமயம் இப்பொழுது அருகில் வந்து கொண்டிருக்கிறது. சம்ஹாரத்தின் நேரத்தில் இரக்க மனமுடையவராக ஆவதாக இருப்பதில்லை. சம்ஹாரத்தின் நேரத்தில் சம்ஹாரம் செய்பவரின் ரூபம் தாரணை செய்யப்படுகிறது எனவே இப்பொழுது இரக்க மனமுடைய பாகம் முடிவடைந்தது. தந்தையின் சம்மந்தத்தில் குழந்தைகளைக் கவனக்குறைவு, செல்லமாக நடந்து கொள்வது அனைத்தையும் பார்த்துக் கொண்டே முன்னேறச் செய்தோம் ஆனால் இப்பொழுது எந்த முறையிலாவது தூய்மையாக்கி சத்குருவின் ரூபத்தில் உடன் அழைத்துச் செல்வதற்கான பாகமாகும். அப்படி தந்தை குழந்தைகளின் செல்லமாக நடந்து கொள்வது மற்றும் கவனக்குறைவை பார்த்து இருந்தும் அன்பாக புரிய வைத்து நடத்தி சென்று கொண்டிருக்கிறார். அந்த ரூபம் சத்குருவினுடையதாக இருப்பதில்லை. சத்குருவின் ரூபம் எப்படி சத்குரு இருக்கிறார் அப்படி சத்திய எண்ணம், சத்திய வார்த்தை, சத்திய காரியம்

உருவாக்கக்கூடியவர். பிறகு இதை ஞானம் மூலமாகவோ முயற்சி மூலமாகவோ உருவாக்கட்டும், அல்லது தண்டனை மூலமாகவோ உருவாக்கட்டும். சத்குரு செல்லமாக நடந்து கொள்வது மற்றும் கவனக்குறைவை பார்க்கக் கூடியவர் இல்லை எனவே இப்பொழுது நேரம் மற்றும் தந்தையின் ரூபத்தை தெரிந்து கொள்ளுங்கள். தந்தையின் இந்தக் கடைசி சொரூபத்தை தெரிந்து கொள்ளாமல் தன்னுடைய குழந்தைத் தனத்தின் அலட்சியத்தில் வந்து தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டு அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்று அப்படி ஆகி விட வேண்டாம். எனவே மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சக்திகளுக்கு இப்பொழுது தன்னுடைய சம்ஹாரி ரூபத்தை தாரணை செய்ய வேண்டும். எந்தவொரு அசுர சம்ஸ்காரம் உடையவரும் சக்திகளை எதிர்க்க முடியாது என்று பக்தியில் காண்பித்திருக்கிறார்கள், அசுர சம்ஸ்காரம் உடையவர்கள் சக்திகளின் எதிரில் கண்களை உயர்த்தி பார்க்கக் கூட முடியாது. எனவே அந்த மாதிரி சம்ஹாரி ரூபம் உடையவர் ஆகி தன்னுள்ளும் அசுர சம்ஸ்காரங்களை சம்ஹாரம் செய்யுங்கள் மற்றும் மற்றவர்களுடைய அசுர சம்ஸ்காரத்தையும் சம்ஹாரம் செய்யக்கூடிய சம்ஹாரி மூர்த்தி ஆகுங்கள். அந்த மாதிரி தைரியம் இருக்கிறதா? தாய் ரூபத்தில் இரக்கம் வந்து விடுகிறது, சக்தி ரூபத்தில் இரக்கம் வருவதில்லை. தாயாகி அதிகமாக பாலனை செய்திருக்கிறீர்கள் மேலும் தாய் எதிரே குழந்தைகள் கொஞ்சுதல் செய்யவும் செய்கிறார்கள். சக்திகளின் எதிரே அலட்சியத்தை காண்பிப்பதற்கு யாருக்கும் தைரியம் இருப்பதில்லை. தனக்காகவும் இப்பொழுது சம்ஹாரி ஆகுங்கள். அசுர சம்ஸ்காரம் எண்ணத்தில் கூட இருக்க முடியாத அளவிற்கு அந்த மாதிரி நிலையை உருவாக்குங்கள். இதைத் தான் ஒரே பார்வையில் அசுரனை அழிப்பவள் என்று கூறப்படுகிறது.

எண்ணங்களை மாற்றம் செய்வதில் எவ்வளவு நேரம் எடுக்கிறது? ஒரு நொடி மேலும் பார்வையால் பார்ப்பதற்கு எவ்வளவு நேரம் எடுக்கிறது. ஒரு நொடி அப்படி பார்வையினால் அசுரனை சம்ஹாரம் செய்யக்கூடிய அதாவது ஒரு நொடியில் அசுர சம்ஸ்காரங்களை பஸ்மம் செய்யக்கூடியவராக ஆகியிருக்கிறீர்களா? அல்லது அசுர சம்ஸகாரங்களில் வசமாகி விடுகிறீர்களா? அசுர சம்ஸ்காரங்களின் வசமாகி விடுபவர்களை எந்த சம்பிரதாயத்தை சேர்ந்தவர் என்று சொல்லப்படும்? நீங்கள் யார்? (ஈஸ்வரிய சம்பிரதாயத்தை சேர்ந்தவர்கள்)

அப்படியானால் ஈஸ்வரிய சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்களிடம் அசுர சம்ஸ்காரம் வரக்கூடாது. இப்பொழுது அசுர சம்ஸ்காரம் வருகிறதா அல்லது பஸ்மம் ஆகி விட்டதா? (வருகிறது.) அப்படியானால் பிறகு என்ன ஆகி விடுகிறீர்கள்? தன்னுடைய ரூபத்தை மாற்றி மாறுவேடம் உடையவராக ஆகி விடுகிறீர்களா என்ன? இந்த நேரம் ஈஸ்வரிய சம்பிரதாயம் அடுத்த நேரம் அசுர சம்ஸ்காரங்களின் வசமாகி விடுகிறீர்கள் என்றால் என்னவாகி விடுகிறீர்கள். வேறு வேடம் போட்டவராக ஆகி விடுகிறீர்கள் இல்லையா. ஒருவேளை இப்பொழுதே தன்னிடத்தில் இருந்து அசுர சம்ஸ்காரங்களை பஸ்மம் செய்வதற்கான தைரியம் வைத்து சம்ஹாரி ரூபமாக ஆனீர்கள் என்றால் பாராட்டுக்கள் உரித்தாகுக. சூட்சும தண்டனைகளின் கூடவே ஸ்தூல தண்டனைகளும் இருக்கும் என்ற இதை இப்பொழுது கவனம் வையுங்கள். சூட்சும தண்டனையையோ தனக்குள் அனுபவித்து அழித்து விடுவோம் என்று அப்படி நினைக்காதீர்கள். சூட்சும தண்டனைகள் சூட்மத்தில் கிடைத்து கொண்டிருக்கிறது மேலும் நாளாக நாளாக அதிகமாக கிடைத்துக் கொண்டேயிருக்கும் ஆனால் ஈஸ்வரிய மரியாதைகளின்படி யாராவது ஒருவேளை மரியாதைக்கு புறம்பான காரியம் செய்கிறார்கள் மரியாதையை மீறுகிறார்கள் என்றால் அந்த மாதிரி மரியாதைக்கு புறம்பாக நடந்து கொள்பவர்களுக்கு ஸ்தூல தண்டனையையும் அனுபவிக்க வேண்டியதாக இருக்கும் என்றால் பின்பு என்னவாகும். தன்னுடைய தெய்வீக பரிவாரத்தின் அன்பு, சம்மந்தம் மேலும் தற்சமயம் என்ன செல்வத்தின் பொக்கிஷம் இருக்கிறதோ அதிலிருந்து வஞ்சிக்கப்பட வேண்டியதாக இருக்கும். எனவே இப்பொழுது மிகவும் யோசித்து, புரிந்து அடியெடுத்து வைக்க வேண்டும். அந்த மாதிரியான சட்டங்கள் சக்திகள் மூலமாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முன்பாகவே எச்சரிக்கை செய்ய வேண்டியதாக இருக்கிறது இல்லையா. பின்பு அப்படியோ நாங்கள் நினைக்கவில்லை, இதுவோ புதிய விஷயமாகி விட்டது என்று அப்படி கூறாதீர்கள். எனவே முன்பாகவே கூறிக் கொண்டிருக்கிறோம். சூட்சும சட்டங்களின் கூடவே ஸ்தூல சட்டங்களும் நியமங்களும் இருக்கின்றன. எப்படி எப்படி தவறோ அதன் பிரகாரம் அந்த மாதிரி தவறு செய்பவர்களுக்கு தண்டனை இருக்கிறது. எனவே சட்டத்தை உருவாக்குபவராக இருக்கிறீர்கள் என்றால் சட்டத்தை உடைக்காதீர்கள். ஒருவேளை சட்டத்தை உருவாக்குபவரும் சட்டத்தை உடைக்கிறார் என்றால் பின்பு சட்டப்படி ராஜ்யம் செய்வதற்கான

அதிகாரியாக யார் ஆவார்கள். யார் தன்னையே சட்டப்படி நடத்து விக்க முடியவில்லையோ அவர் சட்டப்படி ராஜ்யத்தை எப்படி நடத்த முடியும். எனவே இப்பொழுது தன்னை சட்டத்தை உருவாக்குபவர் என்று புரிந்து ஒவ்வொரு அடியும் சட்டப்படி எடுத்து வையுங்கள் அதாவது ஸ்ரீமத்படி எடுத்து வையுங்கள். மனம் சொல்லும் வழியை கலக்காதீர்கள். மாயா ஸ்ரீமத்தை மாற்றி மனம் சொல்லும் வழியை கலந்து அதையே ஸ்ரீமத் என்று புரிந்து கொள்வதற்கான புத்தியை கொடுக்கிறது. மாயாவின் வசமாகி மனம் சொல்லும் வழியையும் ஸ்ரீமத் என்று புரிய ஆரம்பிக்கிறார்கள் எனவே பகுத்தறியும் சக்தியை எப்பொழுதும் காரியத்தில் கொண்டு வாருங்கள். எங்காவது பகுத்தறிதலிலும் வித்தியாசம் இருக்கும் காரணத்தினால் தனக்குத் தானே நஷ்டத்தை ஏற்படுத்திக் கொள்கிறார்கள் எனவே எங்காவது ஒருவேளை தான் பகுத்தறிய முடியவில்லை என்றால் நிமித்தமாகியிருக்கும் உயர்ந்த ஆத்மாக்கள் அவர்களின் சகயோகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் மூலமாக இது ஸ்ரீமத்தா அல்லது மனம் சொல்லும் வழியா என்று பகுத்தறிந்து கொள்ளுங்கள். பின்பு நடைமுறையில் கொண்டு வாருங்கள். நல்லது. அந்த மாதிரி சட்டப்படியும் அன்பு நிறைந்தும் அப்படி இரண்டையுமே சேர்த்தே வைத்து நடந்து கொள்ளக்கூடிய அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு நமஸ்காரம்.

**வரதானம்: ஒவ்வொரு ஆத்மாவையும் உயர்வாக தூக்கி விடும் பாவனையோடு மரியாதை கொடுக்கக்கூடிய நற்சிந்தனையாளர் ஆகுக!**

ஒவ்வொரு ஆத்மாவிற்காக உயர்ந்த பாவனை அதாவது உயரே தூக்கி விடக்கூடிய மற்றும் முன்னேற்றம் செய்விக்கும் பாவனை வைப்பது என்றால் நற்சிந்தனையாளர் ஆவது. தன்னுடைய நல்ல உள்உணர்வு மூலமாக நற்சிந்தனையாளர் நிலை மூலமாக மற்றவர்களின் அவகுணங்களையும் மாற்றம் செய்வது, யாருடைய பலஹீனத்தையும் மற்றும் அவகுணத்தையும் தன்னுடைய பலஹீனம் என்று புரிந்து வர்ணனை செய்வதற்கு பதிலாக மற்றும் பரப்புவதற்கு பதிலாக உள்ளடக்கி மற்றும் மாற்றம் செய்வது இது தான் மரியாதை ஆகும். பெரிய விஷயத்தை சிறியதாக ஆக்குவது, மனமுடைந்தவரை சக்தி நிறைந்தவராக ஆக்குவது, அவருடைய தொடர்பின் பாதிப்பில் வராமல்

இருப்பது எப்பொழுதும் அவரையும் ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வருவது இது தான் மரியாதை ஆகும். அந்த மாதிரி மரியாதை கொடுப்பவர் தான் நற்சிந்தனையாளர் ஆவார்.

**சுலோகன்: தியாகத்தின் பாக்கியத்தை அழிக்கக்கூடியது பழைய சுபாவம், சம்ஸ்காரம் ஆகும் எனவே இதையும் தியாகம் செய்யுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 09.05.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தன்னுடைய முகத்தோற்றத்தின் மூலமாக எதிர்காலத்தை காண்பியுங்கள்!

அனைவரும் எப்பொழுதும் அன்பானவர்களாக இருக்கிறீர்களா? எப்படி பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளின் அன்பானவராகவும் சகயோகியாகவும் இருக்கிறாரோ, அனைத்து ரூபங்களிலும் அனைத்து விதங்களிலும் எப்பொழுதும் அன்பானவராகவும் சகயோகியாகவும் இருக்கிறாரோ, அதே போல் குழந்தைகளும் அனைத்து விதங்களிலும் தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் அன்பானவராகவும் சகயோகியாகவும் இருக்கிறீர்களா? யாருடைய ஒரு வினாடி கூட தந்தையுடனான அன்பு துண்டிக்கப்படாமல் இருக்கிறதோ மேலும் ஒரு வினாடி, ஒரு எண்ணம் கூட தந்தையின் உதவியாளராக ஆவதைத் தவிர வேறு விதமாக செல்லாமல் இருக்கிறதோ அவரைத் தான் எப்பொழுதும் சகயோகி மற்றும் எப்பொழுதும் அன்பானவர் என்று கூற முடியும். அப்படி தன்னை எப்பொழுதும் அன்பானவர் மற்றும் சகயோகி என்று நினைக்கிறீர்களா மற்றும் அனுபவம் செய்கிறீர்களா? பாப்தாதாவின் அன்பின் நிரூபணம் வெளிப்படையான அடையாளம் தென்படுகிறதா? அப்படி குழந்தைகளில் கூட யார் தந்தைக்குச் சமமானவர்களாக இருக்கிறார்களோ அவர்களுடைய அன்பு மற்றும் சகயோகத்தின் நிரூபணம் மற்றும் வெளிப்படையான அடையாளம் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அன்பான ஆத்மாவின் அன்பை ஒருபொழுதும் மறைக்க முடியாது. எவ்வளவு தான் ஒருவர் தன்னுடைய அன்பை மறைக்க விரும்பினாலும் அன்பு ஒருபொழுதும் மறைவாக இருப்பதில்லை. அன்பு ஏதாவது ரூபத்தில், ஏதாவது காரியம் மூலமாக மற்றும் முகம் மூலமாக அவசியம் தென்படுகிறது. எனவே தன்னுடைய முகம் என்ற கண்ணாடியில் என்னுடைய முகம் மூலமாக அன்பான தந்தையின் முகம் தென்படுகிறதா என்று பார்க்க வேண்டும். எப்படி தன்னுடைய முகத்தை ஸ்தூலமான

கண்ணாடியில் பார்க்கிறீர்களோ அதே போல் அமிர்தவேளையில் தன்னைத்தானே இந்த சூட்சும கண்ணாடியில் பார்க்கிறீர்களா? எப்படி லட்சணங்கள் மூலமாக ஒவ்வொரு ஆத்மாவின் லட்சியம் என்னவென்று தெரிந்து விடுகிறது மற்றும் எப்படி லட்சியம் இருக்கிறதோ அப்படி லட்சணமும் தானாகவே ஆகி விடுகிறது. எனவே தன்னுடைய லட்சணங்கள் மூலமாக லட்சியத்தை பிரத்யக்ஷ (வெளிப்படையான) ரூபத்தில் எவ்வளவு காண்பிக்கிறீர்கள் என்று தன்னைத்தானே சோதனை செய்கிறீர்களா? எந்தவொரு ஆத்மாவையும் தன்னுடைய லட்சணங்கள் மூலமாக அந்த ஆத்மாவின் மற்றும் தன்னுடைய எதிர்காலத்தைக் காண்பிக்க முடியும். லெக்சர் (சொற்பொழிவு) மூலமாக ஃபீச்சர்ஸ் (லட்சணங்கள்) காண்பிப்பது பொதுவான விஷயம் ஆனால் ஃபீச்சர்ஸ் மூலமாக ப்யூச்சரைக் (எதிர்காலத்தை) காண்பிப்பது இது தான் ஆன்மீக ஆத்மாக்களின் ஆன்மீகத் தன்மை ஆகும். அந்த மாதிரி என்னுடைய லட்சணங்கள் ஆகியிருக்கிறதா என்று கண்ணாடியில் பார்க்கிறீர்களா? எப்படி ஸ்தூல முகம் இருக்கிறது. ஒப்பனை மூலமாக ஒருவேளை யாராவது முகத்தைப் பார்க்கிறார் என்றால் முதலில் விசேஷ கவனம் பிந்தியின் (திலகம்) மேல் செல்லும், அதே போல் யார் பிந்தி சொரூபத்தில் நிலைத்திருக்கிறார்கள். அதாவது தன்னை இந்த தாரணைகளின் அலங்காரத்தினால் ஒப்பனை செய்து கொள்கிறார்கள் அப்படி அலங்கரிக்கப்பட்டவரின் பக்கம் பார்த்துக் கொண்டே அனைவரின் கவனம் எங்கே செல்லும்? நெற்றியில் ஆத்மா பிந்தியின் மேல் செல்லும். அதே போல் எந்தவொரு ஆத்மா உங்கள் எதிரில் வருகிறது என்றால் அவருடைய கவனம் உங்களுடைய அழியாத திலகத்தின் பக்கம் கவரப்படட்டும். அதுவும் எப்பொழுது தானே திலகதாரியாக (திலகம் இடப்பட்டவராக) இருக்கிறாரோ அப்பொழுது தான் ஏற்படும். ஒருவேளை தானே திலகதாரியாக இல்லை என்றால் மற்றவர்களுக்கு உங்களுடைய அழியாத திலகம் தென்பட முடியாது.

யார் அன்பின் பழக்கத்தை கடைபிடித்தாரோ மற்றும் அன்பான புத்தியுடையவராக ஆனாரோ அந்த மாதிரி அன்பாக இருக்கும் குழந்தைகளுக்கு முழு உலகத்தின் அனைத்து சுகங்களின் பிராப்தி நிரந்தரமாக கிடைத்து விடுகிறது. மற்ற அனைவரையும் முக்திதாமத்தில் அமரச் செய்து அன்பை வெளிப்படுத்தும் குழந்தைகளுக்கு உலக ராஜ்ய பாக்கியத்தை பிராப்தி செய்விக்கிறார். பார்க்கப் போனால் முழு

உலகத்தின் ஆத்மாக்களும் குழந்தைகள் தான், ஆனால் மற்ற அனைத்து ஆத்மாக் அற்ப காலத்தின் சுகம் பிராப்தி ஆகிறது மற்றும் அன்பாக நடந்து கொள்ளும் குழந்தைகளுக்கு சதா காலத்திற்கு பிராப்தி ஏற்படுகிறது. அந்த மாதிரி அன்பான குழந்தைகளைத் தவிர வேறு யாருக்குமே அனைத்து உறவுகளினால் அனைத்து பிராப்தியின் பங்கு இல்லை. அன்பாக நடந்து கொள்ளும் குழந்தைகளுக்கு தந்தையும் இரவு பகலாக அவர்களுடைய குணத்தை மகிமை பாடிக் கொண்டிருக்கிறார். யார் மீதாவது அதிகமாக அன்பு இருக்குமேயானால் அந்த அன்பிற்குரியவருக்காக மற்ற அனைவரையும் ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டு அனைத்தையும் அவருக்காக அர்ப்பணம் செய்கிறார்கள். இது அன்பின் அடையாளமாகும். எனவே எப்பொழுதும் அன்பிற்குரிய மற்றும் சகயோகி குழந்தைகளைத் தவிர மற்ற அனைத்து ஆத்மாக்களையும் முக்தி தாமத்தில் ஓரமாக ஒதுக்கி வைத்து விடுகிறார். ஆக, எப்படி தந்தை அன்பின் வெளிப்படையான நிரூபணத்தை காண்பித்துக் கொண்டிருக்கிறாரோ அதே போல் தன்னைத் தானே கேளுங்கள் - அனைத்து உறவு, அனைத்து கவர்ச்சி செய்யக் கூடிய பொருட்களை தன்னுடைய புத்தியில் இருந்து ஓரமாக ஒதுக்கி வைத்து விட்டாகி விட்டதா? அனைத்து ரூபங்களிலும் அனைத்து உறவுகளினாலும் ஒவ்வொரு விதத்திலும் அனைத்தையும் தந்தையிடம் அர்ப்பணம் செய்தாகி விட்டதா? தந்தையின் காரியம் தவிர வேறு ஏதாவது வீணா காரியத்தில் ஒரு விநாடி கூட தன்னுடைய சகயோகத்தைக் கொடுக்கவில்லையே? ஒருவேளை அன்பு அதாவது யோகா இருக்கிறது என்றால் சகயோகமும் இருக்கிறது. எங்கு யோகா இருக்கிறதோ அங்கு சகயோகமும் இருக்கிறது. ஒரு தந்தையுடன் தான் யோகா இருக்கிறது என்றால் சகயோகம் கூட ஒருவருடன் மட்டும் தான் இருக்க வேண்டும். யோகி என்றால் சகயோகி. அப்படி சகயோகத்தின் மூலம் யோகாவைப் பார்க்க முடியும். யோகா மூலமாக சகயோகத்தைப் பார்க்க முடியும். ஒருவேளை ஏதாவது வீணான காரியத்தில் சகயோகி ஆகிறீர்கள் என்றால் தந்தையினுடைய சகயோகியாக எப்பொழுதும் ஆகியிருக்கிறீர்களா? முதன் முதலில் என்ன உறுதிமொழி செய்திருந்திருக்கிறீர்களோ அதை நினைவில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு காரியமும் செய்கிறீர்களா? சில நேரம் பக்தர்கள் மாதிரி குழந்தைகள் நீங்களும் தந்தையை ஏமாற்றுவது இல்லையே? பக்தர்களைப் பற்றியோ பக்தன் ஏமாற்றுபவன் என்று கூறுகிறீர்கள்

இல்லையா? அப்படி நீங்களும் கூட ஏமாற்றுபவர்களாக ஆவதில்லையே ஒருவேளை உன்னுடையதை என்னுடையது என்று புரிந்து காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்கள் என்றால் ஏமாற்றுபவர்கள் ஆனீர்கள் இல்லையா? சொல்வது ஒன்று மற்றும் செய்வது இன்னொன்று, இதை என்னவென்று கூறுவது? சொல்வதோ உடல், மனம், பொருள் அனைத்தும் உன்னுடையது என்று தான் கூறுகிறீர்கள் இல்லையா? எப்பொழுதும் உன்னுடையது ஆகி விட்டது என்றால் பின்பு அதன் மேல் உங்களுடைய அதிகாரம் எங்கிருந்து வந்தது? எப்பொழுது அதிகாரம் இல்லையோ அதை தன்னுடைய மனம் சொல்லும் வழியில் எப்படி காரியத்தில் ஈடுபடுத்த முடியும். எண்ணத்தை, நேரத்தை, மூச்சை, ஞான செல்வத்தை, ஸ்தூல உடலை ஒருவேளை ஏதாவது ஒரு பொக்கிஷத்தை மனம் சொல்லும் வழியில் வீணாக இழந்தீர்கள் என்றாலும் கூட ஏமாற்றுபவராக ஆகி விடுகிறீர்கள் இல்லையா? பல ஜென்மங்களின் சம்ஸ்காரங்களின் வசம் ஆகி விடுகிறார்கள். இந்த மாதிரி எதுவரை நடந்து கொண்டே இருக்கும். எந்த விஷயம் தனக்கே பிடிக்கவில்லை என்றால், எது எனக்கே பிடிக்கவில்லையோ அது தந்தைக்குப் பிடித்தமானதாக இருக்குமா? என்று யோசிக்க வேண்டும். எப்பொழுதும் அன்பிற்குரியவருக்கு எது மிக பிரியமான பொருளாக இருக்கிறதோ அதைத் தான் கொடுக்கப்படுகிறது. எனவே எந்த அளவிற்கு அன்பிற்குரியவரின் விருப்பப்படி நடந்து கொண்டிருக்கிறேன் என்று தன்னைத்தானே கேளுங்கள்.

தன்னை எப்பொழுதும் மிக உயர்ந்தவர் மற்றும் மிகவும் புனிதமானவர் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? யார் தன்னை மிக உயர்ந்தவர் என்று புரிந்து நடந்து கொள்கிறாரோ அவருடைய ஒவ்வொரு காரியம், ஒவ்வொரு வார்த்தையும் தந்தை எவ்வளவு உயர்வானவராக இருக்கிறாரோ அந்தளவே உயர்ந்ததாக இருக்கும். அதாவது உயர்ந்ததிலும் உயர்ந்ததாக இருக்கும். தந்தையின் மகிமையாக உயர்ந்தது அவருடைய பெயர், உயர்வானது அவருடைய இருப்பிடம், காரியம் உயர்வானது என்று பாடுகிறார்கள் இல்லையா? அப்படி யார் உயர்வானவராக இருக்கிறாரோ அவரும் எப்பொழுதும் தன்னுடைய உயர்ந்த பெயர் உயர்ந்த இருப்பிடம் மற்றும் உயர்ந்த காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கட்டும். எந்தவொரு கீழான காரியத்தை செய்யவே முடியாது. எப்படி யார் மகான் ஆத்மாவாக ஆகிறாரோ அவர் ஒருபொழுதும் யாருடைய எதிரிலும் தலைவணங்குவது கிடையாது. அவர்

எதிரில் அனைவரும் தலைவணங்குகிறார்கள். அப்பொழுது தான் அவரை மகான் ஆத்மா என்று அழைக்கப்படுகிறார்கள். யார் இன்றைய மகான் ஆத்மாக்களை விட மகானாக இருக்கிறார். உயர்ந்த ஆத்மாக்கள் தந்தையால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஆத்மாக்கள், உலக ராஜ்யத்தின் அதிகாரிகள், தந்தையின் ஆஸ்தியின் அதிகாரிகள், உலகத்திற்கு நன்மை செய்பவர்கள் அந்த மாதிரி ஆத்மாக்கள் எங்கேயும் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் மற்றும் மாயாவின் விதவிதமான கவர்ச்சி செய்யும் ரூபங்களில் தன்னைத்தானே தலைவணங்கி நிற்க முடியுமா என்ன? இன்றைய நாட்களில் மகாத்மாக்கள் என்று கூறப்படுபவர்கள் கூட மகான் ஆத்மாக்களாகிய உங்களை காப்பி செய்திருக்கிறார்கள். எனவே அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்கள் எங்கேயும் எந்த விதத்திலும் தலை வணங்க முடியாது. அவர்கள் தலைவணங்க வைப்பவர்களே அன்றி தலைவணங்குபவர்கள் அல்ல. எப்படிப்பட்ட மாயாவின் சக்தி இருந்தாலும் அதன் வசமாக முடியாது. அந்த மாதிரி மாயாவை எப்பொழுதும் அடிபணிய வைப்பவராக ஆகியிருக்கிறீர்களா? அல்லது அங்கங்கே அதற்கு அடிபணிந்து நிற்கிறீர்களா? எப்பொழுது இப்பொழுதிலிருந்தே நிரந்தரமாக அடிபணிய வைக்கும் நிலையில் நிலைத்திருக்கிறீர்களோ, அந்த மாதிரி உயர்ந்த சம்ஸ்காரத்தை தன்னுள் நிரப்புவீர்களோ அப்பொழுது தான் அந்த மாதிரி மிக உயர்ந்த பதவியை பிராப்தி செய்வீர்கள். அதனால் சத்யுகத்தில் பிரஜைகள் சுயமரியாதையில் தலைவணங்குவார்கள், மேலும் துவாபர்யுகத்தில் கேட்பவர்களாகி தலைவணங்குவார்கள். உங்களுடைய நினைவுச் சின்னங்களின் எதிரில் கூட பக்தர்கள் தலைவணங்கிக் கொண்டே இருக்கிறார்கள் இல்லையா? ஒருவேளை இங்கு எப்பொழுது மாயாவின் எதிரில் தலைவணங்கும் சம்ஸ்காரத்தை முடிக்கவில்லை என்றால், தலைவணங்கும் சம்ஸ்காரம் கொஞ்சமாவது இருந்து விடுகிறது என்றால் பின்பு தலைவணங்குபவர் தலைவணங்க வைப்பவரின் எதிரில் எப்பொழுதும் தலைவணங்கிக் கொண்டே இருப்பார். என்ன லட்சியம் வைத்திருக்கிறீர்கள். தலைவணங்குவதற்கா அல்லது தலைவணங்க வைப்பதற்கா? யார் தன்னாலேயே உருவாக்கப்பட்ட சூழ்நிலைகளின் எதிரில் தலைவணங்கி விடுகிறாரோ அவரை மிக உயர்ந்தவர் என்று கூற முடியுமா? எதுவரை மிக உயர்ந்தவராக ஆகவில்லையோ அதுவரை மிக தூய்மையானவராகவும் ஆக முடியாது, எப்படி உங்களுடைய எதிர்காலத்து நினைவுச்சின்னங்களின் மகிமையாக சம்பூர்ண நிர்விகாரி இருக்கிறது.

இதைத் தான் மிகவும் தூய்மையானவர் என்று கூறப்படுகிறது. சம்பூர்ண நிர்விகாரி என்றால் எந்த சதவிகிதத்திலும் எந்தவொரு விகாரத்தின் பக்கம் கவர்ச்சி செல்லக் கூடாது மற்றும் அதன் வசம் ஆகாமல் இருப்பதாகும். ஒருவேளை கனவில் கூட எந்த விதத்திலும் விகாரத்தின் வசம் ஆகியிருக்கிறார், எந்த சதவிகிதத்திலும் ஆகியிருக்கிறார் என்றால் சம்பூர்ண நிர்விகாரி என்று கூற முடியுமா? ஒருவேளை தீய கனவுகளும் இருக்கிறது மற்றும் எண்ணத்திலும் விகாரத்தின் வசமாகி இருக்கிறார் என்றால் விகாரத்தை விட்டு விலகியவர் இல்லை என்று தான் கூறுவோம். அந்த மாதிரி தன்னை சம்பூர்ண தூய்மையானவராக மற்றும் நிர்விகாரியாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்களா அல்லது ஆகி விட்டீர்களா? எந்த நேரம் கடைசி விசில் ஊதப்படுமோ அந்த நேரம் ஆவீர்களா? ஒருவேளை யாராவது வெகுகாலமாக அந்த மாதிரி நிலையில் நிலைத்திருக்கவில்லை என்றால் அந்த மாதிரி ஆத்மாக்களின் மகிமை கூட அற்ப காலத்திற்காக தான் இருக்கும். கடைசியில் வேகமாக சென்று இதே நிலையை அடைந்து விடுவோம் என்று அப்படி நினைக்காதீர்கள். வெகு காலம் என்பதின் மகிமை என்ன இருக்கிறது அதையும் நினைவில் வைத்துக் கொண்டே தன்னுடைய நிலையை மிகவும் தூய்மையானதாகவும் மற்றும் மிகவும் உயர்ந்ததாகவும் ஆக்குங்கள். எந்தவொரு எண்ணத்தை உருவாக்குகிறீர்கள் மற்றும் காரியம் செய்கிறீர்கள் என்றால் முதலில் எப்படி உயர்ந்த பெயரோ அப்படி காரியமும் உயர்ந்ததாக இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை பெயர் உயர்ந்தது மற்றும் காரியம் தாழ்ந்ததாக இருக்கிறது என்றால் என்னவாகும்? தன்னுடைய பெயரை கெடுத்துக் கொள்கிறீர்கள். எனவே அந்த மாதிரி எந்த காரியமும் நடக்க வேண்டாம் என்ற இந்த லட்சியத்தை வைத்து அந்த மாதிரி லட்சணத்தை தன்னுள் தாரணை செய்யுங்கள். எப்படி ஒருவேளை ஞானத்தின் விரோதமாக ஏதாவது ஒருபொருளை ஏற்றுக் கொள்கிறீர்கள் என்றால் ஞானி இல்லை அஞ்ஞானி என்று மற்றவர்களுக்குப் புரிய வைக்கிறீர்கள் இல்லையா? ஒருவேளை ஒரு தடவை கூட எந்த ஒரு நியமத்தை முழுமையான முறையில் பாலனை செய்யவில்லை என்றால் ஞானத்தின் விரோதமாக செய்தார் என்று கூறுகிறீர்கள் இல்லையா. அப்படி தன்னைத் தானே கூட அந்த மாதிரியே கேளுங்கள். ஒருவேளை ஏதாவது சாதாரண எண்ணத்தை உருவாக்குகிறீர்கள் என்றால் மிகவும் உயர்ந்தவர் என்று கூற முடியுமா? எனவே எண்ணம் கூட சாதாரணமானதாக இருக்க

வேண்டாம். எப்பொழுது எண்ணம் உயர்ந்ததாக ஆகி விடுகிறதோ பின்பு வார்த்தை மற்றும் காரியம் தானாகவே உயர்ந்ததாக ஆகி விடும். அந்த மாதிரி தன்னை ஹோலியஸ்ட் (மிகவும் தூய்மையானவர்), ஹையஸ்ட் (மிகவும் உயர்ந்தவர்), சம்பூர்ண நிர்விகாரியாக ஆக்குங்கள். விகாரத்தின் பெயர் அடையாளமே இருக்க வேண்டாம். எப்பொழுது பெயர், அடையாளமே இல்லை என்றால் பின்பு காரியம் எப்படி நடக்கும். எப்படி எதிர்காலத்தில் விகாரத்தின் பெயர், அடையாளம் இருப்பதில்லையோ அதே போல் மிக உயர்ந்தவராகவும் மற்றும் மிகவும் தூய்மையானவராகவும் இப்பொழுதிலிருந்தே ஆக்குங்கள். அப்பொழுது தான் அவை அனேக ஜென்மங்கள் உடன் வந்து கொண்டே இருக்கும். நல்லது, அந்த மாதிரி உயர்ந்த பெயர் மற்றும் உயர்ந்த காரியம் செய்பவர்களுக்கு நமஸ்காரம்.

**வரதானம்: நிரந்தர கவனம் மூலமாக வெற்றி மாலையில் உருளக் கூடிய வெகுகாலத்து வெற்றி அடைபவர் ஆகுக!**

வெகு காலத்து வெற்றி அடைபவர் வெற்றி மாலையின் மணியாக ஆகுகிறார். வெற்றி அடைபவராக ஆவதற்காக எப்பொழுதும் தந்தையை எதிரில் வையுங்கள். தந்தை என்ன செய்திருந்தாரோ அதைத் தான் நாமும் செய்ய வேண்டும். ஒவ்வொரு அடியிலும் தந்தையின் எண்ணம் எதுவாக இருந்ததோ அது தான் குழந்தைகளின் எண்ணம், தந்தையின் வார்த்தை எதுவாக இருந்ததோ அது தான் குழந்தைகளின் வார்த்தை என்றால் அப்பொழுது தான் வெற்றி அடைபவராக ஆவீர்கள். இந்த கவனம் சதா காலத்திற்கும் தேவையாக இருக்கிறது. அப்பொழுது தான் சதா காலத்தின் ராஜ்ய பாக்கியம் கிடைக்கும். ஏனென்றால் எப்படி முயற்சியோ அப்படி பிராப்தி கிடைக்கிறது. முயற்சியும் சதா காலத்திற்கு இருக்கிறது என்றால் ராஜ்ய பாக்கியமும் சதா காலத்திற்கு கிடைக்கிறது.

**சுலோகன்: சேவையில் எப்பொழுதுமே இதோ வந்தேன் ஐயா என்று கூறுவது தான் அன்பின் உண்மையான நிரூபணம் ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 10.05.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுவமானத்தில் (சுயமரியாதையில்) இருப்பதன் மூலம் ஃபர்மானத்தின் (பாபாவின் கட்டளைகள்) பாலனை!

சுவமானம் (சுயமரியாதை) மற்றும் ஃபர்மான் (கட்டளை) இரண்டிலும் இருந்து கொண்டும் மற்றும் நடந்து கொண்டிருக்கும் தைரியம் நிறைந்தவர் என்று தன்னை நினைக்கிறீர்களா? சுவமானத்திலும் எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும் மற்றும் கூடவே கட்டளைப்படியும் நடந்து கொண்டே இருக்க வேண்டும். இந்த இரண்டு விஷயங்களில் சரியாக இருக்கிறேன் என்று தன்னை நினைக்கிறீர்களா? ஒருவேளை சுவமானத்தில் நிலைத்திருக்கவில்லை என்றால் கட்டளைப்படி நடப்பதிலும் ஏதாவது குறை ஏற்பட்டு விடுகிறது. எனவே இரண்டு விஷயங்களில் தன்னைத் தானே யதார்த்த ரூபத்தில் நிலைத்திருக்கச் செய்து எப்பொழுதும் அந்த மாதிரி நிலையை உருவாக்க வேண்டும். தற்சமயத்தில் புருஷோத்தம சங்கமயுகத்தின் பிராமணர்கள் உங்களுடைய உயர்ந்ததிலும் உயர்ந்த சுவமானம் என்னவாக இருக்கிறதோ அதில் நிலைத்திருக்க வேண்டும். இந்த ஒரே ஒரு உயர்ந்த சுவமானத்தில் நிலைத்திருப் பதினால் விதவிதமான தேக அபிமானம் தானாகவே மற்றும் சுலபமாகவே முடிவடைந்து விடுகிறது. சில நேரம் சேவை செய்து கொண்டே மற்றும் தன்னுடைய முயற்சியை செய்து கொண்டே மிகச் சிறிய ஒரு வார்த்தையின் தவறை செய்து விடுகிறார்கள். அதன் மூலமாகத் தான் பின்பு அனைத்து தவறுகளும் ஏற்பட்டு விடுகின்றன. அனைத்து தவறுகளின் விதை ஒரு வார்த்தையின் பலஹீனம் ஆகும். அந்த வார்த்தை எது? சுவமானத்திலிருந்து 'சுவ' என்ற வார்த்தையை அகற்றி விடுகிறார்கள். சுவமானத்தை மறந்து விடுகிறார்கள். மான் -ல் (கௌரவத்தில்) வருவதினால் ஃபர்மான் -ஐ (கட்டளையை) மறந்து விடுகிறார்கள். கட்டளை என்னவாக இருக்கிறது. சுவமானத்தில் நிலைத்திருங்கள். அப்படியானால் மான் -ல்

(கௌரவத்தில்) வருவதினால் கட்டளை முடிவடைந்து விட்டது இல்லையா? இந்த ஒரு வார்த்தையின் தவறு ஏற்படுவதினால் அனேக தவறுகள் ஏற்பட்டு விடுகிறது. பின்பு கௌரவத்தில் வந்து பேசுவது, நடந்து கொள்வது, செய்வது அனைத்தும் மாறி விடுகிறது. ஒரு வார்த்தை மட்டும் துண்டிக்கப்படுவதினால் உண்மையான நிலை என்னவாக இருக்கிறதோ அதிலிருந்து துண்டிக்கப்பட்டு விடுகிறார்கள். அந்த மாதிரி நிலையில் வரும் காரணத்தினால் என்ன முயற்சி மற்றும் சேவை செய்கிறார் களோ அதனுடைய ரிசல்ட்டாக அதிக உழைப்பு செய்திருந்தும் பிரத்யட்க்ஷ பலன் குறைவாக கிடைக்கிறது என்பது தான் வெளியாகிறது. வெற்றி மூர்த்தியாக ஆக விரும்புவது, ஆக முடியாமல் ஆகி விடுகிறது மற்றும் வெற்றி மூர்த்தியாக ஆகாத காரணத்தினால் மற்றும் வெற்றியை பிராப்தி செய்யாத காரணத்தினால் பின்பு அதனுடைய ரிசல்ட்டாக என்ன இருக்கிறது? கடுமையாக உழைக்கிறார்கள் எனவே கொஞ்ச காலத்தில் களைப்படைந்து விடுகிறார்கள். உற்சாகம் குறைந்து குறைந்து சோம்பேறித்தனம் வந்து விடுகிறது. மேலும் எங்கு சோம்பேறித்தனம் வந்து விடுகிறதோ அங்கு அதனுடைய மற்ற துணைவர்களும் சுலபமாகவே வந்து விடுகிறார்கள். சோம்பேறித்தனம் தன்னுடைய அனைத்து கூட்டாளிகளுடன் சேர்ந்தே வருகிறது, தனியாக வருவதில்லை. எப்படி தந்தையும் தனியாக வருவதில்லை, தன்னுடைய குழந்தை களுடன் சேர்ந்தே பிரத்யக்ஷம் ஆகிறார். அதே போல் இந்த விகாரமும் தனியாக வருவதில்லை, துணைவர்களுடன் சேர்ந்தே வருகிறது. எனவே விகாரங்களின் பிரவேசம் ஆவதினால் அனேக கட்டளையை மீறும் காரணத்தினால் நிலை என்னவாகி விடுகிறது? ஏதாவது விஷயத்தின் ஆசை நிறைவேறாமல் இருந்து விடுகிறது. ஒரே ஒரு வார்த்தை துண்டிக்கப்பட்டதின் காரணத்தினால் தானும் திருப்தியாக இருப்பதில்லை, மற்றவர்களையும் திருப்திப்படுத்த முடிவதில்லை எனவே எப்பொழுதாவது தன்னுடைய முன்னேற்றத்திற்கான முயற்சி செய்கிறீர்கள் அல்லது சேவைக்காக ஏதாவது திட்டம் தீட்டி நடைமுறையில் கொண்டு வருகிறீர்கள் என்றால் திட்டம் தீட்டும் மற்றும் நடைமுறையில் கொண்டு வரும் நேரத்திலும் முதலில் தன்னை சுவமானத்தின் நிலையில் நிலைத்திருக்கச் செய்து பின்பு ஏதாவது திட்டம் தீட்டுங்கள் மற்றும் நடைமுறையில் கொண்டு வாருங்கள். நிலையை விட்டு விட்டு திட்டம் போடாதீர்கள். ஒருவேளை நிலையை விட்டு விட்டு திட்டம் தீட்டுகிறீர்கள் என்றால் என்னவாகி விடுகிறது? அதில் எந்த சக்தியும் இருப்பதில்லை.

சக்தியில்லாமல் அந்த திட்டத்தின் நடைமுறையில் என்ன பிரபாவம் இருக்கும்?

சேவையோ அதிகமாகச் செய்கிறீர்கள், விஸ்தாரத்தையோ அதிகமாகச் செய்து விடுகிறீர்கள், ஆனால் விதை ரூப நிலையை விட்டு விடுகிறீர்கள். விஸ்தாரத்தில் செல்வதினால் சாரத்தை அகற்றி விடுகிறீர்கள் எனவே இப்பொழுது சாரத்தை அகற்றாதீர்கள். விஸ்தாரத்தை உள்ளடக்க வேண்டும் என்றால் சார சொரூபத்தை உருவாக்கத் தெரியாதா? க்வான்ட்டிட்டியில் (அளவில்) சென்று விடுகிறீர்கள் ஆனால் தன்னுடைய க்வாலிட்டி (தரம்) வெளியாவதில்லை. தன்னுடைய மனநிலையிலும் எண்ணங்களின் க்வான்ட்டிட்டி இருக்கிறது. எனவே சேவையின் ரிசல்ட்டில் கூட க்வான்ட்டிட்டி இருக்கிறது, க்வாலிட்டி இல்லை. முழு மர ரூப விஸ்தாரத்தில் ஒரு விதைதான் சக்திசாலியானதாக இருக்கிறது இல்லையா? க்வான்ட்டிட்டியின் விதையில் ஒன்றாவது க்வாலிட்டியுடையதாக இருக்கிறது என்றால் இந்த விஸ்தாரத்தில் விதை ரூபத்தின் சமநிலை இருக்கிறது என்று அப்படியில்லை. தரமுள்ள சேவை செய்கிறீர்களா? விஸ்தாரத்தில் செல்வதினால் மற்றும் மற்றவர்களுக்கு நன்மை செய்து செய்து தன்னுடைய நன்மையையோ மறந்து விடவில்லையே? எப்பொழுது மற்றவர்களுக்காக அதிக அட்டென்ஷன் (கவனம்) கொடுக்கிறீர்கள் என்றால் தனக்குள்ளே டென்ஷன் இருக்கிறதா இல்லையா என்று அதை பார்ப்பதில்லையா? முதலில் தன்னுடைய டென்ஷன் மேல் அட்டென்ஷன் கொடுங்கள் பின்பு உலகத்தின் அனேக விதமான டென்ஷன்கள் என்னென்ன இருக்கிறதோ அதை அழிக்க முடியும். முதலில் தன்னைத் தானே பாருங்கள். முதலில் தன்னுடைய சேவை, தன்னுடைய சேவை செய்தீர்கள் என்றால் மற்றவர்களின் சேவை தானாகவே நடந்து விடுகிறது. தன்னுடைய சேவையை விட்டு மற்றவர்களின் சேவையில் ஈடுபட்டு விடுவதினால் நேரம் மற்றும் எண்ணத்தை அதிகமாக செலவழித்து விடுகிறீர்கள். இந்தக் காரணத்தினால் என்ன சேமிப்பாக வேண்டுமோ அதைச் செய்ய முடிவதில்லை. சேமிப்பாகாத காரணத்தினால் அந்த போதை, அந்த குஷி இருப்பதில்லை. இப்பொழுது சம்பாதித்தோம் மற்றும் இப்பொழுதே சாப்பிட்டோம் என்றால் அது அற்ப காலத்திற்கானதாக ஆகி விடுகிறது மற்றும் எது சேமிப்பாக இருக்கிறதோ அது எப்பொழுதும் உடன் இருக்கிறது. எனவே இப்பொழுது சேமிப்பு செய்வதையும் கற்றுக்

கொள்ளுங்கள். இந்த ஒரு ஜென்மத்திற்காக மட்டுமின்றி 21-ஜென்மங்களுக்காக சேமிக்க வேண்டும். ஒருவேளை இப்பொழுது சம்பாதித்தீர்கள் மற்றும் இப்பொழுதே சாப்பிட்டு விட்டீர்கள் என்றால் எதிர்காலத்தில் என்னவாக ஆவீர்கள். இப்பொழுது சம்பாதித்தீர்கள் மற்றும் இப்பொழுதே அனைவருக்கும் கொடுத்தீர்கள் என்று அப்படி இருக்க வேண்டாம். சாப்பிட்ட பிறகு உள்ளடக்கவும் (சேமிக்கவும்) வேண்டும், பின்பு அனைவருக்கும் கொடுக்க வேண்டும். சம்பாதித்தோம் மற்றும் மற்றவர்களுக்கும் கொடுத்து விட்டோம் என்றால் தன்னுள் சக்தி இருப்பதில்லை. என்ன கிடைத்ததோ அதை அனைவருக்கும் கொடுத்து விட்டேன் என்ற குஷி மட்டும் இருக்கும். தானம் செய்வதின் குஷி இருக்கிறது, ஆனால் அதை தன்னுள் உள்ளடக்குவதின் சக்தி இருப்பதில்லை. குஷியின் கூடவே சக்தியும் வேண்டும். சக்தியில்லாத காரணத்தினால் தடையற்றவராக இருக்க முடியாது, தடைகளைக் கடந்து செல்ல முடிவதில்லை. தடைகள் முழு ஈடுபாட்டைக் குலைத்து விடுகிறது. எனவே உள்ளடக்கும் சக்தியை தாரணை செய்ய வேண்டும்.

எப்படி குஷியின் ஜொலிப்பு முகத்தில் தென்படுகிறதோ அதே போல் சக்தியின் ஜொலிப்பும் தென்பட வேண்டும். சரள சிந்தனையாளராக அதிகமாக ஆகுங்கள் ஆனால் எவ்வளவு சரள சிந்தனையாளராக இருக்கிறீர்களோ அவ்வளவே சகித்துக் கொள்பவராகவும் இருக்கிறீர்களா? அல்லது சகித்துக் கொள்ளும் நிலை தான் சரளத்தன்மையா? சரளத்தன்மையின் கூடவே உள்ளடக்குவதின், சகித்துக் கொள்வதின் சக்தியும் தேவையாக இருக்கிறது. ஒருவேளை உள்ளடக்குவதற்கு மற்றும் சகித்துக் கொள்வதற்கு சக்தி இல்லை என்றால் சரளத்தன்மை மிகுந்த வெகுளி ரூபத்தை தாரணை செய்து விடுகிறது. மேலும் சில இடங்களில் வெகுளித்தன்மை மிகப் பெரிய நஷ்டத்தைச் செய்து விடுகிறது. எனவே அந்த மாதிரி சரளம் உள்ளவராக ஆகாதீர்கள். தந்தையையும் போலாநாத் (வெகுளியானவர்) என்று கூறுகிறீர்கள் இல்லையா? ஆனால் உள்ளடக்க முடியாத அளவிற்கு வெகுளி இல்லை. போலாநாத்தின் கூடவே சர்வ சக்திவானாகவும் இருக்கிறார் இல்லையா? போலாநாத் மட்டும் இல்லை எங்கு சக்தி சொரூபத்தை மறந்து வெகுளியாக மட்டும் ஆகி விடுகிறார்கள் என்றால் மாயாவின் குண்டடி பட்டுவிடுகிறது. தற்சமயம் வெகுளித்தன்மையின் காரணமாக மாயாவின் குண்டடி அதிகமாகப் பட்டுக் கொண்டு

இருக்கிறது. மாயா எதிர்கொள்வதற்கு முன்பேயே உங்களை நமஸ்காரம் செய்ய வேண்டும் அந்த மாதிரி நீங்கள் சக்தி சொரூபம் ஆக வேண்டும். எதிர்க்க முடியாமல் ஆகி விட வேண்டும். மிகுந்த எச்சரிக்கை உள்ளவராக, கவனமுள்ளவராக, புத்திசாலியானவராக இருக்க வேண்டும். தன்னுடைய உள்உணர்வு மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலையை சோதனை செய்யுங்கள். ஏதாவது ஒரு சுற்றுப்புறச் சூழ்நிலை உங்கள் உள்உணர்வை பலஹீனமாக ஆக்கவில்லையே? என்று தன்னைத் தானே பாருங்கள். எப்படிப்பட்ட சுற்றுப்புறச் சூழ்நிலையானாலும் தன்னுடைய சக்திசாலியான உள்உணர்வு சுற்றுப்புற சூழ்நிலையை மாற்றத்தில் கொண்டு வர முடியும். ஒருவேளை சுற்றுப்புறச் சூழ்நிலையின் பாதிப்பு உள்உணர்வில் வந்து விட்டது என்றால் இது தான் வெகுளித்தன்மை ஆகும். நான் சரியாகத்தான் இருக்கிறேன் ஆனால் சுற்றுப்புறச் சூழ்நிலையின் பாதிப்பு வந்து விட்டது என்று அந்த மாதிரியும் இருக்க வேண்டாம். எப்படிப்பட்ட விகாரம் நிறைந்த சுற்றுப்புறச் சூழ்நிலையாக இருந்தாலும் தன்னுடைய உள்உணர்வு விகாரமற்றதாக இருக்க வேண்டும். எப்பொழுது நாங்கள் பதீத பாவனிகள், தூய்மையில்லாதவர் களை தூய்மைப்படுத்தக் கூடியவர்கள் என்று கூறுகிறீர்களோ, எப்பொழுது ஆத்மாக்களை தூய்மைப்படுத்த முடியுமோ, அப்பொழுது சுற்றுப்புறச் சூழ்நிலையை தூய்மையில்லாத நிலையிலிருந்து தூய்மையானதாக ஆக்க முடியாதா என்ன? தூய்மைப்படுத்தக்கூடியவர் சுற்றுப்புறச் சூழ்நிலையின் வசமாவதில்லை ஆனால் சுற்றுப்புறச் சூழ்நிலை உள்உணர்வின் மேல் பிரபாவம் ஏற்படுத்தி விடுகிறது என்றால் இது தான் பலஹீனம்.

ஒவ்வொருவருக்கும் நான் என்னுடைய சக்திசாலியான உள்உணர்வு மூலமாக தூய்மையற்ற மற்றும் பலஹீனமான சுற்றப்புறச் சூழ்நிலை என்ன இருக்கிறதோ அதை அகற்ற வேண்டும் என்று புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் அகற்றக்கூடியவர்களேயன்றி வசமாகுபவர்கள் இல்லை. ஏதாவது தூய்மையற்ற சுற்றுப்புறச் சூழ்நிலையை வர்ணனையும் செய்யக்கூடாது. வர்ணனை செய்தீர்கள் என்றால் பழமொழி இருக்கிறது இல்லையா பாவத்தைப் பார்ப்பவர்கள் மீதும் பாவம் ஏற்பட்டு விடுகிறது. ஒருவேளை ஏதாவது பலஹீனம் மற்றும் தூய்மையற்ற சுற்றுப்புற சூழ்நிலையை வர்ணனையும் செய்கிறீர்கள் என்றால் இதுவும் பாவம் ஆகும். ஏனென்றால் அந்த நேரம் தந்தையை

மறந்து விடுகிறீர்கள். எங்கு தந்தை (நினைவு) மறந்து விடுகிறதோ அங்கு அவசியம் பாவம் நடக்கும். தந்தையின் நினைவு இருக்கிறது என்றால் பாவம் ஏற்பட முடியாது. எனவே வர்ணனையும் செய்யக்கூடாது. எப்பொழுது வாயிலிருந்து ஞான இரத்தினங்களைத் தவிர வீணான ஏதாவது ஒரு வார்த்தை கூட வரக்கூடாது என்று தந்தையின் கட்டளை இருக்கிறது என்றால் சுற்றுப்புறச் சூழ்நிலையை வர்ணனை செய்வதும் வீணானதாக ஆனது இல்லையா? எங்கு வீணானது இருக்கிறதோ அங்கு சக்திசாலியான நினைவு இருப்பதில்லை. சக்திசாலியான நினைவில் இருந்து ஏதாவது வார்த்தை கூறினீர்கள் என்றால் வீணானவற்றை சொல்ல மாட்டீர்கள், ஞான இரத்தினங்களைத் தான் சொல்வீர்கள். அப்படி உள்உணர்வை, வார்த்தைகளையும் சோதனை செய்யுங்கள். காரியம் செய்தாகி விட்டது, வேதனையும் பட்டாகி விட்டது, மன்னிப்பும் கேட்டுவிட்டோம், முடிவடைந்து விட்டது என்று சிலர் அந்த மாதிரியும் நினைக்கிறார்கள் ஆனால் அப்படியில்லை. யார் எவ்வளவு தான் மன்னிப்பை கேட்டுக் கொண்டாலும் என்ன பாவக்காரியம் மற்றும் வீணான காரியம் நடந்ததோ அதனுடைய கறை அழிவதில்லை. கறை ஏற்பட்டே விடுகிறது. பதிவேடு தெளிவாகவும் சுத்தமாகவும் இருப்பதில்லை. எனவே முடிந்து விட்டது, மன்னிப்பு கேட்டு விட்டேன் என்று அந்த மாதிரியும் கூறக்கூடாது. இந்த மாதிரியான பழக்க வழக்கத்தைக் கடைப்பிடிக்கக் கூடாது. எண்ணத்தில், உள்உணர்வில், நினைவிலும் எந்தவொரு பாவத்தின் எண்ணமும் வர வேண்டாம். இது தான் நம்முடைய கடமை. இப்படிப்பட்டவரைத் தான் பிராமணன் அதாவது தூய்மையானவர் என்று கூறப்படு கிறது. ஒருவேளை ஏதாவது தூய்மையற்ற உள்உணர்வு, நினைவு மற்றும் எண்ணம் இருக்கிறது என்றால் பிராமணத்தன்மையின் நிலையில் நிலைத்திருக்க முடியாது. சொல்லளவில் மட்டும் பிராமணன் எனவே ஒவ்வொரு அடியிலும் எச்சரிக்கையுடன் இருங்கள். குஷியின் கூடவே சக்திகளையும் உடன் வைக்க வேண்டும். விசேஷங்களின் கூடவே ஒருவேளை ஒரு பலஹீனம் ஏற்படுகிறது என்றாலும் ஒரு பலஹீனம் அனேக விசேஷங்களை அழித்து விடுகிறது. எனவே தன்னுடைய விசேஷங்களைப் பிரத்யக்ஷம் செய்வதற்காக பலஹீனங்களை அழித்து விடுங்கள். புரிந்ததா?

சேவையின் இடையில் ஒருவேளை டிஸ்சர்வீஸ் (சேவைக்கு குந்தகம் விளைவித்தல்) நடந்து விட்டது என்றால் டிஸ்சர்வீஸ் பிரத்யக்ஷமாகி

விடுகிறது. எவ்வளவு தான் அமிர்தம் இருந்தாலும் விஷத்தின் ஒரு துளி படுவதினால் முழு அமிர்தமும் விஷமாகி விடுகிறது. எவ்வளவு தான் சேவை செய்தாலும் ஒரு சிறிய தவறு டிஸ்சர்வீசிற்கான காரணமாகி விடுகிறது. சேவையை முடிவடையச் செய்து விடுகிறது. எனவே தன் மேல் மற்றும் தன் சேவையின் மேல் மிகுந்த கவனம் வையுங்கள். முதலில் செய்ய வேண்டும் பின்பு சொல்ல வேண்டும். சொல்வது சுலபமாக இருக்கிறது ஆனால் செய்வதில் கடின உழைப்பு இருக்கிறது. உழைப்பின் பலன் நல்லதாக இருக்கிறது, வெறும் சொல்வதற்கான பலன் நன்றாக இருப்பதில்லை. எனவே முதலில் செய்யுங்கள் பின்பு கூறுங்கள். பின்பு பாருங்கள் எப்படிப்பட்ட தரமான சேவை நடக்கிறது என்று. தன்னுடைய தரத்தைப் பாருங்கள். புரிந்ததா? உள்உணர்வு மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலையை சக்திசாலியானதாக ஆக்குங்கள். பிராமணர்கள் நீங்கள் ஜென்மம் எடுத்திருப்பதே ஆவது மற்றும் ஆக்குவதற்காகவே அன்றி ஆவதற்காக மட்டும் அல்ல. படிப்பது, படிப்பிப்பதற்காக இருக்கிறது. உலகத்திற்கு நன்மை செய்பவர் தான் இல்லையா? எப்படி தந்தை நன்மை செய்பவர் அவருடன் நீங்களும் உதவியாளராக இருக்கிறீர்கள். எனவே என்னுடைய உள்உணர்வோ சரியாகத் தான் இருக்கிறது. இந்த சுற்றுப்புறச் சூழ்நிலை செய்து விட்டது என்று இப்படியும் யோசிக்கக்கூடாது. ஒருவேளை உங்களுடைய உள்உணர்வு சரியாக இருக்கிறது. மேலும் அதனுடைய பாதிப்பு சுற்றுப்புறச் சூழ்நிலை மேல் ஏற்படவில்லை என்றால் சக்திசாலியான உள்உணர்வு இல்லை என்பதாகும். சக்திசாலியான பொருளின் பிரபாவம் அக்கம் பக்கத்தில் அவசியம் ஏற்படுகிறது. அது மறைந்திருக்க முடியாது, எனவே தன்னுடைய உள்உணர்வையும் தெரிந்து கொள்வதற்காக உள்உணர்வின் பாதிப்பு சுற்றுப்புறச் சூழ்நிலை மேல் எப்படி இருக்கிறது என்று இதையும் சோதனை செய்யுங்கள். சுற்றுப்புறச் சூழ்நிலை ஒருவேளை வேறு எதுவாகத் தென்படுகிறது என்றால் தன்னுடைய உள்உணர்வில் பலஹீனம் இருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். அந்த பலஹீனத்தை அகற்ற வேண்டும். இன்றைய நாட்களில் நாலாபுறங்களிலும் உள்ள சேவையின் ரிசல்ட்டாக முக்கியமாக என்ன தென்படுகிறது?

வாத்தியத்தை இசைப்பதில் மிகப் பெரிய திறமைசாலிகளாக ஆகி விட்டீர்கள் ஆனால் வாத்தியத்தில் செல்வதினால் இரகசியத்திலிருந்து

நகர்ந்து வந்து விட்டீர்கள். இரகசியம் அறிந்து நடப்பவராக ஆக வேண்டும் ஆனால் வாத்திய சொரூபமானவராக ஆகி விட்டீர்கள். வாத்தியம் மற்றும் இரகசியம் இரண்டும் சேர்ந்தே சமமாக இருக்க வேண்டும். ஒருவேளை ஒரு விஷயம் அதிக சக்தியோடு இருக்கிறது மற்றும் இன்னொரு விஷயம் குப்தமாக (மறைவாக) இருக்கிறது என்றால் ரிசல்ட்டும் குப்தமாக இருந்து விடுகிறது. வாத்தியத்தை இசைப்பதிலோ அனைவரும் மிகுந்த திறமைசாலிகளாக ஆகி விட்டீர்கள் ஆனால் இரகசியம் தெரிந்து நடப்பவர்களாகவும் ஆக வேண்டும். எனவே இப்பொழுது இரகசியம் தெரிந்து நடப்பவராக ஆகுங்கள், யோக சொரூபமானவராக ஆகுங்கள். நல்லது. அந்த மாதிரி இரகசியம் தெரிந்து நடப்பவர்களுக்கு, யோகசொரூபமானவர்களுக்கு யுக்தி யுக்தானவர்களுக்கு நமஸ்காரம்,

**வரதானம்: ஒவ்வொரு பொக்கிஷத்தையும் காரியத்தில் ஈடுபடுத்தி பலகோடி மடங்கு சம்பாத்தியத்தை சேமிக்கக்கூடிய பலகோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர் ஆகுக!**

நாடகத்தில் சங்கமயுகத்திற்கு ஒரு நொடியில் பல கோடி மடங்கின் சம்பாத்தியத்தை சேமிப்பதற்கான வரதானம் கிடைத்திருக்கிறது. அந்த மாதிரி வரதானத்தை தனக்காக சேமிப்பு செய்யுங்கள் மற்றும் மற்றவர்களுக்காகத் தானம் செய்யுங்கள். அதே போல் எண்ணத்தின் பொக்கிஷத்தை ஞானத்தின் பொக்கிஷத்தை, ஸ்தூல செல்வம் என்ற பொக்கிஷத்தை காரியத்தில் ஈடுபடுத்தி பல கோடி மடங்கு சம்பாத்தியத்தை சேமிப்பு செய்யுங்கள். ஏனென்றால் இந்த நேரம் ஸ்தூல செல்வத்தையும் ஈஸ்வரன் காரியத்திற்காக சமர்ப்பணம் செய்வதினால் ஒரு நயா பைசா கூட ஒரு இரத்தினத்திற்குச் சமமாக மதிப்புள்ளதாக ஆகி விடுகிறது. எனவே இந்த அனைத்து பொக்கிஷங்களையும் தனக்காக மற்றும் சேவைக்காக காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் பலகோடி மடங்கு பாக்கியசாலி ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: எங்கு உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறதோ அங்கு அனைவரின் உதவி சுலபமாக பிராப்தி ஆகிறது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 15.05.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உயர்ந்த நிலையை உருவாக்குவதற்கான சாதனம் மூன்று வார்த்தைகள் -நிராகாரி, அலங்காரி மற்றும் கல்யாணகாரி!

தன்னை பதமாபதம் பாக்கியசாலி (பலகோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர்) என்று புரிந்து ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கிறீர்களா? பதம் என்று தாமரை மலரையும் கூறுகிறார்கள். ஒவ்வொரு அடியிலும் தாமரை மலருக்குச் சமமாக விலகிய மற்றும் அன்பானவராகி நடந்து கொள்வதினால் தான் ஒவ்வொரு அடியிலும் பலகோடி மடங்கு சம்பாத்தியம் ஏற்படும். அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களாக ஆகியிருக்கிறீர்களா? இரண்டு விதமான நிலையும் உருவாகியிருக்கிறதா? ஒரு அடியில் பலகோடி என்றால் எவ்வளவு பொக்கிஷங்களுக்கு அதிபதி ஆகி விட்டீர்கள். அதே போல் தன்னை அழியாத செல்வந்தன் மற்றும் மிகவும் விலகியிருந்து மற்றும் அன்பானவராக அனுபவம் செய்கிறீர்களா? ஒரு அடி கூட தாமரை மலருக்குச் சமமான நிலையில் நிலைத்திருந்து பலகோடி மடங்கு வருமானமின்றி எடுத்து வைக்கப்படவில்லையே என்று இதை சோதிக்க வேண்டும். இந்த நேரம் அந்த மாதிரி பலகோடி மடங்கு செல்வந்தன் அதாவது அழியாத செல்வந்தனாக ஆகிறீர்கள் என்றால் முழுக் கல்பத்திலும் செல்வந்தனாக பாடப்படுகிறீர்கள். அரைக்கல்பம் உலக ராஜ்யத்தின், இடைவிடாத ராஜ்யத்தின் தடையற்ற ராஜ்யத்தின் அதிகாரியாக ஆகிறீர்கள், பின்பு அரைக்கல்பம் பக்தர்கள் உங்களுடைய இந்த நிலையின் மகிமையைப் பாடிக் கொண்டே இருக்கிறார்கள். எந்தவொரு பக்தனுக்கும் வாழ்க்கையில் ஏதாவது விதத்தில் குறையின் அனுபவம் ஆகிறது என்றால் அவர் யாரிடம் செல்கிறார். உங்களுடைய நினைவுச் சின்னமாக இருக்கும் சிலைகளிடம் தான் செல்கிறார்கள்.

சிலைகள் மூலமாகவும் அற்பகாலத்தின் பிராப்தியை செய்து கொண்டே தன்னுடைய குறை மற்றும் பலஹீனங்களை அகற்றிக் கொண்டே இருக்கிறார்கள். அப்படி முழுக் கல்பத்திற்கும் நடைமுறையில் மற்றும் நினைவுச் சின்ன ரூபத்தில் எப்பொழுதும் செல்வந்தனாக, சக்தி நிறைந்தவனாக, குணம் நிறைந்தவனாக, வரதானி மூர்த்தியாக ஆகி விடுகிறீர்கள். எனவே எப்பொழுது ஒரு அடியையாவது எடுத்து வைக்கிறீர்கள் மற்றும் ஒரு எண்ணத்தையாவது உருவாக்குகிறீர்கள் என்றால் அந்த மாதிரி நினைவில் இருந்து கொண்டே அந்த மாதிரி தன்னுடைய உயர்ந்த சொரூபத்தில் நிலைத்திருந்து கொண்டே செய்கிறீர்களா? எப்படி ஏதாவது ஒரு எல்லைக்குட்பட்ட இராஜா தன்னுடைய ராஜ்யத்தின் பக்கம் பார்க்கிறார் என்றால் எந்த மனநிலையில் மற்றும் திருஷ்டியில் பார்ப்பார். எந்த போதையோடு பார்ப்பார். இவர்கள் அனைவரும் என்னுடைய பிரஜைகள் மற்றும் குழந்தைகளுக்குச் சமமானவர்கள் என்று பார்ப்பார். அதே போல் நீங்களும் உலகத்தின் பக்கம் எப்பொழுது பார்க்கிறீர்களோ அல்லது எந்த ஆத்மாவிற்காக உங்களுடைய பார்வை செல்கிறது என்றால் என்ன புரிந்து கொண்டு பார்க்கிறீர்கள்? இது நம்முடைய உலகம், இதன் அதிபதிகளாக நாம் இருந்தோம் அந்த உலகம் இன்று என்னவாகி விட்டது. மேலும் இப்பொழுது நாம் உலகத்தின் அதிபதியின் குழந்தைகள் மீண்டும் உலகை எல்லா வளமும் நிரம்பியதாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம், செல்வம் நிறைந்ததாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம், எப்பொழுதும் சுகம் நிறைந்ததாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம் என்று அந்த மாதிரி புரிந்து பார்க்கிறீர்கள். இந்த போதையில் நிலைத்திருந்து அதே ரூபத்தில் அதே உள்உணர்வில், அதே பார்வையில் ஒவ்வொரு ஆத்மாவையும் பார்க்கிறீர்களா? எந்தவொரு ஆத்மாவையும் எந்த மனநிலையிலிருந்து பார்க்கிறீர்கள்? அந்த நேரத்தில் மனநிலை மற்றும் ஸ்டேஜ் (நிலை) என்னவாக இருக்கிறது? (ஒவ்வொருவரும் கூறினார்கள் என்னென்ன கூறினீர்களோ அவை அனைத்தும் சரியானவைதான். ஏனென்றால் இப்பொழுது சரியில்லாதவைகளை விட்டுவிட்டீர்கள் என்றால் இப்பொழுது என்னென்ன கூறுகிறீர்களோ அதை சரியானவைகளாகத் தான் கூறுவீர்கள். இப்பொழுது சரியில்லாத வார்த்தைக் கூட வாயிலிருந்து வெளியாக முடியாது.

எப்பொழுது ஏதாவது ஆத்மாவை பார்க்கிறீர்கள் என்றால் இந்த அனைத்து ஆத்மாக்களுக்காக தந்தை என்னை வரதானி (வரம் அளிப்பவர்) மற்றும் மகாதானி (மிகப் பெரிய வள்ளல்) என்ற பொறுப்பில் வைத்திருக்கிறார் என்ற உள்உணர்வைத் தான் வைக்க வேண்டும். வரதானி மற்றும் மகாதானி என்ற உள்உணர்வோடு பார்ப்பதினால் எந்த ஒரு ஆத்மாவும் வரதானம் மற்றும் மகாதானத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டு விட மாட்டார்கள். யார் மகாதானி மற்றும் வரதானியாக இருக்கிறாரோ அவர் எதிரில் யாராவது வந்தால் வள்ளலாகி அந்த ஆத்மாவிற்காக ஏதாவது அவசியம் கொடுப்பார். யாரையும் வெறும் கையோடு திருப்பி அனுப்ப மாட்டார். எனவே அந்த மாதிரி உள்உணர்வு வைப்பதினால் எந்தவொரு ஆத்மாவும் உங்கள் எதிரில் வருவதினால் வெறும் கையோடு செல்ல மாட்டார். ஏதாவது பெற்றுக் கொண்டு தான் செல்வார். எனவே அப்படி தன்னை புரிந்து கொண்டு ஒவ்வொரு ஆத்மாவையும் பார்க்கிறீர்களா? வள்ளலின் குழந்தைகள் வள்ளலாகத்தான் இருப்பார்கள். எப்படி தந்தையிடம் யாராவது வந்தார்கள் என்றால் வெறும் கையோடு அனுப்ப மாட்டார் இல்லையா? அப்படி அதே போல் தந்தையைப் பின்பற்ற வேண்டும். எப்படி ஸ்தூல முறையில் கூட யாரையாவது அன்பு நினைவுகளின் பரிசைக் கொடுக்காமல் அனுப்புவதில்லை தானே. ஏதாவது அடையாளமாகக் கொடுக்கிறீர்கள். இந்த ஸ்தூல பழக்கம் கூட ஏன் ஏற்பட்டிருக்கிறது? சூட்சும காரியத்தின் கூடவே சுலபமாக நினைவூட்டுவதற்காக ஒரு சகஜ சாதனத்தை உருவாக்கப்பட்டிருக்கிறது. எப்படி யாரும் ஸ்தூல அன்பளிப்பின்றி செல்லக்கூடாது என்று நினைக்கிறீர்கள். அதே போல் குறைந்தது ஏதாவது கொஞ்சமாவது எடுத்துச் செல்ல வேண்டும் என்ற லட்சியத்தை எப்பொழுதுமே வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது தான் உங்களுடைய உலக இராஜ்யத்தில் வருவார்கள். அப்படி சதாச்சாரி (தெய்வீக) மற்றும் சதா மகாதானி பார்வை, உள்உணர்வு மற்றும் செயலினால் ஆகக்கூடியவர் தான் உலக அதிபதியாக ஆகிறார். எனவே எப்பொழுதுமே அந்த மாதிரியான நிலை இருக்கட்டும். அதாவது எப்பொழுதும் செல்வம் நிறைந்தவர் என்று புரிந்து நடந்து கொள்ளட்டும். இதற்காக மூன்று வார்த்தைகளை நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். எந்த மூன்று வார்த்தைகளை நினைவு செய்வதினால் எப்பொழுதும் மற்றும் இயல்பாகவே இந்த உள்உணர்வு இருக்கும். அந்த மூன்று வார்த்தைகள் எவை? சதா நிராகரி, அலங்காரி மற்றும் கல்யாணகாரி. ஒருவேளை இந்த மூன்று வார்த்தைகள்

நினைவிருக்கிறது என்றால் தன்னுடைய உயர்ந்த நிலையை எப்பொழுதும் உருவாக்க முடியும். மனம் அளவிலும், செயலிலும், சேவையிலும் மூன்று நிலையிலும் தன்னுடைய உயர்ந்த நிலையை உருவாக்க முடியும். எந்த நேரம் காரியத்தில் வருகிறீர்கள் என்றால் எப்பொழுதும் அலங்காரி மூர்த்தி (குணங்களால் அலங்கரிக்கப்பட்டவராக) ஆகி நடந்து கொள்கிறீர்களா? என்று சோதனை செய்யுங்கள். அலங்காரிமூர்த்தி தேக அகங்காரியாக இருப்பதில்லை. அலங்காரத்தில் அகங்காரம் அழிந்து விடுகிறது. எனவே எப்பொழுதும் சுயதரிசன சக்கரம் சுற்றிக் கொண்டிருக்கிறதா என்று தன்னுடைய அலங்காரங்களைப் பாருங்கள். ஒருவேளை எப்பொழுதும் சுயதரிசன சக்கரம் சுற்றிக் கொண்டிருக்கிறது என்றால், அனேக விதமான மாயாவின் தடைகளின் எந்த பிரச்சனைகளில் வந்து விடுகிறீர்களோ அவை வராது. அனைத்து பிரச்சனைகளிலிருந்து சுயதரிசன சக்கரம் மூலமாக பாதுகாப்பாக இருக்க முடியும். எனவே சுயதரிசன சக்கரம் சுற்றிக் கொண்டிருக்கிறதா? என்ற இதை எப்பொழுதும் பாருங்கள். எந்த விதமான ஏதாவது அலங்காரம் இல்லை என்றால் அனைத்து சக்திகளிலிருந்து ஏதாவது சக்தியின் குறை இருக்கிறது என்பதாகும். எப்பொழுது அனைத்து சக்திகளும் இல்லை என்றால் அனைத்து தடைகளிலிருந்தும் மற்றும் அனைத்து பலஹீனங்களிலிருந்தும் விடுபடவில்லை. எந்தவொரு விஷயத்தில் தடைகளானாலும் சரி அல்லது தன்னுடைய பழைய சம்ஸ்காரமானாலும் சரி அல்லது சேவையிலானாலும் சரி, தோல்விக்கு ஏதாவது காரணம் உருவாகிறது. மேலும் அந்த காரணத்தின் வசம் ஏதாவது தடையின் உள்ளே வந்து விடுகிறீர்கள் என்றால் இதிலிருந்து விடுபட முடியாததற்கு காரணம் சக்தியின் குறைவு என்று புரிந்து கொள்ள வேண்டும். தடைகளிலிருந்து விடுபட விரும்புகிறீர்கள் என்றால் சக்தியை தாரணை செய்யுங்கள் அதாவது அலங்காரி ரூபமாகி இருங்கள். அலங்காரி என்று புரிந்து நடந்து கொள்வதில்லை. அலங்காரத்தை விட்டு விடுகிறீர்கள். சக்தியின்றி விடுபடுவதின் ஆசை வைக்கிறீர்கள் என்றால் அது எப்படி நிறைவேறும். எனவே இந்த மூன்று வார்த்தைகளின் நினைவை எப்பொழுதும் வைத்துக் கொண்டு பின்பு ஒவ்வொரு காரியமும் செய்யுங்கள். இந்த அலங்காரங்களை தாரணை செய்வதினால் தன்னை எப்பொழுதும் வைஷ்ணவன் என்று புரிந்து கொள்வீர்கள். எதிர்காலத்திலோ விஷ்ணு எம்சியாகவோ ஆவீர்கள் ஆனால் இப்பொழுது வைஷ்ணவன் ஆனீர்கள்

என்றால் பின்பு விஷ்ணுவின் இராஜ்யத்தில் விஷ்ணு வம்சியாக ஆவீர்கள். அப்படி வைஷ்ணவன் என்றால் எந்தவொரு சுத்தமற்ற பொருளைத் தொடாதவர். இன்றைய நாட்களின் வைஷ்ணவனோ ஸ்தூல மாமிச பொருளிலிருந்து வைஷ்ணவர்களாக இருக்கிறார்கள் ஆனால் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் எப்பொழுதுமே வைஷ்ணவர்கள் அதாவது தமோகுண எண்ணம் தமோகுண சம்ஸ்காரங்களைக் கூட தொட முடியாதவர்கள். ஒருவேளை ஏதாவது எண்ணம் சம்ஸ்காரங்களை தொட்டீர்கள் அதாவது தாரணை செய்தீர்கள் என்றால் உண்மையான வைஷ்ணவனாக ஆனீர்களா? மேலும் யார் உண்மையான வைஷ்ணவனாக ஆவதில்லையோ அவர் விஷ்ணுவின் இராஜ்யத்தில் உலகின் அதிபதியாக ஆக முடிவதில்லை. எனவே எந்த அளவிற்கு நிரந்தரமான வைஷ்ணவனாக ஆகியிருக்கிறேன் என்று தன்னைத் தானே பாருங்கள். வைஷ்ணவ குலத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பவர்கள் எந்தவொரு சுத்தமற்றவர்களை தன்னை தொடக்கூட விடுவதில்லை. சுத்தமற்றவர்களிடமிருந்து தன்னைத் தானே விலக்கிக் கொள்வார்கள். அது ஸ்தூலமான விஷயம் ஆனால் யார் உண்மையான வைஷ்ணவனாக ஆகிறார்களோ அவர் எந்தவொரு பழைய விஷயங்கள், பழைய உலகத்தின் மற்றும் பழைய உலகத்தின் எந்தவொரு நபர் மற்றும் சாதனத்தை தன்னுடைய புத்தியை தொட விட மாட்டார்கள், விலகியிருப்பார்கள். அப்படியானால் அந்த மாதிரி வைஷ்ணவன் ஆகுங்கள். எப்படி அவர்களை ஒருவேளை யாராவது எந்த காரணத்திற்காகவாவது தொட்டுவிட்டார்கள் என்றால் குளித்து விடுவார்கள் இல்லையா? தன்னை சுத்தமாக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள். இதே விதமாக ஒருவேளை தன்னுடைய பலஹீனத்தின் காரணமாக எந்தவொரு பழைய தமோகுண சம்ஸ்காரம் மற்றும் எண்ணமும் தொட்டு விடுகிறது என்றால் விசேஷ ரூபத்தில் ஞான ஸ்நானம் செய்ய வேண்டும். அதாவது புத்தியில் விசேஷ ரூபத்தில் தந்தையின் நினைவு மற்றும் தந்தையோடு ஆன்மீக உரையாடல் செய்ய வேண்டும். இதனால் என்னவாகும்? அந்த தமோகுண சம்ஸ்காரம் ஒருபொழுதும் தொடாது, சுத்தமாகி விடுவீர்கள். தன்னை சுத்தமாக்குவதினால் எப்பொழுதும் சுத்த சொரூபத்தின் சம்ஸ்காரம் உடையவராக ஆகி விடுவீர்கள். அந்த மாதிரி செய்கிறீர்களா? சொல்கிறார்கள் இல்லையா - தெரியவில்லை இது எப்படி நடந்து விட்டது என்று. இந்த பலஹீனமோ தன்னுடையது தான் இல்லையா? யாரும்,

எதுவும் தொட முடியாத அளவிற்கு அந்த அளவு சக்தி இருக்க வேண்டும். ஒருவேளை யாராவது சக்திசாலியானவராக இருக்கிறார் என்றால் பலஹீனமானவர் அவர் எதிரில் ஒரு வார்த்தை கூட பேச முடியாது, எதிரில் வர முடியாது. அஞ்ஞான காலத்தில் அதிகார தோரணை இருப்பவரின் எதிரில் யாரும் வர முடியாது. இங்கு இருப்பது ஆன்மீகப் போதை அதிகார தோரணையை ஆன்மீகத்தில் மாற்றம் செய்தீர்கள் என்றால் பின்பு தொட முடியும் அளவிற்கு எந்த சக்தியும் இருக்க முடியாது. எப்படி எதிர்காலத்தில் உங்கள் அனைவரின் எதிரில் இயற்கை தாசியாகி விடும். இது தான் உ சம்பூர்ண நிலை இல்லையா?. எப்பொழுது இயற்கை தாசி ஆக முடியும் என்றால் பழைய சம்ஸ்காரங்களை தாசியாக்க முடியாதா என்ன? எப்படி தாசி (வேலைக்காரர்கள்) மற்றும் தாசன் எப்பொழுதும் சரிங்க என்று கூறிக் கொண்டே இருப்பார்கள். அதே போல் இந்த பலஹீனங்களும் சரிங்க என்று சொல்லி நிற்கும், தொடாது. அந்த மாதிரியான நிலையை சதா காலத்திற்காக உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்களா? இப்பொழுது எதுவரை வந்து சேர்ந்திருக்கிறீர்கள்? இன்றைய நாட்களின் விஷயம் வந்திருக்கிறதா அல்லது இப்பொழுதைய விஷயமா அல்லது பல வருடங்களின் விஷயமா? இன்றைய நாட்கள் மற்றும் இப்பொழுது, இதில் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது இல்லையா?

டீச்சரின் அதிசய காரியம் அனைவரையும் டீச்சராக்குவது தான். நீங்கள் டீச்சர் இல்லையா? உங்களுக்கு நீங்களே டீச்சர் ஆகியிருக்கிறீர்கள் என்றால் ரிசல்ட்டை தெரிந்திருக்கவில்லையா? இது தான் தந்தைக்குச் சமமாக ஆக்குவதின் காரியம் செய்வதாகும். டீச்சர் ஒருவேளை டீச்சராக்கவில்லை என்றால் அவர் எப்படி டீச்சராக முடியும். ஒருவேளை தனக்குத் தானே டீச்சராகி நடந்து கொள்ளவில்லை. என்றால் சம்பூர்ண நிலையை அடைய முடியாது. யார் தனக்குத்தான் டீச்சராக ஆவதில்லையோ அவர்கள்தான் பலஹீனமாக ஆகிறார்கள். நம்முடைய மகிமை பாடப்படுகிறது. அந்த மாதிரி மகிமைக்குத் தகுதியானவர்களாக ஆகியிருக்கிறோமா என்பதை எப்பொழுதும் பாருங்கள். ஒவ்வொரு விஷயத்தையும் தன்னுள் பாருங்கள். மரியாதா புருஷோத்தமனாக இருக்கிறேனா? சம்பூர்ண நிர்விகாரி, சர்வ குண சம்பன்னம், சம்பூர்ண அஹிம்சைவாதி இப்படி இந்த முழுமையான மகிமை நடைமுறையில் இருக்கிறதா? ஒருவேளை ஏதாவது குறை இருக்கிறது என்றால் அதை நிரப்புவதினால் மகிமைக்குத் தகுதியானவர் ஆகி விடுவீர்கள். எனவே

அந்த மாதிரி எப்பொழுதும் மற்றும் உண்மையான வைஷ்ணவன் ஆகக்கூடிய அதிர்ஷ்டம் நிறைந்த மற்றும் மிக உயர்ந்த குழந்தைகளுக்கு நமஸ்காரம்.

**வரதானம்: மாயாவின் உறவுகளை துண்டித்து தந்தையின் உறவோடு ஒப்பந்தம் செய்யக்கூடிய மாயாவை வென்ற பற்றுதலை வென்றவர் ஆகுக!**

இப்பொழுது நினைவின் மூலமாக பழைய ஒப்பந்தத்தை ரத்து செய்து தனியானவர் ஆகுங்கள். உங்களுக்குள் ஒருவர் இன்னொருவருக்கு சகயோகியாகவோ நன்றாக இருங்கள் ஆனால் கம்பேனியனாக (துணைவனாக) வேண்டாம். ஒருவரை (பாபாவை) கம்பேனியனாக ஆக்கினீர்கள் என்றால் மாயாவின் உறவுகளிலிருந்து துண்டிக்கப்பட்டு விடுவீர்கள். மாயாவை வென்றவர், பற்றுதலை வென்றவர் வெற்றி அடைபவராக இருப்பீர்கள். ஒருவேளை கொஞ்சமாவது யார் மேலேயாவது பற்றுதல் இருக்கிறது என்றால் தீவிரமாக முயற்சி செய்பவருக்கு பதிலாக முயற்சி செய்பவர் ஆகி விடுவீர்கள். எனவே என்னவானாலும், எதுவானாலும் குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள் அனேக வேட்டைகளைப் பார்த்து குஷியடையும் வேட்டையாளர் - இதைத் தான் நஷ்டோமோஹா (பற்றுதலை வென்ற நிலை) என்று சொல்வது. அந்த மாதிரி நஷ்டோமோஹா நிலையில் இருப்பவர் தான் வெற்றி மாலையின் மணி ஆகுகிறார்.

**சுலோகன்: சத்தியத்தின் விசேஷம் மூலமாக வைரத்தின் ஜொலிப்பை அதிகரியுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 17.05.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கடன் (குழுவாக செயல்படுவது) என்ற கோட்டையை உறுதியாக்குவதற்கான சாதனம்!

பாண்டவ பவனை பாண்டவர்களின் கோட்டை என்று கூறுகிறார்கள். கோட்டையின் மகிமையும் இருக்கிறது. அதே போல் இந்த ஈஸ்வரிய குழுவும் இருக்கிறது, இந்த குழு கூட கோட்டையே தான். எப்படி எந்தவொரு எதிரியும் முற்றுகை இட முடியாத அளவிற்கு ஸ்தூலமான கோட்டை மிகவும் உறுதி யாக்கப்படுகிறதோ அதே போல் முக்கியமான கோட்டை குழுவு-னுடையது. இதில் கூட எந்தவொரு விகாரமும் எதிரியின் ரூபத்தில் முற்றுகை இட முடியாத அளவிற்கு அவ்வளவு உறுதியாக இருக்கட்டும். ஒருவேளை ஏதாவது எதிரி முற்றுகையிட்டு விட்டார் என்றால் அவசியம் கோட்டையின் உறுதியான நிலையில் குறை இருக்கிறது. இதுவோ சங்கடன் என்ற கோட்டை ஆகும். இதனுடைய உறுதித்தன்மைக்காக மூன்று விஷயங்களின் அவசியம் இருக்கிறது. ஒருவேளை மூன்று விஷயங்களும் உறுதியாக இருக்கிறது என்றால் இந்த கோட்டையின் உள்ளே எந்தவொரு ரூபத்திலும் ஒருபொழுதும் எந்தவொரு எதிரியும் முற்றுகை இட முடியாது. எதிரி நுழையவும் முடியாது. தைரியம் வைக்க முடியாது. உறுதியாக்க முடியும் அளவிற்கு அந்த மூன்று விஷயங்கள் எவை? ஒன்று - அன்பு, இன்னொன்று - தூய்மை மற்றும் மூன்றாவது ஆன்மீக நிலை. இந்த மூன்று விஷயங்களும் ஒருவேளை உறுதியாக இருக்கிறது என்றால் ஒருபொழுதும் யாருடைய முற்றுகையும் இருக்காது. ஒருவேளை எங்காவது யாராவது போர் தொடுக்கிறார் என்றால் அதற்கான காரணம் இந்த மூன்றில் ஏதாவது குறை இருக்கிறது. அன்பின் குறை இருக்கலாம் அல்லது ஆன்மீக நிலையின் குறை இருக்கலாம். அப்படி குழு என்ற கோட்டையை உறுதியாக்குவதற்காக இந்த மூன்று விஷயங்களின் மேல் மிகுந்த கவனம் தேவையாக இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் (சென்டரிலும்) இந்த விஷயங்களின்

படையை வைத்துக்கூட இதைக் கொண்டு வர வேண்டும். எப்படி ஸ்தூலத்திலும் சுற்றுப்புறச்சூழலை சுத்தம் செய்வதற்காக ஏர் பிரஷ்னர் (நறுமணக் காற்று பரப்பி) உபயோகிக்கிறார்கள். அதனால் அற்பகாலத்திற்காக சுற்றுப்புறச்சூழல் மாறி விடுகிறது. இந்த முறையில் இதில் கூட இந்த விஷயங்களின் பிரஷர் (அழுத்தம்) கொடுக்க வேண்டும். அதன் மூலமாக சுற்றுப்புறசூழலின் பாதிப்பு அகன்று விட வேண்டும். யாரையாவது கவரக்கூடிய முக்கியமான விஷயங்கள் இவைகளாகத் தான் இருக்கிறது. அன்பு மற்றும் தூய்மையினால் பிரபாவப்படுபவர்களாகவோ ஆகி விடுகிறார்கள் ஆனால் முக்கியமான மூன்றாவது விஷயமான ஆன்மீக நிலைக்கானது அது தான் முக்கியமாகும்.

ஒருவர் இன்னொருவரை குழுவில் கொண்டு வருவதற்காக மற்றும் குழுவின் ஒற்றுமையை சக்தியை அதிகரிப்பதற்காக உங்களுக்குள் கூட இந்த மூன்று விஷயங்களை ஒருவர் இன்னொருவருக்குக் கொடுத்து கவனத்தை ஈர்ப்பதற்கான அவசியமும் இருக்கிறது. ஒருவேளை மூன்றில் ஏதாவது ஒரு விஷயத்தின் பலஹீனம் இருக்கிறது என்றால் அவசியம் ஏதாவது பலஹீனம் இருக்கிறது. எனவே என்ன வெற்றி ஏற்பட வேண்டுமோ அது ஏற்பட முடிவதில்லை. அவசியம் ஏதோ குறை இருக்கிறது. எனவே இந்த விஷயங்களை மிகுந்த கவனத்தில் வைக்க வேண்டும். ஒருவர் இன்னொருவரின் ஒத்துழைப்பால் கோட்டையின் உறுதி நிலை ஏற்படுகிறது. ஒருவேளை கோட்டையின் சுவரில் ஒரு செங்கல் அல்லது கல்லின் முழுமையான சகயோகம் இல்லை என்றாலும் அந்தக் கோட்டை பாதுகாப்பாக இருக்க முடியாது. கொஞ்சம் ஆடினாலும் பலஹீனம் ஏற்பட்டு விடும். ஒரே ஒரு செங்கல்லின் குறை தான் இருக்கிறது என்றாலும் பலஹீனம் நாலாபக்கமும் பரவுகிறது. அதே போலவே உறுதியான நிலைக்காக இந்த மூன்று விஷயங்கள் மிக அவசியமாகும். பின்பு எந்த வைப்ரேஷனும் (எண்ண அதிர்வுகளும்) தொட முடியாது. தன் மேல் கவனம் குறைவாக இருக்கிறது. எப்படி சாகார பாபா சாகார ரூபத்தில் தூரத்திலிருந்தே லைட் ஹவுஸ், மைட் ஹவுஸாகத் தென்பட்டார். எப்படி அன்பு மற்றும் தூய்மை வெளி ரூபத்தில் தென்படுகிறதோ, அதே போல் ஆன்மீகத் தன்மை வெளிப்படையாக (பிரத்யக்ஷமாக) தென்படட்டும் அப்பொழுது தான் வெற்றி முழக்கம் ஏற்படும். நாடகப்படி என்னென்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதை

யதார்த்தம் என்றே கூறுவோம் ஆனால் கூடவே சக்தி ரூபத்தின் அனுபவமும் இருக்க வேண்டும். இந்த ஆன்மீகத் தன்மை அவசியம் இருக்க வேண்டும்.

இந்த ஸ்தானம் மற்ற ஸ்தானங்களைவிட வித்தியாசமானது. தூய்மை மற்றும் அன்போ உலகத்தில் கூட அற்பகாலத்திற்காக கிடைக்கிறது ஆனால் ஆன்மீகத் தன்மை குறைவாக இருக்கிறது. இங்கு ஈஸ்வரிய காரியம் நடந்து கொண்டிருக்கிறது. இது ஒன்றும் சாதாரண விஷயம் இல்லை -இந்த அனுபவத்தை இங்கு வந்து செய்ய வேண்டும். எப்பொழுது நீங்கள் தன்னுடைய ஆன்மீக போதையிலிருந்து இலக்கிற்கு குறி வைப்பீர்களோ அப்பொழுது தான் அது ஏற்படும். தன்னுடைய நடத்தை மூலமாக, செயல் மூலமாக, வார்த்தை மூலமாக, உள்உணர்வு மூலமாக, சுற்றுப்புற சூழ்நிலை மூலமாக, அனைத்து விதமான சாதனங்களினால் தந்தையின் நடைமுறை பாகத்தின் பிரத்யக்ஷதா அவதார பூமியிலோ பிரத்யக்ஷமாக கிடைக்க வேண்டும் என்ற இந்த இலட்சியத்தை அவசியம் வைக்க வேண்டும். அன்பு மற்றும் தூய்மையின் பாராட்டுதல்களையோ எங்கு வேண்டுமானாலும் செய்ய முடியும், சிறுசிறு ஸ்தானங்களிலும் பிரபாவம் ஏற்பட முடியும் ஆனால் கர்ம பூமி, சரித்திர பூமி மூலமாக பூமியில் வருவதற்கான விசேஷத்தன்மை இருக்க வேண்டும். எப்படி யாராவது நாலாபுறமும் சூழ்ந்து அவரை தன் பக்கம் கவருவதற்காகச் செய்கிறார்கள். அப்படி தந்தையுடன் அன்பிலும் நெருக்கத்தில் வருவதற்கான ஞானத்துளிகளினால் நாலாபுறமும் சூழும் நிலையை உருவாக்குங்கள். இதற்காக விசேஷமாக இந்த பூமியில் நெருக்கத்தில் வருபவர்களின் சம்மந்தத்தை அருகில் கொண்டு வர வேண்டும். யார் நெருக்கத்தில் வருகிறார்களோ அவர் தான் சம்மந்தத்தில் அருகில் வர முடியும்.

நாலாபக்கங்களிலும் இதே ஓசை காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கட்டும், நாலாபக்கங்களிலும் இதே சுற்றுப்புறச்சூழல் அவர்களுக்கு பலம் கொடுத்துக் கொண்டே இருக்கட்டும், இதற்காக மூன்று விஷயங்களின் தேவையாக இருக்கிறது. இதுவரை என்ன நடந்து இருக்கிறதோ அது சரியாக நடந்திருக்கிறது என்று தான் கூறுவோம். அனைத்தும் நல்லதாகத் தான் நடக்கிறது ஆனால் இப்போதைய நிலைக்கு ஏற்றபடி நல்லதிலும் நல்லதாக இப்பொழுது நடக்க வேண்டும்.

விஸ்தாரம் மூலமாக விதையை யார் வெளிப்படுத்துகிறாரோ அவர் அதிசயக் காரியம் செய்கிறார். விஸ்தாரத்தில் விதையை குப்தமாக்கி (மறைவாக) விடுகிறார்கள். இப்பொழுதோ மரத்தின் கடைசி நிலை இல்லையா? மத்திய காலத்தில் குப்தமாக (மறைவாக) இருக்கிறது. கடைசி வரை குப்தமாக இருக்க முடியாது. அதிக விஸ்தாரத்திற்குப் பிறகு விதை தான் பிரத்யக்ஷம் ஆகிறது இல்லையா? வகை வகையானவற்றில் அதிகமாக கவரப்படும் இயல்பு மனித ஆத்மாக்களிடம் இருக்கிறது ஆனால் நீங்கள் எதற்காக பொறுப்பில் இருக்கிறீர்கள்? அனைத்து ஆத்மாக்களை வகை வகையான மற்றும் விஸ்தாரத்தின் கவர்ச்சி மேல் இருக்கும் கவனத்தை விலக்கி விதையின் பக்கம் கவரச் செய்ய வேண்டும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 20.05.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சார ஸ்வரூபம் ஆவதால் எண்ணம் மற்றும் நேரத்தில் சேமிப்பு!

மாஸ்டர் விதை ரூபத்தின் நிலையில் நிலைத்திருப்பதற்கான பயிற்சி செய்து செய்து, சுலபமாக இந்த நினைவில் தன்னைத் தானே நிலைத்திருக்கச் செய்ய முடியுமா? எப்படி விஸ்தாரம் மற்றும் பேசுவதில் சுலபமாகவே வந்து விடுகிறீர்கள். அதே போலவே சப்தத்திலிருந்து விலகிய, விஸ்தாரத்திற்குப் பதிலாக சாரத்தில் நிலைத்திருக்க முடியுமா? எல்லைக்குட்பட்ட மந்திரவாதிகள் விஸ்தாரத்தை சாரமாக உள்ளடக்கும் சக்தியைக் காண்பிக்கிறார்கள், அப்படியானால் எல்லைக்கப்பாற்பட்ட மந்திரவாதிகள் நீங்கள் விஸ்தாரத்தை சாரமாக உள்ளடக்க முடியாதா? எந்தவொரு ஆத்மா எதிரில் வந்தாலும் ஒரு வார பாடத்தை ஒரு நொடியில் யாருக்காவது கொடுக்க முடியுமா? அதாவது ஒரு வார பாடத்தினால் எந்த ஆத்மாவில் ஆத்மீக சக்தி மற்றும் சம்மந்தத்தின் சக்தியை நிரப்ப விரும்புகிறீர்களோ அதை ஒரு நொடியில் எந்த ஆத்மாவிலும் நிரப்ப முடியுமா அல்லது இது இறுதியில் தான் வரும் நிலையா? எப்படி எந்தவொரு நபரும் கண்ணாடியின் எதிரில் நின்றவுடனேயே ஒரு நொடியில் தன்னுடைய பிம்பத்தைக் காட்சியாகப் பார்த்து விடுகிறார், அதே போல் உங்களுடைய ஆத்மீக நிலை, சக்தி ரூப கண்ணாடியின் எதிரில் எந்தவொரு ஆத்மா வந்தாலும் ஒரு நொடியில் சுயசொரூபத்தின் தரிசனம் அல்லது காட்சியைப் பார்க்க முடியாதா என்ன? அந்த தந்தைக்குச் சமமான லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் ஆவதின் நிலையின் அருகாமையை செய்கிறீர்களா அல்லது இப்பொழுது அந்த நிலை வெகு தூரமாக அனுபவம் இருக்கிறதா? அப்படி நடக்க முடியும் என்று நினைக்கிறீர்கள் என்றால், பிறகு இது வரையிலும் ஆகாமல் இருப்பதற்கான காரணம் என்ன? எது சம்பவமோ, ஆனால் நடைமுறையில் இதுவரையிலும் நடக்கவில்லை என்றால், ஏதாவது காரணம் இருக்கும். (தொய்வு நிலை). தொய்வு நிலை ஏன் இருக்கிறது? அந்த மாதிரி நிலையை உருவாக்குவதற்காக முக்கியமாக எந்த

விசயத்தின் கவனம் குறைவாக இருக்கிறது? எப்பொழுது அறிவியலைச் சேர்ந்தவர்கள் கூட அனேக காரியங்களை ஒரு நொடியில் செய்ய முடியும் என்று செய்து காண்பித்திருக்கிறார்கள். சுவிட்ச் ஆன் மற்றும் ஆஃப் செய்வதற்கான நேரம் மட்டும் தான் எடுக்கிறது. அப்படி இங்கே அந்த நிலை ஏன் உருவாவதில்லை? முக்கியமாக அதற்கு என்ன காரணம்? கண்ணாடியாகவோ இருக்கிறீர்கள். கண்ணாடியின் எதிரில் தன்னுடைய காட்சி கிடைப்பதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்? இப்பொழுது சுயம் நீங்களே அதிகமாக விஸ்தாரத்தில் செல்கிறீர்கள், யார் சுயம் அவரே விஸ்தாரத்தில் செல்பவராக இருக்கிறார் என்றால், அவர் மற்ற யாரையும் சார ரூபத்தில் எப்படி நிலைத்திருக்கச் செய்ய முடியும்? எந்தவொரு விஷயத்தைப் பார்க்கிறீர்கள் மற்றும் கேட்கிறீர்கள் என்றால், புத்திக்கு பல காலத்து பழக்கம் இருக்கும் காரணத்தினால், விஸ்தாரத்தில் செல்வதற்கு முயற்சி செய்கிறீர்கள். என்ன பார்க்கிறீர்களோ மற்றும் கேட்கிறீர்களோ அதன் சாரத்தைத் தெரிந்து ஒரு நொடியில் உள்ளடக்குவதற்கும் மற்றும் பரிவர்த்தனை செய்வதற்குமான பயிற்சி குறைவாக இருக்கிறது. 'ஏன், என்ன' என்பதின் விஸ்தாரத்தில் விரும்பாவிட்டாலும் சென்று விடுகிறீர்கள். எனவே எப்படி விதையில் சக்தி அதிகமாக இருக்கும், மரத்தில் குறைவாக இருக்கும், மரம் என்றால் விஸ்தாரம். எந்தவொரு பொருளின் விஸ்தாரம் ஏற்படுகிறதோ கூடவே சக்தியின் விஸ்தாரமும் ஆகி விடுகிறது. எப்படி சாக்ரின் மற்றும் இனிப்பு பண்டம் இருக்கிறது. இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கும் தான் இல்லையா. அதை அதிக அளவில் உபயோகிக்க வேண்டியது இருக்கிறது. சாக்ரின் குறைந்த அளவில் இருந்தாலும் இனிப்பை அதிகமாகக் கொடுக்கும். இந்த வகையில் எந்தவொரு விஷயத்தின் விஸ்தாரத்தில் செல்வதினால் நேரம் மற்றும் எண்ணத்தின் சக்தி இரண்டுமே வீணாகச் சென்று விடுகிறது. வீணாகி விடுவதின் காரணமாக அந்த சக்தி இருப்பதில்லை. எனவே அந்த மாதிரி உயர்ந்த நிலையை உருவாக்குவதற்காக இந்தப் பயிற்சியை செய்யுங்கள். எந்தவொரு விஷயத்தின் விஸ்தாரத்தையும் உள்ளடக்கி சாரத்தில் நிலைத்திருக்கச் செய்ய முடியும். அந்த மாதிரி பயிற்சியை செய்து செய்து சுயம் சார ரூபம் ஆகும் காரணத்தினால் மற்ற ஆத்மாக்களுக்கும் ஒரு நொடியில் முழு ஞானத்தின் சாரத்தை அனுபவம் செய்விக்க முடியும். அனுபவம் நிறைந்தவர் தான் மற்ற ஆத்மாக்களுக்கும் அனுபவம் செய்விக்க முடியும். இந்த விஷயத்தில் நீங்களே குறைவான

அனுபவியாக இருக்கிறீர்கள். இந்தக் காரணத்தினால் மற்ற ஆத்மாக்களுக்கு அனுபவம் செய்விக்க முடிவதில்லை.

எப்படி ஏதாவதொரு சக்திசாலியான சாதனங்களில் எந்தவொரு பொருளையும் பரிவர்த்தனை (மாற்றம்) செய்வதற்கான சக்தி இருக்கிறது. உதாரணமாக அக்னி மிக சுடர்விட்டு அதாவது சக்திசாலியாக இருக்கிறது என்றால் அதில் எந்தவொரு பொருளைப் போட்டாலும் எளிதில் அதன் உருவம் மாறி விடும். ஒருவேளை அக்னி சக்திசாலியாக இல்லை என்றால், எந்தவொரு பொருளின் ரூபத்தை மாற்றம் செய்ய முடியாது, அதே போலவே எப்பொழுதும் தன்னுடைய சக்திசாலியான நிலையில் நிலைத்திருந்தீர்கள் என்றால், எந்தவொரு உலகியல் உணர்வு அல்லது இந்த உலகத்தின் பொருட்கள் அல்லது உணர்வில் இருக்கக்கூடிய நபர்கள் உங்கள் எதிரில் வந்தார்கள் என்றால், உங்களுடைய சக்திசாலியான நிலையின் அவர்களுடைய நிலை மற்றும் ரூபம், வடிவம் மாறி விடும். தேக உணர்வு உள்ளவரின் தேக உணர்வு மாறி ஆத்மீக நிலை உருவாகி விடும். வீணான விஷயம் பரிவர்த்தனை ஆகி பயனுள்ள ரூபத்தைக் கடைபிடித்து விடுவார்கள். தீய வார்த்தையை சுத்த எண்ணமாக மாற்றி விடுவார்கள். அந்த மாதிரியான பரிவர்த்தனை எப்பொழுது ஏற்படும் என்றால் நீங்கள் எப்பொழுது அந்த மாதிரி சக்திசாலியான நிலையில் நிலைத்திருப்பீர்களோ அப்பொழுது தான். எந்தவொரு உலகியல் தன்மையும் ஆன்மீகத் தன்மையில் பரிவத்தனை ஆகி விடும். சாதாரணமானது சாதாரணமற்ற ரூபத்தில் பரிவர்த்தனை ஆகி விடும். பிறகு அந்த மாதிரி நிலையில் நிலைத்திருப்பவர் எந்தவொரு நபர், சாதனம், வாயுமண்டலம், எண்ணத்தின் உணர்வலைகள், உள்உணர்வு மற்றும் பார்வையின் வசம் ஆக முடியாது. அப்படி என்ன காரணம் என்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? ஒன்றோ உள்ளடக்கும் சக்தியின் குறை, இன்னொன்று பரிவர்த்தனை செய்வதின் சக்தியின் குறைவு. அதாவது லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் இரண்டு நிலைகளிலும் எப்பொழுதுமே நிலைத்திருப்பதில்லை. எந்தவொரு காரியம் செய்வதற்கு முன்பும் பாப்தாதா மூலமாக என்னென்ன விசேஷ சக்திகளின் பரிசு கிடைத்திருக்கிறதோ அவற்றை காரியத்தில் கொண்டு வருவதில்லை. பார்த்தும் கேட்டும் மட்டும் குஷி அடைந்து விடுகிறீர்கள் ஆனால் அந்த நேரத்தில் காரியத்தில் கொண்டு வராத காரணத்தினால் குறை இருந்து விடுகிறது. ஒவ்வொரு காரியம் செய்வதற்கு முன்பும்

மாஸ்டர் மூன்று காலங்களையும் தெரிந்தவர் ஆகி, காரியம் செய்வதில்லை. ஒருவேளை மாஸ்டர் மூன்று காலங்களையும் தெரிந்தவராகி ஒவ்வொரு காரியம், ஒவ்வொரு எண்ணத்தையும் செய்கிறீர்கள், பேசுகிறீர்கள் என்றால் இப்பொழுது கூறுங்கள். எப்பொழுதாவது ஏதாவது காரியம் வீணானதாகவோ மற்றும் அர்த்தமற்றதாகவோ ஆக முடியுமா? காரியம் செய்யும் நேரத்தில் காரியத்தின் வசமாகி விடுகிறீர்கள். மூன்று காலங்களையும் தெரிந்தவர் என்றால் சாட்சி நிலையில் நிலைத்திருந்து இந்த கர்மேந்திரியங்கள் மூலமாக காரியம் செய்வதில்லை. எனவே வசமானவர் ஆகி விடுகிறீர்கள். வசமானவர் ஆவது என்றால் பூதங்களை வாருங்கள் என்று வரவேற்பது. காரியம் செய்த பிறகு மனவேதனை ஏற்படுகிறது ஆனால் அதனால் என்னவாகும்? கர்மத்தின் விளைவு மற்றும் கர்மத்தின் பலனோ உருவாகி விட்டது தான் இல்லையா? அப்படி காரியம் மற்றும் காரியத்தின் பலனின் பந்தனத்தில் மாட்டிக் கொள்ளும் காரணத்தினால், அவ்வாறு கர்ம பந்தனம் உள்ள ஆத்மா தன்னுடைய உயர்ந்த நிலையை அடைய முடியாது. எனவே கர்ம பந்தனத்திலிருந்து விடுபடுவதற்காக வந்திருக்கிறோம்; ஆனால் விடுபட்டுக் கொண்டே கர்ம பந்தனம் நிறைந்தவராகவோ ஆகி விடவில்லையே என்பதை எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். ஞான சொரூபம் ஆன பிறகு மற்றும் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர், மாஸ்டர் சர்வ சக்திவான் ஆன பிறகு ஒருவேளை எந்தக் காரியம் யுக்தி யுக்தானதாக இல்லையோ அதை செய்து விடுகிறீர்கள். எனவே இந்த கர்மத்தின் பந்தனம் அஞ்ஞான காலத்தின் கர்ம பந்தனத்தை விட பல மடங்கு அதிகமாகும். இந்தக் காரணத்தினால் பந்தனம் நிறைந்த ஆத்மா சுதந்திரமாக இல்லாத காரணத்தினால் என்ன விரும்புகிறாரோ அதைச் செய்ய முடிவதில்லை. இது நடந்திருக்கக்கூடாது, இது நடந்திருக்க வேண்டாம், இது அகன்று விட வேண்டும், குஷியின் அனுபவம் ஆக வேண்டும், லேசான மனநிலை வந்து விட வேண்டும், திருப்தியின் அனுபவம் ஏற்பட வேண்டும், சேவைக்குத் தகுதியானவர் ஆகி விட வேண்டும் மற்றும் தெய்வீக குடும்பத்தில் அருகாமையில் மற்றும் அன்பானவராக ஆகி விட வேண்டும் என்று விரும்புகிறார் ஆனால் செய்து விட்ட கர்மங்களின் பந்தனங்கள் காரணமாக விரும்பினால் கூட அந்த அனுபவத்தைச் செய்ய முடிவதில்லை. இந்த காரணத்தினால் தன்னைத் தானே மற்றும் தன்னுடைய முயற்சியின் மூலம் அனேக ஆத்மாக்களைத் திருப்திபடுத்த

முடிவதில்லை மேலும் அவரும் இருக்க முடிவதில்லை. எனவே இந்த கர்மங்களின் ஆழமான விளைவுகளைத் தெரிந்து, அதாவது மூன்று காலங்களையும் தெரிந்தவராகி ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள் அப்பொழுது தான் கர்மாதீத் ஆக முடியும். சிறிய தவறுகள் எண்ணங்களின் வடிவில் நடந்து விடுகிறது. அதற்கான கடுமையான கணக்கு வழக்கு உருவாகி விடுகிறது. சிறிய தவறை இப்பொழுது பெரியதாக நினைக்க வேண்டும். எப்படி மிக சுத்தமான பொருளுக்குள் சிறிய புள்ளி கூட பெரியதாகத் தென்படும். அதே போலவே தற்சமயம் மிக சுத்தமான சம்பூர்ண நிலையின் அருகில் வந்து கொண்டிருக்கிறீர்கள். எனவே சிறிய தவறைக் கூட இப்பொழுது பெரிய ரூபத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே இதிலேயும் இந்தச் சின்ன சின்ன தவறுகளோ நடக்கத் தான் செய்யும் என்று ஒன்றும் அறியாதவராக இருக்காதீர்கள். அப்படியில்லை; இப்பொழுது காலம் மாறி விட்டது. காலத்தின் கூடவே முயற்சி செய்யும் வேகமும் மாறி விட்டது. தற்சமயத்திற்கு ஏற்றபடி சின்னஞ்சிறு தவறுகளும் பெரிய பலஹீனத்தின் ரூபத்தில் எடுத்து கொள்ளப்படும். எனவே ஒவ்வொரு அடியிலும் கவனமாக இருக்க வேண்டும். ஒரு சின்னஞ்சிறு தவறு தன்னுடைய பிராப்தியிலிருந்து வெகு காலத்திற்காக வஞ்சிக்கச் செய்து விடும். எனவே ஞானம் நிறைந்தவராகி அதாவது லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆகுங்கள். அனேக ஆத்மாக்களுக்கு வழி காண்பிப்பவர், அவரே வழியில் சென்று கொண்டே நின்று விட்டார் என்றால், மற்றவர்களுக்கு வழி காண்பிப்பதற்கு பொறுப்பாளர் எப்படி ஆக முடியும்? எனவே எப்பொழுதும் தடைகளை அழிப்பவராக ஆகுங்கள். நல்லது. அந்த மாதிரி எப்பொழுதும் மூன்று காலங்களையும் தெரிந்த, கர்மயோகி, ஆகி நடந்து கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு நமஸ்காரம்.

ஞான சொரூபம் ஆன பிறகு மற்றும் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர், மாஸ்டர் சர்வ சக்திவான் ஆன பிறகு ஒருவேளை யாராவது யுக்தி யுக்தாக இல்லாத அந்த மாதிரி ஏதாவது காரியத்தை செய்து விட்டீர்கள் என்றால் இந்த கர்மத்தின் பந்தனம் அஞ்ஞான காலத்தின் பந்தனத்தை விட மடங்கு பல மடங்கு அதிகமாகும். இந்தக் காரணத்தினால் பந்தனம் நிறைந்த ஆத்மா சுதந்திரமாக இல்லாத காரணத்தினால் என்ன விரும்புகிறாரோ அதைச் செய்ய முடிவதில்லை!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.05.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாற்றத்திற்கான ஆதாரம் உறுதியான எண்ணம்!

இன்று அனைத்து முயற்சி செய்து கொண்டிருக்கும் ஆத்மாக்களை பார்த்துப் பார்த்து குஷி அடைந்து கொண்டிருக்கிறோம். ஏனென்றால் இதே உயர்ந்த ஆத்மாக்கள் உலகை மாற்றுவதற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்கள் என்று தெரிந்திருக்கிறோம். ஒவ்வொரு உயர்ந்த ஆத்மாவும் வரிசைக்கிரமமாக எவ்வளவு அதிசயம் செய்து கொண்டிருக்கிறது. தற்சமயம் ஏதோ குறை மற்றும் பலஹீனம் இருந்தபோதிலும் எதிர்காலத்தில் இதே ஆத்மாக்கள் என்னவாக இருப்பவர்கள் என்னவாக ஆகப்போகிறார்கள் மற்றும் என்னவாக இருப்பவர்களை என்னவாக ஆக்கப்போகிறார்கள். அப்படி எதிர்காலத்தைப் பார்த்து உங்கள் அனைவரின் சம்பூர்ண நிலையைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறோம். அனைவரையும் விட மிகப் பெரிய ஆன்மீக மந்திரவாதி தான் நீங்கள் இல்லையா? எப்படி மந்திரவாதி குறைந்த நேரத்திலேயே மிகுந்த விசித்திர காட்சிகளைக் காண்பிக்கிறார், அதே போல் ஆன்மீக மந்திரவாதிகளாகிய நீங்களும் உங்களுடைய ஆன்மீக நிலையின் சக்தி மூலமாக முழு உலகத்தையும் மாற்றத்தில் கொண்டு வரக்கூடியவர்கள். நீங்கள் ஒன்றும் இல்லாதவரை இரட்டை கிரீடம் அணிந்தவராக ஆக்கக்கூடியவர்கள் நீங்கள் ஆனால் தன்னை மாற்றும் மற்றும் உலகத்தை மாற்றும் இவ்வளவு பெரிய காரியத்தை ஒரே ஒரு உறுதியான எண்ணத்தினால் செய்யக்கூடியவர்கள் நீங்கள். ஒரே ஒரு உறுதியான எண்ணத்தினால் தன்னை மாற்றிவிடுகிறீர்கள். ஒரு எண்ணத்தின் மூலமாக அனேக ஜென்மங்களின் நினைவு மறந்த நிலையின் சம்ஸ்காரத்தை நினைவில் இருப்பதாக மாற்றி விடுகின்ற மாதிரி அது எந்த உறுதியான எண்ணம்? அந்த ஒரு எண்ணம் எது? ஒரு நொடிக்கான விஷயம் தான் அதன் மூலம் தன்னை மாற்றி விட்டீர்கள். ஒரே ஒரு நொடியின் மற்றும் ஒரே ஒரு எண்ணமாகிய 'நான் ஆத்மா ஆவேன் என்பதை தாரணை செய்தீர்கள்

இந்த உறுதியான எண்ணத்தினால் தன்னுடைய அனைத்து விஷயங்களையும் மாற்றத்தில் கொண்டு வந்தீர்கள். அதே போல உறுதியான எண்ணத்தினால் உலகத்தையும் மாற்றத்தில் கொண்டு வருகிறீர்கள். அந்த ஒரு உறுதியான எண்ணம் எது? நாம் தான் உலகிற்கு ஆதார மூர்த்தி, உதாரமூர்த்தி (நன்மை செய்பவர்) அதாவது விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்பவன்) ஆவேன். இந்த எண்ணத்தை தாரணை செய்ததினால்தான் உலக மாற்ற காரியத்தில் எப்பொழுதும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி ஒரே ஒரு எண்ணத்தினால் தன்னை மற்றும் உலகை மாற்றி விடுகிறீர்கள். அந்த மாதிரியான ஆன்மீக மந்திரவாதி நீங்கள். வெளியுலக மந்திரவாதியோ அற்பகாலத்திற்காக பொருட்களை மாற்றத்தில் கொண்டு வந்து காண்பிக்கிறார்கள், ஆனால் ஆன்மீக மந்திரவாதியாகிய நீங்கள் அழியாத மாற்றம், அழியாத பிராப்தி செய்பவர்கள் மற்றும் செய்விப்பவர்கள் ஆவீர்கள். எனவே இந்த உயர்ந்த பதவி மற்றும் உயர்ந்த காரியத்தை எப்பொழுதும் எதிரில் வைத்துக் கொண்டே ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியம் செய்தீர்கள் என்றால் எந்தவொரு எண்ணமும் மற்றும் செயலும் வீணாகாது. நடைமுறையில் பழைய உடல் மற்றும் பழைய உலகத்தில் இருந்து கொண்டே தன்னுடைய உயர்ந்த பதவியை மற்றும் உயர்ந்த காரியத்தை மறந்து விடும் காரணத்தினால் அனேக விதமான தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. தன்னைத் தானே மறப்பது இதுவும் தவறு தான் இல்லையா? யார் தன்னைத் தானே மறக்கிறாரோ அவர் அனேக தவறுகளுக்கு காரணமாகி விடுகிறார். எனவே தன்னுடைய பதவியை எப்பொழுதும் எதிரில் வையுங்கள். எப்படி உண்மையான பக்தனாக இருப்பவர்கள் அவர்களும் உலகத்தில் இருப்பவர்களை ஒப்பிடும் போது உலகில் உள்ள நாஸ்திகர், அஞ்ஞானி மனிதர்கள் பாவம் செய்கிறார்கள். விகாரங்களின் வசமாகிறார்கள். இவர்கள் அதிலிருந்து மிகுந்த தூரத்தில் இருக்கிறார்கள். ஏன்? என்ன காரணம் என்றால் உண்மையான பக்தன் எப்பொழுதும் தன்னுடைய இஷ்ட தெய்வத்தை எதிரிலேயே வைத்திருக்கிறார். அவரை எதிரில் வைக்கும் காரணத்தினால் அனேக விஷயங்களில் பாதுகாப்பாக இருந்து விடுகிறார். மேலும் அனேக ஆத்மாக்களை விட உயர்ந்தவர் ஆகி விடுகிறார். எப்பொழுது பக்தன் கூட பக்தி மூலமாக தன்னுடைய இஷ்ட தெய்வத்தை எதிரில் வைப்பதினால் நாஸ்திகன் மற்றும் அஞ்ஞானியை விட உயர்ந்தவர் ஆக முடியும் என்றால் ஞானசொரூபமான ஆத்மாக்கள்

தன்னுடைய உயர்ந்த பதவி மற்றும் காரியத்தை எதிரில் வைத்தார்கள் என்றால் என்னவாகி விடுவார்கள்? உயர்ந்ததிலும் உயர்ந்த ஆத்மாக்கள் ஆகி விடுவார்கள். எனவே எப்பொழுதும் தன்னுடைய பதவி மற்றும் காரியம் எதிரில் இருக்கிறதா என்று பாருங்கள். மேலும் தன்னைத் தானே கேளுங்கள். வெகுகாலமாக மறக்கும் சம்ஸ்காரத்தை தாரணை செய்திருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது கூட ஒருவேளை அடிக்கடி மறக்கும் சம்ஸ்காரத்தை தாரணை செய்து கொண்டே இருப்பீர்கள் என்றால் நினைவு சொரூபத்திற்கான போதை மற்றும் குஷியின் பிராப்தி என்ன வேண்டுமோ அதை எப்பொழுது செய்வீர்கள்? நினைவு சொரூபத்தின் சுகம் மற்றும் நினைவு சொரூபத்தின் குஷியின் அனுபவம் ஏன் ஏற்படுவதில்லை? அதற்கான முக்கிய காரணம் என்ன? இது வரை அனைத்து ரூபங்களில் பற்றுதலை வென்றவர் ஆகவில்லை. பற்றுதலை வென்றவர் என்றால் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் கூட நினைவு சொரூபத்தில் வந்து விடுவீர்கள். எனவே பற்றுதலை வென்றவராக எவ்வளவு ஆகியிருக்கிறோம் என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். அடிக்கடி தேக அபிமானத்தில் வருவது மற்றும் உடல் மேல் உள்ள பற்றுதலை அழிக்கவில்லை என்றால் உடலின் பற்றுதலிலிருந்து விலகவில்லை என்பதை நிரூபிக்கிறது. பற்றுதலை வென்றவர் ஆகாத காரணத்தினால் நேரம் மற்றும் தந்தை மூலமாக ஆஸ்தியாக பிராப்தி ஆகிக் கொண்டிருக்கும் சக்திகள் அவைகளையும் அழித்து விடுகிறீர்கள், காரியத்தில் ஈடுபடுத்த முடியவில்லை. அனைவருக்குமோ கிடைக்கிறது தான் இல்லையா? எப்பொழுது குழந்தைகள் ஆனார்கள் என்றால் என்னென்ன தந்தையின் சொத்துக்கள் மற்றும் ஆஸ்தி இருக்கிறதோ அதன் அதிகாரியாக ஆகிறார்கள். அப்படி அனைத்து ஆத்மாக்களுக்கும் அனைத்து சக்திகளின் ஆஸ்தி கிடைக்கத்தான் செய்கிறது ஆனால் அந்த அனைத்து சக்திகளின் ஆஸ்தியை காரியத்தில் ஈடுபடுத்துவது மற்றும் தன்னைத் தானே முன்னேற்றத்தில் கொண்டு வருவது இது வரிசைக்கிரமமான முயற்சியின் ஆதாரத்தில் இருக்கிறது. எனவே எல்லைக்கப்பாற்பட்ட தந்தையின் குழந்தைகளாக இருந்து கொண்டு எல்லைக்குட்பட்ட ஆஸ்தியை பெறுகிறார்கள் என்றால் என்னவென்று கூறுவது. எல்லைக்கப்பாற்பட்ட பதவிக்கு பதிலாக எல்லைக்குட்பட்ட ஆஸ்தி மற்றும் பதவி பெறுவது என்பது எல்லைக்கப்பாற்பட்ட குழந்தைகளின் காரியம் அல்ல. எனவே இப்பொழுது கூட தன்னைத் தானே எல்லைக்கப்பாற்பட்ட ஆஸ்தியின் அதிகாரி ஆக்குங்கள். அதிகாரி

ஒருபொழுதும் அடிமை ஆவதில்லை. தன்னுடைய படைப்பின் அடிமை ஆவதில்லை. தன்னுடைய படைப்பின் அடிமை ஆவதை அதிகாரி என்று கூற முடியுமா? அடிக்கடி நினைவு மறந்த நிலையில் வருவதினால் தன்னைத் தானேயே பலஹீனமாக ஆக்கிக் கொள்கிறீர்கள். பலஹீனமாக ஆவதின் காரணத்தினால் மிகச் சிறிய விஷபத்தையும் உங்களால் எதிர்கொள்ள முடியவில்லை. இப்பொழுது அரைக் கல்பமாக இருக்கும் இந்த நினைவு மறந்த நிலையின் சம்ஸ்காரங்களுக்கு விடை கொடுங்கள். இன்று பாப்தாதாவும் உங்கள் அனைவரிடமிருந்து உறுதிமொழி எடுக்க செய்விக்கிறார். எப்படி உலகத்தினருக்கு வினாஷம் ஏற்படுவதற்கு இன்னும் கொஞ்ச காலம் தான் மீதம் இருக்கிறது என்று சவால் விடுகிறீர்கள். எனவே கொஞ்ச காலத்தில் தன்னைத் தானே சதோபிரதானமாக ஆக்க முடியாதா? எப்படி உலகத்திற்கு சவால் விடுகிறீர்கள் அதே போல் நீங்களும் நினைவு மறந்த நிலையின் சம்ஸ்காரங்களுக்கு விடை கொடுக்க முடியாதா? உலகத்தினருக்கு சவால் விடுபவர்கள் தானே தனக்காக மாயாவை சவால் விட முடியாதா? மாயாவை வென்றவர் ஆக முடியாதா? எப்பொழுது அவர்களுக்கு தைரியம் கொடுக்கிறீர்கள் உற்சாகத்தில் கொண்டு வருகிறீர்கள் என்றால் தனக்காக தனக்குத் தானே தைரியம் மற்றும் உற்சாகம் கொடுக்க முடியாதா என்ன? எனவே இன்றிலிருந்து ஒருபொழுதும் எந்த ரூபத்திலும் எந்த சூழ்நிலையிலும் கூட மாயாவிடம் தோல்வி அடைய மாட்டோம் ஆனால் சண்டையிடுவோம் மற்றும் வெற்றி அடைவோம் என்ற உறுதிமொழியை எடுங்கள். இந்த கங்கணத்தைக் கட்ட முடியாதா என்ன? யாருக்கு ஞானம் இல்லையோ, சக்தி இல்லையோ அவர்களுக்கும் கூட இராக்கி கட்டி கட்டி உறுதிமொழி எடுக்க வைக்கிறீர்கள். மேலும் யார் வெகுகாலமாக ஞானம், சம்மந்தம் மற்றும் சக்தியின் பிராப்தி செய்பவராக இருக்கிறாரோ அந்த உயர்ந்த ஆத்மாக்கள், மஹாவீர் ஆத்மாக்கள், சக்தி சொரூப ஆத்மாக்கள், பாண்டவ சேனை இந்த உறுதிமொழி என்ற இராக்கியை கட்டிக் கொள்ள முடியாதா என்ன? கடைசி வரை பலஹீனம் மற்றும் குறையை தன்னுடைய துணைவனாக ஆக்க விரும்புகிறீர்களா என்ன? இன்றைய நாட்களில் அறிவியல் மூலமாகக் கூட ஒரு நொடியில் எந்தவொரு பொருளையும் பஸ்பம் செய்து விடுகிறார்கள் என்றால் ஞானம் நிறைந்த மாஸ்டர் சர்வ சக்திவான் ஒரு நொடியின் உறுதியான எண்ணத்தினால் மற்றும் உறுதிமொழியினால் தன்னுடைய பலஹீனங்களை பஸ்பம் செய்ய முடியாதா என்ன?

மற்றவர்களுக்கோ மிக உறுதியாக அழுத்தமாக இந்த விஷயத்தை சொல்கிறீர்கள். எப்படி மற்றவர்களுக்கு உறுதியாக அழுத்தமாகக் கூறுகிறீர்களோ, தன்னைத் தானேயும் வெற்றி அடைபவராக ஆக்குவதற்காக உறுதித் தன்மை மற்றும் பெருமிதத்தை வைக்க முடியாதா? எனவே இன்றிலிருந்து பலஹீனங்களுக்கு விடை கொடுத்து விடுங்கள்.

இந்த நேரம் முயற்சி செய்பவர், அடுத்த நேரம் பரிஷ்தா ரூபம் அப்படி இவ்வளவு சமீபமாக தன்னுடைய சம்பூர்ண நிலை தென்படவில்லையா? எப்பொழுது நேரம் இவ்வளவு அருகில் இருக்கிறது என்றால் சம்பூர்ண நிலை கூட அருகில் தான் இருக்கிறது. இதனால் தான் முயற்சி செய்வதில் பலம் நிரம்பும். எப்படி யாருக்கா சென்றடைய வேண்டிய இலக்கு இவ்வளவு குறைந்த தூரத்தில் இருக்கிறது என்று தெரிய வந்து விட்டால் இலக்கை சென்றடையும் குஷியில் அனைத்து விஷயங்களையும் மறந்து விடுகிறார். முயற்சி செய்து கொண்டிருக்கும்பொழுதே வரும் களைப்பு மற்றும் சிறுசிறு குழப்பங்களில் மாட்டிக் கொண்டு சோம்பலில் வந்து விடுகிறீர்கள் அந்த அனைத்தையும் அகற்றுவதற்காகத் தன் எதிரில் நேரம் மற்றும் நேரத்தின் கூடவே தன்னுடைய பிராப்தியை வைத்தீர்கள் என்றால் சோம்பல் மற்றும் களைப்பு அகன்று விடும். எப்படி ஒவ்வொரு வருடத்திற்கான சேவை திட்டம் வகுக்கிறீர்கள். அதே போல் ஒவ்வொரு வருடமும் தன்னுடைய முன்னேறும் கலை மற்றும் சம்பூர்ணம் ஆவதற்கான மற்றும் உயர்ந்த எண்ணம் மற்றும் காரியம் செய்வதற்காகக் கூட திட்டம் தீட்டுங்கள். மேலும் திட்டத்தின் கூடவே ஒவ்வொரு நேரமும் திட்டத்தை எதிரில் வைத்துக் கொண்டே நடைமுறையில் கொண்டு வந்து கொண்டே இருங்கள். நல்லது.

அந்த மாதிரி உறுதிமொழி செய்து தன்னுடைய சம்பூர்ண சொரூபத்தை மற்றும் தந்தையை பிரத்யக்ஷம் செய்யக்கூடியவர்களுக்கு நமஸ்காரம்.

**வரதானம்: தந்தை மற்றும் பிராப்தியின் நினைவினால் எப்பொழுதும் தைரியம் உற்சாகத்தில் இருக்கக்கூடிய ஒரே சீரான நிலை உள்ள, ஆடாத அசையாதவர் ஆகுக!**

# 1972 அவ்யக்த முரளி

பிறந்தவுடனேயே தந்தை மூலமாகக் கிடைத்த பிராப்திகளின் பட்டியலை எப்பொழுதும் எதிரில் வையுங்கள், எப்பொழுது பிராப்தி ஆடாத அசையாததாக இருக்கிறது என்றால் தைரியம் மற்றும் உற்சாகமும் ஆடாத அசையாததாக இருக்க வேண்டும். அசையாததற்குப் பதிலாக ஒருவேளை மனம் எப்பொழுதாவது சஞ்சலம் ஆகி விடுகிறது மற்றும் நிலை குழப்பத்தில் வந்து விடுகிறது என்றால் அதற்கான காரணம் தந்தை மற்றும் பிராப்தியை எப்பொழுதும் எதிரில் வைப்பதில்லை. அனைத்து பிராப்திகளின் அனுபவம் எப்பொழுதும் எதிரில் மற்றும் நினைவில் இருக்கிறது என்றால் அனைத்து தடைகளும் அழிந்து விடும், எப்பொழுதும் புதிய ஊக்கம் உற்சாகம் இருக்கும். நிலை ஒரே சீரானதாக மற்றும் ஆடாததாக இருக்கும்.

**சுலோகன்: எந்த விதமான சேவையிலும் எப்பொழுதும் திருப்தியாக இருப்பது தான் நல்ல மதிப்பெண்கள் பெறுவது ஆகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 27.05.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ராவணனிடம் இருந்து விலகி தந்தையின் எதிரில் இருங்கள்!

இங்கு யார் யார் அமர்ந்திருக்கிறீர்களோ அவர்கள் அனைவரது இந்த நேரத்து ஸ்டேஜ் (நிலை) உயர்ந்த ஸ்டேஜ் என்று சொல்லலாமா அல்லது அவ்யக்த (உடலை விட்டு விலகிய) நிலை என்று கூறலாமா? இந்த நேரம் அனைவரின் அவ்யக்த நிலை இருக்கிறதா? அல்லது இப்பொழுது கூட யாராவது வியக்த பாவத்தில் (உடல் உணர்வில்) மூழ்கி இருக்கிறீர்களா? யார் இல்லையோ அவர்கள் கையை உயர்த்துங்கள். ஒருவேளை இந்த நேரம் அவ்யக்த நிலையில் நிலைத்திருந்து வியக்த பாவத்தின் உணர்விலிருந்து விலகியிருக்கிறீர்கள் என்றால் ஏன் விலகி இருக்கிறீர்கள்? அனைவரின் ஒரே மாதிரியான அவ்யக்த நிலை ஏன் உருவானது? எப்படி உருவானது? அவ்யக்த பாப்தாதாவின் எதிரில் இருக்கும் காரணத்தினால் அனைவரின் ஒரே மாதிரியான அவ்யக்த நிலை உருவாகி விட்டது. இவ்வாறே ஒருவேளை எப்பொழுதும் தன்னை பாப்தாதாவின் எதிரில் இருக்கிறேன் என்று புரிந்து கொண்டு நடந்தீர்கள் என்றால், என்ன நிலை இருக்கும்? அவ்யக்தமாக இருக்கும் இல்லையா? பின்பு பாப்தாதாவின் எதிரில் எப்பொழுதும் இருப்பதற்குப் பதிலாக பாப்தாதாவை தன்னை விட்டு விலக்கி, தூரமாக இருக்கிறார் என்று நினைத்து ஏன் நடந்து கொள்கிறீர்கள்? எப்படி சீதை எப்பொழுதும் யார் எதிரில் இருந்தார் என்று சீதையின் ஒரு உதாரணம் கூறுகிறீர்கள் மற்றும் கேட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள். ராமனின் எதிரில்! எதிரில் என்றால் ஸ்தூலமாக எதிரில் இல்லை ஆனால் புத்தி மூலமாக எப்பொழுதும் பாப்தாதாவின் எதிரில் இருப்பது. பாப்தாதாவின் எதிரில் இருப்பது என்றால் ராவணன் மாயாவிடமிருந்து விலகியிருப்பது! எப்பொழுது மாயாவின் எதிரில் இருந்து விடுகிறீர்களோ அப்பொழுது தந்தையிடமிருந்து புத்தி விலகி விடுகிறது. எது மிகவும் பிரியமான உறவாக இருக்கிறதோ அதன் எதிரில் இயல்பாகவே அமர்வது, எழுவது, சாப்பிடுவது குடிப்பது, நடப்பது அதாவது எப்பொழுதும் உடன் இருப்பதின்

அனுபவம் ஏற்படுகிறது. அப்படியானால் பாப்தாதாவின் எதிரில் எப்பொழுதும் இருக்க முடியாதா என்ன? ஒருவேளை எப்பொழுதும் எதிரில் இருந்தீர்கள் என்றால், எப்பொழுதும் அவ்யக்த நிலை இருக்கும். ஏன் தூரமாகி விடுகிறீர்கள்? என்ன, இன்னும் குழந்தைப் பருவத்து விளையாட்டை விளையாடுகிறீர்களா என்ன? அந்த மாதிரி சில குழந்தைகள் இருக்கிறார்கள், அவர்களை எவ்வளவு தான் தாய், தந்தை அருகில் அழைத்தாலும், குறும்புத்தனம் இருக்கும் காரணத்தினால் தூரமாக ஓடுவார்கள். என்ன இது பார்க்க நன்றாக இருக்கிறதா? எப்பொழுதும் தன்னை எதிரில் இருப்பதாகப் புரிந்து கொள்வதினால் தன்னை எப்பொழுதும் அனைத்து சக்திகளும் நிறைந்தவராக உணருவீர்கள். அனைத்து சக்திகளும் நிறைந்தவர்களை வேறு எந்தவொரு சக்தியும் தாக்க முடியாது மேலும் அனைத்து சக்திகளும் நிறைந்தவர் ஒருபொழுதும் தோல்வி அடைய முடியாது. இன்று அற்ப கால அதிகாரம் உள்ளவர் கூட எவ்வளவு சக்திசாலியாக இருக்கிறார்! அப்படி அனைத்து சக்திகளும் நிறைந்தவரோ சர்வ சக்திவான் தான் இல்லையா? சர்வ சக்திகளின் எதிரில் அற்பகால சக்திகள் உடையவர் கூட தலைவணங்கக்கூடியவர்கள் தான். எதிர்க்க மாட்டார்கள், ஆனால் தலைவணங்குவார்கள். எதிர்ப்பதற்குப் பதிலாக அடிக்கடி நமஸ்காரம் செய்வார்கள். எனவே தன்னை அப்படி அனைத்து சக்திகளும் நிறைந்தவர் என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கிறீர்களா? தன்னை அனைத்து சக்திகளும் நிறைந்தவர் என்று புரிந்து கொள்வது என்றால், சர்வ சக்திவான் தந்தையை எப்பொழுதும் உடன் வைப்பதாகும். எப்படி பாருங்கள் இன்றைய நாட்களில் பக்தி மார்க்கத்தைச் சேர்ந்தவர்களிடம் என்ன ஒரு அதிகாரம் இருக்கிறது? சாஸ்திரத்தின் அதிகாரம் இருக்கிறது. அவர்களுடைய புத்தியில் எப்பொழுதும் சாஸ்திரம் இருக்கும் இல்லையா? எந்தவொரு காரியம் செய்தாலும், எதிரில் சாஸ்திரத்தைத் தான் கொண்டு வருவார்கள் மேலும் நீங்கள் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறீர்களோ அது சாஸ்திர பிரமாணம் இருக்கிறது என்று கூறுவார்கள். அப்படி எப்படி சாஸ்திரங்களின் அதிகாரம் உள்ளவர்களிடம் எப்பொழுதும் புத்தியில் சாஸ்திரங்களின் ஆதாரம் இருக்கிறது. அதாவது சாஸ்திரம் தான் புத்தியில் இருக்கிறது. அவர்களின் எதிரில் சாஸ்திரம் இருக்கிறது, உங்கள் எதிரில் என்ன இருக்கிறது? அனைத்து சக்திகளும் நிறைந்த தந்தை! அப்படி அவர்கள் எப்படி எந்தவொரு காரியம் செய்தாலும்

சாஸ்திரங்களின் ஆதாரம் இருக்கும் காரணத்தினால், உரிமையுடன் அதே காரியத்தை சத்தியம் என்று ஏற்றுக் கொண்டு செய்கிறார்கள். எவ்வளவு தான் நீங்கள் அகற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள் ஆனால் தங்களுடைய அதிகார உரிமையை விடுவதில்லை. எந்தவொரு விஷயத்திலும் சாஸ்திரத்தின் அத்தாரிட்டியோடு (அதிகாரத்தோடு) நாங்கள் கூறுகிறோம் என்று அடிக்கடி சொல்வார்கள். சாஸ்திரம் ஒருபொழுதும் பொய்யாக முடியாது. சாஸ்திரத்தில் என்ன இருக்கிறதோ அது தான் சத்தியம் என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு அசைக்க முடியாத நிச்சயம் இருக்கிறது. அதே போலவே சர்வ சக்திவான் தந்தையின் அதிகாரம் என்ன இருக்கிறதோ அதன் அத்தாரிட்டியினால் அனைத்து காரியங்களையும் செய்பவர்கள் நாங்கள் என்று அந்த அளவு யாரும் அகற்ற முடியாத அளவிற்கு நிச்சயமாகி விட வேண்டும். அந்த மாதிரி அசைக்க முடியாத நிச்சயம் இருக்கிறதா? எப்பொழுதும் தன்னுடைய அத்தாரிட்டி நினைவு இருக்கிறதா அல்லது மற்றவர்களின் அத்தாரிட்டியைப் பார்த்து தன்னுடைய அத்தாரிட்டி மறந்து விடுகிறதா? அனைவரையும் விட உயர்ந்த அத்தாரிட்டியின் ஆதாரத்தில் நடந்து கொள்பவர்கள் தான் நீங்கள் இல்லையா? எப்பொழுதும் இந்த அத்தாரிட்டியை நினைவில் வைத்துக் கொண்டீர்கள் என்றால், முயற்சி செய்வது ஒருபொழுதும் இது கடினமான வழி என்று தோன்றாது. எந்தவொரு காரியம் செய்வதற்கு முன்பும் அத்தாரிட்டியை எதிரில் வைப்பதினால் மிக சுலபமாக இந்தச் செயலைச் செய்யலாமா அல்லது வேண்டாமா என்று தீர்மானம் செய்ய முடியும். எதிரில் அத்தாரிட்டியின் ஆதாரம் இருக்கும் காரணத்தினால் அவற்றைகாப்பி (எப்படி இருக்கிறதோ அப்படி) மட்டும் செய்ய வேண்டும். காப்பி அடிப்பது சுலபமாக இருக்கிறதா அல்லது கடினமாக இருக்கிறதா? ஆம் அல்லது இல்லை. அதன் பதிலை அத்தாரிட்டியின் எதிரில் வைப்பதினால் தானாகவே உங்கள் எதிரில் வந்து விடும். எப்படி இன்றைய நாட்களில் அறிவியலும் அந்த மாதிரியான இயந்திரத்தை தயாரித்திருக்கிறது. அதில் எந்தக் கேள்வியைப் போட்டாலும் அதற்கான பதில் சுலபமாகக் கிடைத்து விடுகிறது. இயந்திரம் மூலமாக கேள்விக்குப் பதில் வெளி வருகிறது என்றால், மூளையை ஓட விடுவதிலிருந்து விடுபட்டு விடுகிறார்கள். அதே போன்று சர்வ சக்திவானின் எதிரில் வைப்பதினால் எந்தவொரு கேள்வி கேட்டாலும் அதற்கான பதில் நடைமுறையில் உங்களுக்கு சுலபமாகவே கிடைத்து விடும். சுலபமான வழியாக அனுபவம் ஏற்படும். அந்த மாதிரி சுலபமான உயர்ந்த ஆதாரம்

கிடைத்திருந்தும் ஒருவேளை யாராவது அந்த ஆதாரத்தின் லாபத்தை எடுக்கவில்லை என்றால், அவரை என்னவென்று சொல்வது? தன்னுடைய பலஹீனமாகும்! எனவே பலஹீனமான ஆத்மா ஆவதற்குப் பதிலாக சக்திசாலியான ஆத்மா ஆகுங்கள். பிறரையும் ஆக்குங்கள். தன்னை சர்வ சக்திவான் என்று புரிந்து கொள்வதினால் மூன்று முக்கியமான விஷயங்கள் தானாகவே தன்னுள் தாரணை ஆகி விடும். அந்த மூன்று விஷயங்கள் எவை?

புத்தியின் டிரில் (பயிற்சி) செய்வதினால் கேட்ட ஞானத்தை ஓட விடுகிறீர்கள். இதுவும் நல்லது தான். இதன் மூலம் சக்தி அதிகரிக்கிறது. எந்தவொரு அதிகாரம் உள்ளவர்களாக இருந்தாலும், சாதாரண அதிகாரம் உள்ளவர்களிலும் மூன்று விஷயங்கள் இருக்கின்றன ஒன்று நிச்சயம், இரண்டாவது போதை. மூன்றாவது பயமின்மை. இந்த மூன்று விஷயங்களின் காரணமாக அந்த அதிகாரமுள்ளவர்கள் தவறு செய்பவர்களாக இருந்தாலும், யதார்த்தம் அற்றவர்களாக இருந்தபோதிலும் எவ்வளவு திடமான நிச்சயபுத்தியுடன் பேசுகிறார்கள் மற்றும் நடந்து கொள்கிறார்கள்! எவ்வளவு நிச்சயம் இருக்குமோ அந்தளவு பயமற்றவராகி போதையில் பேசுகிறார்கள். அது போலவே பாருங்கள். எப்பொழுது நீங்கள் அனைவரும் அனைத்து சக்திகள் நிறைந்தவர்களாக இருக்கிறீர்களோ, அனைவரையும் விட உயர்ந்த அதிகார முள்ளவர்களாக இருக்கிறீர்கள் என்றால். எவ்வளவு போதை இருக்க வேண்டும்? எவ்வளவு நிச்சயத்தோடு பேச வேண்டும்? மேலும் பயமற்ற நிலையும் வேண்டும். யாராவது ஏதாவது விதத்தில் உங்களை தோல்வி அடையச் செய்வதற்கு முயற்சி செய்தாலும் பயமற்ற நிலை, நிச்சயம் மற்றும் போதையின் ஆதாரத்தில், எப்பொழுதாவது தோல்வி அடைய முடியுமா? இல்லவே இல்லை, எப்பொழுதும் வெற்றி அடைபவராக இருப்பார். வெற்றி இல்லாமல் இருப்பதற்கான காரணம் இந்த மூன்று விஷயங்களிலிருந்து ஏதோ ஒரு விஷயத்தில் குறை இருக்கிறது. எனவே வெற்றி அடைபவர் ஆக முடிவதில்லை. அப்படி இந்த மூன்று விஷயங்களையும் ஒவ்வொரு அடி எடுத்து வைப்பதில் எதுவரை இந்த விஷயங்கள் நடைமுறையில் இருக்கின்றன என்று தனக்குத் தானே பாருங்கள். ஒன்று முழு ஞானத்தில் தந்தை மீது நிச்சயம் இருப்பது ஆனால் எந்தவொரு காரியம் செய்யும்பொழுதும் வார்த்தைகள் பேசும்பொழுதும் இந்த மூன்று

தகுதிகளுமே இருக்கட்டும். அந்த நடைமுறை விஷயம் வேறாக இருக்கிறது.

மேலும் எப்பொழுது இந்த மூன்று விஷயங்களும் ஒவ்வொரு செயல், ஒவ்வொரு வார்த்தையில் வந்து விடுமோ அப்பொழுது தான் உங்களுடைய ஒவ்வொரு வார்த்தை மற்றும் காரியமும் சர்வ சக்திவானை பிரத்யக்ஷம் செய்யும். இப்பொழுதோ சாதாரணம் என்று நினைக்கிறார்கள். இவர்களுடைய அதிகாரமாவது சுயம் சர்வ சக்திவான் தந்தையே! என்ற இதை அனுபவம் செய்வதில்லை. இதை எப்பொழுது அனுபவம் செய்வார்கள் என்றால், எப்பொழுது ஒரு நொடி கூட அதிகாரத்தை விட்டு விட்டு எந்த ஒரு காரியமும் செய்ய மாட்டீர்களோ, வார்த்தைகள் பேச மாட்டீர்களோ அப்பொழுது தான்! அதிகாரத்தை மறப்பதினால் தான் சாதாரண காரியமாகி விடுகிறது. அப்படி மற்றவர்களுக்கும் சாதாரணமானதாக, எப்படி உலகில் மற்ற ஆத்மாக்கள் ஏதோ கொஞ்சம் செய்கிறார்கள், அதே போல் அனுபவம் ஆகிறது. யார் யார் வருகிறார்களோ அவர்கள் ரிசல்ட்டாக என்ன கூறுகிறார்கள்? உங்களுடைய விசேஷங்களை வர்ணனை செய்து கொண்டே கூடவே சாதாரண தன்மையையும் அவசியம் வர்ணனை செய்து கொண்டே இருக்கிறார்கள். மற்ற இயக்கங்களிலும் இதே போல் தான், எப்படி அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்களோ அதே போல் தான் இவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அப்படியானால் சாதாரண நிலையாகி விட்டது இல்லையா? ஓரிரு விஷயங்கள் விசேஷமாகப்படுகிறது ஆனால் ஒவ்வொரு காரியமும், ஒவ்வொரு வார்த்தையும் வேறு யாருடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அளவிற்கு விசேஷமாக அனுபவம் ஆக வேண்டும். அந்த நிலை இன்னும் வரவில்லை தான் இல்லையா? அனைத்து சக்திகள் நிறைந்தவரது எந்தவொரு நடவடிக்கையும் சாதாரணமானதாக எப்படி இருக்க முடியும்? பரமாத்மாவின் அதிகாரம் மற்றும் ஆத்மாக்களின் அதிகாரத்திலோ இரவு பகலுக்கான வித்தியாசம் இருக்க வேண்டும். அப்படி தன் மேலே அதாவது தன்னுடைய வார்த்தை மற்றும் செயல்களில் மற்ற ஆத்மாக்களை விட இரவு பகலுக்கான வித்தியாசத்தை உணருகிறீர்களா? இரவு பகலுக்கான வித்தியாசம் அந்தளவு இருக்கும் பட்சத்தில் அதை யாருக்காவது இந்த வித்தியாசம் இருக்கிறது என்று புரிய வைப்பதற்கான அவசியமும் ஏற்படுவதில்லை. தானாகவே இது இரவு, இது பகல் என்று புரிந்து

கொள்வார்கள். அப்படி நீங்களும் எப்பொழுது சர்வ சக்திவானின் அதிகாரத்தின் ஆதாரத்தில் ஒவ்வொரு காரியமும் செய்பவர்களாக இருக்கிறீர்களோ, ஒவ்வொரு வழிகாட்டுதலின்படி நடப்பவர்களாக இருக்கிறீர்கள் என்றால், இரவு பகலுக்கான வித்தியாசம் தென்பட வேண்டும். வந்தவுடனேயே இது ஒன்றும் சாதாரண இடமில்லை என்று புரிந்து கொள்ளும் அளவிற்கு அப்படி வித்தியாசம் இருக்க வேண்டும். இவர்களின் ஞானம் சாதாரணமானது அல்ல. எப்பொழுது அந்த மாதிரி பிரபாவம் ஏற்படுமோ அப்பொழுது தன்னுடைய அதிகாரத்தை பிரத்யக்ஷம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். எப்படி சாஸ்திரவாதிகளின் வார்த்தைகளிலிருந்து இவர்களுக்கு சாஸ்திரங்களின் அதிகாரம் இருக்கிறது என்று தென்படுகிறதோ. அதே போன்று உங்களுடைய ஒவ்வொரு வார்த்தையிலிருந்தும் அதிகாரம் பிரசித்தி ஆக வேண்டும். கடைசி நிலை என்பது இது தான் இல்லையா? வார்த்தை மூலம், முகம் மூலம், நடத்தை மூலம் அனைவரிடமிருந்தும் அதிகாரம் தெரிய வர வேண்டும். இன்றைய உலகத்தில் ஒருவேளை சிறிய அதிகாரமுள்ள அலுவலர் தன்னுடைய வேலையில் எப்பொழுது இருக்கிறாரோ அப்பொழுது அவரிடம் எவ்வளவு அதிகாரம் நிறைந்த செயல்பாடு தென்படுகிறது. போதை இருக்கிறது தான் இல்லையா? அதே போதையில் ஒவ்வொரு செயலையும் செய்கிறார். அவர்கள் எல்லைக்குட்பட்ட சாஸ்திரங்களின் அதிகாரம் உள்ளவர்கள். இது ஆன்மீக அழியாத அதிகாரம் ஆகும்.

அந்த மாதிரி அதிகாரம் நிறைந்த தந்தையை எதிரில் வைத்து அதிகார உரிமையோடு நடந்து கொள்ளக்கூடிய ஆத்மாக்களுக்கு நமஸ்காரம்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 31.05.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எதிர்காலத்தில் அஷ்ட தேவதை மற்றும் பக்தியில் இஷ்ட தேவதை ஆவதற்கான முயற்சி!

உங்களை நீங்களே எப்பொழுதும் சிவசக்தி என்று புரிந்து ஒவ்வொரு காரியமும் செய்கிறீர்களா? தன்னுடைய அலங்காரம் மற்றும் அஷ்ட கைகளுடைய மூர்த்தி எப்பொழுதும் தன்னுடைய எதிரில் இருக்கிறதா? அஷ்ட கைகள் உள்ளவர் என்றால் அஷ்ட சக்திகள் உள்ளவர். அப்படி எப்பொழுதும் தன்னுடைய அஷ்ட சக்தி சொரூபம் தெளிவான ரூபத்தில் தென்படுகிறதா? சிவமய சக்திகள் என்று சக்திகளின் மகிமையாக இருக்கிறது. அப்படி சிவபாபாவின் நினைவில் எப்பொழுதும் இருக்கிறீர்களா? சிவன் மற்றும் சக்தி இருவருக்கும் சேர்த்தே மகிமை செய்கிறார்கள். எப்படி ஆத்மா மற்றும் உடல் இரண்டும் சேர்ந்தே இருக்கிறதோ, எதுவரை இந்த உலகத்தில் வாழ்க்கை இருக்கிறதோ அது வரை பிரிய முடியாது. அதே போல் சிவன் மற்றும் சக்தி இருவருக்குமே அந்த அளவு ஆழமான சம்மந்தம் இருக்கிறது. இதைத்தான் சிவசக்தி இணைந்த நிலை என்று மகிமை செய்கிறார்கள். அதே போல் எப்பொழுதும் சேர்ந்திருப்பதின் அனுபவம் செய்கிறீர்களா அல்லது மகிமை மட்டும் தான் இருக்கிறதா? இந்த சேர்ந்திருப்பதை யாரும் எப்பொழுதும் உடைக்க முடியாத, அழிக்க முடியாத அளவிற்கு அந்த மாதிரி சேர்ந்திருக்க வேண்டும். அந்த மாதிரி அனுபவம் செய்து கொண்டே எப்பொழுதும் சிவமய சக்தி சொரூபத்தில் நிலைத்திருந்து கொண்டே நடந்து கொண்டீர்கள் என்றால் ஒருபொழுதும் இருவரின் இணைந்த நிலையில் மாயா தடை ஏற்படுத்த முடியாது. இரண்டு பேர் பத்து பேருக்குச் சமம் என்று பழமொழியும் இருக்கிறது, அப்படி எப்பொழுதும் சிவன் மற்றும் சக்தி இரண்டும் சேர்ந்து விடுவதால் அந்த மாதிரி சக்தியின் எதிரில் யாரும் எதுவும் செய்ய முடியுமா? இந்த இரட்டை சக்திகளின் எதிரில் வேறு எந்த சக்தியும் போரிட முடியாது, தோல்வி அடையச்

செய்யவும் முடியாது. ஒருவேளை தோல்வி ஏற்படுகிறது என்றால் அல்லது மாயாவின் முற்றுகை ஏற்படுகிறது என்றால் அந்த நேரம் சிவசக்தி சொரூபத்தில் நிலைத்திருக்கிறீர்களா? தன்னுடைய அஷ்ட சக்தி நிரம்பிய சம்பூர்ண சொரூபத்தில் நிலைத்திருக்கிறீர்களா?

அஷ்ட சக்திகளிலிருந்து ஒருவேளை ஏதாவது ஒரு சக்தியின் குறை இருக்கிறது என்றாலும் அஷ்டகைகள் உடைய சக்திகளுக்காக என்ன மகிமை இருக்கிறதோ அது இருக்க முடியுமா? நான் எப்பொழுதும் அஷ்ட கைகள் உடைய சிவசக்தி ஆகி நடந்து கொண்டிருக்கிறேனா என்று உங்களை நீங்களே எப்பொழுதும் பாருங்கள். யார் எப்பொழுதும் அஷ்ட சக்திகளை தாரணை செய்கிறாரோ அவர் தான் அஷ்ட தேவதையில் வர முடியும். ஒருவேளை தன்னுள் ஏதாவது சக்தியின் குறைவை அனுபவம் செய்கிறீர்கள் என்றால் அஷ்ட தேவதையில் வருவது கடினமாகும். மேலும் அஷ்ட தேவதை முழு உலகத்திற்காக இஷ்ட ரூபத்தில் மகிமையும் செய்யப்படுகிறார் மற்றும் பூஜிக்கவும் படுகிறார். அப்படி பக்தி மார்க்கத்தில் இஷ்ட தேவதை ஆக வேண்டும் அல்லது எதிர்காலத்தில் அஷ்ட தேவதை ஆக வேண்டும் என்றால் அஷ்ட சக்திகளை எப்பொழுதும் தன்னுள் தாரணை செய்து கொண்டே இருங்கள். இந்த சக்திகளின் தாரணையினால் இயல்பாகவே மேலும் சுலபமாக இரண்டு விஷயங்களின் அனுபவம் செய்வீர்கள். அந்த இரண்டு விஷயங்கள் எவை? எப்பொழுதும் தன்னை சிவசக்தி மற்றும் அஷ்டபுஜங்கள் உள்ளவர் மற்றும் அஷ்ட சக்தி உடையவர் என்று புரிந்து கொள்வதினால் ஒன்று எப்பொழுதும் சேர்ந்திருப்பதின் நிலையை அனுபவம் செய்வார்கள். மற்றொன்று, எப்பொழுதும் தன்னுடைய நிலை சாட்சியாக இருப்பதாக அனுபவம் செய்வார்கள். ஒன்று துணையாக இருப்பது, இன்னொன்று சாட்சியாக இருப்பது. இந்த இரண்டும் அனுபவம் ஆகும். இதைத்தான் வேறு வார்த்தைகளில் சாட்சி நிலை அதாவது விதை ரூப நிலை என்று கூறப்படுகிறது. மேலும் துணையாக இருக்கும் நிலையின் அனுபவம் என்றால் அவ்யக்த நிலையின் அனுபவம் என்று கூறப்படுகிறது. அஷ்டசக்திகளின் தாரணை ஆவதினால் இந்த இரண்டு நிலைகளின் அனுபவம் எப்பொழுதும் சுலபமாக மேலும் இயல்பாகச் செய்வார்கள். எப்படி யாராவது சாகாரத்தில் கூடவே துணையாக இருப்பது போல் அனுபவம் செய்வதால், பின்பு ஒருபொழுதும் தன்னுள் தனிமையோ அல்லது பலஹீனமோ அனுபவம் ஆவதில்லை. இந்த முறையில்

எப்பொழுது சர்வசக்திவான் சிவன் மற்றும் சக்தி இரண்டின் நினைவிருக்கிறது என்றால், அனைத்து காரியங்களையும் செய்து கொண்டே எப்படி கூடவே துணையாகவும் கை மேல் கைகோர்த்து செல்வது போலவும் நன்கு அனுபவம் செய்வார்கள். கையோடு கை சேர்த்து, துணையோடு துணையாக இருந்து என்று பாடப்படுகிறது தான் இல்லையா? துணை என்றால் புத்தியின் லயிப்பு மற்றும் எப்பொழுதும் தன்னுடன் ஸ்ரீமத் என்ற கை இருப்பதாக அனுபவம் செய்வார்கள். யார் மேலேயாவது யாருடைய கையாவது இருக்கிறது என்றால், அவர் பயமின்றி சக்தி ரூபமாகி எந்த கடினமான காரியத்தையும் செய்வதற்குத் தயாராகி விடுகிறார். இதே முறையில் எப்பொழுது ஸ்ரீமத் என்ற கையை எப்பொழுதும் தன் மேல் அனுபவம் செய்தீர்கள் என்றால் எந்தவொரு கடினமான சூழ்நிலை மற்றும் மாயாவின் தடைகளுக்கு பயப்படமாட்டீர்கள், கையின் உதவியினால், தைரியத்தினால் எதிர்கொள்வதை சுலபமாக அனுபவம் செய்வீர்கள். இதற்காக படங்களில் பக்தன் மற்றும் பகவானின் ரூபமாக என்ன காண்பிக்கிறார்கள்? சக்திகளின் படங்களையும் பார்த்தீர்கள் என்றால் வரதானக் கையை பக்தர்களின் மேல் இருப்பதாக காண்பிப்பார்கள். அதுவும் தலை மேல் கை இருப்பதாகக் காண்பிப் பார்கள். இதனுடைய அர்த்தமே இது தான், தலை அதாவது புத்தியில் எப்பொழுதும் ஸ்ரீமத் என்ற கை இருக்கிறது என்றால், கை மற்றும் துணை இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் வெற்றி அடைகிறார். அந்த மாதிரி எப்பொழுதும் துணை மற்றும் கையின் அனுபவம் செய்கிறீர்களா? எவ்வளவு தான் பலஹீனமான ஆத்மாவாக இருந்தாலும் ஒருவேளை துணையாக இருப்பவர் சர்வ சக்திவான் என்றால் பலஹீனமான ஆத்மாவிலும் தானாகவே பலம் நிரம்பிவிடுகிறது. எவ்வளவு தான் பயங்கரமான இடமாக இருந்தாலும், உடன் இருப்பவர் மாவீரன் என்றால் எப்படிப்பட்ட பலஹீனமானவரும் மாவீரன் ஆகி விடுகிறார். பின்பு ஒருபொழுதும் மாயாவிடம் பயப்படமாட்டார். மாயாவிடம் பயப்படுவது மற்றும் மாயாவை எதிர்கொள்ள முடியாததற்கான காரணம் கை மற்றும் துணையின் அனுபவம் செய்வதில்லை. தந்தை துணையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். எடுக்க வேண்டியவர்கள் எடுக்காமல் இருந்தால் என்ன தான் செய்ய முடியும்? எப்படி தந்தை குழந்தைகளின் கையைப் பிடித்து அவர்களை சரியான வழியில் கொண்டு வர விரும்புகிறார், ஆனால் குழந்தை அடிக்கடி கையை விட்டுவிட்டு தன்னுடைய வழிப்படி

செல்கிறது என்றால் என்ன ஆகும்? குழப்பம் அடைந்து விடுவார். இந்த மாதிரி புத்தியின் தொடர்பு மற்றும் துணையை மறந்து விடுவதோடு ஸ்ரீமத் என்ற கையையும் விட்டு விடுகிறீர்கள். அப்பொழுது தான் குழப்பம் அடைகிறீர்கள் மற்றும் குழப்பத்தில் வருகிறீர்கள். மேலும் பலஹீனமானவர் ஆகி விடுகிறீர்கள். மாயாவும் இந்த விஷயத்தில் மிகவும் புத்திசாலி எப்பொழுது முற்றுகையிட்டாலும் முதன்முதலில் கை மற்றும் துணையை விலக்கி தனிமையாக்குகிறது. எப்பொழுது தனியாகி பலஹீனம் ஆகி விடுகிறாரோ அப்பொழுது போரிடுகிறது. ஒருவேளை எதிரி யாராவது யார் மேலேயாவது போர் தொடுக்கிறார் என்றால் முதலில் அவருடைய தொடர்பு மற்றும் துணையை விடுவிக்கிறார். ஏந்த வகையிலாவது அவரை தனிமையாக்கி அவர் மேல் போரிடுகிறார். அதே போல் மாயாவும் முதலில் துணை மற்றும் கையை விடுவித்து பின்பு போரிடுகிறது. ஒருவேளை துணையையும் கையையும் விடவே இல்லை என்றால் பின்பு சர்வ சக்திவான் துணையாக இருக்கும் பொழுது மாயா என்ன செய்ய முடியும்? மாயாவை வென்றவர்கள் ஆகி விடுவீர்கள். எனவே துணையையும் கையையும் ஒருபொழுதும் விடாதீர்கள். அந்த மாதிரி எப்பொழுதும் மாஸ்டர் சர்வசக்திவான் ஆகி நடந்து கொள்ளுங்கள். ஒரு தடவை கையைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று பக்தியிலும் அழைக்கிறார்கள் தான் இல்லையா? அப்படி தந்தை கையைப் பிடிக்கிறார். கையோடு கை சேர்த்து நடக்கச் செய்ய விரும்புகிறார். இருந்தாலும் கையை விட்டு விடுகிறார்கள் என்றால், அலைவதில்லாமல் வேறு என்ன தான் இருக்கும்? அப்படி தன்னைத் தானே அலைக்கழிப்பதற்கான காரணமாக தானே ஆகிறார். எப்படி ஏதாவது போர்வீரன் போர்க்களத்திற்கு செல்வதற்கு முன்பே தன்னுடைய ஆயுதங்கள் மற்றும் அனைத்து பொருட்கள் தளவாடங்களை உடன் வைத்துக் கொண்டு பின்பு மைதானத்தில் இறங்குகிறார், அதே போலவே இந்த கர்மசேத்திரம் என்ற மைதானத்தில் எந்தவொரு காரியம் செய்வதற்கோ போர் வீரனாகி யுத்தம் செய்வதற்காகவோ வருகிறீர்கள் என்றால் காரியம் செய்வதற்கு முன்பே தன்னுடைய ஆயுதம் அதாவது இந்த அஷ்ட சக்திகளை உடன் வைத்து பின்பு காரியம் செய்கிறீர்களா அல்லது எந்த நேரம் எதிரி வருகிறாரோ அந்த நேரம் தான் இவைகளின் நினைவு வருகிறது என்றால் பின்பு என்னவாகும்? தோல்விதான் ஏற்படும். எப்பொழுதுமே தன்னை கர்மஷேத்திரத்தில் காரியம் செய்யும் போர் வீரன் அதாவது மகாரதி என்று புரிந்து கொள்ளுங்கள். யார் யுத்த

மைதானத்தில் எதிரியோடு மோதுகிறாரோ அவர் ஒருபொழுதும் ஆயுதங்களை விடுவதேயில்லை. தூங்கும் நேரத்திலும் தன்னுடைய ஆயுதங்களை விடுவதில்லை. அதே போலவே தூங்கும் நேரத்திலும் தன்னுடைய அஷ்ட சக்திகளை மறந்த நிலையைக் கொண்டு வரக்கூடாது அதாவது தன்னுடைய ஆயுதங்களை உடன் வைத்திருக்க வேண்டும். இதை விட்டு விட்டு, எப்பொழுது மாயா முற்றுகை இடுமோ அந்த நேரம் அமர்ந்து இதற்கு என்ன வழியைக் கடைபிடிப்பது என்று யோசிக்கும் அந்த நிலை இருக்கக்கூடாது. யோசித்து யோசித்தே நேரம் கடந்து விடும். எனவே எப்பொழுதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். எப்பொழுதும் அலர்ட் (எச்சரிக்கையாக) மற்றும் எவரெடியாக இல்லை என்றால் அங்கங்கே மாயா ஏமாற்றி விடுகிறது. பின்பு ஏமாற்றுதலின் முடிவாக என்னவாகிறது? தன்னைத் தான் பார்த்தே துக்கத்தின் அலைகள் உருவாகி விடுகிறது. தன்னுடைய குறையே குறையைக் கொண்டு வந்து விடுகிறது. ஒருவேளை தன்னுடைய குறை இல்லை என்றால் எந்தக் குறையும் வர முடியாது.

நீங்கள் அனைவரும் தன்னை பேகம்பூரின் (துக்கமற்ற ஊரின்) கவலையற்ற மகாராஜா என்று கூறுகிறீர்கள் இல்லையா? இது இந்த நேரத்தின் நிலையாகும். அதாவது துக்கமான உலகம் எதிரிலேயே இருக்கிறது. துக்கம் மற்றும் துக்கமற்றதின் ஞானம் இப்பொழுது இருக்கிறது. இது துக்கம்) இருக்கின்றபோதும் அந்த மகிழ்ச்சி நிலையில் நீங்கள் எப்பொழுதும் இருக்கிறீர்கள். எனவே பேகம்பூரின் மகாராஜா என்று கூறப்படுகிறீர்கள். பெக்கர் (ஒன்றுமில்லாதவர்) ஆகத் தான் இருக்கிறீர்கள், இருந்தாலும் பேகம்பூரின் மகாராஜா நீங்கள் அப்படி நான் பேகம்பூரின் மகாராஜா என்ற இந்த போதையில் எப்பொழுதும் இருக்கிறீர்களா? மகாராஜா மற்றும் இராஜாக்களிடம் இராஜ்யத்தை நடத்தும் சக்தி இயல்பாகவே இருக்கிறது ஆனால் அந்த இயல்பாக கிடைக்கும் சக்தியை ஒருவேளை சரியான முறையில் காரியத்தில் ஈடுபடுத்தவில்லை, எங்காவது தவறான காரியத்தில் மாட்டிக் கொள்கிறார்கள் என்றால் இராஜ்யத்தின் சக்தியை இழந்து விடுகிறார்கள் மேலும் இராஜ பதவியையும் இழந்து விடுகிறார்கள். அதே போல் இங்கேயும் நீங்கள் பேகம்பூரின் மகாராஜாக்கள். மேலும் அனைத்து சக்திகளின் பிராப்தி இருக்கிறது, ஆனால் ஒருவேளை ஏதாவது தீய சேர்க்கை அல்லது ஏதாவது கர்ம இந்திரியங்களின் வசமாகி தன்னுடைய

சக்தியை இழந்து விடுகிறீர்கள் என்றால் பேகம்பூரின் போதை மற்றும் குஷி என்ன பிராப்தி ஆகியிருக்கிறதோ அது தானாகவே இழக்கப்பட்டு விடுகிறது. எப்படி அந்த மகாராஜா கூட ஒன்றும் இல்லாதவராக ஆகி விடுகிறார். அதே போல் இங்கும் மாயாவின் அடிமையான காரணத்தினால் கிரீடமில்லாத பரம ஏழை ஆகி விடுகிறார்கள். அதனால் தான் என்ன செய்வது? எப்படி நடக்கும்? எப்பொழுது நடக்கும்? என்று புலம்புகிறார்கள். இவை அனைத்தும் பரம ஏழ்மைத்தனத்தின் அடையாளமாகும். எங்காவது, ஏதாவது கர்ம இந்திரியங்களின் வசமாகி தன்னுடைய சக்திகளை இழந்து விடுகிறார்கள். புரிந்ததா? ஆக, நீங்கள் அஷ்ட சக்தி சொரூபமான பேகம்பூரின் மகாராஜா ஆவீர்கள், இந்த நினைவை ஒருபொழுதும் மறக்காதீர்கள். பக்தி மார்க்கத்திலும் எப்பொழுதும் உங்கள் குடைநிழலிலேயே இருப்போம் என்று தான் அழைத்தீர்கள். அப்படி இந்த துணை மற்றும் கையின் குடை நிழலிலிருந்து வெளியே ஏன் வருகிறீர்கள்? இன்றைய உலகத்தில் ஒருவேளை யாராவது ஏதோ ஓரளவு பதவி உடையவராக இருந்தாலோ அல்லது யாராவது (மேலானவர்) நல்ல நண்பனாக இருக்கிறார் என்றால் கூட அவர் தன்னுடைய போதை மற்றும் குஷியில் இருக்கிறார். என்னுடைய பேக் போன் (முதுகெலும்பு / ஆதாரம்) மிகவும் சக்தியானது என்று குஷி மற்றும் போதையில் இருக்கிறார். உங்கள் அனைவரின் பேக் போன் யார்? யாருக்கு சர்வ சக்திவான் பேக் போனாக இருக்கிறார் என்றால் எவ்வளவு குஷி மற்றும் போதை இருக்க வேண்டும். எப்பொழுது குஷியின் அலை இல்லாமல் ஆகி விடுகிறது? கடலில் எப்பொழுதாவது அலைகள் குறைகிறதா என்ன? நதியில் அலை எழுவதே இல்லை. கடலிலோ அலைகள் எழும்பிக் கொண்டே இருக்கின்றன. நீங்களும் மாஸ்டர் கடல் தான் இல்லையா? பின்பு ஈஸ்வரிய போதை மற்றும் ஈஸ்வரிய குஷியின் அலை எப்பொழுதாவது குறைய முடியுமா? எப்பொழுது கடலின் சம்மந்தம் துண்டிக்கப்படுகிறதோ அப்பொழுது முடிந்து போய்விடுகிறது. அதாவது துணை மற்றும் கையை விட்டு விடுகிறீர்கள் என்றால் அப்பொழுது குஷியின் அலை மறைந்து விடுகிறது. ஒருவேளை எப்பொழுதும் துணையை அனுபவம் செய்தீர்கள் என்றால், பாவக்காரியத்திலிருந்தும் எப்பொழுதும் சுலபமாகத் தப்பித்து விடுவீர்கள். ஏனென்றால் பாவக்காரியம் தனிமையில்தான் நடக்கிறது. யாராவது திருடுகிறார், பொய் சொல்கிறார். மேலும் ஏதாவது விகார வசம் ஆகிறார் அதைத் தான் தூய்மையில்லாத எண்ணம் மற்றும் செயல் என்று

கூறுவது, அதுவும் தனிமையில்தான் நடக்கிறது. ஒருவேளை எப்பொழுதும் தன்னை தந்தையின் துணையாக அனுபவம் செய்தீர்கள் என்றால் இந்தக் காரியங்கள் நடக்கவே நடக்காது, யாராவது பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் திருடுவார்களா? யாராவது நேர் எதிரிலேயே கேட்டுக் கொண்டிருக்கிறார் என்றால் பொய் சொல்வாரா? எந்தவொரு பாவம் மற்றும் வீணான காரியம் அடிக்கடி நடந்து விடுகிறது என்றால் இதற்கான காரணம் எப்பொழுதும் துணைவனை துணையாக வைப்பதில்லை மேலும் துணையை அனுபவம் செய்வதில்லை. சில நேரங்களில் சோர்வாகவும் ஏன் ஆகி விடுகிறீர்கள்? எப்பொழுது தனிமையாக அனுபவம் ஆகிறதோ அப்பொழுது சோர்வானவராக ஆகி விடுகிறீர்கள். ஒருவேளை குழுவாக இருக்கிறீர்கள் மற்றும் குழுவின் பிராப்தி இருக்கிறது என்றால் சோர்வடைவீர்களா என்ன? ஒருவேளை சர்வசக்திவான் தந்தை உடன் இருக்கிறார், விதை உடன் இருக்கிறது என்றால் விதையின் கூடவே முழு மரமும் இருக்கிறது என்றால் பின்பு சோர்வு எப்படி ஏற்பட முடியும்? தனிமையே இல்லை என்றால் ஏன் சோர்வாக ஆவீர்கள்? சில நேரம் மாயாவின் தடைகளின் முற்றுகை ஏற்படும் காரணத்தினால், தன்னை பலமற்றவராக அனுபவம் செய்யும் காரணத்தினால் துயரமான நிலை வரை வந்தடைந்து விடுகிறீர்கள்.

பலம் நிறைந்தவரின் துணையை மறக்கிறீர்கள், அப்பொழுது தான் பலமற்றவராக ஆகிறீர்கள். மேலும் பலமற்றவராக ஆன காரணத்தினால் தன்னுடைய கௌரவத்தை மறந்து துயரமுள்ளவர் ஆகி விடுகிறீர்கள். அப்படி என்னென்ன பலஹீனங்கள் மற்றும் குறையை அனுபவம் செய்கிறீர்கள் அவை அனைத்தின் காரணம் என்னவாக இருக்கும். துணை மற்றும் கையின் ஆதாரம் கிடைத்தும் விட்டு விடுகிறீர்கள். புரிந்ததா? முழுக் கல்பத்திலும் ஒரே ஒரு தடவை தான் இந்த மாதிரி துணை கிடைக்கிறது என்று கூறவும் செய்கிறீர்கள் இருந்தும் விட்டு விடுகிறீர்கள். யாராவது யாருக்காவது கை கொடுத்து கரை சேர்க்க விரும்புகிறார், ஆனால் அவர் இன்னும் மூழ்குவதற்கு முயற்சி செய்தார் என்றால் என்னவென்று கூறுவது தன்னைத் தானே அவரே துயரமாக்கி கொள்கிறார் இல்லையா? வெகுகாலமாக இந்த உலகில் இருந்தும் இப்பொழுதும் இந்த துன்ப நிலை பிடித்திருக்கிறதா? இல்லை என்றால் அடிக்கடி அந்தப் பக்கம் ஏன் போகிறீர்கள்? இப்பொழுது விரைவாகச் செல்ல வேண்டும். வேகத்தை அதிகரிக்க வேண்டும். சாரத்தை தனக்குள்

நிரப்பியாகி விட்டது என்றால் சாரத்தை அறிந்து நடந்து கொள்பவராக ஆகி விட்டீர்கள் என்றால், சாரமே இல்லாத உலகத்திலிருந்து எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் ஆகி விடுவீர்கள். நல்லது.

எப்பொழுதும் துணை மற்றும் கையை எடுத்துக் கொள்ளக் கூடிய பேகம்பூரின் மகாராஜாக்களுக்கு நமஸ்காரம்.

**வரதானம்.: ஆஹா டிராமா! ஆஹாவின் நினைவின் மூலமாக அனேகர்களின் சேவை செய்யக்கூடிய எப்பொழுதும் குஷி நிறைந்தவர்கள் ஆகுக!**

இந்த டிராமாவின் எந்தவொரு காட்சியைப் பார்த்துக் கொண்டும் ஆஹா! டிராமா! ஆஹாவின் நினைவு இருந்தது என்றால் ஒருபொழுதும் பயப்பட மாட்டீர்கள் ஏனென்றால் தற்சமயம் நன்மையே செய்யும் யுகம், இதில் என்னென்ன காட்சிகள் எதிரில் வருகிறதோ அவை அனைத்திலும் நன்மை அடங்கியிருக்கிறது என்ற டிராமாவின் ஞானம் கிடைத்திருக்கிறது. தற்சமயம் நன்மை தென்படாவிட்டாலும் ஆனால் அதில் அடங்கியிருக்கும் நன்மை எதிர்காலத்தில் பிரத்யக்ஷம் (வெளிப்பாடு) ஆகி விடும் - அப்படி ஆஹா டிராமா ஆஹாவின் நினைவு மூலமாக எப்பொழுதும் குஷி நிறைந்து இருப்பீர்கள். முயற்சி செய்வதில் ஒருபொழுதும் சோர்வுடையவராக ஆக மாட்டீர்கள். தானாகவே உங்கள் மூலமாக அனேகரின் சேவை நடந்து கொண்டே இருக்கும்.

**சுலோகன்: அமைதியின் சக்தி தான் மனம் மூலம் செய்யும் சேவைக்கான எளிய சாதனமாகும். எங்கு அமைதியின் சக்தி இருக்கிறதோ அங்கு திருப்தி இருக்கும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 08.06.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூர்ண நிலையை அறிதல்!

தன்னை விக்ன வினாஷக் (தடைகளை அழிப்பவர்) என்று நினைக்கிறீர்களா? எந்த விதமான தடை எதிரில் வந்தாலும் எதிர்நோக்கும் சக்தி தன்னுள் இருக்கிறது என்று அனுபவம் செய்கிறீர்களா? அதாவது தன்னுடைய முயற்சியினால் தன்னைத் தானே பாப்தாதாவின் மற்றும் தன்னுடைய சம்பூர்ண நிலையின் அருகில் சென்று கொண்டிருக்கிறேன் என்று அனுபவம் செய்கிறீர்களா? அல்லது அங்கேயே நின்று கொண்டிருப்பவராக தன்னை அனுபவம் செய்கிறீர்களா? எப்படி பயணி ஒருபொழுதும் நிற்பதில்லை, அதே போல் தன்னை இரவுப்பயணி என்று புரிந்து சென்று கொண்டே இருக்கிறீர்களா? சம்பூர்ண நிலைக்கான முக்கியமான குணமாக நடைமுறை காரியத்தில் மற்றும் நிலையில் என்ன தென்படுகிறது மற்றும் சம்பூர்ண நிலையின் அருகில் இருக்கிறேனா அல்லது தூரத்தில் இருக்கிறேனா என்று அறிந்து கொள்ள முடியும் அளவிற்கு சம்பூர்ண நிலைக்கான விசேஷ குணமாக என்ன இருக்கிறது? இப்பொழுது ஒரு நொடிக்காக தன்னுடைய சம்பூர்ண நிலையில் நிலைத்திருந்து கொண்டே எந்த விசேஷ குணம் சம்பூர்ண நிலையை பிரத்யக்ஷம் செய்கிறது என்று கூறுங்கள். எப்பொழுது ஆத்மாவின் சம்பூர்ண நிலை உருவாகி விட்டதோ அதன் பிறகு இதனுடைய மகிமையாக நடைமுறை காரியத்தில் என்னவாக இருக்கிறது? சம நிலைக்கானது. இகழ்ச்சி-புகழ்ச்சி, வெற்றி-தோல்வி, சுகம்-துக்கம் அனைத்திலும் சமநிலை இருக்கட்டும். இதைத் தான் சம்பூர்ணத்தின் நிலை என்று கூறுவது. துக்கத்தில் கூட முகம் மற்றும் நெற்றியில் துக்கத்தின் அலைக்குப் பதிலாக சுகத்தின் மற்றும் மகிழ்ச்சியின் அலை தென்படட்டும். நிந்தனையைக் கேட்டுக் கொண்டும் இது நிந்தனை இல்லை சம்பூர்ண நிலையை பரிபக்குவம் ஆக்குவதற்காக இது மகிமைக்குரிய வார்த்தையாகும் என்று அந்த மாதிரியே அனுபவம் ஆகட்டும், அப்படிப்பட்ட சமநிலை இருக்கட்டும். இதைத் தான் பாப்தாதாவின் அருகாமையின் நிலை என்று சொல்ல

முடியும். பார்வையிலும், உள் உணர்விலும் கொஞ்சம் கூட வித்தியாசம் வர வேண்டாம். இவர் எதிரி மற்றும் திட்டக்கூடியவர், இவர் மகிமை செய்யக்கூடியவர் இந்த மாதிரி உள் உணர்வும் இருக்க வேண்டாம். நற்சிந்தனையுள்ள ஆத்மாவின் உள் உணர்வு மற்றும் நன்மையே பயக்கும் பார்வை இருக்கட்டும். இருவருக்காகவும் ஒரே சமநிலை இருக்கட்டும். இதைத் தான் சமநிலை என்று கூறுவது.. அதாவது இருபக்கமும் சரியாக இல்லாத காரணத்தினால் தான் மேலிருந்து தந்தை மூலமாக ஆனந்தத்தை பெற முடிவதில்லை. தந்தை ஆனந்தம் நிறைந்தவர் தான் இல்லையா? ஒருவேளை தன் மேல் ஆனந்தத்தை கொண்டு வர மற்றும் தந்தையின் ஆனந்தத்தை அடைய வேண்டும் என்றால் இதற்காக ஒரே ஒரு சாதனம் தான் இருக்கிறது - எப்பொழுதும் இரண்டு விஷயங்களின் சமநிலையை சரியாக வையுங்கள். எப்படி அன்பு மற்றும் சக்தி இரண்டின் சமநிலை சரியாக இருக்கிறது என்றால் தன்னைத் தானே ஆனந்தம் மற்றும் தந்தையின் ஆனந்தம் கிடைத்துக் கொண்டே இருக்கும். சமநிலையை சரியாக வைக்கத் தெரிவதில்லை. கயிறில் வித்தை காட்டுபவர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய விசேஷம் என்னவாக இருக்கிறது? சமநிலை வைத்துக் கொள்வது தான். விஷயம் சாதாரணமாக இருக்கிறது; ஆனால் அதிசயம் அவருடைய சமநிலைக்கானது. இந்த மாதிரி கயிற்றில் நடப்பவர்களைப் பார்த்திருக்கிறீர்கள் தான் இல்லையா? இங்கேயும் அதிசயம் சமநிலை வைப்பதற்கானது தான். சமநிலை சரியாக வைப்பதில்லை. மகிமையைக் கேட்கிறீர்கள் என்றால் இன்னும் போதை ஏறிவிடுகிறது. நிந்தனையினால் வெறுப்பு வந்து விடுகிறது. உண்மையில் மகிமைக்கு போதையும், நிந்தனைக்கு வெறுப்பும் வரக்கூடாது. இரண்டிலும் சமநிலை சரியாக இருந்தது என்றால் பின்பு தானே சாட்சியாகி தன்னைத் தானே பார்த்தீர்கள் என்றால் அதிசயம் அனுபவம் ஆகும். தன் மேலேயே திருப்தியின் அனுபவம் ஆகும், மற்றவர்களும் இந்தக் காரணத்தினால் உங்கள் மேல் திருப்தியாக இருப்பார்கள். அப்படி இந்த முயற்சி செய்வதின் குறை இருக்கும் காரணத்தினால் சமநிலையின் குறை இருக்கும் காரணத்தினால் ஆனந்தம் நிறைந்த வாழ்க்கையாக என்ன இருக்க வேண்டுமோ அது இருப்பதில்லை. அப்படியானால் இப்பொழுது என்ன செய்ய வேண்டியது வரும்? சமநிலையை சரியாக வைத்துக் கொள்வது. அனேக இந்த மாதிரி இரண்டு இரண்டு விஷயங்கள் இருக்கின்றன-விலகிய மற்றும் அன்பான, மகிமை மற்றும் நிந்தனை.

உங்களுடையது இல்லற மார்க்கம் தான் இல்லையா? ஆத்மா மற்றும் உடலும் இரண்டுமாக இருக்கிறது. தந்தை மற்றும் தாதா இருவராகவும் இருக்கிறார்கள். இருவரின் காரியத்தினால் உலக மாற்றம் ஏற்படுகிறது. அப்படி இல்லற மார்க்கம் அனாதி, அவினாசி ஆகும். லௌகீக குடும்பத்திலும் கூட ஒருவேளை ஒருவர் சரியாக நடந்து கொள்கிறார். இன்னொருவர் ஏனோதானோ என்று இருக்கிறார். சமநிலை சரியாக இல்லை என்றால் பிரச்சனை ஏற்படுகிறது; நேரம் வீணாகி விடுகிறது. உயர்ந்த பிராப்தியாக என்ன இருக்க வேண்டுமோ அதை அடைய முடிவதில்லை.

ஒரு காலால் நடப்பவரை என்னவென்று கூறுவது? முடமானவர், அவரால் உயரம் தாண்டுதல் செய்ய முடியுமா? அவர் வேகமாக ஓட முடியுமா? அப்படி இதில் கூட ஒருவேளை சமநிலை இல்லை என்றால் அந்த மாதிரி முயற்சி செய்பவரை என்னவென்று கூறுவது? ஒருவேளை முயற்சி செய்வதில் ஒன்றின் பிராப்தி அதிகமாக இருக்கிறது மற்றும் இன்னொன்றின் குறை அனுபவம் செய்கிறீர்கள் என்றால் இவரால் உயரம் தாண்டுதல் செய்ய முடியாது. ஓட முடியாது என்று புரிந்து கொள்ள வேண்டும். அப்படி உயரம் தாண்ட முடியாது, ஓட முடியாது என்றால் சம்பூர்ண நிலையின் அருகில் எப்படி வருவார்? இந்த குறை வந்து விடுகிறது அதை நீங்களே வர்ணனை செய்கிறீர்கள். அன்பின் நேரத்தில் சக்தி உள்ளடங்கி விடுகிறது. சக்தியின் நேரத்தில் அன்பு உள்ளடங்கி விடுகிறது. அப்படி சமநிலை சரியாக இருக்கவில்லை இல்லையா? இரண்டின் சமநிலை சரியாக இருக்கட்டும் இதைத்தான் அதிசயம் என்று கூறுவது. ஒரு சமயம் ஒன்றின் பாதிப்பு இருக்கிறது, இன்னொரு நேரம் இன்னொரு பாதிப்பு இருக்கிறது என்றாலும் கூட வேறு விஷயம் ஆனால் ஒரே நேரத்தில் இரண்டின் சமநிலை சரியாக இருக்கட்டும் இதைத்தான் சம்பூர்ணம் என்று கூறுவது. ஒன்று உள்ளடங்கிப் போய் இன்னொன்று வெளிப்படுகிறது என்றால் ஒன்றின் பாதிப்பு தான் ஏற்படுகிறது. சக்திகளின் சிலைகளில் எப்பொழுதும் இரண்டு குணங்களின் சமநிலையைக் காண்பிக்கிறார்கள். அன்பானவர் மற்றும் சக்தி ரூபத்தின் சமநிலை. கண்களில் எப்பொழுதும் அன்பு மற்றும் காரியத்தில் சக்தி ரூபம் இருக்கட்டும். அப்படி சக்திகளின் படங்களை வரையும் ஓவியர்களுக்கும் இந்த சிவசக்திகள் இரண்டு குணங்களின் சமநிலை வைப்பவர்கள் என்று தெரியும். எனவே அவர்களும் படங்களின் இதே உணர்வை வெளிப்படுத்துகிறார்கள்.

நடைமுறையில் செய்துள்ளார்கள் அதனால் தான் படங்கள் அந்த மாதிரி உருவானது இல்லையா? எனவே அந்த மாதிரி குறையை இப்பொழுது நிரப்புங்கள். அப்பொழுது தான் என்ன பிரபாவம் ஏற்பட வேண்டுமோ அது ஏற்பட முடியும். இப்பொழுது ஒரு விஷயத்தின் பிரபாவம் அதிகமாக இருக்கிறது இன்னொன்றின் குறை இருக்கும் காரணத்தினால் கொஞ்சம் பிரபாவம் ஏற்படுகிறது. ஒரு விஷயத்தின் வர்ணனை செய்து விடுகிறார்கள், அனைத்திற்கும் செய்ய முடிவதில்லை. ஆக வேண்டியதோ சர்வ குண சம்பன்னமாகத் தான் இல்லையா? அப்படி அந்த மாதிரி சம்பூர்ண நிலையை அருகில் கொண்டு வாருங்கள். எப்படி தர்மம் மற்றும் காரியம் இரண்டையும் சகயோகம் என்று கூறுகிறீர்கள். மனிதர்கள் இரண்டையும் பிரித்து விடுகிறார்கள். நீங்கள் இரண்டின் சகயோகத்தைக் கூறுகிறீர்கள். தர்மம் மற்றும் காரியத்தைப் பிரித்து விடுவதின் காரணத்தினால் இன்றைய வாழ்க்கையின் சூழ்நிலை அந்த மாதிரி ஆகி விட்டது என்று நீங்கள் மற்றவர்களுக்குக் கூறுகிறீர்கள். அப்படியானால் தர்மம் மற்றும் காரியம் அதாவது தாரணைகள் மற்றும் காரியம் இரண்டின் சமநிலை இருக்கிறதா அல்லது காரியம் செய்து கொண்டிருக்கும் பொழுது மறந்து விடுகிறீர்களா என்று உங்களை நீங்களே கேளுங்கள்.

எப்பொழுது காரியம் முடிவடைந்து விடுகிறதோ அப்பொழுது தாரணை நினைவில் வருகிறது. எப்பொழுது அதிகமான காரியத்தில் பிஸியாக இருக்கிறீர்களோ அப்பொழுது இவ்வளவு தாரணையும் இருக்கிறதா அல்லது எப்பொழுது காரியம் லேசாக இருக்குமோ அப்பொழுது தாரணை அதிகமாக இருக்கிறதா? எப்பொழுது தாரணை அதிகமாக இருக்கிறதோ அப்பொழுது காரியம் லேசாகி விடுகிறதா? தராசின் இரண்டு பக்கமும் ஒரே சமமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் தராசின் மதிப்பு இருக்கிறது. இல்லை என்றால் தராசிற்கே கூட மதிப்பு இல்லை. புத்தி தான் தராசு. புத்தியில் இரண்டு விஷயங்களின் சமநிலை சரியாக இருக்கிறது என்றால் அவரை உயர்ந்த புத்திவான், தெய்வீக புத்திவான், கூர்மையான புத்தியுடையவர் என்று கூறலாம். இல்லையென்றால் சாதாரண புத்தியுடையவர். காரியமும் சாதாரணம், தாரணைகளும் சாதாரணமானதாக ஆகிறது. அப்படி சாதாரணத்தில் சமநிலை கொண்டு வர வேண்டாம் ஆனால் உயர்ந்ததில் சமநிலை இருக்கட்டும். எப்படி காரியம் உயர்ந்ததாக இருக்கிறதோ அதே போல் தாரணையும் உயர்ந்தது. காரியம், தாரணை என்றால் தர்மத்தை உள்ளடக்கி விட வேண்டாம்.

தாரணை காரியத்தை உள்ளடக்கி விடவில்லை என்றால் தர்மம் மற்றும் காரியம் இரண்டுமே உயர்ந்த நிலையில் சமமாக இருக்கட்டும். இதனைத் தான் தர்மாத்மா என்று கூறுவது. தர்மாத்மா என்றாலும் அல்லது மகான் ஆத்மா அல்லது கர்மயோகி என்றாலும் விஷயம் ஒன்றே தான். அந்த மாதிரி தர்மாத்மாவாக ஆகியிருக்கிறீர்களா? அந்த மாதிரி கர்மயோகியாக ஆகியிருக்கிறீர்களா? அந்த மாதிரி ஆனந்தம் நிறைந்தவராக ஆகியிருக்கிறீர்களா? ஏகாந்தவாசியாகவும் இருக்க வேண்டும்; கூடவே ரமணீகரமும் அந்தளவே இருக்கட்டும். ஏகாந்தவாசி என்பது எங்கே? மற்றும் ரமணீகரம் எங்கே? இந்த வார்த்தைகளிலோ மிகுந்த வித்தியாசம் இருக்கிறது ஆனால் சம்பூர்ண நிலையில் இரண்டிற்கும் சமநிலை இருக்கட்டும். எவ்வளவு தான் ஏகாந்தவாசியோ அந்தளவே ரமணீகரமும் கூடவே இருக்கும்.

தனிமையில் ரமணீகரமானவை இல்லாமல் போய்விடக்கூடாது இரண்டும் சமமாக சேர்ந்தே இருக்கட்டும். நீங்கள் எப்பொழுது ரமணீகரத்தில் வருகிறீர்கள் என்றால் அந்தர்முக்தா (உள்நோக்குமுகம்) விலிருந்து கீழே வந்து விட்டோம் என்று கூறுகிறீர்கள். மேலும் அந்தர்முக்தாவில் வருகிறீர்கள் என்றால் இன்று ரமணீகரம் எப்படி இருக்க முடியும் என்று கூறுகிறீர்கள்? ஆனால் இரண்டுமே சேர்ந்தே இருக்கட்டும். இந்த நேரம் ஏகாந்தவாசியாக அடுத்த நேரம் ரமணீகரமுடையவராக இருக்கட்டும். எவ்வளவு கம்பீர நிலையோ கூடவே அனைவருடனும் சரளமான விவகாரமும் இருக்கட்டும். கம்பீர நிலை உள்ளவராக மட்டும் இருப்பது என்று அந்த மாதிரியும் வேண்டாம். அனைவருடன் சரளமான விவகாரம் செய்வது என்றால் அனைவரின் சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தோடு இணைந்து போகக்கூடியவர். கம்பீர நிலையின் அர்த்தம் அனைவருடன் பழகுவதிலிருந்து விலகியிருப்பது என்பதல்ல. எந்தவொரு விஷயமும் அளவுக்கு அதிகமாக இருப்பது நல்லதல்ல. எந்த விஷயமும் அளவுக்கு அதிகமாகச் செல்கிறது என்றால் அதைப் புயல் என்று கூறப்படும். ஒரு குணம் புயல் மாதிரி இருந்து இன்னொன்று உள்ளடங்கி இருக்கிறது என்றால் நன்றாக இருக்குமா? இல்லை தானே? எங்கே விரும்புகிறீர்களோ அங்கே தன்னை நிலைத்திருக்கச் செய்யுமளவிற்கு அந்த மாதிரி தன்னுள் சக்திசாலியான தாரணை செய்ய வேண்டும். புத்தி என்ற கால்கள் நிலைத்திருக்க முடியவில்லை என்று அப்படியும் இருக்க வேண்டாம். சமநிலை சரியாக இல்லாத காரணத்தினால் ஸ்திரமாக

நிலைத்திருக்க முடியாது. சில நேரம் இங்கே சில நேரம் அங்கே என்று அப்படி விழுந்து விடுகிறார்கள் மற்றும் ஆடிக் கொண்டும் அசைந்து கொண்டும் இருக்கிறார்கள். இந்த புத்தியின் ஆட்டம் இருக்கும் காரணத்தினால் சமநிலை இல்லை அதாவது நிரம்பி இல்லை. எந்தவொரு பொருளும் முழுமையாக நிரம்பியிருக்கிறது என்றால் அதன் நடுவில் ஒருபொழுதும் மேலே கீழே ஆட்டம் இருக்க முடியாது. ப்பொழுது குறை இருக்கிற நிரம்பி இருக்கவில்லையோ அப்பொழுது தான் ஆடும். அப்படி புத்தி எப்பொழுது முழுமையாக நிரம்பியில்லையோ அப்பொழுது வீணான எண்ணங்களின் மற்றும் மாயாவின் ஆட்டம் ஏற்படுகிறது. இரண்டிலும் நிரம்பிய மற்றும் சமநிலை இருக்கிறது என்றால், மேலே கீழே ஆடுவது இருக்கவே முடியாது. எனவே தன்னைத் தானே எந்தவிதமான ஆட்டத்திலிருந்தும் பாதுகாப்பதற்காக நிரம்பியவராக ஆகிக் கொண்டே சென்றீர்கள் என்றால் சம்பூர்ணமானவராக ஆகி விடுவீர்கள். சம்பூர்ண நிலை என்றால் சம்பூர்ணமானதின் பிரபாவம் ஏற்பட முடியாது என்று இருக்கவே முடியாது. நிலவு கூட எப்பொழுது 16 கலை நிரம்பியதாக (பௌர்ணமி) ஆகி விடுகிறதோ அப்பொழுது விரும்பாவிட்டாலும் ஒவ்வொருவரையும் தன் பக்கம் கவருகிறது. எந்தவொரு பொருளும் முழுமையாக நிரம்பியிருக்கிறது என்றால் தானாகவே கவர்ச்சி செய்கிறது, அப்படி சம்பூர்ண நிலையின் குறையின் காரணமாக உலகின் அனைத்து ஆத்மாக்களையும் கவர்ச்சி செய்ய முடியவில்லை. எவ்வளவு தன்னுள் குறை இருக்கிறதோ அவ்வளவு ஆத்மாக்களை தன் பக்கம் குறைவாகக் கவர முடிகிறது. நிலவின் கலை குறைந்து விடுகிறது என்றால் யாருடைய கவனமும் செல்வதில்லை. எப்பொழுது முழுமையாக ஆகி விடுகிறது என்றால் விரும்பாவிட்டாலும் அனைவரின் கவனம் அதன் மேல் செல்கிறது. யாராவது பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் அவசியம் பார்க்கத் தென்படுகிறது. சம்பூர்ண நிலையில் பிரபாவம் ஏற்படுத்துவதின் சக்தி இருக்கிறது. அப்படி பிரபாவசாலியாக ஆவதற்காக நிரம்பியவர் ஆக வேண்டியதிருக்கும். புரிந்ததா? நல்லது.

எப்பொழுது சமநிலை சரியாக இல்லையென்றால் ஆடுவது அசைவதற்கான என்ன காட்சியைக் காண்பிக்கிறீர்களோ அதை ஒருவேளை சாட்சியாக இருந்து பார்த்தீர்கள் என்றால் உங்கள் மேலேயே உங்களுக்கு சிரிப்பு வரும். எப்படி யாராவது தன்னுடைய முழுமையான உணர்வில் இல்லை என்றால் அவருடைய நடத்தையைப் பார்த்து சிரிப்பு

வருகிறது இல்லையா? எனவே எப்பொழுது மாயா கொஞ்சம் உங்களை நினைவிழக்கச் செய்து விடுகிறது. தன்னுடைய உயர்ந்த நினைவின் உணர்வை மறக்கச் செய்து விடுகிறது என்றால் அந்த நேரம் உங்களுடைய நடத்தை எப்படி இருக்கிறது? என்று உங்களை நீங்களே பாருங்கள். அந்த நேரம் ஒருவேளை சாட்சியாக இருந்து பார்த்தீர்கள் என்றால் உங்கள் மேலேயே சிரிப்பு வரும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் விளையாட்டை சாட்சியாக பார்க்கிறார் என்றா... அந்த மாதிரி விளையாட்டைக் காண்பிப்பது நன்றாக இருக்கிறதா? பாப்தாதா என்ன பார்க்க விரும்புகிறார் என்று அதையும் தெரிந்திருக்கிறீர்கள். எப்பொழுது தெரிந்திருக்கிறீர்களோ, ஏற்றுக் கொள்ளவும் செய்கிறீர்களோ பின்பு ஏன் நடந்து கொள்ளவில்லை? மூன்று மூலைகள் சரியாக இருக்கிறது. மீதம் ஒரு மூலை சரியில்லை என்றால் என்னவாகும்? நான்கு விஷயங்களை தெரிந்திருந்தும், ஏற்றுக் கொண்டும். வர்ணனை செய்து கொண்டும் சிலவற்றை கடைபிடித்து நடக்கிறீர்கள், சிலவற்றின்படி நடப்பது இல்லை. அப்படியானால் குறை ஏற்பட்டு விட்டது இல்லையா? இப்பொழுது இந்தக் குறையை நிரப்புவதற்கான முயற்சி செய்யுங்கள். எப்படி இரண்டு இரண்டு விஷயங்கள் கூறினோம் இல்லையா அதே போல் நாலட்ஜ்ஃபுல் (ஞானம் நிறைந்த நிலை) மற்றும் பவர்ஃபுல் (சக்தி நிறைந்த நிலை) இவை இரண்டிற்குமான சமநிலையை சரியாக வைத்தீர்கள் என்றால் சம்பூர்ண நிலை அருகில் வந்து விடும். ஞானம் நிறைந்தவராக அதிகம் ஆகிறீர்கள், சக்தி நிறைந்தவராக குறைவாக ஆகிறீர்கள் என்றால் சமநிலை சரியாக இருப்பதில்லை. சக்திகளையும் (தேவிகளை) சக்தியையும் சமநிலையில் இருப்பதாக காண்பிக்கிறார்கள். ஆசீர்வாதம் கொடுத்துக் கொண்டிருப்பதாக காண்பிக்கிறார்கள். தானே தன்னுடைய சமநிலையில் சரியாக இல்லை என்றால் தன் மேலேயே சமநிலை வைக்க முடியவில்லை என்றால் அனேகருக்காக மாஸ்டர் ஆனந்தம் நிறைந்தவராக எப்படி ஆக முடியும்? இப்பொழுதோ அனைவரும் இதில் ஒன்றும் இல்லாதவர்களாக காலியாக இருக்கிறார்கள். ஆனந்தத்தின் வரதானி மற்றும் மகாதானியாக சிவன் மற்றும் சக்திகளைத் தவிர வேறு யாரும் இல்லை. அப்படி எதன் வரதானி மற்றும் மகாதானியாக இருக்கிறீர்களோ அது முதலில் தன் மேல் நிரம்பி இருந்தால் தானே மற்றவர்களுக்கும் கொடுக்க முடியும் இல்லையா?

அந்த மாதிரி மாஸ்டர் ஞானம் நிறைந்த, ஆனந்தம் நிறைந்த, கூடவே அந்த அளவு கவனமும் நிறைந்த உயர்ந்த ஆத்மாக்களுக்கு நமஸ்காரம்.

**வரதானம்: சகயோகம் மூலமாக தன்னை சகஜயோகியாக ஆக்கக்கூடிய நிரந்தர யோகி ஆகுக!**

சங்கம யுகத்தில் தந்தையின் சகயோகி ஆகி விடுவது தான் சகஜயோகி ஆவதற்கான விதி ஆகும். யாருடைய ஒவ்வொரு எண்ணம், வார்த்தை, காரியம் தந்தையின் மற்றும் தன்னுடைய இராஜ்யத்தின் ஸ்தாபனையின் காரியத்தில் சகயோகியாக இருப்பதற்காக இருக்கிறது என்றால் அவரை ஞானம், யோக சொரூபமான ஆத்மா, நிரந்தர உண்மையான சேவாதாரி என்று கூறப்படுகிறது. மனதால் இல்லை என்றால் உடலால், உடலால் இல்லை என்றால் பொருளால், பொருளால் கூட இல்லை என்றால் எதில் சகயோகி ஆக முடியுமோ அதில் சகயோகி ஆனீர்கள் என்றால் அதுவும் யோகா தான். எப்பொழுது நீங்கள் இருப்பதே தந்தையினுடையவர் என்றால் தந்தை மற்றும் உங்களுடைய மூன்றாவது யாரும் இருக்க வேண்டாம். இதன் மூலம் நிரந்தரயோகி ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: சகித்துக் கொள்வது அதாவது இறப்பது தான் சொர்க்கத்தின் ராஜ்யத்தை அடைவதாகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 10.06.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சூட்சும அபிமானம் மற்றும் அறியாத நிலை!

தற்சமயம் நாலாபுறங்களிலும் உள்ள முயற்சியாளர்களின் முயற்சியில் முக்கியமாக இரண்டு விஷயங்களின் பலஹீனம் மற்றும் குறை தென்படுகிறது. அந்தக் குறையின் காரணத்தினால் அதிசயமாக என்ன காண்பிக்க வேண்டுமோ அதைக் காண்பிக்க முடிவதில்லை. அந்த இரண்டு குறைகள் எவை? ஒருபக்கம் அபிமானம், இன்னொரு பக்கம் அறியாத நிலை. இந்த இரண்டு விஷயங்களுமே முயற்சியை தொய்வாக்கி விடுகிறது. அபிமானம் கூட மிக சூட்சுமமான ஒன்றாகும். அபிமானத்தின் காரணத்தினால் யாராவது ஏதாவது கொஞ்சம் முன்னேற்றத்திற்காக இஷாரா (ஜாடை) கொடுத்தார் என்றால், சூட்சுமத்தில் அதனை சகித்துக் கொள்ள முடியாத உணர்வுகள் வந்து விடுகின்றன. மேலும் இவர் இதை ஏன் சொன்னார் என்ற எண்ணம் வந்து விடுகிறது. இதைத் தான் சூட்சும ரூபத்தில் அபிமானம் என்று கூறப்படுவது. யாராவது கொஞ்சம் இஷாரா (ஜாடை மாடையாக) கொடுத்தார் என்றால், அந்த இஷாராவை தற்சமயம் மற்றும் எதிர்காலம் இரண்டிற்குமான முன்னேற்றத்திற்கான வழி என்று புரிந்து அந்த இஷாராவை உள்ளடக்கி மற்றும் தன்னுள் சகித்துக் கொள்ளும் சக்தியை நிரப்பும் பயிற்சி இருக்க வேண்டும். சூட்சுமத்தில் கூட உள்உணர்வில் மற்றும் திருஷ்டியில் ஏன், எப்படி நடந்தது ஆகியவைகளினால் குழப்பம் உருவாகிறது என்றால், இதையும் ஆத்ம அபிமானியின் நிலை என்று கூற மாட்டோம். எப்படி மஹிமையைக் கேட்கும் நேரம் உள்உணர்வு மற்றும் பார்வையில் அந்த ஆத்மாவிற்காக அன்பின் பாவனை இருக்கிறதோ அதே போல் ஒருவேளை யாராவது அறிவுரையாக (இஷாரா) மறைமுகமாக கூறுகிறார் என்றால் அதில் கூட இந்த ஆத்மா எனக்காக நற்சிந்தனை செய்பவர் என்று அதே ஆத்மாவின் பொருட்டு உங்களுக்கும் அதே போல் அன்பின் நற்சிந்தனையின் பாவனை எழுகிறது என்றால், அந்த நிலையைத் தான் 'ஆத்ம அபிமானி என்று கூறுவது. ஒருவேளை

# 1972 அவ்யக்த முரளி

ஆத்ம அபிமானி இல்லை என்றால் வேறு வார்த்தைகளில் அபிமானம் என்று கூறுவோம். எனவே அவமானத்தை சகித்துக் கொள்ள முடிவதில்லை மற்றும் இன்னொரு பக்கம் முற்றிலும் அறியாமை, இந்தக் காரணம்" அனேக விஷயங்களில் ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. சிலர் தன்னை காப்பாற்றுவதற்காக கூட அறியாதவராக ஆகிறார், சிலர் உண்மையாகவே அறியாதவர் ஆகிறார். அப்படி இந்த இரண்டு விஷயங்களுக்குப் பதிலாக, எதன் மூலம் அபிமானம் முற்றிலும் அழிந்து விடுகிறதோ அந்த சுவமானம் மற்றும் 'பணிவு' ஆகிய இந்த இரண்டு விஷயங்களையும் தாரணை செய்ய வேண்டும். மனதில் சுவமானத்தின் நினைவு இருக்கட்டும்; கூடவே வார்த்தை யில், செயல்களில் பணிவான நிலை இருக்கிறது என்றால் அபிமானம் அகன்று விடும். ஃபிலாசபர் (தத்துவ ஞானி) ஆகி விட்டார்; ஆனால் ஆன்மீகமானவராக ஆகவில்லை அதாவது ஸ்பிரிட் (ஆர்வம்) வரவில்லை ஆனால் யார் ஆத்மீக நிலையில், ஆத்மீகக் குஷியில் இருக்கிறாரோ அவரைத் தான் ஆன்மீகமானவர் என்று கூற முடியும். இன்றைய நாட்களில் ஃபிலாசபர்கள் அதிகமாகத் தென்படுகிறார்கள் ஆனால் ஆன்மீக சக்தி குறைவாக இருக்கிறது. ஸ்பிரிட் (ஆவி) ஒரு நொடியில் எதிலிருந்தும் எதுவாகவும் செய்து காண்பிக்க முடியும். எதிலிருந்தும் எதுவாகவும் ஆக்கிக் காண்பிக்க முடியும். எப்படி மந்திரவாதி ஒரு நொடியில் எதை எதுவாக மாற்றிக் காண்பிக்கிறார், அதே போல் ஸ்பிரிச்சுவல் மனிதர்கள் அதாவது ஆன்மீகமானவர்களிடத்தில் காரியத்தின் சித்தி (வெற்றி) வந்து விடுகிறது. அவர்களிடம் கைகளின் சித்தி இருக்கிறது. இது ஒவ்வொரு காரியம், ஒவ்வொரு எண்ணத்தில் சித்தி சொரூபம். சித்தி என்றால் பிராப்தி. விஷயங்களைக் கூறுவது மற்றும் கேட்பது என்பதை மட்டும் ஃபிலாசபி என்று கூறப்படுகிறது. ஃபிலாசபியின் பிரபாவம் அற்ப காலத்திற்காக ஏற்படுகிறது, ஸ்பிரிச்சுவாலிட்டியின் பிரபாவம் நிரந்தரமாக ஏற்படுகிறது. அப்படி இப்பொழுது தன்னுள் காரியத்தின் சித்தியை பிராப்தி செய்வதற்காக ஆன்மீகத்தைக் கொண்டு வர வேண்டும். அறியாதவர் ஆவதற்கான அர்த்தம் என்னவென்றால். என்ன கேட்கிறார்களோ அதை சொரூபத்தில் கொண்டு வருவதில்லை. யார் தன்னுடைய படிப்பின் சொருபத்திலிருந்து கற்பிக்கிறாரோ அவரைத் தான் தகுதியான ஆசிரியர் என்று கூறுவது. அவருடைய சொருபமே படிப்பு நிறைந்ததாக இருக்கும். அவருடைய பார்வை, நடத்தை கூட யாருக்கும் படிப்பினையைக் கொடுக்கும். எப்படி சாகார பாபாவின்

ஒவ்வொரு அடியும், ஒவ்வொரு காரியமும் கற்றுக் கொடுப்பவரின் ரூபத்தில் நடைமுறையில் பார்த்தீர்கள். இதைத் தான் வேறு வார்த்தைகளில் 'சரித்திரம்' (நடைமுறை ஒழுக்கம்) என்று கூறுகிறீர்கள். யாருக்காவது வாய்மொழி மூலமாக கல்வி கொடுப்பதோ பொதுவான விஷயம்; ஆனால் அனைவரும் அனுபவத்தையே விரும்புகிறார்கள். தன்னுடைய உயர்ந்த காரியம். உயர்ந்த எண்ணத்தின் சக்தி மூலம் அனுபவம் செய்விக்க வேண்டும். நல்லது.

மனதில் சுவமானின் நினைவிருக்க வேண்டும், சொல், செயலில், பணிவு இருக்க வேண்டும். அப்போது அபிமானம் (கர்வம்) முடிந்து போகும்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 12.06.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ரிஃபைன் (சுத்திகரிக்கப்பட்ட) நிலையை அறிதல்!

எப்படி அறிவியல் ரிஃபைன் (துல்லியமாக மாறி) ஆகிக் கொண்டே இருக்கிறது. அதே போல் 'தன்னுள் அமைதியின் சக்தி மற்றும் உங்களது நிலை ரிஃபைன் ஆகிக் கொண்டே இருக்கிறதா? ரிஃபைனான பொருள் ஒன்று இருக்கிறது என்றால், அதில் என்னென்ன விசேஷங்கள் இருக்கும். ரிஃபைனாக இருக்கும் பொருள் அளவில் (க்வான்ட்டிடி) குறைவாக இருந்தாலும் தரத்தில் (க்வாலிட்டியில்) சக்திசாலியாக இருக்கும். எந்த பொருள் ரிஃபைனாக இருக்காதோ அதன் க்வான்ட்டிடி (அளவு) அதிகமாக, பக்வாலிட்டி (தரம்) குறைவாக இருக்கும். அதே போல் இங்கேயும் எப்பொழுது ரிஃபைன் ஆகிக் கொண்டே போகிறீர்கள் என்றால், குறைந்த நேரம், குறைந்த எண்ணம், குறைந்த சக்தியில் என்ன காரியம் நடக்குமோ அது 100 மடங்காக இருக்கும். மேலும் லேசான நிலை இருக்கும். லேசான நிலையின் அடையாளம் அவர் ஒருபொழுதும் கீழே வர மாட்டார். விரும்பாவிட்டாலும் தானாகவே உயர் நிலையில் நிலைத்திருப்பார். இது தான் ரிஃபைனின் தகுதியாகும். அப்படியானால் உங்களில் இந்த இரண்டு விசேஷங் களும் அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கிறதா? சுமையாக இருப்பதினால் உழைப்பு அதிகமாகச் செய்ய வேண்டியதிருக்கும். லேசாக இருப்பதினால் உழைப்பு குறைந்து விடும். அந்த மாதிரி இயற்கையான மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இந்த இரண்டு விசேஷங்களின் மீது எப்பொழுதும் கவனம் இருக்க வேண்டும். இதை எதிரில் வைத்துக் கொண்டுதான் தன்னுடைய ரிஃபைன் நிலையை சோதனை செய்ய முடியும். ரிஃபைனான பொருள் அதிகமாக அங்கு இங்கு விலகிப் போவதில்லை. வேகத்தைக் (முயற்சியின்) குறைத்து விடும். ஒருவேளை ரிஃபைன் இல்லை என்றால், குப்பை கலந்திருக்கிறது என்றால், வேகமாகச் செல்ல முடியாது. தடையின்றி செல்ல முடியாது. ஒரு பக்கம் எவ்வளவிற்கு எவ்வளவு ரிஃபைன் ஆகிக் கொண்டே இருக்கிறீர்களோ அந்த அளவு இன்னொரு

பக்கம் சிறு சிறு விஷயங்கள் மற்றும் தவறுகள், சம்ஸ்காரங்கள் அவற்றின் ஃபைன் (உயர் நிலை) அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அந்தக் காட்சி, இன்னொரு பக்கம் ரிஃபைன் ஆவதற்கான காட்சி ஒரு பக்கம் இரண்டின் வலிமையும் இருக்கிறது. ஒருவேளை ரிஃபைன் இல்லை என்றால், ஃபைன் என்று புரிந்து கொள்ளுங்கள். இரண்டும் சேர்ந்தே காட்சிகள் தென்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுவும் மிக அதிகமாகச் சென்று கொண்டிருக்கிறது. மேலும் இதுவும் அதிக பிரத்யக்ஷ ரூபத்தில் தென்பட்டுக் கொண்டே இருக்கிறது. குப்தமாக இப்பொழுது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அப்படி எப்பொழுது இரண்டு விஷயங்களும் பிரத்யக்ஷம் (வெளிப்படுமோ) ஆகுமோ அதன் அனுசாரமே தான் வரிசை எண் உருவாகும்.

மாலையை கையால் உருட்ட வேண்டாம். நடத்தை மூலமாகவே அவர் தன்னுடைய வரிசை எண்ணை எடுத்துக் கொள்கிறார். இப்பொழுது எண் நிர்ணயம் செய்வதற்கான நேரம் வந்து கொண்டிருக்கிறது. எனவே இரண்டு விஷயங்களும் தெளி வாகத் தென்பட்டுக் கொண்டிருக்கின்றன மற்றும் இரண்டையும் பார்த்துக் கொண்டே சாட்சியாக இருந்து முகமலர்ச்சியோடு இருக்க வேண்டும். எந்த விஷயம் அளவுக்கு அதிகமாகச் செல்கிறதோ அந்தக் காட்சியைப் பார்ப்பது தான் நன்றாக இருக்கும். அந்தக் காட்சி தான் மிகக் கவரக்கூடியதாக இருக்கும். இப்பொழுது கூட அந்த மாதிரி அமைதியற்ற காட்சி நடந்து கொண்டிருக்கிறது. பார்ப்பதில் மஜா (மகிழ்ச்சி) வருகிறது இல்லையா? அல்லது இரக்கம் வருகிறதா? பார்த்து குஷி அடைகிறீர்கள் இன்னொரு பக்கத்தைப் பார்த்து ஒரு பக்கத்தைப் இரக்கம் வருகிறது. இரண்டின் காட்சிகளும் நடந்து கொண்டிருக் கிறது. திரையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்ற காட்சியை இன்று காண்பித்தோம். வதனத்தில் இருந்து மிகத் தெளிவாகத் தென்படுகிறது. யார் எவ்வளவு இருக்கிறாரோ அவருக்கு மிகத் தெளிவாக தென்படுகிறது. யார் கீழே மேடையில் கதாபாத்திரமாக இருக்கிறாரோ அவருக்கு எதுவும் தென்பட முடியாது, உயர்வாக சாட்சியாகி மேலே இருந்தால் அனைத்தும் தெளிவாகத் தென்படுகிறது. இன்று வதனத்தில் தற்சமயத்து காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். நல்லது.

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

# 14.06.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுயநிலையில் நிலைத்திருப்பதற்கான முயற்சி மற்றும் அடையாளங்கள்!

தன்னுடைய ஆதி மற்றும் அனாதி சுயஸ்திதியை (சுயநிலையை) தெரிந்திருக்கிறீர்களா? எப்பொழுதும் தன்னுடைய சுயஸ்திதியில் நிலைத்திருப்பதற்கான கவனம் இருக்கிறதா? சுயஸ்திதியில் அதாவது தன்னுடைய அனாதி ஸ்திதியில் நிலைத்திருப்பதற்கு கடினமாக இருக்கிறதா? மற்ற ஸ்திதியில் நிலைத்திருப்பதற்கு கடினமாக ஆக முடியும் ஆனால் சுயஸ்திதியில் நிலைத்திருப்பதோ இயல்பானதும் மற்றும் சரளமானதும் இல்லையா? சுயஸ்திதியில் எப்பொழுதும் நிலைத்திருப்பதற்காக முக்கியமாக நான்கு விஷயங்களின் அவசியம் இருக்கிறது. ஒருவேளை அந்த நான்கு விஷயங்களுமே எப்பொழுதும் நிலைத்திருக்கிறது என்றால் சுயஸ்திதி எப்பொழுதும் இருக்கும். ஒருவேளை நான்கிலிருந்து ஏதாவது ஒன்றின் குறை இருக்கிறது என்றால் சுயஸ்திதியிலும் குறைவாகத் தான் நிலைத்திருக்க முடியும். சுயஸ்திதியை எப்படி வர்ணனை செய்கிறீர்களோ அதை எதிரில் வைத்து எந்த நான்கு விஷயங்கள் எப்பொழுதும் உடன் இருக்க வேண்டும் என்று யோசியுங்கள். சுயஸ்திதியின் லட்சணமாக என்ன இருக்கிறது? தந்தையின் என்னென்ன குணம் இருக்கின்றனவோ அந்த குணங்களின் சொரூபம் ஆவது இதைத் தான் சுயஸ்திதி மற்றும் அனாதி ஸ்திதி என்று கூறுவது, அந்த மாதிரியான ஸ்திதி எப்பொழுதும் இருப்பதற்காக எந்த நான்கு விஷயங்களின் அவசியம் இருக்கிறது? நினைவில் வருகிறதா? எந்த நான்கு விஷயங்கள் இருப்பதினால் அனாதி ஸ்திதி தானாகவே இருக்கும். சுகம், சாந்தி, ஆனந்தம், அன்பின் நிலை தானாகவே இருக்கும். அனாதி ஸ்திதியிலிருந்து மத்திய ஸ்திதியில் வருவதே ஏன் என்று இதை முதலில் யோசியுங்கள். இதன் காரணம் என்ன? (தேக அபிமானம்). தேக அபிமானத்தில் வருவதினால் என்ன ஆகிறது? தேக அபிமானத்தில் வருவதற்கான காரணம் என்னவாக இருக்கிறது? பர-ஸ்திதி சுலபமாகவும், சுயஸ்திதி கடினமாகவும் ஏன் அனுபவம் ஆகிறது? உடல்

கூட சுயத்திலிருந்து வேறு தான் இல்லையா? அப்படி உடலில் சுலபமாக நிலைத்திருந்து விடுகிறீர்கள். மேலும் சுயத்தில் நிலைத்திருக்க முடிவதில்லை, என்ன காரணம்? அப்படி பார்த்தாலும் எப்பொழுது வாழ்க்கையில் இந்த நான்கு விஷயங்களும் இருக்கின்றனவோ அப்பொழுது தான் நிரந்தர சுகம் மற்றும் சாந்தி நிறைந்த வாழ்க்கை இருக்க முடியும். அந்த நான்கு விஷயங்கள் ஹெல்த் (ஆரோக்கியம்), வெல்த் (செல்வம்). ஹேப்பி (சந்தோஷம்) மற்றும் ஹோலி (தூய்மை). ஒருவேளை இந்த நான்கு விஷயங்களும் எப்பொழுதும் நிலைத்திருக்கிறது என்றால் துக்கம் மற்றும் அமைதியின்மை ஒருபொழுதும் வாழ்க்கையில் அனுபவம் ஆகாது. அந்த மாதிரி சுயஸ்திதியின் சொரூபமே எப்பொழுதும் சுகம், சாந்தி, ஆனந்தம், அன்பு சொரூபத்தில் நிலைத்திருப்பதாகும். அப்படி சுயஸ்திதியிலிருந்தும் மறந்த நிலையில் வருகிறீர்கள். இதன் காரணம் என்னவாக இருக்கிறது?. செல்வத்தின் குறை மற்றும் ஆரோக்கியத்தின் பலஹீனம் மற்றும் தூய்மையாக ஆவதில்லை. இதன் கூடவே சந்தோஷம் அதாவது மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை. அப்படியானால் செல்வம் மற்றும் ஆரோக்கியம் எவை? ஆத்மா எப்பொழுதும் நோயற்றதாக இருக்கிறதோ, மாயாவின் எந்தவொரு வியாதியும் ஆத்மா மேல் பாதிப்பை ஏற்படுத்தாமல் இருக்கிறதோ, இதைத் தான் ஆரோக்கிய நிலை என்று கூறுவது. மேலும் செல்வமும் இருக்க வேண்டும் அதாவது என்ன பொக்கிஷம் கிடைத்துக் கொண்டிருக்கிறது மற்றும் எந்த சர்வ சக்திகள் தந்தை மூலமாக ஆஸ்தியாக பிராப்தி ஆகியிருக்கிறதோ, அந்த ஞான பொக்கிஷங்களை மற்றும் சர்வ சக்திகளின் பொக்கிஷங்களை எப்பொழுதும் நிலைத்திருக்கச் செய்தீர்கள் என்றால் சுயஸ்திதியிலிருந்து கீழே வர முடியுமா? என்று கூறுங்கள். இதே போல தூய்மை. எண்ணம், கனவில் கூட எந்தவொரு தூய்மையின்மையும் இல்லை என்றால் சுயஸ்திதி தானாகவே ஏற்பட்டு விடும். இந்த நான்கு விஷயங்களின் குறை இருக்கும் காரணத்தினால் சுயஸ்திதியில் எப்பொழுதும் நீங்கள் இருக்க முடிவதில்லை. இந்த நான்கு விஷயங் களையும் நீங்கள் சோதனை செய்யுங்கள். ஆரோக்கியமானவராகவும். செல்வந்தனாகவும் எதுவரை ஆகியிருக்கிறேன்? ஆரோக்கியம், செல்வம் மற்றும் தூய்மை இந்த மூன்று விஷயங்களுமே இருக்கிறது என்றால் சந்தோஷம் தானாகவே இருக்கும். அப்படி இந்த நான்கு விஷயங்களையும் எப்பொழுதும் கவனத்தில் வையுங்கள். பொதுவாக நோயாளி தன்னை

ஒருபொழுதும் சுகம் நிறைந்தவராக நினைப்பதில்லை. நோயாளியாக இருக்கும் காரணத்தினால் துக்க உணர்வுகள் விரும்பாவிட்டாலும் எழும்பிக் கொண்டே இருக்கும். அப்படி இங்கேயும் எப்பொழுது ஆரோக்கியமாக இல்லை என்றால் அப்பொழுது துக்கம் மற்றும் அமைதியின்மையின் உணர்வு உற்பத்தியாகிறது. அப்படி இந்த நான்கு விஷயங்களுமே எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும். இந்த நான்கு விஷயங்களும் ஒருபொழுதும் மறைந்து விடாமல் இருப்பதற்காக என்ன முயற்சி செய்ய வேண்டும். அனைவரும் செய்ய முடிகிற மாதிரி, இதற்கான சுலபமான முயற்சியைக் கூறுங்கள். கொஞ்சமாவது கடினமான விஷயம் இருக்கிறது என்றால் செய்ய முடிவதில்லை. சுலபத்தை விரும்புகிறீர்கள் தான் இல்லையா? ஏனென்றால் ஆத்மாவில் ஆதி தேவதா தர்மத்தின் சம்ஸ்காரம் இருக்கும் காரணத்தினால் அரை கல்பம் மிக சகஜமாக சுகங்களில் இருக்கிறீர்கள். எந்தவொரு உழைப்பும் செய்வதில்லை. அப்படி இந்த அரை கல்பத்தின் சம்ஸ்காரம் ஆத்மாவில் இருக்கும் காரணத்தினால் இப்பொழுது ஏதாவது கடினமான விஷயம் ஏற்படுகிறது என்றால் அதைச் செய்ய முடிவதில்லை. எப்பொழுதும் சுலபத்தின் ஆசை இருக்கிறது. அப்படி அந்த சகஜமான முயற்சி எது? நினைவு கூட சுலபமாக எப்படி ஆகும்?

நினைவு சகஜமாக மற்றும் நிரந்தரமாக இருப்பதற்காக மற்றும் ஆரோக்கியம், செல்வம், சந்தோஷம் மற்றும் தூய்மையில் நிலைத்திருப்பதற்காக என்ன முயற்சி செய்ய வேண்டும் என்று கூறுங்கள். நான்கு விஷயங்களும் சேர்ந்தே இருக்க வேண்டும். எப்படி நீங்களும் நிராகாரம் மற்றும் சாகாரம் இரண்டு ரூபத்திலும் இருக்கிறீர்கள் இல்லையா?. நிராகார ஆத்மா மற்றும் சாகார உடல் இரண்டின் சம்மந்தத்தினால் ஒவ்வொரு காரியம் செய்ய முடிகிறது. ஒருவேளை இரண்டின் சம்மந்தம் இல்லை என்றால் எந்தவொரு காரியமும் செய்ய முடியாது. அந்த மாதிரியே நிராகார மற்றும் சாகார தந்தை இருவரின் துணையோடும் மேலும் அவர்களை எதிரில் வைத்து ஒவ்வொரு காரியம் மற்றும் ஒவ்வொரு எண்ணத்தையும் செய்தீர்கள் என்றால் இந்த நான்கு விஷயங்களும் தானாகவே வந்து விடும். நிராகாரத்தை மட்டும் மற்றும் சாகாரத்தை மட்டும் நினைவு செய்வதினால் நான்கு விஷயங்கள் வராது ஆனால் நிராகார மற்றும் சாகார பாபா இருவருமே எப்பொழுதும் உடன் இருந்தால், உடன் இருக்கும் காரணத்தினால் எந்த எண்ணம்

செய்வீர்களோ அதை முதலில் அவரோடு ஒப்பிட்டு பார்ப்பீர்கள். ஒப்பிட்டுப் பார்த்த பிறகு எந்தவொரு காரியம் செய்வதாலும் நிச்சயபுத்தி உடையவராகி செய்வீர்கள். எப்படி ஒருவேளை சாகாரத்தில் யாராவது நிமித்தமான உயர்ந்த ஆத்மா உடன் இருக்கிறது என்றால் அவரிடம் எந்தவொரு விஷயத்தையும் சொல்லி கேட்டுத் தெரிந்து கொண்டு செய்தீர்கள் என்றால் நிச்சயபுத்தி உடையவராகி செய்வீர்கள் இல்லையா?. பயமின்மை மற்றும் நிச்சயம் இரண்டு குணங்களையும் எதிரில் வைத்து செய்வீர்கள். அப்படி எங்கு எப்பொழுதும் நிச்சயம் மற்றும் பயமின்மை இருக்கிறதோ அங்கு எப்பொழுதும் உயர்ந்த எண்ணத்தின் வெற்றி இருக்கிறது. எந்த எண்ணத்தை உருவாக்கினாலும் ஒருவேளை எப்பொழுதும் நிராகார மற்றும் சாகார தந்தை உடன் மற்றும் எதிரில் இருக்கிறார் என்றால் அவர்களிடம் சரியா? தவறா? என சரி பார்த்த பிறகு நிச்சயம் மற்றும் பயமின்மையோடு செய்வீர்கள். நேரமும் வீணாகாது. இந்தக் காரியம் செய்யலாமா அல்லது செய்ய வேண்டாமா, வெற்றி ஏற்படுமா அல்லது ஏற்படாதா என்ற இந்த வீணான எண்ணம் அனைத்தும் முடிவடைந்து விடும். தற்சமயம் ஆத்மாவில் பலஹீனம் என்ற வியாதி இருக்கிறது அது எது? வீணான எண்ணங்களில் நேரத்தை வீணாக இழப்பது தான் தற்சமயம் ஆத்மாவின் பலஹீனம் ஆகும். இந்த நோயின் காரணமாக எப்பொழுதும் ஆரோக்கியமாக இருப்பதில்லை. சில நேரம் இருக்கிறார்கள். சில நேரம் பலஹீனமாகி விடுகிறார்கள். அப்படி சாகார மற்றும் நிராகார தந்தைகளை எதிரில் வைத்து சரி பார்த்து சோதித்து பிறகு ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள் இது தான் எப்பொழுதும் ஆரோக்கியமாக இருப்பதற்கான வழி ஆகும். இதன் மூலம் நேரமும் சேமிப்பாகி விடும். நீங்கள் சாகார ரூபத்தில் எவருடனோ சரிபார்த்து சோதனை செய்வது மாதிரி நடைமுறையில் அனுபவம் செய்வீர்கள். விஷயமோ பொதுவானது தான் ஆனால் இதே பொதுவான விஷயத்தை நடைமுறையில் குறைவாகக் கொண்டு வருகிறீர்கள். வெகுகாலமாக கேட்டிருக்கிறீர்கள் ஆனால் அனுபவியாக ஆகவில்லை. பாப்தாதா எப்பொழுதும் உடன் இருக்கிறார் என்ற இந்த அனுபவம் செய்தீர்கள் என்றால் ஹெல்தி மற்றும் வெல்தியாக இருக்க முடியாதா? பாப்தாதா நிராகார மற்றும் சாகார இருவர்களின் துணை இருக்கும் காரணத்தினால் ஆரோக்கியம் மற்றும் செல்வம் இரண்டும் வந்து விடுகிறது மற்றும் சந்தோஷமும் தானாகவே இருக்கும். அப்படியானால் சுலபமான முயற்சி என்னவாக ஆனது?

நிராகார மற்றும் சாகார பாபாக்கள் இருவரையும் எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் உடன் வைக்காத காரணத்தினால் இந்த ரிசல்ட்டாக இருக்கிறது. உடன் வைப்பது கடினமாக இருக்கிறதா? எப்பொழுது தெரிந்து கொண்டீர்கள் மற்றும் அறிந்து கொண்டீர்கள் மேலும் அனைத்து உறவுகளும் அந்த ஒருவருடன் தான் வேறு யாருமில்லை என்று ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் அதன்படி நடந்து கொள்வதில் என்ன கடினம்? துணையை ஏன் விடுகிறீர்கள்? சீதாவிற்கு துணை ஏன் விடுபட்டது? காரணம்? கோட்டைத் தாண்டினார். இது சந்திரவம்ச சீதையின் காரியமாகும். லட்சுமியினுடையது அல்ல. அதனால் மரியாதைக் கோட்டிற்கு வெளியே புத்தி கொஞ்சம் கூட செல்ல வேண்டாம். இல்லையென்றால் சந்திரவம்சத்தினர் ஆகி விடுவீர்கள். புத்தி என்ற கால் மரியாதைக் கோட்டிலிருந்து எண்ணம் மற்றும் கனவில் கூட வெளியில் வந்தது என்றால் சூரிய வம்சத்தைச் சேர்ந்த லட்சுமி இல்லை, சந்திரவம்சத்தைச் சேர்ந்த சீதை என்று புரிந்து கொள்ள வேண்டும். சூரிய வம்சத்தினர் என்றால் மாவீரன். யார் மாவீரனாக இருக்கிறாரோ அவர் ஒருபொழுதும் எவரது வசமுமாவதில்லை. எனவே எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்வதற்காக தன்னை மரியாதைக் கோட்டிற்கு உள்ளேயே வையுங்கள், கோட்டிற்கு வெளியே வராதீர்கள். வெளியில் வந்தீர்கள் என்றால் ஒன்றும் இல்லாதவர் ஆகி விடுகிறீர்கள். பிறகு உதவி கிடைக்கட்டுமே ஏதாவது நிவாரணம் கிடைக்கட்டுமே என்று கேட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். கேட்பவராக ஆகி விட்டீர்கள் இல்லையா? ஒன்றும் இல்லாதவராக ஆவதின் அர்த்தமே ஆரோக்கியம் செல்வத்தை இழந்து விடுகிறீர்கள். எனவே ஒன்றும் இல்லாதவர் ஆகி விடுகிறீர்கள். அதனால் லகீரையும் (கோட்டையும்) தாண்டாதீர்கள். பகீராகவும் (ஒன்றும் இல்லாத வராகவும் ஆகாதீர்கள். கோட்டின் உள்ளே இருப்பதினால் மாயாவை வென்றவர் ஆக முடியும். கோட்டைத் தாண்டுவதினால் மாயாவிடம் தோல்வி அடைந்து விடுகிறீர்கள். எனவே எப்பொழுதும் ஆரோக்கியம் செல்வம், தூய்மை இருக்கிறதா? இல்லை என்றால் ஏன் இல்லை? அந்த நோயைத் தெரிந்து உடனேயே மருந்து எடுத்துக் கொள்ளுங்கள் மற்ற அனைத்து விதமான மருந்தோ கிடைத்து விட்டது. அனைத்து பிராப்திகளும் இருக்கிறது. அப்படி அனைத்து பிராப்திகள் இருந்தும் தேவையான நேரத்தில் ஏன் செய்ய முடிவதில்லை? காலம் கடந்து சென்ற பிறகு ஏன் நினைவில் வருகிறது? தேவையான

நேரத்தில் காரியம் செய்யாதது கூட பலஹீனம் தான். நேரத்திற்கு பிறகு செய்கிறீர்கள் என்றால் நேரம் இதுவும் கடந்து விடும் இல்லையா?. அந்தந்த நேரத்தில் நினைவு இருக்க வேண்டும். அதற்காக தன்னுடைய புத்தி இந்தளவு விசாலமானதாகவும் ஞானம் நிறைந்ததாகவும் ஆகவில்லை. அதனால் பின்பு ஏதாவது ஆதாரம் விரும்புகிறது. அந்த ஆதாரத்தை எப்பொழுதும் நினைவு வைத்தீர்கள் என்றால் ஒருபொழுதும் தோல்வி அடைய முடியாது. அப்படி ஒருபொழுதும் தன்னை நோயாளியாக ஆக்க வேண்டாம். கொஞ்சமாவது ஏதாவது விதமான நோய் பிரவேசம் ஆகி விட்டது என்றால் ஒரு வியாதி பின்பு அனேக வியாதிகளைக் கொண்டு வருகிறது. ஒன்றையே அழித்து விட்டோம் என்றால் அனேகம் வரவே வராது. ஒன்றில் அலட்சியமாக இருக்கிறீர்கள், லேசான விஷயம் என்று நினைக்கிறீர்கள் ஆனால் தற்சமயத்து கணக்குப்படி லேசான வியாதி கூட பெரிய வியாதி ஆகும். எனவே லேசானதையே பெரியது என்று நினைத்து அங்கேயே அதை அழித்து விட்டீர்கள் என்றால் ஆத்மா ஒருபொழுதும் பலமற்றதாக ஆகாது. ஆரோக்கியமாக இருக்கும்.

சாகாரத்தில் கூட பாபாவுடன் எப்பொழுதும் இருந்ததின் அனுபவியாக நீங்கள் இருக்கிறீர்கள். தனியாக இருப்பதை நீங்கள் விரும்புவதில்லை. எப்பொழுது சம்ஸ்காரமே சேர்ந்திருப்பதற்கானதாக இருக்கிறது என்றால் அப்படி உடன் வைத்துக் கொள்வதில் ஏன் குறை வைக்கிறீர்கள், துறவற மார்க்கத்திலிருப்பவராக ஏன் ஆகுகிறீர்கள்? எப்படி அந்த துறவற மார்க்கத்தினர் எந்த பிராப்தியையும் அடையாது, தேடிக் கொண்டே இருக்கிறார்கள். அந்த மாதிரியான நிலை உங்களுக்கும் ஆகி விடும். உண்மையான பிராப்தியை, பிராப்தி செய்ய முடிவதில்லை. எனவே எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ளுங்கள், சம்மந்தத்தில் இருங்கள். பரிவாரத்தின் பாலனையில் இருந்தீர்கள் என்றால் யார் பாலனையின் உள்ளே எப்பொழுதும் இருக்கிறார்களோ அவர்கள் எப்பொழுதும் கவலையற்று மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். பாலனைக்கு வெளியே ஏன் வந்து விடுகிறீர்கள்? துறவறத்தில் ஒருபொழுதும் செல்லாதீர்கள். அப்படி உடன் இருப்பதின் அனுபவத்தை செய்வதினால் தானாகவே அனைத்து பிராப்திகளும் ஏற்பட்டு விடும். எந்த நேரம் நீங்கள் பாப்தாதா மற்றும் பரிவாரத்தின் துணையை விட்டு விடுகிறீர்களோ அப்பொழுது முள்காட்டில் சென்று விடுகிறீர்கள். எப்படி அவர்கள் காடுகளில் தேடிக் கொண்டே இருக்கிறார்கள், அதே போலவே மாயாவின்

காடுகளில் தானே துணையை விட்டு விட்டு பின்பு சோர்வடைந்து எங்காவது ஆதரவு கிடைக்காதா என்று தேடுகிறீர்கள். துறவற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தனியாக இருக்கும் காரணத்தினால் ஒருபொழுதும் காரியத்தின் வெற்றியை அடைய முடியாது என்று நீங்கள் கூறுகிறீர்கள், எப்படி அவர்களுக்கு எந்தவொரு காரியத்தின் வெற்றி கிடைப்பதில்லையோ அதே போல் ஒருவேளை நீங்களும் உடன் இருப்பதை விட்டு விட்டு தனியாக துறவற மார்க்கத்தினராக ஆகி விட்டீர்கள் என்றால் காரியத்தின் வெற்றி இருக்காது. தனிமையில் சோர்வடைகிறீர்கள் என்றால் மாயாவின் அடிமையாகி விடுகிறீர்கள். எனவே ஒருபொழுதும் தனியாக ஆகாதீர்கள், சோர்வடையாதீர்கள் மற்றும் மாயாவின் அடிமை ஆகாதீர்கள். நல்லது.

**வரதானம்: ஸ்தூல காரியம் செய்து கொண்டே மனதின் மூலமாக உலக மாற்றத்தின் சேவை செய்யக்கூடிய பொறுப்புள்ள ஆத்மா ஆகுக!**

எந்தவொரு ஸ்தூல காரியத்தையும் செய்து கொண்டே நான் உலக மேடையில் உலக நன்மைக்கான சேவைக்காக பொறுப்பில் இருக்கிறேன் என்ற நினைவிருக்கட்டும். எனக்கு என்னுடைய உயர்ந்த மனோபலம் மூலமாக உலக மாற்ற காரியத்தின் மிகப் பெரிய பொறுப்பு கிடைத்திருக்கிறது. இந்த நினைவினால் அலட்சியம் முடிவடைந்து விடும். மேலும் நேரமும் வீணாகச் செல்வதிலிருந்து மிச்சமாகி விடும். ஒவ்வொரு வினாடியையும் விலைமதிக்க முடியாது என்று புரிந்து கொண்டு உலக நன்மைக்கான மற்றும் ஜடம் மேலும் சைத்தன்யத்தை மாற்றும் காரியத்தில் பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டே இருங்கள்.

**சுலோகன்: இப்பொழுது போராடிக் கொண்டிருப்பவராக இருப்பதற்குப் பதிலாக நிரந்தர யோகி ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.06.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முகமலர்ச்சியாக இருப்பது தான் பிராமண வாழ்க்கையின் விசேஷ சம்ஸ்காரம்!

முகமலர்ச்சியோடு இருப்பதற்காக சகஜமான யுக்தி எது? எப்பொழுதும் முகமலர்ச்சியோடு இருப்பதற்கான நினைவுச்சின்ன ரூபத்தில் எந்த படம் இருக்கிறது? அதில் விசேஷமாக சிரித்த முகத்தையே காண்பித்திருக்கிறார்கள் இல்லையா? விஷ்ணு ஓய்வாக படுத்திருக்கும் படத்தைக் காண்பிக்கிறார்கள். ஞான சிந்தனை செய்து முகமலர்ச்சியாக ஆகிக் கொண்டிருக்கிறார். விசேஷமாக முகமலர்ச்சி ஆவதற்கான படத்தைத் தான் நினைவுச் சின்ன ரூபத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. விஷ்ணு என்றால் இணைந்த ஜோடி ரூபம். விஷ்ணுவின் சொரூபம் நீங்களும் தான் இல்லையா? நரனிலிருந்து நாராயணன் மற்றும் நாரியிலிருந்து லட்சுமியாக நீங்கள் தான் ஆகுபவர்களா அல்லது தந்தை மட்டும் ஆவாரா? நரன் மற்றும் நாரி இருவருமே யார் ஞானத்தை சிந்தனை செய்கிறார்களோ அவர்கள் அந்த மாதிரி முகமலர்ச்சியோடு இருக்கிறார்கள். அப்படியானால் முகமலர்ச்சியாக இருப்பதற்கான சாதனம் என்னவாக ஆனது? ஞானத்தை சிந்தனை செய்வது. யார் எவ்வளவு ஞானத்தை சிந்தனை செய்கிறாரோ அவ்வளவே முகமலர்ச்சியோடு இருக்கிறார். ஞானத்தின் சிந்தனை இல்லாமல் இருப்பதற்கான காரணம் என்ன? வீணான சிந்தனையில் சென்று விடுகிறீர்கள். வீணான சிந்தனை இருக்கிறது என்றால் ஞான சிந்தனை இருப்பதில்லை. ஒருவேளை புத்தியை எப்பொழுதும் ஞானத்தின் சிந்தனையிலேயே ஈடுபடுத்திக் கொண்டிருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் முகமலர்ச்சியோடு இருப்பீர்கள். வீணான சிந்தனை இருக்கவே இருக்காது. ஞான சிந்தனை செய்வதற்காக, எப்பொழுதும் முகமலர்ச்சியோடு இருப்பதற்காக பொக்கிஷங்களோ மிக அதிகமாகக் கிடைத்திருக்கிறது. எப்படி இன்றைய நாட்களில் யாராவது மிகுந்த

செல்வந்தனாக இருக்கிறார் என்றால் இவரிடமோ எண்ண முடியாத செல்வங்கள் இருக்கின்றன என்று கூறுவார்கள். அதே போலவே ஞானத்தின் பொக்கிஷம் என்ன கிடைத்திருக்கிறதோ அதை எண்ண முடியுமா? இவ்வளவு எண்ண முடியாததாக இருந்த போதிலும் பின்பு ஏன் விட்டு விடுகிறீர்கள். ஏதாவது குறையின் காரணமாகத் தான் அந்த பொருள் இல்லாமல் இருப்பது சாத்தியமாகிறது ஆனால் குறை இல்லாத போதும் பொருள் இல்லை என்ற இதுவோ இருக்கக் கூடாது இல்லையா? ஞான பொக்கிஷத்தை விட அந்த விஷயங்கள் அதிகமாக பிடித்திருக்கிறதா என்ன? எப்படி வெகுகாலத்து பழக்கம் இருக்கும் காரணத்தினால் விரும்பாவிட்டாலும் வந்து விடுகிறது என்று நினைக்கிறீர்களா? இப்பொழுது ஞானத்தை சிந்தனை செய்ய ஆரம்பித்து எவ்வளவு காலம் ஆகி விட்டது? சங்கமயுகத்தின் ஒரு வருடம் கூட எத்தனை வருடங்களுக்குச் சமமானது. சங்கமயுகத்தின் ஒரு வருடம் கூட மிகப் பெரியது. இதே கணக்குப்படி பார்த்தீர்கள் என்றால் இதுவும் வெகுகாலத்தின் விஷயமாகி விட்டது இல்லையா?. அப்படி அது வெகுகாலத்து சம்ஸ்காரம் ஆன காரணத்தினால் விரும்பாவிட்டாலும் நினைவில் வந்து விடுகிறது என்றால் இதுவும் வெகுகாலத்து நினைவு இயற்கையாக ஏன் இருப்பதில்லை. எது புது விஷயமோ அதுவோ இன்னும் அதிகமாக நினைவில் இருக்க வேண்டும். ஏனென்றால் நிகழ்காலம் இல்லையா? அதுவோ இருந்தாலும் கடந்த காலம். அப்படி இது நிகழ்காலத்தின் விஷயம், பின்பு ஏன் கடந்த காலம் நினைவு வருகிறது? கடந்த காலம் நினைவு வருகிறது என்றால், கடந்த காலத்தின் கூடவே அதன் மூலம் என்ன பிராப்தி ஆகிறது என்ற இதுவும் நினைவு வருகிற எப்பொழுது அதன் மூலமாக எந்தவொரு சுகம் நிறைந்த பிராப்தி ஆவதில்லை என்றாலும் ஏன் நினைவு செய்கிறீர்கள். ரிசல்ட் எதிரில் இருந்த போதிலும் ஏன் நினைவு செய்கிறீர்கள்? அது வீணானது என்று இதையும் புரிந்திருக்கிறீர்கள். வீணானதின் விளைவுகள் கூட வீணானதாகத் தான் இருக்கும் இல்லையா? வீணான விளைவு என்று புரிந்திருந்தும் அதன் நடைமுறையில் வருகிறீர்கள் என்றால் இதை என்னவென்று கூறுவது? பலமின்மை. புரிந்து கொண்ட போதிலும் செய்ய முடியவில்லை. இதைத் தான் பலமின்மை என்று கூறப்படுவது. இதுவரை பலமற்றவராக இருக்கிறீர்களா என்ன? அதிகாரம் உள்ளவரின் அடையாளமாக என்ன இருக்கும்? அவரிடம் வில் பவர் (மனோபலம்) இருக்கும். என்ன செய்ய விரும்புகிறாரோ அதைச் செய்ய முடியும்,

செய்விக்க முடியும். தான் இவர் அதிகாரமுள்ளவர் என்று கூறப்படுகிறது. தந்தை என்ன அதிகாரம் கொடுத்திருக்கிறாரோ எனவே அதை இன்னும் பிராப்தி செய்யவில்லையா என்ன? மாஸ்டர் ஆல்மைட்டி அத்தாரிட்டியாக இருக்கிறீர்களா? ஆல்மைட்டி என்றால் சர்வ சக்திவான் (அனைத்து சக்திகளும் நிறைந்தவர்) யாரிடம் அனைத்து சக்திகளின் அத்தாரிட்டி இருக்கிறதோ, அதைப் புரிந்து கொண்டும் சய்ய முடியவில்லை என்றால் அவரை ஆல்மைட்டி அத்தாரிட்டி என்று சொல்ல முடியுமா? நான் யார் என்பதை மறந்து விடுகிறீர்கள். இதுவோ தன்னுடைய பதவியில்லையா? அப்படியானால் தன்னைத் தானே மறந்து விடுகிறீர்களா என்ன? உண்மையை மறந்து பொய்யில் வந்து விடுகிறீர்கள். எப்படி இன்றைய நாட்களில் தன்னுடைய முகத்தைக் கூட போலியாக ஆக்குவதின் நாகரீகம் இருக்கிறது. ஏதாவது அலங்காரம் அந்த மாதிரி செய்கிறார்கள். அதில் உண்மை ரூபம் மறைந்து விடுகிறது. இதைத் தான் போலியான அசுர அலங்காரம் என்று கூறுவது. உண்மையில் பாரதவாசிகள் மற்ற மதத்தின் ஆத்மாக்களை ஒப்பிடும் போது சதோகுணியாக இருக்கிறார்கள் ஆனால் தன்னுடைய போலியான ரூபத்தை உருவாக்கி போலியான செயல் மற்றும் அலங்காரம் செய்து நாளாக நாளாக தன்னை அசுரனாக ஆக்கிக் கொண்டே செல்கிறார்கள். நீங்களோ உண்மையை மறக்காதீர்கள். உண்மையை மறப்பதினால் தான் அசுர சம்ஸ்காரம் வருகிறது. லௌகீக ரூபத்தில் கூட யார் சக்திசாலியாக இருக்கிறாரோ அவர் எதிரில் செல்வதற்குக் கூட தைரியம் வைப்பதில்லை. ஒருவேளை நீங்கள் ஆல்மைட்டி அத்தாரிட்டியின் பதவியில் நிலைத்திருந்தீர்கள் என்றால் அசுர சம்ஸ்காரம் மற்றும் வீணான சம்ஸ்காரத்திற்கு உங்கள் எதிரில் வருவதற்கான தைரியம் இருக்க முடியுமா? தன்னுடைய பதவியிலிருந்து ஏன் கீழே இறங்குகிறீர்கள்? சங்கமயுகத்தின் உண்மையான சம்ஸ்காரம் உடையவர் யார் என்றால் யார் எப்பொழுதும் ஞானத்தைக் கொடுத்துக் கொண்டும் எடுத்துக் கொண்டும் இருக்கிறாரோ, அவருக்கு எப்பொழுதும் ஞான நினைவு இருக்கும். மேலும் எப்பொழுதும் முகமலர்ச்சியிலும் இருப்பார். பிராமண வாழ்க்கையின் விசேஷ சம்ஸ்காரமே முகமலர்ச்சியாக இருப்பது தான். பின்பு இதிலிருந்து ஏன் விலகி விடுகிறீர்கள். தன்னுடைய பொருளை யாராவது விட்டு விடுவார்களா என்ன? இது சங்கமயுகத்தின் தன்னுடைய பொருள் தான் இல்லையா? அவகுணம் கூட மாயாவினுடையது இதை தீய சேர்க்கையிலிருந்து எடுத்துக் கொண்டீர்கள். தன்னுடையது தெய்வீக குணம் ஆகும்.

தன்னுடையதை விட்டு விடுகிறீர்கள், பாதுகாக்கத் தெரியாதா என்ன? வீட்டை பாதுகாக்கத் தெரியுமா? எல்லைக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை பாதுகாக்கத் தெரிகிறது. மேலும் எல்லைக்கப்பாற்பட்டதை பாதுகாக்கத் தெரியாதா? எல்லைக்குட்பட்டதிலிருந்து முற்றிலும் விலகி இந்தப் பக்கம் திரும்பி விட்டீர்களா? அல்லது இன்னும் கொஞ்சம் கொஞ்சம் இருக்கிறதா? எப்படி சீதை இராவணனுக்கு முகத்தைக் காண்பிக்காமல் முதுகை காண்பித்தார் என்று சித்தரிக்கிறார்களோ அதே போல் எல்லைக்குட்பட்டவைகளிலிருந்து திரும்பியாகி விட்டதா? பிறகு அதன் எதிரிலோ இருக்க மாட்டீர்கள் தானே அல்லது அங்கு சென்ற பிறகும் என்ன செய்வது என்று கூறுவீர்களா? இப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட வீட்டில் எல்லைக்கப்பாற்பட்ட போதை இருக்கிறது. பின்பு எல்லைக்குட்பட்ட வீட்டிற்குச் சென்ற பிறகு எல்லைக்குட்பட்ட போதை வந்து விடுமா? இப்பொழுது ஊக்கம் உற்சாகம் என்ன இருக்கிறதோ அது எல்லைக்குட்பட்டதில் வந்து விடாதே? எப்படி இப்பொழுது எல்லைக்கப் பாற்பட்ட ஊக்கம், உற்சாகம் இருக்கிறது அதில் கொஞ்சம் வித்தியாசம் வந்து விடாது தான் இல்லையா? எல்லைக்குட்பட்டதற்கு விடை கொடுத்தாகி விட்டதா அல்லது இன்னும் கொஞ்சம் கொஞ்சம் உபசரிப்பீர்களா? இந்த ஆன்மீக ஜென்மம் யாருக்காக இருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். எல்லைக்குட்பட்ட காரியத்திற்காகவா இருக்கிறது? ஆன்மீக ஜென்மத்தை ஏன் எடுத்தீர்கள்? எந்தக் காரியத்திற்காக இந்த ஆன்மீக ஜென்மம் எடுத்திருக்கிறீர்களோ அந்தக் காரியம் செய்யவில்லை என்றால் என்ன செய்வீர்கள்? தந்தையின் குழந்தை ஆன பிறகு தந்தையின் அறிமுகம் தெரியவில்லை. என்றால் அது எப்படிப்பட்ட குழந்தை என்று மற்றவர்களுக்குப் புரிய வைக்கிறீர்கள். அதே போலவே எல்லைக்கப்பாற்ப்பட்ட தந்தையின் எல்லைக்கப்பாற்பட்ட குழந்தை ஆகி விட்டீர்கள், ஏற்றுக் கொண்டீர்கள் மற்றும் தெரிந்து கொண்டீர்கள். இருந்தாலும் எல்லைக்கப்பாற்ப்பட்ட காரியத்தில் வரவில்லை என்றால், ஆன்மீக ஜென்மம் என்று எப்படி கூற முடியும்? ஆன்மீக ஜென்மத்திலேயே லௌகீக காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தால், அதில் என்ன இலாபம்? தன்னுடைய ஜென்மம் மற்றும் நேரத்தின் (சங்கமயுகம்) மகத்துவத்தை தெரிந்து கொள்ளுங்கள், அப்பொழுது தான் மகான் காரியம் செய்வீர்கள். கேஸ் (வாயுப்பொருள்) நிரப்பிய பலூன் ஆகாதீர்கள். அது நன்றாக விரியும் மேலே பறக்கும்

ஆனால், தற்காலிகமாக. அப்படி அந்த மாதிரி பலூனாக இல்லை தானே. நல்லது.

**வரதானம்: தன்னுடைய சக்திசாலியான உள்உணர்வு மூலமாக தூய்மையில்லாத சுற்றுப்புறச் சூழலை மாற்றம் செய்யக்கூடிய மாஸ்டர் பதீத பாவனி ஆகுக!**

எப்படிப்பட்ட சுற்றுப்புறச் சூழலாக இருந்தாலும் தன்னுடைய சக்திசாலியான உள்உணர்வு வாயுமண்டலத்தை (சுற்றுப்புறச் சூழலை) மாற்ற முடியும். வாயுமண்டலம் விகாரியாக இருக்கிறது ஆனால் தன்னுடைய உள்உணர்வு விகாரமற்றதாக இருக்கட்டும். யார் தூய்மையில்லாதவர்களை தூய்மைப்படுத்தக் கூடியவரோ அவர் தூய்மையில்லாத வாயுமண்டலத்தின் வசமாக முடியாது. மாஸ்டர் பதீத பாவனியாகி தன்னுடைய சக்திசாலியான உள்உணர்வு மூலம் தூய்மையில்லாத மற்றும் பலஹீனமான வாயுமண்டலத்தை அகற்றுங்கள். அதை வர்ணனை செய்து வாயுமண்டலத்தை உருவாக்காதீர்கள். பலஹீனமான மற்றும் தூய்மையில்லாத வாயுமண்டலத்தை வர்ணனை செய்வது கூட பாவம் ஆகும்.

**சுலோகன்: இப்பொழுது நிலத்தில் பரமாத்மாவின் அறிமுகம் என்ற விதை போட்டீர்கள் என்றால் பிரத்யக்ஷதா ஏற்படும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 21.06.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விஷ்வ மகாராஜன் ஆகக்கூடியவர்களின் விஷ்வ கல்யாணகாரி (நன்மை செய்யும்) நிலை!

உங்களை நீங்களே ஒரு நொடியில் உடலிலிருந்து விலகிய உடலற்ற ஆத்மா என்று புரிந்து ஆத்ம அபிமானி மற்றும் உடல் உணர்வற்ற நிலையில் நிலைத்திருக்கச் செய்ய முடியுமா? அதாவது ஒரு நொடியில் கர்ம இந்திரியங்களின் ஆதாரம் எடுத்து காரியம் செய்தீர்கள் மற்றும் பின்பு ஒரு நொடியில் கர்ம இந்திரியங்களிலிருந்து விலகி இருப்பது, இந்த மாதிரியான பயிற்சியை முடித்து விட்டீர்களா? ஏதாவது காரியம் செய்து, அந்தக் காரியத்தின் பந்தனத்தில் மாட்டிக் கொள்ளவில்லையே? காரியம் செய்து கொண்டே அந்தக் காரியத்தின் பந்தனத்திலிருந்து விலகியவராக ஆக முடியுமா அல்லது இதுவரையிலும் கர்ம இந்திரியங்கள் மூலமாகச் செய்யும் காரியத்தின் வசமாகி விடுகிறீர்களா? ஒவ்வொரு கர்ம இந்திரியங்களையும் எப்படி இயக்க விரும்புகிறீர்களோ அந்த மாதிரி செய்ய முடியுமா அல்லது நீங்கள் ஒன்றை விரும்ப, கர்ம இந்திரியங்கள் இன்னொன்றைச் செய்து விடுகிறதா? படைப்பவராகி படைப்பை நடத்து விக்கிறீர்களா? எப்படி வேறு எந்த ஜடப் பொருளையும் சைத்தன்ய மனித ஆத்மா எப்படி விரும்புகிறாரோ அப்படி ரூபம் கொடுக்க முடியும், மேலும் எப்படி விரும்புகிறாரோ அப்படி காரியத்தில் ஈடுபடுத்த முடியும், எங்கு விரும்புகிறாரோ அங்கு வைக்க முடியும். ஜடப்பொருள் சைத்தன்யத்தின் வசத்தில் இருக்கிறது. சைத்தன்ய ஆத்மா எப்படி நடத்து விக்க விரும்புகிறதோ அப்படி நடத்து விக்க முடியும். எப்படி ஜடப்பொருளை எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் மாற்றம் செய்ய முடியுமோ. அதே போல் கர்ம இந்திரியங்களை விகாரங்களிலிருந்து விகாரமற்றதாக மற்றும் விகாரங்களின் வசமாகி அக்னியில் எரிந்து

கொண்டிருக்கும் கர்ம இந்திரியங்களை சீதளத்தில் கொண்டு வர முடியாதா? சைத்தன்ய ஆத்மாவில் இந்த மாற்றும் சக்தி வரவில்லையா?

எந்தவொரு கர்ம இந்திரியங்களின் சஞ்சலத்தை சகித்துக் கொள்வதாகவும், சரளத்தன்மை உள்ளதாகவும் ஆக்க முடியாதா? அந்த அளவு சக்தியை தன்னுள் அனுபவம் செய்கிறீர்களா? சக்திசாலியான ஆத்மாக்கள் தான் நீங்கள் இல்லையா? யார் பாக்கியசாலி ஆத்மாக்களோ அவர்கள் சக்திசாலியாகவும் ஆகியிருக்கிறார்களா அல்லது பிரம்மா குமார், பிரம்மா குமாரி ஆனதின் பாக்கியத்தின் காரணமாக மட்டும் பாக்கியசாலி ஆகியிருக்கிறீர்களா? பாக்கியசாலியாக மட்டும் ஆனதினால் மாயாவை வென்றவராக ஆக முடியாது. பாக்கியசாலியின் கூடவே சக்திசாலியாகவும் ஆக வேண்டும். இரண்டு அனுபவமும் ஏற்படுகிறதா? எப்படி பாக்கியசாலி நிலையின் போதையோ அழியாதது இல்லையா? இதை யாரும் அழிக்க முடியாது. அப்படி சக்திசாலியின் வரதானத்தை வரம் கொடுக்கும் வள்ளலிடமிருந்து பெற்றாகி விட்டதா அல்லது இனி தான் பெற வேண்டுமா? என்ன நினைக்கிறீர்கள்? பிரம்மா குமார், குமாரிகளாகவோ இருக்கவே இருக்கிறீர்கள், அதுவோ அழியாத முத்திரை பதிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது சக்திசாலியின் வரதானத்தைப் பெற்று விட்டீர்களா அல்லது இனி தான் பெற வேண்டுமா? எப்பொழுது சக்திசாலியாக ஆகி விட்டீர்களோ அப்போது உங்களை மாயாவின் சக்தி தாக்குதல் செய்ய முடியுமா? இது படைப்பவரின் சக்தி மற்றும் அது படைப்பின் சக்தி. அப்படி பலஹீனமானவர் மாவீரன் மேல் தாக்குதல் செய்வதற்கான தைரியம் வைக்க முடியுமா என்ன? வைத்திருந்தாலும் கூட அதனுடைய விளைவுகளாக என்ன இருக்கும்? வெற்றி அடைபவராக யார் ஆவார்கள்? மாவீரன் தான் இல்லையா? அப்படி படைப்பவரின் சக்தி மகான் ஆகும். மாவீரன் என்றால் படைப்பவரின் சக்தி மகானாக இருக்கிறது, பின்பு மாயாவின் தாக்குதல் எப்படி ஏற்பட முடியும் மற்றும் மாயாவிடம் தோல்வி எப்படி ஏற்பட முடியும்? எப்பொழுது தன்னை சக்திசாலியானவர் என்று நினைப்பதில்லையோ அல்லது எப்பொழுது சக்திசாலி நிலையில், நினைவில் நிலைத்திருக்கவில்லையோ அப்பொழுது தோல்வி ஏற்படுகிறது. எங்கு நினைவு இருக்கிறதோ அங்கு நினைவை மறப்பது அசம்பவம் ஆகும். எப்படி பகல் நேரத்தில் இரவு ஆவது அசம்பவம். அந்த மாதிரி தன்னை ஆக்கியிருக்கிறீர்களா அல்லது இன்னும்

சம்பவமாகத்தான் இருக்கிறதா? ஒருபொழுதும் மாயாவின் எந்த தாக்குதலும் இருக்காது என்று அந்த மாதிரி அழியாத நிச்சயபுத்தி உடையவர்களாக ஆகி விட்டீர்களா? மாயா எப்பொழுது தோல்வி அடையச் செய்யுமோ என்பது எண்ணத்தில் கூட ஒருபொழுதும் வர வேண்டாம். அந்த மாதிரி ஆகி விட்டீர்களா அல்லது இப்பொழுது மாயா வருகிறது என்றால் யுத்தம் செய்து வெற்றி அடைவீர்களா? இப்பொழுது இதையும் முடிவு கட்ட வேண்டும். இப்பொழுது இன்னும் மிகக் குறைந்த நேரம்தான் இருக்கிறது என்று உலகினருக்கு செய்தி கொடுக்கிறீர்கள் என்றால், இந்த கொஞ்ச காலத்தில் யுத்தம் செய்யும் நிலை மற்றும் யுத்தம் செய்யக்கூடிய சந்திரவம்சத்தின் நிலையை முடிவு கட்டி சூரிய வம்ச நிலையை உருவாக்க முடியாதா? சூரிய வம்ச நிலை என்றால் ஞான சூரியனின் நிலை. சூரியனின் காரியமாக என்ன இருக்கிறது?

சூரியனோ அனைத்தையும் பஸ்பம் செய்து விடுகிறது. சூரிய வம்ச நிலை என்றால் அனைத்து விகாரங் களையும் பஸ்பம் செய்து எப்பொழுதும் வெற்றி அடைவதின் நிலை. அப்படியானால் இப்பொழுது உங்களுடைய என்ன நிலை இருக்கிறது என்று நினைக்கிறீர்கள். சூரிய வம்சியாகவா அல்லது சந்திரவம்சியா? ஒருவேளை யுத்தம் செய்வதில் நேரம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது என்றால் சந்திரவம்சி நிலை என்று கூறுவோம். இதுவரை உங்களுக்காகவே நேரம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் தந்தையின் உதவியாளராகி நடைமுறையில் மாஸ்டர் விஷ்வ கல்யாணகாரியாகி உலக நன்மைக்காக முழு நேரமும் எப்பொழுது கொடுப்பீர்கள்? கடைசி நிலை எதுவாக இருக்கிறது? விஷ்வ கல்யாணகாரியினுடையது தான் இல்லையா? இப்பொழுது இரவு, பகல் எண்ணம், விநாடி அனைத்தும் உலக காரியத்தில் மற்றும் சேவையில் செல்லட்டும் என்று முயற்சி செய்யுங்கள். எப்படி லௌகீக முறையில் கூட லௌகீக படைப்பின் படைப்பவர் ஆகிறார் என்றால், படைப்பவர் ஆனதினால் தனக்காக நேரம் கொடுப்பதற்குப் பதிலாக படைப்பிற்காகத்தான் நேரத்தை செலவழிக்கிறார். இதனுடைய அனுபவிகளாகவோ நீங்கள் இருக்கிறீர்கள். ஒருவேளை மிக நோயுள்ள, மிக துக்கமான, மிக அமைதி யில்லாத படைப்பு இருக்கிறது என்றால் படைப்பவராகிய தாய் தந்தையின் முழு கவனமும் அதற்காகத்தான் இருக்கிறது இல்லையா? தன்னைத் தானே மறந்தவர்கள் மாதிரி ஆகியிருக்கிறீர்கள். அதுவோ

எல்லைக்குட்பட்ட படைப்பு, ஆனால் நீங்களோ எல்லைக்கப்பாற்பட்ட உலகின் மாஸ்டர் படைப்பவர்கள் இல்லையா? முதலில் உங்களுக்காக நேரம் கொடுத்தீர்கள் ஆனால் இப்பொழுதைய நிலை மாஸ்டர் படைப்பவரினுடையது. ஒருவர் இருவரின் விஷயம் மட்டுமில்லை, முழு உலகின் ஆத்மாக்கள் துக்கமாக அமைதியின்றி நோயுற்றவராக வேதனையில் பிச்சைக்காரர்களாக இருக்கிறார்கள். எல்லைக்கப்பாற்பட்ட படைப்பு என்றால் முழு உலகின் நன்மை செய்பவராகி நிரந்தரமாக சுகமானவராக மற்றும் அமைதி யானவராக ஆக்க வேண்டும் என்றால் எல்லைக்கப்பாற்பட்ட படைப்பின் கவனம் இருக்க வேண்டும். இதுவரையிலும் தனக்காக வெகுகாலம் சென்று கொண்டிருக்கிறது, யுத்தம் செய்வதிலேயே நேரம் செல்கிறதா அல்லது உலக நன்மை காரியத்தில் நேரத்தை ஈடுபடுத்துகிறீர்களா? இன்னும் கொஞ்சம் காலம் என்ன இருக்கிறதோ அது உலக நன்மைக் காரியத்திற்காகத்தான் இருக்கிறது என்று அப்படியே இப்பொழுது புரிந்து கொள்ளுங்கள். பக்தி மார்க்கத்தில் யார் பெரிய கொடை மற்றும் நன்மை செய்யும் உள்உணர்வுள்ள சேவாதாரிகள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் எந்தவொரு தானத்தையும் தனக்காகச் செய்வதில்லை. அனைத்து ஆத்மாக்களுக்காகத் தான் நினைப்பார்கள். அப்படி இந்தப் பழக்க வழக்கம் உயர்ந்த மற்றும் நன்மை செய்யும் ஆத்மாக்கள் உங்களிடமிருந்து தொடங்கியிருக்கிறது, பின்பு அது பக்தியில் பழக்கமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அவசியம் நடைமுறையில் நடந்திருக்கிறது, அதனால் தான் நினைவுச்சின்ன ரூபத்தில் பழக்கம் இருக்கிறது. எனவே இப்பொழுது இந்த மாற்றத்தைக் கொண்டு வாருங்கள். மற்றவர்களுக்காக சேவாதாரி ஆவதினால் மற்றும் மற்றவர்களுக்காக நேரம் மற்றும் எண்ணத்தை ஈடுபடுத்துவதினால், சேவை செய்பவராக ஆவதினால் எப்பொழுதும் வெற்றி அடைபவராகத் தானாகவே ஆகி விடுவார்கள். ஏனென்றால் அனேக ஆத்மாக்களை சுகம் மற்றும் அமைதியானவர்களாக ஆக்குவதின் பலனாக பிரத்யக்ஷ பலன் ரூபத்தில் தானாகவே பிராப்தி ஆகி விடுகிறது. எப்பொழுது சேவை செய்வீர்களோ இந்த கணக்கும் சேமிப்பாகிறது மற்றும் சேவையின் பிரத்யக்ஷ பலனின் பிராப்தி தானாகவே பிராப்தி ஆகி விடுகிறது. அப்படியானால் ஏன் நிரந்தர சேவாதாரியாக ஆகக்கூடாது. அதனால் தன்னுடைய முன்னேற்றம் தானாகவே ஏற்பட்டு விடும். செய்யத் தான் வேண்டும். மற்றவர்களுக்கு கொடுப்பது என்றால் தன்னில் நிரப்புவது.

அப்படி தன்னுடைய முன்னேற்றத்திற்காக தனியாக நேரம் ஏன் செலவழிக்கிறீர்கள்? உலக நன்மைக்காகத் தான் இல்லையா. எனவே எந்தக் காரணத்திற்காக ஜென்மமே இருக்கிறதோ அந்தக் காரியத்தை ஏன் செய்வதில்லை? எப்படி பாருங்கள், எந்தக் குலத்தில் ஜென்மம் எடுக்கிறார்களோ அந்தக் குலத்தின் சம்ஸ்காரம் ஜென்மம் எடுத்தவுடனேயே தானாகவே வந்து விடுகிறது. ஸ்தூல காரியம் செய்யக்கூடிய கூலி வேலை செய்பவர்களின் வீட்டில் குழந்தை பிறக்கிறது என்றால் குழந்தைப் பருவத்திலிருந்தே தாய் தந்தையரைப் பார்த்து அந்தக் காரியத்தின் சம்ஸ்காரம் இயல்பாகவே அவரில் வெளிப்பட்டு விடுகிறது. அப்படி எப்பொழுது ஜென்மமே பிரம்மா குமார், குமாரிகளினுடையது என்றால் எது தந்தையின் காரியமோ அது இயல்பாகவே குழந்தைகளின் சம்ஸ்காரமாக இருக்க வேண்டும். எப்படி தந்தையை பிரத்யக்ஷ ரூபத்தில் பார்த்திருக்கிறீர்கள் இரவில் தூக்கத்தின் நேரத்தையும் மற்றும் தன்னுடைய உடல் ஓய்வின் நேரத்தையும் அதிகமாக எதற்காகக் கொடுத்தார்? உலக நன்மைக் காரியத்தில், அனைத்து ஆத்மாக்களின் நன்மைக்காகத் தானே அன்றி தனக்காக அல்ல. வாய்மொழி மூலமாக எப்பொழுதும் உலக நன்மைக்கான எண்ணம் தான் செய்தார். இதைத் தான் உலகிற்கு நன்மை செய்பவர் என்று கூறப்படுவது. அப்படி இந்த மனதின் தடைகளோடு யுத்தம் செய்வதிலேயே நேரம் கொடுப்பது, இதுவோ தனக்காக வீணாக நேரம் கொடுப்பதாக ஆனது இல்லையா? இதன் அவசியம் இல்லை, வீணானது என்று தான் சொல்வோம். தந்தை அவசியமான நேரத்தையும் நன்மைக்காகக் கொடுத்திருந்தார் மற்றும் குழந்தைகள் தனக்காக நேரத்தை வீணாக செலவழித்துக் கொண்டே இருக்கிறார்கள் என்றால் ஃபாலோ ஃபாதர் ஆனதா? தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் இல்லையா? அப்படியானால் அதிகத்திலும் அதிகமாக என்ன எப்பொழுதுமே நேரம் மற்றும் எண்ணத்தை உலக நன்மைக்காக ஈடுபடுத்துகிறேனா? என்று எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். அந்த மாதிரி எப்பொழுதும் உலக நன்மைக்காக நேரம் மற்றும் எண்ணத்தை ஈடுபடுத்துபவர் என்னவாக ஆவார்? விஷ்வ மகாராஜன். ஒருவேளை தனக்காகவே நேரத்தை செலவழித்துக் கொண்டே இருக்கிறார் என்றால் விஷ்வ மகாராஜனாக எப்படி ஆவார்? எனவே விஷ்வ மகாராஜன் ஆவதற்காக விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்பவர்) ஆகுங்கள். எப்பொழுது இந்த அளவிற்கு பிஸியாகி விடுவீர்கள் என்றால்

வீணான நேரம் எண்ணம் வருமா என்ன? வீணானவை தானாகவே முடிந்து விடும். மேலும் எப்பொழுதும் சக்தி நிறைந்த எண்ணம் ஓடும். எப்பொழுதும் உலக சேவையில் நேரம் கொடுப்பார். இந்த நிலைக்கு எதிராக சிறு சிறு விஷயங்களில் நேரம் கொடுப்பது மற்றும் புத்தியின் சக்தியை வீணாக இழப்பது, இது குழந்தைத் தனமான விளையாட்டாக தெரியவில்லையா என்ன? லௌகீக முறையில் கூட படைப்பவர் எல்லைக்குட்பட்ட பிரம்மா ஆகிறார், விஷ்ணுவாகவும் ஆகிறார் ஆனால் சங்கர் ஆக ஆவதில்லை. அதே போல் எல்லைக்குட்பட்ட நிலையில் இருப்பவர்களும் வீணான எண்ணங்களைப் படைப்பவர்களாக ஆகிறார்கள். பாலனை செய்பவராகவும் ஆகிறார், ஆனால் அழிப்பவராக ஆவதில்லை. ஏனென்றால் எல்லைக்குட்பட்ட நிலையில் நிலைத்திருக்கிறீர்கள். ஒருவேளை எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருக்கிறீர்கள் என்றால் தனது உள்மனதில் இருக்கும் விஷயத்தையோ விடுங்கள் ஆனால் உலகிலிருந்து வீணான தீய எண்ணம், பாவம் மற்றும் விகாரத்தை அழிப்பவராக ஆக முடியும். கடைசி நிலை அழிப்பவராக ஆவது. எப்பொழுது நன்மை செய்பவராக ஆவீர்களோ அப்பொழுது அழிப்பவராக ஆவீர்கள். அந்த மாதிரி நிலை இருக்கிறது இல்லையா? எல்லைக்குட்பட்டத்தை இப்பொழுது விட்டு விட்டீர்கள் இல்லையா? நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் உலக நன்மை செய்பவரின் நினைவு மற்றும் சேவையில் நிலைத்திருக்கக்கூடிய மகான் ஆத்மாக்களுக்கு நமஸ்காரம். ஓம் சாந்தி.

**வரதானம்: மகான் மற்றும் மெஹ்மான் (விருந்தினர்) -இந்த இரண்டு நினைவுகள் மூலமாக அனைத்து கவர்ச்சிகளிலிருந்தும் விடுபட்டவர் ஆகக்கூடிய அப்பாற்பட்டு விலகியிருக்கும் மற்றும் சாட்சியாக இருப்பவர் ஆகுக!**

விலகிய மற்றும் சாட்சி நிலையை உருவாக்குவதற்காக இரண்டு விஷயங்கள் கவனத்தில் இருக்கட்டும். ஒன்று நான் ஆத்மா மகான் ஆத்மா ஆவேன், இரண்டாவது, நான் ஆத்மா இப்பொழுது இந்த பழைய உலகத்தில் மற்றும் இந்த பழைய உடலில் விருந்தினராக இருக்கிறேன். இந்த நினைவில் இருப்பதினால் தானாக மற்றும் சுலபமாகவே அனைத்து

பலஹீனங்கள் மற்றும் பற்றுதல்களின் கவர்ச்சி முடிவடைந்து விடும். விருந்தினர் என்று புரிந்து கொள்வதினால் சம்ஸ்காரங்களின் வசமாகி சாதாரண காரியம் மற்றும் எண்ணம் என்ன இருக்கிறதோ அது மாறிவிடும். மகான் மற்றும் விருந்தினர் என்று புரிந்து நடப்பதினால் மகிமைக்குத் தகுதியானவராகவும் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: அனைவரின் சுபபாவனை மற்றும் சகயோகத்தின் துளியினால் பெரிய காரியம் கூட சுலபமாகி விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.06.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எவரெடி ஆகி கடைசி நேரத்தை வரவழையுங்கள்!

தன்னை தந்தைக்குச் சமமானவர் என்று நினைக்கிறீர்களா? தந்தைக்குச் சமமான நிலையின் அருகில் இருப்பதாக தன்னை அனுபவம் செய்கிறீர்களா? சமமாக ஆவதில் இப்பொழுது எவ்வளவு இடைவெளி இன்னும் இருக்கிறது? மிகுந்த இடைவெளியா அல்லது கொஞ்சம் தானா? லட்சியமோ தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்பது தான். மேலும் தந்தையின் லட்சியம் அனைவரின் குழந்தைகள் தந்தையை விட உயர்ந்தவர்களாக ஆகட்டும் என்பது தான். இப்பொழுது நடைமுறையில் நிலை என்னவாக இருக்கிறது? தந்தைக்குச் சமமாக எதிர்கொள்ளும் சக்தி இன்னும் வரவில்லை. வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் வித்தியாசம் இருக்கிறது. ஒவ்வொருவருடையது வேறு மற்றவருடையது வேறு என்று வித்தியாசம் இருக்கிறது. அனைவருடையதும் ஒரே சமமாக இல்லை. 50 சதவிகிதம் வித்தியாசமோ மிக அதிகம். இதை எவ்வளவு காலத்தில் அகற்றுவீர்கள்? இதுவரையிலும் தந்தை மற்றும் குழந்தைகளில் ஏன் இவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? தன்னை எவரெடி (தயார் நிலை) ஆக இருப்பவராக நினைக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படியானால் எவரெடியின் அர்த்தம் என்ன? எவரெடியாக இருப்பவர் எப்பொழுதும் நேரத்தை அழைத்துக் கொண்டிருப்பார். அப்படி யார் எவரெடியாக இருக்கிறாரோ அவர் வரவழைத்துக் கொண்டே தன்னை எப்பொழுதும் தயாராகவும் வைத்திருப்பார். கடைசி நேரத்தை எதிர்கொள்வதற்காக இப்பொழுது தயார் ஆக வேண்டும் இல்லையா? ஒருவேளை நேரம் வந்து விட்டது என்றால் 50 சதவிகிதம் சமநிலையின் பிராப்தியாக என்ன இருக்கும்? எவரெடி என்றால் எப்பொழுதும் கடைசி நேரத்திற்காக தன்னை அனைத்து குணங்களும் நிரம்பிய சம்பன்னமானவராக ஆக்கக்கூடியவர். சம்பன்னமாக ஆக வேண்டும் இல்லையா? மகிமை கூட சர்வ குண சம்பன்னம், 16 கலைகள் நிரம்பியவர் - என்று தான் இருக்கிறது. அப்படி எவரெடி என்றால் சம்பன்ன நிலை அந்த

மாதிரி நடைமுறையில் இருக்க வேண்டும். இன்னும் ஒரே ஒரு அடி தான் எடுத்து வைக்க வேண்டியது பாக்கி இருக்கிறது என்பது போல், ஒரு அடி எடுத்து வைப்பதில் எவ்வளவு நேரம் பிடிக்கும், அந்த அளவு மட்டும் இடைவெளி இருக்க வேண்டும். இதை ஒன்று அல்லது இரண்டு சதவிகிதம் என்று கூறலாம். எங்கே ஓரிரு சதவிகிதம்! எங்கே 50 சதவிகிதம்! வித்தியாசம் உள்ளது இல்லையா? அந்த மாதிரி எவரெடியாக மற்றும் அனைத்து குணங்கள் நிரம்பியவராக தந்தைக்குச் சமமாக ஆவதற்காக, பாப்தாதா மூலமாக முக்கியமாக மூன்று விஷயங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கிறது. அந்த மூன்றின் பிராப்தி இருக்கிறது என்றால் தந்தைக்குச் சமமாக ஆவதில் கால தாமதம் ஆகாது. அந்த தந்தை கொடுத்த மூன்று விஷயங்கள் எவை? (ஸ்ரீமத், சமர்ப்பணம் மற்றும் சேவை). இதுவோ செய்வதற்கும் மற்றும் நடந்து கொள்வதற்குமான விஷயத்தைக் கூறினீர்கள், ஆனால் என்ன கொடுக்கிறார்? சேவையும் செய்ய முடியும், சமர்ப்பணமும் ஆக முடியும் ஆனால் எதன் ஆதாரத்தில்? ஜென்மமோ எடுத்திருக்கிறீர்கள், ஆனால் என்ன கொடுத்திருக்கிறார்? ஆஸ்தியில் முக்கியமாக என்ன கொடுக்கிறார்? (ஒவ்வொருவரும் கூறினார்கள்). இரகசியமோ வந்து விடுகிறது, தெளிவாக்க வேண்டும் என்பதற்காக விதவிதமான ரூபத்தில் கூறப்படுகிறது. முதலில் லைட் (ஞான ஒளி) கொடுக்கிறார். இரண்டாவதாக மைட் (சக்தி) கொடுக்கிறார். மூன்றாவதாக டிவைன் இன்சைட் (தெய்வீக உள்நோக்கு பார்வை) அதாவது மூன்றாவது கண்ணைக் கொடுக்கிறார். ஒருவேளை இந்த மூன்றும் இல்லை என்றால் தீவிர முயற்சி செய்பவராகி தந்தைக்குச் சமமாக ஆக முடியாது. முதலில் எந்த ஆத்மாக்கள் முற்றிலும் அஞ்ஞானம் என்ற இருளில் வந்து விட்டார்களோ அவர்களுக்கு வெளிச்சம் அதாவது லைட் தேவையாக இருக்கிறது மற்றும் லைட்டின் (ஒளி) கூடவே ஒருவேளை மைட் (சக்தி) இல்லை என்றால் ஒளிக்காக என்ன உதவி எடுக்க வேண்டுமோ அதை எடுக்க முடிவதில்லை. இந்த லைட் மற்றும் மைட்டின் கூடவே மூன்றாவது கண் அதாவது டிவைன் இன்சைட்டாக என்ன கொடுக்கிறாரோ அதன் மூலம் தன்னுடைய கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் மூன்று காலத்தையும் கூடவே மூன்று வாழ்க்கையையும் நீங்கள் தெரிந்து கொள்ள முடியும். எப்பொழுது இந்த மூன்றுமே பிராப்தி ஆகிறதோ அப்பொழுது தான் தன்னுடைய பிறப்புரிமையை பிராப்தி செய்ய முடியும் அதாவது ஆஸ்தியை பிராப்தி செய்ய முடியும். அப்படி முதலில் லைட்,

மைட் மற்றும் டிவைன் இன்சைட் கொடுக்கிறோம். இதன் மூலமாகத் தான் தன்னுடைய பிறப்புரிமையை அடைய முடியும் மற்றும் ரைட்-ஐத் தெரிந்து கொள்ள முடியும். ரைட் என்ற வார்த்தைக்கும் இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. ஒன்று பெர்த் ரைட் (பிறப்புரிமை) அதாவது ஆஸ்தி மற்றும் இன்னொன்று ரைட் (சரி) மற்றும் ராங்கின் (தவறின்) அறிமுகம் கிடைத்திருக்கிறது. எனவே தந்தையை ட்ரூத் (சத்தியம்) என்று கூறப்படுகிறது. அதாவது சத்தியம் அல்லது சரி. எப்பொழுது இந்த மூன்றுமே பிராப்தி ஆகியிருக்கிறதோ அப்பொழுது தான் சத்தியத்தைத் தெரிந்து கொள்ள முடியும். ஒருவேளை ஏதாவது ஒன்றின் குறை இருக்கிறது என்றால் தவறிலிருந்து சரியான பக்கம் செல்ல முடிவதில்லை. வெளிச்சம் இருந்தால் தானே செல்ல வேண்டிய வழியை முடிவு செய்ய முடியும். இல்லையென்றால் இருளில் எப்படி வழியை நிர்ணயம் செய்ய முடியும். மேலும் தன்னுடைய முயற்சியின் வேகத்தை எப்படி அதிகரிக்க முடியும்? எப்படி பாருங்கள், இந்த பழைய உலகத்தில் எப்பொழுது பிளாக் அவுட் (இருட்டடிப்பு) ஆகிறதோ அப்போது வேகத்தைக் குறைத்து விடுவார்கள், அதிக வேகமாகச் செல்ல அனுமதிப்பதில்லை. ஏனென்றால் விபத்து நடக்கும் என்ற பயம் இருக்கிறது. அதே போன்று ஒருவேளை முழுமையான வெளிச்சம் இல்லையென்றால் கூட வேகத்தை அதிகரிக்க முடியாது. குறைந்த வேகத்திலேயே சென்று கொண்டிருப் பார்கள். கூடவே ஒருவேளை மைட் (சக்தி) இல்லையென்றால் லைட்டின் ஆதாரத்தில் செல்லத் தொடங்குகிறீர்கள் ஆனால் மைட் இல்லாத காரணத்தினால் என்ன தடை எதிரில் வந்திருக்கிறதோ அதை எதிர்கொள்ள முடிவதில்லை. எனவே வேகம் குறையும் காரணத்தினால் எதிர்கொள்ள முடியவில்லை என்றால் நின்று விடுவீர்கள். அடிக்கடி நிற்கும் காரணத்தினால் கூட வேகம் அதிகமாக அதாவது தீவிர முயற்சி செய்ய முடிவதில்லை. மேலும் டிவைன் இன்சைட் அதாவது தெய்வீக கண், மூன்றாவது கண் திறந்திருக்கவில்லை, சென்று கொண்டிருக்கும்போதே மாயா மூடிவிடுகிறது. எப்படி இன்றைய அரசாங்கம் கூட யாரையாவது பிடிப்பதற்காக மற்றும் ஏதாவது குழப்பத்தை அடக்குவதற்காக கேஸ் (கண்ணீர் புகை) உபயோகிக்கிறார்கள் என்றால் கண்கள் மூடிவிடுகின்றன. கண்ணீர் வரும் காரணத்தினால் பார்க்க முடிவதில்லை மேலும் என்ன செய்ய விரும்புகிறார்களோ அதைச் செய்ய முடிவதில்லை. இதே போல் மூன்றாவது கண் கிடைத்திருக்கிறது. ஒருவேளை மாயாவின் கண்ணீர் புகை மற்றும் தூசி அதில் விழுந்து விடுவதால் மூன்றாவது கண்

இருந்த போதிலும் என்ன பார்க்க விரும்புகிறோமோ அதைப் பார்க்க முடிவதில்லை. அப்படி இந்த மூன்றுமே அவசியமாக இருக்கிறது. ஒருவேளை மூன்றுமே சரியாக இருக்கிறது. சரியான முறையில் பிராப்தி ஆகியிருக்கிறது, எப்படி தந்தை கொடுக்கிறாரோ அப்படியே தாரணை செய்கிறார், அதன் ஆதாரத்திலேயே சென்று கொண்டிருக்கிறார் என்றால் ஒருபொழுதும் தவறான காரியம் மற்றும் சத்தியமற்ற காரியம் செய்ய முடியாது, எப்பொழுதும் சரியான பக்கமே செல்வார்கள். தவறு ஏற்படவே முடியாது. ஏனென்றால் மூன்றாவது கண் மூலமாக சரி-தவறை தெரிந்து கொள்கிறார். எப்பொழுது தெரிந்து விட்டார்களோ பின்பு தவறு செய்ய மாட்டார்கள் ஆனால் மாயாவின் தூசி விழுவதினால் பகுத்தறிய முடிவதில்லை. எனவே சரியானதை விட்டு விட்டு தவறான பக்கம் சென்று விடுகிறார்கள். அப்படி எப்பொழுதாவது தவறான மற்றும் சத்தியமற்ற காரியம் நடக்கிறது மற்றும் எண்ணம் கூட உருவாகிறது, மேலும் சத்தியமற்ற வார்த்தை வருகிறது என்றால் இந்த மூன்றிலிருந்து ஏதோ ஒன்றின் குறை ஏற்பட்டுவிட்டது. எனவே முடிவெடுக்க முடிவதில்லை. மேலும் எதுவரை சரி, தவறை தெரிந்து கொள்ளவில்லை என்றால் முழுமையான பிறப்புரிமையையும் பெற முடிவதில்லை. சரியான காரியத்தினால் தான் முழுமையான பிறப்புரிமை கிடைக்கிறது. ஒருவேளை சரியான காரியம் இல்லை, சில நேரம் சரியான, சில நேரம் தவறான காரியம் நடக்கிறது என்றாலும் பிறப்புரிமையும் முழுமையாகக் கிடைக்காது. எவ்வளவு சரியான எண்ணம் மற்றும் காரியம் செய்வதில் குறை இருக்குமோ அந்த அளவே பிறப்புரிமையைப் பெறுவதிலும் குறை இருக்கும். அப்படி இந்த மூன்று பிராப்திகளும் எப்பொழுதும் நிலைத்திருக்கட்டும் அதற்காக மிகவும் சுலபமாக மற்றும் அனைவரும் செய்ய முடிகிற மாதிரி எந்த மூன்று விஷயங்களின் மேல் கவனம் வைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது? ரிவைஸ் கோர்ஸிலும் (திருப்புப்பாகம் கூட அதே சகஜமான யுக்தி தான் மீண்டும் மீண்டும் ரிவைஸ் ஆகிக் கொண்டிருக்கிறது. ரிவைஸ் கோர்ஸை கவனமாகக் கேட்கிறீர்களா மற்றும் படிக்கிறீர்களா? நான் எல்லாம் தெரிந்தவன் என்று நினைப்பவர்களாக ஆகி விடவில்லையே? எல்லாம் தெரிந்தவர் என்று தன்னை நினைத்து ரிவைஸ் கோர்ஸை லேசாக விட்டுவிடவில்லையே? இன்று பரீட்சை வைக்கின்றோம். அந்த மாதிரி யார் இருக்கிறார், யார் ரிவைஸ் கோர்ஸின் முரளியை ஒரு நாள் கூட தவற விடாதவர் அல்லது தாரணையில் கவனம் கொடுக்காதவர்களோ, அவர்களுடைய கையை

உயர்த்தச் செய்வோமா? அங்கு இங்கு என்று செல்லும் போது முரளியைத் தவற விடுகிறீர்களா? அதைப் படிக்கிறீர்களா அல்லது தவறி விடுகிறதா? நான் ஞானத்தை தெரிந்து கொண்டேன் என்று அப்படி நினைக்கவில்லையே. தெரிந்து கொண்டீர்கள் தான் ஆனால் இப்பொழுது இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது இருக்கிறது. யார் மிக நல்ல விதமாக ரிவைஸ் கோர்ஸை ரிவைஸ் செய்கிறார்களோ அவர்கள் தானும் அந்த மாதிரி அனுபவம் செய்கிறார்கள். அந்த ரிவைஸ் கோர்ஸை செய்தும் பழையதாக அனுபவம் ஆகிறதா அல்லது புதியதாக அனுபவம் ஆகிறதா? புதியவர்களுக்காகவோ நிறைய விஷயங்கள் இருக்கும் ஆனால் யார் பழையவர்களோ அவர்கள் ரிவைஸ் கோர்ஸில் என்ன அனுபவம் செய்கிறார்கள்? புதியதாக அனுபவம் ஆகிறதா? டிராமா அனுசாரம் ஏன் ரிவைஸ் கோர்ஸ் இருக்கிறது? இதுவும் டிராமாவில் அடங்கியிருந்தது. ஏன் ரிவைஸ் செய்விக்கப்படுகிறது? கவனம் குறைந்து விடுகிறது, நினைவு குறைந்து விடுகிறது என்றால் மீண்டும் மீண்டும் ரிவைஸ் செய்விக்கப்படுகிறது. அப்படி இப்பொழுது நடைமுறையில் நீங்கள் வரவில்லை. அதனால் இதுவும் ரிவைஸ் ஆகிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு கேட்டிருக்கிறீர்கள், மேலும் எவ்வளவு சொல்கிறீர்கள் அந்தளவு நடைமுறையில் சக்தியை நிரப்பவில்லை, எனவே சக்தி நிறைந்தவராக ஆக்குவதற்காக மீண்டும் இந்த கோர்ஸ் நடந்து கொண்டிருக்கிறது. பழையவர்களை சக்தி நிறைந்தவர்களாக ஆக்குவதற்காக மேலும் புதியவர்களை சக்தி நிறைந்தவர்களாக ஆக்குவதின் கூடவே தன்னுடைய உரிமை முழுமையாகக் கிடைக்கும் காரணத்தினாலும் இந்த ரிவைஸ் கோர்ஸ் நடந்து கொண்டிருக்கிறது. அப்படி இப்பொழுது இந்தக் குறையையும் நிரப்புவதற்கான கவனத்தை மீண்டும் மீண்டும் ரிவைஸ் செய்ய வேண்டும். அப்படி ரிவைஸ் கோர்ஸ் மூலமாக சுபாவம், சம்ஸ்காரத்தில் என்ன மாற்றம் கொண்டு வர விரும்புகிறீர்களோ அது மாற்றத்தில் வந்து விடும். நல்லது. இதுவோ இடையில் பரீட்சையாக இருந்தது.. முதலில் கேட்டிருந்தோம், ரிவைஸ் கோர்ஸிலும் அதிகமாக ரிவைஸ் ஆகிக் கொண்டிருக்கிற அந்த சகஜயுக்தி எது என்பதை முதலில் கேட்டுக் கொண்டிருந்தோம். அது அமிர்தவேளையில் தனக்குத் தானே மற்றும் தந்தையுடன் ஆன்மீக உரையாடல் செய்வது மற்றும் அமிர்தவேளைக்கு மகத்துவம் கொடுப்பது. எப்படி பெயர் கூறுகிறீர்களோ அதே போல் அந்த நேரத்திற்கு வரதானமும் கிடைத்திருக்கிறது.

எந்தவொரு உயர்ந்த காரியத்தையும் செய்கிறீர்கள் என்றால் இன்று வரை நினைவு ரூபமாக நேரத்தைப் பார்க்கிறார்கள் தான் இல்லையா? இங்கேயும் முயற்சி செய்வதற்காக சகஜமான பிராப்திக்காக மிக நல்ல நேரம் எது? அமிர்தவேளை. அமிர்தவேளையின் நேரத்தில் தன்னுடைய ஆத்மாவை அமிர்தத்தினால் நிரப்புவதினால் முழு நாள் காரியமும் அதே போல் இருக்கும். எப்படி நேரம் உயர்ந்ததோ, அமி உயர்ந்ததோ அதே போல் ஒவ்வொரு காரியம் மற்றும் எண்ணமும் முழு நாளும் உயர்ந்ததாக இருக்கும். ஒருவேளை இந்த உயர்ந்த நேரத்தை சாதாரண முறையில் கடத்தி விட்டீர்கள் என்றால் முழு நாளில் எண்ணம் மற்றும் காரியம் கூட சாதாரணமாகத் தான் இருக்கும். அப்படி அமிர்தவேளை முழு நாளின் நேரத்திற்கான அஸ்திவார நேரம் என்று புரிந்து கொள்ள வேண்டும். ஒருவேளை அஸ்திவாரத்தை பலஹீனமானதாக மற்றும் சாதாரணமானதாக போடுவீர்கள் என்றால் மேலே எழுப்பப்பட்ட கட்டிடமும் அதே போல் தான் இருக்கும். இந்தக் காரணத்தினால், எப்படி அஸ்திவாரத்தின் பக்கம் எப்பொழுதும் கவனம் கொடுக்கப்படுகிறதோ அதே போல் முழு நாளிற்கான அஸ்திவாரம் அமிர்தவேளை ஆகும். மகத்துவத்தைத் தெரிந்து நடந்து கொண்டீர்கள் என்றால் காரியமும் மகத்துவத்திற்கு ஏற்றபடி இருக்கும். அதன் இதை பிரம்ம முகூர்த்தம் என்றும் ஏன் கூறுகிறார்கள்? பிரம்மா முகூர்த்தமா அல்லது பிரம்ம முகூர்த்தமா? பிரம்மா முகூர்த்தமும் சரி தான், ஏனென்றால், அனைவரும் பிரம்மாவிற்குச் சமமாக புது நாளின் ஆரம்பத்தை ஸ்தாபனை செய்கிறீர்கள். அதுவும் சரி தான்! ஆனால் பிரம்ம முகூர்த்தத்தின் அர்த்தம் என்ன? அந்த நேரத்து சுற்றுப்புறச் சுழ்நிலை அந்த மாதிரி இருக்கிறது அதன் மூலம் ஆத்மா சகஜமாகவே பிரம்ம நிவாசி ஆவதற்கான அனுபவம் செய்ய முடிகிறது. மற்ற நேரங்களில் முயற்சி செய்து சப்தத்திலிருந்து சுற்றுப்புறச் சூழ்நிலையிலிருந்து தன்னை விடுவிக்கிறீர்கள் அல்லது கடினமாக உழைக்கிறீர்கள் ஆனால் அந்த நேரத்தில் இந்த உழைப்பிற்கான அவசியம் இருப்பது இல்லை. எப்படி பிரம்ம வீடு சாந்திதாமமாக இருக்கிறதோ அதே போல் அமிர்தவேளையின் நேரத்திலும் தானாகவே அமைதி இருக்கிறது. அமைதியின் காரணமாக அமைதி சொரூபத்தின் நிலை மற்றும் சாந்திதாம நிவாசி ஆவதற்கான நிலையை சுலபமாகவே தாரணை செய்ய முடியும். அப்படி என்ன ஸ்ரீமத் கிடைத்திருக்கிறதோ அதை பிரம்ம முகூர்த்தத்தின் நேரத்தில் நினைவில் கொண்டு வந்தீர்கள் என்றால் பிரம்ம முகூர்த்தம் மற்றும்

அமிர்தவேளையின் நேரத்தில் நினைவும் சுலபமாக வந்து விடும். பாருங்கள் படிப்பை படிப்பவரும், படிப்பை நினைவில் வைத்துக் கொள்வதற்காக இதே நேரத்தில் படிப்பதற்காக முயற்சியை செய்கிறார்கள். ஏனென்றால் இந்த நேரத்தில் தான் நினைவு சுலபமாக இருக்கிறது. எனவே தன்னுடைய நினைவையும் சக்திசாலியாக ஆக்க வேண்டும் மற்றும் தானாக நினைவு சொரூபம் ஆக வேண்டும் என்றால் அமிர்தவேளையின் உதவியோடு மற்றும் ஸ்ரீமத்தை கடைப்பிடித்துக் கொண்டே சுலபமாகவே நினைவை சக்திசாலியாக ஆக்க முடியும். எப்படி நேரத்தின் மதிப்பு இருக்கிறது, அப்படி நேரத்திற்கு அவ்வளவு மதிப்பு கொடுக்கிறீர்களா? அல்லது சில நேரம் கொடுக்கிறீர்கள் மற்றும் சில நேரம் கொடுப்பதில்லையா? மதிப்பு என்ற தராசு சில நேரம் கீழேயும், சில நேரம் மேலேயும் செல்கிறதா? என்ன ஆகிறது? இது மிக சுலபமான யுக்தி, இந்த யுக்திக்கு இவ்வளவு மதிப்பு மட்டும் கொடுக்க வேண்டும். எப்படி ஸ்ரீமத் இருக்கிறது அதன் படி நேரத்தைத் தெரிந்து மற்றும் நேரத்தின் அனுசாரம் காரியம் செய்தீர்கள் என்றால் மிக சுலபமாக அனைத்து பிராப்திகளையும் செய்ய முடியும். பின்பு கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். விடுபட விரும்புகிறீர்கள் அதற்காக என்ன சாதனம் இருக்கிறதோ அதை உபயோகித்துக் கொண்டே செல்லுங்கள். நல்லது.

எப்பொழுதும் லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் ஆகி நடந்து கொள்ளக்கூடிய, அனைத்து ஆத்மாக்களுக்கும் டிவைன் இன்சைட் கொடுக்கக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: ஆன்மீக (அலௌகீக) விளையாட்டு மற்றும் பொம்மைகளோடு விளையாடிக் கொண்டே எப்பொழுதும் சக்திசாலியாக ஆகக்கூடிய ஆடாத அசையாதவர் ஆகுக!**

ஆன்மீக வாழ்க்கையில் மாயாவின் தடை வருவது கூட ஆன்மீக விளையாட்டு ஆகும். எப்படி உடல் சக்திக்காக விளையாட வேண்டியது இருக்கிறதோ அதே போல் ஆன்மீக யுகத்தில் சூழ்நிலைகளை பொம்மை என்று நினைத்து இந்த ஆன்மீக விளையாட்டை விளையாடுங்கள். இவைகளைக் கண்டு பயப்படாதீர்கள். அனைத்து எண்ணங்களையும் சேர்த்து தன்னை பாப்தாதா மேல் பலியாக்கி விட்டீர்கள் என்றால் மாயா

ஒருபொழுதும் போரிட முடியாது. தினசரி அமிர்தவேளையில் சாட்சியாகி தன்னை அனைத்து சக்திகளினாலும் அலங்காரம் செய்தீர்கள் என்றால் ஆடாத அசையாதவர்களாக இருப்பீர்கள்.

**சுலோகன்: ஏதாவது உலகியல் செய்திகளைக் கேட்பது - மற்றும் கூறுவது இதுவும் தன்னுள் குப்பையை சேமிப்பதாகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.06.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# 'டிஃபெக்ட்'ல் (பாதிப்பிலிருந்து) இருந்து பாதுகாப்பாக இருப்பது என்றால் 'பர்ஃபெக்ட்' (குறையற்றவர்) ஆவது!

உங்கள் அனைவரின் லட்சியம். பர்ஃபெக்ட் (குறையற்றவர்) ஆவது தான் இல்லையா? பர்ஃபெக்ட் என்றால் எந்தவொரு என்ன டிஃபக்ட்டும் (குறைபாடு) இல்லாதவர். ஒருவேளை டிஃபக்ட் இருந்தது என்றால் அதனுடைய அடையாளமாக இருக்கும்? மனதின் எண்ணத்திலேயோ, உறவு தொடர்பிலோ ஏதோ ஒரு விதமான மாயாவின் சிறிதளவு எஃபக்ட் அதாவது பாதிப்பு இருக்கும் காரணத்தினால் டிஃபக்ட் அதாவது குறை இருக்கிறது. எப்படி உடலுக்குக் கூட ஏதாவது விஷயத்தின் எஃபக்ட் ஏற்படுகிறது என்றால். அப்பொழுது தான் நோய் அதாவது டிஃபக்ட் ஏற்படுகிறது. எப்படி உடலுக்கு பருவ காலத்தின் பாதிப்பு ஏற்பட்டு விடுகிறது மற்றும் உணவு விஷயத்தில் பாதிப்பு ஏற்படுகிறது என்றால் தான் நோய் வருகிறது. எனவே எந்தவொரு எஃபக்ட்டும் இருக்கக்கூடாது. இதற்காக மாயாவின் எஃபக்ட்டிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஏதாவது ஒரு விதத்தின் எஃபெக்ட் வந்து விடுகிறது. எனவே பர்ஃபெக்ட் ஆக முடிவதில்லை. எனவே எந்த விதமான எஃபக்ட் அதாவது பாதிப்பும் இருக்கக்கூடாது. பாதிப்பால் தாக்கப்படாதவராக இருக்க வேண்டும் என்ற முயற்சி செய்ய வேண்டும். இதற்காக சாதனமும் அவ்வப்பொழுது கிடைத்துக் கொண்டே இருக்கிறது. மன நிலையை பாதிப்பிலிருந்து விலக்கி தூரமாக எப்படி வைப்பது, வார்த்தைகளை எந்த வித பாதிப்பிலிருந்தும் விலக்கி தூரமாக எப்படி வைப்பது, மேலும் செய்யும் காரியங்களிலும் பாதிப்பி லிருந்து விலகி தூரமாக எப்படி இருப்பது? அப்படி ஒவ்வொரு விஷயத்திற்கும் அனேக விதமான யுக்திகள் கூறியிருக்கிறோம் ஆனாலும் பாதிப்பு ஏற்பட்டு விடுகிறது. பிறகு அந்த வழியைக் கடைபிடிப்பதற்கு முயற்சி செய்கிறீர்கள். யார் முன்னதாகவே கவனம் வைக்கிறாரோ அவர் தான் விவேகம் நிறைந்தவர். எப்படி கோடை

கால வெப்பத்தின் பாதிப்பு ஏற்படக் கூடாது. இதற்கான சாதனத்தை முன்பாகவே செய்து விடுவார்கள், அவரைத் தான் புத்தியுள்ளவர் என்று கூறுவோம். ஒருவேளை விவேகம் குறைவாக இருக்கிறது என்றால், வெப்பத்தின் பாதிப்பு ஏற்பட்டு விடுகிறது. எனவே தாமரை மலருக்குச் சமமாக எப்பொழுதும் பாதிப்பிலிருந்து விலகியிருப்பவராக மேலும் தந்தைக்குப் பிரியமானவராக வேண்டும். ஒவ்வொருவருக்கும் அவர்கள் செய்யும் முயற்சியின்படி மற்றும் தன்னுடைய மன நிலைக்கேற்றபடி என்னுடைய ஆத்மாவில், எந்த விஷயத்தில் முக்கியமாக பாதிப்பு அவ்வப்பொழுது ஏற்படுகிறது என்று தெரிய வரும். தெரிந்திருந்தும் அந்த சாதனங்களைக் கடைப்பிடிக்க முடியாது. விரும்பினால் கூட அந்த நேரம் ஒன்றுமே தெரியாதவர் மாதிரி ஆகி விடுவார், எப்படி ஏதாவதொரு பாதிப்பு ஏற்படுகிறது என்றால், அது மனிதனின் புத்தியை டிஃபக்ட் அதாவது குறையுள்ளதாக்கி விடுகிறது. அந்த நேரம் புத்தி வேலை செய்வதில்லை. எப்படி மாயாவின் வெவ்வேறு ரூபத்தின் பாதிப்பு இருக்கும் காரணத்தினால், அறிவிலியாக அதாவது ஒன்றும் அறியாதவர்களாக ஆகி விடுகிறார்கள். எனவே பர்ஃபெக்ட் ஆவதில் டிஃபக்ட் (குறை) ஏற்பட்டு விடுகிறது. எப்படி தன்னுடைய உடலைப் பாதுகாப்பாக வைப்பது அவசியமோ, அதே போன்று ஆத்மாவிற்காகவும் முழுமையான அறிவைப் பயன்படுத்தி நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் மிக விரைவில் எஃபக்ட்டிலிருந்து விடுபட்டு பர்ஃபெக்ட் ஆக முடியும். தெரிந்திருந்தாலும் சில நேரம் தீய சேர்க்கையில் வந்தும், தவறு செய்து விடுகிறார்கள். புரிந்து கொள்ளவும் செய்கிறார்கள் ஆனால் அந்த நேரத்து சூழ்நிலை மற்றும் ஏதாவது பிரச்சனையின் காரணமாக, சம்ஸ்காரத்தின் காரணமாக மற்றும் தொடர்பில் வருவதற்கான சக்தியின் குறைவின் காரணமாக பிறகு மீண்டும் மீண்டும் அந்த பாதிப்பில் வந்து விடுகிறார்கள். முக்கியமாக எந்த விஷயத்தின் காரணமாக பாதிப்பு ஏற்படுகிறது என்று எப்பொழுதும் தன்னை சோதிக்க வேண்டும். இந்த பாதிப்பிலிருந்து எப்பொழுதும் தன்னைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் சுலபமாக பர்ஃபெக்ட் ஆக முடியும். முக்கியமான முயற்சியே இது தான். நீங்கள் அனைவரும் ஒவ்வொருவரும் உங்களுடைய பாதிப்பிற்கான காரணத்தைத் தெரிந்திருக்கிறீர்கள். தெரிந்திருந்தும் மாயா மற்றும் பிரச்சனை கொஞ்சமாவது பாதிப்பில் கொண்டு வந்து விடுகிறது இல்லையா? எஃபக்ட்டிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எஃபக்ட்

ப்ரூஃப் (பாதிப்பு அடையாதவராக) ஆகியிருக்கிறீர்களா? தீய சேர்க்கை, தூய்மையற்ற உணவின் பாதிப்பு இருக்க வேண்டாம். அதனுடைய வழிமுறைகளைத் தெரிந்திருக்கிறீர்கள் என்றால், தன்னை எஃபக்ட் ப்ரூஃப் ஆக ஆக்க முடியும். மாயா புத்திசாலியிலிருந்து ஒன்றும் அறியாத முட்டாள் ஆக்கி விடுகிறது. ஒருவேளை எப்பொழுதும் ஞானம் அதாவது அறிவு இருக்கிறது என்றால், அறிவுள்ளவர் ஒருபொழுதும் யாருடைய பாதிப்பிலும் வருவதில்லை. யாராவது பாதிப்பிலிருந்து பாதிக்கப்படாமல் தன்னை பாதுகாத்துக் கொண்டு வருகிறார் என்றால், அவரே மிகப் பெரிய அறிவாளியாவார். அப்படி மாயா முதலில் அறிவை பலஹீனம் ஆக்குகிறது. எப்படி எதிரியை முதலில் பலஹீனம் ஆக்குவதற்கு முயற்சி செய்வர். பிறகு தாக்குதல் செய்வர். அப்பொழுது தான் வெற்றி அடைவர்! முதலில் பலமிழக்கச் செய்வதற்கான பல வழிகளைத் தேடுவார்கள். அதே போன்று எதிரி மாயாவும் முதலில் நமது அறிவை பலஹீனம் ஆக்கி விடுகிறது. இது சரியா அல்லது இது தவறா என்று புரிந்து கொள்ள முடியாது. பிறகு பாதிப்பு ஏற்பட்டு விடுகிறது. பாதிப்பு தான் குறையின் ரூபத்தை எடுத்துக் கொள்கிறது. லட்சியமாக என்ன வைத்திருக்கிறீர்கள்? குறை மிகச் சரியானவராக விடுவதில்லை. பர்ஃபெக்ட் அதாவது 16-கலைகள் நிரம்பியவராவது! கொஞ்சம் கொஞ்சம் டிஃபக்ட் இருக்கிறது என்றால் 14-கலை. அப்படியானால் என்ன லட்சியம் வைத்திருக்கிறீர்கள்? யார் அறிவு உள்ளவராக இருப்பாரோ அவர் அவசியம் வெற்றி அடைபவராக ஆவார். நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 11.07.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிர்ணய சக்தியை அதிகரிப்பதற்கான உரைகல் -சாகார பாபாவின் சரித்திரம்!

தற்சமயத்தின் விசேஷங்களை தெரிந்து கொண்டே தன்னுள் அந்த அனைத்து சக்திகளையும் தாரணை செய்து தன்னைத் தானே விசேஷ ஆத்மாவாக ஆக்கியிருக்கிறீர்களா? எப்படி இந்த நேரத்தின் விசேஷங்களை வர்ணனை செய்கிறீர்கள் அதே போல் தன்னிலும் அந்த விசேஷங்களைப் பார்க்கிறீர்களா? நேரத்தில் எவ்வளவு விசேஷங்கள் இருக்கிறதோ அவ்வளவு உங்களிலும் இருக்கிறதா? அல்லது நேரத்தில் அதிகம் இருக்கிறது மற்றும் தன்னில் குறைவாக இருக்கிறதா? நேரம் மற்றும் தன்னில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்? வித்தியாசம் இருக்கிறதா? சுயம் நீங்கள் (பவர்ஃபுல்) சக்தி நிறைந்தவர்களா? அல்லது நேரம் சக்தி நிறைந்ததாக இருக்கிறதா? (இப்பொழுது நேரம் இருக்கிறது. சுயம் தான் ஆக வேண்டியதாக இருக்கிறது) ஒருவேளை இது இருக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள் என்றால் உலகிலுள்ள அஞ்ஞானி, பிற ஆத்மாக்கள் மற்றும் ஞானி ஆத்மாக்களாகிய நீங்கள் மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்களில் என்ன வித்தியாசம் இருக்கிறது? இந்த மாதிரி இருக்க வேண்டும். இது இருக்க வேண்டும் என்று இதையோ அந்த மனிதர்களும் கூறுகிறார்கள். நீங்களும் இப்படி இருக்க வேண்டும் என்று கூறினீர்கள் என்றால் உங்களுக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? ஞானி மற்றும் அஞ்ஞானியில் இது தான் வித்தியாசம். வேண்டும், வேண்டும் என்று மனிதர்கள் கூறுகிறார்கள், ஆனால் ஞானிகள் வேண்டும் என்று கூறுவதில்லை, என்ன இருக்க வேண்டுமோ அதை செய்து காண்பிக்கிறார்கள். அவர்களுடையது சொல்வது மட்டும் தான். ஞானிகளுடையது செய்வதாகும். இது தான் வித்தியாசம். அவர்கள் சொல்ல மட்டும் செய்கிறார்கள், நீங்கள் செய்கிறீர்கள், ஒருவேளை இப்பொழுதும் இது இருக்க வேண்டும் என்று நீங்கள் கூறினீர்கள் என்றால் வித்தியாசம் என்னவானது? நேரத்தின் என்னென்ன விசேஷம்

இருக்கிறது மற்றும் அந்த வித்தியாசங்களிலிருந்து எனக்குள் என்னென்ன விசேஷங்கள் குறைவாக இருக்கிறது? என்று தன்னைத் தானே கேளுங்கள். ஒருவேளை ஏதாவது ஒரு விசேஷமாவது குறைவாகி விட்டது என்றால் விசேஷ ஆத்மாக்களில் வர முடியுமா என்ன? வர முடியாது தான் இல்லையா? இந்த நேரத்தின் விசேஷங்களை எடுத்தீர்கள் என்றால் அனேக அனேக விசேஷங்கள் தென்படும். அவைகளில் இந்த நேரத்தின் உயர்ந்த விசேஷமாக என்ன இருக்கிறது? சங்கமயுகத்தின் நேரம் நடந்து கொண்டிருக்கிறது இல்லையா? உயர்ந்தவராக ஆவதற்கான நேரமோ இது தான், ஆனால் இந்த நேரத்தின் விசேஷமாக மற்ற எந்த நேரத்திலும் இல்லாத விசேடம் என்ன இருக்கிறது? இந்த சங்கமயுகத்தின் ஒவ்வொரு விநாடியும் இனிமையான மேளாவாகும் (சந்திப்பாகும்). இந்த மேளாவில் ஆத்மாக்களுக்கு தந்தையோடு சந்திப்பு ஏற்படுகிறது. இந்த விசேஷம் வேறு எந்த யுகத்திலும் இல்லை. அது இதில் மட்டும் தான் இருக்கிறது. தந்தை மற்றும் குழந்தைகளின் மேளா மற்றும் சந்திப்பு என்று கூறினாலும், இந்த விசேஷத்தை எப்பொழுதும் தன்னில் தாரணை செய்து கொண்டே நடந்து கொள்கிறீர்களா? எப்படி சங்கமயுகத்தின் ஒவ்வொரு விநாடியும் மேளாவாக இருக்கிறது, அதே போல் ஒவ்வொரு நேரமும் தன்னைத் தானே தந்தையோடு சந்திப்பை ஏற்படுத்துவதற்கான அனுபவம் செய்கிறீர்களா? அல்லது இந்த மஹான் உயர்ந்த வேளையில் திடீரென்று எப்பொழுதாவது பாப்தாதாவின் கையை விட்டுவிட்டு மேளா மற்றும் சந்திப்பதிலிருந்து வஞ்சிக்கப்பட்டு விடுகிறீர்களா? எப்படி சில நேரங்களில் மேளாவில் சில குழந்தைகள் காணாமல் போய் விடுகிறார்கள் இல்லையா? தாய், தந்தையின் கையை விட்டு விடுகிறார்கள். மேளா என்றாலே குஷியை கொண்டாடுவதற்காகத் தான். ஒருவேளை மேளாவில் ஏதாவது ஒரு குழந்தை தாய் தந்தையிடமிருந்து பிரிந்து விட்டது மற்றும் கையையும் துணையையும் விட்டு விடுகிறது என்றால் அதற்கு என்ன பிராப்தி இருக்கும்? குஷிக்குப் பதிலாக இன்னும் அதிகமாக அமைதியற்றவராக ஆகி விடும். அப்படி மேளாவில் எப்பொழுதும் குஷியின் பிராப்தி செய்து கொண்டிருக்கிறேனா, எப்பொழுதும் சந்திப்பில் இருக்கிறேனா? என்று உங்களை நீங்களே பாருங்கள். யார் எப்பொழுதும் சந்திப்பில் இருப்பார்களோ அவர்களுடைய அடையாளம் என்னவாக இருக்கும்? அவர்களுடைய விசேஷமாக என்ன இருக்கும். அதீந்திரிய சுகத்தில் இருப்பவர் மற்றும் எப்பொழுதும் சந்திப்பை செய்து கொண்டிருப்பவரின்

அடையாளம் என்னவாக இருக்கும்? அவருடைய விசேஷமாக என்ன இருக்கும்? யார் எப்பொழுதுமே சந்திப்பில் மூழ்கி இருப்பாரோ அவருக்கு ஒருபொழுதும் எந்தத் தடையும் இருக்காது. சந்திப்பு தடையை அகற்றி விடுகிறது. அவர் விக்ன வினாசக் (தடையை அழிப்பவர்) ஆக இருப்பார், சந்திப்பைத் தான் (மிலன்) மூழ்கியிருக்கும் நிலை (மக்ன) என்று கூறுவது. ஏதோ விதமான தடை வருகிறது மற்றும் தடையின் வசம் ஆகி விடுகிறார்கள் என்றால் இதனால் என்ன நிரூபணம் ஆகிறது? எப்பொழுதுமே சந்திப்பு மேளாவில் இருப்பவராக இல்லை என்பது தான். எப்படி நேரத்தை தெரிந்து கொள்ளுங்கள், நேரத்தின் லாபத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று மற்றவர்களுக்குக் கூறுகிறீர்கள். அப்படியானால் இந்த அறிவிப்பை தனக்குத் தானே உங்களுக்கும் கொடுக்கிறீர்களா? அல்லது மற்றவர்களுக்கு மட்டும்தான் கொடுக்கிறீர்களா? உங்களுக்கு நீங்களே இந்த அறிவிப்பைக் கொடுக்கிறீர்கள் என்றால் ஒரு நொடி கூட சந்திப்பிலிருந்து தூரமாக இருக்க முடியாது. ஒவ்வொரு விநாடியும் சந்திப்பை செய்து கொண்டே இருப்பார். எப்படி ஏதாவது ஒரு பெரிய மேளா நடக்கிறது, என்றால் அதற்கும் இந்த மேளா இவ்வளவு காலம் நடக்கும் என்று காலமும் நிச்சயிக்கப்பட்டிருக்கும். பின்பு அது முடிவடைந்து விடும். ஒருவேளை ஏதாவது உயர்ந்த மேளா நடக்கிறது மேலும் மிகக் குறைந்த காலத்திற்காக இருக்கிறது என்றால், என்ன செய்வார்கள்? மேளாவில் எப்படியாவது கலந்து கொள்ள முயற்சி செய்வார்கள். அதே போல் இந்த சங்கமயுகத்தின் மேளாவில் ஒருவேளை இப்பொழுது கொண்டாடவில்லை என்றால் பின்பு எப்பொழுதாவது இந்த மேளா நடக்குமா என்ன? முழு கல்பத்திலும் இந்த குறைந்த காலத்தில் தான் தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு நடக்கிறது என்றால் இவ்வளவு குறைந்த காலத்து மேளாவில் என்ன செய்ய வேண்டும்? ஒவ்வொரு நொடியும் கொண்டாட வேண்டும். அப்படி நேரத்தின் விசேஷத்தைத் தெரிந்து கொண்டு தன்னிலும் அந்த விசேஷத்தை தாரணை செய்யுங்கள். அப்பொழுது தானாகவே உயர்ந்த ஆத்மா ஆகி விடுவீர்கள். அனைவரின் லட்சியமோ உயர்ந்த ஆத்மா ஆவதற்கானது தான் இல்லையா? உயர்ந்தவர்களாக ஆவதற்கான லட்சியம் இருந்த போதிலும் முயற்சி ஏன் சாதாரணமானதாக இருக்கிறது? லட்சியம் உயர்ந்ததாக இருக்கிறது என்றால் பின்பு லட்சணம் சாதாரண ஆத்மாவினுடையதாக ஏன் இருக்கிறது? இதன் காரணம் என்ன? லட்சியத்தையே மறந்து விடுகிறீர்கள். லட்சியத்தை வைப்பவர் பின்பு

லட்சியத்தை மறந்து விடுவார்களா? ஏதாவது தடையை நிவாரணம் செய்வதற்கான சக்தி ஏன் குறைவாக இருக்கிறது? இதன் காரணம் என்ன? ஏன் நிவாரணம் செய்ய முடிவதில்லை? நிவாரணம் செய்ய முடியாததற்கான காரணமே என்ன லட்சியம் வைத்திருக்கிறீர்களோ அதை அடைய முடியாதது தான். நிவாரணம் செய்வதற்கான சக்தி ஏன் குறைந்து விடுகிறது? ஸ்ரீமத்படி நடப்பவர்களுக்கோ எப்படி லட்சியமோ அப்படியே லட்சணம் இருக்கும். ஒருவேளை லட்சியம் சிரேஷ்டமாக இருக்கிறது, மேலும் லட்சணம் சாதாரணமாக இருக்கிறது என்றால் இதற்கான காரணம் என்ன? ஏனென்றால் தடைகளுக்கு உங்களால் நிவாரணம் செய்ய முடிவதில்லை. நிவாரணம் செய்யாததற்கான காரணம் என்ன? எந்த சக்தியின் குறை இருக்கிறது? (நிர்ணய சக்தி) இது சரி தான். எதுவரை நிர்ணயம் செய்ய முடிவதில்லையோ அது வரை நிவாரணம் செய்ய முடிவதில்லை. ஒருவேளை நிர்ணயம் செய்து விட்டீர்கள் என்றால் நிவாரணமும் செய்து விடுவீர்கள் ஆனால் நிர்ணயம் செய்வதில் குறை இருந்து விடுகிறது. மேலும் ஏன் நிர்ணயம் செய்ய முடியாமல் இருக்கிறீர்கள்? ஏனென்றால் நிர்விகல்ப் (தீய எண்ணமற்ற நிலை) ஆனவராக ஆக முடிவதில்லை. வீணான எண்ணம், தீய எண்ணம் புத்தியில் இருக்கும் காரணத்தினால், புத்தி தெளிவாக இல்லாத காரணத்தினால் நிர்ணயம் செய்ய முடிவதில்லை. மேலும் நிர்ணயம் செய்ய முடியாத காரணத்தினால் நிவாரணம் செய்ய முடிவதில்லை. நிவாரணம் செய்ய முடியாததற்கான காரணம் ஏதாவது குழப்பத்தின் வசமாகி விடுகிறீர்கள். சகஜசாதனமாக என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது? எப்படி தங்கத்தைப் பகுத்தறிவதற்காக உரைகல்லில் உரசிப்பார்க்கப்படுகிறது அதன் மூலம் சுத்தமானதா அல்லது கலப்படமானதா என்பது தெரிந்து விடும். அதே போல நிர்ணய சக்தியை அதிகரிப்பதற்காக உங்களின் எதிரில் எந்த உரைகல் இருக்கிறது. சாகார பாபாவின் (பிரம்மாபாபாவின்) ஒவ்வொரு காரியம் மற்றும் சரித்திரம் இது தான் உரைகல் ஆகும். என்ன காரியம் செய்தாலும், என்ன எண்ணத்தை உருவாக்கினாலும் அதை சரியானதா அல்லது தவறானதா, வீணானதா, சக்திசாலியானதா என்று ஒருவேளை இந்த உரைகல்லில் பார்த்து, அதன் பிறகு என்ன காரியம் செய்வீர்களோ அது சுலபமானதாக, உயர்ந்ததாக ஆகி விடும். அப்படி இந்த உரைகல்லையே உங்களிடம் வைத்துக் கொள்வதில்லை, எனவே கஷ்டப்பட்டு மிகுந்த முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. சகஜ யுக்தியாக என்ன இருக்கிறதோ அதை

மறந்து விடுகிறீர்கள். இந்த காரணத்தினால் தடைகளிலிருந்து முக்தி அடைய முடிவதில்லை, ஒருவேளை தங்க வேலை செய்பவர்களிடம் உரைகல் சரியாக இல்லை என்றால் என்னவாகும்? ஏமாற்றப்பட்டு விடுவார்கள். அதே போல் ஒருவேளை இந்த உரைகல்லை எப்பொழுதும் உடன் மற்றும் நினைவில் வைக்கவில்லை என்றால் பின்பு கடினத்தை அனுபவம் செய்கிறீர்கள் ஆனால் வாஸ்தவத்தில் சுலபமானது தான் இல்லையா! பிறகு ஏன் கடினமாகி விடுகிறது? ஏனென்றால் யுக்தியை உபயோகப்படுத்துவதில்லை.

யுக்தியை உபயோகித்தீர்கள் என்றால் அவசியம் முக்தி ஏற்பட்டு விடும். எண்ணத்தின் புயலாக இருந்தாலும், ஏதாவது சம்மந்தம் மூலமாக, இயற்கை மற்றும் பிரச்சனைகள் மூலமாக ஏதாவது புயல் அல்லது தடை வருகிறது என்றாலும் அதிலிருந்து விடுபடாததற்கான காரணம் யுக்தி இல்லை. யுக்தியுக்த்தாக (யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடப்பது) நடப்பவராக ஆகவில்லை. எவ்வளவு யோகயுக்த் யுக்தியுக்த்தாக இருப்பாரோ அவ்வளவு அனைத்து தடைகளிலிருந்தும் அவசியம் விடுபட்டிருப்பார். அனைத்து தடைகளிலிருந்தும் விடுபட்டிருக்கிறீர்களா அல்லது அதன் சொரூபமாக இருக்கிறீர்களா? யோகயுக்த்தாக இருப்பதில்லை அப்பொழுது தான் தடை சொரூபமானவராக ஆகி விடுகிறீர்கள். எந்த நிகழ்ச்சி வைத்தாலும் அல்லது சொற்பொழிவு ஆகியவை நிகழ்த்தினாலும் அல்லது யாருக்காவது புரிய வைக்கிறீர்கள் என்றாலும், அதில் அனைவருக்கும் முக்கியமாக எந்த விஷயத்தைக் கூறுகிறீர்கள். முக்தி - ஜீவன்முக்தி உங்களுடைய பிறப்புரிமை ஆகும். அப்படி எப்பொழுது உங்களுடைய பிறப்புரிமையாக இருக்கிறது என்றால் அதைப் பிராப்தி செய்யுங்கள். பிறகு கூறுகிறீர்கள் - இப்பொழுது இல்லையென்றால் எப்பொழுதும் இல்லை. அப்படி முக்தி, ஜீவன்முக்தி பிறப்புரிமையாக இருக்கிறது என்ற இந்த முக்கிய சுலோகன் இருக்கிறது. இதை நீங்கள் அடைந்திருக்கிறீர்களா? குழந்தைகளாக ஆகியிருக்கிறீர்கள், மேலும் அதிகாரத்தைப் பெறவில்லையா? குழந்தையாக ஆனீர்கள் மற்றும் ஆஸ்திக்கு அதிகாரி ஆனீர்கள் என்று மற்றவர்களுக்குப் புரிய வைக்கிறீர்கள். அப்படியானால் இது, புரிய வைப்பதற்காக மட்டும் தானா? அல்லது நடைமுறையில் செய்வதற்கான விஷயமுமா? தகுதியடைவது வேறு விஷயம் ஆனால் முக்தி, ஜீவன்முக்தியின் ஆஸ்தி கிடைத்து

விட்டதா அல்லது இல்லையா? இங்கேயே அடைந்து விட்டீர்களா அல்லது முக்தி தாமத்தில் முக்தி மற்றும் சொர்க்கத்தில் முக்தியை மற்றும் ஜீவன்முக்தியை அடைய வேண்டுமா? எதிர்காலத்திலோ கிடைக்கத்தான் வேண்டும், எதிர்காலத்தின் கூடவே இப்பொழுதும் முக்தி மற்றும் ஜீவன்முக்தி கிடைக்கவில்லையா? எப்பொழுது தந்தை இப்பொழுது கிடைத்திருக்கிறார் என்றால் ஆஸ்தியும் இப்பொழுது கிடைத்திருக்கிறது. எதிர்காலத்தின் ஆறுதலிலேயே சென்று கொண்டிருக்கிறீர்களா? (செக் (தடை) கிடைத்திருக்கிறது) குழந்தைகளுக்கு செக் கொடுக்கப்படுவதில்லை. குழந்தைகளோ தந்தையின் ஒவ்வொரு பொருள் மீதும் அதிகாரிகளாக இருக்கிறார்கள். அதிகாரிகளுக்கு செக்கின் ஆறுதல் கொடுக்கப்படுவதில்லை. அப்படி நடைமுறையில் என்ன ஆஸ்தியாக இருக்கிறதோ அது இப்பொழுது பிராப்தி ஆகிறது. பந்தனம் நிறைந்த வாழ்க்கையின் கூடவே அனைத்திலிருந்தும் விடுபட்ட வாழ்க்கையின் அனுபவம் ஆகிறது. அங்கேயோ பந்தனமான வாழ்க்கையின் விஷயமே கிடையாது, அங்கேயோ அந்த பிராப்தியில் மட்டும் இருப்போம். முக்திதாமத்தின் முக்தியின் அனுபவத்தை இப்பொழுது நீங்கள் செய்ய முடியும் ஆனால் அங்கே செய்ய முடியாது. அதனால் முக்தி, ஜீவன்முக்தியின் பிறப்புரிமையை எதிர்காலத்தில் அடைய வேண்டும் என்று அப்படி நினைக்காதீர்கள். எப்பொழுதிலிருந்து குழந்தையாக ஆனீர்களோ அப்பொழுதிலிருந்தே ஆஸ்தியும் அடைந்து விட்டீர்கள். மற்றபடி கட்டளைப்படி நடப்பவர், நம்பிக்கைக்குரியவர் எதுவரை ஆகியிருக்கிறீர்கள் என்பதில் வரிசைக்கிரமம் உருவாகிறது. ஆஸ்தியின் அதிகாரியாகவோ ஆகி விடுகிறீர்கள். அந்த ஆஸ்தியை வாழ்க்கையில் தாரணை செய்து அதன் லாபத்தை எடுப்பது அது ஒவ்வொருவரின் நிலையைப் பொருத்தது. ஆஸ்தி கொடுப்பதில் தந்தை எந்த வித்தியாசத்தையும் வைப்பதில்லை. தகுதியானவர் மற்றும் தகுதியற்றவர் ஆவதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. எனவே பிறப்புரிமையை தனக்குள் எப்பொழுதும் பிராப்தி செய்கிறீர்கள் என்று கூறப்படுகிறது. எப்பொழுதும் விடுபட்டவராக இருக்க வேண்டும் இல்லையா? உடலிலிருந்து, உடலின் சம்மந்தத்திலிருந்தும் விடுபட்ட நிலை மற்றும் பழைய உலகத்தின் நினைவிலிருந்தும் விடுபட்ட நிலை. விடுபட்டவராக ஆகவில்லையா? விடுபட்ட நிலையை ஒருவேளை அனுபவம் செய்கிறீர்கள் என்றால் விடுபட்ட பிறகு பந்தனமற்ற வாழ்க்கையின் அனுபவம் தானாகவே ஏற்பட்டு விடுகிறது. ஏனென்றால்

வாழ்க்கையிலோ இருக்கிறீர்கள் இல்லையா. உடலில் இருப்பவர்களாகவோ நீங்கள் இருக்கிறீர்கள் இல்லையா? வாழ்க்கையில் இருந்து கொண்டே உடல் மற்றும் உடலின் சம்மந்தம் மற்றும் பழைய உலகத்தின் கவர்ச்சியிலிருந்து விடுபட்டு இருப்பது - இதைத் தான் ஜீவன்முக்த் நிலை என்று கூறப்படுவது. அப்படி முக்தி, ஜீவன்முக்தியின் அனுபவம் இப்பொழுது செய்ய வேண்டுமேயன்றி எதிர்காலத்தில் இல்லை. எதிர்காலத்திலோ இங்கே செய்த பிராப்தியின் ஆஸ்தி கிடைத்துக் கொண்டே இருக்கும் ஆனால் பிராப்தியின் அனுபவம் இப்பொழுது இருக்கும் எதிர்காலத்திலோ பிராப்தி இருக்கும் என்று தெரியும். அது தான் உயர்ந்த காரியங்களின் பிராப்தி ஆனால் உயர்ந்த காரியமோ இப்பொழுது நடக்கிறது இல்லையா? எனவே பிராப்தியினுடைய அனுபவமும் இப்பொழுது இருக்கிறது இல்லையா? எதிர்காலத்தின் ஆறுதலில் மட்டும் இருக்காதீர்கள். செக் வைத்து தன்னுடைய சோதனையிலேயே இருந்து விடுவது என்று அப்படி செய்யாதீர்கள். தந்தை மூலமாக என்ன ஆஸ்தி கிடைத்திருக்கிறதோ அதை எவ்வளவு பிராப்தி செய்து நடந்து கொள்கிறேன் என்று உங்களை நீங்களே பாருங்கள். தந்தையோ கொடுத்து விட்டார். அதிகாரியின் அதிகாரத்தை யாரும் பறிக்க முடியாது. அப்படி நான் அதிகாரி ஆவேன் என்ற இந்த போதையில், நிச்சயத்தில் இருங்கள். கிடைத்திருக்கும் ஆஸ்தியை எங்காவது வீணாக இழந்து விடவில்லையே என்று இதை மட்டும் பாருங்கள். அந்த மாதிரியும் சில குழந்தைகள் இருக்கிறார்கள். அதிகமாகக் கிடைக்கிறது, ஆனால் அதிகமாகவும் இழக்கிறார்கள். இழக்கும் காரணத்தினால் கிடைத்திருந்தும் ஒன்றுமில்லாதவர்களாக ஆகி விடுகிறார்கள். அதிகாரியாக இருந்த போதிலும் அடிமையாகி விடுகிறார்கள். அதிகாரம் எப்பொழுது இல்லை என்றால் அவசியம் அடிமைத்தனம் இருக்கும். தடைகளின் அடிமையாகி விடுகிறீர்கள் இல்லையா? ஏனென்றால் அதிகாரத்தை அடையவில்லை. ஒருவேளை எப்பொழுதும் அதிகாரியாகி நடந்து கொண்டீர்கள் என்றால் ஒருபொழுதும் தடையின் அடிமை ஆக முடியாது. இந்த இயற்கையின் (உடலின்) அடிமையாகவும் ஆகாதீர்கள். எப்படி தந்தை இயற்கையை அடிமையாக்கி வருகிறார், அவர் அடிமையாவதில்லை. அது போலவே இந்த உடல் அல்லது என்னென்ன இயற்கை இருக்கிறதோ அதை அடிமையாக்கி நடந்து கொள்ள வேண்டுமேயன்றி அடிமையாக ஆகக்கூடாது. நல்லது.

கலாபாஜி (வித்தை) விளையாட்டைப் பார்த்தீர்களா? பட்டியில் இருப்பவர்கள் இன்று கலாபாஜியை (தூங்கி விழுதல்) நன்றாகக் காண்பித்தார்கள். இதன் பிறகு இந்த வித்தையை விளையாட மாட்டீர்கள் இல்லையா? எப்பொழுதும் முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் அதிகாரத்தின் போதையில் இருக்கக்கூடிய அனைத்து உயர்ந்தவைகளை தாரணை செய்து உயர்ந்த ஆத்மா ஆகக்கூடிய ஆத்மாக்களுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: பற்றுதலை பற்றற்ற நிலையில் மாற்றம் செய்யக்கூடிய சக்தி சொரூபமானவர் ஆகுக!**

சக்தி சொரூபமாக ஆவதற்காக பற்றுதலை பற்றற்ற நிலையில் மாற்றம் செய்யுங்கள். தன்னுடைய உடலில், சம்மந்தத்தில், ஏதாவது பதார்த்தத்தில் ஒருவேளை எங்காவது பற்றுதல் இருக்கிறது என்றால், மாயாவும் வர முடியும். மேலும் சக்தி ரூபமாக ஆக முடிவதில்லை எனவே முதலில் பற்றற்றவராக ஆகுங்கள். அப்பொழுது தான் மாயாவின் தடைகளை எதிர்கொள்ள முடியும். தடைகள் வரும்பொழுது கதறுவது மற்றும் பயப்படுவதற்குப் பதிலாக சக்தி ரூபத்தை தாரணை செய்து விட்டீர்கள் என்றால் விக்ன விநாசக் (தடைகளை அழிப்பவர்) ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: இரக்கம், சுயநலமற்ற நிலை மற்றும் பற்றுதலிலிருந்து விடுபட்டவர்களாக ஆகுங்கள், சுயநலமானவராக ஆகாதீர்கள்!**

✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹

# 12.07.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இறந்து உடலில் இருக்கிறேன் (மறுபிறவி) என்ற நினைவினால் குடும்பஸ்தன் மற்றும் இல்லறத்தை மறந்த நிலை (அதர்குமாரர்களின் பட்டியில்)!

தன்னைத் தானே எங்கு விரும்பினாலும், எப்பொழுது விரும்பினாலும் அந்த மாதிரி மாற்றம் செய்ய முடியுமா? பட்டியில் தன்னைத்தானே மாற்றம் செய்வதற்காக வருகிறீர்கள் இல்லையா. அப்படியானால் மாற்றம் செய்யும் சக்தியை அனுபவம் செய்கிறீர்களா? எப்படிப்பட்ட வாயுமண்டலமாக (சுற்றுப்புறச் சூழலாக) இருந்தாலும் எந்தவித சூழ்நிலையானாலும் தன்னுடைய சுயநிலையின் ஆதாரத்தில் வாயுமண்டலத்தை மாற்றத்தில் கொண்டு வர முடியுமா? நீங்கள் வாயுமண்டலத்தின் பிரபாவத்தில் வரக்கூடிய ஆத்மாக்களா? அல்லது வாயுமண்டலத்தை உயர்ந்த நிலையாக (சதோபிரதானமாக) மாற்றும் ஆத்மாவா? தன்னை என்னவென்று நினைக்கிறீர்கள்? இப்பொழுது எந்தவொரு வாயுமண்டலமும் தன்னை அதன் பக்கம் கவர முடியாது என்று இவ்வளவு அனுபவம் செய்கிறீர்களா? பட்டியில் வந்ததற்கு பிறகு எங்களுக்குள் அந்தளவு தைரியம் மற்றும் சக்தியை சேமித்திருக்கிறோம். அதனால் நாங்கள் எங்கேயாவது, ஏதாவது ஒரு இடத்திற்கு செல்கிறோம் என்றால் சேமித்திருக்கும் சக்திகளின் ஆதாரத்தில் வாயுமண்டலம் மற்றும் சூழ்நிலைகள் மாஸ்டர் சர்வ சக்திவானாகிய என்னை அசைக்க முடியாது, தன்னுடைய நிலையை ஒரே சீரானதாக மற்றும் ஆடாத அசையாததாக ஆக்க முடியும் என்று யார் நினைக்கிறார் களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நாளாக நாளாக சூழ்நிலைகள் மிகக் கீழான நிலையானதாக (தமோபிரதானமாக) ஆகத்தான் வேண்டும் என்பதோ மிகத் தெளிவாக இருக்கிறது. மிக தமோபிரதான நிலைக்குப் பிறகு தான்

சதோபிரதானமாக உருவாக வேண்டும். அப்படி நாளாக நாளாக வாயுமண்டலம் இன்னும் மோசமாகக் கூடியதேயன்றி நல்லதாகக் கூடியது அல்ல. எப்படி தாமரை மலர் சேற்றில் இருந்த போதிலும் விலகியிருக்கிறது. அதே போல் மிக அதிக தமோபிரதான, தமோகுண வாயுமண்டலத்தில் இருந்தபோதிலும் தன்னுடைய நிலை எப்பொழுதும் சதோபிரதானமாக இருக்கட்டும். இந்த அளவு சக்தி இருக்கிறது என்று புரிந்து கையை உயர்த்தினீர்கள் இல்லையா? பின்பு இந்த விஷயம் அந்த மாதிரி நடந்தது எனவே நிலை மேலே கீழே சென்றது என்று அந்த மாதிரி கூற மாட்டீர்களே? இயற்கை (உடல்) மூலமாகவோ, லௌகீக உறவு மூலமாகவோ, தெய்வீக குடும்பம் மூலமாகவோ ஏதாவது சோதனை வந்து மற்றும் ஏதாவது சூழ்நிலை எதிரில் வந்தால் அதில் கூட தன்னைத்தானே ஆடாத அசையாதவராக ஆக்க முடியும் இல்லையா? இவ்வளவு தைரியம் இருக்கிறது என்று நினைக்கிறீர்கள் இல்லையா? சோதனைகளோ அதிகமாக வர வேண்டியது இருக்கிறது, பரீட்சையோ இருக்கவே இருக்கும். எப்படி எப்படி கடைசி முடிவின் நேரம் அருகில் வர வர அவ்வப்பொழுது நடைமுறையில் பரீட்சையும் தானாகவே நடந்து கொண்டே இருக்கும். புரோகிராம் படி பரீட்சை வைக்கப் படுவதில்லை தானாகவே டிராமாவின் பிரகாரம் அவ்வப்பொழுது ஒவ்வொருவரின் நடைமுறை பரீட்சை நடந்து கொண்டு இருக்கிறது. அப்படியானால் பரீட்சையில் பாஸ் ஆவதற்கான தைரியம் தன்னுள் இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? பயப்படக்கூடியவர்களோ இல்லை தானே. அங்கதனுக்குச் சமமாக புத்தியின் நினைவு என்ற தொடர்பை ஆடாமல் வைத்துக் கொள்பவர்களா?

இந்த பட்டி அதர்குமாரர்களுக்குத் தான் இல்லையா? தன்னை அதர் குமார் என்றோ நினைக்கிறீர்கள் இல்லையா? எண்ணம் மற்றும் சம்மந்தத்தில் அதர் குமாரின் நினைவு இருப்பதில்லையா? பாருங்கள் தொடக்கத்தில் சகோதரன் சகோதரியின் நினைவில் நிலைத்திருக்கச் செய்யப்பட்டது, அதிலும் சகோதரன் சகோதரியின் நினைவில் கூட சிலர் தேக அபிமானத்தில் வந்து விடுகிறார்கள் என்று பார்த்தோம், எனவே அதைவிட உயர்ந்த நிலையான சகோதரன் சகோதரன் என்பதைக் கூறினோம். அதே போலவே தன்னை அதர்குமார் என்று நினைத்து நடந்து கொண்டீர்கள் என்றால் இல்லற மார்க்கத்தின் பந்தனத்தில் கட்டப்பட்டு இருக்கும் ஆத்மா என்று புரிந்து நடக்கிறீர்கள். எனவே இப்பொழுது இந்த நினைவில்

இருந்து கூட விலக வேண்டும். அதர்குமார் இல்லை ஆனால் நான் பிரம்மாகுமார் ஆவேன். இப்பொழுது உடலிலிருந்து கொண்டே இறந்து புது ஜென்மத்தில் இருப்பவராக ஆகி விட்டீர்கள் என்றால் இந்த மர்ஜீவா வாழ்க்கையில் அதர்குமாரின் சம்மந்தம் இருக்கிறதா என்ன? மர்ஜீவா வாழ்க்கையில் இல்லறத்தைச் சேர்ந்தவன் மற்றும் குடும்பஸ்தன் என்பது இருக்கிறதா என்ன? மர்ஜீவா வாழ்க்கையில் பாப்தாதா யாரையும் குடும்பஸ்தனாக ஆக்கித் தரவில்லை. ஒரு தந்தை மற்றும் அனைவரும் குழந்தைகள் இல்லையா? இதில் குடும்பஸ்த நிலை என்பது எங்கிருந்து வந்தது? அப்படி தன்னை பிரம்மா குமார் என்று புரிந்து நடந்து கொள்ள வேண்டும். ஒருவேளை அதர்குமாரின் நினைவும் இருக்கிறது என்றால் எப்படி நினைவோ அப்படியே நிலையும் இருக்கிறது. இந்தக் காரணத்தினால் நான் அதர்குமார் என்ற இந்த நினைவை அகற்றுங்கள். நான் பிரம்மா குமார் ஆவேன். பாப்தாதா என்ன வேலை கொடுத்திருக்கிறாரோ அந்த வேலைக்காக ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் நான் சென்று கொண்டிருக்கிறேன். என்னுடைய குடும்பம் அல்லது என்னுடைய மனைவி என்ற இந்த நினைவும் தவறாகும். மனைவியை மனைவியின் உணர்வோடு பார்ப்பது, மற்றும் வீட்டை தன்னுடைய இல்லறத்தின் நினைவோடு பார்ப்பது இதை மர்ஜீவா என்று சொல்ல முடியுமா? பாருங்கள் ஒவ்வொரு பொருளையும் பாதுகாப்பாக வைப்பதற்காக டிரஸ்டியை நியமனம் செய்வார்கள். அதே போல் இந்த எல்லைக்குட்பட்ட படைப்பை பாப்தாதா என்னை டிரஸ்டியாக்கி பாதுகாப்பதற்காக கொடுத்திருக்கிறார் என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். இவர்கள் என்னுடைய படைப்பில்லை ஆனால் பாப்தாதா மூலமாக டிரஸ்டியாகி இவர்களை கவனிக்கும் பொறுப்பாளர் ஆக்கப்பட்டிருக்கிறேன். டிரஸ்டி நிலையில் என்னுடையது என்பது இருப்பதில்லை. டிரஸ்டி பொறுப்பில் இருப்பவராக ஆகிறார். இல்லற மார்க்கத்தின் உள்உணர்வு கூட முற்றிலும் இருக்கக் கூடாது. இவர்கள் ஈஸ்வரனின் ஆத்மாக்களே அன்றி என்னுடைய குழந்தைகள் இல்லை. சிறு சிறு குழந்தைகளாக இருந்தாலும் கூட, பாப்தாதா சிறு குழந்தைகளின் பாலனை செய்யவில்லையா என்ன? எப்படி பாப்தாதா சிறு குழந்தைகளை பாலனை செய்து கொண்டே ஈஸ்வரிய காரியத்தின் பொறுப்பாளர் ஆக்கி விட்டார். அதே போலவே சிறுசிறு குழந்தைகள் அல்லது பெரியவர்கள் யாருக்காகவும் தந்தை மூலமாக பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்களோ, அவர்களுக்காக இந்த ஆத்மாக்களை ஈஸ்வரிய சேவைக்குத்

தகுதியானவர் ஆக்கி இதில் ஈடுபடுத்தி விட வேண்டும் என்ற இந்த உணர்வு இருக்க வேண்டும். வீட்டில் இருந்து கொண்டே இந்த மாதிரி நினைவு இருக்கிறதா? எப்படி ஈஸ்வரிய பரிவாரத்தின் அனேக ஆத்மாக்களின் உறவு நெருக்கத்தில் இருக்கிறீர்கள். அதே போலவே எந்த ஆத்மாக்களுக்களின் ட்யூட்டி (கடமை) கிடைத்திருக்கிறதோ, அவர்களுடனும் அந்த மாதிரியே நெருக்கத்தில் வருகிறீர்களா? மேலும் வித்தியாசம் இருக்கிறதா? யார் யார் உங்களின் நெருக்கத்தில் இருக்கும் ஆத்மாக்களோ அவர்களிடமிருந்து ரிசல்ட்டைக் கேட்போம். எப்படி சேவை நிலையங்களின் பொறுப்பாளராக ஆகியிருக்கும் சகோதரி மற்றும் சகோதரர்களிடமிருந்து அந்த ஈஸ்வரிய பார்வை, உள்உணர்வோடு நெருக்கத்தில் வருகிறீர்கள். அதே போலவே வீட்டிலிருக்கும் அந்த ஆத்மாக்களின் நெருக்கத்தில் வருகிறீர்களா? அல்லது கடந்த ஜென்மத்தின் அதிகாரம் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? நாளாக நாளாக நிலை மற்றும் உள் உணர்வு உயர்ந்ததாக ஆகிக் கொண்டிருக்கிறது இல்லையா? மேலும் எதுவரை நேரத்திற்கு தகுந்தாற்போல் தன்னுடைய நிலை மற்றும் உள்உணர்வை உயர்ந்ததாக ஆக்கவில்லை மற்றும் பரிவர்த்தனையில் கொண்டு வரவில்லை என்றால் எப்படி உயர்ந்த பதவியை அடைய முடியும். எப்படி சாகார பாபாவை பார்த்தீர்கள். லௌகீக உறவின் உள்உணர்வு, பார்வை மற்றும் நினைவு கனவில் கூட இருந்ததா? அப்படியானால் ஃபாலோ ஃபாதர் செய்ய வேண்டும் இல்லையா? அதே லௌகீக உறவினர்கள் உடன் இருக்கவில்லையா என்ன? எனவே நீங்களும் சேர்ந்து இருந்து கொண்டே இந்த நினைவு மற்றும் உள்உணர்வில் இருப்பதற்கான தைரியம் வைக்க வேண்டும். இந்த பட்டியில் என்ன மாற்றத்தை செய்து விட்டு செல்வீர்கள்? அதர்குமார் என்ற பெயர், அடையாளம் இல்லாமல் செய்ய வேண்டும். எப்படி பட்டியில் (நெருப்பில்) போடப்படுவதினால் ஒவ்வொரு பொருளின் ரூபம் மாறி விடுகிறது. அதே போல் இந்த பட்டியில் நான் இல்லற மார்க்கத்தைச் சேர்ந்தவன், நான் அதர்குமார் என்ற இந்த நினைவையும் அகற்றி விட்டு நான் பிரம்மா குமார், மேலும் நிமித்தமாகியிருக்கும் இந்த ஆத்மாக்களின் சேவைக்காக டிரஸ்டியாக இருக்கிறேன் என்று புரிந்து கொள்ள வேண்டும். இந்த நினைவை உறுதியாக்கிச் செல்லுங்கள். இது தான் பட்டியினுடைய மாற்றமாகும். இந்த அளவு மாற்றம் செய்யும் சக்தி தன்னுள் நிரப்பியிருக்கிறீர்களா அல்லது அங்கே சென்ற பிறகு இல்லற மார்க்கத்தினராக ஆகி விடுவீர்களா? இப்பொழுது இல்லறம் என்று

நினைக்காதீர்கள் ஆனால் இந்த குடும்பஸ்தன் என்ற உள்உணர்விலிருந்தும் விலகிய நிலை அதாவது இல்லறத்தின் உள்உணர்விலிருந்து விலகியிருப்பது, அந்த மாதிரியான நிலையை உருவாக்கி விட்டுச் செல்வதினால் தான் அஞ்ஞானி ஆத்மாக்களும் உங்களுடைய நடத்தை, உங்களுடைய வார்த்தைகள், கண்கள் மூலமாக என்ன விலகிய மற்றும் அன்பான நிலை மஹிமை செய்யப்பட்டிருக்கிறதோ அதை அனுபவம் செய்ய முடியும். இதுவரை உலகின் நடுவே இருந்து கொண்டே உலகத்தினருக்கு விலகிய மற்றும் அன்பான நிலையை அனுபவம் செய்ய முடிவதில்லை. ஏனென்றால் உங்களுடைய உள்உணர்வு இந்த அளவு விலகியதாக ஆகவில்லை. விலகியவராக ஆகாத காரணத்தினால் உ அந்த அளவு பிரியமானவராக ஆகவில்லை. பிரியமான பொருள் அனைவரையும் தானாகவே கவரும். அப்படி உலகத்தினரின் நடுவில் இருந்து கொண்டே அந்த மாதிரி விலகிய நிலையை உருவாக்கினீர்கள் என்றால் அன்பான நிலையும் தானாகவே உருவாகி விடும். அந்த மாதிரியான அன்பான நிலை அனேக ஆத்மாக்களை தன் பக்கம் தானாகவே கவர்ந்து இழுக்கும். அப்படி உலகத்தின் நடுவே வாழ்ந்து கொண்டே அந்த மாதிரி விலகியிருக்கும் நிலையை உருவாக்கினீர்கள் என்றால் பிரியமான நிலையும் தானாக உருவாகி விடும். அந்த மாதிரியான பிரியமான நிலை அனேக ஆத்மாக்களை உங்கள் பக்கம் தானாகவே கவர்ந்திழுக்கும். இப்பொழுது கூட உழைக்க வேண்டியது இருக்கிறது இல்லையா. ஏனென்றால் எந்த விலகிய மற்றும் அன்பான நிலை இருக்க வேண்டுமோ, அது பிரத்யக்ஷ ரூபத்தில் இதுவரை இல்லை. தன்னைத் தானே பிரத்யக்ஷம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஒருவேளை பிரத்யக்ஷ ரூபத்தில் இருந்தீர்கள் என்றால் பிரத்யக்ஷம் செய்வதற்கு கடின உழைப்பு செய்ய வேண்டியது இருக்காது. எனவே இப்பொழுது அந்த உயர்ந்த நிலையை காரியத்தில் பிரத்யக்ஷ ரூபத்தில் கொண்டு வாருங்கள். இதுவரை குப்தமாக (ரகசியமாக) இருக்கிறது.

உலகத்தின் நடுவே இருந்து கொண்டே ஆன்மீகமானவராக தென்படுகிறீர்களா? யாராவது தூரத்திலிருந்து உங்களை பார்த்தார்கள் என்றால் ஆன்மீகமானவர்கள் என்று அனுபவம் செய்கிறார்களா? அல்லது சாதாரண மானவர்கள் என்று நினைக்கிறார்களா? நடைமுறை வாழ்க்கைக்கு அந்த மாதிரி பிரபாவம் இருக்கிறது. யாராவது பார்த்து

இவர்கள் ஏதோ விசேஷ ஆத்மாக்கள் என்று புரிந்து கொள்ளட்டும் எப்படி ஸ்தூல உடையைப் பார்த்து இவர்கள் நம்மை விட வித்தியாசமானவர்கள் என்று புரிந்து கொள்கிறார்கள். அதே போல இந்த முகம், அவ்யக்த உருவம் கூட வித்தியாசமானதாகத் தென்படட்டும் அப்பொழுது தான் பிரபாவம் ஏற்படும். நடைமுறையில் அந்த மாதிரி உயர்ந்த நிலை இருக்கட்டும், அந்த மாதிரி உயர்ந்த நினைவு மற்றும் உள்உணர்வு இருக்கட்டும் அது நாலாபுறத்து உள்உணர்வுகளை தன் பக்கம் கவர்ந்திழுக்கட்டும். எப்படி ஏதாவது கவரக்கூடிய பொருள் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களை தன் பக்கம் கவருகிறது இல்லையா? அனைவரின் கவனமும் செல்கிறது இல்லையா? அதே போல் இந்த ஆன்மீக நிலை மற்றும் தெய்வீகத் தன்மை அக்கம் பக்கத்தில் இருக்கும் உள்உணர்வுகளை தன் பக்கம் கவர முடியாதா என்ன? இந்த நிலை கடைசியில் வர வேண்டுமா என்ன? சாதாரண முறையில் கூட ஏதாவது ராயல் குடும்பத்தின் குழந்தைகள் இருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய நடவடிக்கை மூலமாக அவர்களின் பேச்சு மூலமாக அறிமுகம் இல்லாத போதிலும் இவர்கள் ஏதோ ராயல் குடும்பத்தின் ஆத்மாக்கள் என்று தெரிந்து கொள்வார்கள். அப்படி ஆன்மீக உள்உணர்வில் நிலைத்திருக்கக்கூடிய ஆத்மாக்களின் பிரபாவம் தூரத்திலிருந்தே இவ்வளவு ஏற்பட முடியாதா என்ன? இது கஷ்டமா என்ன? எது சுலபமான விஷயமோ அதைச் செய்வதில் காலம் எடுக்குமா என்ன?

பட்டி மூலம் ஆன்மீக சக்திசாலியாகி மாஸ்டர் ஞான சூரியனாகி எப்பொழுது இத்தனை அனைத்து ஆத்மாக்களும் நாலாபுறங்களிலும் செல்வீர்களோ, எப்படி சூரியனை மறைக்க முடியாது அதே போல் மாஸ்டர் ஞான சூரியனின் பிரகாசம் மற்றும் பிரபாவம் நாலாபுறமும் பரவுவதினால் இங்குவரை நடைமுறை நிரூபணம் வருமா? நிரூபணம் என்பது எது? குறைந்தது உங்கள் மூலமாக எந்த ஆத்மாக்கள் பிரபாவிக்கப் பட்டிருக்கிறார்களோ அவர்களின் செய்தியாவது வரட்டும். அவரே வர வேண்டாம், ஆனால் செய்தியாவது வரட்டும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கம் சென்று பிரபாவம் ஏற்படுத்தினீர்கள் என்றால் எத்தனை செய்திக் கடிதங்கள் வரும்? அந்த மாதிரி நிரூபணம் கொடுப்பீர்களா? அல்லது எப்படி பட்டி செய்து செல்கிறார்கள், கொஞ்ச காலம் பிரபாவசாலியாக இருக்கிறார்கள், பின்பு (உலகின் பிரபாவத்தில் வந்து விடுகிறார்கள், அந்த மாதிரி ஆகி விடுவீர்களா? தந்தையோ

எப்பொழுதும் நம்பிக்கை வைத்திருப்பவராகவே இருக்கிறார். இப்பொழுது ரிசல்ட்டைப் பார்ப்போம், அழியாத ரிசல்ட் எவ்வளவு இருக்கிறது மற்றும் எதுவரை ஆடாத அசையாதவர்களாக இருக்கிறார்கள் என்று பார்க்கலாம்.

வரதான பூமியில் என்னென்ன வரதானங்களை பிராப்தி செய்திருக்கிறீர்களோ அந்த பிராப்தி செய்த வரதானங்களினால் இப்பொழுது வரம் அளிக்கும் வள்ளலாகி வெளிப்பட வேண்டும். எந்தவொரு ஆத்மாவும் உறவு நெருக்கத்தில் வந்தால் மகாதானி மற்றும் மகாவரதானியின் நினைவில் இருந்து கொண்டே, ஒவ்வொரு ஆத்மாவிற்கும் ஏதாவது பிராப்தி அவசியம் செய்விக்க வேண்டும். எந்தவொரு ஆத்மாவும் வெறும் கையோடு செல்ல வேண்டாம். நீங்களோ மகாதானிகள் தான் இல்லையா, அவர்கள் அந்த தானத்தை பாதுகாப்பாக வைத்திருக்கிறார்களா அல்லது இல்லையா? என்பது அவர்களின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. நீங்களோ மகாதானியாகி தன்னுடைய காரியத்தை அந்த நன்மை பயக்கும் உள்உணர்வு மற்றும் பார்வையோடு செய்து கொண்டே இருங்கள். உலகத்திற்கு நன்மை செய்பவன், மகாதானி, வரதானி ஆவேன், என்று இதே சக்திசாலியான உள்உணர்வில் இருப்பதினால் ஆத்மாக்களை மாற்றம் செய்ய முடியும். இப்பொழுது உங்களுடைய உள்உணர்வை சக்திசாலியாக ஆக்குங்கள். நல்லது.

**வரதானம்: உயர்ந்த உள்உணர்வு மூலமாக இல்லறத்தை வளர்ச்சிக்கான சாதனமாக ஆக்கக்கூடிய எப்பொழுதும் சக்தி நிறைந்தவர் ஆகுக!**

இல்லறத்தில் முதலில் உள்உணர்வு மூலமாக தூய்மையானவராக மற்றும் தூய்மையற்றவராக ஆகிறீர்கள். ஒருவேளை உள்உணர்வை எப்பொழுதும் ஒரு தந்தையோடு ஈடுபடுத்தினீர்கள் என்றால், ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்று அந்த மாதிரி உயர்ந்த உள்உணர்வு இருக்கிறது என்றால் இல்லறம் வளர்ச்சிக்கான சாதனம் ஆகி விடும். உள்உணர்வு உயர்ந்ததாக மற்றும் மேலானதாக இருக்கிறது என்றால் சஞ்சலம் ஏற்பட முடியாது. அந்த மாதிரி உயர்ந்த உள்உணர்வு மூலமாக வளர்ச்சியை செய்து கொண்டே கதி, சத்கதியை சுலபமாக அடைந்து விடுவீர்கள். பின்பு அனைத்து புகார்களும் முடிவடைந்து விடும்.

**சுலோகன்: ஒருவேளை கனவில் கூட தூய்மை ஆட்டம் காண்கிறது என்றால் நிச்சயத்தின் அஸ்திவாரம் உறுதியாக இல்லை என்பதாகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.07.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இறுதி சேவைக்காக நடமாடும் யோகி ஆகுங்கள்!

எப்படி அரசாங்கத்தின் குப்த உளவாளிகள் எங்காவது ஏதாவது தவறான காரியம் நடக்கிறது என்றால் அதை சோதனை செய்கிறார்கள். புதுப்புது திட்டங்களை உருவாக்குகிறார்கள். அதே போல் நீங்கள் அனைவரும் பாண்டவ அரசாங்கத்தின் குப்த உளவாளிகள். ஆத்மாக்களை யார் ஏமாற்றத்தில் மாட்டி விடுவார்களோ, தவறான மார்க்கத்தில் நடத்து விக்கிறார்களோ, கலப்படம் செய்பவர்கள் மற்றும் கீழே தள்ளுவதற்கான காரணமாக இருக்கிறார்களோ அவர்களுக்காக புதுப்புது திட்டங்களை உருவாக்குகிறீர்களா? அந்த அரசாங்கம் எப்பொழுதும் புதுப்புது திட்டத்தை உருவாக்குகிறது தான் இல்லையா அதன் மூலம் கலப்படம் செய்பவர்கள் அவர்களுடைய பார்வையிலிருந்து தப்பவே முடியாது. இப்பொழுது நாலாபுறங்களிலும் சப்தத்தையோ பரப்பிவிட்டீர்கள் ஆனால் இந்த வித்வான், ஆச்சார்யர்கள் ஆகியோர் யார் யதார்த்த ஞானத்தை மாற்றி, யதார்த்தமற்ற முறையில் கொடுப்பதற்கு காரணமானார்களோ அவர்களின் பக்கம் கவனம் செல்கிறதா? ஒருவர் மூலமாகக் கூட அனேகர்களுக்கு சப்தம் சென்றடைய முடியும். அதற்கு யார் பொறுப்பாளராக முடியும்? சாதாரண ஜனங்களுக்கோ கூறிக் கொண்டே இருக்கிறீர்கள், அதிலிருந்து யார் ஆகுபவர்களாக இருப்பார்களோ அவர்கள் தங்களுடைய சக்திக்கேற்றபடி முயற்சி செய்து சென்று கொண்டிருக்கிறார்கள் ஆனால் எந்த சப்தம் பரவ வேண்டுமோ அது யார் மூலமாகப் பரவும். சக்திகளுக்கான இறுதி மகிமையாக என்ன இருக்கிறதோ அது இந்த சாதாரண ஜனங்களுக்காக கூறப்பட்ட மகிமையா? சக்திகளுக்கு சக்தியின் பிரத்யக்ஷம் இந்த சாதாரண ஜனங்கள் மூலமாக ஏற்படுமா? யார் நடைமுறை மனிதர்களாக இருக்கிறார்களோ அவர்கள் மூலமாக இந்த அளவு பரவ முடியாது. ஏனென்றால் இன்றைய நாட்களில் யார் யார் தலைவர்களாக ஆகிறார்களோ அவர்களின் தீயவற்றை ஜனங்கள் தெரிந்திருக்கிறார்கள்.

இன்றைய நாட்களில் பிரஜைகளின் மேல் பிரஜைகளின் ராஜ்யம் இல்லையா? எனவே தலைவர்களின் பேச்சிற்கு அந்த அளவு பிரபாவம் இல்லை. அப்படியானால் ஒருவர் மூலமாக அனேகர்கள் வரை செய்தி சென்றடைவதற்கு யார் பொறுப்பாளராக ஆவார்கள். இந்த குருக்களின் சங்கிலிகளிலோ அனைவரும் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். மனதில் என்ன தான் இருந்தாலும், அவருடைய சிஷ்யர்கள் மூட நம்பிக்கை காரணமாக ஆமாம், ஆமாம் என்று கூறுவதின் பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். தலைவர்களுக்குப் பின்னால் ஆம், ஆம் என்று சொல்பவர்கள் அல்ல. அப்படி சக்திகளின் மகிமையாக என்ன இருக்கிறதோ அது எப்பொழுது நடைமுறையில் வரப் போகிறது? மற்றும் அதற்காக இப்பொழுது நிலத்தை உருவாக்கவில்லையா? எப்படி குப்த உளவாளிகளாக யார் இருப்பார்களோ அவர்கள் என்ன செய்கிறார்கள்? கலப்படம் செய்பவர்களையும் முற்றுகை இடுகிறார்கள். கலப்படம் செய்பவர்கள் பெரிய மனிதர்களாக இருப்பார்கள். அதன் மூலம் அரசாங்கத்திற்கும் மிகுந்த பிராப்தி கிடைக்கிறது. சாதாரணமானவர்கள் பின்னால் செல்வதில்லை. எந்த முறையில் கலப்படத்தை வெளிப்படுத்தலாம் என்று அவர்களுடைய புதுப்புது திட்டங்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. அந்த மாதிரி உங்களுடைய புத்தி ஓடுகிறதா? அல்லது சகஜமாக பிரஜைகள் உருவாகிக் கொண்டே இருக்கிறார்கள் அல்லது அதிலேயே திருப்தியாக இருக்கிறீர்களா? பிரபாவம் ஏற்படுவதற்கான முக்கிய சாதனமாக என்ன இருக்கிறதோ அதை நடைமுறையில் செய்ய வேண்டும் தான் இல்லையா? அது எப்பொழுது நடக்கும்? எப்பொழுது முதலில் புத்தியில் திட்டங்கள் ஓடும், எனக்கு இன்று இதைச் செய்ய வேண்டும் என்று ஊக்கம் வரும், அப்படி இப்பொழுது அந்த எண்ணம் எழுகிறதா? அல்லது அந்த எண்ணம் கூட உள்ளடங்கி இருக்கிறதா? எப்படி சேவை நடந்து கொண்டே இருக்கிறது அதுவோ பிரஜைகளை உருவாக்குவதற்கான சாதனம் ஆகும் ஆனால் சப்தத்தை பரப்புவதற்கான சாதனம் அதன் மூலம் பிரத்யக்ஷம் ஏற்பட வேண்டும், அதை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். எப்பொழுது முகத்தை அந்த பக்கம் திருப்பிக் கொண்டவர்கள் நேரெதிரில் வருகிறார்களோ அப்பொழுது தான் பிரபாவம் இருக்கிறது. மற்றபடி முகத்தைத் திருப்பி வைத்துக் கொள்பவர்கள் நேரெதிரில் வந்தால் கூட அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. எனவே தந்தையையும் விட அதிகமாக சக்திகளுக்கு, குமாரிகளுக்கு மகிமை இருக்கிறது.

கன்னியாக்கள் என்றால் பிரம்மா குமாரிகள். இதற்கான அர்த்தம் அவர் குமாரி மட்டும் தான் ஆவார் என்பது அல்ல, பிரம்மா குமார் மற்றும் குமாரிகளோ அனைவரும் தான். கன்னியாக்கள் மூலமாக அம்பு எய்து வீழ்த்தினார்கள் (சிகண்டி) என்று புராணத்தில் வர்ணிக்கிறார்கள். தந்தை தானே அவர் நேரெதிரில் வரவில்லை. நேரெதிரில் சக்திகளை வைத்தார். அப்படி எப்பொழுது நடைமுறையில் சக்திசேனை பொறுப்பாளராக இருக்கிறார்கள் என்றால், சக்திகளின் விசேஷ காரியமாக என்ன வர்ணிக்கப்படுகிறதோ அது அவர்களைப் பற்றிய வர்ணனை தான்! அந்த ஊக்கம், உற்சாகம் இருக்கிறதா? அல்லது செமினார் (மாநாடு) செய்வதிலேயே குஷி அடைந்து விடுகிறீர்களா? இவை அனைத்துமே வரிசைக்கிரமமாக பிரஜைகளை உருவாக்குவதற்கான சாதனம் ஆகும். ஏதாவது தொடர்பில் வருகிறார்கள் மற்றும் பிரஜை ஆகி விடுகிறார்கள் ஆனால் இப்பொழுதோ இதையும் விட முன்னேறிச் செல்ல வேண்டும். இறுதி சேவையை நடைமுறையில் கொண்டு வருவதற்கு இப்பொழுதிலிருந்தே தயார் செய்யுங்கள். முதலிலோ எண்ணத்தை வையுங்கள், பிறகு அதன் திட்டத்தை உருவாக்குங்கள், பிறகு திட்டத்தை நடைமுறையில் கொண்டு வாருங்கள். அதற்கும் நேரமோ வேண்டும் தான் இல்லையா? தொடக்கத்தையோ இப்பொழுதிலிருந்தே செய்ய வேண்டியதாக இருக்கும். எப்படி தொடக்க காலத்தில் யாரெல்லாம் எங்களை கீழே தள்ளினார்களோ அவர்களுக்கும் செய்தி கொடுக்க வேண்டும் என்ற வேகம் இருந்தது. இடையில் பிரஜையின் விஸ்தாரத்தில் சென்று விட்டீர்கள் ஆனால் எது தொடக்கத்தில் இருந்ததோ அது இறுதியிலும் வர வேண்டும். எப்படி மாயாவின் சங்கிலியிலிருந்து தன்னை விடுவிப்பதற்காக கடுமையாக உழைக்கிறீர்கள். அப்படி இதுவும் மிகப் பெரிய சங்கிலி ஆகும். மேலும் இப்பொழுதோ நாளாக நாளாக அந்த சங்கிலிகள் மோகினி ரூபத்தை எடுத்துக் கொண்டு தன்னுடைய பக்கம் ஈர்த்துக் கொண்டே வருகிறது மேலும் அற்ப கால புத்தி மூலமாக பிராப்தி செய்வித்துக் கொண்டே தன்னுடைய சங்கிலிகளில் மாட்ட வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அனைவரையும் எப்பொழுது விடுவிப்பீர்கள். இறுதி பிரபாவம் ஏற்படுத்துவதற்கான சாதனம் இது தான். இதைத் தான் எறும்பு யானையையும் கீழே விழ வைத்து விடுகிறது என்ற வர்ணனை இருக்கிறது. அதிசயமான காரியங்கள் நடந்தால் தான் அதை மகிமை மற்றும் வர்ணனை செய்வார்கள். சாதாரண மனிதர்களுக்கு கூறிக் கொண்டே இருக்கிறீர்கள்,

அது என்ன பெரிய விஷயம். இதையோ கலப்படம் செய்பவர்களும் செய்கிறார்கள். பொய்யான மனிதர்களும் தங்கள் பக்கம் ஈர்த்து விடுகிறார்கள் ஆனால் யார் தன்னை மகாரதி என்று நினைக்கிறாரோ அவர் அவர்களுடைய வெற்றிடத்தை திறங்கள். அவர்களைத் தலைவணங்க வையுங்கள். அப்பொழுதுதான் அதிசயம் எனப்படும். அந்த மாதிரி அதிசயத்தைக் காண்பிப்பதற்காக கொஞ்சம் புத்தி வேலை செய்கிறதா? அசத்தியத்தை அசத்தியம் என்று நிரூபித்தால் தானே சத்தியத்தின் வெற்றி ஏற்படும். அப்பொழுது தான் வெற்றி முழக்கமும் இருக்கும். பிறகு இந்தளவு கடுமையாக உழைக்க வேண்டியதன் அவசியம் இருக்காது. இதற்காக திட்டங்கள் வேண்டும், செய்யும் முறைகள் வேண்டும் மேலும் நான் குப்த உளவாளி, இவருடைய ஒன்றுமற்ற வெறுமையை நிரூபிப்பது தான் என்னுடைய வேலை, நான் தான் இதற்கு பொறுப்பானவன் என்ற போதையும் மனதில் இருக்க வேண்டும். மனதிலிருந்து இந்த ஊக்கம் உற்சாகம் வர வேண்டும் அப்பொழுது தான் இந்தக் காரியம் நடக்க முடியும். இது நிகழ்ச்சிகளின் மூலம் நடக்காது. நீங்கள் யாருக்காவது இதைச் செய்யுங்கள் என்று நிகழ்ச்சி கொடுத்தீர்கள் என்றால் அவரால் செய்ய முடியாது. அவரில் எதிர்நோக்குவதற்கான அந்த அளவு சக்தி வராது. தன்னுடைய மனதிலிருந்து நான் இதைச் செய்ய வேண்டும் என்ற உத்வேகம் வந்தது என்றால் பின்பு அது நடைமுறையில் நடக்க முடியும். எண்ணத்தை உருவாக்குவதினால் பின்பு நடைமுறையில் வந்து விடும். இப்பொழுது அனைவரின் பார்வை ஏதாவது அதிசயத்தை பார்க்க வேண்டும் என்பதின் பக்கம் இருக்கிறது. மேலும் சக்திகளைத் தவிர இந்தக் காரியத்தைப் பாண்டவர்கள் மற்றும் வேறு யாரும் செய்ய முடியாது. இதற்கான பொறுப்பாளராக சக்திகள் ஆக வேண்டும். எப்படி தொடக்க காலத்தில் ரம்தா யோகி மாதிரி எங்கே செல்ல வேண்டும் என்ற எண்ணம் வந்தது, வேகத்தில் செல்லத் தொடங்கினீர்கள் மேலும் சக்திக்கு ஏற்றபடி வெற்றியும் அடைந்திருந்தீர்கள். அதே போலவே இந்த விஷயத்திற்காகவும் ரம்தா யோகி ஆக வேண்டும். பிரஜையை உருவாக்குவதில் மிகவும் பிஸியாகி விட்டீர்கள் மேலும் படைக்கப்பட்ட படைப்புகளை பாலனை செய்வதிலேயே நேரம் கழிந்து விடுகிறது. நல்லது.

இறுதி பிரபாவம் ஏற்படுத்துவதற்கான சாதனம் இது தான். இதைத் தான் எறும்பு யானையையும் கீழே விழ வைத்து விடுகிறது என்ற வர்ணனை இருக்கிறது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.07.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுத்தமான மற்றும் ஆத்மீக பலம் உள்ள ஆத்மா தான் ஆகர்ஷண மூர்த்தி ஆக இருப்பார்!

தன்னை இந்த டிராமாவிற்குள் (வாழ்க்கை நாடகத்திற்குள்) உயர்ந்த கதாநாயக நடிகன் மற்றும் முக்கிய நடிகன் என்று நினைக்கிறீர்களா? முக்கிய நடிகரின் பக்கம் அனைவரின் கவனம் செல்லும். அப்படி ஒவ்வொரு விநாடியின் செயலையும் தன்னை முக்கிய நடிகர் என்று புரிந்து செய்கிறீர்களா? யார் பிரபலமான நடிகராக இருப்பாரோ அவரில் மூன்று முக்கிய விஷயங்கள் இருக்கும். அவை யாவை? ஒன்றோ அவர் ஆக்டிவ் (சுறுசுறுப்பாக) ஆக இருப்பார், இரண்டாவது அக்யூரேட் (மிகச்சரியாக) ஆக இருப்பார், மூன்றாவது அட்ராக்டிவ் ஆக (ஈப்பவராக) இருப்பார். இந்த மூன்று விஷயங்களும் பிரபலமான நடிகரில் அவசியம் இருக்கும். அந்த மாதிரி தன்னை பிரபலமான மற்றும் முக்கிய நடிகன் என்று நினைக்கிறீர்களா? எந்த விஷயத்தில் அட்ராக்ட் (கவருவது) செய்வீர்கள்? ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு நடத்தைலும் ஆன்மீகத்தின் அட்ராக்ஷன் (கவர்ச்சி) இருக்கட்டும், எப்படி யாராவது உடலால் அழகாக இருக்கிறார் என்றால் அவரும் தன் பக்கம் அட்ராக்ட் செய்வார் தான் இல்லையா? அதே போலவே எந்த ஆத்மா சுத்தமானதாக, ஆத்மீக பலம் உள்ளதாக இருக்கிறதோ அவரும் தன் பக்கம் கவர்ந்திழுப்பார். எப்படி மகாத்மாக்கள் ஆகியோர்களும் துவாபர்யுகத்தின் தொடக்கத்தில் சதோபிரதான நிலையுள்ளவர்களாக இருந்தினால் அவர்களிலும் ஆன்மீக கவர்ச்சி இருந்தது இல்லையா? அவர்கள் மற்றவர்களையும் தன் பக்கம் கவர்ச்சி செய்து இந்த உலகத்திலிருந்து அற்ப காலத்திற்காக வைராக்கியத்தை உண்டாக்கினார்கள் தான் இல்லையா? தலைகீழான ஞானம் உள்ளவர்களிலும் இவ்வளவு கவர்ச்சி இருந்தது என்றால், யார் யதார்த்த மற்றும் உயர்ந்த ஞான சொரூபமாக இருக்கிறார்களோ அவர்களிலும்

ஆன்மீக கவர்ச்சி மற்றும் அட்ராக்ஷன் இருக்கும். உடல் அழகு அருகில் மற்றும் எதிரில் வருவதினால் கவர்ச்சி செய்யும், ஆன்மீகக் கவர்ச்சி தூரத்திலிருந்தாலும் எந்த ஆத்மாவையும் தன் பக்கம் கவர்ச்சி செய்யும். இந்த அளவு கவர்ச்சி அதாவது ஆன்மீக நிலை தன்னுள் அனுபவம் செய்கிறீர்களா? அதே போலவே அக்யூரேட் (மிகச்சரியாக) ஆகவும் இருக்க வேண்டும்? எதில் அக்யூரேட் ஆக இருக்க வேண்டும். மனதில் எழும் எண்ணங்களுக்காகவும் என்ன ஸ்ரீமத் கிடைத்திருக்கிறதோ, வார்த்தைகளுக்காகவும் என்ன ஸ்ரீமத் கிடைத்திருக் கிறதோ மற்றும் காரியங்களுக்காகவும் என்ன ஸ்ரீமத் கிடைத்திருக்கிறதோ இந்த அனைத்து விஷயங்களிலும் அக்யூரேட் ஆக இருக்க வேண்டும். மனதில் கூட அக்யூரேட் இல்லாமல் இருக்க வேண்டாம். என்ன நியமம், மரியாதைகள், டைரக்ஷன் இருக்கிறதோ அந்த அனைத்திலும் அக்யூரேட் மற்றும் ஆக்டிவ் ஆக இருக்க வேண்டும். யார் ஆக்டிவ் ஆக இருக்கிறாரோ அவர் எந்த நேரம் எப்படி தன்னை ஆக்கிக் கொள்ள. நடத்திக் கொள்ள விரும்புகிறாரோ அப்படி நடத்திக் கொள்ள முடியும் மேலும் அதே மாதிரியான ரூபத்தை தாரணை செய்ய முடியும். அப்படி யார் முக்கியமான கதாபாத்திரம் உள்ளவர்களோ அவர்களில் இந்த மூன்று விசேஷங்களுமே நிரம்பியதாக இருக்கும். இவற்றிலிருந்து எந்த விசேஷம் எத்தனை சதவிகிதத்தில் குறைவாக இருக்கிறது என்று இதில் தான் பார்க்க வேண்டும். ஸ்டேஜின் (நிலையின்) கூடவே பெர்சென்டேஜையும் (சதவிகிதத்தையும்) பார்க்க வேண்டும். ஆன்மீக நிலை இருக்கிறது. கவர்ந்திழுக்க முடியும், ஆனால் எத்தனை சதவிகிதம் இருக்க வேண்டுமோ அது இருக்கிறதா? ஒருவேளை சதவிகிதத்தில் குறை இருக்கிறது என்றால் இதை சம்பூர்ணம் என்று கூற மாட்டோம் இல்லையா. தேர்ச்சியோ பெற்று விட்டீர்கள் இருந்தாலும் மதிப்பெண்ணின் ஆதாரத்தில் வரிசை எண் (ரேங்க்) உருவாகிறது இல்லையா. மூன்றாவது டிவிசனில் வருபவரையும் தேர்ச்சி பெற்றவர் என்று தான் கூறுவோம் ஆனால் மூன்றாம் நிலை எங்கே, முதல் நிலை எங்கே? வித்தியாசம் இருக்கிறது இல்லையா. எனவே இப்பொழுது சதவிகிதத்தை சோதனை செய்ய வேண்டும். ஸ்டேஜ் என்பது இப்பொழுது இயற்கையான விஷயமாக ஆகி விட்டது. ஏனென்றால் நடைமுறையில் நடப்பது ஸ்டேஜில் (மேடையில்) தான் இருக்கிறது இல்லையா? இப்பொழுது சதவிகிதத்தின் ஆதாரத்தில் தான் எண் உருவாக வேண்டும்.

# 1972 அவ்யக்த முரளி

இன்று மிகப் பெரிய சபையாக ஆகி விட்டது. எப்படி தந்தைக்கும் சமமான குழந்தைகள் பிரியமானவர்களாக இருக்கிறார்கள், நீங்களும் உங்களுக்குள் ஒரே சமமாக சந்திக்கிறீர்கள் என்றால் இந்த நட்சத்திரங்களின் சந்திப்பு கூட மிக நன்றாக இருக்கிறது இல்லையா? சங்கமயுகத்து மேளாவோ (சந்திப்பு) இருக்கவே இருக்கிறது ஆனால் அந்த மேளாவிலும் இது மேளாவாகும். மேளாவுக்குள் விசேஷமாக எந்த மேளா நடக்கிறதோ அது அதிகப் பிரியமானதாக இருக்கிறது. பெரிய பெரிய மேளாக்களிலும் ஒரு விசேஷ ஸ்தானம் உருவாக்கப்பட்டிருக்கும்; அங்கு அனைவரின் சந்திப்பு நடக்கும். சங்கமயுகம் எல்லைக்கப்பாற்பட்ட மேளாவாக இருக்கவே இருக்கிறது; ஆனால் அதற்குள்ளேயும் இது ஸ்தூலமான விசேஷ ஸ்தானமாகும் எங்கு சமமான ஆத்மாக்கள் அவர்களுக்குள் சந்தித்துக் கொள்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனக்குச் சமமான மற்றும் நெருக்கமான ஆத்மாக்களுடன் சந்திப்பது, நெருக்கத்தில் வருவது மிகவும் பிடித்திருக்கிறது. விசேஷ ஆத்மாக்களுடன் சந்திப்பை ஏற்படுத்துவதற்காகவும் தன்னையும் விசேஷமானவராக ஆக்க வேண்டியதாக இருக்கும். சிலர் விசேஷமானவர்களாகவும், சிலர் சாதாரணமானவர்களாகவும் இருந்தால் அதை ஒன்றும் மேளா என்று கூற முடியாது. தந்தைக்குச் சமமாக தெய்விக தாரணைகளின் விசேஷத்தை தாரணை செய்ய வேண்டும். தந்தையிடம் இருந்து என்ன பாலனை அடைந்திருக்கிறீர்களோ அதன் நிரூபணம் கொடுக்க வேண்டும். தந்தை எதற்காக பாலனை செய்தார்? விசேஷங்களை நிரப்புவதற்காக. லட்சியம் இருக்கிறது. மேலும் லட்சணம் வரவில்லை என்றால் இதை என்னவென்று கூறுவது? அதிகப்படியான புத்திசாலி. ஒன்று புத்திசாலியாக இருப்பது, இன்னொன்று எல்லைக்கப்பாற்பட்ட புத்திசாலி எல்லைக்கப்பாற்பட்டதில் எந்தவொரு எல்லையும் இருப்பதில்லை. நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 18.07.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பலஹீனங்களின் நிறைவு விழா கொண்டாடுபவர்கள்தான் தீவிர முயற்சியாளர்கள்!

தன்னை எவரெடி (எப்பொழுதும் தயார் நிலையில் இருப்பவர்) என்று நினைக்கிறீர்களா? எவரெடியாக இருப்பாரோ, அவர்களின் நடைமுறை சொரூபம் எவர் ஹேப்பியாக (எப்பொழுதும் சந்தோஷமாக) யார் இருக்கும். எந்தவொரு சூழ்நிலை என்ற சோதனையானாலும், இயற்கையின் ஆபத்துக்கள் மூலமாக வந்திருக்கும் சோதனையானாலும், ஏதாவது உடல் சம்மந்தப்பட்ட கர்ம வினையை அனுபவிக்கும் (நோய்) ரூபத்தில் வந்த சோதனையாக இருந்தாலும், அனைத்து விதமான சோதனைகளிலும் முழுமையாக தேர்ச்சியும் மற்றும் நல்ல மதிப்பெண்களுடனும் தேர்ச்சி பெறுவார்கள். தன்னை அந்த மாதிரியான எவரெடியானவராக நினைக்கிறீர்களா? மேலும் எவரெடியின் அடையாளமான எவர் ஹேப்பி, அதை அனுபவம் செய்கிறீர்களா? எந்த நேரமும் எந்த சோதனை வந்தாலும் தயாராக இருக்கிறேன் என்று தன்னுடைய ஏற்பாட்டை அந்த மாதிரி செய்திருக்கிறீர்களா? அந்த மாதிரி எவரெடியானவராக இருக்கிறீர்களா? சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்கள் மூலமாக மற்ற ஆத்மாக்கள் யார் வரிசைக்கிரமமாக ஆஸ்தியை அடைபவர்களாக இருக்கிறார்களோ அவர்களைப் பொறுத்தவரை இன்னும் கொஞ்சம் காலம் மீதம் இருக்கிறது, நேரத்தின் வேகம் மிக விரைவாக இருக்கிறது. எப்படி நேரம் யாருக்காகவும் நிற்பதில்லை, சென்று கொண்டே இருக்கிறது. அதே போல் தானும் ஏதாவது மாயாவின் தடையில் நின்று விடுவது இல்லை தானே என்று தன்னைத் தானே கேளுங்கள். எந்தவொரு மாயாவின் சூட்சுமம் மற்றும் ஸ்தூல தடை வருகிறது மற்றும் மாயாவின் தாக்குதல் இருக்கிறது என்றால், ஒரு நொடியில் தன்னுடைய உயர்ந்த மரியாதையில் நிலைத்திருந்து விட்டீர்கள் என்றால், மாயா எதிரியை அழிப்பதற்கான இலக்கு சரியாக

இருக்கும், ஒருவேளை சிரேஷ்ட மரியாதை இல்லை என்றால் இலக்கு சரியில்லாத காரணத்தினால் துன்பம் மற்றும் துயரமானவர்களாக ஆகி விடுவீர்கள். இப்பொழுது துயரம் ஏற்படுகிறதா? ஒருவேளை இதுவரையிலும் ஏதேனும் ரூபத்தில் துயரம் இருக்கிறது என்றால் மற்ற ஆத்மாக்களின் துயரங்களை எப்படி அகற்றுவீர்கள். துயரங்களை அகற்றுபவர்களா அல்லது தானும் துயரமுள்ளவர்களா? என்னென்ன பட்டி வைக்கிறீர்களோ அதன் நிறைவு விழா மற்றும் பரிவர்த்தன விழா கொண்டாடுகிறீர்கள். அதே போலவே இந்த எல்லைக்கப்பாற்பட்ட பட்டி நடந்து கொண்டிருக்கிறது; அதில் பலஹீனங்களின் நிறைவு விழா மற்றும் பரிவர்த்தனை விழாவை எப்பொழுது கொண்டாடுவீர்கள்? இதற்கு ஏதாவது நாள் குறித்திருக்கிறீர்களா? (டிராமா செய்விக்கும்) டிராமாவோ அனைத்து ஆத்மாக்களின் முடிவு விழாவை பழைய உலகத்திலிருந்து கண்டிப்பாக செய்விக்கும் ஆனால் தீவிர முயற்சி செய்யும் உயர்ந்த ஆத்மாக்கள் நீங்களோ முதலிலேயே பலஹீனங்களின் நிறைவு விழாவை கொண்டாட வேண்டுமேயன்றி மற்ற ஆத்மாக்களுடன் நீங்களும் கடைசியில் கொண்டாட வேண்டாம். எப்படி மற்ற செமினார் (கலந்துரையாடல்) ஆகியவைகளை செய்கிறீர்கள் என்றால் அதன் தேதியைக் நிர்ணயம் செய்கிறீர்கள் அதன் பிரகாரம் தயார் செய்கிறீர்கள் மேலும் அந்தக் காரியத்தை வெற்றிகரமாக நடத்தி நிறைவு செய்கிறீர்கள். அதே போல் இந்த பலஹீனங்களை அகற்றும் செமினாருக்கான தேதியை நிர்ணயம் செய்ய முடியாதா? இந்த செமினார் நடப்பது சம்பவமா? எப்படி ஏதாவது யாகத்தை வளர்க்கிறார்கள் என்றால் இடையிடையே ஆகுதியை போட்டுக் கொண்டே இருப்பார்கள் ஆனால் கடைசியில் அனைவரும் சேர்ந்து சம்பூர்ண ஆகுதி போடுவார்கள். அதே போல் நீங்கள் அனைவரும் உங்களுக்குள் ஒன்றாகச் சேர்ந்து சம்பூர்ண ஆகுதி போட முடியுமா? அனைத்து பலஹீனங்களையும் சுவாஹா (அர்ப்பணம்) செய்ய முடியாதா? எதுவரை நீங்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து சம்பூர்ண ஆகுதி போடவில்லையோ அதுவரை முழு உலகின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் அனைத்து ஆத்மாக்களின் உள்உணர்வு மேலும் வைப்ரேஷன் (எண்ண அதிர்வலைகள்) எப்படி மாறும்? மேலும் நீங்கள் அனைவரும் உலக மாற்றத்தின் மற்றும் புது உலக படைப்பின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள், அது எப்படி நிறைவேறும்? எனவே தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றுவதற்காக மற்றும் தன்னுடைய காரியத்தை முழுமையாக முடிப்பதற்காக சம்பூர்ண ஆகுதி போடவே வேண்டியதாக

இருக்கும். அந்த மாதிரி தன்னை எவரெடியாக ஆக்குவதற்காக தன்னுடைய பலஹீனங்களிலிருந்து சுலபமாகவே விடுபடும் மாதிரியான எந்த யுக்தியை கடைபிடிக்க வேண்டும்? யுக்திகளோ அதிகமாக இருக்கிறது; இருந்தாலும் இன்று வேறு யுக்தியைக் கூறுகிறோம்.

யாருடைய நினைவுச்சின்னம் அதிகமாக உருவாகிறது? மேலும் அனேக விதமான நினைவுச் சின்னம் யாருடையது இருக்கிறது? தந்தையினுடையதா அல்லது குழந்தைகளினுடையதா? தந்தையின் நினைவுச் சின்னமாக ஒரே ஒரு ரூபம் தான் இருக்கிறது ஆனால் உங்களுடையது அதாவது உயர்ந்த ஆத்மாக்களின் நினைவுச் சின்னம் அனேக ரூபத்தில் மற்றும் பழக்க வழக்கத்தின் அனுசாரம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய விதவிதமான காரியத்தின் நினைவுச் சின்னமும் உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி தந்தையை விட அதிகமாக அனேக விதமான நினைவுச்சின்னங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன, அது எப்படி? உங்களுடைய நடைமுறை உயர்ந்த காரியத்தின், உயர்ந்த நிலையின் நினைவுச் சின்னம் தான் உருவாகியிருக்கின்றன இல்லையா. அப்படி எந்தவொரு எண்ணம், காரியம் செய்கிறீர்கள் அல்லது வார்த்தைகள் பேசுகிறீர்கள் என்றால் ஒவ்வொரு வார்த்தையும் மற்றும் காரியமும் நம்முடைய நினைவுச் சின்னம் ஆகும் மாதிரி இருக்க வேண்டும் என்பதை சோதனை செய்யுங்கள். எவை (பாபாவின்) நினைவில் இருந்து செய்யப்பட்டவையாக இருக்குமோ அந்தக் காரியம் மற்றும் வார்த்தைகள் தான் நினைவுச் சின்னமாக ஆகிறது. எப்படி ஏதாவது ஒரு பொருள் புதைக்கப்படுகிறது, எப்படி கொடிக்கம்பம் நடப்படுகிறது அதாவது அஸ்திவாரம் போடுகிறீர்கள் என்றால் இந்தப் பொருளை நன்றாக புதைத்து விடுங்கள் என்று கூறுகிறீர்கள் இல்லையா? அதே போல் நினைவிலிருந்து செய்த காரியம் நிரந்தரமாக நினைவுச் சின்னமாக ஆகின்றன. எப்படி ஏதாவது ஒரு பொருள் உலகின் எதிரில் வைக்க வேண்டியதாக இருந்தால் எவ்வளவு அழகான மற்றும் தெளிவானதாக உருவாக்கப்படுகிறது, சாதாரண பொருளை யார் எதிரிலேயும் வைக்க மாட்டார்கள். ஏதாவது விசேஷம் இருப்பதனால் தான் யார் எதிரிலாவது வைக்கப்படுகிறது. உங்களுடைய இப்பொழுதைய ஒவ்வொரு காரியம் மற்றும் ஒவ்வொரு வார்த்தை உலகின் எதிரில் நினைவுச்சின்ன ரூபத்தில் வரக்கூடியவை. அந்த மாதிரி கவனம்

வைத்துக் கொண்டே மற்றும் நினைவு வைத்துக் கொண்டே ஒவ்வொரு காரியம் மற்றும் வார்த்தைகளைப் பேசுங்கள். அவை நினைவுச்சின்னமாக ஆவதற்கான தகுதி உடையவைகளாக இருக்கட்டும். ஒருவேளை நினைவுச்சின்னமாக ஆவதற்கான தகுதி இல்லை என்றால் அந்தக் காரியத்தையும் செய்யாதீர்கள். என்னென்ன வீணான எண்ணம் மற்றும் வீணான வார்த்தை பேசுகிறீர்களோ மேலும் சாதாரண காரியம் செய்கிறீர்களோ அவற்றின் நினைவுச் சின்னம் உருவாவதில்லை என்ற இந்த நினைவை எப்பொழுதும் வைத்துக் கொள்ளுங்கள். நினைவுச் சின்னமாக ஆவதற்காக நினைவிலிருந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள். எப்படி சாகார பாபா ஒவ்வொரு காரியத்தையும் நினைவிலிருந்து கொண்டு செய்தார் என்பதைப் பார்த்தீர்கள். எனவே அந்தக் காரியம் இன்று உங்கள் அனைவரின் உள்ளத்தில் நினைவுச் சின்னமாக ஆகி விட்டது இல்லையா. அதே போலவே தன்னுடைய காரியத்தையும் உலகின் எதிரில் நினைவுச் சின்னமாக ஆக்குங்கள். இது சுலபம் தான் இல்லையா. இந்த அனைத்து விதமான நினைவுச்சின்னங்களும் என்னுடையது தான் என்ற நிச்சயம் இருக்கிறது என்றால், அனேக தடவையாக செய்த உயர்ந்த காரியம் மற்றும் நினைவுச் சின்ன சொரூபத்தை இப்பொழுது மீண்டும் செய்ய வேண்டும். அது கடினமாக இருக்குமா என்ன? ஒவ்வொரு கல்பத்திலும் செய்ததை மீண்டும் திரும்பச் செய்ய வேண்டும். அப்படி மாஸ்டர் திரிகாலதரிசியாகி தன்னுடைய சென்ற கல்பத்தை எதிரில் வைத்து மீண்டும் அதை ரிபீட் மட்டும் செய்யுங்கள். இந்த நினைவின் முயற்சியில் எப்பொழுதும் இருந்தே வந்திருக்கிறீர்கள் என்றால் இப்பொழுது என்ன கடினம்? இதுவரையிலும் இந்த நினைவில் மாயா பூட்டு போடுகிறதா என்ன? பூட்டு போடப்பட்டு விடுகிறது என்றால் என்னவாக்கி விடுகிறது? பாதுகாப்பற்றவராக. அனைவரின் பூட்டை திறப்பவர் கூட பாதுகாப்பற்றவராக ஆகி விடுகிறார். இந்த நினைவில் ஏன் பூட்டு போடப்படுகிறது? தன்னுடைய அதிர்ஷ்டத்தை மறந்து விடுகிறீர்கள் என்றால் பூட்டு போடப்பட்டு விடுகிறது. ஒருவேளை அதிர்ஷ்டத்தை பார்த்தீர்கள் என்றால் பூட்டு போட முடியாது. அப்படிப்பட்ட பூட்டின் சாவி எதுவாகிறது? தன்னைத் தானே அதிர்ஷ்டசாலி என்று புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் லவ்லியாகவும் இருக்கிறீர்கள், லக்கியாகவும் இருக்கிறீர்கள். ஒருவேளை அதிர்ஷ்டத்தை மறந்து அன்பானவராக மட்டும் ஆனீர்கள் என்றாலும் அரைகுறையாக இருந்து விடுகிறீர்கள்.

லவ்லியாகவும் இருக்கிறேன் மற்றும் லக்கியாகவும் இருக்கிறேன் இந்த இரண்டின் நினைவும் இருப்பதினால் மாயாவின் பூட்டு போடப்படாது. எனவே தன்னுடைய கல்பத்திற்கு முந்தைய நினைவுச்சின்னங்களை மீண்டும் நினைவிலிருந்து கொண்டு ரிபீட் செய்யுங்கள். இப்பொழுது கூட பாருங்கள் ஒருவேளை ஏதாவது நினைவுச் சின்னத்தை எப்படி உருவாக்க வேண்டுமோ அப்படி உருவாக்கவில்லை என்றால் அந்த மாதிரி நினைவுச் சின்னத்தைப் பார்த்து இது எப்படி செய்யப்பட வேண்டுமோ அப்படி செய்யப்பட வில்லை என்று நினைவில் வரும். தேவிகள் மற்றும் சக்திகளின் சிலைகள் யுக்தியுக்தாக உருவாக்கப்படவில்லை என்றால் பார்த்தவுடன் இது சரியில்லை என்பது எண்ணம் வரும். அதே போலவே தன்னுடைய காரியங்களைப் பாருங்கள், தன்னுடைய ஒவ்வொரு நேரத்தின் ரூபம் மற்றும் ஆன்மீக சக்தியைப் பாருங்கள். இந்த நேரத்து என்னுடைய ரூபம் மற்றும் ஆன்மீக சக்தியின் நினைவுச்சின்னம் என்னவாக உருவாகும் என்று பாருங்கள். சரியான நினைவுச்சின்னமாக உருவாகுமா? எப்பொழுது யுக்தியுக்தான நினைவுச்சின்னத்தின் சிலை இருக்கிறது என்றால் அந்த சிலைக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது. அதே போல் தன்னுடைய ஒவ்வொரு நேரத்தின் நடவடிக்கையின் மதிப்பு இருக்கிறதா என்று பாருங்கள். ஒருவேளை இல்லை என்றால் நினைவுச்சின்னமான சிலையும் மதிப்புள்ளதாக ஆக முடியாது. புரிந்ததா? உங்களுடைய ஒவ்வொரு எண்ணமும் சரித்திர ரூபத்தில் நினைவுச்சின்னமாக ஆகும் என்ற அந்த மாதிரியான நேரம் அருகில் வந்து விட்டது, உங்களுடைய ஒவ்வொரு வார்த்தை அனைத்து ஆத்மாக்களின் வாயிலிருந்தும் மகிமையாக பேசப்படும். அப்படி தன்னை அந்த மாதிரியான பூஜைக்குரிய மற்றும் மகிமைக்குத் தகுதியானவர் என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு காரியமும் செய்யுங்கள். நல்லது.

ஒவ்வொரு காரியத்தையும் நினைவில் இருந்து கொண்டு எப்பொழுதும் நினைவுச்சின்னத்தை உருவாக்கக்கூடிய லவ்லி மற்றும் லக்கி நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: அனைத்து ஆத்மாக்களின் மேல் அன்பின் ராஜ்யம் செய்யக்கூடிய உலக ராஜ்ய அதிகாரி ஆகுக!**

எந்தக் குழந்தைகள் தற்சமயம் அனைத்து ஆத்மாக்களின் உள்ளத்தில் அன்பின் ராஜ்யம் செய்கிறார்களோ அவர்கள் தான் எதிர்காலத்தில் உலக ராஜ்யத்தின் அதிகாரத்தை அடைகிறார்கள். இப்பொழுது யார் மேலேயும் ஆணையிடாதீர்கள். இப்பொழுதே உலக மகாராஜன் ஆக வேண்டாம், இப்பொழுது உலக சேவாதாரி ஆக வேண்டும், அன்பு கொடுக்க வேண்டும். தன்னுடைய எதிர்காலத்து கணக்கில் அன்பு எவ்வளவு சேமிப்பாகியிருக்கிறது என்று பார்க்க வேண்டும். உலக மகாராஜன் ஆவதற்காக ஞானம் கொடுப்பவராக மட்டும் ஆக வேண்டாம்; அதற்கு அனைவருக்கும் அன்பு அதாவது சகயோகம் கொடுங்கள்.

**ஈலோகன்: எப்பொழுதாவது களைப்புணர்வு ஏற்பட்டால் என்றால் குஷியில் நடனம் ஆடுங்கள். இதனால் மன நிலை மாடிறி நல்லதாக (மூட் சேஞ்ச்) ஆகி விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 19.07.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கூட்டாக இருப்பதின் (குழுவின்) மகத்துவம் மற்றும் கூட்டுக்குழுவின் மூலம் சான்றிதழ்!

தன்னை முத்து மற்றும் மணி என்று நினைக்கிறீர்களா? முத்து மற்றும் மணியின் மதிப்பு எதில் இருக்கிறது? மணி மற்றும் முத்து மாலையிலிருந்து தனியாகி விட்டது என்றால் அதனுடைய மதிப்பு ஏன் குறைந்து விடுகிறது? மாலையில் உருளுவதினால் அதனுடைய மதிப்பு இருக்கிறது. தனியாக ஆவதினால் ஏன் குறைகிறது? காரணம் என்ன? சங்கடனில் (குழுவில்) இருக்கும் காரணத்தினால் அந்த முத்து மற்றும் மணி சக்திசாலி ஆகி விடுகிறது. ஒன்றுடன் இன்னுமொரு ஒன்று சேருவதால் கூட அந்த இரண்டையும் 11-என்று கூறப்படுகிறது. ஒன்றை ஒன்று என்று மட்டும் தான் கூறுவார்கள். இரண்டு ஒன்று சேர்ந்து 11-ஆகி விடுகிறது. அப்படி 1-எங்கே இருக்கிறது மற்றும் 11-எங்கே இருக்கிறது, இந்த அளவு அதனுடைய மதிப்பு அதிகரித்து விடுகிறது. இரண்டிற்கு பதிலாக 11-என்று கூறப்படுகிறது. சங்கடனின் (கூட்டாக இருப்பதின்) சக்தியை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக அந்த மாதிரி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. நீங்கள் உங்களை எந்த விதமான முத்து என்று நினைக்கிறீர்கள்? மாலையின் முத்தாக நினைக்கிறீர்களா அல்லது தனியாக இருக்கும் முத்தாக இருக்கிறீர்களா? தன்னுடைய மதிப்பை பார்த்துக் கொண்டே, தன்னுடைய சக்தியைப் பார்த்துக் கொண்டே நான் மாலையின் மணியாக இருக்கிறேன் என்ற இந்த அனுபவம் செய்கிறீர்களா? ஒவ்வொருவரையும் அந்த மாதிரி சங்கடன் ரூபத்தில் உருண்டு கொண்டிருக்கும் மதிப்புள்ள முத்தாக நினைக்கிறீர்களா? மற்றவர்களும் உங்களை நினைக்கிறார்களா அல்லது நீங்கள் உங்களை மட்டும் நினைக்கிறீர்களா? எப்படி ஏதாவது விசேஷக் காரியம் செய்கிறார் மற்றும் ஏதாவது ஒரு விதத்தில் வெற்றி அடைந்தவராகி வருகிறார் என்றால் அவருக்கு பதக்கம் கிடைக்கிறது

இல்லையா? அதே போல் இதுவரை என்ன முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள் அதற்கான சான்றிதழை நடைமுறையில் பெறுவதற்காகத் தான் இடையிடையே இந்த கூட்டுக்குழு ஏற்படுகிறது. அப்படி இந்த குழுவில் ஒவ்வொருவரும் ஒற்றுமையான ரூபத்தில் செல்வதற்காக, ஒற்றுமை சக்தியின் மதிப்பிற்கான பதக்கத்தைப் பெற்றிருக்கிறீர்களா? பல்கலைக்கழகத்தில் வந்திருக்கிறீர்கள் இல்லையா? அப்படியானால் இதுவரை செய்த முயற்சிக்காக மற்றும் ஈஸ்வரிய சேவைக்கான சான்றிதழையோ பெற வேண்டும் தான் இல்லையா? அனைவரும் ஒவ்வொருவர் மேல் எவ்வளவு திருப்தியாக இருக்கிறார்கள் மற்றும் ஒவ்வொருவரின் நெருக்கத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள், என்பதற்கான சான்றிதழைப் பெற வேண்டியதாக இருக்கிறது. ஒன்று தன்னுடைய குழுவில் மற்றும் நெருக்கத்தில் சகயோகம் கொடுப்பது, மேலும் அனைவரின் அன்பிற்குரியவராக இருப்பதற்கான பதக்கம் மற்றும் வெகுமதி, இன்னொன்று ஈஸ்வரிய சேவையில் தன்னுடைய முயற்சியினால் அதிகத்திலும் அதிகம் பிரத்யக்ஷம் செய்வது - இதற்கான வெகுமதி. மூன்றாவது யார் இந்த (சேவா) ஸ்தானத்தின் பொறுப்பில் இருப்பவராக ஆகியிருக்கிறாரோ, அவர் மேல் அந்த (சேவா) ஸ்தானத்தில் இருக்கும் ஆத்மாக்கள் திருப்தியாக இருக்கிறார்களா மற்றும் அவரும் மற்ற அனைவர் மேலும் திருப்தியாக இருக்கிறாரா? ஒருவேளை தானே திருப்தியாக இல்லை என்றால் கூட குறை இருந்து விட்டது. மேலும் வரக்கூடியவர்களில் ஒருவர் திருப்தியாக இல்லை என்றாலும் இதுவும் குறையாக இருந்து விடுகிறது. டீச்சர் மேல் அனைவரும் திருப்தியாக இருக்கிறார்களா? டீச்சரின் கற்பிக்கும் விதம் மற்றும் அவருடன் இருக்கும் உறவு, இதை நீங்கள் கையாளும் முறை என்று கூறுகிறீர்கள், அவர் மேல் அனைவரும் திருப்தியாக இருக்கிறார் என்றாலும் இதற்காகவும் வெகுமதி இருக்கிறது. முதலில் ஆரம்பத்தில் மாலையை உருவாக்கினோம். எதற்காக? ஊக்கம் உற்சாகத்தை அதிகரிப்பதற்காக. எந்த நேரம் எந்த நிலை இருக்கிறது அந்த நிலையை ஒருவர் அடைவதினால் குஷி ஏற்படுகிறது. ஊக்கம் உற்சாகத்தை அதிகரிப்பதற்காக மற்றும் ஒருவர் இன்னொருவரைப் பார்த்து தானும் செய்வதற்காக இந்த சாதனத்தை உருவாக்கியிருந்தோம். இதனுடைய உள்நோக்கம் இதுவாகத் தான் இருந்ததேயன்றி எந்தவொரு கடைசி நிலையின் பதக்கம் என்பதாக இருந்ததில்லை. இது நேரத்தில் முயற்சியில் தன்னையே

பலியாக்குவதற்காக இருந்தது. இதனால் ஊக்கம் உற்சாகம் வருகிறது. மேலும் யார் எந்த முயற்சியில் இருக்கிறார்கள் மற்றும் யாருக்கு முயற்சியில் கவனம் இருக்கிறது? மேலும் யார் தேர்ச்சி பெற்று வெற்றியின் அதிகாரி ஆகியிருக்கிறார்கள் என்ற ரிசல்ட் தெரிய வந்து விடுகிறது. இதைப் பார்த்தும் கூட குஷியடைகிறார்கள். நீங்களும் இப்பொழுது கூட உங்களுடைய வகுப்பில் யாருக்காவது வெகுமதி கொடுக்கிறீர்கள் தான் இல்லையா. பரிசு என்பது பெரிய பொருளாக இருப்பதில்லை, ஒரு கைக்குட்டையைக் கொடுத்தால் கூட அதற்கும் மதிப்பு இருக்கிறது. என்ன முயற்சி செய்தாரோ அதனுடைய வெற்றிக்கான மதிப்பு இருக்கிறதேயன்றி பொருளுக்கான மதிப்பு இல்லை. நீங்கள் யாருக்காவது கொஞ்சம் சேவை செய்வதற்கான வெகுமதி கொடுக்கிறீர்கள் மற்றும் வகுப்பில் பெயரைக் கூறுகிறீர்கள் என்றால் வரும் காலத்திற்காக அவர் மேல் முத்திரை இடப்பட்டு விடுகிறது, ஊக்கம் உற்சாகத்திற்கான திலகம் இடப்பட்டு விடுகிறது.

ஏதாவது விசேஷ ஆத்மாக்களும் விசேஷ காரியம் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள் இல்லையா. இருந்தாலும் பொறுப்பில் இருப்பவர்களாக ஆகியிருக்கிறார்கள். அப்படியானால் அவசியம் ஏதோ உயர்ந்த மற்றும் விசேஷம் இருக்கிறது. அதனால் தான் நாடகப்படி சமர்ப்பணம் ஆன பிறகு, அனைத்தையும் தியாகம் செய்த பிறகு மற்றவர்களுக்கு சேவை செய்வதற்கான பொறுப்பாளராக ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? ஒவ்வொரு வரிடமும் அவசியம் ஏதாவது விசேஷம் இருக்கிறது. ஒவ்வொருவரின் விசேஷமும் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். குறைகளைத் தெரிந்திருக்கத் தேவையில்லை. நீங்கள் எப்பொழுது உங்களுக்குள் குழுவாக இருக்கிறீர்கள் என்றால் ஒவ்வொருவரைப் பற்றிய செய்தியை ஏன் கேட்கிறீர்கள்? ஒவ்வொருவரிலும் என்ன விசேஷம் இருக்கிறதோ அதைத் தன்னில் கொண்டு வருவதற்காக! ஒவ்வொருவருக்கும் பாப்தாதாவின் ஞானம் மூலமாக ஏதாவது விசேஷ குணம் பிராப்தி ஆகிறது. தன்னுடையது அல்ல, என்னுடைய குணம் அல்ல ஆனால் இவை ஞானம் மூலமாக பிராப்தமாகக் கிடைக்கிறது. இதில் அபிமானம் வராது. ஒருவேளை தன்னுடைய குணமாக இருக்கிறது என்றால் முதலிலிருந்தே இருந்திருக்குமல்லவா? ஆனால் ஞானத்திற்குப் பிறகு தான் குணவானாக ஆகியிருக்கிறீர்கள். முன்போ பக்தியில் 'குணமற்ற

என்னில் எந்த குணமும் இல்லை. என்று பாடிக் கொண்டிருந்தீர்கள். அதனால் இதைத் தன்னுடைய குணம் என்று சொல்ல மாட்டோம். ஞானம் மூலமாக தன்னுள் நிரப்பிக் கொண்டே இருக்கிறீர்கள். எனவே விசேஷத்தின் குணத்தை வர்ணனை செய்து கொண்டே இது ஞானம் மூலமாக எனக்கு பிராப்தி ஆகியிருக்கிறது என்ற நினைவு இருக்கட்டும். அப்படி இது ஞானத்தின் மகத்துவமேயன்றி உங்களுடையது அல்ல. ஞானம் நிறைந்ததின் மகத்துவம். அதே ரூபத்தில் ஒருவேளை ஒவ்வொருவரையும் வர்ணனை செய்தீர்கள் என்றால், இதில் கூட பிறரது விசேஷங்களை தனக்குள் கொண்டு வருவதில் லாபம் இருக்கிறது. தொடக்கத்தில் உங்கள் அனைவரின் நியமமாக இது இருந்தது. அதன்படி தன்னுடைய தற்சமயத்தின் சூட்சும முயற்சி என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை வர்ணனை செய்தீர்கள். மேலோட்டமான விஷயமின்றி சூட்சும பலஹீனங்களை எந்த முயற்சியினால் வெற்றி அடைந்து நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஒவ்வொருவருக்கும் வர்ணனை செய்தீர்கள். இதனால் ஒவ்வொருவருக்கும் பிறரது அறிமுகம் இருக்கும் காரணத்தினால் யாரிடம் என்ன விசேஷம் இருக்கிறது என்பதை வர்ணனை செய்வதினால் தானாகவே அவருடைய பலஹீனத்தின் பக்கம் கவனம் குறைந்து விடுகிறது. விசேஷத்தின் பக்கம் தான் கவனம் செல்கிறது. தொடக்கத்தில் உங்களுக்குள் அந்த மாதிரி சூட்சம ஆன்மீக உரையாடல் செய்தீர்கள். அப்படி இப்பொழுது ஒவ்வொருவரின் தற்சமயத்து முயற்சியின் விசேஷத்தை மட்டும் உங்களுக்குள் வர்ணனை செய்தீர்கள் என்றாலும் நல்ல சூழ்நிலை இருக்கும். எப்பொழுது தலைப்பே இதுவாக ஆகி விட்டது என்றால் மற்ற தலைப்புகள் தானாகவே தங்கிப் போய்விடும். உங்களுக்குள் சந்திப்பதற்கான வடிவமாக இது தான் இருக்க வேண்டும் மற்றும் ஒவ்வொருவரின் விசேஷத்தை ஒருவேளை பார்த்தீர்கள் என்றால் மிக நல்லதாகும். யாராவது என்னில் எந்தவொரு விசேஷமும் இல்லை என்று நினைத்தால் அந்த மாதிரி இருக்க முடியாது. இதனால் அவர் தன்னைத் தானே தெரிந்திருக்கவில்லை என்பது நிரூபணமாகிறது. பார்வை மற்றும் உள்உணர்வு அந்த மாதிரி இயற்கையானதாக ஆகி விட வேண்டும் எப்படி நீங்கள் மற்றவர்களுக்கு உதாரணமாகக் கூறுகிறீர்கள். எப்படி அன்னப்பறவை இருக்கிறது என்றால் அதனுடைய பார்வை எதில் போகும்? கூழாங்கற்களைப் பார்த்த போதிலும் அது முத்துக்களைப் பார்க்கிறது. இதே விதத்தில் யாருடைய பலஹீனம் மற்றும் எந்த

விஷயத்தை கேட்டும் பார்த்தும் அது உள்ளே செல்லக்கூடாது அந்த மாதிரி இயற்கையான பார்வை மற்றும் உள்உணர்வு இருக்க வேண்டும். இன்னமும் எந்த நேரம் யாருடைய பலஹீனங்களையாவது கேட்கிறீர்கள் மற்றும் பார்க்கிறீர்கள், என்றால் இந்த பலஹீனம் இவருடையது அல்ல, என்னுடையது என்று புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் நாம் அனைவரும் ஒரே தந்தையின் ஒரே குடும்பத்தின் ஒரே மாலையின் மணிகள் ஆவோம். ஒருவேளை மாலையின் இடையே ஏதோ ஒரு மாதிரியான முத்து இருக்கிறது என்றால் முழு மாலையின் மதிப்பு குறைந்து விடுகிறது. அப்படி எப்பொழுது ஒரே மாலையின் மணிகளாக நீங்கள் இருக்கிறீர்கள் என்றால் இது என்னுடைய பலஹீனமானதாகவும் ஆனது என்று அந்த மாதிரி உள்உணர்வு இருக்க வேண்டும். எப்படி யாராவது தீவிர முயற்சி செய்பவர் இருக்கிறார் என்றால் தன்னிடம் என்ன பலஹீனம் இருக்கிறதோ அதைப் பார்ப்பார் மற்றும் கிடைத்திருக்கும் யுக்திகளின் ஆதாரத்தில் உடனே அதை அழித்து விடுவார். ஒருபொழுதும் வர்ணனை செய்ய மாட்டார். எப்பொழுது தன்னுடைய பலஹீனத்தை பிரசித்தியாக்க விரும்பவில்லையோ, மற்றவர்களின் பலஹீனத்தை ஏன் வர்ணனை செய்கிறீர்கள்? இவர் என்னோடு ஒத்துழைக்கவில்லை, இந்த விஷயத்தை செய்யவில்லை. எனவே சேவையில் வளர்ச்சியாகவில்லை மற்றும் ன்னுடைய முயற்சியில் இந்த விஷயம், இந்த ஆத்மா தடை ரூபமாக இருக்கிறார் - இதுவோ தன்னுடைய புத்தி மூலமாகவே ஏதாவது ஆதாரத்தை உருவாக்கி அதில் நிலைத்திருப்பதற்கு முயற்சி செய்கிறீர்கள் ஆனால் அந்த ஆதாரம் அஸ்திவாரமற்றது. எனவே அது நிலைத்திருப்பதில்லை. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அதே ஆதாரம் நஷ்டத்தை விளைவிப்பதாக ஆகி விடுகிறது. எனவே புனித அன்னப்பறவை தான் இல்லையா? அப்படியானால் புனித அன்னப்பறவையின் நடத்தை எப்படி இருக்கும்? ஒவ்வொருவரின் விசேஷத்தைக் கிரஹிப்பது மற்றும் பலஹீனங்களை அகற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் அப்படி அந்த மாதிரி முயற்சி நடந்து கொண்டிருக்கிறதா?

நாம் அனைவரும் ஒன்று என்ற இந்த நினைவை வைத்துக் கொண்டு முயற்சி நடந்து கொண்டிருக்கிறதா? இது தான் இந்த கூட்டுக்குழுவின் விசேஷம் மற்றும் தனித்தன்மை. இது முழு உலகத்திலும் எந்தவொரு குழுவிலும் கிடையாது. பார்ப்பவர்கள், வருபவர்கள், கேட்பவர்கள்

அனைவரும் இங்கு ஒவ்வொரு ஆத்மாவின் எழுவது, பேசுவது, நடப்பது அனைத்தும் ஒரே மாதிரி இருக்கிறது என்று வர்ணனை செய்கிறார்கள். ஒரே ஒரு நன்னடத்தையின் மகிமை இருக்கிறது. அதே விதத்தில் தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். தற்சமயத்து முயற்சி செய்வதில் காரணம் என்றால் அது என்ன? என்று "காரணம்" என்ற வார்த்தை முடிவடைந்து விட வேண்டும். இப்பொழுதோ முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? எப்பொழுது உலகத்தின் மாற்றத்தின், இயற்கையின் மாற்றத்தின் பொறுப்பை எடுப்பதற்கான தைரியம் வைப்பவர்களாக இருக்கிறீர்கள், சவால் விடுபவர்களாக இருக்கிறீர்கள் என்றால் பின்பு காரணம் என்றால் அது என்ன? காரணத்தின் படைப்பு எங்கிருந்து ஏற்படுகிறது? காரணத்தின் விதை என்னவாக இருக்கிறது? ஏதாவது விதத்தில் அது எண்ணத்திலோ, வார்த்தையிலோ, உறவு நெருக்கத்தில் வருவதில் இருக்கும் பலஹீனம். இந்த பலஹீனத்தினால் தான் காரணம் பிறக்கிறது. அப்படி படைப்பே வீணானது இல்லையா? பலஹீனத்தின் படைப்பு என்னவாக இருக்கும்? எப்படி விதையோ அப்படி பழம் (பலன்) இருக்கும், அப்படி எப்படி படைப்பே தவறானதோ அதை அங்கேயே அழித்து விட வேண்டுமா அல்லது அதன் ஆதாரத்தை எடுத்து மேற்கொண்டும் செல்ல வேண்டுமா? இந்தக் காரணத்திற்கு நிவாரணம் இருக்கிறது என்றால் முன்னேறிச் செல்லலாம், காரணம் நிவாரணம் ஏற்பட்டது என்றால் சேவை வளரும், தடை அகலும் என்ற இந்த பாஷையை இப்பொழுது மாற்றம் செய்யுங்கள். நீங்கள் அனைவருக்கும் நிவாரணம் கொடுப்பவர்கள் தான் இல்லையா? உங்களிடம் அஞ்ஞானி மனிதர்கள் காரணத்திற் கான நிவாரணம் பெறுவதற்காக வருகிறார்கள் இல்லையா? யார் அனேக விதமான காரணங்களுக்கு நிவாரணம் செய்பவர்களோ அவர் இந்த ஆதாரத்தை எப்படி எடுக்க முடியும்? எப்பொழுது அனைத்து ஆதாரமும் அழிந்து விட்டது என்றால் பின்பு இந்த தேக அபிமானம் மற்றும் பழைய சம்ஸ்காரம் தானாகவே அழிந்து விடும். இந்த விஷயங்கள் தான் தேக அபிமானத்தில் கொண்டு வருகிறது. விஷயங்களே அழிந்து விட்டது என்றால் அதனுடைய விளைவுகளும் அழிந்து விடும். சின்ன சின்ன காரணத்தில் வருவதினால் விதவிதமான தேக அபிமானம் வந்து விடுகிறது. அப்படியானல் இதுவரை தேக அபிமானத்தை விடவில்லையா என்ன? மிகவும் பிடித்திருக்கிறதா? இப்பொழுது தன்னுடைய பாஷை மற்றும் உள்உணர்வு அனைத்தையும் மாற்றம் செய்யுங்கள். யாரையாவது,

எப்பொழுதாவது, எந்த சூழ்நிலையில், எந்த ஸ்திதியில் பார்க்கிறீர்களோ ஆனால் உள்உணர்வு ஒருவேளை யதார்த்தமாக இருக்கிறது என்றால் அதன் பிரபாவம் உங்கள் மேல் ஏற்படாது. நன்மை பயக்கும் உள்உணர்வு, நற்சிந்தனை உள்ள மனோபாவம் இருக்க வேண்டும். ஒருவேளை இந்த உள்உணர்வு மற்றும் மனோபாவத்தை எப்பொழுதுமே சரியாக வைத்தீர்கள் என்றால் பின்பு இந்த விஷயங்களே இருக்காது. யார் என்ன செய்தாலும், யாராவது உங்களுக்கு தடை ரூபமானாலும், உங்களுடைய மனோபாவம் அந்த மாதிரியானவர்களின் மேலேயும் நற்சிந்தனைக்கானதாகவே இருக்கட்டும். இதைத் தான் தீவிர முயற்சி செய்பவர் மற்றும் புனித அன்னப்பறவை என்று கூறுவது. யாருக்காவது உங்கள் மேல் நல்உணர்வு இருக்கிறது நீங்களும் அவருக்காக நல்உணர்வு வைக்கிறீர்கள் என்றால் அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. மகிமை ஏற்படுகிற மாதிரி அதிசயம் செய்ய வேண்டும். அபகாரி மேலும் உபகாரம் செய்பவருக்கான மகிமை இருக்கிறது, உபகாரி மேல் உபகாரம் செய்வது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. யாராவது அடிக்கடி விழச்செய்ய முயற்சி செய்கிறார், உங்களுடைய மனதை மேலே கீழே போகச் செய்கிறார் இருந்தாலும் உங்களிடம் அவருக்காக எப்பொழுதும் நற்சிந்தனையுள்ள அசையாத மனோபாவம் இருக்கட்டும். விஷயத்தினால் உங்களுடைய மனோபாவம் மாற வேண்டாம். எப்பொழுதும் ஆடாத அசையாத மனோபாவம் இருக்கட்டும். அப்பொழுது தான் புனித அன்னப்பறவை என்று கூறுவோம். பின்பு எந்த விஷயத்தையும் பார்க்கவே முடியாது. இல்லை. யென்றால் இதில் நேரம் மிக அதிகமாக வீணாகிறது. குழந்தைப் பருவத்திலோ நேரம் வீணாகத் தான் செய்கிறது. குழந்தை நேரத்தை வீணாக்கிறது என்றால் கூறுவார்கள் - அவர் குழந்தை இல்லையா என்று ஆனால் புத்திசாலி ஒருவேளை நேரத்தை வீணாக்குகிறார் என்றால். குழந்தை வீணடித்த நேரம் ஃபீலிங்கில் வராது, அதனுடைய வேலையே அது தான். அப்படி நீங்கள் இப்பொழுது எந்த சேவைக்குப் பொறுப்பாளராக ஆகியிருக்கிறீர்களோ அந்த நிலையே ஜகத்மாதாவினுடையது. உலகத்திற்கு நன்மை செய்பவர்கள் தான் இல்லையா? எல்லைக்குட்பட்ட நன்மை செய்பவர்கள் அனேகர் இருக்கிறார்கள். உலக நன்மைக்கான பாவனையின் நிலை தான் ஜகத்மாதா. அப்படி ஜகத்மாதாவின் நிலையில் இருந்து ஒருவேளை இந்த விஷயத்தில் நேரத்தை வீணாக்குகிறீர்கள் என்றால் என்ன நினைப்பார்கள்? நல்லது.

**வரதானம்: தந்தையின் சம்ஸ்காரங்களை தன்னுடைய உண்மையான சம்ஸ்காரமாக ஆக்கக்கூடிய வீணான மற்றும் பழைய சம்ஸ்காரங்களிலிருந்து விடுபட்டவர் ஆகுக!**

எந்தவொரு வீணான எண்ணமும் மற்றும் பழைய சம்ஸ்காரமும் தேக அபிமானத்தின் சம்மந்தத்தினால் இருக்கிறது. ஆத்மீக சொரூபத்தின் சம்ஸ்காரம் தந்தைக்குச் சமமானதாக இருக்கும். எப்படி தந்தை எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்பவர், பரோபகாரி, இரக்க மனம் உடையவர், வரம் அளிக்கும் வள்ளல் அப்படி தன்னுடைய சம்ஸ்காரம் இயற்கையானதாக ஆகி விடட்டும் சம்ஸ்காரம் உருவாவது என்றால் எண்ணம். சொல் மற்றும் செயல் தானாகவே அதன்படி நடப்பது. வாழ்க்கையில் சம்ஸ்காரம் ஒரு சாவி ஆகும். அதன் மூலம் தானாகவே நடந்து கொண்டிருக்கிறார்கள். பின்பு கடின உழைப்பு செய்வதற்கான அவசியம் இருப்பதில்லை.

**சுலோகன்: ஆத்மீக நிலையில் நிலைத்திருந்து தன்னுடைய ரதம் (உடல்) மூலமாக காரியம் செய்விப்பரே உண்மையான முயற்சி செய்பவர் ஆவார்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 22.07.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நஷ்டமோகா (பற்றுதலை வென்ற நிலை) ஆவதற்கான பல்வேறு யுக்திகள்!

ஒவ்வொருவரும் தன்னை நினைவு சொரூபமானவர் என்று நினைக்கிறீர்களா? நினைவு சொரூபமானவராக ஆகி விடுவதினால் நிலை என்னவாக ஆகி விடுகிறது? மேலும் நினைவு சொரூபம் எப்பொழுது ஆகிறது? எப்பொழுது நஷ்டமோகா (பற்றுதலை வென்றவராக) ஆகி விடுகிறாரோ அப்பொழுது நினைவு சொரூபமானவராக ஆகிறார். அப்படி அந்த மாதிரி நஷ்டமோகா நினைவு சொரூபமானவராக ஆகியிருக்கிறீர்களா அல்லது இப்பொழுது நினைவை மறந்த சொரூபமானவர்களாக இருக்கிறீர்களா? நினைவு சொரூபத்திலிருந்து நினைவு மறந்த நிலையில் ஏன் வந்து விடுகிறீர்கள்? அவசியம் ஏதாவது பற்றுதல் அதாவது ஈடுபாடு இதுவரை இருந்து கொண்டிருக்கிறது. மற்ற அனைத்து தொடர்புகளையும் விட்டு விட்டு உங்கள் ஒருவருடன் மட்டும் தொடர்பை வைத்துக் கொள்வோம் என்று தந்தையிடம் கொடுத்த உறுதிமொழியைக் கடைபிடிக்கத் தெரியாதா என்ன? முதலில் கொடுத்த உறுதிமொழியையே கடைப்பிடிக்கவில்லை என்றால் முதல் நம்பரின் இராஜ்ய அதிகாரி மற்றும் இராஜ்ய சம்மந்தத்தில் எப்படி வருவீர்கள்? இரண்டாவது ஜென்மத்தின் ராஜ்யத்தில் வர வேண்டுமா என்ன? யார் முதல் உறுதிமொழியான நஷ்டமோகா ஆவதைக் கடைப்பிடிக்கிறார்களோ அவர்கள் தான் முதல் ஜென்மத்தின் இராஜ்யத்தில் வருகிறார்கள். முதல் உறுதிமொழி என்று கூறினாலும் அல்லது முதல் பாடம் என்று சொன்னாலும் அல்லது ஞானத்தின் முதல் விஷயம் என்று சொன்னாலும் அல்லது ஆன்மீக ஜென்மத்தின் உயர்ந்த எண்ணம் என்று கூறினாலும் இதைக் கடைபிடிப்பது கடினமாக அனுபவமாகிறதா என்ன? தன்னுடைய சொரூபத்தில் நிலைத்திருப்பது, தான் தன்னுடைய நினைவில் இருப்பது

-இது எந்த ஜென்மத்திலாவது கடினமாக இருந்ததா? சுலபமாகவே நினைவில் இருந்ததினால் நினைவு சொரூபமாகவே ஆகி வந்திருக்கிறீர்கள் இல்லையா? அப்படியானால் இந்த ஆன்மீக ஜென்மத்தின் தன்னுடைய சொரூபத்தின் நினைவை ஏன் கடினமாக அனுபவம் செய்கிறீர்கள்? மனித ஆத்மாவின் விசேஷமே, மனிதன் என்ன விரும்புகிறாரோ அதைச் செய்ய முடியும் என்பது. இது தான் சாதாரண மனிதனுக்கான பழமொழியாகவும் இருக்கிறது. பிராணிகள் மற்றும் மனித ஆத்மாவுக்கும் உள்ள முக்கியமான வித்தியாசமே இது தான். அப்படி எப்பொழுது சாதாரண மனித ஆத்மா என்ன விரும்புகிறாரோ அதைச் செய்து காண்பித்துக் கொண்டிருக்கிறார் என்றால் உயர்ந்த மனித ஆத்மாக்கள், சக்தி சொரூப ஆத்மாக்கள், ஞானம் நிறைந்த ஆத்மாக்கள் தந்தையின் நெருங்கிய நெருக்கத்தில் வரக்கூடிய ஆத்மாக்கள், தந்தையின் நேரடி பாலனையை பெறக்கூடிய ஆத்மாக்கள், பூஜைக்குரிய ஆத்மாக்கள், தந்தையை விட உயர்ந்த பதவியை அடையக்கூடிய ஆத்மாக்களாகிய நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியாதா? அப்படி சாதாரண மற்றும் உயர்ந்தவர்களில் உள்ள வித்தியாசமே என்னவாக இருந்தது? சாதாரண ஆத்மாக்கள் என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்ய முடியும் ஆனால் எப்பொழுது விரும்புகிறார்களோ எப்படி விரும்புகிறார்களோ அப்படிச் செய்ய முடியாது. ஏனென்றால் அவர்களிடம் ஈஸ்வரிய சக்தி இல்லை, இயற்கையின் சக்தி இருக்கிறது. ஈஸ்வரிய சக்தி உள்ள ஆத்மாக்கள் என்ன விரும்புகிறார்களோ, எப்பொழுது விரும்புகிறார்களோ, எப்படி விரும்புகிறார்களோ அப்படி செய்ய முடியும். அப்படியானால் என்ன விசேஷம் இருக்கிறதோ அதை நடைமுறையில் கொண்டு வர முடியாதா? அல்லது நீங்கள் கூட விரும்பவில்லை தான், ஆனால் அப்படி ஆகி விடுகிறது என்று இன்று வரை இதைத் தான் கூறுகிறீர்களா? என்ன விரும்புகிறோமோ அதைச் செய்ய முடிவதில்லை என்ற இந்த வார்த்தை மாஸ்டர் சர்வ சக்திவானின் மற்றும் உயர்ந்த ஆத்மாக் களினுடையது இல்லை. இவை சாதாரண ஆத்மாக்களினுடையது. அப்படியானால் தன்னை சாதாரண ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்களா? தன்னுடைய அலௌகீக ஜென்மம், அலௌகீக காரியமாக என்ன இருக்கிறதோ அதை மறந்து விடுகிறீர்களா? எந்தவொரு பொருள் மேலும், எந்தவொரு நபர் மேலும், எந்தவொரு தனிப்பட்ட மனோபாவத்தில் பற்றுதல் ஏன் ஏற்படுகிறது? என்னென்ன பொருட்களைப் பார்க்கிறீர்களோ அந்த

பொருட்களோடு ஆன்மீக ஜென்மத்தில் என்னென்ன பிராப்தி அடைந்திருக்கிறீர்களோ அதை ஒப்பிட்டு பார்க்கும்பொழுது இரவு பகலுக்கான வித்தியாசம் அனுபவம் ஆகவில்லையா என்ன? வியக்த பாவத்தினால் கிடைத்த துக்கம், அமைதி யின்மையின் அனுபவத்தை இதுவரை முடிக்கவில்லையா என்ன? எந்தெந்த நபரை பார்க்கிறீர்களோ அந்த அனைத்து நபர்களிலிருந்தும் பழைய உலகத்தின் உறவுகளை சம்மந்தங்களை இந்த ஆன்மீக ஜென்மத்துடன் அழித்து விடவில்லையா? எப்பொழுது ஜென்மம் புதியதாக ஆகி விட்டதோ அப்போ பழைய ஜென்மத்தின் நபர்களுடன் பழைய உறவு முடிவடைந்து விடவில்லையா என்ன? புதிய ஜென்மத்தில் பழைய சம்மந்தத்தின் பற்றுதல் இருக்கிறதா என்ன? அப்படியானால் நபர்களுடனும் எப்படி பற்றுதலை வைக்க முடியும். அந்த ஜென்மமே மாறிவிட்டது என்றால், ஜென்மத்தின் கூடவே சம்மந்தம் மற்றும் காரியம் மாறவில்லையா அல்லது இதுவரை ஆன்மீக ஜென்மம் ஏற்படவில்லை என்று அப்படி கூறலாமா? சாதாரண முறையில் கூட எங்கு ஜென்மம் ஏற்படுகிறதோ ஜென்மத்திற்கு ஏற்றபடி காரியம் நடக்கிறது, உறவு நெருக்கம் இருக்கிறது. அப்படி இங்கு ஜென்மம் ஆன்மீகமானது மற்றும் சம்மந்தம் லௌகீகத்தினருடன் ஏன் இருக்கிறது? மற்றும் காரியமும் பின்பு லௌகீகமாக ஏன் இருக்கிறது? அப்படி நஷ்டமோகா ஆவது சகஜமா அல்லது கடினமா என்று இப்பொழுது கூறுங்கள். ஏன் கடினமாகிறது? ஏனென்றால் எந்த நேரம் பற்றுதல் உருவாகிறதோ அந்த நேரம் தன்னுடைய முகத்தைப் பார்ப்பதில்லையா? கண்ணாடியோ கிடைத்திருக்கிறது தான் இல்லையா? கண்ணாடி கூடவே இருப்பதில்லையா என்ன? ஒருவேளை முகத்தைப் பார்த்தீர்கள் என்றால் பற்றுதல் அழிந்து விடும். ஒருவேளை இதைப் பார்ப்பதற்கான பயிற்சி ஏற்பட்டு விட்டது என்றால் பயிற்சிக்குப் பின்பு விரும்பாவிட்டாலும் அடிக்கடி கண்ணாடியின் பக்கம் தானாகவே இழுக்கப்படுவீர்கள். எப்படி ஸ்தூலத்தில் சிலருக்கு அடிக்கடி பார்ப்பதற்கான பழக்கம் இருக்கிறது. புரோகிராம் உருவாக்குவதில்லை ஆனால் தானாகவே கண்ணாடியின் பக்கம் சென்று விடுகிறார்கள். ஏனென்றால் பயிற்சி இருக்கிறது. இதுவும் ஞானம் என்ற கண்ணாடியில், தன்னுடைய சுவமானம் என்ற கண்ணாடியில் அடிக்கடி பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்றால் தேக அபிமானத்தில் இருந்து உடனே சுவமானத்தில் வந்து விடுவீர்கள். எப்படி ஸ்தூலமான சரீரத்தில் ஏதாவது குறைபாடு இருப்பதாகத் தெரிய வருகிறது என்றால் கண்ணாடியில் பார்ப்பதினால் அதை உடனே

சரிசெய்து விடுகிறார்கள். அதே போல் இந்த ஆன்மீகக் கண்ணாடியில் உண்மையான சொரூபமாக என்ன இருக்கிறதோ இதைப் பார்த்துக் கொண்டே யார் தேக அபிமானத்தில் வருவதினால் வீணான எண்ணங்களின் சொரூபம், வீணான வார்த்தைகளின் சொரூபம் மற்றும் வீணான செயல் மற்றும் சம்மந்தத்தின் சொரூபத்தைத் தெளிவாகப் பார்ப்பதினால் வீணானதை சக்திசாலியானதாக மாற்றி விடுகிறார்கள். பின்பு இந்த பற்றுதல் இருக்குமா என்ன? மேலும் எப்பொழுது நஷ்டமோகா ஆகி விடுகிறீர்களோ, நஷ்டமோகாவின் கூடவே எப்பொழுதும் நினைவு சொரூபம் தானாகவே ஆகி விடும். கலபம் இல்லையா இது? எப்பொழுது அனைத்து பிராப்தியும் ஒருவர் மூலமாகக் கிடைக்கிறது என்றால், அதில் திருப்தியான ஆத்மாவாக ஆவதில்லையா என்ன? ஏதாவது ஒரு பொருளின் பிராப்தியில்லை என்றால் அப்பொழுது தான் திருப்தி இருப்பதில்லை. அப்படியானால் அனைத்து பிராப்திகளின் அனுபவம் ஆவதில்லையா என்ன? இப்பொழுது திருப்தியான ஆத்மாவாக ஆவதில்லையா? எதை பாபா கொடுக்க வேண்டுமோ அதை இந்த அழியக்கூடிய ஆத்மாக்கள் இத்தனை ஜென்மங்களில் கொடுக்க முடிந்ததா? அனேக ஜென்மத்தில், அனேக ஆத்மாக்கள் அதை பிராப்தி செய்விக்க முடியாத போது தந்தை மூலமாக ஒரே ஒரு ஜென்மத்தில் பிராப்தி ஆகிறது என்றால் புத்தி எங்கே செல்ல வேண்டும் என்று சொல்லுங்கள்? அலைந்து கொண்டிருப்பதிலா, அழ வைப்பதிலா, எட்டி உதைப்பவர் மேலேயோ அல்லது எனக் கென்று புகலிடம் கொடுப்பவரிடமா? எப்படி நீங்கள் மற்ற ஆத்மாக்களிடம் அதிகக் கேள்விகள் கேட்கிறீர்கள் தான் இல்லையா? எனவே தந்தைக்கும் ஆத்மாக்கள் உங்களிடமிருந்து இந்த ஒரே ஒரு கேள்வி தான் இருக்கிறது. இந்த ஒரு கேள்விக்கான பதிலையே இது வரை நீங்கள் கொடுக்க முடியவில்லை. யார் இந்தக் கேள்விக்குப் பதில் கொடுத்திருக்கிறாரோ அவர் நிரந்தமாக பிரசன்னமாக இருக்கிறார், யார் பதில் கொடுக்க வில்லையோ அவர் அடிக்கடி இறங்கும் கலையில் இறங்கிக் கொண்டே இருக்கிறார்.

நஷ்டமோகா ஆவதற்காக தன்னுடைய நினைவு சொரூபத்தை மாற்ற வேண்டியதாக இருக்கும். எப்பொழுது நான் குடும்பஸ்தன் என்ற நினைவு இருக்கிறதோ அப்பொழுது தான் பற்றுதலும் அவர்கள் மேலும் செல்கிறது. என்னுடைய வீடு, என்னுடைய உறவு என்று எப்பொழுது

இருக்கிறதோ அப்பொழுது தான் பற்றுதலும் செல்கிறது. அப்படி இந்த எல்லைக்குட்பட்ட பொறுப்பை எல்லைக்கப்பாற்ப்பட்ட பொறுப்பில் மாற்றம் செய்து விட்டீர்கள் என்றால் எல்லைக்கப்பாற்பட்ட பொறுப்பின் மூலமாக எல்லைக்குட்பட்ட பொறுப்புக்கள் தானாகவே முடிவடைந்து விடுகிறது. எல்லைக்கப்பாற்பட்டதை மறந்து எல்லைக்குட்பட்ட பொறுப்பை ஏற்றுச் செய்வதற்காக எவ்வளவு நேரம் மற்றும் எண்ணத்தை ஈடுபடுத்துகிறீர்களோ அவ்வளவு செய்வதற்குப் பதிலாக கெடுத்துக் கொண்டே செல்கிறீர்கள். நான் கடமையை ஆற்றிக் கொண்டிருக்கிறேன் மற்றும் கடமையை கவனித்துக் கொண்டிருக்கிறேன் என்று நினைவு இருக்கிறது. அது செய்வது மற்றும் கவனிப்பது இல்லை. இன்னும் அதிகமாக தன்னுடைய எல்லைக்குட்பட்ட நினைவிலிருக்கும் காரணத்தினால் அந்த நிமித்தமாகியிருக்கும் ஆத்மாக்களுக்கும் பாக்கியத்தை உருவாக்குவதற்குப் பதிலாக கெடுப்பதற்கு காரணமானவர்கள் ஆகி விடுகிறீர்கள். பிறகு அந்த ஆத்மாக்கள் கூட உங்களுடைய ஆன்மீக நடத்தையைப் பார்க்காமல் ஆன்மீகத் தந்தையுடன் சம்மந்தத்தை ஏற்படுத்துவதிலிருந்து வஞ்சிக்கப்பட்டவராகி விடுகிறார்கள். அப்படி கடமைக்குப் பதிலாக இன்னும் அதிகமாக தன் மேல் கூட நோயை ஏற்படுத்தி விடுகிறீர்கள். இது மோகத்தின் நோய் ஆகும். மேலும் அதே நோய் அனேக ஆத்மாக்களிலும் இயல்பாகவே ஏற்பட்டு விடுகிறது. அப்படி எதை கடமை என்று நினைக்கிறீர்களோ அந்த கடமை மாறி நோயின் ரூபம் ஆகி விடுகிறது. எனவே எப்பொழுதும் தன்னுடைய இந்த நினைவை மாற்றுவதற்கான முயற்சி செய்யுங்கள். நான் குடும்பஸ்தன், இந்த பந்தனம் உள்ளவன், நான் இந்த பொறுப்பில் இருப்பவன் என்ற இதற்குப் பதிலாக தன்னுடைய முக்கிய ஐந்து சொரூபத்தை நினைவில் கொண்டு வாருங்கள். எப்படி ஐந்து முகமுள்ள பிரம்மாவை காண்பிக்கிறார்கள் இல்லையா? மூன்று முகமும் காண்பிக்கிறார்கள், ஐந்து முகமும் காண்பிக்கிறார்கள். அப்படி பிராமணர்கள் உங்களுக்கும் ஐந்து முக்கிய சொரூபம் நினைவில் இருக்கிறது என்றால் நோய் விலகி உலக நன்மைக்கான கடமை செய்வதில் ஈடுபட்டு விடுவீர்கள். அது எந்த ரூபம் அதன் நினைவு சொரூபத்தில் இருப்பதினால் இந்த அனைத்து ரூபங்களும் மறந்து விடும்? நினைவில் வைப்பதற்கான ஐந்து சொரூபத்தை கூறுங்கள். எப்படி தந்தையின் மூன்று ரூபத்தை கூறுகிறீர்கள் அதே போல் உங்களுடைய ஐந்து ரூபங்கள் இருக்கின்றன. 1) நான் குழந்தை, 2) இறை

மாணவன், 3) ஆன்மீக யாத்திரீகன், 4) போர் வீரன் மற்றும் 5) ஈஸ்வரிய காரியத்தில் உதவியாளன். இந்த ஐந்து சொரூபமும் நினைவில் இருக்கட்டும். காலை எழுந்தவுடனேயே நான் குழந்தை ஆவேன் என்ற தன்னுடைய இந்த சொரூபம் நினைவு இருக்கிறது என்றால் பின்பு குடும்பஸ்தன் என்பது எங்கிருந்து வரும்? பின்பு ஆத்மா தந்தையோடு சந்திப்பை ஏற்படுத்தி, சந்திப்பின் மூலம் அனைத்து பிராப்தியின் அனுபவம் ஏற்பட்டு விட்டது என்றால் பின்பு புத்தி அங்கு இங்கு எப்படி போகும்? அப்படி அமிர்தவேளையின் இந்த முதல் சொரூபத்தின் நினைவினுடைய பலஹீனம் தான் இருக்கிறது என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகிறது. எனவே தன்னுடைய இறங்கும் கலையின் ரூபத்தின் நினைவில் வருகிறீர்கள். அதே போலவே முழு நாளில் ஒருவேளை இந்த ஐந்து சொரூபமும் அவ்வப்பொழுது வேறு வேறு காரியத்திற்கேற்றபடி நினைவில் வைத்தீர்கள் என்றால் நினைவு சொரூபம் ஆவதினால் மோகத்தை வென்றவராக ஆக மாட்டீர்களா என்ன? எனவே தான் கடினத்தின் காரணமாக நீங்கள் உங்கள் முகத்தைப் பார்ப்பதில்லை என்பது தான் இருந்தது என்று கூறினோம். எப்பொழுதும் காரியம் செய்து கொண்டே தன்னுடைய கண்ணாடியில் இந்த சொரூபங்களுக்குப் பதிலாக மற்ற சொரூபம் வந்து விடவில்லையே என்று இந்த சொரூபங்களைப் பாருங்கள்? ரூபமும் கெட்டுப் போகவில்லையே? பார்ப்பதினால் கெட்டுப்போன ரூபத்தை சரி செய்து விடுவீர்கள், மேலும் சகஜமாகவே சதா காலத்திற்காக மோகத்தை வென்றவராக ஆகி விடுவீர்கள். புரிந்ததா? இப்பொழுது மோகத்தை வென்றவராக எப்படி ஆவது என்ற இதையோ கூற மாட்டீர்கள் தான் இல்லையா? மோகத்தை வென்றவராக இப்படி ஆக வேண்டும். 'எப்படி' என்ற வார்த்தையை 'இப்படி' என்ற வார்த்தையில் மாற்றி விட வேண்டும். எப்படி நாம் தான் அந்த மாதிரி இருந்தோம், இப்பொழுது மீண்டும் அப்படி ஆகிக் கொண்டிருக்கிறோம் என்ற நினைவைக் கொண்டு வருகிறீர்கள். அதே போல் 'எப்படி' என்ற வார்த்தையை 'அப்படி' -யில் மாற்றி விட வேண்டும். எப்படி ஆவது' என்பதற்குப் பதிலாக 'இப்படி ஆவது, இதில் மாற்றம் செய்து விட்டீர்கள் என்றால் எப்படி இருந்தீர்களோ அப்படி ஆகி விடுவீர்கள். 'எப்படி' என்ற வார்த்தை அகன்று விட்டது என்றால் 'அப்படி' ஆகியே விடுவீர்கள். நல்லது.

# 1972 அவ்யக்த முரளி

ஒரு நொடியில் தன்னை நினைவு மறந்த நிலையிலிருந்து நினைவு சொரூபத்தில் கொண்டு வரக்கூடிய மோகத்தை வென்ற, எப்பொழுதும் நினைவு சொரூபம் ஆகக்கூடிய சக்திசாலியான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவும் நமஸ்காரமும்.

**வரதானம்: சத்தியத்தின் மகான் நிலை மூலமாக எப்பொழுதும் குஷியின் ஊஞ்சலில் ஆடக்கூடிய அதிகார சொரூபமானவர் ஆகுக!**

சத்தியத்தின் அதிகார சொரூபமுள்ள குழந்தைகளின் மகிமையாக சத்தியம் இருக்கிறது என்றால் நடனம் ஆடுங்கள் என்பது இருக்கிறது. சத்தியம் என்ற படகு ஆடும், ஆனால் மூழ்க முடியாது. உங்களை யாராவது எவ்வளவு தான் அசைக்க முயற்சி செய்தாலும் நீங்கள் சத்தியத்தின் மகான் நிலை மூலமாக இன்னும் அதிகமாக குஷியின் ஊஞ்சலில் ஆடுகிறீர்கள். அவர்கள் உங்களை ஆட்ட (அசைக்க) வில்லை, ஆனால் ஊஞ்சலை ஆட்டுகிறார்கள். இது ஆட்டுவதில்லை, (அசைப்பதில்லை) ஆனால் ஊஞ்சலாட்டுவதாகும், எனவே நீங்கள் அவர்களிடம் நீங்கள் ஊஞ்சலை ஆட்டுங்கள், நாங்களோ தந்தையுடன் ஊஞ்சல் ஆடுகிறோம் என்று அவர்களுக்கு நன்றி கூறுங்கள்.

**சுலோகன்: அனைத்து சக்திகளின் லைட் எப்பொழுதும் உடன் இருக்கிறது என்றால் மாயா அருகில் வர முடியாது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.07.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தூய்மையின்மை மற்றும் (வியோகம்) யோகமற்ற நிலையை அழிக்கும் சக்திகள் தான் அசுரர்களை அழிப்பவைகள்!

வந்த உடனேயே தந்தை மூலமாக முக்கியமாக எந்த இரண்டு வரதானங்கள் கிடைத்திருக்கின்றன? அந்த முக்கியமான இரண்டு வரதானங்களை தெரிந்திருக்கிறீர்களா? வந்தவுடனேயே முதன் முதலில் 'யோகி பவ' மற்றும் 'பவித்ர பவ' என்ற இரண்டு வரதானங்கள் கிடைத்திருக்கின்றன. இத்தனை வருடங்களின் ஞானத்தின் சாரமாக ஒரு நொடியில் உலகத்தினருக்கும் இந்த வார்த்தைகளைத்தான் கூறுகிறீர்கள் இல்லையா? முயற்சி செய்வதின் லட்சியம் மற்றும் பிராப்தியும் கூட இது தான் இல்லையா? மேலும் சம்பூர்ண நிலை மேலும் சித்தியின் பிராப்தியும் கூட இதுவாகத்தான் இருக்கிறது. அப்படி முதன்முதலில் வந்தவுடன் என்ன வரதானம் கிடைத்திருக்கிறது, மேலும் உங்கள் அனைத்து ஆத்மாக்களின் உண்மையான சொரூபம் இது தான் என்று நினைவூட்டப்பட்டிருக்கிறது என்றால் அந்த முதல் நினைவு மற்றும் அந்த வரதானத்தை பிராப்தி செய்து வாழ்க்கையில் அந்த இரண்டு விஷயங்களின் மேல் தாரணை செய்தாகி விட்டதா? அதாவது யோகி பவ மற்றும் பவித்ர பவ என்று அப்படி வாழ்க்கை ஆகி விட்டதா அல்லது இப்பொழுது ஆக்கிக் கொண்டிருக்கிறீர்களா? தாரணை மூர்த்தியாக ஆகி விட்டீர்களா அல்லது இப்பொழுது தாரணை செய்து கொண்டிருக்கிறீர்களா? அதுவோ மிகவும் பொதுவான விஷயம் தான் இல்லையா? முழு நாளில் அனேக தடவை இந்த இரண்டு விஷயங்களை வர்ணனை செய்திருப்பீர்கள். அப்படியானால் இந்த இரண்டு விஷயங்களும் தாரணை ஆகி விட்டதா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறதா? ஒருவேளை யோகி நிலையில் கொஞ்சமாவது

வியோக் (தொடர்பு அறுந்த நிலை) இருக்கிறது. போகி என்றோ கூற மாட்டோம். மற்றபடி இந்த இரண்டு நிலை இருக்கிறது. அப்படி எப்பொழுதாவது மாயா யோகியிலிருந்து வியோகியாக ஆக்கி விடுகிறது. யோகாவின் கூடவே ஒருவேளை வியோகமும் இருக்கிறது என்றால் யோகி என்று கூற முடியுமா என்ன? நீங்கள் கூட ஒருவேளை தூய்மையில் கொஞ்சமாவது தூய்மை யின்மை ருக்கிறது என்றால் அதை என்னவென்று கூறலாம் என்று மற்றவர்களுக்கு கூறுகிறீர்கள் இல்லையா. இப்பொழுது கூட நீங்கள் வியோகியா என்ன? அல்லது வியோகி ஆகி விடுகிறீர்களா என்ன? சக்கரவர்த்தி ராஜா ஆகும் சம்ஸ்காரம் இருக்கும் காரணத்தினால் இரண்டிலுமேயே சுற்றி வருகிறீர்களா என்ன? சில நேரம் யோகாவில், சில நேரம் வியோகத்தில்? நீங்கள் உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களையும் இந்த சக்கரத்திலிருந்து விடுவிப்பவர்கள் தான் இல்லையா? அல்லது தந்தை விடுவிப்பவர் மற்றும் நீங்கள் சுற்றி வருபவர்களா? அப்படியானால் யார் சக்கரத்திலிருந்து விடுவிப்பவரோ அவர் தானே சக்கரத்தில் சுற்றி வருவாரா? அப்படியானால் அனைவரையும் எப்படி விடுவிப்பது? எப்படி பக்தி மார்க்கத்தின் அனேக விதமான வீணான சுழற்சியிலிருந்து விடுபட்டு இருக்கிறீர்கள். அப்பொழுது தான் தன்னுடைய நிச்சயம் மற்றும் போதையின் ஆதாரத்தில் மற்ற அனைவர்களுக்கும் இந்த பக்தியின் சுழற்சியிலிருந்து விடுபடுங்கள் என்று சவால் விடுகிறீர்கள். அதே போல் அது உடல் மூலமாக சுற்றி வருவது மற்றும் இது மனம் மூலமாக சுற்றி வருவது. அப்படியானால் உடல் மூலமாக சுற்றி வருவதை இப்பொழுது விட்டு விட்டீர்களா? மற்றபடி மனதின் சுற்றுதலிலிருந்து இன்னும் விடுபடவில்லையா? சில நேரம் வியோகம் மற்றும் சில நேரம் யோகம் என்ற இந்த சக்கரத்தை மனம் மூலமாகத் தான் சுற்றி வருகிறீர்கள். மாஸ்டர் சர்வ சக்திவானைக் கூட சுழற்சியில் கொண்டு வந்து விடும் அளவிற்கு இன்னும் மாயாவின் அந்தளவு சக்தி இருக்கிறதா? இது இப்பொழுது வரை மாயாவை இவ்வளவு சக்திசாலியானதாக பார்த்து மாயாவை மயக்கம் அடையச் செய்வது மற்றும் மாயாவை தோல்வி அடையச் செய்வது தெரியாதா? இப்பொழுது வரை நம் மேல் தாக்குதல் செய்து கொண்டிருக்கிறது என்று அதை பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களா? இப்பொழுதோ சக்திசேனை மற்றும் பாண்டவ சேனையாகிய நீங்கள் பிற ஆத்மாக்களின் மேல் மாயாவின் தாக்குதலைப் பார்த்து இரக்க மனமுடையவராகி இரக்கம் காட்டும் நேரம்

வந்திருக்கிறது. இப்பொழுது வரை தன் மேல் கூட இரக்கம் காட்டவில்லையா என்ன? இப்பொழுதோ சக்திகளின் சக்தியை மற்ற ஆத்மாக்களின் சேவைக்காக காரியத்தில் ஈடுபடுத்துவதற்காக இருக்கிறது. இப்பொழுது தனக்காக சக்தியை காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான நேரம் இல்லை. இப்பொழுது சக்திகளின் கடமை உலக நன்மைக்கானது ஆகும். உலகிற்கு நன்மை செய்பவர் என்று பாடப்பட்டிருக்கிறீர்களா மற்றும் தனக்கு நன்மை செய்பவராக இருக்கிறீர்களா? பெயர் என்னவாக இருக்கிறது மேலும் காரியம் என்னவாக இருக்கிறது. பெயர் ஒன்று, காரியம் இன்னொன்று என்று அப்படி இருக்கிறதா? எப்படி லௌகீக ரூபத்தில் கூட எப்பொழுது அலட்சியம் நிறைந்த சிறுவர்கள் இருக்கிறார்கள் என்றால், பொறுப்பு இருப்பதில்லை என்றால் நேரம். சக்தி மற்றும் செல்வத்தை தனக்காகத் தான் ஈடுபடுத்துவார் ஆனால் எப்பொழுது எல்லைக்குட்பட்ட படைப்பவராக ஆகி விடுகிறார் என்றால், என்னென்ன சக்திகள் மற்றும் நேரம் இருக்கிறதோ அவற்றை படைப்பின் பொருட்டு ஈடுபடுத்திவிடுகிறார்கள்.

அப்படியானால் இப்பொழுது நீங்கள் யாராக இருக்கிறீர்கள்? இப்பொழுது மாஸ்டர் படைப்பவர், ஜகத்மாதாவாக ஆகவில்லையா? உலகத்திற்கு நன்மை செய்பவராக ஆகவில்லையா? உலகிற்கு ஆதாரமானவராக ஆகவில்லையா? எப்படி ஒரு விநாடியின் பார்வை மூலமாக அசுரனை சம்ஹாரம் செய்பவர்கள் என்று சக்திகளின் மஹிமை இருக்கிறது என்றால் தன்னிடமிருந்து அசுர சம்ஸ்காரம் மற்றும் தூய்மையின்மையை ஒரு நொடியில் சம்ஹாரம் செய்யவில்லையா? அல்லது மற்றவர்களுக்காக சம்ஹாரினியாக இருக்கிறீர்கள், தனக்காக இல்லை என்று அப்படியா? இப்பொழுதோ மாயா ஒருவேளை எதிர்க்கிறது என்றாலும் அதனுடைய நிலைமை என்ன ஆக வேண்டும்? எப்படி தொட்டால்சுருங்கி மரத்தை பார்த்திருக்கிறீர்கள் இல்லையா. ஒருவேளை யாராவது கொஞ்சம் தொட்டால் கூட சக்தியில்லாததாக ஆகி விடும். அதற்கு நேரம் எடுப்பதில்லை. அப்படி உங்களுடைய ஒரு நொடியின் சுத்தமான எண்ணத்தின் சக்தி மூலமாக மாயா தொட்டால்சுருங்கி போல மயக்கமடைந்து விட வேண்டும். அந்த மாதிரியான நிலை வரவில்லையா? உலக நன்மைக்கான காரியத்திற்கு மட்டும் கொஞ்ச நேரம் இருக்கிறது என்று இப்பொழுது அதை மட்டும் நினையுங்கள். இல்லையென்றால்

உலகத்திலுள்ள ஆத்மாக்கள் உங்கள் மேல் பழி சொல்வார்கள், நீங்கள் இத்தனை வருடங்கள் இவ்வளவு பாலனை எடுத்திருக்கிறீர்கள் இருந்தாலும் 'யோகி பவ', 'பவித்ர பவ' ஆகிக் கொண்டிருக்கிறோம் என்று கூறுகிறீர்கள், மேலும் இப்பொழுது கொஞ்ச நேரத்தில் ஆஸ்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று எங்களுக்குக் கூறுகிறீர்கள் என்று உங்கள் மேல் புகார் கூறுவார்கள். உங்களுடைய புகாரை உங்கள் மேலேயே கூறுவார்கள். பின்பு நீங்கள் என்ன கூறுவீர்கள்? இப்பொழுது ஆகிக் கொண்டிருக்கிறோம் மற்றும் ஆவோம், செய்வோம். என்ற இந்த பாஷையையும் இப்பொழுது மாற்ற வேண்டும். இப்பொழுது மாஸ்டர் படைப்பவராக ஆக வேண்டும். உலகிற்கு நன்மை செய்பவராக ஆகுங்கள். இப்பொழுது தன்னுடைய முயற்சி செய்வது, நேரம் கொடுப்பது என்ற காலம் கடந்து விட்டது. இப்பொழுது மற்றவர்களை முயற்சி செய்விப்பதில் ஈடுபடுத்துங்கள். ஒவ்வொரு நாளும் ஏறும் கலை என்று கூறுகிறீர்கள் என்றால் ஏறும் கலை அனைவருக்கும் நன்மை என்ற இந்த லட்சியத்தை ஒவ்வொரு விநாடியும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். யார் தனக்காக நேரத்தை செலவழிக்கிறாரோ அவர் அதை மற்றவர்களின் சேவையில் ஈடுபடுத்துவதினால் தானாகவே தன்னுடைய சேவை நிச்சயமாக நிறைவேறி விடும். தன்னுடைய முன்னேற்றத்திற்காக பழைய வழிமுறைகளை மாற்றம் செய்யுங்கள். எப்படி நேரம் மாறிக் கொண்டே செல்கிறது, பிரச்சனைகள் மாறிக் கொண்டே இருக்கிறது. இயற்கையின் வடிவங்கள் மாறிக் கொண்டே இருக்கிறது, அதே போல் தன்னையும் இப்பொழுது மாற்றத்தில் கொண்டு வாருங்கள். அதே பழக்க வழக்கம், அதே வேகம், அதே பாஷை, அதே மாதிரி பேசுவது இவையனைத்தும் இப்பொழுது மாற வேண்டும். நீங்கள் உங்களையே மாற்றவில்லை என்றால் உலகை எப்படி மாற்றுவீர்கள். எப்படி தமோகுணம் மிக அதிக அளவில் சென்று கொண்டிருக்கிறது. இந்த அனுபவம் ஏற்படுகிறது தான் இல்லையா? அப்படியானால் பின்பு நீங்கள் அதீந்திரிய சுகத்தில் இருங்கள். அவர்கள் வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஏற்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறீர்கள். அவர்களுக்கு இறங்கும் கலை உங்களுடையது ஏறும் கலை. இப்பொழுது சுகத்தை அதீந்திரிய சுகத்தில் கொண்டு வர வேண்டும். எனவே கடைசி நிலைக்கான மகிமையாக அதீந்திரிய சுகத்தை பற்றி கோப கோபியர்களிடம் கேளுங்கள் என்பது இருக்கிறது. சுகம் அளவுக்கு அதிகமாக இருப்பதினால் துக்கமான எண்ண அலைகளும் முடிவடைந்து

விடும். எனவே இப்பொழுது செய்வோம்.ஆவோம்... என்ற இதைக் கூறாதீர்கள். ஆகி, ஆக்கிக் கொண்டிருக்கிறோம் என்பது இருக்கட்டும். இப்பொழுது சேவைக்காக மட்டும் தான் இந்த பழைய உலகத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். இல்லையென்றால் எப்படி பாபா (பிரம்மாபாபா) அவ்யக்தமானார், அதே போல் உங்களையும் உடன் அழைத்துச் சென்றிருப்பார் ஆனால் சக்திகளின் பொறுப்பாக, கடைசி நேரத்து காரியத்தின் பங்கு நாடகத்தில் அடங்கியிருக்கிறது. இந்த பாகத்திற்காக மட்டும் தான் பாபா அவ்யக்தவதனத்தில் மற்றும் நீங்கள் இவ்வுலகத்தில் இருக்கிறீர்கள். உலகியல் உணர்வுகளில் மாட்டிக் கொண்டிருக்கும் ஆத்மாக்களை இந்த உலகியல் உணர்விலிருந்து விடுவிப்பதற்கான காரியம் ஆத்மாக்கள் உங்களுடையது. எனவே எந்தக் காரியத்திற்காக இந்த ஸ்தூல உலகத்தில் எதுவரை இருக்கிறீர்களோ அதுவரை அதே காரியத்தை செய்வதில் ஈடுபட்டு விடுங்கள். அது வரை தந்தையும் உங்கள் அனைவரையும் சூட்சும வதனத்தில் அழைத்துக் கொண்டிருக்கிறார் ஏனென்றால் வீட்டிற்கோ உடன் செல்ல வேண்டும் தான் இல்லையா. நீங்கள் இல்லாமல் தந்தையும் தனியாக வீட்டிற்குச் செல்ல முடியாது. எனவே இப்பொழுது மிக வேகமாக இந்த ஸ்தூல உலகத்தின் காரியத்தை செய்யுங்கள். பின்பு உடன் வீட்டிற்குச் செல்வோம், மேலும் தன்னுடைய இராஜ்யத்தில் இராஜ்யம் செய்வீர்கள். இப்பொழுது எவ்வளவு காலமாக அவ்யக்த வதனத்தில் உங்களை அழைத்துக் கொண்டிருப்போம். எனவே தந்தைக்குச் சமமாக ஆகுங்கள். தந்தை உலகிற்கு நன்மை செய்பவராக ஆனதினால் தன்னைத் தானே முழுமையானவராக ஆக்க முடியவில்லையா என்ன? ஆக்கியிருக்கிறார் இல்லையா. அப்படி, எப்படி தந்தை ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு காரியத்தை குழந்தைகளுக்காக மற்றும் உலகின் ஆத்மாக்களுக்காக ஈடுபடுத்தினார் அதே போல் தந்தையைப் பின்பற்றி நடங்கள். நல்லது.

அப்படி ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு காரியத்தை உலக நன்மை காரியத்திற்காக ஈடுபடுத்தக்கூடிய, தந்தைக்குச் சமமாக ஆகக்கூடிய, குழந்தைகளுக்காக அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: தன்னுடைய அனாதி மற்றும் ஆதியின் உண்மையான ரூபத்தை உணரக்கூடிய சம்பூர்ண பவித்ரம் ஆகுக!**

# 1972 அவ்யக்த முரளி

ஆத்மாவின் அனாதி மற்றும் ஆதி இரண்டு காலத்தின் ஒரிஜினில் சொரூபம் தூய்மை ஆகும். தூய்மையின்மை போலியானது. சூத்திரர்களினால் கொடுக்கப்பட்டது. சூத்திரர்களின் பொருளை பிராமணர்கள் உபயோகிக்க முடியாது. எனவே அனாதி உண்மையான ரூபத்தில் நான் பவித்ர ஆத்மா ஆவேன் என்ற இந்த எண்ணத்தை மட்டும் வையுங்கள். யாரைப் பார்த்தாலும் அவருடைய உண்மையான ரூபத்தைப் பாருங்கள். உண்மையை உணருங்கள். பின்பு சம்பூர்ண தூய்மையாகி முதல் வகுப்பு மற்றும் ஏர் கண்டிஷன் டிக்கெட்டிற்காக அதிகாரி ஆகி விடுவர்கள்.

**சுலோகன்: பரமாத்ம ஆசீர்வாதங்களினால் தன்னுடைய பையை நிரப்பி விட்டீர்கள் என்றால் மாயா அருகில் வர முடியாது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 02.08.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒவ்வொரு காரியத்தையும் விதிப்பூர்வமாக செய்வதினால் ஸித்தியின் (வெற்றியின்) பிராப்தி!

தன்னை விதி மூலமாக சித்தியை (வெற்றியை) அடைந்தவர் என்று நினைக்கிறீர்களா? ஏனென்றால் என்னென்ன முயற்சி செய்கிறீர்கள், அந்த முயற்சி செய்வதின் லட்சியமே விதி மூலம் சித்தியை அடைவது. விதி மற்றும் சித்தி இது தான் யதார்த்தமானது, இதையே இன்னொரு ரூபத்தில் எடுத்த காரணத்தினால் ரித்தி சித்தியில் மந்திர தந்திரத்தில்) சென்று விட்டார்கள். அப்படி தன்னை சித்தி சொரூபமானவர் என்று நினைக்கிறீர்களா? என்னென்ன எண்ணத்தை உருவாக்குகிறீர்களோ அவை ஒருவேளை யதார்த்தமாக விதிப்பூர்வமானதாக இருக்கிறது என்றால் அதனுடைய ரிசல்ட் (முடிவு) என்னவாக இருக்கும்? சித்தி அதாவது வெற்றி அப்படி ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியம் ஒருவேளை விதிப்பூர்வமாக இருக்கிறது என்றால் அவசியம் சித்தி ஏற்படுகிறது. ஒருவேளை சித்தி இல்லை என்றால் விதிப்பூர்வமும் இல்லை என்பதாகும். எனவே பக்தியில் கூட என்ன காரியம் செய்கிறார்கள் மற்றும் செய்விக்கிறார்களோ அதனுடைய மதிப்பே விதியின் மேல் தான் இருக்கிறது. விதிப்பூர்வமாக இருக்கும் காரணத்தினால் அந்த சித்தியை அனுபவம் செய்கிறார்கள். அனைத்தும் இங்கிருந்து தான் தொடங்கியது இல்லையா? எனவே தான் கேட்கிறோம் தன்னை சித்தி சொரூபமானவர் என்று நினைக்கிறீர்களா அல்லது இப்பொழுது தான் ஆக வேண்டுமா? நேரத்திற்கு ஏற்றபடி இரண்டு களங்களிலும் இதுவரை 95 சதவிகிதம் ரிசல்ட்டாக அவசியம் இருக்க வேண்டும். ஏனென்றால் எப்படி நேரத்தின் வேகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், மேலும் சவாலும் விடுகிறீர்கள், அப்படி எப்பொழுது உங்கள் அனைவரின் நிலை முழுமையாகுமோ அப்பொழுது தான் விட்ட சவாலும் நிறைவேறும். இப்பொழுது என்ன சவால் விடுகிறீர்களோ அந்த

மாற்றம் எதன் ஆதாரத்தில் ஏற்படும்? அதனுடைய அஸ்திவாரம் யார்? நீங்கள் தான் அஸ்திவாரம் இல்லையா? ஒருவேளை அஸ்திவாரம் தயாராகி விட்டது என்றால் பின்பு அதன் பிறகு வரிசைக்கிரமமாக ராஜதானியும் தயாராகி விடும். அப்படி யாருக்கு இராஜ்யம் செய்வதற்கான அதிகாரியாக ஆக வேண்டுமோ அவர்கள் தங்களுடைய அதிகாரத்தை எடுக்கவில்லை என்றால் மற்றவர்களுக்கு வரிசைக்கிரமமாக எப்படி அதிகாரம் பிராப்தி ஆகும்? என்ன உலக மாற்றக் காரியம் நடக்க வேண்டுமோ அது எதுவரை உங்களுடைய நிலையை விதி மூலமாக சித்தி அடையச் செய்யாமல் இருக்கிறீர்கள் என்றால், பின்பு இந்த உலக நன்மைக்கான காரியத்திலும் எப்படி வெற்றி ஏற்படும்? முதலில் தன்னுடையதின் சித்தி ஏற்படும். இவ்வளவு பெரிய காரியம், இவ்வளவு குறைந்த நேரத்தில் நிறைவேற வேண்டும் என்றால் எவ்வளவு அதிக வேகம் இருக்க வேண்டும். இதற்காக ஏதாவது திட்டத்தை உருவாக்குகிறீர்களா? வேகத்தை எப்படி முழுமையாக்குகிறீர்கள்? சித்தி சொரூபம் ஆவது என்றால் நினைத்தீர்கள் மற்றும் சித்தி ஆனது. இது தான் 100-சதவிகித சித்தி சொரூபத்தின் அடையாளமாகும். காரியம் செய்தீர்கள் மற்றும் சித்தி கிடைத்தது. எப்பொழுது சாதாரண ஞானத்தின் ஆதாரத்தில் ரித்தி சித்தியை பிராப்தி செய்ய முடியும் என்றால், இந்த உயர்ந்த ஞானத்தின் ஆதாரத்தில் விதி மூலமாக சித்தியை பிராப்தி செய்ய முடியாதா? எந்த விதியில் குறைவு காரணமாக சித்தியும் முழுமையாக ஆவதில்லை என்று சோதனையும் செய்ய வேண்டும். விதியை சோதிப்பதினால் சித்தி தானாகவே சரியாகி விடும். இதிலும் சித்தி பெறாமல் இருப்பதற்கான முக்கிய காரணம் ஒரே நேரத்தில் மூன்று ரூபத்திலும் சேவை செய்வதில்லை. மூன்று ரூபத்தில் மற்றும் மூன்று விதத்தில் ஒரே நேரத்தில் சேவை செய்ய வேண்டும். ஞானம் நிறைந்த, சக்தி நிறைந்த மற்றும் அன்பு நிறைந்த நிலை. லவ் மற்றும் லா (அன்பு மற்றும் சட்டம்) இரண்டும் சேர்ந்தே வந்து விடுகின்றன. இந்த மூன்று ரூபத்திலோ சேவை செய்யத்தான் வேண்டும் ஆனால் மூன்று விதமாகவும் செய்ய வேண்டும் அதாவது எண்ணம், சொல், செயல் மூன்று விதத்திலும் மற்றும் ஒரே நேரத்தில் மூன்று ரூபத்தில் செய்ய வேண்டும். வாய்மொழி மூலம் சேவை செய்கிறீர்கள் என்றால், மனநிலையும் சக்திசாலியாக இருக்க வேண்டும். சக்திசாலியான நிலை மூலமாக அவருடைய மனதின் எண்ணங்களையும் மாற்றம் செய்து விடுவீர்கள். மேலும் வாய்மொழி மூலமாக அவரை ஞானம் நிறைந்தவராக ஆக்கி

விடுவீர்கள். மேலும் பின்பு காரியம் அதாவது அவருடைய நெருக்கத்தில் வருகிறீர்கள் அந்த நெருக்கம் அந்த மாதிரி அன்பு நிறைந்ததாக இருக்க வேண்டும் அதனால் அவர் தானாகவே நான் என்னுடைய இறை குடும்பத்தில் வந்து சேர்ந்து விட்டேன் என்று உணர வேண்டும். அந்த நடத்தையே அப்படி இருக்க வேண்டும் அதன் மூலம் இது தான் என்னுடைய உண்மையான குடும்பம் என்று உணர வேண்டும். ஒருவேளை இந்த மூன்று விதத்தில் அவருடைய மனநிலையையும் கட்டுப்படுத்தி விட்டீர்கள் மேலும் வாய்மொழி மூலம் ஞானம் கொடுத்து லைட், மைட்டின் வரதானம் கொடுங்கள். மேலும் காரியம் அதாவது நெருக்கம் மூலமாக தன்னுடைய ஸ்தூல செயல்பாடுகள் மூலமாக இறை குடும்பத்தின் அனுபவம் செய்வித்தீர்கள் என்றால் இந்த விதிப்பூர்வமான சேவை செய்தீர்கள் என்றால் சித்தி கிடைக்காதா? ஒரே நேரத்தில் மூன்று விதத்தில் மற்றும் மூன்று ரூபத்தில் சேவை செய்வதில்லை. எப்பொழுது வாய்மொழியில் வருகிறீர்கள் என்றால், சக்திசாலியாக இருக்க வேண்டிய மனம் சக்தி குறைந்து விடுகிறது. எப்பொழுது ரமணீகரமான நடவடிக்கை மூலம் யாரையாவது நெருக்கத்தில் கொண்டு வந்தீர்கள் என்றாலும், மனநிலை சக்திசாலியாக இருக்க வேண்டியது அது இருப்பதும் இல்லை. அப்படி ஒரே நேரத்தில் மூன்றும் ஒன்றாக இருக்கிறது என்றால் அவசியம் சித்தி கிடைக்கும். இந்த விதத்தில் சேவை செய்வதற்கான பயிற்சி மற்றும் கவனம் இருக்க வேண்டும். நெருக்கத்தில் வருவதில்லை, ஆழமான நெருக்கத்தில் இல்லை மேலோட்டமான நெருக்கத்தில் வருகிறீர்கள். அந்த மேலோட்டமான நெருக்கம் அற்பகாலத்திற்காக இருக்கிறது. அன்பில் கொண்டு வந்தாலும் கூட, ஆனால் அன்பு நிறைந்ததின் கூடவே சக்தி நிறைந்ததாகவும் இருக்கட்டும். அந்த ஆத்மாக்களிலும் சக்தி நிரப்ப வேண்டும் அதன் மூலம் பிரச்சனைகளை வாயுமண்டலத்தை, வைப்ரேஷனை எதிர்நோக்கி நிரந்தரமாக சம்மந்தத்தில் இருக்க வேண்டும். அது ஏற்படுவதில்லை அல்லது ஞானத்தின் மேலோ கவரப்படுகிறார்கள் மற்றும் அன்பின் மேலும் கவரப்படுகிறார்கள். அதிகமாக அன்பின் மேல் ஆகிறார்கள், இரண்டாம் நம்பராக ஞானத்தின் மேல் ஆனால் எந்த விஷயம் எதிரில் வந்தாலும் ஆடாத அளவிற்கு சக்தி நிறைந்ததாக இருக்க வேண்டும். இப்பொழுது இந்தக் குறை இருக்கிறது. யார் சேவைக்குத் தகுதியான பொறுப்பில் இருப்பவர்களாக ஆகியிருக்கிறார்கள் அவர்களிலும் ஞானம் அதிகமாக இருக்கிறது. அன்பும் இருக்கிறது ஆனால் சக்தி குறைவாக இருக்கிறது.

சக்திசாலியான நிலையின் அடையாளம் என்னவாக இருக்கும்? ஒரு நொடியில் எந்தவொரு சுற்றுப்புறச்சூழல் மற்றும் சூழ்நிலையை மாயாவின் எந்தவொரு பிரச்சனையையும் அழித்து விடுவார்கள். ஒருபொழுதும் தோல்வி அடைய மாட்டார்கள். எந்த ஆத்மாக்களும் பிரச்சனை ரூபமாகி வருகிறார்கள் அவர்கள் இவர் மேல் பலியாகி விடுவார்கள் இதை மற்றொரு வார்த்தைகளில் இயற்கை தாசியாகி இருக்கிறது என்று கூறலாம். எப்பொழுது ஐந்து தத்துவங்கள் தாசியாக முடியும் என்றால் மனித ஆத்மாக்கள் பலியாக மாட்டார்களா? அப்படி சக்திசாலியான நிலைக்கான நடைமுறை ரூபம் இதுவாகும். எனவே ஒரே நேரத்தில் மூன்று ரூபத்திலும் சேவை செய்வதின் வடிவம் எப்பொழுது ஆகி விடுமோ அப்பொழுது ஒவ்வொரு காரியத்திலும் சித்தி தென்படும் என்று கூறப்படுகிறது. விதியின் காரணமாக சித்தி ஏற்பட்டது இல்லையா? விதியில் குறை ஏற்படும் காரணத்தினால் சித்தியில் குறை ஏற்படுகிறது. இப்பொழுது சித்தி சொரூபம் ஆவதற்காக இந்த விதியை முதலில் சரி செய்யுங்கள். பக்தி மார்க்கத்தில் சாதனா செய்கிறார்கள். இங்கு சாதனம் இருக்கிறது. சாதனம் எது? பாப்தாதாவின் ஒவ்வொரு விசேஷத்தை தன்னில் தாரணை செய்து செய்து, விசேஷ ஆத்மா ஆகி விடுவார்கள். எப்பொழுது தேர்வுக்கான நாள் அருகில் வருகிறது என்றால் என்னென்ன படிப்பு படித்திருந்தார்களோ பாடம் மற்றும் நடைமுறை பயிற்சி இரண்டையும் ரிவைஸ் செய்து எந்தெந்த பாடத்தில் என்ன குறை இன்னும் இருந்து விட்டது என்று சோதனை செய்வார்கள். இதே விதமாக எப்பொழுது நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது என்றால் ஒவ்வொரு பாடத்திலும் எந்த குறை மற்றும் எத்தனை சதவிகிதத்தில் குறையாக இருந்து விட்டது என்று உங்களை நீங்களே பாருங்கள். தேரியிலும் மற்றும் பிராக்டிகல் இரண்டிலும் சோதனை செய்ய வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் பார்த்துக் கொண்டே தன்னைத் தானே முழுமை ஆக்கிக் கொண்டே செல்லுங்கள் ஆனால் எப்பொழுது முதலில் ரிவைஸ் செய்து தன்னுடைய குறை தெரிய வந்து விடுமோ அப்பொழுது தான் முழுமையாவீர்கள். பாடத்தையோ தெரிந்திருக்கிறீர்கள். பாடத்தை புத்தியில் தாரணை செய்வீர்களா அல்லது இல்லையா? என்று அதை எப்படித் தெரிந்து கொள்வது? எப்படி சித்தியின் சதவிகிதம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என்றால், நேரமும் வீணாகச் செல்லாது. கொஞ்ச நேரத்தில் வெற்றி அதிகமாகக் கிடைக்கும். இதைத்தான் சித்தி என்று கூறுவது, ஒருவேளை நேரம் அதிகம், உழைப்பும் அதிகமாகச்

செய்கிறீர்கள் பிறகு வெற்றி கிடைக்கிறது என்றால் இதையும் சதவிகிதக்குறை என்று தான் கூறுவோம். அனைத்து விதத்திலும் குறைவாக பயன்படுத்தப்பட வேண்டும். உடலும் குறைவாக, மனதின் எண்ணமும் குறைவாக உபயோகிக்கப்பட வேண்டும். இல்லையென்றால் நினைக்கிறீர்கள், திட்டத்தை உருவாக்கி உருவாக்கி ஒரு மாதம், ஒன்றரை மாதம் ஆகி விடுகிறது. அப்படி நேரம் மற்றும் எண்ணம் மற்றும் தன்னுடைய என்னென்ன சக்திகள் இருக்கின்றன. அந்த அனைத்து சக்திகளின் பொக்கிஷத்தை அதிகமாக காரியத்தில் ஈடுபடுத்த வேண்டாம். குறைந்த செலவில் அதிக பலன்! எண்ணமும் எதனால் சித்தி ஏற்பட்டு விடுமோ அவை தான் உருவாகும். நேரமும் அந்த அளவு தான் நிச்சயம் செலவாகும் எதில் வெற்றி ஏற்கனவே அடங்கியிருக்கிறதோ, இதையே தான் சித்தி சொரூபம் என்று கூறுவோம். அப்படி அனைத்து பாடங்களிலும் நான் எதுவரை தேர்ச்சி பெற்றிருக்கிறேன் என்ற இதை எப்படி தெரிந்து கொள்வது? யார் எத்தனை சப்ஜெக்டில் (பாடத்தில்) தேர்ச்சி பெறுவாரோ அந்த அளவே அந்த சப்ஜெக்டின் ஆதாரத்தில் ஆப்ஜெக்ட் (இலக்கு) மற்றும் ரெஸ்பெக்ட் (மரியாதை) கிடைக்கும். ஒன்றோ பிராப்தியின் அனுபவம் ஏற்படும். எப்படி ஞானத்தின் சப்ஜெக்ட் இருக்கிறது அதன் மூலமாக என்ன ஆப்ஜெக்ட் பிராப்தி ஆகிறது - லைட் மற்றும் மைட், (ஞான ஒளி மற்றும் சக்தி) இந்த பிராப்தியின் அனுபவம் செய்வார். அந்த ஞானத்தின் சப்ஜெக்டின் ஆதாரத்தில் தெய்வீக பரிவாரத்திலிருந்தும் மற்ற ஆத்மாக்களிலிருந்தும் அந்த அளவே மரியாதையும் கிடைக்கும். எப்படி பாருங்கள், இன்றைய நாட்களில் மகாத்மாக்களுக்கு இவ்வளவு மரியாதை ஏன் கிடைக்கிறது? ஏனென்றால் என்ன சாதனா செய்திருக்கிறார்களோ, என்னென்ன சப்ஜெக்டை நன்றாக படித்திருக்கிறார்களோ அதனுடைய ஆப்ஜெக்ட் மற்றும் ரெஸ்பெக்ட் அவர்களுக்குக் கிடைக்கிறது. இயற்கை தாசியாக ஆகி விடுகிறது. அப்படி இந்த ஒரு ஞானத்தின் விஷயத்தைக் கூறினோம். அதே போல் யோகத்தினுடைய சப்ஜெக்டும் இருக்கிறது. அதன் மூலம் என்ன ஆப்ஜெக்ட் இருக்க வேண்டும். யோகா என்றால் நினைவின் சக்தி மூலமாக அவர் என்னென்ன நினைப்பாரோ அது சக்திசாலியாக இருக்கும். மேலும் என்னென்ன பிரச்சனை வரப்போகிறதோ அவை முதலிலேயே யோகத்தின் சக்தி மூலம் இவை நடக்கப்போகின்றன என்று அவருக்கு அனுபவம் ஆகும். அப்படி முதலிலேயே தெரிந்து விடும் காரணத்தினால் ஒருபொழுதும் தோல்வி அடைய மாட்டார்கள். அது

போலவே யோகத்தின் சக்தி மூலமாக தன்னுடைய பழைய சம்ஸ்காரங்களின் விதை அழிந்து விடுகிறது. எந்தவொரு சம்ஸ்காரமும் தன்னுடைய முயற்சியில் தடையாக இருக்காது. எதை உங்களுடைய நேச்சர் (இயல்பு) என்று கூறுகிறீர்கள் அதுவும் முயற்சியில் தடை ரூபம் ஆகாது. அப்படி எந்த சப்ஜெக்டின் ஆப்ஜெக்ட்டாக என்ன இருக்கிறதோ அது அனுபவம் ஆக வேண்டும். ஆப்ஜெக்ட் இருக்கிறது என்றால் அதன் விளைவாக ரெஸ்பெக்ட் அவசியம் கிடைக்கும். நீங்கள் என்னென்ன வார்த்தைகளை உங்கள் வாயிலிருந்து கூறுவீர்களோ மற்றும் என்னென்ன திட்டத்தை உருவாக்குவீர்களோ அது சக்தி நிறைந்ததாக இருக்கும் காரணத்தினால் அனைவரும் மரியாதை கொடுப்பார்கள் அதாவது என்னென்ன அறிவுரையை ஒவ்வொருவருக்கும் கொடுக்கிறீர்களோ அந்த அறிவுரைக்கு அனைவரும் மரியாதை கொடுப்பார்கள் ஏனென்றால், அது சக்திசாலியானது. இந்த விதமாக ஒவ்வொரு சப்ஜெக்ட்டையும் பாருங்கள். திவ்ய குணங்களின் மற்றும் சேவையின் சப்ஜெக்ட் இருக்கிறது என்றால் அதனுடைய பிராப்தியாக நெருங்கிய நெருக்கத்தில் மற்றும் சம்மந்தத்தில் வர வேண்டும். நெருங்கிய நெருக்கம் உறவில் வருவதினால் தானாகவே அவசியம் ரெஸ்பெக்ட் கிடைக்கும். அதே போல் ஒவ்வொரு சப்ஜெக்ட்டின் ஆப்ஜெக்ட்டை சோதனை செய்யுங்கள். மேலும் ஆப்ஜெக்ட்டை சோதிப்பதற்கான சாதனம் ரெஸ்பெக்ட் ஆகும். ஒருவேளை நான் ஞானம் நிறைந்தவன் என்றால் யாருக்காவது ஞானம் கொடுத்தாலும் அவர்கள் அந்த ஞானத்திற்கு அவ்வளவு மரியாதை கொடுக்கிறார்களா? ஞானத்திற்கு ரெஸ்பெக்ட் தருவது என்றால், ஞானம் நிறைந்தவருக்கு ரெஸ்பெக்ட் தருவது, ஒருவேளை ஞானத்தின் சப்ஜெக்ட்டில் ஆப்ஜெக்ட் இருக்கிறது என்றால் இன்னும் யாருடைய எண்ணத்தையாவது மாற்றம் செய்து சக்திசாலியானதாக ஆக்க முடியும் என்றால், அவசியம் ரெஸ்பெக்ட் கொடுப்பார்கள். அப்படி இந்த முறையில் ஒவ்வொரு சப்ஜெக்ட்டிலும் செக்கிங் செய்ய வேண்டும். ஒவ்வொரு எண்ணத்தில் ஆப்ஜெக்ட் மற்றும் ரெஸ்பெக்ட் இரண்டின் பிராப்தியின் அனுபவத்தை செய்கிறார்கள் என்றால் பெர்ஃபெக்ட் (குறைவற்ற) என்று சொல்லுவோம். பெர்ஃபெக்ட் என்றால் எந்தவொரு எஃபெக்ட்டிலிருந்தும் (பாதிப்பிலிருந்தும்) விலகி பெர்ஃபெக்ட் ஆக இருப்பது. எஃபெக்ட்டிலிருந்து விலகியிருக்கிறார் என்றால் பெர்ஃபெக்ட் ஆவார். உடலினுடையதானாலும், எண்ணத்தினுடையதானாலும் அல்லது

ஏதாவது நெருக்கத்தில் வருவதினால் யாருடைய வைப்ரேஷன் மற்றும் சுற்றுப்புறச்சூழல் அனைத்து விதமான எஃபெக்ட்டிலிருந்து விலகி விடுவார். அப்படி சப்ஜெக்ட்டில் பாஸ் என்றால் பெர்ஃபெக்ட் என்று புரிந்து கொள்ளுங்கள். அந்த மாதிரி ஆகிக் கொண்டிருக்கிறீர்கள் தான் ,இல்லையா? லட்சியமோ இது தான் இல்லையா? இப்பொழுது தன்னுடைய செக்கிங் அதிகமாக இருக்க வேண்டும். எப்படி நேரத்தின் கூடவே தன்னையும் மாற்றத்தில் கொண்டு வாருங்கள் என்று மற்றவர்களுக்குக் கூறுகிறீர்களோ அதே போல் நேரத்தின் கூடவே தன்னையும் மாற்றத்தில் கொண்டு வர வேண்டும் என்ற இந்த நினைவு இருக்கட்டும். தன்னை மாற்றத்தில் கொண்டு வந்து வந்து உலகம் மாறி விடும். தன்னுடைய மாற்றத்தின் ஆதாரத்தில் உலகில் மாற்றம் கொண்டு வரும் காரியத்தை செய்ய முடியும். இந்த உயர்ந்த நிலை தான் மற்ற மனிதர்களிடம் இல்லை. அவர்கள் மற்றவர்களை மட்டும் மாற்றம் செய்வதின் முயற்சியில் இருக்கிறார்கள். இங்கு தன்னுடைய ஆதாரத்தில் உலகை மாற்றம் செய்கிறீர்கள் அப்படி எது ஆதாரமாக இருக்கிறதோ அதற்காக தன் மேல் இந்த அளவு கவனம் கொடுக்க வேண்டும், மேலும் என்னுடைய ஒவ்வொரு எண்ணத்திற்குப் பின்னால் உலக நன்மையின் சம்மந்தம் இருக்கிறது என்ற நினைவு எப்பொழுதும் இருக்கட்டும். யார் ஆதார மூர்த்திகளாக இருக்கிறார்களோ அவர்களின் எண்ணங்களில் சக்தி இல்லை என்றால். நேரத்தின் மாற்றத்திலும் பலஹீனம் ஏற்பட்டு விடுகிறது. இந்தக் காரணத்தினால் எவ்வளவுக்கு எவ்வளவு சுயம் தான் சக்திசாலி ஆகுகிறீர்களோ, அந்த அளவே உலகத்தின் மாற்றத்தின் நேரத்தை அருகில் கொண்டு வர முடியும். டிராமாபடி நிச்சயிக்கப்பட்டது தான் ஆனால் அதுவும் எந்த ஆதாரத்தினால் ஆனது? ஆதாரமோ இருக்கும் இல்லையா? அப்படி ஆதாரமூர்த்தியாக நீங்கள் இருக்கிறீர்கள். இப்பொழுதோ நீங்கள் அனைவரின் பார்வையில் இருக்கிறீர்கள்.

சவால் விட்டீர்கள்தானே, 4-வருடத்தில் என! எப்போது இந்த விஷயங்களைக் கேட்கிறீர்கள் என்றால் கொஞ்சம் அதிகமாகவே சங்கல்பம் எழுகிறது -ஒருவேளை உண்மையிலேயே முடியாமல் போய் விட்டது என்றால், இப்படி கூட ஆகலாம் 4-வருஷத்தில் ஆகாது போல தோன்றுகிறதே -இது சங்கல்ப ரூபத்தில் எழவில்லையே? எதிர்கொள்வோம், இது வேறு விஷயம். இதன் அர்த்தம் இந்த சங்கல்பத்தில் ஏதோ இருக்கிறது அதனால் தான் எழுகிறதல்லவா.

4-வருடங்களில் ஆகி விடும் என முற்றிலும் உறுதியாக இருக்கிறீர்களா? நல்லது, யாராவது உங்களிடம் கேட்கிறார்கள் விநாசம் ஆகவில்லை எனில் என்ன ஆகும் என? என்ன கூறுவீர்கள்? புரிய வைக்கும்போது இதைத் தெளிவாகப் புரிய வைக்க வேண்டும் -அப்படியில்லை, 4-வருடங்களில் முழுமையாக விநாசம் ஆகி விடும் என்பது. இல்லை, 4-வருடங்களில் கண்ணுக்குத் தெரிய ஆரம்பித்து விடும், இதனால் மக்கள் புரிந்து கொள்வார்கள் சரியாக இந்த விநாசம் நடந்து கொண்டிருக்கிறது, விநாசம் ஆரம்பித்து விட்டது. ஒரு விஷயம் சரியாகப் புரிந்து கொண்டார்கள் எனில் மற்ற விஷயங்களையும் சகஜமாகப் புரிந்து கொள்வார்கள். விநாசம் ஆவதற்கும் நேரம் பிடிக்கும். சுயம் சம்பூர்ணம் ஆனீர்கள் என்றால் காரியமும் சம்பூர்ணம் ஆகி விடும் எனில் சுயம் சம்பூர்ணம் ஆகி விடுவீர்களா? அட்வான்ஸ் பார்ட்டியின் காரியம் நடந்து கொண்டிருக்கிறது. உங்களுக்காக முழு மைதானத்தையும் தயார் செய்வார்கள். அவர்களுடைய குடும்பத்தில் செல்வீர்களோ இல்லையோ ஆனால் ஸ்தாபனையின் காரியம் என்ன நடக்க வேண்டுமோ அதற்காக நிமித்தம் ஆவார்கள். யாராவது சிலர் சக்திசாலியான நிலையை எடுத்துக் கொண்டு நிமித்தம் ஆவார்கள். ஸ்தாபனையின் காரியத்தில் உதவியாளர் ஆகுமாறு அத்தகைய அதிகாரங்களை எடுத்துக் கொள்வார்கள். இன்றைய நாட்களில் நீங்கள் பார்க்கிறீர்கள் தானே, தினமும் புதிய உலகிற்காக மதிப்பு எவ்வளவு அதிகம் உள்ளது என்பதை. எந்தளவு முன்னேறுவோமோ, அந்தளவு சிறியவர்களின் புத்தி வேலை செய்வதுபோல் வயதானவர்களின் புத்தி வேலை செய்யாது, இந்த மாற்றம் ஏற்படும். பெரியவர்களும் சிறியவர்களின் கருத்துக்கு மரியாதை தருவார்கள். இப்போது இருக்கின்ற பெரியவர்களும் புரிந்து கொள்கின்றனர் -நாமோ அந்த காலத்தவர்கள், இவர்களோ இன்றைய காலத்தினர். அவர்களுக்கு நாம் என்ன மரியாதை தருவது என நினைத்து, நடந்து கொண்டால் வேலையும் நடக்காது. முன்பெல்லாம் குழந்தைகளை பயமுறுத்தி, நடத்தினர், இப்போது அது போல் முடியாது. குழந்தைகளையும் எஜமானன் என புரிந்து கொண்டு நடத்துகின்றனர் எனில் இதுவும் கூட டிராமா தான். சிறியவர்கள் தான் அதிசயம் செய்து காண்பிப்பார்கள். அட்வான்ஸ் பார்ட்டிக்கோ அவர்களது காரியம் நடந்து கொண்டு உள்ளது ஆனால் அவர்களும் உங்களுடைய ஸ்திதி முன்னேறுவதற்காக காத்திருக்கின்றனர். அவர்களது காரியம் உங்களது தொடர்பின் மூலம் நடக்க வேண்டும். எல்லாக் காரியங்களுக்கும் ஆதாரம்

விசேஷ ஆத்மாக்கள் மீது உள்ளது. போகப்போக குளிர்ச்சி (சாந்தம்) ஆகி விடுகிறீர்கள், சூடு பிடிக்கிறது பின்பு குளிர்ந்து விடுகிறீர்கள் ஆனால் குளிர்ந்து விடக்கூடாதல்லவா. இதற்கு காரணம் என்ன? சதவீதம் மிகக் குறைவு. சொற்பொழிவாற்றுகிறீர்கள் ஆனால் கூடவே அம்சங்களும் (லட்சணமும்) கவனத்தை கவரக்கூடியதாக இருக்க வேண்டும் அப்போது சொற்பொழிவும் பயனுள்ளதாக இருக்கும், எனில் தன்னை ஒவ்வொரு பாடத்திலும் சோதனை செய்யுங்கள். இந்நாட்களில் உங்களுக்கு சொற்பொழிவுக்கான ஒரு போட்டி வைத்தால் இதில் இன்னும் பலர் வெற்றி பெறுவார்கள் ஆனால் நடைமுறையில் தோல்வி அடைவார்கள். முக்கிய சிறப்பம்சமே நடைமுறை வாழ்க்கை ஆகும். நடைமுறையில் எந்த ஒரு விஷயமும் நீங்கள் கூறினீர்கள் என்றால் ஒரேடியாக வாயடைத்துப் போவார்கள், எனில் சொற்பொழிவின் மூலம் நடைமுறையின் பாவனை வெளிப்படட்டும். அப்போது அந்த சொற்பொழிவானது வித்தியாசமாகத் தெரியும். என்ன கூறுகிறீர்களோ அது கண்கள் மூலம் தெரியட்டும்.

இவர் என்ன கூறுகிறாரோ அது நடைமுறைதான், இவர் அனுபவமூர்த்திதான், அப்போது அதன் பிரபாவம் ஏற்படும். தவிர கேட்டு கேட்டு எல்லோரும் களைத்து விட்டனர். நிறைய கேட்டு விட்டனர். பலரும் சொல்பவர்களாக ஆனதால் கேட்பதில் பலரும் களைத்து விட்டனர். நிறைய கேட்டு விட்டோம், இப்போது அனுபவம் செய்ய விரும்புகிறோம், ஏதாவது பிராப்தி அடையச் செய்யுங்கள். எனில் சொற்பொழிவில் ஒவ்வொரு வார்த்தையும் அனுபவம் செய்விக்குமாறு அந்தளவு சக்தி இருக்க வேண்டும். எப்படி நீங்கள் புரிய வைக்கிறீர்கள் -நான் ஒரு ஆத்மா, சரீரம் அல்ல! எனில் இந்த வார்த்தையைச் சொல்லும்போதே இதைக் கேட்பவர்களுக்கு உங்களுடைய வார்த்தையின் சக்தி மூலம் அனுபவம் ஆக வேண்டும். ஒரு நொடிக்காவது ஒருவேளை அனுபவம் ஆனது என்றால் அந்த அனுபவத்தை அவர்களால் ஒருபோதும் விட முடியாது, ஈர்க்கப்பட்டு உங்களிடம் வருவார்கள். எப்படி சொற்பொழிவின் இடையிடையே அமைதியில் செல்லும் அனுபவம் செய்விக்கிறீர்கள் எனில் இந்த பயிற்சியை அதிகப்படுத்திக் கொண்டே இருங்கள். அவர்களுக்கு அனுபவம் செய்வித்துக் கொண்டே செல்லுங்கள். இந்த பழைய உலகிலிருந்து எல்லையற்ற வைராக்கியத்தை அளிக்க விரும்புகிறீர்கள் எனில் சொற்பொழிவில் எந்த கருத்துகளை கூறுகிறீர்களோ அதன் மீது எல்லையற்ற வைராக்கிய உள்ளுணர்வை

அனுபவத்தில் கொண்டு வாருங்கள். அவர்கள் உணர்வார்கள் உண்மையிலேயே இந்த சிருஷ்டி முடியப் போகிறது, இதில் மனதை ஈடுபடுத்துவது வீண். அந்த பண்டிதர் முதலானோர் சொல்லும்போதே சக்தி வருகிறது. ஒரு நொடியில் குஷிப்படுத்துகின்றனர், ஒரு நொடியில் அழ வைத்து விடுகின்றனர். அப்போதுதான் கூறுகின்றனர் இவரது சொற்பொழிவு பலன் அளிப்பதாக இருந்தது என. முழு சபையையும் சிரிக்க வைக்கின்றனர், எல்லோரையும் சுடுகாட்டு வைராக்கியத்தில் கொண்டு வருகின்றனர் அல்லவா. எப்போது அவர்களது சொற்பொழிவில் அவ்வளவு சக்தி உள்ளது எனில் உங்களது சொற்பொழிவில் அந்தளவு சக்தி கொண்டு வர முடியாதா, என்ன? அசரீரி ஆக வேண்டுமெனில் அந்த அனுபவத்தைச் செய்விக்க முடியுமா? அந்த அலையை வரச் செய்யுங்கள். முழு சபையின் நடுவில் தந்தையினுடைய சிநேகத்தின் அலைகளை வரச் செய்யுங்கள். அவருக்குத்தான் கூறப்படுகிறது நடைமுறை அனுபவம் செய்விப்பவர் என! இப்போது அந்த மாதிரி சொற்பொழிவு இருக்க வேண்டும் அப்போதுதான் கொஞ்சம் மாற்றம் ஏற்படும். அவர்கள் புரிந்து கொள்வார்கள் இவர்களுடைய சொற்பொழிவு வித்தியாசமாக உள்ளது என. அவர்கள் சபையினரை சிரிக்க வைக்கலாம், அழ வைக்கலாம் ஆனால் அசரீரி அனுபவம் செய்விக்க முடியாது, தந்தையின் அன்பை அனுபவம் செய்விக்க முடியாது. கிருஷ்ணரிடம் அன்பு செய்ய வைக்க முடியும் ஆனால் தந்தையிடம் செய்ய வைக்க முடியாது. அவர்களுக்குத் தெரியவும் தெரியாது. எனவே தனித்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும். கீதையின் பகவான் பற்றிய கருத்துகளை கூறுகிறீர்கள் என்றால் -ஆனால் எது வரை அவர்களுக்கு தந்தை என்பது எந்த பொருள், நாம் ஆத்மா அவர் பரமாத்மா என்ற இது, எது வரை அனுபவம் செய்விக்கவில்லையோ அது வரை இந்த விஷயமும் எப்படி நிரூபணம் ஆகும்? இந்த மாதிரி கீதை சொற்பொழிவு செய்பவர்களுக்கு அனுபவம் செய்வியுங்கள். -ஆத்மா, பரமாத்மாவிற்கு இடையே இரவு பகல் வித்தியாசம் உள்ளது என்பதை! எப்போது அதை தனக்குள் உணர்வார்களோ அப்போது கீதையின் பகவான் யார் என்பது நிரூபணம் ஆகி விடும். வெறும் கருத்துக்களை கூறுவதால் அவர்களது புத்தியில் ஏறாது, இன்னும் குழம்பிப் போவார்கள்; ஆனால் அனுபவம் செய்வித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் அனுபவத்தின் முன்னால் எந்த ஒரு

விஷயமும் வெற்றி அடைய முடியாது. சொற்பொழிவில் இந்த மாற்றத்தைச் செய்யுங்கள். நல்லது.

**வரதானம்: துக்கமான உலகம் எதிரில் இருந்தபோதிலும் துக்கமற்ற ஊரின் ராஜ பதவியை அனுபவம் செய்யக்கூடிய அஷ்டசக்தி சொரூபமானவர் ஆகுக!**

துக்கம் மற்றும் துக்கமின்மையின் ஞானம் இப்பொழுது தான் இருக்கிறது. துக்கத்தின் உலகம் எதிரில் இருந்தபோதிலும் எப்பொழுதும் துக்கமற்ற ஊரின் ராஜபதவியை அனுபவம் செய்வது என்ற இது தான் அஷ்டசக்தி சொரூபம், கர்மேந்திரியங்களை வென்ற குழந்தைகளின் அடையாளம் ஆகும். இப்பொழுது தான் தந்தை மூலமாக அனைத்து சக்திகளின் பிராப்தி ஆகிறது ஆனால் ஒருவேளை ஏதாவது தீயசேர்க்கை மற்றும் ஏதாவது கர்மேந்திரியத்தின் வசமாகி தன்னுடைய சக்தியை இழந்து விட்டீர்கள் என்றால் துக்கமற்ற ஊரின் போதை மற்றும் குஷி என்ன பிராப்தி ஆகியிருக்கிறதோ அது தானாகவே மறைந்து விடுகிறது. துக்கமற்ற ஊரின் மகாராஜா கூட ஒன்றுமில்லாதவர் ஆகி விடுகிறார்.

**சுலோகன்: திடத்தன்மையின் சக்தி எப்பொழுதும் உடன் இருக்கிறது என்றால், வெற்றி கழுத்தின் மாலையாகி விடுகிறது!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 04.08.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சர்விசபல் (சேவைக்குத் தகுதியானவரின்), சென்சிபல் (விவேகமானவரின்) மற்றும் எசன்ஸ்ஃபுல்லின் (சாரம் நிறைந்தவரின்) அடையாளங்கள்!

தன்னை சர்விசபல் (சேவைக்குத் தகுதியானவர்), சென்சிபல் (விவேகமானவர்) மற்றும் எசன்ஸ்ஃபுல் (சாரம் நிறைந்தவர்) என்று நினைக்கிறீர்களா? மூன்று குணங்களையும் தன்னுள் தந்தைக்குச் சமமாக அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால் தற்சமயம் உங்கள் எதிரில் என்ன சிம்பள் (அடையாளக்குறி) வைத்திருக்கிறீர்கள் அதன்படி சமநிலையின் அருகில் வந்து கொண்டே இருக்கிறீர்கள் இல்லையா? சிம்பளாக என்ன வைத்திருக்கிறீர்கள்? விஷ்ணுவின் சிம்பளோ எதிர்காலத்திற்கானது ஆனால் சங்கமயுகத்தின் சிம்பளோ தந்தை தான் இல்லையா? அப்படி சிம்பளை எதிரில் வைத்துக் கொண்டே சமநிலையை கொண்டு வந்து கொண்டே இருக்கிறீர்கள் இல்லையா. இந்த மூன்று குணங்களின் சமநிலையை அனுபவம் செய்கிறீர்களா அல்லது ஒரு குணத்தின் விசேஷத்தை அனுபவம் செய்கிறீர்கள் மற்றும் இரண்டாவது, மூன்றாவதின் அனுபவம் செய்வதில்லையா? நேரத்திற்கேற்றபடி மூன்று குணங்களும் எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவு இருக்கிறதா? தற்சமயத்திற் கேற்றபடி முயற்சியின் நிலை எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவு இருக்கிறதா? 95 சதவிகிதம் வரையோ சென்றடைய வேண்டும் இல்லையா? எப்பொழுது நேரமே கொஞ்சம் தான் இருக்கிறது என்றால், அதன் பிரகாரம் 95 சதவிகிதம் இருக்க வேண்டும். 100-சதவிகிதம் என்றோ கூற முடியாது. கூறினோம் என்றால் நேரத்தின் காரணத்தை சொல்லி விடுவீர்கள் எனவே 100 சதவிகிதம் என்று கூறுவதில்லை. 5-சதவிகிதத்தை விட்டு வைக்கிறோம். சங்கமயுகத்தின்

முயற்சி செய்வது நேரத்திற்கேற்றபடி எவ்வளவு சதவிகிதம் இருக்கிறது. நேரத்தின் சதவிகிதத்தின் அனுசாரம் 95 சதவிகிதமோ ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. அப்படி இவ்வளவு லட்சியத்தை வைத்துக் கொண்டு வேகத்தை அதிகரித்துக் கொண்டே செல்கிறீர்களா அல்லது இன்னும் நேரம் இருக்கிறது என்று இப்பொழுதும் நினைக்கிறீர்களா? இன்னும் இவ்வளவு நேரம் இருக்கிறது என்ற எண்ணமோ இப்பொழுது வரவில்லையே. ஒருவேளை இப்பொழுதே முயற்சி செய்வதை முடித்து விட்டால் பின்பு அதில் நீங்கள் என்ன செய்வீர்கள்? இந்த எண்ணமோ வரவில்லையே? ஏதோ குறை இருந்து விட்டது அதனால் தான் டிராமாவில் அவ்வளவு நேரம் இருந்து விட்டிருக்கிறது. நேரத்திற்கேற்றபடி ஒருவேளை குறை இருந்து விட்டது என்றால் கூட எவ்வளவு இருக்க வேண்டும். 50-50 இருக்கலாம் என்று அப்படியில்லை. ஒருவேளை 50 சதவிகிதத்தை நிரப்ப வேண்டும் என்றால் வேகமோ மிக அதிகமாக தேவையாக இருக்கிறது. இவ்வளவு வேகத்தை யார் அதிகரிக்க முடியுமோ அவர் 95 சதவிகிதம் வரை வந்தடையவில்லை என்று இருக்க முடியாது. அப்படியானால் இலட்சியமாக இப்பொழுது என்ன வைக்க வேண்டும்? ஒருவேளை நேரத்திற்கேற்றபடி நாடகப்படி ஏதாவது குறை இருந்து விட்டால் கூட 5 சதவிகிதம் வரை அனுமதிக்கப்படுகிறது, அதற்கு அதிகமாக இல்லை. ஒருவேளை இதைவிட அதிகம் இருக்கிறது என்றால் கடைசி நிலையிலிருந்து தூரமாக இருக்கிறார் என்று புரிந்து கொள்ள வேண்டும். பின்பு பாப்தாதாவின் அருகில் மற்றும் உடன் இருப்பதற்கான இலட்சியம் என்ன வைக்கிறீர்களோ அது நிறைவேற முடியாமல் ஆகி விடும். ஏனென்றால் முதல் நம்பர் அவ்யக்த நிலையை அடைந்து விட்டார், அதன் பிறகு யார் நெருக்கமான இரத்தினமாக இருப்பார்களோ அவர்கள் குறைந்தது 5-சதவிகிதம் மட்டும் குறை இருக்கும் மாதிரி இந்த அளவு அருகில் இருக்க வேண்டும். தந்தை அவ்யக்தம் ஆகி விட்டார் மற்றும் நெருக்கமான இரத்தினங்களில் 50 சதவிகிதத்தின் வித்தியாசம் இருக்கிறது என்றால் இதை நெருக்கம் என்று கூறுவோமா என்ன? அவர் 8 எண்ணிற்குள் வர முடியுமா என்ன? சாகார பாபா சாட்சியாகி தன்னுடைய நிலையை வர்ணனை செய்தார் இல்லையா? அப்படி சாட்சியாகி தன்னுடைய நிலையை சோதனை செய்ய வேண்டும். யார் எப்படி இருக்கிறாரோ அதை வர்ணனை செய்வதற்கான எண்ணம் ஏன் வர வேண்டும்? வெளிப்படையாக தன்னுடைய மகிமை செய்வது இன்னொரு விஷயம் ஆகும் ஆனால் தன்னுடைய சுய சோதனையில் புத்திக்கு தீர்ப்பு

கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. மற்றவர்களுக்கு உங்களுடைய அந்த மாதிரியான நிலையின் அனுபவமோ ஏற்பட வேண்டும் இல்லையா? எனவே நெருக்கமான இரத்தினம் ஆவதற்காக இவ்வளவு வேகத்தில் தன்னுடைய சதவிகிதத்தை உருவாக்க வேண்டியது இருக்கும், 50-சதவிகிதத்தையோ மெஜாரிட்டி (பெரும்பான்மை) என்று கூறுவோம் ஆனால் அஷ்ட தேவதைகளை, மைனாரிட்டி (சிறுபான்மை) என்று எப்படி கூற முடியும்? ஒருவேளை பெரும்பான்மை யோருக்கு சமமாக சிறுபான்மையினரின் லட்சணமும் இருக்கிறது என்றால் இருவருக்கும் வித்தியாசமாக என்ன இருந்தது? அப்படி என்னென்ன மூன்று விஷயங்கள் கூறினோமோ அந்த மூன்றையுமே நீங்கள் உங்களில் பாருங்கள். சேவைக்குத் தகுதியானவரின் ரூபம் என்னவாக இருக்கிறதோ அதை எதிரில் வைத்து தற்சமய நிலைக்கு ஏற்றபடி மற்றும் தற்சமயத்து நடவடிக்கைக்கு ஏற்றபடி தன்னை சேவைக்குத் தகுதியானவர் என்று கூற முடியுமா என்று உங்களை நீங்களே சோதனை செய்யுங்கள். சேவைக்குத் தகுதியானவரின் ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தை, ஒவ்வொரு செயலும் சேவை செய்வதற்கு தகுதியானதாக இருக்கும். அவருடைய எண்ணமும் தானாகவே சேவை செய்யும் ஏனென்றால் அவருடைய எண்ணம் எப்பொழுதுமே உலக நன்மைக்காகத் தான் இருக்கும். அதாவது உலகத்திற்கு நன்மை ஏற்படும் எண்ணம் மட்டும் தான் உருவாகும். வீணானது உருவாகாது. நேரத்தின் ஒவ்வொரு விநாடியையும் எண்ணம், சொல், செயலின் சேவையிலேயே கழிட்டார். அவரைத் தான் சேவைக்குத் தகுதியானவர் என்று கூறப்படுகிறது. எப்படி யாருக்காவது ஏதாவது ஸ்தூல தொழில் மற்றும் வியாபாரம் இருக்கிறது என்றால் தானாகவே அவருடைய எண்ணம் மற்றும் செயலும் அதற்காகவே இருக்கும் இல்லையா. எண்ணம் மட்டும் இல்லை, கனவிலும் கூட அதைத் தான் பார்ப்பார். அப்படி சேவைக்குத் தகுதியானவரின் எண்ணம் தானாகவே சேவைக்காக மட்டும் தான் உருவாகும். ஏனென்றால் அவருடைய தொழிலே இது தான், நல்லது.

சென்ஸிபல் (விவேகமானவர்)-ன் லட்சணமாக என்ன இருக்கும்? (ஒவ்வொருவரும் கூறினார்கள்). இவ்வளவு லட்சணம் கூறியிருக்கிறீர்கள் என்றால் இப்பொழுதே லட்சியத்தில் நிலைத்திருக்க முடியுமா? சென்சிபல் என்றால் விவேகமானவர் என்று கூறுவது. லௌகீக முறையில் கூட யார் விவேகமானவராக இருக்கிறாரோ அவர் முன்னுக்கு பின் யோசித்து

புரிந்து ஒவ்வொரு அடியையும் எடுத்து வைப்பார் ஆனால் இங்கேயோ எல்லைக்கப்பாற்பட்ட விவேகம். அப்படி விவேகமானவராக யார் இருப்பாரோ அவருடைய முக்கிய அடையாளமான திரிகாலதரிசி அதாவது மூன்று காலத்தையும் தெரிந்தவராகி, மூன்று காலத்தையும் முன்பாகவே தெரிந்து கொண்டு பின்பு காரியம் செய்வார். சென்ற கல்பத்தின் நினைவு கூட அதாவது சென்ற கல்பத்திலும் நான் தான் வெற்றியாளன் ஆகியிருக்கிறேன் என்பது தெளிவான ரூபத்தில் இருக்கும். இப்பொழுது கூட வெற்றியாளன் தான். அனேக தடவைகள் வெற்றியாளராக ஆகிக் கொண்டே இருப்பார். இந்த வெற்றி அடையும் நிலையின் நிச்சயத்தின் ஆதாரத்தில் மற்றும் திரிகாலதரிசி நிலையின் ஆதாரத்தில் என்னென்ன காரியம் செய்தாலும் அவை ஒருபொழுதும் வீணானதாகவும், வெற்றி இல்லாததததாகவும் இருக்காது. அப்படி விவேகம் மூன்று காலத்தையும் தெரிந்த நிலையானதாக இருக்க வேண்டும். நிகழ்காலத்தை மட்டும் தெரிந்து கொள்வது என்பதைக் கூட சம்பூர்ணம் என்று கூற மாட்டோம். எந்தவொரு காரியத்தில் வெற்றியின்மை இருக்கிறதோ மற்றும் அது வீணாகி விடுகிறது என்றால் இதற்கான காரணமே மூன்று காலங்களையும் எதிரில் வைத்து காரியம் செய்வதில்லை. இவ்வளவு எல்லைக்கப்பாற்பட்ட விவேகத்தை தாரணை செய்ய முடிவதில்லை. இந்தக் காரணத்தினால் தற்காலத்து பிரச்சனைகளைப் பார்த்து பயந்து விடுகிறார்கள். மேலும் பயப்படும் காரணத்தினால் வெற்றியை அடைய முடிவதில்லை. விவேகமானவராக யார் இருப்பாரோ அவர் எல்லைக்கப்பாற்பட்டதை புரிந்து கொண்டு மற்றும் திரிகாலதரிசியாகி ஒவ்வொரு காரியத்தையும் செய்வார் மற்றும் ஒவ்வொரு வார்த்தையும் பேசுவார். இதைத் தான் ஆன்மீகமானது மற்றும் சாதாரணமற்றது என்று கூறுவது. விவேகமாக இருப்பவர் ஒருபொழுதும் நேரம், எண்ணம் மற்றும் வார்த்தையை வீணாக இழக்கமாட்டார். எப்படி லௌகீக முறையில் கூட ஒருவேளை யாராவது செல்வத்தை மற்றும் நேரத்தை இழக்கிறார்கள் என்றால் இவருக்கு விவேகம் இல்லை என்று கூறப்படுகிறது இல்லையா? இதே போல் யார் விவேகமாக இருப்பாரோ அவர் ஒவ்வொரு விநாடியையும் சக்திசாலியாக ஆக்கி காரியத்தில் ஈடுபடுத்துவார். வீணான காரியத்தில் ஈடுபடுத்த மாட்டார். விவேகமானவர் ஒருபொழுதும் வீணான தொடர்பின் பாதிப்பில் வர மாட்டார், ஒருபொழுதும் எந்தவொரு சூழ்நிலையின் வசமாக மாட்டார். இவையணைத்தும் விவேகமானவரின் அடையாளமாகும்.

மூன்றாவது எசென்ஸ்ஃபுல் (சாரம் நிறைந்தவர்). இவருடைய லட்சணமாக என்ன இருக்கும்? ஒவ்வொருவரும் கூறினார்கள்). அனைவரும் சரியாக கூறினீர்கள். ஏனென்றால் அனைவரும் விவேகமானவராகி அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? யார் சாரம் நிறைந்தவராக இருப்பாரோ அவரிடம் ஆன்மீகத்தின் மணம் இருக்கும். ஆன்மீக மணம் என்றால் ஆன்மீகத்தின் அனைத்து சக்திகள் அவரிடம் இருக்கும். அந்த சக்திகளின் ஆதாரத்தில் சுலபமாகவே தன் பக்கம் யாரையும் கவர்ந்திழுக்க முடியும். எப்படி ஸ்தூலமான நறுமணம் மற்றும் எசென்ஸ் (வாசனை பொருள்) தூரத்திலிருந்தே யாரையும் தன் பக்கம் கவரமுடியும் இல்லையா? விரும்பாதவர் களையும் கூட கவர்ந்து விடுகிறது. இந்த விதமாக எப்படிப்பட்ட ஆத்மாக்களும் சாரம் நிறைந்தவரின் எதிரில் வந்தார் என்றால் கூட அந்த ஆன்மீக நிலையின் மேல் கவரப்பட்டு விடுவார். யாரிடம் ஆன்மீகத் தன்மை இருக்கிறதோ அவருடைய விசேஷமானது அவர் தூரத்திலிருந்தாலும் அனைத்து ஆத்மாக்களையும் தன்னுடைய ஆன்மீக நிலையினால் ஈர்க்க முடியும். எப்படி நீங்கள் மனதின் சக்தியின் ஆதாரத்தில் இயற்கையை மாற்றும் மற்றும் நன்ன செய்யும் காரியத்தையும் இல்லையா? ஆகாயம் மற்றும் வாயுமண்டலம் ஆகிய றின் அருகில் சென்றோ கூற மாட்டோம் இல்லையா? ஆனால் மனதின் சக்தி மூலமாக எப்படி இயற்கையை தமோபிரதான நிலையிலிருந்து சதோபிரதானமாக ஆக்குகிறீர்கள் அதே போல் உலகிலுள்ள மற்ற ஆத்மாக்கள் யார் உங்கள் எதிரில் வர முடியாதோ அவர்களுக்கு தூரத்திலிருந்து கொண்டே நீங்கள் ஆன்மீகத்தின் சக்தி மூலமாக தந்தையின் அறிமுகம் மற்றும் தந்தையினுடைய முக்கியமான செய்தியாக என்ன இருக்கிறதோ அதை மனதின் சக்தி மூலமாக அவருடைய புத்தியை தொட முடியும். உலகத்திற்கு நன்மை செய்பவர் என்பதால் இவ்வளவு முழு உலகிலுள்ள அத்தனை ஆத்மாக்களுக்கும் எதிரில் சென்று செய்தி கொடுக்க முடியுமா என்ன? அனைவருக்கும் வாய்மொழிமூலமாக செய்தி கொடுக்க முடியாது. வாய்மொழியின் கூடவே மனதால் செய்யும் சேவையும் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டு இருப்பதை அனுபவம் செய்வீர்கள். எப்படி தந்தை பக்தர்களின் பாவனையை சூட்சும ரூபத்தில் நிறைவேற்றுகிறார் என்றால் அதை எதிரில் சென்று வாய்மொழி மூலமாக செய்கிறாரா என்ன? சூட்சுமமான இயந்திரங்கள் காரியம் செய்கின்றன இல்லையா? அதே போலவே

சக்திகள் மற்றும் பாண்டவர்கள் நீங்கள் நடைமுறையில் பக்த ஆத்மாக்கள் மற்றும் ஞானி ஆத்மாக்கள் இருவருக்கும் தந்தையின் அறிமுகம் மற்றும் செய்தி கொடுக்கும் காரியம் அதாவது சூட்சுமமான இயந்திர வேலை மிக வேகமாக ஆகப்போகிறது. இது கடைசி சேவையின் வடிவமைப்பாகும். எப்படி நறுமணம் அருகில் இருப்பவர்களுக்கும், தூரத்திலிருப்பவர்களுக்கும் மணம் கொடுக்கும் காரியத்தை செய்கிறது. அதே போல் எதிரில் வருபவர்களுக்கு மட்டுமின்றி தூரத்திலிருக்கும் ஆத்மாக்கள் வரை கூட உங்களுடைய ஆன்மீகத்தின் சக்தி சேவை செய்யும் அப்பொழுது தான் நடைமுறையில் உலகத்திற்கு நன்மை செய்பவர் என்று மகிமை செய்யப்படுவீர்கள். இப்பொழுதோ உலக நன்மைக்கான திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். நடைமுறையில் இல்லை. பின்பு இந்த சூட்சும இயந்திரங்களின் வேலை எப்பொழுது தொடங்குமோ அப்பொழுது நடைமுறை காரியத்தில் ஈடுபட்டு விடுவீர்கள். எப்படி ஆத்மாக்கள் தந்தையின் அறிமுகம் என்ற தீர்த்தத்தை பெறுவதற்காக துடித்துக் கொண்டிருக்கிறார்கள் மற்றும் துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு புத்தி மூலமாக மற்றும் சூட்சும சக்தி மூலமாக பார்க்காவிட்டாலும் கூட தென்படுவது போல் அனுபவம் செய்வீர்கள்'. அப்படி அந்த மாதிரி சேவையில் எப்பொழுது ஈடுபட்டு விடுவீர்களோ அப்பொழுது உலகிற்கு நன்மை செய்பவர் என்ற பெயர் நடைமுறையில் பிரசித்தி பெறும்.

இப்பொழுது பாருங்கள். நீங்கள் என்ன கூறுகிறீர்கள். நாங்கள் உலகத்திற்கு நன்மை செய்வதற்கான எண்ணத்தை வைத்திருக்கிறோம், மக்கள் உங்களை என்ன கூறுகிறார்கள்? அப்படி நன்மைக்கான உங்களுடைய இவ்வளவு பெரிய காரியம் அந்த அளவிற்கு வேகமாக இருக்குமா? உலக நன்மைக்கான காரியமோ இதுவரையில் மிகக்குறைவாக செய்திருக்கிறீர்கள். முழு உலகத்திற்கும் எப்படி சென்று சேர வைப்பீர்கள்? இப்பொழுது நடைமுறையில் இல்லை தான் இல்லையா, பிறகு நாலாபுறத்திலும் அங்கு அங்கு மாஸ்டர் புத்திவான்களுக்கெல்லாம் புத்திவான் ஆகி சூட்சும இயந்திரங்களின் மூலமாக அனைவரின் புத்திகளை தொடுவீர்கள் என்றால் ஏதோ சக்தி, ஏதோவொரு தெய்வீக நிலை தன் பக்கம் கவர்ந்து கொண்டிருக்கிறது என்ற செய்தி பரவும். சந்திப்பதற்காக தேடுவார்கள் மற்றும் ஒரு விநாடி தரிசனம் செய்வதற்காக துடிப்பார்கள் அதன் அடையாளமாக

ஜடச்சிலைகள் இது வரை தரிசனம் செய்யப்பட்டுக் கொண்டே வந்திருக்கின்றன. எப்பொழுது அந்த மாதிரி ஏதாவது உற்சவம் நடக்கிறது என்றால் ஜடமூர்த்திகளுக்கு எவ்வளவு கூட்டம் கூடி விடுகிறது. எத்தனை பக்தர்கள் அந்த நாளில் அந்த நேரத்தில் தரிசனம் செய்வதற்காக துடிக்கிறார்கள் மற்றும் ஏங்குகிறார்கள். அனேக தடவை தரிசனம் செய்திருந்தும் அந்த நாளின் மகத்துவத்தை நிறைவேற்றுவதற்காக பாவம் எவ்வளவு கடின முயற்சி செய்கிறார்கள். இது யாருடைய அடையாளம்? நடைமுறையில் நடந்ததினால் தானே நினைவுச்சின்னமாக இந்த அடையாளங்கள் உருவாகியிருக்கின்றன. நல்லது.

**பஞ்சாப் மற்றும் உ.பி ஜோன்களின் சந்திப்பு: ஞானக்கடல் தந்தையிடமிருந்து வெளியாகியிருக்கும் ஞான கங்கைகள் நீங்கள் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா?** உ.பி.யில் கங்கையின் மகத்துவம் ஏன் இருக்கிறது? ஏனென்றால் வேறு எந்த நதியையும் பதீத பாவனி என்று கூறுவதில்லை. கங்கையை மட்டும் தான் பதீத பாவனி என்று கூறுகிறார்கள். யமுனை நதியை பதீத பாவனி என்று கூற மாட்டார்கள் அதை சரித்திர பூமி என்று கூறுகிறார்கள். பஞ்சாபிலும் நதிகள் அதிகமாக இருக்கின்றன. நதி எங்கு செல்கிறதோ அந்த இடங்களை பசுமையாக ஆக்கி விடும் இல்லையா! பசுமையானது மற்றும் குஷியானது. அப்படி உங்கள் அனைவரின் வேலையும் கூட அனைவரையும் பசுமையானவராக ஆக்குவது ஆகும். எந்த ஆத்மாக்கள் சுகம் சாந்தியின் சாறிலிருந்து காய்ந்து போய் இருக்கிறார்களோ, அந்த மாதிரி காய்ந்து போய் இருப்பவர்களை மீண்டும் பசுமையான வராக செழிப்பானவராக ஆக்க வேண்டும். இது தான் உங்களுடைய வேலை ஆகும். எங்கு வறட்சி இருக்குமோ அங்கு மனிதன் ஒன்றுமில்லாத ஏழையாகி விடுகிறான் மற்றும் எங்கு பசுமை இருக்கிறதோ அங்கு மனிதன் குஷி நிறைந்தவனாக ஆகி விடுகிறான். அப்படி புது உலகம் செழிப்பான உலகமாகும் மற்றும் பழைய உலகம் வறண்ட உலகமாகும். நீங்கள் அனைவருமே வற்றாத ஜீவநதிகள் தான் இல்லையா! அப்படி தன்னுடைய ஒவ்வொரு அடியிலும் ஆத்மாக்களை பசுமையானவராக மற்றும் செழிப்பானவராக ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். இந்த நேரம் அனைவரின் விசேஷ கவனம் பஞ்சாபின் பக்கம் இருக்கிறது. எந்த விஷயத்திற்காக? அகால மரணத்திற்காக, மிக அதிகமான அகால மரணம் பஞ்சாபில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் அனைவரும்

அகால மரணத்திலிருந்து காப்பாற்றுபவர்கள் தான் இல்லையா? அந்த மாதிரியான ஆத்மாக்களுக்கு அமர ஞானம் கொடுத்து அமரர் ஆக்கினீர்கள் என்றால் பல ஜென்மங்கள் அகால மரணத்திலிருந்து பாதுகாக்கப் பட்டு விடுவார்கள். சத்யுகத்தில் அகால மரணம் ஏற்படாது. தன்னுடைய விருப்பத்தினால் உடலை விடுவார்கள். எப்படி இந்த பழைய ஆடையை தன் விருப்பத்தோடு மாற்றுகிறீர்கள், நிர்பந்தத்தில் இல்லை அதே போல் இந்த உடல் என்ற ஆடையையும் தன்னுடைய விருப்பத்தினால் மாற்றம் செய்ய வேண்டும். எப்படி ஆடையின் ஆயுள் முடிவடைந்து விட்டது, பழையதாகி விட்டது என்றால் மாற்றி விடுகிறீர்கள். அதே போல் நேரத்திற்கு தகுந்தாற் போல், ஆயுளுக்கேற்றபடி உடலை மாற்றுவீர்கள். அப்படி குழந்தைகள் நீங்கள் அந்த மாதிரி துக்கமான ஆத்மாக்களுக்கு நாங்கள் உங்களை 21 ஜென்மங்களுக்காக அகால மரணத்திலிருந்து காப்பாற்ற முடியும் என்ற குஷியான செய்தியை கூற வேண்டும். தற்சமயம் அகால மரணத்திற்கான பயம் தான் இருக்கிறது. பயத்தோடு சாப்பிட்டுக் கொண்டும் இருக்கிறார்கள், போய் வந்து கொண்டும் இருக்கிறார்கள், தூங்கிக் கொண்டும் இருக்கிறார்கள். அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு குஷியின் விஷயத்தைக்கூறி பயத்திலிருந்து விடுவியுங்கள். உதாரணமாக இந்த உடல் சென்று விட்டால் கூட பயத்தோடு இறக்க மாட்டார்கள் ஏனென்றால் நான் அகால மரணத்திலிருந்து காப்பாற்றப்படுபவன், கொஞ்சம் உடன் எடுத்துச் செல்கிறேன், காலியாக செல்லவில்லை இந்த குஷி இருக்கும். அப்படி இந்த சேவை செய்கிறீர்களா? அல்லது என் மேலும் குண்டடிப்பட்டுவிடக்கூடாது என்று பயப்படுகிறீர்களா? அனைவரும் தைரியசாலிகள் தான் இல்லையா!. தன்னுடைய அமைதி மற்றும் சுகத்தின் எண்ண அலைகள் மூலமாக மக்களுக்கு சுகம் மற்றும் அமைதியின் அனுபவத்தை செய்வியுங்கள். எப்படிப்பட்ட தீவிரவாதியாக இருந்தாலும் அவரும் அன்பு மற்றும் அமைதியின் சக்தியின் எதிரில் மாறி விடுவார். உங்களிடம் அப்படி யாராவது ஒருவர் வருகிறார் என்றால் என்ன செய்கிறீர்கள்? அன்போடு தான் மாற்றம் செய்கிறீர்கள் இல்லையா? தன்னுடைய சகோதரனாக்கி விடுகிறீர்கள் இல்லையா? நல்லது.

**வரதானம்: கர்மாதீத் நிலையில் நிலைத்திருந்து நாலாபுறத்திலுள்ள சேவைகளை கையாளக்கூடிய ஸித்தி சொரூபமானவர் ஆகுக!**

வரும் நாட்களில் நாலாபுறத்தின் சேவைகளின் வளர்ச்சியை கையாளுவதற்காக விதவிதமான வழிகளை கடைபிடிக்க வேண்டி வரும். ஏனென்றால் அந்த நேரம் கடிதப் போக்குவரத்து, தந்தி, தொலைபேசி ஆகியவை வேலை செய்யாது. அந்த நேரம் வயர்லஸ் செட் (கம்பியில்லாத சாதனம்) தேவையாக இருக்கிறது. இதற்காக இந்த நேரம் கர்மயோகி, அடுத்த நேரம் கர்மாதீத் நிலையில் நிலைத்திருப்பதற்கான பயிற்சி செய்யுங்கள். அப்பொழுது நாலாபுறமும் எண்ணத்தின் சித்தி மூலமாக சேவையில் சகயோகி ஆக முடியும்.

**சுலோகன்: உங்களுடைய சகஜயோகி வாழ்க்கை தான் பரமாத்மா அன்பின் பாலனையின் சொரூபம் ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 06.08.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உள்உணர்வில் சஞ்சலம் இருப்பதற்கான காரணம் விரதத்தில் உறுதியற்ற நிலை!

பரிவர்த்தனை பூமியில் (மாற்றம் செய்யும் பூமியில் வந்து தன்னுடைய மாற்றத்தின் அனுபவத்தை செய்கிறீர்களா? பட்டியில் வருவது என்றால் பலஹீனங்களை மற்றும் குறைகளை பஸ்பம் செய்வது ஆகும். அப்படியானால் பலஹீனங்கள் நிரந்தரமாக உங்களிடமிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிற மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? தன்னுள் இந்த அளவு மனோபலத்தை நிரப்பிக் கொண்டே இருக்கிறீர்களா? ஏனென்றால் இந்த நேரத்து மாற்றம் நிரந்தரமான மாற்றமாக ஆகி விடும். எப்படி நெருப்பில் ஏதாவது ஒரு பொருள் போடப்படுகிறது என்றால், நெருப்பில் போட்ட பொருளின் ரூபம், நிறம் மற்றும் காரியம் (குணம்) மாறி விடுகிறது, அது மீண்டும் முன்பு இருந்தது போல் ஆக முடியாது. நிரந்தரமாக ரூபம், நிறம் மற்றும் காரியம் மாறி விடும். அதே போலவே தன்னுள் அனுபவம் செய்கிறீர்களா? பலஹீனங்களின் ரூபம், வர்ணம் மாறிக் கொண்டிருக்கிறது என்று அப்படி மாற்றம் செய்து கொண்டிருக்கிறீர்களா? நான் மாறிவிட்டுத் தான் செல்ல வேண்டும் என்று தனக்குள் திடமான எண்ணம் இருக்கட்டும், இந்த திடமான எண்ணத்தின் லயிப்பு என்ற அக்னியில் பலஹீனங்கள் முழுமையாக பஸ்பம் ஆகி விடட்டும். ஒருவேளை நெருப்பு மிகச் சூடாக இல்லை என்றால் முந்தைய ரூபமும் இருப்பதில்லை, மாற்றம் செய்ய வேண்டிய ரூபமும் இருப்பதில்லை, இடையிலேயே முழுமையற்றதாக இருந்து விடுகிறது. எனவே இந்த உயர்ந்த எண்ணத்தின் நெருப்பு அவ்வளவு சூடாக கொழுந்து விட்டு எரிவதாக இருக்கிறதா அல்லது ஆம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம், ஆகியே விடும் என்று அந்த மாதிரி இருக்கிறதா? என்று உங்களை நீங்களே பாருங்கள். இதைத் தீவிர முயற்சி என்று கூற முடியாது. செய்தே காண்பிப்பார். இதைத் தான் தீவிர முயற்சியாளர்

என்று கூறுவது. இந்த நேரம் இந்த பட்டியில் வந்திருக்கும் நீங்கள் உங்களுடைய நிலையை தீவிர முயற்சியாளருடையதாக அனுபவம் செய்கிறீர்களா? உங்களில் யார் பரிவர்த்தனை பூமியில் வந்ததுமே தீவிரமாக முயற்சி செய்பவரின் பட்டியலில் வந்து விட்டேன் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். தீவிர முயற்சியாளர் என்ற அழியாத முத்திரையை இட்டாகி விட்டதா? அழியாத தந்தை மூலமாக அழியாத பிராப்தியை செய்து கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? தந்தை அழியாதவராக இருக்கிறார் மற்றும் பிராப்திகளும் அழியாததாக இருக்கிறது என்றால் அழியாத பிராப்தி மூலமாக உருவாக்கிக் கொண்டிருக்கும் தன்னுடைய நிலை கூட அழியாததாக இருக்கட்டும். தன்னுடைய நல்ல உள்உணர்வு மூலமாக குடும்பத்தை, சூழ்நிலையை, இயற்கையை மாற்ற முடியும் என்ற தைரியம் என்னில் இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? ஒருவேளை தன்னுடைய உள்உணர்வு உயர்ந்ததாக இருக்கிறது என்றால் இதன் எதிரில் குடும்பம் மற்றும் சூழ்நிலை எந்த விதமான தாக்குதலும் செய்ய முடியாது. ஏனென்றால் நல்ல உள்உணர்வு என்றாலே நான் மாஸ்டர் சர்வ சக்திவான், ஞானம் நிறைந்தவன் ஆவேன் சக்திசாலியானவன் என்பது தான். அப்படியானால் தன்னுடைய உள்உணர்வை இவ்வளவு உயர்ந்ததாக ஆக்கியிருக்கிறீர்களா? ஒவ்வொரு நேரமும் தன்னுடைய உள்உணர்வு உயர்ந்ததாக இருக்கிறது, சாதாரண உள்உணர்வோ இருக்கவில்லையே என்று தன்னுடைய உள்உணர்வை எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். உள்உணர்வை உயர்ந்ததாக ஆக்குவதற்காக மற்றும் குடும்பத்தில் இருந்து கொண்டே குடும்பத்தின் சூழ்நிலையிலிருந்தே விலகி இருப்பதற்கான என்ன வழியைக் கடைபிடிக்க வேண்டும்? பக்தியில் செய்கிறார்கள் சாதனா (இடைவிடாத பயிற்சி). இங்கு ஞான மார்க்கத்தில் சாதனம் (வழி) இருக்கிறது என்று ஏற்கனவே கூறியிருந்தோம் இல்லையா. அது எந்த சாதனம்? உள்உணர்வு சஞ்சலப்படுகிறது என்றால் என்ன செய்வீர்கள்? முதலிலோ உள்உணர்வு சஞ்சலம் ஆவதற்கான காரணம் என்ன?

உள்உணர்வு சஞ்சலம் மற்றும் சாதாரணமானதாக ஆவதற்கான காரணம் என்னவென்றால் நீங்கள் இங்கு வந்தவுடனேயே முதலில் என்ன விரதம் எடுக்கிறீர்கள் மற்றும் உறுதிமொழி கொடுக்கிறீர்களோ அதிலிருந்து கீழே வந்து விடுகிறீர்கள். விரதத்தை துண்டித்து விடுகிறீர்கள் மற்றும்

உறுதிமொழியை மறந்து விடுகிறீர்கள். முதன்முதலான விரதம் - எண்ணம், சொல், செயலில் தூய்மையாக இருப்போம் அப்படி முதன்முதலில் இந்த விரதத்தை எடுத்தீர்கள் மற்றும் இன்னொரு விரதமாக ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்று இந்த விரதத்தை அனைவரும் எடுத்திருக்கிறீர்கள். யாராவது விரதம் எடுத்து இடையில் விட்டு விடுகிறார் என்றால் பக்தி மார்க்கத்தில் கூட விரதம் வைத்து விரதம் வைத்து பின்பு இடையில் துண்டித்து விடுகிறார் என்றால் இவரைப் பற்றி என்னவென்று கூறுவது, புண்ணிய ஆத்மாவிற்குப் பதிலாக பாவ ஆத்மா ஆகி விட்டார். தன்னுடைய விரதத்தை எவ்வளவு கடைபிடித்திருக்கிறீர்கள்? விரதம் என்பதை எப்பொழுதுமே நிலைத்திருக்கச் செய்வார்கள். பக்தர்கள் ஒருவேளை உயிரே சென்று விட்டது என்றாலும் விரதத்தை விடுவதில்லை. அப்படி நீங்கள் வந்தவுடனேயே எந்த விரதத்தை கடைபிடித்தீர்களோ அதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நினைவு மூலமாக ஒருபொழுதும் உள்உணர்வு சஞ்சலமாகாது. உள்உணர்வு ஒருவேளை சஞ்சலம் ஆகவில்லை என்றால் குடும்பத்தை சுத்தமான மாற்றத்திற்கான ஒரு மாதிரியை உருவாக்கிக் காண்பிப்போம். உள்உணர்வை ஸ்திரமற்றதாக ஆக்குவதினால் தான் உள்உணர்வில் சஞ்சலம் ஏற்படுகிறது. ராக்ஷாபந்தன் அன்று தூய்மை ஆகுங்கள் என்ற அந்த உறுதிமொழியை எடுக்க வைப்பீர்கள் தான் இல்லையா? அப்படி முதலில் தனக்கு இந்த கங்கணத்தை கட்ட வேண்டும். பின்பு தான் மற்றவர்களையும் இந்த கங்கணத்தில் கட்டிப்போட முடியும். யாருக்கு இராக்கி கட்டுகிறீர்களோ அவர்கள் தூய்மை ஆகிறார்களா மற்றும் விரதம் எடுக்கிறார்களா? இவ்வளவு தைரியமும் வைப்பதில்லை. இதற்குக் காரணம் என்ன? கட்டுபவர் அவர் முதலில் விரதத்தில் இருக்கிறாரா? மனதில் கூட ஏதாவது தூய்மையின்மை வந்து விடுகிறது என்றால் இதை முழுமையான விரதம் என்று கூறலாமா? இந்தக் காரணத்தினால் கட்டுபவரிடம் எவ்வளவு குறை இருக்கிறதோ அவ்வளவு யாருக்கு கட்டுகிறீர்களோ அவர்கள் மேலேயும் உங்களுடைய தூய்மையின் ஈர்ப்பின் பிரபாவம் ஏற்படுவதில்லை. ஒரு பழக்கவழக்கம் மாதிரி இவர்களுடையது இந்த (பண்டிகையின்) இரகசியம் என்று செய்தியை மட்டும் பெறுகிறார்கள். விரதம் எடுப்பதில்லை, ஏன்? நம்முடைய காரணத்தைத் தான் கூறுவோம் இல்லையா? அல்லது பாக்கியத்தில் இல்லை என்று கூறுவோமா? பாக்கியத்தை உருவாக்குபவர்களே நீங்கள் தான் இல்லையா?

பாக்கியத்தை உருவாக்கி விட்டே வாருங்கள் மற்றும் பாக்கியத்தை உருவாக்குவதற்காக அவர்கள் உங்கள் பின்னாலேயே கவர்ந்திழுக்கப்பட்டு பாக்கியத்தை உருவாக்காமல் இருக்கவே முடியாத அளவிற்கு அவ்வளவு தீவிரமான பிரேரணை கொடுத்து வாருங்கள். இந்த அளவு கவர்ந்திழுப்பவர் தான் இல்லையா. உலகியல் ஆத்மாக்களைப் பற்றியும் உதாரணம் கூறுகிறார்கள் இல்லையா. இவருடைய இரண்டு வார்த்தைகளில் இவ்வளவு சக்தி இருந்தது அவரின் பின்னால் அனைவரும் ஓடிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் எதிரில் நீங்கள் எவ்வளவு உயர்ந்த ஆத்மாக்கள். தற்சமயத்தில் மகாத்மாக்கள் என்று மகிமை செய்யப்படுபவர்கள் உங்களுடைய பிரஜையின் பிரஜை மாதிரி கூட இல்லை. ஏனென்றால் சொர்க்கத்தின் அதிகாரியாகவோ ஆவதில்லை தான் இல்லையா. உங்களுடைய பிரஜையின் பிரஜையாக யார் இருப்பாரோ அவர் சொர்க்கவாசியாகவோ இருப்பார் தான் இல்லையா. சொர்க்கத்தின் சுகத்தை அனுபவமோ செய்வார் தான் இல்லையா. இவரோ சொர்க்கத்தில் வரவே முடியாது. அப்படி இவ்வளவு உயர்ந்த ஆத்மாக்களாக நீங்கள் எப்பொழுது இருக்கிறீர்கள் என்றால் பின்பு ஏதாவது விசேஷ காரியம் செய்ய வேண்டும் இல்லையா. உங்களுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் நீங்கள் மிகவும் அனுபவியாகி பேசிக் கொண்டிருப்பது போல் அந்த அளவு சக்தி இருக்க வேண்டும், நீங்கள் பேசிக் கொண்டே செல்லுங்கள் மற்றும் அவர்கள் அனுபவம் செய்து கொண்டே செல்லட்டும். இன்றைய நாட்களில் மஹாத்மாக்கள், பண்டிதர்கள் என்று அழைக்கப்படுபவர்களிடமும் அற்ப காலத்தின் இவ்வளவு சக்தி இருக்கிறது என்றால் மாஸ்டர் சர்வ சக்திவானாகிய உங்களுடைய ஒவ்வொரு வார்த்தையில் எவ்வளவு சக்தி இருக்க வேண்டும். ஒவ்வொரு வார்த்தையின் கூடவே யாருக்காவது அனுபவம் செய்வித்துக் கொண்டே செல்லுங்கள். எப்படி யாருக்காவது முதல் பாடமாகிய நீங்கள் ஒரு ஆத்மா ஆவீர்கள் என்பதை கூறும்பொழுது சொல்லும் வார்த்தைகளின் கூடவே அவர்களையும் அனுபவம் செய்வித்துக் கொண்டே செல்லுங்கள். இது தான் விசேஷமாகும். அப்படியே சொற்பொழிவாற்றுவது என்று அவர்களும் செய்கிறார்கள். அந்த முறையோடு பேசுவது இதை அவர்களும் செய்கிறார்கள் ஆனால் எதை மற்றவர்கள் செய்ய முடியாதோ அதை உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் செய்ய முடியும். இந்த வித்தியாசம் தான் இதில் இருக்கிறது. அப்படி இந்த விசேஷம் நடைமுறையில் தென்படட்டும். அது எப்படி முடியும்? எப்பொழுது

உங்களில் அனைத்து விசேஷங்களையும் தாரணை செய்வீர்களோ அப்பொழுது முடியும். உங்களிலேயே ஒருவேளை விசேஷத்தை தாரணை செய்யவில்லை என்றால் மற்றவர்களையும் தாரணை செய்பவராக ஆக்க முடிவதில்லை. எனவே உள்உணர்வை உயர்ந்ததாக ஆக்குங்கள். பாப்தாதாவின் எதிரில் என்ன விரதம் எடுத்திருக்கிறீர்களோ அதில் எப்பொழுதும் நிலைத்திருந்தீர்கள் என்றால் பின்பு என்ன ரிசல்ட் வெளியாகிறது என்று பாருங்கள். எப்பொழுது ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற விரதம் எடுத்திருக்கிறீர்கள் என்றால் பின்பு புத்தி ஏன் மற்ற பக்கம் செல்கிறது? இந்த மாதிரி விரதம் எடுத்திருக்கிறீர்களா அல்லது மற்றவர்களிடமிருந்தும் கேட்பீர்களா? உன்னிடம் தான் கேட்பேன், உன்னோடு தான் பேசுவேன் என்றிருக்கிறதா... இந்த விரதத்தை எடுத்திருக்கிறீர்கள் என்றால் பின்பு மற்ற ஆத்மாக்களின் பக்கம் சஞ்சலமான உள்உணர்வோடு ஏன் பார்க்கிறீர்கள் மற்றும் ஏன் கேட்கிறீர்கள்? எதை தந்தையிடமிருந்து கேட்டிருக்கிறீர்களோ அதைத் தான் பேச வேண்டும் பின்பு மற்ற வார்த்தைகள் வீணான விஷயங்கள் எப்படி செய்ய முடியும்? இதுவோ விரதத்தைத் துண்டித்ததாக ஆகி விட்டது இல்லையா? எப்பொழுது ஆத்ம அபிமானியாகி இருப்பதற்கான விரதம் எடுத்திருக்கிறீர்கள் என்றால் பின்பு தேகத்தை ஏன் பார்க்கிறீர்கள்? இது விரதத்தை உடைப்பதாக ஆகி விட்டது இல்லையா?

என்ன விரதம் எடுத்திருக்கிறோமோ அதன்படி அமிர்தவேளையில் தொடங்கி நடந்து கொண்டிருக்கிறோமா என்று உங்களை நீங்களே சோதனை செய்யுங்கள். எந்த எண்ணத்தை உருவாக்க வேண்டும், வார்த்தைகளில் என்ன பேச வேண்டும், காரியம் செய்து கொண்டே எப்படி கர்மயோகி நிலையில் இருக்க வேண்டும் என்ற இந்த விரதத்தை எடுத்திருக்கிறீர்கள் இல்லையா? இல்லறத்தில் இருந்து கொண்டே தாமரை மலருக்குச் சமமாக இருப்போம் என்ற இந்த விரதத்தையும் எடுத்திருக்கிறீர்கள் இல்லையா. யார் தாமரை மலருக்குச் சமமாக இருப்பாரோ அவர் சூழ்நிலைகளின் வசமாக ஆக முடியுமா என்ன? அவரோ நியாரா (விலகியிருப்பவராகவும்) மற்றும் ப்யாராவாக (அன்பானவராகவும்) இருக்க வேண்டும். ஒருவேளை உயர்ந்த உள்உணர்வில் நிலைத்திருக்கிறீர்கள் என்றால் ஏதாவது சுற்றுப்புறச்சூழல், வைப்ரேஷன் (எண்ண அலைகள்) ஆகியவை

உங்களை மேலே கீழே ஆக்க முடியுமா என்ன? உள்உணர்வு மூலமாகத் தான் சுற்றுப்புறச் சூழல் உருவாகிறது. ஒருவேளை உங்களுடைய உள்உணர்வு உயர்ந்ததாக இருக்கிறது என்றால் உள்உணர்வின் ஆதாரத்தினால் சுற்றுப்புறச்சூழலை சுத்தமானதாக ஆக்க முடியும், இந்தளவு சக்தி இருக்கிறதா? அல்லது சூற்றுப்புறச்சூழலின் சக்தி உங்களுடையதை விட அதிகமாக இருக்கிறதா? எந்த நேரத்திலும் ஏதாவது சுற்றுப் புறச்சூழலின் வசம் ஆகி விடுகிறார் என்றால் அதற்கான காரணம் மனநிலையில் பலஹீனம் வந்து விடுகிறது. அதை அங்கேயே அழித்து விட வேண்டும் ஆனால் என்ன செய்வது, சூற்றுப்புறச்சூழல் அந்த மாதிரி இருந்தது. சூற்றுப்புறச்சூழலின் காரணமாக என்னுடைய உள்உணர்வு சஞ்சலமாகி விட்டது என்று வர்ணனையும் செய்கிறீர்கள். இந்த வார்த்தைகளைக் கூறுகிறீர்கள் என்றால், அந்த நேரம் தன்னை என்னவென்று நினைக்கிறீர்கள்? அந்த நேரம் நான் எந்த மாதிரியான ஆத்மா ஆவேன்? பலஹீனமான ஆத்மா. தன்னைத் தானே மறந்திருக்கிறீர்கள். லௌகீக ரூபத்தில் கூட யாராவது தன்னைத் தானே மறக்கிறாரா என்ன? நான் யார், யாருடைய குழந்தை, என்னுடைய தொழில் என்ன? என்ற இவை யாருக்காவது மறந்து விடுகிறது என்றால் அனைவரும் சிரிப்பார்கள் இல்லையா. அந்த நேரம் உங்களை நீங்கள் பாருங்கள் - என்ன நான் என்னை, என்னுடைய தந்தையை, தன்னுடைய பதவியை மறந்து விட்டேனா? இந்த விரதத்தை இப்பொழுது உறுதி யாக்குங்கள். பின்பு எப்படி நிரந்தரமான வெற்றியாளர் ஆகிறீர்கள் என்று பாருங்கள். எந்தவொரு விஷயமும் அசைக்க முடியாது. என்னென்ன உறுதிமொழியை தந்தையிடம் கொடுத்திருக்கிறோம், எந்த விரதத்தை எடுத்திருக்கிறோம் என்று அடிக்கடி தன்னுடைய புத்தியில் மீண்டும் மீண்டும் நினைவில் கொண்டு வந்தீர்கள் என்றால் பின்பு இந்த விரதம் புத்துணர்வு பெற்று விடும், நினைவிலிருக்கும் எவ்வளவு நினைவில் இருக்குமோ அவ்வளவு பலம் இருக்கும். அப்படி தன்னை அந்த மாதிரி பலமும் நிறைந்தவராக ஆக்குங்கள். நான் நம்பர் ஒன்னில் வர வேண்டும் என்ற இந்த லட்சியத்தை வைக்க வேண்டும். நம்பர் ஒன் குரூப்பின் நினைவுச்சின்னத்தின் அடையாளமாக வரதான பூமியில் என்ன கொடுத்துச் செல்கிறீர்களோ அந்த அடையாளத்தினால் உங்களுடைய வரிசைக்கிரம எண் என்னவென்று தானாகவே நிரூபணமாகி விடும். அந்த மாதிரி நினைவுச்சின்ன அடையாளத்தை கொடுத்துச் செல்லுங்கள். நினைவுச் சின்னம் மூலமாக அவருடைய நினைவு வருகிறது இல்லையா?

அந்த மாதிரி உதாரணமாவதற்காக பிறகு விசேஷமான அதிசயக் காரியம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஏதாவது அதிசயமான விஷயத்தை செய்து காண்பித்தால் தான் தானே பின்பு நினைவுச்சின்னமாக ஆகும். இந்த குரூப் எந்த நினைவுச்சின்னத்தின் அடையாளத்தை நிலைத்திருக்கச் செய்து செல்கிறது என்று இப்பொழுது பார்க்கலாம். அடையாளமும் அழியாததாக இருக்கட்டும். இப்பொழுதோ தன்னுள் சர்வசக்திகளின் பிராப்தியின் அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா.

தாரணைமூர்த்தியின் பரீட்சையோ இங்கு நடந்து விடுகிறது. மற்றபடி பிராக்டிகல் (நடைமுறை) பரீட்சையாகிய சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கானது அங்கே சென்ற பிறகு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனுடைய ரிசல்ட் கூட இங்கே வரும். அந்த மாதிரி அனைவரும் இவரிடம் மிகுந்த மாற்றம் வந்திருக்கிறது என்று உணரும் மாதிரி பிராக்டிகல் பரீட்சையை செய்ய வேண்டும். தைரியம் வைப்பதினால் உதவி தானாகவே கிடைக்கிறது. தைரியத்தில் ஏதாவது கொஞ்சமாவது குறை இருக்கிறது என்றால் பின்பு உதவியிலும் குறை ஏற்பட்டு விடுகிறது. உதவி கிடைத்தால் செய்து காண்பிப்போம் என்று சிலர் நினைக்கிறார்கள் ஆனால் தைரியம் வைப்பதினால் தான் உதவி கிடைக்கும். முதலில் குழந்தைகளின் தைரியம், பின்பு தந்தையின் உதவி. தைரியத்தை கடைபிடித்தீர்கள் என்றால் உங்களுடைய ஒரு மடங்கு தைரியம் அதற்கு தந்தையின் நூறு மடங்கு உதவி இருக்கிறது. ஒருவேளை ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை என்றால் தந்தையும் நூறு அடி எடுத்து வைக்க மாட்டார். யார் செய்வாரோ அவர் அடைவார். தைரியம் வைப்பது என்றால் செய்வது. தந்தை உதவி செய்தால் நடக்கும் என்று தந்தை மேல் மட்டும் வைப்பது என்பது கூட முயற்சியின்மையின் அடையாளம் ஆகும். பாப்தாதாவிற்கு, தான் உதவி செய்ய வேண்டும் என்று தெரிவதே இல்லை. நீங்கள் சொல்வதினால் செய்வாரா என்ன? யார் சொல்வதினால் செய்கிறாரோ அவரை என்னவென்று கூறுவது? யார் அவரே வள்ளலாகி செய்து கொண்டிருக்கிறாரோ அவரை சொல்லிச் செய்ய வைப்பது என்பது அவமரியாதை இல்லையா? கொடுக்கக்கூடிய வள்ளலின் எதிரே என்ன ஐந்து பைசா கொடுக்கிறீர்கள்? அப்படி நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்று பாப்தாதாவிற்கும் அறிவுரையை நினைவூட்டுகிறீர்கள். இந்த எண்ணத்தை ஒருபொழுதும் வைக்காதீர்கள். இதுவோ தானாகவே பிராப்தியாகும். எப்பொழுது தன்னை வாரிசு என்று

நினைக்கிறீர்கள் என்றால் வாரிசு ஆஸ்தியின் அதிகாரியாக தானாகவே ஆகுகிறார். கேட்க வேண்டியது இருப்பதில்லை. லௌகீகத்திலோ அவர்களுக்கு சுயநலம் இருக்கிறது அதனால் கேட்கிறார்கள். இங்கு தன்னுடைய சுயநலமே இல்லை என்றால் மற்றபடி வைத்துக் கொண்டு என்ன செய்வோம். எனவே இந்த எண்ணத்தை வைப்பது கூட பலஹீனம் ஆகும். தந்தை என்னுடைய துணைவனாக இருக்கிறார், பாபா எப்பொழுதுமே உதவி செய்பவர் என்று முழுமையான நிச்சயபுத்தி உடையவராக வேண்டும். நிச்சயபுத்தியுடையவர் வெற்றி அடைவார். அந்த மாதிரி எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்தீர்கள் என்றால் வெற்றி உங்கள் கழுத்தின் மாலையாகி விடும் என்பதை பார்த்தீர்கள். யாருடைய கழுத்தில் வெற்றி மாலை விழுகிறதோ அவர் தான் வெற்றி மாலையின் மணியாக ஆகிறார். ஒருவேளை இப்பொழுது வெற்றியடைபவராக ஆகவில்லை என்றால் வெற்றி மாலையில் வர மாட்டீர்கள். அப்படி இதை எப்பொழுதும் நினைவில் வைத்து அடியெடுத்து வைத்தீர்கள் என்றால் பின்பு எப்பொழுதும் சித்தி சொரூபமானவர் ஆகி விடுவீர்கள். எந்த எண்ணமும், வார்த்தையும், காரியமும் சித்தியடையவில்லை என்ற இது இருக்கவே முடியாது, ஒருவேளை முயற்சி செய்வதின் விதி யதார்த்தமாக இருக்கிறது என்றால். எந்தவொரு காரியமும் விதிப்பூர்வமாக செய்வதினால் தான் வெற்றி ஏற்படுகிறது. விதிப்பூர்வமாக செய்வதில்லை என்றால் சித்தியும் ஏற்படுவதில்லை. விதிப்பூர்வத்தின் பிரத்யக்ஷ பலனாக சித்தி கண்டிப்பாக கிடைக்கும். நல்லது.

**வரதானம்: அமிர்தவேளையின் உதவி மற்றும் ஸ்ரீமத்தின் பாலனை மூலமாக நினைவை சக்திசாலியானதாக ஆக்கக்கூடிய நினைவு சொரூபமானவர் ஆகுக!**

தன்னுடைய நினைவை சக்திசாலியானதாக ஆக்குவதற்கு மற்றும் இயல்பான நினைவு சொரூபம் ஆக வேண்டும் என்றால் அமிர்தவேளையின் நேரத்தின் மகத்துவத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். எப்படி ஸ்ரீமத் இருக்கிறது, அதன்படி நேரத்தைத் தெரிந்து கொண்டு நேரத்திற்கேற்றபடி நடந்து கொண்டீர்கள் என்றால் சுலபமாக அனைத்து பிராப்திகளையும் செய்ய முடியும். மேலும் கடும் உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். அமிர்தவேளையின் மகத்துவத்தை புரிந்து நடந்து

கொள்வதினால் காரியம் மகத்துவமானதாக இருக்கும். அந்த நேரம் விசேஷமான அமைதி இருக்கிறது எனவே சுலபமாக நினைவை சக்திசாலியானதாக ஆக்க முடியும்.

**சுலோகன்: நினைவு மற்றும் சுயநலமற்ற சேவை மூலமாக மாயாவை வென்றவர் ஆகுபவரே எப்பொழுதும் வெற்றி அடைபவர்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 19.09.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கட்டாயங்களை முடிவுகட்டுவதற்கான வழி உறுதியான நிலை!

அனைவரும் ஆடாத அசையாத ஸ்திரமான நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? மஹாவீரர்களின் நிலையாக என்ன மகிமை பாடப்பட்டிருக்கிறதோ அந்த சென்ற கல்பத்தின் மகிமை மற்றும் வர்ணனை செய்யப்பட்ட நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? மற்றும் தன்னுடைய கடைசி நிலையான சாட்சியாக இருக்கும் நிலை, மகிழ்ச்சி நிறைந்த முகம், விலகிய மற்றும் மிக அன்பான நிலைக்கு அருகில் வந்து கொண்டிருக்கிறீர்களா அல்லது அந்த நிலை இப்பொழுது தூரமாக இருக்கிறதா? எந்தப் பொருள் அருகில் வந்து விட்டது என்றால் அதனுடைய ஏதாவது தோற்றம் மற்றும் அடையாளம் பார்க்கத்தென்படும். அப்படி நீங்கள் என்ன அனுபவம் செய்கிறீர்கள்? அந்த கடைசி நிலை அருகில் வந்து கொண்டிருக்கிறதா என்ன? அருகாமையை விட அதிகமாக வேறு எந்த நிலை இருக்கிறது? தந்தையின் அருகில் வந்து கொண்டிருக்கிறீர்களா? என்ன அனுபவம் செய்கிறீர்கள்? அருகில் சென்று கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? சென்று கொண்டிருக்கும்பொழுதே நின்று விடுவதில்லையே? ஏதாவது பக்கத்து காட்சிகளைப் பார்த்து நின்று விடவில்லையே? ஏறும் கலையின் அனுபவம் செய்கிறீர்களா? நிற்கும் கலையிலேயோ இல்லையே? எப்பொழுது ஸ்தூலமான யாத்திரையிலும் செல்கிறார்கள் என்றால் சென்று கொண்டே தான் இருப்பார்களேயன்றி நிற்பதில்லை. இதுவும் ஆன்மீக யாத்திரை தான் இல்லையா? இதிலேயும் நிற்கக்கூடாது. களைப்பற்று ஆடாத அசையாதவராகி சென்று கொண்டே இருந்தீர்கள் என்றால் இலக்கை சென்று அடைந்து விடுவீர்கள். இந்த இலட்சியத்தை வைத்திருக்கிறீர்கள் இல்லையா? ஒருவேளை இலட்சியம் உறுதியாக இருக்கிறது என்றால் இலட்சணமும் வந்து விடும். உறுதி நிலை மூலமாக கட்டாயங்கள் முடிவடைந்து விடுகின்றன. ஒருவேளை உறுதி நிலை இல்லை என்றால் பின்பு அனேக கட்டாயங்களும் தென்படுகின்றன.

தன்னை மஹாவீர் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? மஹாவீர் ஒருபொழுதும் எந்தவொரு கட்டாயத்தையும் கட்டாயம் என்று நினைப்பதில்லை. ஒருநொடியில் உறுதியான நிலையின் ஆதாரத்தினால் கட்டாயத்தை முடிவு செய்து விடுவார்கள். அதே போல் அங்கதனுக்குச் சமமாக தன்னுடைய புத்தி என்ற கால்களை யாருமே அசைக்க முடியாத அளவிற்கு ஒரு தந்தையின் நினைவில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். சென்ற கல்பத்திலும் கூட அந்த மாதிரியே தான் ஆனீர்கள் தான் இல்லையா? நினைவு வருகிறதா? எப்பொழுது சென்ற கல்பத்திலும் அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்கள் என்றால் அதே பாகத்தை மீண்டும் செய்வதில் என்ன கடினம் இருக்கிறது? அனேக தடவை செய்த பாகத்தை மீண்டும் அதே போல் செய்வதில் கடினம் இருக்குமா? அப்படி நீங்கள் மிக மிக பல மடங்கு பாக்கியசாலி ஆவீர்கள். முழு உலகத்திலும் இத்தனை மனிதர்களுக்குள் தந்தையைத் தெரிந்து கொள்வது மற்றும் தன்னுடைய பிறப்புரிமையைப் பெறுபவர்கள் எவ்வளவு குறைவாக இருக்கிறார்கள். எண்ண முடியாத நிலை இல்லை. எண்ண முடியும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அந்த தெரிந்து கொண்டிருக்கும் குறைந்தவர்களில் நீங்களும் ஒருவர். அப்படியானால் பல கோடி மடங்கு பாக்கியசாலியாக ஆகவில்லையா? இப்பொழுதோ உலகம் அஞ்ஞான தூக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறது, மேலும் நீங்கள் அனேகரில் மிகக் குறைந்த ஆத்மாக்கள் தந்தையின் ஆஸ்தியின் அதிகாரியாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். எப்பொழுது அவர்கள் அனைவரும் விழித்துக் கொள்வார்களோ, நாமும் ஏதாவது கொஞ்சமாவது அடைந்து கொள்வோம் என்று முயற்சி செய்வார்கள், ஆனால் என்னவாகும்? அடைய முடியுமா? எப்பொழுது காலதாமதம் ஆகி விடும் என்றால் என்ன அடைய முடியும்? அந்த நேரம் உங்கள் அனைத்து ஆத்மாக்களுக்கும் தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தின் சாட்சாத்காரம் பிரத்யக்ஷ ரூபத்தில் ஏற்படும். இப்பொழுதோ குப்தமாக (மறைவாக) இருக்கிறீர்கள் இல்லையா? இப்பொழுது குப்தமாக இருப்பதில் தந்தையையும், உயர்ந்த ஆத்மாக்கள் உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை. சாதாரணமாக நினைக்கிறார்கள் ஆனால் அந்த நேரமும் தொலைவில் இல்லை, அப்பொழுது விழித்தெழுவார்கள், துடிப்பார்கள், வேதனை அடைவார்கள், ஆனால் இருந்தும் எதையும் அடைய முடியாது. அந்த நேரம் உங்களுக்கு உங்கள் மேலே நாமோ முதலிலேயே தெரிந்து அதிகாரி ஆகி விட்டோம் என்று எவ்வளவு

பெருமிதம் இருக்கும்? அந்த மாதிரி குஷியில் இருக்க வேண்டும். என்ன கிடைத்திருக்கிறது, யார் கிடைத்திருக்கிறார், மேலும் இன்னும் என்னென்ன நடக்கப்போகிறது, இவை அனைத்தையும் தெரிந்து கொண்டு எப்பொழுதும் அதீந்திரிய சுகத்தில் ஆடிக் கொண்டே இருக்க வேண்டும். அந்த மாதிரி நிலை இருக்கிறதா? அல்லது எப்பொழுதாவது சோதனை உங்களை ஆட்டி விடுகிறதா? நீங்கள் ஆடுவதில்லையே? பயப்படுவது இல்லையே? அல்லது ஒவ்வொருவரிடமிருந்து கேட்டு பயப்படும் அலை வருகிறது பின்பு உங்களை நீங்கள் சரி செய்து விடுகிறீர்களா? ரிசல்ட்டாக என்ன இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்? மதுபன்னில் இருப்பவர்களின் ரிசல்ட் என்னவாக இருக்கிறது?

மதுபன்னில் இருப்பவர்கள் லைட் ஹவுசாக இருக்கிறார்கள். லைட் ஹவுஸ் உயர்வாக இருக்கும் மேலும் வழி காண்பிப்பதாக இருக்கும். மதுபன்னின் வழிகாட்டுதல்படி அனைவரும் நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் லைட் ஹவுஸாக ஆனீர்கள் இல்லையா? மேலும் உயர்ந்த நிலையாகவும் ஆனது. எப்படி தந்தைக்காக உயர்ந்த காரியம் செய்பவர் என்று கூறுகிறீர்கள், அதே போல் மதுபன் என்றால் உயர்ந்த இடம். அப்படியானால் பெயரும் காரியமும் உயர்ந்ததாக இருக்கும் இல்லையா? மதுபன்வாசிகளின் பெயரே விசேஷமாக இனிமையானவர்கள் மற்றும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவர்கள் என்பது இருக்கிறது. ஒருபக்கம் இனிமையான நிலை, இன்னொரு பக்கம் இந்த அளவே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள் உணர்வு. வைராக்கியம் உள்ளவர்களிலிருந்து பின்பு கம்பீரமானவர்களாக இருப்பீர்களா? இல்லை, உண்மையான கம்பீர நிலையில் ரமணீகரம் அடங்கியிருக்கிறது. அதுவோ அஞ்ஞான மனிதர்களின் கம்பீர ரூபமாக இருக்கிறது என்றால் முற்றிலுமே கம்பீரம், ரமணீகரத்தின் பெயர், அடையாளம் இருக்காது ஆனால் யதார்த்தமான கம்பீர நிலையின் குணம் ரமணீகர குணத்தால் நிரம்பியிருக்கும். எப்படி நாம் ஆத்மா அமைதி சொரூபமானவர்கள் என்று மக்களுக்கும் புரிய வைக்கிறீர்கள், ஆனால் அமைதி சொரூபம் மட்டுமில்லை, அந்த அமைதி சொரூபத்தில் ஆனந்தம், அன்பு, ஞானம் அனைத்தும் நிரம்பியிருக்கிறது. அப்படி அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர்கள், மேலும் இனிமையும் சேர்ந்தே இருக்கிறது, இந்த மாதிரியான விசேஷ நிலை மதுபன் நிவாசிகளினுடையது. அப்படியானால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய

உள்உணர்வில் இருப்பவர் எப்பொழுதாவது பயப்படுவாரா என்ன? மேலே கீழே ஆட முடியுமா என்ன? அசைக்க முடியுமா என்ன? எவ்வளவு தான் வலுவோடு அசைத்தாலும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு உடையவர் பற்றுதலை வென்று (தந்தையின்) நினைவு சொரூபமானவராக இருப்பார். அப்படியானால் பற்றுதலை வென்று நினைவு சொரூபமானவராக இருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் பார்த்து சிறிதளவு அம்ச மாத்திரமாவது அன்பு என்று கூறினாலும் அல்லது பற்றுதல் என்று கூறினாலும் அன்பின் சொரூபம் என்னவாக இருக்கிறது என்ற இதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? யார் மேல் அன்பு இருக்கிறதோ அவருக்காக சகயோகியாகவும் ஆக வேண்டியுள்ளது. மற்றபடி ஏதாவது பழக்கவழக்கத்தினால் அன்பின் ரூபத்தை வெளிப் படுத்துவது இதை அன்பு என்று செல்வதா அல்லது மோகம் (பற்றுதல்) என்று சொல்வதா? இதில் மதுபன் நிவாசிகள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்களா? மதுபன்னின் சுற்றுப்புறச்சூழல், மதுபன் நிவாசிகளின் உள்உணர்வு, எண்ண அதிர்வலைகள் லைட் ஹவுஸாக இருக்கும் காரணத்தினால் நாலாபுறங்களிலும் ஒரு நொடியில் பரவி விடுகிறது. அப்படியானால் தன்னை அந்த மாதிரி நிமித்தமானவர் (பொறுப்பானவர்) என்று புரிந்து ஒவ்வொரு பாகத்தையும் செய்கிறீர்களா? அல்லது அந்த மாதிரி நேரத்தில் சிறு குழந்தைகளாக ஆகி விடுகிறீர்களா? ரிசல்ட் என்ன மாதிரி இருக்கிறது? இதுவோ இப்பொழுது ஒன்றும் நடக்கவில்லை இன்னும் அதிகமாக நடக்க வேண்டியதாக இருக்கிறது. திடீரென்று நடந்து விட்டது என்று நீங்கள் நினைப்பீர்கள். எனவே கொஞ்சமாக நடந்திருக்கிறது ஆனால் பரீட்சையோ திடீரென்று வரும், பரீட்சை சொல்லிவிட்டு வராது. இந்த இந்த மாதிரி பரீட்சை வரப்போகிறது என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம் ஆனால் அந்த நேரம் திடீரென்று நடக்கும். அப்படி திடீரென்று நடக்கும் பரீட்சையில் ஒருவேளை கொஞ்சம் எண்ணத்தில் கூட ஆடுவது இருக்கிறது என்றால் அங்கதன் மாதிரி ஆனீர்களா? இப்பொழுது அந்த கடைசி நிலை வரவில்லையா என்ன? நெருக்கத்தை விட அதிகமான அருகாமை என்பதை எந்த நிலை என்று கேட்டிருந்தீர்கள் இல்லையா? அது எதிரில் தென்படுவது ஆகும். அருகில் வந்து வந்தே அதே பொருள் எதிரில் இருப்பதாக ஆகி விடுகிறது. அப்படி நெருக்கத்தின் அனுபவம் செய்கிறீர்களா அல்லது அந்த நிலை முற்றிலும் எதிரில் தென்படுகிறதா? இன்று இதுவாக இருக்கிறோம், நாளை இதுவாக ஆகி

விடுவோம் என்று அந்த மாதிரி எதிரில் அனுபவம் செய்கிறீர்களா? எப்படி சாகார பாபாவின் அனுபவத்தைப் பார்த்தீர்கள் - எதிர்காலத்து சொரூபம் மற்றும் கடைசி சம்பூர்ண சொரூபம் எப்பொழுதும் தெளிவான ரூபத்தில் எதிரில் இருந்தது தான் இல்லையா? எனவே தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும். எப்படி தந்தையின் (பிரம்மாபாபாவின்) எதிரில் எப்பொழுதும் சம்பூர்ண நிலை மற்றும் எதிர்காலத்து நிலை இருந்தது, அது போலவே நீங்களும் அனுபவம் செய்கிறீர்களா அல்லது தெரியவில்லை, எதிர்காலம் என்னவாக இருக்குமோ என்று யோசிக்கிறீர்களா? அது எங்கே தெளிவாகிறது? அறிவிக்கப்படுவதில்லை, ஆனால் யார் மகாவீர் முயற்சி செய்பவராக இருக்கிறாரோ அவருடைய புத்தியில் எப்பொழுதும் தன்னைப் பற்றி தெளிவாக இருக்கிறது. அப்படியானால் தெளிவாகப் பார்க்கத் தென்படுகிறதா அல்லது கொஞ்சம் திரைச்சீலை இடையில் வந்து விடுகிறதா? இன்றைய நாட்களில் டிரான்ஸ்பெரன்ட் திரைச்சீலைகளும் இருக்கின்றன. அனைத்தும் தென்படும், ஆனால் அது திரைச்சீலையாக இருக்கும் ஆனால் தெளிவாகப் பார்ப்பது மற்றும் திரைச்சீலைக்குப் பின்னிருந்து பார்ப்பது, இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கும் இல்லையா? எனவே தன்னுடைய முயற்சியின் அனுசாரம் டிரான்ஸ்பெரன்ட் ரூபத்தில் திரைச்சீலை இடையில் இருந்து விடவில்லையே? முற்றிலுமே தெளிவாக இருக்கிறது இல்லையா?

மதுபன்நிவாசிகள் ஆடாத அசையாதவர்களாக இருக்கிறார்கள் இல்லையா அல்லது இது என்ன நடக்கிறது. என்ற எண்ணமும் இருக்கிறதா? 'ஏன், என்ன' என்ற கேள்வியோ இல்லையே? என்னென்ன பாகம் நடந்து கொண்டிருக்கிறதோ அந்த ஒவ்வொரு பாகத்திலும் மிக ஆழமான இரகசியம் அடங்கியிருக்கிறது. அந்த இரகசியம் என்னவாக இருந்தது? நேரத்தின் அறிவிப்பைப் செய்வதற்காக இடையிடையே மணி அடித்து எழுப்புவார்கள். எனவே உங்களுடைய ஜடச்சிலைகளுக்கு முன்பும் மணி அடிக்கிறார்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். இதுவும் நேரத்தின் அறிவிட்டாகும். மணிகள் அடிக்கப்படுகின்றன. ஏனென்றால் சாஸ்திரவாதிகளோ நேரத்தை மிக அதிகமாகக் கூறி அனைவரையும் தூங்க வைத்து விட்டார்கள். மிக ஆழ்ந்த அஞ்ஞான தூக்கத்தில் அனைவரும் தூங்கி விட்டார்கள். ஏனென்றால் இன்னும் அதிகமான நேரம் இருக்கிறது என்று நினைக்கிறார்கள். அப்படி இங்கு யார் தெய்வீக

பரிவாரத்தின் ஆத்மாக்களோ அவர்களை மாயா அனேக் விதமான ரூபம், வர்ணம், பழக்க வழக்கம் மூலமாக அலட்சியமானவராக ஆக்கி நேரத்தை தெரிந்து கொள்வதிலிருந்து தூரமாக்கி முயற்சி செய்வதில் தொய்வான நிலையில் தூங்க வைத்து விடுகிறது. எப்பொழுதாவது யாராவது அலட்சியமானவராக இருக்கிறார் என்றால் மிகவும் ஓய்வானவராக இருப்பார். பொறுப்பு இருந்தால் நாம் நேரத்தோடு எழ வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்ற கவனம் இருக்கும். ஒருவேளை எந்த பொறுப்புமே இல்லை என்றால் அலட்சியமானவராகி தூங்கி விடுவார். அப்படி இந்த அலட்சியமும் வந்து விடுகிறது. எப்பொழுது யாராவது அலட்சியமாகி மிகத் தொய்வான முயற்சியின் தூக்கத்தின் போதையில் தன்னையே மறந்திருக்கிறார் என்றால் என்ன செய்ய வேண்டியதாக இருக்கிறது? அவரை அசைக்க வேண்டியதாக இருக்கிறது. மேலும் எழுந்து விடட்டுமே என்று கூச்சல் குழப்பம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. எப்படிப்பட்ட தூக்கமோ அப்படி செய்யப்படுகிறது. மிக ஆழமான தூக்கம் என்றால் அவரை அசைக்க வேண்டியதாக இருக்கிறது ஆனால் யாராவது மிக லேசான தூக்கத்தில் இருக்கிறார் என்றால் கொஞ்சம் சப்தம் செய்தாலே எழுந்து விடுவார். இப்பொழுது அசைக்கவில்லை கொஞ்சம் கூச்சல் ஏற்பட்டிருக்கிறது. இன்னொன்றை காரணமாக வைத்து அவரை அசைக்கிறோம் என்றால் விழித்தெழுவது ஏற்பட்டு விடுகிறது. யார் அறிவிப்பு சொரூபமானவர்களாக இருக்கிறார்களோ அவர்களை கொஞ்சம் அசைத்தாலும் கூச்சல் செய்தாலும் அனைவரும் எழுந்து விடுவார்கள். ஏனென்றால் லேசான தூக்கத்தில் இருக்கிறார்கள் இல்லையா? அவசியம் எழுந்திருக்கிறார்கள் ஆனால் எழுந்ததின் கூடவே பதட்டம் அடையவில்லையே? யாரையாவது திடீரென்று எழுப்பினோம் என்றால் என்ன நடந்தது? என்று அவர் பயந்து விடுவார். அப்படி சிலர் யதார்த்த ரூபத்தில் விழித்தெழுகிறார்கள், சிலர் கொஞ்சம் பயந்த பிறகு உணர்வில் வருகிறார்கள் ஆனால் இந்த மாதிரி நடக்கக் கூடாது, கொஞ்சம் கூட முகத்தில் பயப்படுவதற்கான அடையாளம் வரக்கூடாது. பேச்சின் வார்த்தையிலும் மாற்றம் இருக்க வேண்டாம். ஒருவேளை வார்த்தையில் மாற்றம் வந்து விடுகிறது, முகத்திலும் கொஞ்சம் மாற்றம் வந்து விடுகிறது என்றால் இதையும் தேர்ச்சி அடைந்த நிலை என்று கூற முடியுமா? இதுவோ ஒன்றுமே இல்லை. இப்பொழுது இன்னும் கடினமான பரீட்சை வர வேண்டியதாக இருக்கிறது. பரீட்சை வருவதற்கு வெகு காலம் இருந்தால் படிப்பதில் அலட்சியம் வந்து விடும். பிறகு எப்பொழுது பரீட்சை

நாள் அருகில் வருகிறது என்றால் பின்பு கவனம் கொடுக்கிறர்கள். அப்படி இதையும் இப்பொழுது ஒன்றுமே பார்க்கவில்லை ஆனால் இன்னுமோ எது உங்களுடைய கனவிலும், எண்ணத்திலும் இல்லாமல் இருந்திருக்குமோ அந்த மாதிரியான பரீட்சை வரப்போகிறது. எப்படி எல்லைக்குட்பட்ட நாடகத்தை பார்வையாளராகி பார்க்கப்படுகிறதோ அந்த மாதிரி பயிற்சி இருக்க வேண்டும். பின்பு அது துக்கமானதாக இருந்தாலும் அல்லது நகைச்சுவையானதாக இருந்தாலும் இரண்டையுமே பார்வையாளராகி பார்க்கிறார்கள், வித்தியாசம் இருப்பதில்லை. ஏனென்றால், டிராமா என்று புரிந்து கொள்கிறார்கள். அந்த மாதிரி ஒரே சீரான நிலை இருக்க வேண்டும். ரமணீகரமான பாகமாக இருந்தாலும் அல்லது ஏதாவது அன்பிற்குரிய ஆத்மாவின் கம்பீரமான பாகமாக இருந்தாலும் இரண்டையும் பார்வையாளராகிப் பாருங்கள். பார்வையாளராகி பார்க்கும் நிலை இருக்க வேண்டும். பயந்த அல்லது யுத்தம் செய்யும் நிலை இருக்க வேண்டாம். சிலர் பயப்படுவதும் இல்லை, யுத்தம் செய்வதில் ஈடுபட்டு விடுகிறார்கள். அவசியம் ஏதாவது நன்மை இருக்கும் ஆனால் சாட்சியாகப் பார்க்கும் நிலை முற்றிலும் வேறாகும். இதைத் தான் ஒரே சீரான நிலை என்று கூறப்படுகிறது. இந்த நிலை எப்பொழுது ஒரே ஒரு தந்தையின் நினைவில் எப்பொழுதும் முழ்கியிருப்பாரோ அப்பொழுது இருக்கும். தந்தை மற்றும் ஆஸ்தி அவ்வளவு தான் மூன்றாவது யாரும் இல்லை. மேலும் ஏதாவது விஷயத்தைப் பார்த்து கேட்டு மற்றும் ஏதாவது உறவு நெருக்கத்தில் வந்து கொண்டே பார்வையாளராகி தன்னுடைய பங்கை செய்து கொண்டிருக்கிறோம் என்று அப்படிப் புரிந்து கொள்வார்கள். புத்தி அந்த ஆர்வத்திலேயே மூழ்கியிருக்கட்டும். தந்தை மற்றும் ஆஸ்தியின் போதை இருக்கட்டும். எனவே இப்பொழுது அந்த மாதிரியான நிலையை உருவாக்குங்கள். இதற்காக தன்னை தெரிந்து கொள்வதற்காக இந்த பரீட்சை வருகிறது. இல்லை என்றால் எப்படி தெரிய வரும். ஒவ்வொருவருக்கும் தன்னுடைய நிலையைத் தெரிந்து கொள்வதற்காக தெர்மாமீட்டர் கிடைக்கிறது அதன் மூலம் தன்னுடைய நிலையை யை': அவரே தெரிந்து கொள்ள முடியும். யாருக்கும் கூற வேண்டிய அவசியம் இருக்காது. பயப்படாதீர்கள் ஆழத்தில் சென்றீர்கள் என்றால் பயம் முடிவடைந்து விடும், ஆழத்தில் செல்லாத காரணத்தினால் பயப்படுகிறீர்கள். (உடல்நிலை காரணமாக தாதி மற்றும் தீதி இருவருமே மும்பை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்). முக்கியமாக

# 1972 அவ்யக்த முரளி

மதுபன் நிவாசிகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். இதில் கூட உயர்ந்த பாக்கிய சாலிகளாக ஆனீர்கள் இல்லையா? மற்ற சந்திப்பிற்கான நிகழ்ச்சியோ உருவாக்கப்பட்டுக் கொண்டே தான் இருக்கிறது. நீங்கள் புரோகிராம் இன்றி பிராப்தி செய்கிறீர்கள். அப்படியானால் விசேஷம் ஆனது இல்லையா? மதுபன்னில் தந்தை அவரே ஓடி வருகிறார். ரிசல்ட்டோ நன்றாகத் தான் இருக்கிறது. அதுவும். கொஞ்சம் (குழப்பமாக) இருந்தது. அந்த 'கொஞ்சத்தை' புரிந்து கொண்டீர்கள் இல்லையா? இப்பொழுது அதையும் அகற்ற வேண்டும். கொஞ்சமாவது ஃப்ளா (குறை) இருந்தால் ஃபெயில் ஆக்கி விடும். கடைசி பரீட்சையில் ஒருவேளை கொஞ்சமாவது ஃப்ளா வந்து விட்டால் ஃபெயில் (தோல்வி) ஆகி விடுவீர்கள். எனவே பரிபக்குவமாக ஆக்குவதற்காக முதலிலேயே பரீட்சை நடக்கிறது. மற்றபடி இப்பொழுதைய ரிசல்ட் மிக நன்றாக இருக்கிறது. அனைவரும் ஒவ்வொருவரின் மேல் அன்பானவராகவும் சகயோகியாகவும் நன்றாக இருக்கிறீர்கள். சூட்சும சேவைக்கான இயந்திரம் இப்பொழுது இயங்க ஆரம்பிக்கிறது என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அப்படி மதுபன்நிவாசிகள் மூலமாக விசேஷ சூட்சும சேவைக்கான இயந்திரம் இப்பொழுது தொடங்கி விட்டது. மற்ற சேவை நிலையங் களிலும் சூட்சும சேவை நடந்து கொண்டு தான் இருக்கிறது ஆனால் இருந்தாலும் தற்சமய ரிசல்ட்டின் அனுசாரம் இந்த சேவையில் நம்பர் ஒன் மதுபன்நிவாசிகள் இருக்கிறார்கள். எனவே அதற்காக வாழ்த்துக்கள். எப்படி இதுவரை அன்பு மற்றும் சகயோகத்தின் நிரூபணத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களோ அதே நிரூபணத்தை மருந்தின் ரூபத்தில் எங்கு சென்றடைய விரும்புகிறீர்களோ அங்கு சென்றடைந்து கொண்டிருக்கிறது. இதைவிட சக்திசாலியான மருந்தை அனுப்பிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் ஒரு வாரத்தில் கூட சரியாக முடியும். அதிகரிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் ரிசல்ட் நன்றாக இருக்கிறது. அந்த மாதிரி நல்ல ரிசல்ட்டைப் பார்த்துக் கொண்டே லைட் ஹவுசின் ஒளி நாலாபுறமும் சென்றடைந்து கொண்டிருக்கிறது. அதன் மூலம் மற்ற இடங்களில் கூட லைட் ஹவுசின் பிரபாவம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் உங்களுக்குள் ஒற்றுமையாக, மேலும் உயர்ந்த வேகத்தில் சென்று கொண்டிருக்கும், எப்பொழுதும் ஒருவரின் நினைவில்

இருக்கக்கூடிய பாண்டவ சேனை மற்றும் சக்தி சேனைக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: ஞானம் மூலமாக ராவணனின் பல ரூபங்களை தெரிந்து அதனுடைய கவர்ச்சியிலிருந்து விடுபட்டிருக்கக்கூடிய தைரியமுள்ளவர் ஆகுக!**

எந்த குழந்தைகள் ஞானம் மூலமாக இராவணனின் பல ரூபங்களை மிக நன்றாகத் தெரிந்து கொண்டார்கள். அவர்களின் எதிரில் அவன் அருகில் கூட வர முடியாது. தங்கத்தின் அல்லது வைரத்தின் ரூபத்தை தாரணை செய்தாலும் அவனுடைய கவர்ச்சியில் வர மாட்டார்கள். அந்த மாதிரி உண்மையான சீதைகளாகி கோட்டிற்கு உள்ளேயே இருப்பதற்கான லட்சியம் வைத்து தைரியம் உள்ளவர்களாக ஆகுங்கள். பின்பு இந்த இராவணனின் சேனை தாக்குதல் செய்வதற்குப் பதிலாக உங்களுடைய சகயோகி ஆகி விடும். இயற்கையின் ஐந்து தத்துவங்கள் மற்றும் ஐந்து விகாரங்கள் இடம் மாற்றுதலாகி உங்களுடைய சேவைக்காக வருவார்கள்.

**சுலோகன்: சேவைகளில் வெற்றி அடைய வேண்டும் என்றால் பணிவாக இருப்பதின் விசேஷத்தை தாரணை செய்யுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 09.11.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஞான நட்சத்திரங்களின் சம்மந்தம் ஞான சூரியன் மற்றும் ஞான சந்திரனோடு இருக்கிறது!

நினைவு சொரூப தெளிவான நட்சத்திரங்கள் தன்னை எப்பொழுதும் தெய்வீக நட்சத்திரம் என்று நினைக்கிறீர்களா? தற்சமயத்து உயர்ந்த பாக்கியமான பாப்தாதாவின் கண்களின் நட்சத்திரங்கள் மற்றும் எதிர்காலத்தில் என்ன பிராப்தி ஆகுமோ அந்த அதிர்ஷ்டத்தை உருவாக்கிக் கொண்டே, தன்னை அந்த உயர்ந்த அதிர்ஷ்டத்தின் நட்சத்திரமாகப் பார்த்துக் கொண்டே நடந்து கொள்கிறீர்களா? எப்பொழுது தன்னை தெய்வீக நட்சத்திரம் என்று நினைப்பதில்லை என்றால் இரண்டு நட்சத்திரங்களும் கூட நினைவில் இருப்பதில்லை. எனவே தன்னுடைய திரிமூர்த்தி நட்சத்திர ரூபத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எப்படி நட்சத்திரங்களின் சம்மந்தம் சந்திரன் மற்றும் சூரியனோடு இருக்கிறது, குப்த (மறைமுக) ரூபத்தில் சூரியனுடன் இருக்கிறது மற்றும் பிரத்யக்ஷ ரூபத்தில் சந்திரனுடன் இருக்கிறது, அந்த மாதிரி சைத்தன்ய நட்சத்திரங்களாகிய உங்களின் சம்மந்தமும் நடைமுறை ரூபத்தில் யாருடன் இருக்கிறது? சந்திரனுடன் இருக்கிறது இல்லையா? ஞான சூரியனோ குப்தமாகவே தான் இருக்கிறார் ஆனால் சாகார ரூபத்தில், வெளிப்படையான ரூபத்திலோ பெரிய அம்மாவுடனே தான் சம்மந்தம் இருந்தது இல்லையா? அப்படி தன்னை நட்சத்திரம் என்று புரிந்து கொண்டே இருக்க வேண்டும். எப்படி நட்சத்திரங்களின் சம்மந்தம் சந்திரன் மற்றும் சூரியனுடன் இருக்கிறதோ, அதே போல் எப்பொழுதும் பாப்தாதாவினுடனேயே சம்மந்தம் இருக்கட்டும். எப்படி நட்சத்திரங்கள் மின்னுகின்றன. அதே போல் தன்னுடைய மின்னிக் கொண்டிருக்கும் ஜோதி சொரூபத்தில் எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும். நட்சத்திரங்கள் குழுவாக இருந்து எப்பொழுதும் அவர்களுக்குள் ஒவ்வொருவரின் அன்பானவராகவும் சகயோகியாகவும் இருப்பார்கள்.

சைத்தன்ய நட்சத்திரங்கள் உங்களுடைய நினைவுச் சின்னங்கள் இந்த ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரங்கள். அப்படியானால் அந்த மாதிரி உயர்ந்த நட்சத்திரங்களாக ஆகியிருக்கிறீர்களா? சைத்தன்யமும் மற்றும் சித்திரமும் சமமாகி விட்டதா? தன்னுடைய விதவிதமான ரூபத்தின் விதவிதமான காரியத்தின் நினைவுச்சின்னமான சித்திரத்தைப் பார்த்து, இது சைத்தன்யமான என்னுடைய சித்திரம் தான் என்று நினைக்கிறீர்களா? சைத்தன்யம் மற்றும் சித்திரத்தில் உள்ள வித்தியாசம் முடிவடைந்து விட்டதா அல்லது இப்பொழுது தான் நெருக்கத்தில் வந்து கொண்டிருக்கிறீர்களா? நட்சத்திரங்கள் எப்பொழுது அவர்களுக்குள் குழுவில் இருந்து கொண்டே ஒவ்வொருவரின் அன்பு மற்றும் சகயோகத்திலிருந்து தூரமாக இருக்கிறார்களா என்ன? நீங்கள் எப்பொழுதாவது சந்திப்பை நடத்தவில்லையா? செய்தி கொடுப்பதற்கான சந்திப்பையோ அதிகமாகச் செய்திருக்கிறீர்கள். மற்றபடி இன்னும் எந்த சந்திப்பு செய்ய வேண்டியது பாக்கி இருக்கிறது? கடைசி சந்திப்பாக என்ன இருக்கிறதோ அதற்கான உத்தேசம் என்னவாக இருக்கிறது? சந்திப்பிற்கு முன்பு அனைவருக்கும் உத்தேசம் என்னவென்று கூறுகிறீர்கள் இல்லையா? அப்படி கடைசி சந்திப்பின் உத்தேசம் என்னவாக இருக்கிறது? அதற்கான நாள் நிர்ணயம் செய்தாகி விட்டதா? எப்படி மற்ற சந்திப்பின் நாள் நிர்ணயம் செய்கிறீர்கள் இல்லையா அதே போல் இதற்கும் நிர்ணயம் செய்தாகி விட்டதா? அந்த சந்திப்பையோ அனைவரும் ஒன்றாகக் கூடிச் செய்ய வேண்டும், உங்களுடைய அந்த கடைசி சந்திப்பின் சித்திரம் இருக்கிறது. சித்திரமாக என்ன இருக்கிறதோ அதை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். அனைவரின் சகயோகம், அனைவரின் அன்பு மற்றும் அனைவரின் ஒரே சீரான நிலையில் நிலைத்திருப்பதற்கான சித்திரமும் இருக்கிறது இல்லையா? எப்படி கோவர்த்தன மலையை விரல்களால் தூக்குவதாகக் காண்பிக்கிறார்கள் என்றால், விரல்களை முற்றிலும் நேராகக் காண்பிப்பார்கள். ஒருவேளை வளைந்திருந்தால் ஆடிக் கொண்டே இருக்கும். நேரான மற்றும் ஸ்திரமானதின் அடையாளமாக இந்த ரூபத்தில் காண்பிக்கப் பட்டிருக்கிறது. அதே போலவே தன்னுடைய முயற்சியையும் முற்றிலுமே நேராக வைக்க வேண்டும். இடையிடையே வளைந்த பாதையாகி விடுகிறது அதாவது புத்தி அங்கு இங்கு அலைந்து விடுகிறது. அது முடிவடைந்து ஒரே சீரான நிலையில் நிலைத்திருந்து விட வேண்டும். அந்த மாதிரியான முயற்சியை செய்து

கொண்டிருக்கிறீர்களா? ஆனால் தன்னுடைய முயற்சி மேல் தானே திருப்தியாக இருக்கிறீர்களா? அல்லது எப்படி விருப்பமோ உயர்ந்ததாக இருக்கிறது ஆனால் சக்தியில்லாத நிலையின் காரணமாக என்ன விரும்புகிறீர்களோ அதை செய்ய முடிவதில்லை என்று பக்தர்களுக்குக் கூறுகிறீர்கள் அதே போல் நீங்களும் அந்த மாதிரி உயர்ந்தவர்களாக ஆக வேண்டும் என்று என்ன விரும்புகிறீர்கனோ, விருப்பம் உயர்வானது மற்றும் முயற்சி குறைவாக இருக்கிறது, லட்சியம் தன்னுடைய திருப்தியின் ஆதாரத்தில் தூரமாகத் தென்படுகிறது என்றால் அதை என்னவென்று கூறலாம்? மகான் ஞானியா? தன்னை சர்வ சக்திவானின் குழந்தை என்று கூறுகிறீர்கள்; ஆனால் குழந்தை ஆன பிறகும் தன்னில் சக்தியில்லையா? மனிதன் என்ன விரும்புகிறானோ அதைச் செய்ய முடியும் என்று அந்த மாதிரி நினைக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படியானால் நீங்களும் மாஸ்டர் சர்வ சக்திவானாக இருக்கும் காரணத்தினால் என்ன நினைக்கிறீர்களோ அதை இப்பொழுது செய்ய முடியாதா? தன்னுடைய அந்த கடைசி நிலையை இப்பொழுது நடைமுறையில் கொண்டு வர முடியாதா அல்லது கடைசி எனவே கடைசியில் ஏற்பட்டு விடுமா? கடைசி நிலைக்கான அர்த்தம் அந்த நிலை கடைசியில் ஆகி விடும் என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள் ஆனால் இப்பொழுதிலிருந்தே அந்த சம்பூர்ண நிலையை நடைமுறையில் கொண்டு வந்து கொண்டே இருந்தால் தான் கடைசி நிலையை கடைசியில் அடைய முடியும். ஒருவேளை இப்பொழுதிலிருந்தே அந்த நிலையை அருகில் கொண்டு வராமல் இருந்தீர்கள் என்றால் அது தூரமாகவே இருந்து விடும். அடைய முடியாது. எனவே இப்பொழுது முயற்சி செய்வதில் உயரமாய் தாண்டச் செல்லுங்கள். முயற்சி செய்து கொண்டிருக்கும்பொழுதே அதனுடைய சதவிகிதத்தில் குறை ஏற்பட்டு விடுகிறது. இப்பொழுது நீங்கள் முயற்சி செய்யும் நிலையில் இருக்கிறீர்கள்; ஆனால் அந்த நிலையில் இருந்தபோதிலும் சதவிகிதத்தை நிரட்டங்கள், சதவிகிதத்தில் மிகக்குறைவாக இருக்கிறது. எப்படி முக்கியமான பாடமாகிய நினைவு யாத்திரையில் வரிசைக்கிரமமானவராக இருக்கிறீர்கள்; ஆனால் நிலையின் கூடவே என்ன சதவிகிதம் இருக்க வேண்டுமோ அது இப்பொழுது குறைவாக இருக்கிறது. எனவே என்ன பிரபாவம் தென்பட வேண்டுமோ அது குறைவாகத் தெரிகிறது.

எதுவரை சதவிகிதத்தை அதிகரிக்கவில்லையோ அதுவரை பிரபாவம் பரவ முடியாது. பரவுவதற்கான சதவிகிதம் தேவையாக இருக்கிறது. எப்படி பல்ப் இருக்கிறது. லைட்டோ அனைத்திலும் இருக்கிறது; ஆனால் எவ்வளவு லைட்டின் சதவிகிதம் இருக்குமோ அந்தளவு அதிகமாக பரவும். அப்படி பல்பாக ஆகியிருக்கிறீர்கள் ஆனால் லைட்டில் என்ன சதவிகிதம் இருக்க வேண்டுமோ அது இப்பொழுது இல்லை, அதை அதிகரியுங்கள். ஒன்று லைட், இன்னொன்று சர்ச் லைட், மூன்றாவது லைட் ஹவுஸ் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். விதவிதமான நிலைகள் இருக்கிறது இல்லையா? லைட் ஆகவோ ஆகியிருக்கிறீர்கள்; ஆனால் லைட் ஹவுஸ் ஆகி நாலாபுறத்திலுமுள்ள இருளை விலக்கி லைட்டைப் பரப்புங்கள். ஒருவர் தன்னைத் தானே பார்க்க முடியும் அளவிற்கு அனைவருக்கும் அந்தளவு வெளிச்சத்தை அடையச் செய்யுங்கள். இப்பொழுதோ தன்னைத் தானேயே பார்க்க முடியவில்லை, எப்படி மிகவும் இருளாக இருக்கிறது என்றால் தன்னையும் மற்றவர்களையும் பார்க்க முடியாது. எனவே அனைவரும் தன்னைத் தானே பார்க்க முடியும் அளவிற்கு அந்த மாதிரி லைட் ஹவுஸ் ஆகுங்கள். எப்படி கண்ணாடியின் எதிரில் யார் இருந்தாலும் அவருக்கு தன்னுடைய பிம்பம் தென்படுகிறது. அந்த மாதிரி கண்ணாடியாக ஆகியிருக்கிறீர்களா? ஒருவேளை இத்தனை அனைவரும் கண்ணாடியாகி தன்னுடைய காரியம் செய்வதை தொடங்கி விட்டார்கள் என்றால் நாலாபுறத்திலும் அனைத்து ஆத்மாக்களுக்கும் தன்னுடைய காட்சி ஏற்பட்டு விடாதா என்ன? யாருக்காவது சாட்சாத்காரம் ஏற்பட்டு விடுகிறது என்றால், அவருடைய வாயிலிருந்து வெற்றி முழக்கம் அவசியம் வெளியாகும். அந்த மாதிரி கண்ணாடியாக ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? முழு நாளிலும் எத்தனை பேருக்கு தன்னுடைய சாட்சாத்காரத்தை செய்விக்கிறீர்கள்? யார் எதிரில் வருகிறாரோ அவர் சாட்சாத்காரத்தைப் பார்க்கிறாரா? ஒருவேளை கண்ணாடி மிக சக்தி வாய்ந்ததாக இல்லை என்றால் உண்மையான ரூபத்திற்குப் பதிலாக வேறு ரூபம் தென்படும். மெல்லியதாக இருக்கும் ஆனால் பருமனாகத் தென்படும். எனவே அனைவருக்கும் தன்னுடைய சாட்சாத்காரத்தைச் செய்விக்க முடியும் அளவிற்கு அதாவது மனிதர்களுக்கு எதிரில் வந்தவுடனேயே உடலை மறந்து தன்னுடைய உடலற்ற ரூபத்தில் நிலைத்து விடும் அளவிற்கு அந்த மாதிரி சக்திசாலியான கண்ணாடி ஆகுங்கள். உண்மையான சேவை மற்றும் சேவையின் வெற்றிக்கான ரூபம் இதுவாகும். நல்லது.

எப்பொழுதும் வெற்றி அடையும், சம்ஸ்காரங்கள் ஒத்துபோவதின் சந்திப்பைச் செய்யக்கூடிய, தன்னுடைய சம்பூர்ண நிலையை அருகில் கொண்டு வரக்கூடிய, தெய்வீக நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவின் கண்களின் நட்சத்திரங்களுக்கு, அதிர்ஷ்ட நட்சத்திரத்தை பிரகாசமாக்கக்கூடியவர்களுக்கு அன்பு நினைவும், நமஸ்காரமும்.

**தனிபட்ட சந்திப்பு: (1) எப்பொழுதுமே தன்னை சக்திசாலியான ஆத்மா என்ற இந்த அனுபவத்தில் இருங்கள்!** சக்திசாலியான ஆத்மாக்களின் எதிரில் மாயாவின் தடை இருந்தாலும், நபர் மூலமாகவோ அல்லது இயற்கை மூலமாகவோ தடை வந்தாலும் அந்த தடை தன்னுடைய பாதிப்பை ஏற்படுத்த முடியாது. அந்த மாதிரி மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆகியிருக்கிறீர்களா? அல்லது பலஹீனமானவராக இருக்கிறீர்களா? ஒருவேளை ஒரு சக்தியின் குறை இருக்கிறது என்றாலும் தோல்வி ஏற்பட முடியும். தேவையான நேரத்தில் சிறிய ஆயுதம் கூட ஒருவேளை ஒருவரிடம் இல்லை என்றாலும் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விடும். ஒரு சக்தியின் குறை இருந்தாலும் அந்த நேரத்தில் ஏமாற்றம் அடைய முடியும் எனவே வெறும் சக்திவான் இல்லை ஆனால் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவேன் என்ற இந்த பட்டத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் குஷியான நிலையில் இருங்கள், மேலும் மற்றவர்களையும் குஷியானவர்களாக ஆக்குங்கள். ஒருபொழுதும் வாடிப்போகச் செய்யக்கூடாது. உடலும் குஷி, மனமும் குஷி மற்றும் செல்வத்தையும் குஷியோடு சம்பாதிப்பவர் மற்றும் குஷியோடு காரியத்தில் ஈடுபடுத்துபவர். எங்கு குஷி இருக்கிறதோ அங்கு நூறு ரூபாய் கூட ஆயிரத்திற்குச் சமமானதாக ஆகி விடுகிறது. குஷியான நிலைமை வந்து விடுகிறது மேலும் எங்கு குஷி இல்லையோ அங்கு ஒரு லட்சம் கூட ஒரு ரூபாய்க்குத் தான் சமம். அப்படி உடல், மனம், பொருளால் குஷியானவர்களாக இருக்கக்கூடியவர்கள் நீங்கள். சாதாரண உணவு கூட 36-வகையான உணவாக அனுபவம் ஆகட்டும். அப்படி நாம் எப்பொழுதும் குஷி நிறைந்தவராக இருப்பவர்கள் என்ற இந்த வரதானத்தை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். வாடிப் போகச் செய்வது மாயாவின் துணைவர்களுடைய வேலை மற்றும் குஷி நிறைந்தவர்களாக இருப்பதற்கான வேலை தந்தையின் குழந்தைகளினுடையது. தன்னை ஒருபொழுதும் ஏழை என்று

நினைக்காதீர்கள். அனைவரையும் விட பணக்காரன் நாம் ஆவோம். உலகத்தில் பணக்காரர்களைப் பார்க்க வேண்டும் என்றால் உங்களைப் பார்க்கட்டும். ஏனென்றால் உண்மையான செல்வம் உங்களிடம் இருக்கிறது. அழியும் செல்வம் இன்றிருக்கிறது நாளை இருக்காது ஆனால் அழியாத செல்வம் உங்களிடம் இருக்கிறது. அப்படி அனைவரையும் விட பணக்காரர் நீங்கள் ஆவீர்கள். பழைய சாதத்தை அருந்தினாலும் கூட பணக்காரர் நீங்கள் ஏனென்றால் குஷி என்ற சத்துணவு பழைய சாதத்திலும் நிரம்பியிருக்கிறது. அதன் எதிரில் வேறு எந்த சத்துணவும் இல்லை. மிக நல்ல சத்துணவு அருந்தக்கூடிய, சுகத்தின் சாதத்தை அருந்தக்கூடியவர்கள் நீங்கள் ஆவீர்கள். எனவே எப்பொழுதும் குஷியாக இருப்பவர்கள் நீங்கள். ஒருவேளை பணக்காரனாக இருந்தேன் என்றால் இதைச் செய்வேன் என்று ஒருபொழுதும் அப்படி நினைக்காதீர்கள். பணக்காரனாக இருந்திருந்தீர்கள் என்றால் வரவே மாட்டீர்கள், வஞ்சிக்கப்பட்டு தங்கி விடுவீர்கள். எனவே உங்களுடைய குஷியான நிலையைப் பார்த்து மற்றவர்களும் குஷியாகி விடும் மாதிரி குஷியானவர்களாக இருங்கள். நல்லது.

**2) அனைவரும் திருஷ்டி மூலமாக சக்திகளின் பிராப்தியின் அனுபவம் செய்வதற்கான அனுபவிகளாக இருக்கிறீர்கள் இல்லையா?** எப்படி வாய்மொழி மூலமாக சக்தியின் பிராப்தியின் அனுபவத்தை செய்கிறீர்கள். முரளி கேட்கிறீர்கள் என்றால் சக்தி கிடைத்திருக்கிறது என்று நினைக்கிறீர்கள் இல்லையா. அந்த மாதிரி பார்வை மூலமாக சக்திகளின் பிராப்தியின் அனுபவிகளாக ஆவதற்கான பயிற்சி உள்ளவராக ஆகியிருக்கிறீர்களா அல்லது வாய்மொழி மூலமாகத் தான் அனுபவம் ஆகிறதா? திருஷ்டி மூலமாக குறைவாக இருக்கிறது. திருஷ்டி மூலமாக சக்தியை எடுத்துக் கொள்ள முடியுமா? ஏனென்றால் எடுத்துக் கொள்வதின் அனுபவியாக இருந்தீர்கள் என்றால் மற்றவர்களுக்கும் தன்னுடைய தெய்வீக திருஷ்டி மூலமாக அனுபவம் செய்விக்க முடியும். மேலும் வரும் நாட்களில் வாய்மொழி மூலமாக அனைவருக்கும் அறிமுகம் கொடுக்கும் நேரமும் இருக்காது மேலும் சூழ்நிலையும் இருக்காது என்றால் என்ன செய்வீர்கள்? வரம் அளிக்கும் திருஷ்டி மூலமாக, மஹாதானி திருஷ்டி மூலமாக மஹாதானம் கொடுப்பீர்கள், வரதானம் கொடுப்பீர்கள். அப்படி முதலில் தன்னுள்

எப்பொழுது அனுபவம் இருக்குமோ அப்பொழுது தான் மற்றவர்களுக்குச் செய்விக்க முடியும். திருஷ்டி மூலமாக அமைதியின் சக்தி, அன்பின் சக்தி, சுகம் மற்றும் ஆனந்தத்தின் சக்தி அனைத்தும் பிராப்தி ஆகிறது. ஜடச்சிலைகளின் எதிரில் சென்றாலும் கூட ஜடச்சிலைகளோ பேசுவது இல்லை தான் இல்லையா. இருந்தாலும் பக்த ஆத்மாக்களுக்கு ஏதாவது பிராப்தி ஆகிறது, அதனால் தான் செல்கிறார்கள் இல்லையா. எப்படி பிராப்தி ஆகிறது? அவர்களின் தெய்வீக நிலையின் எண்ண அதிர்வலைகள் (வைப்ரேஷன்) மூலமாக மற்றும் தெய்வீக கண்களின் திருஷ்டியைப் பார்த்து வைப்ரேஷனைப் பெறுகிறார்கள். எந்தவொரு தேவதை அல்லது தேவியின் மூர்த்தியின் விசேஷ கவனமாக கண்களின் பக்கம் பார்ப்பார்கள். ஒவ்வொருவரின் கவனம் முகத்தின் பக்கம் செல்லும். ஏனென்றால் நெற்றி மூலமாக வைப்ரேஷன் கிடைக்கிறது, கண்கள் மூலமாக தெய்வீகத் தன்மையின் அனுபவம் ஏற்படுகிறது. அது சைத்தன்ய மூர்த்திகளாகிய உங்களுடைய ஜடச்சிலைகளாகும். நீங்கள் அனைவரும் சைத்தன்யத்தில் இந்த சேவை செய்திருக்கிறீர்கள் அப்பொழுது தான் ஜடச்சிலைகளும் உருவாகியிருக்கின்றன. அப்படி திருஷ்டி மூலமாக சக்தியைப் பெறுவது மற்றும் திருஷ்டி மூலமாக சக்தி கொடுப்பது என்ற இந்த பயிற்சி செய்யுங்கள். சாந்தியின் சக்தியின் அனுபவம் மிக உயர்ந்தது. எப்படி தற்சமயம் அறிவியல் சக்தியின் பிரபாவம் இருக்கிறது, ஒவ்வொருவரும் அனுபவம் செய்கிறார்கள் ஆனால் அறிவியலின் சக்தி அமைதியின் சக்தியிலிருந்து தான் வெளியாகி இருக்கிறது இல்லையா? இப்பொழுது அறிவியலின் சக்தி அற்ப காலத்திற்கான பிராப்தியை செய்வித்துக் கொண்டிருக்கிறது என்றால் அமைதியின் சக்தி எவ்வளவு பிராப்தியை செய்விக்கும். பலகோடி மடங்கு. அப்படியானால் இந்தளவு சக்தியை சேமிப்பு செய்யுங்கள். தந்தையின் திவ்ய திருஷ்டி மூலமாக தன்னுள் சக்தியை சேமித்தீர்கள் என்றால் தான் தேவையான நேரத்தில் கொடுக்க முடியும். தனக்காக மட்டும் சேமித்தீர்கள் மற்றும் காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் சம்பாதித்தீர்கள், சாப்பிட்டீர்கள் என்ற மாதிரி ஆகி விடும். யாராவது சம்பாதித்ததை சப்பிட்டு முடித்து விடுகிறார் என்றால், அவருக்கு ஒருபொழுதும் சேமிப்பு கணக்கு இருக்காது. மேலும் யாரிடம் சேமிப்பு கணக்கு இல்லையோ அவருக்கு தேவையான நேரத்தில் ஏமாற்றம் கிடைக்கிறது. ஏமாற்றம் கிடைத்தால் துக்கம் தான் பிராப்தி ஆகும். ஒருவேளை அமைதியின் சக்தியை சேமிக்கவில்லை, திருஷ்டியின்

மகத்துவத்தின் அனுபவம் இல்லை என்றால் கடைசி நேரத்தில் உயர்ந்த பதவி பிராப்தி செய்வதில் ஏமாற்றம் அடைந்து விடுவீர்கள். பின்பு துக்கம் இருக்கும். வேதனை இருக்கும் இல்லையா? எனவே இப்பொழுதிலிருந்தே தந்தையின் திருஷ்டி மூலமாக பிராப்தி ஆகியிருக்கும் சக்திகளை அனுபவம் செய்து சேமிப்பு செய்து கொண்டே இருங்கள். நல்லது.

**வரதானம்: சத்தியத்தின் சக்தி மூலமாக இயற்கை மற்றும் உலகை சதோபிரதானமாக ஆக்கக்கூடிய மாஸ்டர் விதியை உருவாக்குபவர் ஆகுக!**

குழந்தைகள் நீங்கள் சத்தியத்தின் சக்தியை தாரணை செய்து மாஸ்டர் விதியை உருவாக்குபவராக ஆகுகிறீர்கள் என்றால், இயற்கை சதோபிரதானம் (உயர்ந்த நிலை) ஆகி விடுகிறது, யுகம் சத்யுகமாகி விடுகிறது. அனைத்து ஆத்மாக்களும் சத்கதியின் அதிர்ஷ்டத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். உங்களுடைய சத்தியம் பாரஸிற்கு சமமானது. எப்படி பாரஸ் இரும்பையும் தங்கமாக்கி விடுகிறதோ. அதே போல் சத்தியத்தின் சக்தி ஆத்மாவை, இயற்கையை, நேரத்தை, அனைத்து பொருட்களை, அனைத்து சம்மந்தத்தை, சம்ஸ்காரங்களை, உணவுப் பழக்கத்தை சதோபிரதானம் ஆக்கி விடுகிறது.

**சுலோகன்: யாரை இயற்கையின் குழப்பம் கூட ஈர்ப்பதில்லையோ அவர் தான் யோகி ஆத்மா ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 12.11.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அலௌகீக காரியம் செய்வதற்கான கலை!

அவ்யக்த மூர்த்தி அதாவது இந்த உடலில் இருந்து காரியம் செய்து கொண்டிருக்கும் மிகவும் விலகிய மற்றும் மிகவும் அன்பான நிலையில் நிலைத்திருப்பதின் அனுபவியாக ஆகி விட்டீர்களா? ஒவ்வொரு நேரமும் எஜமானன் மற்றும் குழந்தை, இரண்டையும் சேர்த்தே செய்து கொண்டிருப்பதில் முயற்சி செய்பவர்களாக அன்றி சகஜ சொரூபமாக ஆகி விட்டீர்களா? அல்லது எஜமானன் ஆகிறீர்கள் என்றால் குழந்தை என்ற நிலை மறந்து விடுகிறது, குழந்தை ஆகிறீர்கள் என்றால், எஜமான நிலை மறந்து விடுகிறதா? இந்த நேரம் எஜமானன், அடுத்த நேரம் குழந்தை. இந்த நேரம் கர்மயோகி, அடுத்த நேரம் உடலிலிருந்து விலகிய, காரியத்திலிருந்தும் விலகிய அன்பிலேயே மூழ்கியிருக்கும் யோகியாக ஆக முடியுமா? எண்ணம் மற்றும் காரியம் இரண்டுமே சமமாக ஆகியிருக்கிறதா அல்லது எண்ணம் மற்றும் செயலில் இடைவெளி இருக்கிறதா? நினைத்தீர்கள், உடன் நடைமுறையில் வந்தது. அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? நினைவு யாத்திரையில் சென்று கொண்டிருக்கும் பயணி இந்த அளவு அருகில் வந்து விட்டீர்களா? சுலபம் மற்றும் சமீபம் என்ற இந்த இரண்டுமே அனுபவம் ஆகிறதா? இந்த நினைவு யாத்திரையின் அனேக அனுபவம் செய்து செய்து இப்பொழுது ஞானம் நிறைந்து மற்றும் சக்தி நிறைந்தவராக ஆகி விட்டீர்களா? எப்படி யாத்திரையில் இடையிடையே இளைப்பாறும் இடம் வருகிறது என்றால், அதன் மூலம் எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம், இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்பது தெரிய வருகிறது. நினைவு யாத்திரையின் பயணிகள் நீங்கள் இந்த யாத்திரையில் எவ்வளவு ஓய்வு இடங்களைக் கடந்துள்ளீர்கள் அதாவது நினைவின் எத்தனை நிலைகளைக் கடந்து விட்டிருக்கிறீர்கள்? கடைசி நிலை மற்றும் இறுதி நிலை எது? அதை எப்படி ஏதாவது ஒரு பொருள் மிக அருகில் மற்றும் எதிரில் வருகிறது என்றால் அதை சுலபமாக தெரிந்து மற்றும் பார்க்க முடியும், அதே போல் தான்

அடைய வேண்டிய இலக்கைத் தெளிவாக மற்றும் சுலபமாகத் தெரிந்து மற்றும் பார்த்துக் கொண்டும் இருக்கிறீர்களா அல்லது அது உங்களுடைய பார்வையிலிருந்து தூரமாக இருக்கிறதா? பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களா அல்லது தெரிந்து மட்டும்தான் இருக்கிறீர்களா? அல்லது அந்தளவு எதிரில் மற்றும் அருகில் வந்து விட்டீர்களா? அந்த நிலையில் அனேக தடவை சென்றடைந்து கொஞ்ச நேரத்திற்காக அனுபவமும் செய்கிறீர்களா? அனுபவம் ஏற்படுகிறதா? பிறகு அந்த அனுபவத்திலேயே ஏன் இருப்பதில்லை. நிலையின் அனுபவம் ஆகிறது, நிலைத்திருக்கத் தெரியவில்லை என்று அப்படியா? எப்பொழுதுமே ஏன் நிலைத்திருக்க முடிவதில்லை, என்ன காரணம்? சேவை மற்றும் பிராமணர்களின் காரியமாக என்ன இருக்கிறதோ, அந்தக் காரியத்தை அலௌகீக காரியம் என்று கூறப்படுகிறது, அந்த மாதிரி அலௌகீக காரியம் மற்றும் ஈஸ்வரிய சேவை ஒருபொழுதும் மனநிலையை கீழே கொண்டு வருவதற்கான காரணமாக ஆக முடியாது. ஒருவேளை அலௌகீக காரியத்தின் காரணமாக கீழே வருகிறேன் என்று யாருக்காவது அந்த மாதிரி அனுபவம் ஆகிறது என்றால் அதன் அர்த்தம் அந்த ஆத்மாவிற்கு அலௌகீக காரியம் செய்வதற்கான கலை தெரியாது என்பதாகும். எப்படி வித்தைகள் காண்பிக்கக் கூடியவர்கள் மற்றும் சர்க்கஸில் காரியம் செய்பவர்கள் ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே, ஒவ்வொரு காரியத்தில் தன்னுடைய கலைத்திறமையைக் காண்பிக்கிறார்கள், அவர்களுடைய ஒவ்வொரு காரியமும் கலையாக ஆகி விடுகிறது என்றால் உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள், கர்மயோகி, நிரந்தரயோகி, சகஜயோகி, இராஜயோகி ஒவ்வொரு காரியத்தையும் வித்தியாசமான மற்றும் பிரியமானதாக இருக்கும் கலையில் செய்ய முடியாதா? எப்படி அவர்களுடைய உடலின் கலையைப் பார்ப்பதற்காக எத்தனை மனிதர்கள் விருப்பம் உடையவர்களாக ஆகிறார்கள். உங்களுடைய புத்தியின் கலை, மற்றும் அலௌகீக காரியத்தின் கலையைப் பார்ப்பதற்காக முழு உலகத்தின் ஆத்மாக்கள் விருப்பம் உடையவராகி வருவார்கள். அப்படியானால் இப்பொழுது இந்த கலையைக் காண்பிக்க மாட்டீர்களா என்ன? எப்படி அந்த மனிதர்கள் எந்தவொரு உடல் அங்கத்தையும் எப்படி விரும்பு கிறார்களோ, எங்கே விரும்புகிறார்களோ, எவ்வளவு நேரம் விரும்புகிறார்களோ அதைச் செய்ய முடியும், இது தான் கலை இல்லையா? நீங்கள் அனைவரும் புத்தியை எப்பொழுது விரும்புகிறீர்களோ, எவ்வளவு நேரம் விரும்புகிறீர்களோ, எங்கே

நிலைத்திருக்கச் செய்ய விரும்புகிறீர்களே அங்கே நிலைத்திருக்கச் செய்ய முடியாதா? அது உடல் சம்மந்தப்பட்டது, இது புத்தியினுடையது. யாருக்கு இந்தக் கலை வந்து விடுகிறதோ அவர் தான் 16-கலைகள் நிறைந்தவராக ஆகுகிறார். இந்தக் கலை மூலமாகத் தான் மற்ற அனைத்து கலைகளும் தானாக வந்து விடுகின்றன. அதே போல் ஒரு ஆத்ம அபிமானி நிலை அனைத்து விகாரங்களையும் சுலபமாகவே அமைதியாக்கி விடுகிறது. அதே போல் இந்த புத்தியின் கலை அனைத்து கலைகளையும் தன்னுள் நிரப்ப முடியும் மற்றும் அனைத்து கலைகள் நிரம்பியவராக ஆக்க முடியும். அப்படி இந்த கலையில் எவ்வளவு பயிற்சி உள்ளவராக மற்றும் அனுபவியாக ஆகியிருக்கிறீர்கள்? இந்த நேரம் அனைவருக்கும் ஒரு நொடியில் அசரீரி ஆகி விடுங்கள் என்ற டைரக்ஷன் கிடைக்கிறது என்றால் ஆக முடியுமா? ஒரே ஒரு நொடியில் நிலைத்திருக்கச் செய்ய முடியுமா? எப்பொழுது காரியத்தில் மிகவும் ஈடுபட்டிருக்கிறீர்களோ அந்த நேரத்திலும் டைரக்ஷன் கிடைக்கிறது என்றாலும் செய்ய முடியுமா? யுத்தம் ஆரம்பிக்கிறது என்றால், திடீரென்று அனைவரும் இப்பொழுதே வீட்டை விட்டு விட்டு வெளியே சென்று விடுங்கள் என்று கட்டளை கிடைக்கிறது. பின்பு என்ன செய்ய வேண்டியதாக இருக்கும்? அவசியம் செய்ய வேண்டும் இல்லையா? அப்படி பாப்தாதாவும் திடீரென்று இந்த உடல் என்ற வீட்டை விட்டு, இந்த தேக அபிமானம் என்ற நிலையை விட்டு விட்டு ஆத்ம அபிமானி ஆகி விடுங்கள், இந்த உலகை விட்டு தொலை தூரத்திலிருக்கும் தன்னுடைய இனிமையான வீட்டிற்குச் சென்று விடுங்கள் என்ற டைரக்ஷன் கொடுத்தால் செய்ய முடியுமா? யுத்த ஸ்தலத்தில் நின்று விட மாட்டீர்களே? போகலாமா, அல்லது போக வேண்டாமா என்று யுத்தம் செய்து செய்தே நேரத்தைக் கழித்து விட மாட்டீர்களே? செல்வது சரியாக இருக்குமா அல்லது இல்லையா? இதை எடுத்துச் செல்வோமா அல்லது விட்டு விட்டுச் செல்வோமா? இந்த மாதிரி யோசித்து நேரத்தை இழந்து விடுகிறார்கள். அது போலவே அசரீரி ஆவதில் ஒருவேளை யுத்தம் செய்வதிலேயே நேரம் ஆகி விட்டது என்றால், கடைசி பரீட்சையில் மதிப்பெண் மற்றும் டிவிஷன் என்ன கிடைக்கும்? ஒருவேளை யுத்தம் செய்து செய்தே இருந்து விட்டீர்கள் என்றால் முதல் டிவிஷனில் வர முடியுமா என்ன? அந்த மாதிரி விலகியவராகவும் எவரெடியாகவும் ஆகியிருக்கிறீர்களா? சேவை செய்து இன்னும் அதிகமாக மனநிலை சக்திசாலியாகி விடுகிறது. ஏனென்றால் உங்களுடைய உயர்ந்த நிலை தான் இந்த நேரத்து சூழ்நிலைகளை

மாற்றத்தில் கொண்டு வரும். அப்படியானால் சேவை செய்வதின் லட்சியம் என்னவாக இருக்கிறது? எதற்காக சேவை செய்கிறீர்கள்? சூழ்நிலைகளை மாற்றம் செய்வதற்காகத் தான் சேவை செய்கிறீர்கள் இல்லையா, சேவையில் மனநிலை சாதாரணமாக இருக்கிறது என்றால் அது சேவையாக ஆனதா? இந்த நினைவு யாத்திரையில் முக்கியமான நான்கு பாடங்கள் இருக்கின்றன. அதன் மூலம் நான் எதுவரை சென்றடைந்து இருக்கிறேன் என்பதை சோதனை செய்யுங்கள். முதலில் என்ன நிலையாக இருந்ததோ அது இப்பொழுதும் சிலரிடம் இருக்கிறது அது என்ன? வியோகி ( யோகமற்ற நிலை). இரண்டாவது நிலை வியோகிக்குப் பிறகு யோகியாகிறார்கள். மூன்றாவது நிலை, யோகிக்கு பிறகு சகயோகி ஆகிறார்கள். சகயோகி ஆன பிறகு கடைசி நிலை அனைத்தையும் தியாகம் செய்த சர்வ தியாகி ஆகிறார்கள். இந்த நான்கு பாடங்களையும் எதிரில் வைத்துக் கொண்டே நான் எத்தனை நிலைகளைக் கடந்து வந்திருக்கிறேன், எதுவரை உயரே வந்திருக்கிறேன் என்று சோதனை செய்யுங்கள். இதுவரை கூட அடிக்கடி எப்பொழுதாவது வியோகியாக ஆகவில்லையே? எப்பொழுதும் யோகி மற்றும் சகயோகி ஆகி நடந்து கொள்கிறீர்களா? ஒருவேளை ஏதாவது தடை வருகிறது. தடையின் வசமாவது என்றால் வியோகி ஆவது, அப்படி வியோகியாக ஆகவில்லையே? தடையானது யோகம் நிறைந்த நிலையை அழிக்க விட முடியும்? தந்தையின் நினைவை மறக்கச் செய்து விடுகிறது. நினைவு மறந்த நிலை என்றால் வியோகி. அப்படி யோகம் நிறைந்த நிலை, எப்படி இந்த உலகில் வாழும் வரை உடல் மற்றும் ஆத்மா தனியாகப் பிரிவதில்லையோ, அதே போல் நிரந்தரமாக இருக்கட்டும். அதே போல் தந்தையின் நினைவு புத்தியிலிருந்து தனியாக ஆக வேண்டாம். புத்தியுடன் எப்பொழுதும் நினைவு, அதாவது தந்தையுடன் இருக்கட்டும், அந்த மாதிரியானவரை யோகி என்று கூறப்படுகிறது. யாரை வேறெந்த நினைவும் தன் பக்கம் கவர்ந்திழுக்க முடியாதோ. எப்படி மிக உயர்ந்த சக்தியின் எதிரில் குறைந்த சக்தி உள்ளவர்கள் எதையும் செய்ய முடியாதோ அதே போல் ஒருவேளை சர்வ சக்திவானின் நினைவு எப்பொழுதும் உடனிருக்கிறது, என்றால், வேறெந்த நினைவும் புத்தியினுள் வர முடியாது. இதைத் தான் சகஜ மற்றும் இயல்பான யோகி என்று கூறப்படுகிறது. அவர்கள் (மனிதர்கள்) கூற மட்டும் செய்கிறார்கள் மற்றும் இங்கே நடைமுறையில் இயல்பான யோகியாக இருக்கிறார்கள். அப்படியானால் அந்த மாதிரி யோகியாக ஆகியிருக்கிறீர்களா? அந்த

மாதிரியான யோகி எப்பொழுதும் ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தை, ஒவ்வொரு செயலில் அவசியம் சகயோகியாக இருப்பார். ஒருவேளை எண்ணத்தில் சகயோகியாக இருக்கிறார், காரியத்தில் இல்லை மேலும் காரியத்தில் சகயோகியாக இருக்கிறார் வேறு ஏதாவது விஷயத்தில் இல்லை என்றால் அந்த மாதிரியானவரை சகயோகியின் நிலை வரை வந்தடைந்த ஆத்மா என்று கூற முடியாது. ஒரு எண்ணம் கூட சகயோகம் இல்லாததாக இருக்கிறது என்றால் இதை வீணானது என்று கூறுவோம்.

யார் வீணாக இழப்பவராக இருப்பாரோ அவர் ஒருபொழுதும் யாருடைய சகயோகியாக ஆக முடியாது. தானும் சக்திசாலியாக ஆக முடியாது. அந்த மாதிரி அனைவரின் அன்பிற்குரிய, சகயோகி, அனைத்தையும் தியாகம் செய்த சர்வ தியாகி சுலபமாகவே ஆகி விடுகிறார். பக்தியில் கூட யாராவது ஈஸ்வரனின் பெயரால் தான செய்கிறார்கள் என்றால் அவர்களுக்குக் கூட அழியும் இராஜ பதவியின் பிராப்தி ஏற்படுகிறது என்றால் யார் ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு விநாடியையும் ஈஸ்வரிய சேவையின் சகயோகத்தில் ஈடுபடுத்துகிறார். என்றால் அவருக்கு எவ்வளவு உயர்ந்த பிராப்தி ஏற்படும். அந்த மாதிரியானவர் மகாதானி, சர்வ தியாகியாக சுலபமாகவே ஆகி விடுகிறார்கள். அந்த மாதிரி சர்வ தியாகி தற்சமயம் மற்றும் எதிர்காலத்தில் மிக உயர்ந்த பாக்கியசாலியாக ஆகிறார்கள். எதிர்காலத்தில் மட்டுமின்றி தற்சமயத்திலும் அந்த மாதிரி உயர்ந்த பாக்கியசாலி ஆத்மாவின் பாக்கியத்தைப் பார்த்து, அனுபவம் செய்து மற்ற ஆத்மாக்கள் அவருடைய பாக்கியத்தின் மகிமை பாடுகிறார்கள் மேலும் தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தின் ஆதாரத்தினால் அனேக ஆத்மாக்களை பாக்கியசாலியாக ஆக்குவதற்கான பொறுப்பாளர் ஆகிறார்கள். அப்படி இந்த நான்கு பாடங்களில் எந்த நிலை வரை வந்தடைந்திருக்கிறீர்கள் மேலும் இலட்சியத்தின் எவ்வளவு அருகில் வந்திருக்கிறீர்கள் என்பதை பாருங்கள். நல்லது.

அந்த மாதிரி சகஜ மற்றும் இயல்பான யோகி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவும் நமஸ்காரமும்.

**தனிப்பட்ட சந்திப்பு: பிராமண வாழ்க்கையில் கடைசி ஜென்மம் ஆன காரணத்தினால் உடலால் எவ்வளவு தான் பலஹீனமாக**

**மற்றும் நோயுற்றவராக இருக்கிறார்!** நடக்க முடியும் அல்லது நடக்க முடியாவிட்டாலும் மனதால் மேலே பறப்பதற்காக இறக்கைகளை கொடுத்து விட்டோம். உடலால் நடக்க முடியாது ஆனால் மனதால் பறக்கவோ முடியும் இல்லையா? ஏனென்றால் 63 ஜென்மங்களாக அலைந்து அலைந்து பலஹீனமாக ஆகி விட்டார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். உடல் மிகக் கீழான நிலையானதாக ஆகி விட்டது. அப்படி பலஹீனமாக ஆகி விட்டீர்கள். நோயுற்றவராக ஆகி விட்டீர்கள் ஆனால் அனைவரின் மனமும் மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறது. உடல் ஆரோக்கியமாக இல்லை என்றாலும் மனதிலோ எந்த நோயும் இல்லை இல்லையா? அனைவரின் மனமும் இறக்கையால் பறக்கக் கூடியது. சக்திசாலியான மனதின் அடையாளமானது ஒரு நொடியில் எங்கு விரும்புகிறார்களோ அங்கு சென்றடைய முடியும். அந்த மாதிரி சக்திசாலியானவரா அல்லது சில நேரம் பலஹீனமாக ஆகி விடுகிறீர்களா? மனதால் எப்பொழுது பறக்கத் தெரியுமோ, பயிற்சி ஆகி விட்டது என்றால் ஒருநொடியில் எங்கே விரும்புகிறார்களோ அங்கு சென்றடைய முடியும். இந்த நேரம் சாகார உலகில் அடுத்த நேரம் பரந்தாமத்தில். ஒரு நொடியில் சென்றடையும் வேகம் இருக்கிறது. அந்த மாதிரி அதிவேகம் இருக்கிறதா? எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்தின் பாடலை பாடி பறந்து கொண்டே இருங்கள். எப்பொழுதும் அமிர்தவேளையில் தன்னுடைய பாக்கியத்தின் ஏதாவது புது விஷயத்தை நினைவில் வையுங்கள். அனேக விதமான பாக்கியம் கிடைத்திருக்கிறது. அனேக விதமான பிராப்திகள் ஆகியிருக்கிறது. எப்பொழுதாவது ஏதாவது பிராப்தியை எதிரில் வையுங்கள். அடுத்த நேரம் வேறு ஏதாவது பிராப்தியை வைத்தீர்கள் என்றால் மிகவும் சுவாரஸ்யமான முயற்சி இருக்கும். ஒருபொழுதும் முயற்சி செய்வதில் ஆர்வமற்ற நிலை இருக்காது, புதுமையை அனுபவம் செய்வீர்கள். இல்லை என்றால் அனேக குழந்தைகள் நான் ஆத்மா ஆவேன், சிவபாபாவின் குழந்தை என்ற இதையோ எப்பொழுதும் கூறிக் கொண்டே இருக்கிறோம் என்று கூறுகிறார்கள் ஆனால் ஆத்மா எனக்கு தந்தை என்னென்ன பாக்கியம் கொடுத்திருக்கிறார், என்னென்னன பட்டங்கள் கொடுத்திருக்கிறார், என்னென்ன பொக்கிஷங்கள் கொடுத்திருக்கிறார் அந்த மாதிரி விதவிதமான நினைவுகளை வையுங்கள். பட்டியலை எடுங்கள். நினைவுகளின் எவ்வளவு பெரிய பட்டியல் இருக்கிறது. எப்பொழுதாவது பொக்கிஷங்களின் நினைவை வையுங்கள், சில நேரம் சக்திகளின்

நினைவை வையுங்கள், சில நேரம் குணங்களினுடையதை வையுங்கள், சில நேரம் ஞானத்தினுடையதை வையுங்கள், சில நேரம் பட்டங்களை வையுங்கள். விதவிதமானவற்றில் எப்பொழுதும் மனமகிழ்ச்சி இருக்கும். எங்காவது மனமகிழ்ச்சிக்கான நிகழ்ச்சி இருக்கிறது என்றால் விதவிதமான நடனம் இருக்கும், விதவிதமான உணவு இருக்கும், விதவிதமான மனிதர்களின் சந்திப்பு இருக்கும். அப்பொழுது தான் மனமகிழ்ச்சி இருக்கும் இல்லையா? அப்படி எப்பொழுதும் மனமகிழ்ச்சியில் இருப்பதற்காக இதிலும் அனேக விதமான விஷயங்களை யோசியுங்கள். நல்லது.

**வரதானம்: பொறுப்பானவர் என்று உணர்ந்து ஒவ்வொரு காரியத்தையும் யதார்த்த விதியோடு செய்யக்கூடிய சம்பூர்ண ஸித்தி சொரூபமானவர் ஆகுக!**

இந்த நேரம் சங்கம யுக உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய ஒவ்வொரு காரியமும் முழு கல்பத்திற்காக சட்டமாக ஆகிக் கொண்டிருக்கிறது. அப்படி தன்னை சட்டத்தை உருவாக்குபவர் என்று புரிந்து ஒவ்வொரு காரியம் செய்யுங்கள், இதனால் அலட்சியம் தானாகவே அகன்று விடும். சங்கமயுகத்தில் நாம் சட்டத்தை படைப்பவர், பொறுப்பான ஆத்மா ஆவேன் என்ற இந்த நிச்சயத்தினால் ஒவ்வொரு காரியமும் செய்வீர்கள் என்றால் யதார்த்த விதியோடு செய்த காரியத்தின் சம்பூர்ண சித்தி அவசியம் பிராப்தி ஆகும்.

**சுலோகன்: சர்வ சக்திவான் தந்தை உடன் இருக்கிறார் என்றால் மாயா காகிதப்புலி ஆகி விடும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 20.11.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மனநிலையை பிரதிபலிக்கும் கண்ணாடி - சேவை!

எப்பொழுதும் தன்னை வெற்றி அடைபவராக அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுது உலகின் மேல் வெற்றி அடைந்தவராகி ஆட்சி செய்யப்போகிறவர்கள் என்றால், இப்பொழுது சுயம் எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆகியிருக்கிறீர்களா? எந்த உலகின் மேல் இராஜ்யம் செய்வீர்களோ அந்த இராஜ்யத்தின் அதிகாரியாக தன்னை இப்பொழுதிலிருந்தே நினைக்கிறீர்களா? முதலில் சுயத்தின் அனைத்து அதிகாரத்தையும் அடைந்து விட்டீர்களா அல்லது இனிமேல் தான் அடைய வேண்டுமா? யார் சுயத்தின் அனைத்து அதிகாரங்களையும் பிராப்தி செய்கிறாரோ அவர் தான் உலகின் அதிகாரி ஆகிறார். அப்படி சுயத்தின் அனைத்து அதிகாரங்களையும் எவ்வளவு அடைந்துள்ளேன் என்று தன்னிடம் கேளுங்கள். அனைத்து அதிகாரங்கள் எவை என்று தெரிந்திருக்கிறீர்களா? ஆத்மாவின் முக்கிய சக்திகளாக மனம், புத்தி மற்றும் சம்ஸ்காரம் என்று வர்ணனை செய்கிறீர்கள் இல்லையா? இந்த மூன்று தன்னுடைய சக்திகளின் மேல் வெற்றி அதாவது அதிகாரியாக ஆகியிருக்கிறீர்களா? தன்னுடைய சக்திகளின் அடிமையாகவோ ஆவதில்லையே? யார் உலக சேவைக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறாரோ அவர்களின் இந்த நிலையோ சுலபமாக மற்றும் இயல்பாகவே இருக்கும் இல்லையா அல்லது முயற்சி செய்து நிலைத்திருக்கச் செய்ய வேண்டியது இருக்கிறதா? முயற்சி செய்வதின் வெற்றியை தன்னுள் அனுபவம் செய்து கொண்டே இருக்கிறீர்களா அல்லது சங்கமயுக நேரம் முயற்சி செய்வதற்காக மட்டும் தான் இருக்கிறதா மேலும் வெற்றி எதிர்காலத்தின் விஷயமா? சங்கமயுகத்திலேயே சித்தி (வெற்றி) சொரூபம் மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவான் சொரூபத்தை அனுபவம் செய்ய வேண்டுமா அல்லது இல்லையா? இப்பொழுதிலிருந்தே அனுபவம் செய்ய வேண்டுமா அல்லது கடைசியில் கொஞ்ச காலத்திற்காக செய்ய வேண்டுமா? நம்பிக்கை

நட்சத்திரங்களாக மட்டுமே இருக்க வேண்டுமா? இப்பொழுதிலிருந்தே சித்தி சொரூபம் அனுபவம் ஆக வேண்டும். எப்பொழுது தன்னுடைய அனைத்து அதிகாரங்களும் பிராப்தி ஆகுமோ அப்பொழுது சித்தி கிடைக்கும். மனம், புத்தி மற்றும் சம்ஸ்காரத்தை, தான் எப்படி விரும்புகிறாரோ அந்த மாதிரி நடத்த முடிய வேண்டும். அந்த மாதிரி இப்பொழுது இருக்க வேண்டும். அப்பொழுது தான் மற்ற ஆத்மாக்களின் மனம், புத்தி மற்றும் சம்ஸ்காரத்தை மாற்றம் செய்ய முடியும். ஒருவேளை தன்னை மாற்றுவதில் காலம் எடுக்கிறது மற்றும் எப்பொழுதும் வெற்றி அடைபவராக இல்லை என்றால் மற்றவர்களை வெற்றி அடைபவராக ஆக்குவதில் நேரம் மற்றும் சக்தியை அதிகமாக செலவழிக்க வேண்டியதாக இருக்கும். சேவை உங்கள் அனைவரின் நிலையை பிரதிபலிப்பது ஆகும். அப்படியானால் பிரதிபலிப்பதில் என்ன தென்படுகிறது? எப்படி முயற்சி செய்யும் ஆத்மாக்களாகிய உங்களுடைய நிலை உருவாகியிருக்கிறதோ அதே போல் யாருக்கு சேவை செய்கிறீர்களோ அவர்களுக்கு அனுபவம் ஆகிறதா? தன்னுடைய நிலையை எவ்வளவு உருவாக்கியிருக்கிறீர்கள் என்ற இதனுடைய சாட்சாத்காரத்தை சேவை மூலம் செய்து கொண்டே இருக்கிறீர்கள். எந்த நிலை உருவாகியிருக்கிறது? எதுவரை வந்தடைந்திருக்கிறீர்கள்? சேவை பிடித்திருக்கிறது தான் இல்லையா? சேவையின் வெற்றியைப் பார்த்து குஷி ஏற்படுகிறது தான் இல்லையா? தந்தையின் அறிமுகத்தைப் பெற்றுச் செல்கிறார்கள். எப்படி பிராமண ஆத்மாக்களில் பெரும்பாண்மையோரின் நிலையில் விசேஷமாக இரண்டு குணங்கள் வெளிப்படையாகத் தென்படுகின்றன - ஒன்று தூய்மை மற்றும் இன்னொன்று அன்பு இந்த இரண்டு விஷயங்களில் பெரும்பாண்மையோர் பாஸ் ஆகியிருக்கிறீர்கள். அது போலவே சேவையின் ரிசல்ட்டில் அன்பு மற்றும் தூய்மை இவை இரண்டும் தெளிவாகத் தென்படுகிறது, மேலும் மற்றும் வருபவர்களும் அனுபவம் செய்கிறார்கள் ஆனால் என்ன புதுமையோ மற்றும் ஞானத்தில் விசேஷமாக என்ன இருக்கிறதோ, அந்த ஞானம் நிறைந்த நிலை மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலை மேலும் சர்வ சக்திவான் தந்தையின் நடைமுறை காரியத்தின் விசேஷத்தை விசேஷ ரூபமாக என்ன அனுபவம் செய்ய வேண்டுமோ அது இப்பொழுது குறைவாக இருக்கிறது. எந்த சக்தி அவதாரத்தின் பெயர் புகழடைய வேண்டுமோ அந்த சக்தி ரூபத்தின் மற்றும் சர்வ சக்திவான் தந்தையின் முழு அறிமுகத்தை அனுபவம்

செய்கிறார்களா? உங்களுடைய வாழ்க்கையினால் பிரபாவம் அடைந்துள்ளனர், அன்பு மற்றும் சகயோகத்தினால் பிரபாவப்பட்டுள்ளனர் ஆனால் உயர்ந்த ஞானம் மற்றும் ஞானம் நிறைந்தவரின் மேல் இவ்வளவு பிரபாவம் ஆகியிருக்கிறார்களா? எப்படி பொறுப்பிலிருப்பவராக ஆகியிருக்கும் சகோதரிகள் சுயம் சக்தி ரூபத்தின் அனுபவத்தை தன்னிலும் சதவிகிதத்தில் தான் செய்கிறார்கள், அதே போலவே சேவை என்ற கண்ணாடியில் சக்தி ரூபத்தின் அனுபவம் அன்பு மற்றும் சகயோகத்தை ஒப்பிடும்பொழுது குறைவாகச் செய்கிறார்கள். என்ன நடந்து கொண்டிருக்கிறதோ, என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அது டிராமாபடி மிக நன்றாக நடந்து கொண்டிருக்கிறது ஆனால் இப்பொழுது நேரத்திற்கேற்றபடி அருகாமைக்கேற்றபடி சக்தி ரூபத்தின் பிரபாவத்தை சுயம் தான் சக்தி ரூபமாகி மற்றவர்களின் மேல் எப்பொழுது போடுவீர்களோ அப்பொழுது தான் கடைசி பிரத்யக்ஷதாவை (பாபாவை வெளிப்படுத்துதல்) அருகில் கொண்டு வர முடியும். சக்தியின் கொடியை பறக்க விடுங்கள். ஏதாவது கொடியேற்றப்படுகிறது என்றால், உயர்வாக இருக்கும் காரணத்தினால் அனைவரின் பார்வை தானாகவே செல்கிறது. அது போலவே சக்தியின் கொடியை தன்னுடைய உயர்ந்த நிலை மற்றும் முழு உலகிலிருந்தும் புதுமையான கொடியை இப்பொழுது பறக்க விடுங்கள். எங்கேயும் எந்த ஆத்மாவிற்கும் என்ன அனுபவம் ஆக முடியாதோ அந்த மாதிரியான விசேஷ அனுபவத்தை அனைத்து ஆத்மாக்களுக்கும் செய்வியுங்கள். அப்படி சேவை கண்ணாடியாக ஆகிறது இல்லையா?

நல்லது. அப்படி தன்னுடைய அனைத்து சக்தி சொரூபத்தினால் சர்வ சக்திவான் தந்தையின் அறிமுகத்தைக் கொடுக்கக்கூடிய, தன்னுடைய சக்தி மூலமாக அனைத்து சக்திகளின் சாட்சாத்காரம் செய்விக்கக்கூடிய உலகில் சக்தியின் கொடியை பறக்க விடக்கூடிய அன்பானவர்களுக்கு, சகயோகி மற்றும் சக்தி ரூப உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 22.11.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இறுதி சேவையின் இறுதி சொரூபம்!

தன்னுடைய இறுதி சொரூபத்தின் சாட்சாத்காரம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறதா? ஏனென்றால் எவ்வளவிற்கு எவ்வளவு அருகில் வந்து கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு, ஏதாவது ஒரு பொருள் எதிரில் தென்படுவது போன்று அனுபவம் ஆகும். இப்பொழுது இதுவாக ஆகப்போகிறோம் என்று அனுபவம் ஆகும். எப்படி வயோதிகர்களுக்கு நான் இப்பொழுது வயோதிகனாக இருக்கிறேன் மேலும் இதற்குப் பிறகு சென்று குழந்தை ஆவேன் என்பது எப்பொழுதும் நினைவிலிருக்கிறது. அது போலவே தன்னுடைய கடைசி சொரூபத்தின் நினைவு இல்லை ஆனால் இப்பொழுது இதுவாக இருக்கிறேன் பின்பு இதுவாக ஆவேன் என்ற தெளிவான ரூபத்தில் எதிரில் சாட்சாத்காரம் ஏற்படும். எப்பொழுது இலக்கை வந்து அடைந்து விட்டோம் என்றால், இன்னும் ஒரு அடி தான் எடுத்து வைக்க வேண்டும் என்று அப்படி புரிந்து கொள்வீர்கள் என்று தொடக்கத்தில் கூறியிருந்தோம். ஒரு கால் வைத்தாகி விட்டது இன்னொரு காலை வைக்க வேண்டும் அவ்வளவு வித்தியாசம் தான். அப்படியானால் அந்த மாதிரி தன்னுடைய கடைசி நிலையின் அருகாமை அனுபவம் ஆகிறதா? அப்படியே தெளிவாக சாட்சாத்காரம் ஏற்படுகிறதா? எப்படி கண்ணாடியில் தன்னுடைய ரூபம் தெளிவாகத் தென்படுகிறதோ அது போலவே இந்த ஞானம் என்ற கண்ணாடியில் தன்னுடைய கடைசி ரூபம் தெளிவாகத் தென்படட்டும். ஏதாவது மிக நல்ல அழகான ஆடை எதிரில் வைக்கப்பட்டிருக்கிறது. நான் இப்பொழுது இதை அணிய வேண்டும் என்று தெரிய வருகிறது என்றால் விரும்பாவிட்டாலும் கூட அணிவதற்கான நேரம் அருகில் வர வர அதன் மேல் கவனம் செல்லும், ஏனென்றால், எதிரில் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே போலவே தன்னுடைய கடைசி சொரூபம் எதிரில் தென்படுகிறதா? மேலும் அந்த சொரூபத்தின் பக்கம் கவனம் செல்கிறதா? அதை ஒளியின் சொரூபம் என்று கூறினாலும் அல்லது ஆடை என்று கூறினாலும், ஒளியே ஒளி தான் தென்படும். ஃபரிஷ்தாக்களின் சொரூபமாக என்ன இருக்கிறது? ஒளி

பார்ப்பவர்கள் கூட இவர் ஒளியிலான ஆடை அணிந்தவர், ஒளி தான் இவருடைய கிரீடம், ஒளி தான் ஆடை, ஒளி தான் இவர்களின் அலங்காரம் என்று அனுபவம் செய்வார்கள். எங்கு பார்த்தாலும் ஒளியைத் தான் பார்ப்பார்கள். நெற்றியின் மேல் பார்த்தார்கள் என்றால் ஒளியின் கிரீடம் தென்படும். கண்களிலும் ஒளியின் கிரணங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதாகத் தென்படும். அப்படியானால் அந்த மாதிரியான ரூபம் எதிரே தென்படுகிறதா? ஏனென்றால் மைட் ரூபம் அதாவது சக்தி ரூபத்தின் பாகம் நடந்து கொண்டிருக்கிறது. அது எதன் மூலம் வெளிப்படும்? லைட் ரூபத்தின் மூலம். யார் எதிரில் வந்தாலும் அவர் ஒரு நொடியில் அசரீரி ஆகி விட வேண்டும். அது லைட் ரூபத்தினால் தான் ஏற்படும். அந்த மாதிரி இங்கு அங்கு செல்லும்போது லைட் ஹவுசாக ஆகி விடுவார்கள். அதனால் யாருக்கும் இந்த உடல் தென்படாது. வினாஷ நேரத்தின் பரீட்சையில் பாஸ் ஆக வேண்டும் என்றால் அனைத்து சூழ்நிலைகளையும் சந்திப்பதற்காக லைட் ஹவுசாக ஆக வேண்டியதிருக்கும். எனவே போகும் போதும் வரும் போதும் தன்னுடைய இந்த ரூபம் அனுபவம் ஆக வேண்டும். இந்தப் பயிற்சியை செய்ய வேண்டும். உடல் முற்றிலும் மறந்து விடட்டும். ஒருவேளை ஏதாவது காரியம் செய்ய வேண்டும், போக வேண்டும், பேச வேண்டும் என்றாலும், அப்பொழுதும் ஒளி வடிவமான ஆகார ரூபத்தை தாரணை செய்ய வேண்டும். எப்படி பாத்திரத்தை ஏற்றுச் செய்யும் நேரத்தில் ஆடை அணிகிறீர்கள் மற்றும் காரியம் முடிந்தது என்றால் ஆடையை களைந்து விட்டீர்கள். ஒரு நொடியில் தாரணை செய்தீர்கள், ஒரு நொடியில் விலகி விட்டீர்கள். எப்பொழுது இந்தப் பயிற்சி உறுதியாகி விடுமோ பின்பு இந்த கர்மபோக் (செய்த பாவங்களின் விளைவுகளை அனுபவிப்பது) முடிந்து விடும். எப்படி இன்ஜெக்ஷன் போட்டு வலியை அழித்து விடுகிறார்கள், ஹடயோகிகளோ உடலிலிருந்து விலகுவதற்கான பயிற்சி செய்கிறார்கள். அது போலவே இந்த நினைவு சொரூபம் என்ற இன்ஜெக்ஷன் போட்டவுடனேயே உடலின் நினைவிலிருந்து எங்கோ மறைந்து விட வேண்டும். சுயம் தன்னையும் ஒளி ரூபத்தில் அனுபவம் செய்வார்கள் என்றால் மற்றவர்களும் அதே அனுபவம் செய்வார்கள். கடைசி சேவை இது தான். இதன் மூலம் முழு காரிய நடவடிக்கைகளும் லைட் அதாவது லேசாகி விடும். மலையும் கடுகாகி விடும் என்ற பழமொழி இருக்கிறது இல்லையா? அதே போன்று எந்தவொரு காரியமும் லைட் ரூபம் ஆவதினால் லேசாகி விடும். புத்தியை ஈடுபடுத்துவதற்கும்

அவசியம் இருக்காது. லேசான காரியத்தில் புத்தியை ஈடுபடுத்த வேண்டியது இருக்காது. அப்படி இந்த ஒளி சொரூபத்தின் நிலையில் மாஸ்டர் அனைத்தையும் தெரிந்தவர் மற்றும் மாஸ்டர் திரிகாலதரிசியின் லட்சணமாக என்ன இருக்கிறதோ அது வந்து விடுகிறது. செய்யலாமா அல்லது வேண்டாமா என்று இப்படி யோசிக்கவும் வேண்டியது இருக்காது. புத்தியில் யதார்த்தமான எந்த எண்ணத்தை உருவாக்க வேண்டுமோ அது தான் இருக்கும். அந்த நிலையின் இடையில் எந்தவொரு கர்மபோகின் உணர்வும் இருக்காது. எப்படி இன்ஜெக்ஷனின் போதையில் பேசுகிறார்கள், அசைகிறார்கள், அனைத்தையும் செய்து கொண்டும் நினைவிருப்பதில்லை. செய்து கொண்டிருக்கிறோம் இந்த நினைவு இருப்பதில்லை, தானாகவே நடந்து கொண்டிருக்கிறது. அதே போல் கர்மபோக் மற்றும் எந்தவிதமான காரியமும் நடந்து கொண்டே இருக்கும், ஆன னைவு இருக்காது, அது தன் பக்கம் கவர்ந்திழுக்காது. அந்த நிலையைத் தான் கடைசி நிலை என்று கூறப்படுகிறது. அந்த மாதிரி பயிற்சி இருக்க வேண்டும். இந்த நிலை எவ்வளவு அருகில் இருக்கிறது? முற்றிலும் நேரெதிரில் வரை வந்தடைந்து விட்டதா? எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது ஒளி ரூபம் ஆகி விடட்டும், எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது உடலில் வரட்டும் மற்றும் என்னென்ன செய்ய வேண்டுமோ அதை செய்யட்டும். எது வரை அந்த நிலை ஒரே சீராக நிரந்தரமாக ஆகவில்லையோ அது வரை இடையிடையே கொஞ்சம் நேரமோ இருக்கிறது. பின்பு அந்த மாதிரி இருந்து இருந்து நிரந்தரமானதாக ஆகி விடும். எப்படி சாகாரத்தில் ஆகாரத்தை அனுபவம் செய்தீர்கள் இல்லையா? தரையில் இருந்தும் கூட ஃபரிஷ்தாவின் அனுபவத்தை செய்தீர்கள் அந்த மாதிரி நிலையோ வர வேண்டும் இல்லையா? தொடக்கத்தில் அனேகருக்கு இந்த சாட்சாத்காரம் ஏற்பட்டது. ஒளியே ஒளி தான் தென்பட்டது. தன்னுடைய ஒளி வடிவமான கிரீடத்தின் சாட்சாத்காரத்தை அனேக தடவை செய்தார்கள். எது தொடக்கத்தில் ஒரு முன்மாதிரியாக இருந்ததோ அது கடைசியில் நடைமுறை சொரூபமாக இருக்கும். எண்ணத்தின் சித்தியின் சாட்சாத்காரம் கிடைக்கும். எப்படி வார்த்தைகள் மூலம் நீங்கள் டைரக்ஷன் கொடுக்கிறீர்கள் இல்லையா? அதே போல் எண்ணத்தினால் முழுக் காரிய நடவடிக்கைகளையும் செய்விக்க முடியும். அறிவியலைச் சேர்ந்தவர்கள் கீழே பூமியிலிருந்து மேலே வரை டைரக்ஷனை பெற்று கொண்டிருக்கிறார்கள் என்றால் உயர்ந்த எண்ணத்தினால் காரியம் நடக்காதா என்ன? அறிவியலையோ

அமைதியில் இருந்து தான் காப்பி செய்திருக்கிறார்கள். அப்படி உதாரணம் கொடுப்பதற்காக ஏற்கனவே தெளிவான ரூபத்தில் உங்கள் எதிரில் இருக்கிறது. சென்ற கல்பத்திலோ நீங்கள் செய்திருக்கிறீர்கள் இல்லையா? பின்பு சொல்வதற்கான அவசியம் கிடையாது. எப்படி சொல்வதினால் விஷயத்தை தெளிவுபடுத்துகிறீர்களோ அது போலவே எண்ணத்தினால் முழுக் காரியமும் நடக்கட்டும். எவ்வளவிற்கு எவ்வளவு அனுபவம் செய்து கொண்டே இருக்கிறீர்களோ, ஒவ்வொருவரின் நெருக்கத்தில் வந்து கொண்டே இருக்கிறீர்களோ, எண்ணமும் ஒவ்வொருவருடன் இணைந்து சென்று கொண்டே இருக்கும். ஒளி ரூபம் இருப்பதினால் வீணான எண்ணம் வீணான நேரம் முடிவடைந்த பிறகு எண்ண நடக்க வேண்டுமோ அந்த எண்ணம் தான் எழும். உங்கள் புத்தியிலும் அதே எண்ணம் எழும் மற்றும் யாருக்குச் செய்ய வேண்டுமோ அவருடைய புத்தியிலும் இதைத் தான் செய்ய வேண்டும் என்ற அதே எண்ணம் எழும். புதுமையோ இது தான் இல்லையா? இந்தக் காரிய நடவடிக்கைகளை யாராவது பார்த்தார்கள் என்றால் உங்களுடைய காரிய நடவடிக்கை சொல்வதினால் இல்லை சமிக்ஞைகளினால் நடந்து கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்வார்கள். பார்வையால் பார்த்தார் மற்றும் புரிந்து கொண்டார். சூட்சும வதனம் இங்கேயே உருவாக வேண்டும். அந்த மாதிரி பயிற்சி செய்விக்கிறீர்களா? ஆசிரியைகளுக்கு இதைக் கற்றுக் கொடுக்கிறீர்களா அல்லது சொற்பொழிவு நிகழ்த்துவதைத் தான் இதுவரை கற்றுக் கொடுக்கிறீர்களா? உங்களுடைய நிலை வேறு நீங்கள் அந்த நிலையைக் கடந்து வந்து விட்டீர்கள், வரிசைக்கிரமமாக இருக்கிறீர்கள். எப்படி எதிர்காலத்தில் கிரீடம், ஆசனத்தை தாரணை செய்து பின்பு அதை விட்டு விட்டு கொடுத்துச் செல்வார்கள் இல்லையா? அப்பொழுது தான் இன்னொருவர் பெறுவார் இல்லையா? இங்கேயும் நீங்கள் அந்த நிலையை கடந்து சென்று கொண்டே இருப்பீர்கள், அப்பொழுது மற்றவர்கள் அந்த நிலையில் வருவார்கள். எதிர்காலத்தின் வடிவமைப்பு இங்கே இருக்கும் இல்லையா? அந்த நிலையில் உங்களுடைய ஈடுபாடு அது இல்லாமல் நன்றாகவே இல்லை என்ற மாதிரி ஏற்பட்டு விடும். விரும்பாவிட்டாலும் அடிக்கடி அந்தப் பக்கம் சென்று விடுவீர்கள். நல்லது.

## 1972 அவ்யக்த முரளி

**வரதானம்: சூட்சும எண்ணங்களின் பந்தனங்களிலிருந்தும் விடுபட்டு உயர்ந்த நிலையின் அனுபவம் செய்யக்கூடிய பந்தனமற்றவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் எவ்வளவு பந்தனமற்றவர்களாக இருக்கிறார்களோ அந்தளவு உயர்ந்த நிலையில் நிலைத்திருக்க முடியும். எனவே எண்ணம், சொல், செயலில் ஏதாவது சூட்சுமத்திலும் கூட கயிறு கட்டப்பட்டோ இல்லை என்று சோதனை செய்யுங்கள். ஒரு தந்தையைத் தவிர வேறு எந்த நினைவும் வர வேண்டாம். தன்னுடைய உடலும் நினைவு வந்தது என்றால் உடலின் கூடவே உடலின் உறவு, பதார்த்தங்கள், உலகம் அனைத்தும் ஒன்றின்பின்னே ஒன்றாக வந்து விடும். நான் பந்தனமற்றவன் என்ற இந்த வரதானத்தை நினைவில் வைத்து முழு உலகத்தையும் மாயாவின் வலையிலிருந்து விடுவிக்கும் சேவையைச் செய்யுங்கள்.

**சுலோகன்: ஆத்ம அபிமானி நிலை மூலமாக உடல் மற்றும் மனதின் குழப்பத்தை முடிவு கட்டுபவர் தான் ஆடாமல் இருக்கிறார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 23.11.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சக்தி தளத்தின் விசேஷங்கள்! (மதுபன் நிவாசிகளின் எதிரில் பாப்தாதாவால் கூறப்பட்ட மகாவாக்கியங்கள்)

மதுபன்நிவாசி சக்தி சேனையினர் தன்னை எப்பொழுதும் சக்தி ரூபத்தில் அனுபவம் செய்து கொண்டே நடந்து கொள்கிறீர்களா? சக்தி தளம் என்ற மகிமை இருக்கிறது. சக்தி தளத்தின் காரணமாகத்தான் தந்தையின் பெயரும் சர்வ சக்திவானாக இருக்கிறது. அப்படி இது சர்வ சக்திவானின் சக்தி தளம் ஆகும். சக்தி தளத்தின் விசேஷமே எப்படி ஏதாவது நேரான பாதையை சுலபமாகவே கடந்து விடுகிறார்கள். (குழுவினர்) அதே போல் எப்பொழுதும் அனைத்து பிரச்சனைகளையும் கடந்து விட வேண்டும். யோசிக்க மாட்டார்கள், நிற்க மாட்டார்கள். இதே விதமாக சக்தி தளத்தின் விசேஷமே பிரச்சனைகள் அவர்களுக்காக ஏறும் கலைக்கான சகஜ சாதனமாக அனுபவம் ஆகும் என்பது தான். பிரச்சனை சாதனத்தின் ரூபத்தில் மாறிவிடும் அப்படி சாதனத்தை கையாளுவதில் கஷ்டமிருக்காது, ஏனென்றால் இந்த சாதனம் தான் சித்திக்கான (வெற்றிக்கான) ஆதாரம் என்று தெரிந்து விடுகிறது. சக்திதளத்திற்கு எப்பொழுதும் ஒவ்வொரு பிரச்சனையும் தெரிந்ததாகவும் அறிந்ததாகவும் அனுபவம் ஆகும். அவர்கள் ஒருபொழுதும் ஆச்சரியம் அடையமாட்டார்கள். ஆச்சரியம் அடைவதற்குப் பதிலாக எப்பொழுதும் திருப்தியாக இருப்பார்கள். ஏதாவது சகஜ சாதனம் இருந்து மற்றும் தன்னுடைய சம்மந்தத்தில் ஏதாவது அனுகூலமான விஷயங்கள் இருக்கும் காரணத்தினால் திருப்தியாக இருக்கிறார் என்றால் இதையொன்றும் திருப்தி என்று கூற முடியாது. யார் தன்னுடைய சம்மந்தத்தில் மற்றும் தன்னுடைய நிலைக்கேற்றபடி அனுகூலமற்றது என்று உணர்ந்தாலும் கூட அதிலும் திருப்தியாக இருக்க வேண்டும், அந்த மாதிரியான நிலை வேண்டும். சக்தி தளத்தின் வாயிலிருந்து ஒருபொழுதும் 'காரணம்' என்ற வார்த்தை வெளிவராது. இந்த

காரணத்தினால் இது நடந்தது என்ற இந்த காரணம் என்ற வார்த்தை நிவாரணத்தில் மாறி விடும். இந்தக் காரணத்தினால் இது நடந்தது என்று அஞ்ஞானிகளும் கூறுகிறார்கள். உங்களுடைய இந்த நிலை இருக்கக்கூடாது. எதிரில் ஏதாவது காரணம் வந்தாலும் கூட உடனே அதை நிவாரண ரூபத்தில் மாற்றம் செய்ய வேண்டும். பின்பு இந்த பேச்சே இல்லாமல் போய்விடும், நேரத்தை இழப்பது முடிவடைந்து விடும். 10 20 நிமிடம் கடந்தாலும் அல்லது 2 நிமிடம் சென்றாலும் கூட நேரமோ சென்றது தான் இல்லையா? அதே நேரம் உடனே திரிகாலதரிசி ஆகி ஒவ்வொரு கல்பத்திலும் இந்தக் காரணத்திற்கு நிவாரணம் செய்திருந்தேன் என்ற இந்த தெளிவான நினைவு வருவதினால் காரணத்தை நிவாரணத்தில் மாற்றி விடுவார். இதைச் செய்ய வேண்டுமா அல்லது இல்லையா என்று யோசிக்க மாட்டார். இது சரியாக ஆகுமா அல்லது இல்லையா? இது எப்படி நடக்கும்? என்ற இந்த பேச்சு முடிவடைந்து விடும். எப்படி வீடு கட்டுகிறார்கள் என்றால் முதலில் மேற்கூரை தளம் போடுவதற்கு ஆதாரத்தைக் கட்டுகிறார்கள். அப்படி உங்களுக்கு முதலில் அந்த மாதிரியான நேரம் இருந்தது. இப்பொழுதோ ஆதாரமற்றவராக ஆக வேண்டும். தொடக்கத்தில் ஏதாவது பிரச்சனை இல்லையே நெருக்கத்தில் இருப்பவர் யாராவது தடை ஏற்படுத்தவில்லையே என்ற இந்த விஷயங்களை கேட்பதற்காக நேரம் கொடுத்தோம். இப்பொழுது இதைக் கேட்பதற்கான அவசியம் இல்லை. இப்பொழுது அனுபவி ஆகி விட்டீர்கள். அப்படியானால் அந்த மாதிரியான நிலை வரை வந்தடைந்து விட்டீர்களா அல்லது இன்று வரை இது ஆனது, பின்பு இது ஆனது என்று இந்த விஷயங்களையே பேசிக் கொண்டிருக்கிறீர்களா? இது நடந்தது, இன்னார் இதைக் கூறினார் என்ற இந்த விஷயங்களைத் தான் இராமாயணத்தின் கதை என்று கூறுகிறோம். இராமாயணத்தின் கதைகளில் நேரத்தையோ இழப்பதில்லையே? இன்று வரை கூட கேட்பதற்காக கதைப்பிரியர்களாக இருக்கிறீர்களா? இராமாயண கதையையும் சிலர் ஒரு வாரத்தில், சிலர் பத்து நாட்களில் சொல்லி முடிக்கிறார்கள். அந்த மாதிரி கதைகள் கூறுவதையே செய்து கொண்டு இருக்கவில்லையே? உங்களுக்குள் ஒவ்வொருவருடன் சந்திக்கும் போது நினைவு யாத்திரைக்கான வழிகள் மற்றும் ஒவ்வொரு நாளும் என்னென்ன ஆழத்திலும் ஆழமான விஷயங்களைக் கேட்டுக் கொண்டே இருக்கிறீர்களோ அதன் பரிமாற்றம் செய்யுங்கள். எப்படி பக்திமார்க்கத்தை விட்டுவிட்டாகி விட்டது

இல்லையா? ஒருவேளை பக்தி மார்க்கத்தின் ஏதாவது பழக்க வழக்கம் இன்று வரையிலும் இருக்கிறது என்றால் ஆச்சரியம் ஏற்படும் இல்லையா? அதே போலவே இந்த விஷயங்களைப் பேசுவது மற்றும் இந்த விஷயங்களில் நேரத்தை இழப்பது இதையும் இவைகள் பக்திமார்க்கத்தின் பழக்க வழக்கங்கள் என்று அந்த மாதிரியே புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது அந்த மாதிரியான நிலை இருக்க வேண்டும். எப்பொழுது அந்த மாதிரி அனுபவம் ஆகுமோ அப்பொழுது மாற்றம் ஏற்பட்டு விட்டது என்று புரிந்து கொள்ளுங்கள். எப்படி பக்தி மார்க்கம் முந்தைய ஜென்மத்தின் விஷயம் என்று அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? இந்த ஜென்மத்தில் எப்பொழுதாவது மணி அடிப்பீர்களா மற்றும் மாலையை கையில் எடுத்து ஜெபிப்பீர்களா? கடந்த கால வாழ்க்கையை நினைத்து சிரிப்பு வரும். அதே போல் இதுவும் கூட என்ன? ஒருவேளை யாருடைய அவகுணம் அல்லது அந்த மாதிரியான நடத்தையை நினைத்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்றால் இதுவும் பக்தியாகியது இல்லையா? எப்படி தந்தையின் குணத்தின் மகிமை செய்வது, நினைவு செய்வது இது மாலையானது, ஒருவேளை யாருடைய அவகுணம் மற்றும் பார்த்த அந்த மாதிரியான விஷயங்களை நினைவு செய்து கொண்டே இருக்கிறீர்கள் என்றால் அதுவும் பக்தி மார்க்கத்தின் மாலையை உருட்டுவது போல் தான் ஆனது. மனதில் எண்ணத்தை உருவாக்குவது இதுவும் ஜெபிப்பதாக ஆனது இல்லையா? எப்படி அவர்கள் இடைவிடாது மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே இருக்கிறார்கள், அதே போல் எண்ணங்கள் ஓடுகிறது, நிற்பதில்லை. அப்படியானால் இதுவும் ஜபிப்பதாகிறது இல்லையா?. ஒவ்வொருவருக்கும் கூறுகிறீர்கள். இன்னார் இதைச் செய்தார், அதைச் செய்தார் என்று மணி அடிப்பதாக ஆனது. அப்படி இது துர்கதியை அடைவதற்கான வழக்கம் ஆகும்.

மதுபன்நிவாசிகளோ ஞான சொரூபமாக இருக்கிறார்கள் இல்லையா? ஏதாவது துர்கதிக்கான பழக்க வழக்கம், அது ஸ்தூலமானாலும் அல்லது சூட்சுமமானாலும் அதன் மேல் வைராக்கியம் வர வேண்டும். எப்படி ஞானத்தின் ஆதாரத்தில் பக்தியின் ஸ்தூல சாதனங்களின் மேல் வைராக்கியம் வந்து விட்டது, அதே போல் இந்த பக்தி மார்க்கத்தின் பழக்கத்தின் மேலும் அந்த மாதிரி வைராக்கியம் வர வேண்டும். இந்த வைராக்கியத்திற்குப் பிறகு தான் நினைவின் வேகம் அதிகரிக்க முடியும்.

இல்லையென்றால் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும், எப்படி பக்தர்கள் பகவானின் நினைவில் அமர்வதற்காக எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் அமர முடிகிறதா? எவ்வளவு தான் தன்னை அடித்தாலும், கஷ்டப்படுத்தினாலும் விதவிதமான வகைகளில் நேரம் கொடுக்கிறார்கள், செல்வத்தை ஈடுபடுத்துகிறார்கள் இருந்த போதிலும் செய்ய முடியுமா? இங்கேயும் ஒருவேளை துர்கதி மார்க்கத்தின் பழக்க வழக்கம் இருக்கிறது என்றால் நினைவு யாத்திரையின் வேகம் அதிகரிக்க முடியாது. இடைவிடாத நினைவு இருக்க முடியாது. மணி அடிப்பது ஆகியவை விடுபட்டு விட்டதா அல்லது ஸ்தூல ரூபத்தில் விட்டுவிட்டு சூட்சும ரூபத்தில் எடுத்துக் கொண்டீர்களா? பக்தர்களுக்கோ நேரத்தையும் பணத்தையும் வீணாக்குகிறீர்கள் என்று அதிகமாக சவால் விடுகிறீர்கள். நீங்கள் ஞான சொரூபமாக எவ்வளவு ஆகியிருக்கிறீர்கள் என்று தன்னை சோதனை செய்யுங்கள். ஞான சொரூப ஆத்மாவின் அர்த்தமே ஒவ்வொரு சம்ஸ்காரம், ஒவ்வொரு வார்த்தை ஞானம் நிறைந்ததாக இருக்க வேண்டும். செய்யும் காரியங்களும் ஞான சொரூபமாக இருக்கட்டும், இதைத் தான் ஞான சொரூப ஆத்மா என்று கூறுவது, ஆத்மாவில் எப்படி எப்படி சம்ஸ்காரம் இருக்கிறதோ அது தானாகவே காரியம் செய்கிறது. ஞான சொரூப ஆத்மாவிற்கு காரியம் மற்றும் வார்த்தை இயற்கையான சொரூபமாக இருக்கும். அப்படி நான் ஞான சொரூப ஆத்மாவாக ஆகியிருக்கிறேனா என்று தன்னைப் பாருங்கள். துர்கதியில் செல்வதற்கான பெயர் அடையாளம் கொஞ்சம் கூட இருக்கக்கூடாது. எப்படி எங்கு ஞானம் இருக்கிறதோ அங்கு பக்தி இல்லை, எங்கு பக்தி இருக்கிறதோ அங்கு ஞானம் இல்லை என்று கூறுகிறீர்கள். இரவு மற்றும் பகலின் உதாரணம் கொடுத்துக் கூறுகிறீர்கள் இல்லையா? அப்படி பக்திக்கான சம்ஸ்காரம் ஸ்தூலமாகவும் சூட்சும ரூபத்திலும் இருக்க வேண்டாம். ஞானத்தின் சம்ஸ்காரமும் வெகு காலத்தினுடையதாக வேண்டும். வெகு காலமாக இப்பொழுது சம்ஸ்காரத்தை நிரப்பவில்லை என்றால் வெகு காலமாக இராஜ்யம் செய்ய மாட்டீர்கள். கடைசி நேரம் நிரப்புவதற்கான முயற்சி செய்கிறீர்கள் என்றால் இராஜ்ய பாக்கியத்தையும் கடைசியில் அடைவீர்கள். இப்பொழுதிலிருந்தே செய்தீர்கள் என்றால் இராஜ்ய பாக்கியத்தையும் தொடக்கத்திலிருந்தே பெறுவீர்கள். கணக்கு முழுமையாக இருக்கிறது. எவ்வளவோ அவ்வளவு மதுபன் நிவாசிகளுக்கோ லிஃப்ட் இருக்கிறது மேலும் அதிகப்படியான கிஃப்ட்டும்

இருக்கிறது. ஏனென்றால் எதிரில் முன் உதாரணம் இருக்கிறது, அனைத்தும் எளிய சாதனமாகும். காரணத்தை மட்டும் நிவாரணத்தில் மாற்றம் செய்து விட்டீர்கள் எனறால் மதுபன் நிவாசிகளுக்கு என்ன கிஃப்ட் இருக்கிறதோ அதன் மூலம் தன்னை மிகவும் மாற்றிக் கொள்ள முடியும். எப்பொழுதும் உங்களின் எதிரில் பொறுப்பாளர் ஆகியிருக்கும் மூர்த்திகள் முன் உதாரணமாக இருக்கிறார்கள். சக்திகளின் எண்ணம் கூட சக்திசாலியாக இருக்கும், பலஹீனமாக இருக்காது. என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்ய முடியும், அந்த மாதிரியானவர் களையே சக்தி சேனை என்று கூறப்படுகிறது. இங்கேயோ மிக சகஜ சாதனம் இருக்கிறது. காரியம் செய்தீர்கள். உடன் தன்னுடைய முயற்சியிலும் ஈடுபட்டு விட்டீர்கள். மதுபன் நிவாசிகளினால் தான் மதுபன்னிற்கு அழகு. இருந்தாலும் மிக அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள் நீங்கள். தன்னைத் தெரிந்திருந்தாலும், தெரியாவிட்டாலும் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் தான். அனேக விஷயங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கிறீர்கள். ஸ்தானத்தின் மகத்துவத்தை, சங்கத்தின் மகத்துவத்தை, சுற்றுப்புறச் சூழலின் மகத்துவத்தையும் தெரிந்து கொண்டீர்கள் என்றால் ஒரு நொடியில் மகானாக ஆகி விடுவீர்கள். பெரிய விஷயம் ஒன்றுமில்லை. இன்னும் மாலை நிச்சயிக்கப்படவில்லை. அனைவருக்கும் வாய்ப்பு இருக்கிறது. நடைமுறையில் என்ன மாற்றத்தை செய்து காண்பிக்கிறார்கள் என்று இப்பொழுது பார்க்கலாம். நம்பிக்கைக்குரியவர் தான் நீங்கள் இல்லையா? நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 04.12.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகாவீர் ஆத்மாக்களின் ஆன்மீக டிரில் (பயிற்சி)!

இந்த நேரம் அனைவரும் எங்கு அமர்ந்திருக்கிறீர்கள்? சாகார உலகத்தில் அமர்ந்திருக்கிறீர்களா அல்லது ஆகார உலகத்தில் (சூட்சும வதனத்தில்) அமர்ந்திருக்கிறீர்களா? ஆகார உலகத்தில் இந்த சாகார உலகத்தின் கவர்ச்சிகளிலிருந்து விலகி தன்னை அனுபவம் செய்கிறீர்களா? அல்லது ஆகார ரூபத்தில் நிலைத்திருந்து சாகார உலகத்தின் எந்தவொரு கவர்ச்சியும் தன் பக்கம் கவரவோ ஈர்க்கவில்லையே? சாகார உலகத்தின் விதவிதமான கவர்ச்சிகளிலிருந்து ஒரு நொடியில் தன்னை விலகியிருப்பவராகவும் மற்றும் தந்தையின் பிரியமானவராகவும் ஆக்க முடியுமா? காரியம் செய்து கொண்டே காரியத்தின் பந்தனங்களிலிருந்து விலகி பந்தனம் நிரம்பிய நிலையிலிருந்து பந்தனத்திலிருந்து விடுபட்ட நிலையை அனுபவம் செய்கிறீர்களா? ஆன்மீக மகாவீரர்கள் மற்றும் மகாவீரனிகளாகிய உங்களுக்கு இப்பொழுதே டலிலிருந்து விலகி அசரீரி, ஆத்ம அபிமானி, பந்தன்முக்த், யோகயுக்த் ஆகி விடுங்கள் என்ற டைரக்ஷன் உட கிடைத்தது என்றால் ஒரு நொடியில் நிலைத்திருக்க முடியுமா? எப்படி ஹடயோகிகள் தன்னுடைய சுவாசத்தை எவ்வளவு நேரம் விரும்புகிறார்களோ அவ்வளவு நேரம் நிறுத்தி வைக்க முடியும். சகஜயோகி, இயல்பான யோகி, நிரந்தர யோகி, கர்மயோகி, உயர்ந்த யோகியாகிய நீங்கள் தன்னுடைய எண்ணங்களை, சுவாசத்தை பிராணேஸ்வர் தந்தையின் ஞானத்தின் ஆதாரத்தில் எந்த எண்ணத்தை எப்படிப்பட்ட எண்ணத்தை எவ்வளவு நேரம் விரும்புகிறீர்களோ அவ்வளவு நேரம் அதே எண்ணத்தில் நிலைத்திருக்க முடியுமா? இந்த நேரம் சுத்தமான எண்ணத்தில் சிந்தனையை ஓட விடுவது, அடுத்த நேரம் ஒரே எண்ணத்தில் நிலைத்திருப்பது என்ற இந்தப் பயிற்சியை சுலபமாகச் செய்ய முடியுமா? எப்படி ஸ்தூலமாக சென்று கொண்டிருக்கும் போதே தன்னை எங்கு விரும்புகிறீர்களோ அங்கு நிற்க வைக்க முடியும். ஆடாத அசையாத நிலை என்று என்ன மகிமை பாடப்பட்டிருக்கிறதோ அது

யாருடையது? நீங்கள் மகாவீர் மகாவீரனிகள் ஸ்ரீமத்படி நடக்கும் உயர்ந்த ஆத்மாக்கள் தான் இல்லையா? சாஸ்திரவாதிகள் சொல்லும் வழி, குருக்கள் காட்டும் வழி, கலியுக உறவினர்கள் கூறும் வழி இவையோ முடிந்து விட்டது இல்லையா? ஆனால் மனம் சொல்லும் வழி அதாவது தன்னுடைய ஆத்மாவின் கீழ்த்தரமான சம்ஸ்காரங்களின் அனுசாரம் எண்ணம் உருவாவது மேலும் அந்த எண்ணத்தை வார்த்தையில் மற்றும் காரியம் வரை கொண்டு வருவது என்ற இதை என்னவென்று கூறலாம்? இதை ஸ்ரீமத் என்று கூறலாமா? மேலும் வீணான எண்ணங்களின் உற்பத்தியை ஸ்ரீமத் என்று கூறலாமா? அப்படி ஸ்ரீமத்படி நடப்பவர் ஒரு எண்ணத்தைக் கூட மன்மத் (மனம் சொல்லும் வழியிலோ) மற்றும் மற்ற ஆத்மாக்கள் சொல்லும் வழியிலோ அதாவது பரமத்படி செய்ய முடியாது. நிலையின் வேகம் அதிகம் இல்லாததன் காரணமாக ஸ்ரீமத்தில் ஏதாவது மன்மத் மற்றும் பரமத் கலந்து விடுகிறது. எப்படி ஸ்தூலமாக காரை ஓட்டுகிறீர்கள், பெட்ரோலில் ஒருவேளை கொஞ்சமாவது குப்பை கலந்து விட்டது என்றால், ரிஃபைனாக (சுத்திகரிக்கப்பட்டதாக) இல்லை என்றால் அதிக வேகமாகச் செல்ல முடியாது. அதே போல் இங்கேயும் வேகம் அதிகரிப்பதில்லை. எங்கேயாவது கலப்படமோ இல்லையே என்று சோதனை செய்யுங்கள் மற்றும் செய்வியுங்கள். இந்தக் கலப்படம், நிலையாக இருக்க விடுவதில்லை, ஆட்டம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. உயர்ந்த ஆத்மாக்கள், பலமடங்கு பாக்கியசாலி ஆத்மாக்கள் ஒரு அடி கூட பலமடங்கு வருமானம் இன்றி இழக்க மாட்டார்கள். ஆன்மீக டிரில் (பயிற்சி) தெரியும் இல்லையா? இந்த நேரம் நிராகாரி, அடுத்த நேரம் ஆகாரி மற்றும் சாகாரி கர்மயோகி. இதைச் செய்வதில் நேரம் எடுக்கக்கூடாது. எப்படி சாகார ரூபம் தன்னுடையதோ அதேபோல் நிராகாரி, ஆகாரி ரூபமும் தன்னுடையதே தான் இல்லையா? தன்னுடைய பொருளை கையாளுவதில் என்ன நேரம் எடுக்க வேண்டியது இருக்கிறது. மற்றவர்களின் பொருளை உபயோகிப்பதில் கொஞ்சம் நேரம் எடுக்கலாம், யோசனை ஓடும் ஆனால் இதுவோ நம்முடைய உண்மையான சொரூபம். 'எப்படி ஸ்தூல ஆடையை காரியத்திற்கு ஏற்றபடி அணிகிறீர்கள் மற்றும் கழற்றிவிடுகிறீர்கள், அதே போல் இந்த சாகார உடல் என்ற ஆடையை காரியத்திற்கு ஏற்றபடி அணிந்தீர்கள் மற்றும் விலகி விட்டீர்கள் ஆனால் எப்படி ஸ்தூலமான ஆடையும் ஒருவேளை இறுக்கமாக இருக்கிறது என்றால் சுலடமாக கழற்ற முடியாது, அதே போல் ஒருவேளை ஆத்மாவின் இந்த உடல் என்ற ஆடை உடலின், உலகின், மாயாவின் கவர்ச்சியில்

இறுக்கமாக அதாவது ஈர்க்கப்பட்டதாக இருக்கிறது என்றால் சுலபமாக கழட்ட முடியாது. அதாவது சுலபமாக விலகியவராக ஆக முடியாது, நேரம் எடுக்கும், களைப்பு ஏற்படும். ஏதாவது ஒரு காரியம் எப்பொழுது அசம்பவம் ஆகி விடுகிறது என்றால் களைப்பு மற்றும் குழப்பமாக ஆகி விடுகிறது. குழப்பம் ஒருபொழுதும் ஒரு இடத்தில் நிலைத்திருக்கச் செய்யாது. அப்படி இந்த பக்தியின் அலைவது ஏன் ஆரம்பம் ஆனது. எப்பொழுது ஆத்மா இந்த உடல் என்ற ஆடையை அணிவது மற்றும் விலகுவதில் இயலாமல் ஆகி விட்டதோ அப்பொழுது தான். இந்த தேகத்தின் உணர்வு தன் பக்கம் இழுத்து விட்டது அப்பொழுது குழப்பத்திற்குள்ளவராகி அலைவது ஆரம்பமானது ஆனால் இப்பொழுது நீங்கள் அனைத்து உயர்ந்த ஆத்மாக்கள் இந்த உடலின் கவர்ச்சியிலிருந்து ஒரு நொடியில் விலகியிருக்க முடியுமா? அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? பயிற்சியின் பரீட்சைக்கான நேரம் எப்பொழுது இருக்கிறது? எப்பொழுது கர்மபோகின் (பாவகர்மத்தின் விளைவுகளை அனுபவிக்கும்) பாதிப்பு அதிகமாக இருக்கிறதோ அப்போது கர்ம இந்திரியங்கள் முற்றிலும் கர்மபோகின் வசமாகி தன் பக்கம் இழுக்கிறது. அப்போது ஏற்படுவதைத்தான் மிகுந்த வேதனை என்று கூறுவது. மிகுந்த வேதனை இருந்தது எனவே கொஞ்சம் மறந்து விட்டேன் என்று கூறுகிறார்கள் இல்லையா?ஆனால் இதுவோ டக் ஆஃப் வார்-ன் (கயிறு இழுப்பக்கும் போட்டி) நேரம் ஆகும், அந்த மாதிரி நேரத்தில் கர்மபோகை கர்ம யோகாவில் பரிவர்த்தனை செய்பவர்கள், சாட்சியாகி கர்ம இந்திரியங்களை அனுபவிக்க வைப்பவர்களாக யார் இருப்பார்களோ, யார் அந்த மாதிரியான நேரத்தில் வெற்றி அடைந்து காண்பிக்கிறார்களோ அவர்களைத் தான் அஷ்ட இரத்தினங்கள் என்று கூறப்படுகிறது. ஏனென்றால் அஷ்ட இரத்தினங்களில் எப்பொழுதும் அஷ்ட சக்திகள் உடன் இருக்கும், அந்த மாதிரியான அஷ்ட இரத்தினங்கள் தான் பக்தர்களுக்கு அற்பகாலத்து சக்திகளின் வரதானங்கள் கொடுக்கும் இஷ்ட தேவதையாக ஆகிறார்கள்.

அந்த மாதிரி அஷ்ட புஜமுடைய அதாவது அஷ்ட சக்திகள் நிரம்பிய, சக்தி ரூப மகாவீர் மகாவீரனிகளுக்கு, ஒரு நொடியில் எண்ணங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு, அனைத்து ஆத்மாக்களுக்கும், தந்தையின் அறிமுகம் கொடுக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, பிரிந்து சென்ற ஆத்மாக்களை தந்தையோடு சந்திக்க

வைக்கும் ஆத்மாக்களுக்கு, தாகமான ஆத்மாக்களை நிரந்தரமாக திருப்தி செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு, பந்தன்முக்த், யோகயுக்த், யுக்தியுக்த், ஜீவன்முக்த் ஆத்மாக்களுக்கு அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

மேளா என்றால் சந்திப்பு. இங்கு கடைசி மேளாவாக எது இருக்கும்? சங்கம யுகத்தின் விஷயத்தைக் கூறுங்கள். எப்பொழுது முதல் மேளா இருக்குமோ அப்பொழுது தான் கர்மாதீத் நிலையும் ஏற்படும். தந்தையின் சம்ஸ்காரம், தந்தையின் குணம், தந்தையின் காரியத்தின் வேகம் மற்றும் தந்தையின் அவ்யக்த நிராகார நிலையின் ஸ்டேஜ் அனைத்திலும் சமமாவதின் மேளா நடக்கும். எப்பொழுது ஆத்மாக்கள் தந்தையின் சமநிலையின் மேளாவைக் கொண்டாடுவார்களோ அப்பொழுது வெற்றி முழக்கம் ஏற்படும், விநாசத்தின் அருகில் வருவீர்கள். தந்தையின் சமநிலை தான் விநாசத்தை அருகில் கொண்டு வரும். மேளா நடந்த பிறகு என்ன நடக்கிறது? மிகவும் அமைதி, அப்படி ஆத்மாக்களும் மேளாவைக் கொண்டாடுவார்கள், பின்பு வானப்பிரஸ்தத்தில் சென்று விடுவார்கள். வானபிரஸ்த் என்று கூறினாலும் மற்றும் கர்மாதீத் என்று கூறினாலும், முதலில் இந்த மேளா நடக்கும். நல்லது.

**வரதானம்: மன்மத் (மனம் கூறும் வழி), பரமத்தை (மற்றவர்கள் கூறும் வழி) முடிவு கட்டி ஸ்ரீமத்படி பலமடங்கு வருமானத்தை சேமிக்கக்கூடிய பல மடங்கு பாக்கியம் நிறைந்தவர் ஆகுக!**

ஸ்ரீமத்படி நடப்பவர் ஒரு எண்ணத்தைக்கூட மன்மத் மற்றும் பரமத்படி செய்ய முடியாது. மனநிலையின் வேகம் ஒருவேளை அதிகம் இல்லை என்றால் அவசியம் ஸ்ரீமத்தில் ஏதோ மன்மத் மற்றும் பரமத் கலந்திருக்கிறது. மன்மத் என்றால் ஆத்மாவின் தரமற்ற சம்ஸ்காரத்தின் அனுசாரம் என்ன எண்ணம் உருவாகிறதோ அது நிலையை மேலே கீழே கொண்டு செல்கிறது. எனவே சோதனை செய்யுங்கள் மற்றும் செய்வியுங்கள். ஒரு அடி கூட ஸ்ரீமத்திற்குப் புறம்பானதாக இருக்க வேண்டாம். அப்பொழுது தான் பலமடங்கு வருமானத்தை சேமிப்பு செய்து பல மடங்கு பாக்கியசாலியாக ஆக முடியும்.

**சுலோகன்: மனதில் அனைவரின் நன்மைக்கான பாவனையே உருவாகி இருக்கட்டும்; இது தான் உலக நன்மை செய்யும் ஆத்மாவின் கடமை ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.12.1972 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கம யுக உயர்ந்த ஆத்மாக்களின் பொறுப்பு!

அனைவரும் படைப்பவர், சட்டம் மற்றும் விதியை நன்றாகத் தெரிந்து விட்டீர்களா? ஒருவேளை படைப்பவரை தெரிந்து விட்டால் சட்டம் மற்றும் விதி இயல்பாகவே புத்தியில் மற்றும் காரியத்தில் வந்து விடுகிறது. படைப்பவர் மூலமாக அனைத்து உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் சட்டத்தை உருவாக்குபவர்களாக ஆகியிருக்கிறீர்கள், அப்படி தன்னை புரிந்து ஒவ்வொரு காரியமும் செய்கிறீர்களா? ஏனென்றால் இந்த நேரம் பிராமணர்கள் உங்களுடைய உயர்ந்த காரியமாக என்ன இருக்கிறதோ அதுவே உலகத்திற்காக முழுக் கல்பத்தின் சட்டமாக ஆகி விடுகிறது. பிராமணர்கள் உங்களுடைய காரியம் அவ்வளவு மகத்துவம் நிறைந்தது. அந்த மாதிரி தன்னுடைய ஒவ்வொரு காரியத்தையும் மகத்துவம் நிறைந்தது என்று புரிந்து செய்கிறீர்களா? தன்னை சட்டத்தை உருவாக்குபவர் என்று புரிந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டும். அனைத்து பழக்க வழக்கங்கள் யார் மூலமாகத் தொடங்குகிறது, பின்பு அது முழு கல்பத்திலும் வந்து கொண்டே இருக்கிறது? இந்த நேரம் பிராமணர்கள் உங்களுடைய எந்தப் பழக்க வழக்கம் நடைமுறை வாழ்க்கை ரூபத்தில் இருக்கிறதோ, அது நிரந்தரமான அனாதி சட்டமாக உருவாகி விடுகிறது, அந்த மாதிரி புரிந்து கொண்டு ஒவ்வொரு காரியம் செய்வதினால் ஒருபொழுதும் அலட்சியம் வராது. இந்த விதிப்பூர்வமான நினைவு சொரூபமாகி நடந்து கொள்ள வேண்டும். இவ்வளவு பெரிய பொறுப்பு என்று புரிந்து காரியம் செய்ய வேண்டும் -இந்த நினைவு இருக்கிறதா? ஒவ்வொரு உயர்ந்த ஆத்மாவிற்கும் பொறுப்பு கிடைத்திருக்கிறது என்ற இது தான் சங்கமயுகத்தின் விசேஷம் ஆகும். சில விசேஷ ஆத்மாக்களுக்கு பொறுப்பு இருக்கிறது, நாம் அவர்களால் உருவாக்கப்பட்ட சட்டப்படி நடப்பவர்கள் என்று அந்த மாதிரி இல்லை. ஒவ்வொரு ஆத்மாவும் சட்டத்தை உருவாக்குபவர் என்ற இந்த நிச்சயத்தினால் ஒவ்வொரு

காரியத்தின் சம்பூரண வெற்றியை அடைய முடியும். ஏனென்றால் தன்னை சட்டத்தை உருவாக்குபவர் என்று புரிந்து ஒவ்வொரு காரியத்தையும் யதார்த்த விதியோடு செய்வீர்கள். யதார்த்த விதிக்கு சம்பூரண வெற்றி அவசியம் கிடைக்கிறது. வெற்றியை அடைவதற்காக ஒரு விஷயம் மட்டும் புத்தியில் தெளிவாக வந்து விட்டது என்றால் சுலபமாகவே விதியை அடைய முடியும். அது எந்த விஷயம். இந்த நினைவு கூட நினைவற்ற நிலையில் ஏன் வந்து விடுகிறது? இதற்குக் காரணமாக எந்த விஷயம் ஆகிறது? ஒரு யுக்தி மட்டும் தெரிந்து விட்டால் நினைவு மறந்த நிலையிலிருந்து சுலபமாகவே விடுபட முடியும். அது எந்த யுக்தி? எந்தவொரு விஷயம் எதிரில் தடை ரூபத்தில் வருகிறதோ, அந்த வந்திருக்கும் விஷயத்தை பரிவர்த்தனை செய்ய வேண்டும், ஒருவேளை இந்த யுக்தி தெரிந்து விட்டது என்றால் நிரந்தரமாக தடைகளிலிருந்து விடுபட்டவர் ஆக முடியும். நினைவு மறந்த நிலைக்கான காரணமாக வீணான நினைவு, உள்உணர்வு, பார்வை மற்றும் நெருக்கம் ஆகிறது. இந்த அனைத்தையும் பரிவர்த்தனை செய்வது தெரிந்து விடுகிறது என்றால் பரிபக்குவ நிலை வந்து விடும். எந்தவொரு வீணான எண்ணம், உடல் மற்றும் உடல் சம்மந்தப்பட்ட, உடலின் பதார்த்தங்களின் நினைவு வருகிறதோ அதை மாற்றம் செய்யத் தெரிந்து விட்டது என்றால் பரிபக்குவ நிலை ஆகி விடாதா என்ன? அதே போல் உள்உணர்வு மற்றும் பார்வையை மாற்றத் தெரிந்து விட்டது. தொடர்பு சம்பந்தத்தை மாற்றம் செய்யத் தெரிந்து விட்டது என்றால் சம்பூர்ண நிலை அருகில் வந்து விடும் இல்லையா? மாற்றம் செய்வதற்கான முறை தெரிவதில்லை. உடலின் பார்வைக்குப் பதிலாக ஆத்ம பார்வையில் மாற்றம் செய்ய வேண்டும். வியக்த நெருக்கத்தை அவ்யக்த அலௌகீக நெருக்கமாக மாற்றம் செய்ய வேண்டும், இதிலேயே குறை இருக்கும் காரணத்தினால் சம்பூரண நிலையை அடைய முடிவதில்லை. இயற்கையிலும் மாற்றம் செய்யும் சக்தி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அறிவியல் இயற்கையின் சக்தி ஆகும். இயற்கையின் சக்தியாகிய அறிவியல் ஒரு பொருளை ஒரு நொடியில் மாற்றம் செய்ய முடிகிறது. சூடானதை குளுமையாகவும், குளுமையானதை சூடாகவும் ஆக்க முடிகிறது. அறிவியலில் இந்த சக்தி இருக்கிறது இல்லையா? சூடான சூழலை குளுமையானதாகவும் மற்றும் குளுமையான சூழலை சூடானதாகவும் ஆக்கி விடுகிறது. இயற்கையின் சக்தி பொருளை மாற்றம் செய்ய முடியும் என்றால் பரமாத்மாவின் சக்தி

அல்லது உயர்ந்த ஆத்மாக்களின் சக்தி தங்களுடைய பார்வை, உள்உணர்வை பரிவர்த்தனை செய்ய முடியாதா?

தன்னுடைய உள்உணர்வு, தன்னுடைய பார்வையை மாற்றம் செய்ய முடியாத காரணத்தினால் தனக்காக தடை ரூபம் ஆகி விடுகிறது. இருந்தும் இயற்கை, உங்களுடைய படைப்பு மற்றும் நீங்கள் மாஸ்டர் படைப்பவர் தான் இல்லையா? அப்படியானால் எப்பொழுது என்னுடைய படைப்பில் இவ்வளவு சக்தி இருக்கிறது. மேலும் மாஸ்டர் படைப்பவராகிய என்னிடம் இந்த சக்தி இல்லை என்றால் இது உயர்ந்த ஆத்மாவின் இலட்சணமா? என்று யோசியுங்கள். இன்று இயற்கையின் சக்தி ஒரு நொடியில் என்ன விரும்புகிறதோ அதை நடைமுறையில் செய்து காண்பிக்கிறது. எனவே அங்கிங்கு அலைந்து கொண்டிருக்கும் இன்றைய ஆத்மாக்கள் பரமாத்ம சக்தி, ஈஸ்வரிய சக்தி மற்றும் அமைதியின் சக்தியின் நடைமுறை நிரூபண ரூபத்தைப் பார்க்க விரும்புகிறது. யாராவது அபகாரம் செய்தால் நீங்கள் ஒரு நொடியில் அபகாரத்தை உபகாரமாக மாற்றி விடுங்கள். யாராவது தன்னுடைய சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தின் வசமாகி உங்கள் எதிரில் சோதனை ரூபத்தில் வருகிறார் ஆனால் நீங்கள் ஒரு நொடியில் தன்னுடைய உயர்ந்த சம்ஸ்காரத்தின் நினைவினால் அந்த மாதிரியான ஆத்மாவிற்காகவும் இரக்க மனதின் சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தை தாரணை செய்து விடுங்கள். யாராவது தேகதாரியின் பார்வையில் எதிரில் வந்தால் நீங்கள் ஒரு நொடியில் அவருடைய பார்வையை ஆத்மீக பார்வையாக மாற்றி விடுங்கள். யாராவது கீழே தள்ளிவிடும் உள்உணர்வோடு மற்றும் தன்னுடைய தீய தொடர்பில் கொண்டு வருவதற்கான பார்வையோடு எதிரில் வந்தார் என்றாலும் நீங்கள் அவர்களுக்கு எப்பொழுதும் உயர்ந்த தொடர்பின் ஆதாரத்தினால் அவரையும் தீய தொடர்பிலிருந்து விடுவித்து உயர்ந்த தொடர்பில் வருபவர்களாக ஆக்கி விடுங்கள். அந்த மாதிரி பரிவர்த்தனை செய்வதற்கான யுக்தி தெரிவதினால் ஒருபொழுதும் தடையினால் தோல்வி அடைய மாட்டீர்கள். நெருக்கத்தில் வரும் அனைவரும் உங்களுடைய இந்த உயர்ந்த சேவை மேல் பலியாகி விடுவார்கள். எப்படி தந்தை ஆத்மாக்களை மாறியவர்களாக ஆக்குகிறார் என்றால் தந்தைக்காக நன்றி கூறி பாடுகிறீர்கள். பலியாகி விடுகிறீர்கள், அதே போல் அனைத்து நெருக்கத்தில் வரும் ஆத்மாக்கள் உங்களுக்கு நன்றி

கூறுவார்கள். ஒரே ஒரு சகஜமான யுக்தி தான் இல்லையா?.அப்படியே கூட எந்தவொரு விஷயமும், எந்தக் காட்சியும், எந்தப் பொருளும் மாறியோ ஆக வேண்டும் தான். இந்த நாடகமே மாறுபடும் காட்சிகள் அடங்கியது தான் ஆனால் எப்படியும் அழிவு ஏற்பட்டுத்தான் ஆகும், முக்திதாமத்திற்கோ அனைவரும் செல்லத் தான் வேண்டும் ஆனால் ஒருவேளை அழிவிற்கு முன்பு ஞானம், யோகத்தின் ஆதாரத்தில் பாவங்களை அழித்து விட்டீர்கள் என்றால் தண்டனைகளிலிருந்து விடுபட்டு விடுவீர்கள் என்று மக்களுக்குக் கூறுகிறீர்கள். செல்லத்தான் வேண்டும் இருந்தாலும் யார் செய்வாரோ அவர் அடைவார். இந்த விதத்தில் ஒவ்வொரு விஷயமும் மாறித் தான் ஆக வேண்டும் ஆனால் எந்த நேரம் உங்கள் எதிரில் அந்த விஷயம் தடை ரூபம் ஆகி விடுகிறதோ அந்த நேரம் உங்களுடைய சக்தியின் ஆதாரத்தினால் ஒரு நொடியில் மாற்றம் செய்து விட்டீர்கள் என்றால் அந்த முயற்சி செய்வதின் பலன் உங்களுக்கு கிடைத்து விடும். பரிவர்த்தனையோ ஆக வேண்டும் ஆனால் சரியான ரூபத்தில், உயர்ந்த ரூபத்தில் மாற்றத்தை செய்வதினால் உயர்ந்த பிராப்தி ஏற்படுகிறது. நேரத்தின் ஆதாரத்தில் பரிவர்த்தனை ஏற்பட்டது என்றால் பிராப்தி இருக்காது. தடையாக என்ன வந்ததோ அது நேரத்திற்கேற்றபடி அவசியம் சென்று விடும் ஆனால் நேரத்திற்கு முன்பு தன்னுடைய மாற்றும் சக்தியினால் முன்பாகவே மாற்றம் செய்து விட்டால் இதனுடைய பிராப்தி உங்களுக்கு கிடைத்து விடும். எனவே என்ன வந்திருக்கிறதோ அது தானாகவே சென்று விடும் மற்றும் இந்த ஆத்மாவிற்கு எவ்வளவு கணக்கு வழக்கு இருக்கிறதோ அது முடிவடைந்து விடும். மேலும் நேரம், அதுவே அனைவருக்கும் கற்றுக் கொடுக்கும் என்று இப்படியும் நினைக்கக்கூடாது. இல்லை நான் செய்வேன். நான் அடைவேன். நேரம் செய்தது என்றால் நீங்கள் அடைய மாட்டீர்கள். அது நேரத்தின் விசேஷமாக ஆகி விடுகிறது, உங்களுடையதாக இல்லை. நேரத்தில் என்னென்ன விஷயம் தானாகவே ஏற்படுகிறதோ அதற்கு மகிமை இருப்பதில்லை ஆனால் நேரத்தின் ஆதாரமின்றி யாராவது காரியம் செய்கிறார் என்றால், அதிசயமாக மகிமை பாடப்படுகிறது. அப்படி பருவத்தில் கிடைக்கும் பழத்திற்கு அவ்வளவு மதிப்பு கிடையாது ஆனால் பருவமின்றி கிடைக்கும் பழத்திற்கு மதிப்பு இருக்கிறது. எனவே நேரம் தானாகவே சம்பூர்ணம் ஆக்கி விடும் என்று இப்படியும் இருக்க வேண்டாம். சம்பூர்ணம் ஆகி நேரத்தை அருகில் கொண்டு வர வேண்டும். நேரம் படைப்பாகும். மேலும் நீங்கள் படைப்பவர் ஆவீர்கள். படைப்பவர்

படைப்பின் ஆதாரத்தில் இருப்பதில்லை. படைப்பவர் படைப்பை அடிமையாக்குவார். அந்த மாதிரி பரிவர்த்தனை செய்யும் சக்தியை தாரணை செய்யுங்கள். இன்று ஒரு சின்ன இயந்திரம் பொருளை எவ்வளவு மாற்றம் செய்து விடுகிறது. முற்றிலும் உபயோகமற்ற பொருளை உபயோகமானதாக ஆக்கி விடுகிறது, பழையதை புதியதாக்கி விடுகிறது. அப்படி உங்களுடைய மிக உயர்ந்த சக்தியின் சூட்சும இயந்திரம் தன்னுடைய உள்உணர்வு, பார்வை மற்றும் மற்றவர்களின் உள்உணர்வு பார்வையை மாற்றம் செய்ய முடியாதா? பின்பு இது நடந்தது, இது நடந்தது என்று ஒருபொழுதும் உங்கள் வாயில் இருந்து வெளியாகாது. எந்த சாக்குபோக்கையும் கொண்டு வர மாட்டீர்கள். இதுவும் சாக்குபோக்கு தான். தன்னைத்தானே பாதுகாப்பாக வைப்பதற்கு விதவிதமான சாக்குபோக்குகள் இருக்கின்றன.

சங்கம யுகத்தில் அனைவரையும் விட பிராமணர்களுக்கு அதிகமாக சாக்குபோக்குகளின் போட்டி வருகிறது என்று கூறியிருந்தோம். இதனால் தான் மாற்றம் செய்ய வேண்டும். அனைவரின் சம்ஸ்காரங்களை மாற்ற வேண்டும். இந்த லட்சியம் தான் பிராமணர்களின் வாழ்க்கையின் ஆதாரம் ஆகும். மற்றவர்கள் மாறினால் அப்பொழுது நாமும் மாறுவோம் என்று அப்படியில்லை. நாம் மாறி மற்றவர்களையும் மாற்ற வேண்டும். இதில் எப்பொழுதும் தன்னை முன்னுக்கு வைக்க வேண்டும். மற்றவர் மாறினாலும் மாறாவிட்டாலும் நான் மாறிவிட வேண்டும் என்றால் மற்றவர் தானாகவே மாறிவிடுவார். அப்படி நீங்கள் மாறுபவர்கள் உலகத்தை மாற்றுபவர்களேயன்றி ஏதாவது ஒரு விஷயத்தினால் மாற்றம் ஆகுபவர் இல்லை. அந்த மாதிரி இலட்சியத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே தன்னைத் தானே பரிபக்குவம் ஆக்குங்கள். இப்பொழுது நேரம் அருகாமையின் மணிகளை அடித்துக் கொண்டிருக்கிறது.நீங்களும் தந்தையின் அறிமுகத்தின் பிரத்யக்ஷ நிரூபணம் கொடுப்பதற்கான முயற்சியை மிக வேக வேகமாகச் செய்யுங்கள். என்ன பாலனை பெற்றிருக்கிறீர்களோ அந்த பாலனைக்கான பலனை காண்பியுங்கள். வியக்த சாகார ரூபம் மூலமாக ஞானம் மற்றும் பாலனை கிடைத்தது, அவ்யக்த ரூபம் மூலமாகவும் அதிகமான ஞானத்தின் பாலனை கிடைத்தது. இப்பொழுது எந்த மாதிரியான நேரம்? இப்பொழுது வரை பாலனையை மட்டும் தான் பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமா அல்லது பாலனையின் பலனைக்

காண்பிக்க வேண்டுமா? இப்பொழுதோ டிராமா இந்த பாகத்தைத் தான் காண்பித்துக் கொண்டிருக்கிறது. எப்படி சத்யுகத்தில் தாய் தந்தையர் பாலனை செய்து ராஜ்ய பாக்கியத்தின் அதிகாரி ஆக்கி, இராஜ்ய பாக்கியத்தின் சிம்மாசனதாரி ஆக்கி, இராஜ திலகம் கொடுத்து அதாவது பொறுப்பின் திலகம் கொடுத்து சுயம் சாட்சியாகி பார்க்கிறார்கள். உடன் இருந்தும் கூட சாட்சியாகிப் பார்க்கிறார்கள், அப்படி இந்த கூட்டம் கூட எங்கிருந்து தொடங்கும்?

இப்பொழுது கூட பாப்தாதா உலக சேவைக்கான பொறுப்பு என்ற இந்த திலகத்தை இட்டு சுயம் சாட்சியாகிப் பார்க்கிறார். சாட்சியாக இருக்கிறார் இல்லையா? உடனிருந்தும் கூட சாட்சியாக இருக்கிறார். இந்த வருடம் இன்னும் சாட்சியாக ஆவதற்கானதாகும். இந்த அவ்யக்த ரூபத்தின் சந்திப்பு வியக்த மூலமாகவும் எது வரை இருக்கும்? எனவே இந்த புது வருடத்தில் அவ்யக்த நிலையில் நிலைத்திருக்கச் செய்வதற்கான மற்றும் அனுபவம் செய்விப்பதற்கான டிரில் (பயிற்சி) கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனால் அவ்யக்தமாகி அவ்யக்த தந்தையோடு அவ்யக்த சந்திப்பை ஏற்படுத்த முடியும். எந்தவொரு பார்ட்டும் (பாகமும்) எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை, முன்னேற்றுவதற்காக மாறுகிறது. அப்படி பாப்தாதா இப்பொழுது விசேஷமாக வியக்த ரூபத்தில் அவ்யக்த சந்திப்பை செய்வதற்கான சகஜ வரதானம் கொடுக்கிறார்.

இந்த புது வருடத்தின் முதல் மாதத்திற்கு டிராமா பிளான்படி விசேஷ வரதானம் இருக்கிறது. யார் அவ்யக்த ஸ்திதியில் தந்தையோடு இனிமையிலும் இனிமையான ஆன்மீக உரையாடல் செய்வதின் முயற்சி செய்வாரோ அந்த முயற்சி செய்யும் ஆத்மாவிற்கு முழு ஆர்வத்தோடு ஈடுபடும் ஆத்மாவிற்கு. உண்மையான உள்ளத்தோடு தந்தையிடமிருந்து பிராப்தி செய்யும் ஆத்மாவிற்கு, சுலடமாகவே வித்தியாசமான அவ்யக்த அனுபவம் வரதானத்தின் ரூபத்தில் பிராப்தி ஆகும். எனவே இப்பொழுது வியக்தம் மூலமாக அவ்யக்த சந்திப்பும் முடிந்து கொண்டே இருக்கும். பின்பு என்ன செய்வீர்கள்? சந்திக்க மாட்டீர்களா? அற்ப காலத்து சந்திப்பிற்குப் பதிலாக சதா காலத்தின் சந்திப்பின் அனுபவி ஆகி விடுவீர்கள். முற்றிலும் அருகில் நேரெதிரில் சந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று அப்படி அனுபவம் செய்வீர்கள். புரிந்ததா? இந்த புது வருடத்தில் ஒவ்வொருவரின் ஆர்வத்திற்கு ஏற்றபடி அனேக

ஆன்மீக அனுபவம் ஏற்பட முடியும். எனவே தடைகளை அழிப்பவராகி முழுமையான ஈடுபாட்டில் மூழ்கியிருங்கள். முழுமையான ஈடுபாட்டில் இந்த தடைகளும் தன்னுடைய ரூபத்தை மாற்றி விடும். தடை தடையாக அனுபவம் ஆகாது ஆனால் தடை விசித்திர அனுபவியாக ஆக்குவதற்குக் காரணமாக இருந்தது என்று தென்படும். தடைகளும் ஒரு விளையாட்டாகத் தென்படும். பெரிய விஷயம் சிறியதாக அனுபவம் ஆகும். 'எப்படி" என்ற வார்த்தை மாறி "அப்படி" ஆகி விடும். "தெரியவில்லை" என்ற வார்த்தை மாறி "அனைத்தும் தெரிந்திருக்கிறோம்" அதாவது ஞானம் நிறைந்தவராக ஆகியிருக்கிறோம். அப்படி இந்த வருடத்தை முக்கியமாக முயற்சியில் தீவிரத்தன்மையை கொண்டு வருவதற்கான வருடம் என்று புரிந்து கொண்டாட வேண்டும். தன்னை மாற்றி உலகை மாற்றம் செய்வதற்கான விசேஷ வருடமாகக் கொண்டாட வேண்டும். நல்லது.

அந்த மாதிரி உருவாக்குபவர், விதி மற்றும் சட்டத்தைத் தெரிந்து தீவிர முயற்சி செய்பவர்களுக்கு, மாற்றம் செய்யும் பரிபக்குவ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்!

**அனைவருக்கும் சேமிக்கத் தெரியுமா?** சேமிப்பு ஆகிக் கொண்டிருக்கிறது என்ற இதன் அடையாளம் என்ன? அவருக்கு போதை இருக்கும். எப்படி செல்வந்தர்களுக்கு செல்வச் செழிப்பின் அடையாளத்தை அவர்களுடைய போதையிலிருந்து தெரிய வரும். அவருடைய நடத்தையில், அமருவதில், எழுவதில் போதை தென்படும். மேலும் எவ்வளவு போதை இருக்கிறதோ அவ்வளவு குஷி இருக்கும். நீங்களும் எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா? குஷி உங்களது பிறப்புரிமையாகும். நாம் எப்பொழுதும் சேமிப்பின் போதையில் இருப்பவர்கள், எப்பொழுதும் குஷியின் பொலிவினால் மற்றும் மற்றவர்களுக்கும் ஆன்மீக ஜொலிப்பை காண்பிக்கக் கூடியவர்கள் என்ற இந்த வரதானத்தை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும். என்ன நடந்தாலும் குஷியின் வரதானத்தை இழக்கக் கூடாது. பிரச்சனைகள் வரும் மற்றும் போகும், ஆனால் குஷி போய்விட வேண்டாம். ஏனென்றால் குஷி நம்முடையது, பிரச்சனை வெளியில் இருந்து வருவது, மற்ற பக்கத்திலிருந்து வருவது. தன்னுடைய பொருளை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்வார்கள். மற்றவர்களின் பொருள்

வரவும் செய்யும் மற்றும் போகவும் செய்யும். சூழ்நிலை மாயாவினுடையதே அன்றி நம்முடையது அல்ல. அப்படி குஷியை இழக்கக்கூடாது. உடலே சென்று விட்டாலும் கூட குஷி செல்லக் கூடாது. குஷியோடு உடலும் சென்றால் நல்ல உடல் கிடைக்கும். பழையது சென்றால் புதியது கிடைக்கும். என்ன ஆவோமோ தெரியவில்லையே என்று பயப்படக்கூடாது. நல்லதிலும் நல்லதாக ஆவீர்கள். நல்லது.

**வரதானம்: மூன்று காலங்களையும் எதிரில் வைத்து ஒவ்வொரு காரியத்தில் வெற்றியடையக்கூடிய வெற்றி அடைபவர் ஆகுக!**

லௌகீக முறையிலும் கூட யார் விவேகமானவராக இருப்பாரோ அவர் முன்னுக்குப்பின் யோசித்து புரிந்து பின்பு அடியெடுத்து வைப்பார். அதே போல் இங்கேயும் குழந்தைகள் நீங்கள் எப்பொழுது ஏதாவது காரியம் செய்கிறீர்கள் என்றால் முதலில் மூன்று காலங்களையும் எதிரில் வைத்து பின்பு செய்யுங்கள், நிகழ்காலத்தை மட்டும் பார்க்காதீர்கள், எல்லைக்கப்பாற்பட்ட விவேகத்தை தாரணை செய்யுங்கள் மற்றும் வெற்றி அடைவேன் என்ற நிச்சயத்தின் ஆதாரத்தில் மற்றும் திரிகாலதரிசி நிலையின் ஆதாரத்தில் ஒவ்வொரு காரியமும் செய்யுங்கள் மற்றும் ஒவ்வொரு வார்த்தையும் கூறுங்கள். அப்பொழுது ஆன்மீகமானது என்றும் மற்றும் சாதாரணமற்றது என்றும் கூறுவோம்.

**சுலோகன்: எல்லைக்குட்பட்ட ஆதரவுகளை விட்டு விட்டு ஒரு தந்தையை ஆதாரமாக ஆக்கி விட்டீர்கள் என்றால் கரை சேர்ந்து விடுவீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# தனிப்பட்ட சந்திப்புகள் -பார்ட்டிகள் etc

## 1) வெற்றிக்கான ஆதாரம் பணிவு!

அனைவரும் தன்னை வெற்றியின் நட்சத்திரமாக அனுபவம் செய்கிறீர்களா? யார் வெற்றியின் நட்சத்திரங்களாக இருக்கிறார்களோ அவர்களுடைய முக்கிய அடையாளம் என்னவாக இருக்கும்? அவர்களுக்கு ஒருபொழுதும் தன்னுடைய வெற்றியின் அபிமானம் இருக்காது, அவர் தன்னுடைய வெற்றியை வர்ணனை செய்ய மாட்டார். அவர் தன்னுடைய புகழ் பாட மாட்டார் ஆனால் எவ்வளவு வெற்றியோ அவ்வளவு பணிவாக, பணிவு எண்ணம் உடையவராக, நிர்மல சுபாவம் உடையவராக இருப்பார். மேலும் மற்றவர்கள் அவருடைய மஹிமையைப் பாடுவார்கள் ஆனால் அவர் எப்பொழுதும் தந்தையின் குணங்களையே பாடுவார். அப்படி யார் பணிவு என்ற விசேஷத்தின் ஆதாரத்தில் நடத்து கொள்கிறார்களோ அவர்கள் தான் சுலபமாக வெற்றியை அடைந்து கொண்டே வந்திருக்கிறார்கள். பணிவானவராக ஆவது தான் சுயமரியாதை ஆகும். மேலும் அனைவர் மூலமாக மரியாதையைப் பெறுவதற்கான சுலபமான சாதனமும் ஆகும்.பணிவானவர் ஆவது என்றால் தலை வணங்குவது இல்லை, ஆனால் அனைவரையும் தன்னுடைய விசேஷ மற்றும் அன்பில் வணங்க வைப்பது. மகான் தன்மையின் அடையாளம் பணிவுத்தன்மை ஆகும். எவ்வளவு பணிவோ அவ்வளவு அனைவரின் உள்ளத்தில் மகானாக தானாகவே ஆவீர்கள். பணிவுத்தன்மை இல்லாமல் அனைவருக்கும் மாஸ்டர் சுகம் கொடுக்கும் வள்ளலாக ஆக முடியாது. பணிவுத்தன்மை அகங்காரமற்றவராக சுலபமாக ஆக்குகிறது. பணிவுத்தன்மை என்ற விதை மகான் நிலை என்ற பழத்தை தானாகவே பிராப்தி செய்விக்கிறது. பணிவுத் தன்மை அனைவரது உள்ளத்தின் ஆசீர்வாதங்களைப் பிராப்தி செய்விப்பதற்கான சுலபமான சாதனம் ஆகும். பணிவுத்தன்மை அனைவரின் மனதில் பணிவாக இருக்கும் ஆத்மாவிற்காக சுலபமாக அன்பின் ஸ்தானத்தை உருவாக்கி விடுகிறது. பணிவுத்தன்மை மஹிமைக்குத் தகுதியானவராக தானாகவே ஆக்கி விடுகிறது. அப்படி அகங்காரமற்றவராக ஆவதற்கான முக்கியமான அடையாளம் பணிவுத்தன்மை ஆகும். எப்படி மரத்திற்காக கூறுகிறார்கள் இல்லையா? எவ்வளவு நிரம்பியிருக்குமோ அவ்வளவு வளைந்திருப்பதாக இருக்கும். மேலும் பணிவுத்தன்மை தான் சேவை செய்கிறது. எப்படி மரம் வளைந்திருப்பதினால் சேவை செய்கிறது, ஒருவேளை வளையாமல்

இருக்கிறது என்றால் சேவை செய்யாது. அப்படி ஒரு பக்கம் மகான் நிலை மற்றும் இன்னொரு பக்கம் பணிவுத்தன்மை. மேலும் யார் பணிவாக இருக்கிறாரோ அவர் அனைவர் மூலமாக மரியாதையைப் பெறுகிறார். தான் பணிவானவராக ஆனார் என்றால் மற்றவர்கள் மரியாதை கொடுப்பார்கள். யார் அபிமானத்தில் இருக்கிறாரோ அவருக்கு யாரும் மரியாதை கொடுப்பதில்லை. அவரிடமிருந்து தூரமாக விலகிச் செல்வார்கள். அப்படி மகானாக மற்றும் பணிவாக இருக்கிறாரா அல்லது இல்லையா? அதனுடைய அடையாளம் பணிவானவர், அனைவருக்கும் சுகம் கொடுப்பார். எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் அது சுகம் நிரம்பியதாக இருக்கும். எவ்வளவு தான் சுயமரியாதையில் இருக்கிறாரோ அந்த அளவு அவர் பணிவானவராகவும் இருக்கிறார். சுயமரியாதையில் இருப்பவருக்கு அபிமானம் இருப்பதில்லை. நாமோ உயர்ந்தவராகி விட்டோம். மற்றவர்களே சிறியவர்கள் அல்லது அவர்கள் மீது வெறுப்பைக் காட்டுவது என்று இந்த மாதிரி இருக்கக்கூடாது. எப்படிப்பட்ட ஆத்மாக்களாக இருந்தாலும் அபிமானத்தின் பார்வையால் பார்க்காமல் இரக்கம் நிறைந்த பார்வையோடு பார்ப்பார்கள். அபிமானமும் இல்லை, அவமானமும் இல்லை. அப்படி பணிவுத்தன்மையானது படைக்கும் காரியத்தை சுலபமாக செய்கிறது. எதுவரை பணிவானவர் ஆகவில்லையோ அதுவரை படைப்பவர் ஆக முடியாது. முழு உலகத்தில் உள்ளவர்களும் மற்றும் பிராமண பரிவாரத்தின் உறவு நெருக்கத்தில் இருப்பவர்களும் மற்றவர்களும் இவர் தோல்வி அடைந்து விட்டார் என்று புரிந்து கொண்டாலும் அல்லது கூறினாலும், ஆனால் அது தோல்வி இல்லை. வெற்றி ஆகும் ஏனென்றால், அங்கங்கே பார்ப்பவர்கள் தவறாகப் புரிந்து கொள்வதும் நிகழ்ந்து விடுகிறது. பணிவானவர் மற்றும் சரி சரி என்று சொல்லும் ஆத்மாவைப் பற்றி சில நேரம் தவறாக புரிந்து அவருடைய தோல்வி என்று நினைக்க முடியும், மற்றவர்களுக்கு தோல்வி என்ற ரூபத்தில் தென்படலாம் ஆனால் உண்மையில் அது வெற்றி ஆகும். அந்த நேரம் மற்றவர்கள் கூறுவதினாலோ அல்லது வாயுமண்டலத்தின் காரணமாகவோ சுயம் தான் நிச்சயபுத்தி நிலையிலிருந்து மாறி சந்தேகம் உடையவராக மட்டும் ஆக வேண்டாம். அப்படி பணிவுத்தன்மை தான் சேவையின் வெற்றிக்கான சாதனமாகும். பணிவானவராக ஆவதினால் எப்பொழுதும் சேவையில் லேசாக இருப்பார்கள். பணிவானவராக இல்லை, மரியாதைக்கான ஆசை வைத்திருப்பவராக இருந்தால் சுமை

ஏற்பட்டு விடும். சுமையுள்ளவர் எப்பொழுதும் நின்றுவிடுவார். வேகமாகச் செல்ல முடியாது. எனவே பணிவானவரா அல்லது இல்லையா என்பதின் அடையாளம் அவர் லேசாக இருப்பார். ஒருவேளை ஏதாவது சுமை அனுபவம் ஆகிறது என்றால் பணிவு இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள். யார் பணிவானவராக இருப்பாரோ அவரிடம் அதிகார தோரணை இருக்காது. ஆன்மீக நிலை இருக்கும். எப்படி தந்தை எவ்வளவு பணிவுடையவராகி இங்கே வருகிறார்களோ அதே போல் தந்தையை பின்பற்றுங்கள். ஒருவேளை சேவையில் கொஞ்சமாவது அதிகாரத் தோரணை வருகிறது என்றால் அந்த சேவை நின்று போகும். பிரம்மாபாபா தன்னை எவ்வளவு தாழ்த்திக் கொண்டார். குழந்தைகளுக்கு கால்களை பிடித்து விடுவதற்கும் தயாராகும் அளவிற்கு பணிவான சேவாதாரி ஆனார். குழந்தைகள் என்னை விட முன்னுக்கு இருக்கிறார்கள், குழந்தைகள் என்னை விட நன்கு சொற்பொழிவு நிகழ்த்த முடியும். "முதலில் நான்" என்று ஒருபொழுதும் சொன்னதில்லை. குழந்தைகள் முன்னுக்கு, முதலில் குழந்தைகள், குழந்தைகளே பெரியவர்கள் என்று கூறினார். அப்படி தன்னைத் தாழ்த்திக் கொள்வது தாழ்வாக ஆவது கிடையாது, உயர்வாகச் செல்வது ஆகும். அப்படி இதைத் தான் உண்மையான நம்பர் ஒன் தகுதியான சேவாதாரி என்று கூறுவது. நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

**2) நீங்கள் அனைவரும் தன்னை தெய்வீக புத்தி மற்றும் ஆன்மீகப் பார்வையின் வரதானத்தை பிராப்தி செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மா என்று நினைக்கிறீர்களா?**

பிராமண ஆத்மாக்களுக்கு இந்த இரண்டு வரதானங்களும் பிறப்புரிமையின் ரூபத்தில் பிராப்தி ஆகின்றன. அனைவருக்கும் இதே வரதானம் தான் பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரமாக இருக்கிறது. கடந்த வாழ்க்கை மற்றும் தற்சமயத்து பிராமண வாழ்க்கை இரண்டிற்குமான வித்தியாசம் விசேஷமாகும். இந்த இரண்டு விஷயத்தினுடையதாகத் தான் இருக்கிறது. இந்த இரண்டு விஷயங்களின் மேல் சங்கமயுகத்து முயற்சி செய்பவர்களின் வரிசை எண் உருவாகிறது. இந்த இரண்டு விஷயங்களை எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணத்தில், வார்த்தையில், காரியத்தில் யார் எவ்வளவு

உபயோகிக்கிறாரோ அவ்வளவு அதே அளவு எண் முன்னுக்கு எடுப்பார். ஆன்மீகப் பார்வை, பார்வையினால் உள்உணர்வு காரியம் தானாகவே மாறிவிடுகிறது. தெய்வீக புத்தி மூலமாக தனக்காக, சேவைக்காக, பிராமண பரிவாரத்தின் உறவு நெருக்கத்திற்காக எப்பொழுதும், தானாகவே ஒவ்வொரு விஷயத்திலும் நிர்ணயம் சரியாக இருக்கிறது. மேலும் தெய்வீக புத்தி மூலமாக சரியான நிர்ணயம் இருக்கிறது என்றால் நிர்ணயத்தின் ஆதாரத்தில்தான் சுயம் அவர், சேவை மற்றும் உறவு நெருக்கம் சரியாக, சக்திசாலியானதாக ஆகி விடுகிறது. எப்பொழுதுமே "பச்சா பனா (குழந்தை ஆனேன்)" அதாவது "பச் கயா (தப்பித்துக் கொண்டேன்)" என்ற இதே நினைவை வைத்துக் கொள்ளுங்கள். இந்த பாடம் கடினமா என்ன? சுலபம் தான் இல்லையா? பின்பு ஏன் மறக்கிறீர்கள். அனேக குழந்தைகள் மறக்க விரும்புவதில்லை, ஆனால் மறந்து விடுகிறது என்று அப்படி யோசிக்கிறார்கள். ஏன் மறந்து விடுகிறது. வெகு காலத்து சம்ஸ்காரம் மற்றும் பழைய சம்ஸ்காரம் என்று அப்படி கூறுகிறார்கள் ஆனால் எப்பொழுது உடலில் இருந்து கொண்டே இறந்தவர் ஆகி விட்டீர்கள் என்றால் இறந்த பிறகு என்ன செய்கிறார்கள். தீ மூட்டி இறுதிச் சடங்கு செய்கிறார்கள் இல்லையா? அப்படி பழையதை எரித்து விட்டீர்கள், அதன் பிறகு தான் புதிய ஜென்மம் எடுத்திருக்கிறீர்கள். எப்பொழுது எரித்து விட்டாகி விட்டது என்றால் பின்பு பழைய சம்ஸ்காரம் எங்கிருந்து வர முடியும். உடலை எரித்து விட்டீர்கள் என்றால் பெயர் ரூபம் அழிந்து விடுகிறது இல்லையா? ஒருவேளை பெயரைக் கூறினால் கூட இன்னார் இருந்தார் என்று தான் கூறுவீர்கள். இருக்கிறார் என்று கூற மாட்டீர்கள். அப்படி உடலை எரித்த பிறகு உடல் அழிந்து விட்டது. பிராமண வாழ்க்கையில் எதை எரிக்கிறீர்கள்? உடலோ அதுவே தான், ஆனால் பழைய சம்ஸ்காரங்களை, பழைய நினைவுகளை, சுபாவத்தை எரிக்கிறீர்கள் அப்பொழுது தான் உடலில் இருந்து கொண்டே இறந்தவர் என்று கூறப்படுகிறீர்கள். எப்பொழுது எரித்தாகி விட்டது என்றால் பழைய சம்ஸ்காரம் எங்கிருந்து வந்தது. ஒருவேளை எரிக்கப்பட்ட மனிதன் பின்பு உங்கள் எதிரில் வந்து விட்டார் என்றால் அதை என்னவென்று கூறுவீர்கள்? பூதம் என்று கூறுவீர்கள் இல்லையா? அதே போல் இந்த பழைய எரிக்கப்பட்ட சம்ஸ்காரம் ஒருவேளை விழித்தெழுந்து விட்டது என்றால் என்னவென்று கூறுவீர்கள். இதையும் மாயாவின் பூதம் என்று கூறுவீர்கள் இல்லையா? பூதங்கள் விரட்டப்படுகிறது இல்லையா? வர்ணனை கூட செய்யப்படு வதில்லை.

இது பழைய சம்ஸ்காரம் என்று கூறி தன்னை ஏமாற்றுகிறீர்கள். சில நேரம் லௌகீக வாழ்க்கையின் நினைவில் அப்படியே சென்று விடவில்லையே? உடலிலிருந்து கொண்டே இறந்தவராக ஆகி விட்டீர்கள் இல்லையா? எப்படி உடலால் இறப்பவர் ஒருபொழுதும் பழைய ஜென்மத்தை நினைவு செய்வதில்லை. அதே போல் ஆன்மீக வாழ்க்கை உடையவர், ஜென்மம் எடுத்தவர் லௌகீக ஜென்மத்தை நினைவு செய்ய முடியாது. இப்பொழுதோ யுகமே மாறிவிட்டது. உலகம் கலியுகத்தில் இருக்கிறது, நீங்கள் சங்கமயுகத்தில் இருக்கிறீர்கள், அனைத்தும் மாறி விட்டது. சில நேரம் கலியுகத்தில் அப்படியே சென்று விடவில்லையே. இதுவும் எல்லைக் கோடு தான். எல்லைக் கோட்டை தாண்டினீர்கள் மேலும் எதிரியின் கைதி ஆனீர்கள். அப்படி எல்லைக்கோட்டை தாண்டுவதில்லையே? எப்பொழுதும் சங்கமயுகத்து ஆன்மீக வாழ்க்கையுடைய உயர்ந்த ஆத்மா ஆவேன் என்ற இந்த நினைவில் எப்பொழுதும் இருங்கள். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

**3) தைரியம் உள்ளவர்களாக ஆகுங்கள்! அனைவரும் தன்னை தைரியம் உள்ளவர்களாக நினைக்கிறீர்களா?**

என்ன தான் நடந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும் தைரியத்தை விடக்கூடாது. தைரியம் தான் பிராமண வாழ்க்கையின் மூச்சாகும். தைரியத்தை விட்டீர்கள் என்றால் மூச்சையும் விட்டீர்கள். மூச்சே சென்று விட்டது என்றால் என்ன இருந்து விடுகிறது? தைரியம் இருக்கிறது என்றால் மயங்கிய நிலையிலிருந்து விழித்தெழுந்து விடுவார். அறிவியல் வளர்ச்சிக்கான காரணம் கூட தைரியம் தான். தைரியத்தின் ஆதாரத்தினால் தான் சந்திரன் வரை சென்றடைந்து விடுகிறார்கள். பகலை இரவாக மற்றும் இரவைப் பகலாக்கி விடுகிறார்கள். தைரியம் வைத்து நடந்து கொள்பவர்களுக்கு சுலபமாக வரதானம் பிராப்தியாகி விடுகிறது. கடினம் கூட சகஜமாகி விடுகிறது, நடக்கமுடியாத விஷயம் கூட நடந்து விடுகிறது.

**4) பற்றுதலை வென்றவராக ஆவதற்காக தன்னை டிரஸ்டி என்று புரிந்து கொள்ளுங்கள்!**

அனைவரும் ஆத்ம அபிமானியாவதற்கான முயற்சி செய்கிறீர்கள் இல்லையா? ஆத்ம அபிமானி யாவது என்றால் பற்றுதலை வென்றவர்

ஆவது, சென்ற கல்பத்தின் நினைவுச்சின்னத்தில் கூட அர்ஜீனனின் நினைவுச்சின்னமாக என்ன காண்பித்திருக்கிறார்களோ அதில் அர்ஜீனனுக்கு கடினம் எப்பொழுது ஏற்பட்டது? எப்பொழுது என்னுடையது என்பது வந்ததோ அப்பொழுது தான். என்னுடையது இல்லை என்றால் பற்றுதலை வென்ற நிலை அதாவது நினைவு சொரூபம் ஆகி விட்டீர்கள். என்னுடைய கணவன், என்னுடைய மனைவி, என்னுடைய வீடு, என்னுடைய குழந்தைகள், என்னுடைய கடை, என்னுடைய அலுவலகம் என்ற இந்த என்னுடையது சுலபமானதை கடினமாக்கி விடுகிறது. சகஜ மார்க்கத்திற்கான சாதனம் பற்றுதலை வென்ற நிலை அதாவது டிரஸ்டியாக இருப்பது. இந்த நினைவினால் தன்னையும் மற்றும் அனைவர்களையும் சகஜயோகியாக ஆக்குங்கள். மாஸ்டர் படைப்பவரின் இருக்கையில் அமர்ந்திருக்க வேண்டும், இருக்கையின் ஆதாரத்தில் சக்திகள் தானாக வந்து விடும். கீழே வர வேண்டாம். கீழே இருப்பதோ தேக அபிமானம் என்ற மாயாவின் தூசி தான். கீழே வந்தீர்கள் என்றால் தூசி பட்டு விடும் அதாவது சுத்த ஆத்மாவிலிருந்து அசுத்தமாகி விடுவீர்கள். குழந்தை கூட ஒருவேளை இருப்பிடத்திலிருந்து கீழே வந்து விடுகிறது என்றால் அழுக்காகி விடுகிறது, அழுக்காகி விடக்கூடாது என்று குழந்தைகள் மேலும் கவனம் வைக்கிறார்கள். அப்படி தேக உணர்வில் வருவது என்றால் அழுக்காக ஆவது. நீங்கள் சுத்தமான ஆத்மாக்கள் ஆவீர்கள், சுத்தத்தில் ஒருவேளை கொஞ்சமாவது மண் பட்டு விட்டது என்றால் தெளிவாகத் தென்படும், கொஞ்சமாவது தேக அபிமானத்தின் அழுக்கு சுத்த ஆத்மாக்கள் உங்களில் தெளிவாகத் தென்படும். அடிக்கடி தேக உணர்வில் வருவது என்றால் மண்ணில் விளையாடுவது மற்றும் மண்ணை சாப்பிடுவது. அப்படியோ நீங்கள் இல்லை தானே. எப்பொழுதாவது பழைய சம்ஸ்காரமோ வந்து விடுவதில்லையே எப்பொழுது உடலில் இருந்து கொண்டே இறந்து விட்டீர்கள் என்றால் பழையவை முடிவடைந்து விட்டது. உடலில் இருந்து கொண்டே இறப்பது என்றால் பிராமண வாழ்க்கை. பிராமணன் ஒருபொழுதும் மண்ணில் விளையாட மாட்டார், இதுவோ சூத்திரத்தன்மையின் விஷயங்கள். எனவே எப்பொழுதும் தந்தையின் நினைவு என்ற மடியில் இருங்கள். செல்லமான குழந்தைகளை தாய் மடியில் வைக்கிறார், மண்ணில் செல்ல விட மாட்டார், அப்படி நீங்கள் செல்லக் குழந்தைகள் தான் இல்லையா? எனவே மண்ணில் விளையாட முடியாது. இரத்தினங்களோடு விளையாடிக் கொண்டே இருங்கள்.

மண்ணில் விளையாடுபவர்கள் தந்தையின் குழந்தையாக இருக்க முடியாது. இராயலான தந்தையின் குழந்தைகள் மண்ணில் விளையாடுவதில்லை. இந்த உடலிலிருந்து இறந்த ஜென்மமே உடனடிப் பலனை அடைவதற்காகத் தான். செய்தீர்கள் மற்றும் பிராப்தி ஏற்பட்டது. இப்பொழுது கடின உழைப்பின் அவசியம் இல்லை. பழத்தை (பலனை) அருந்தும் நேரம் ஆகும். அதீந்திரிய சுகத்தின் வாழ்க்கையில் இருப்பதற்கான நேரமாகும். அப்படி அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் எப்பொழுதும் ஆடுபவர்கள் தான் இல்லையா? யார் இந்த நேரம் எப்பொழுதும் இந்த ஊஞ்சலில் ஆடுகிறாரோ அவர் தான் ஸ்ரீகிருஷ்ணனுடன் ஊஞ்சலில் ஆடுவார். அந்த மாதிரி முயற்சி செய்பவர்கள் தான் இல்லையா? இதைத் தான் தீவிரமாக முயற்சி செய்பவர் என்று கூறப்படுவது. நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 5) மர்ஜீவா ஜென்மத்தின் (உடலில் இருந்து கொண்டே இறந்த ஜென்மத்தின்) மகத்துவம்!

பிரம்மா குமார், பிரம்மா குமாரி ஆவது என்றால் மர்ஜீவா (உடலில் இருந்து கொண்டே இறப்பது) ஆவது. இந்த இறப்பதோ மிகவும் சுலபமாகி விட்டது. அந்த வாழ்க்கையிலிருந்து இறந்து விட்டீர்கள் அதாவது பிரம்மா குமார், பிரம்மா குமாரி ஆகி விட்டீர்கள் ஆனால் பிரம்மா குமார், குமாரி ஆன பிறகு அடிக்கடி சாக வேண்டியது இருக்கிறது இல்லையா? அதுவும் மிகவும் கடினம். கடினம் தான் இல்லையா? சிறியவர்கள் கூறுகிறார்கள். எங்களுக்குத் தான் அதிகமாக சாக வேண்டியதாக இருக்கிறது. மேலும் பெரியவர்கள் கூறுகிறார்கள் - எங்களுக்குத் தான் அதிகமாக கேட்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி உங்களுக்கு சகித்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு கேட்க வேண்டியதாக இருக்கிறது, அப்படியானால் யாருக்கு சாக வேண்டியதாக இருக்கிறது? யார் செத்திருக்கிறார்கள். ஒருவர் இறந்தாரா அல்லது இருவருமே இறந்தார்களா. இருவருமே இறந்து விட்டார்கள் என்றால் விசயம் முடிந்து விட்டது. அனைத்தும் முடிந்தது. எப்படி தைரியத்தோடு மர்ஜீவா ஆவதில் பயப்படவில்லை. மிகவும் குஷியோடு செய்தீர்கள். அதே போல் குஷியோடு மாற்றம் செய்ய வேண்டும். இறப்பது என்பது இல்லை ஆனால் நீங்கள் இறப்பது, இறப்பது என்ற வார்த்தையை சொல்லி விட்டீர்கள், எனவே பயந்து விடுகிறார்கள். உண்மையிலேயே இது

இல்லை தாரணை பாடத்தில் வரிசை எண் முன்னுக்கு எடுப்பதாகும். அப்படி சகித்துக் கொள்வதில் பயப்படாதீர்கள். எப்பொழுது பிராமண பரிவாரத்தில் ஏதாவது சூழ்நிலை வருகிறது என்றால் பெரியப்பா, சித்தப்பா, மாமா இவர்களின் நினைவு வருகிறதா? சூழ்நிலை வரும் நேரத்தில் அனேக ஆத்மாக்களுக்கு பிராமண பரிவாரத்திற்குப் பதிலாக குடும்ப உறவினர்களின் நினைவு விரைவில் வந்து விடுகிறது. சூழ்நிலை விலகிய நிலைக்குப் பதிலாக ஆதாரத்தை அனுபவம் செய்விக்கிறது. எப்பொழுது மர்ஜீவா ஆகி விட்டீர்கள் என்றால் முந்தைய ஜென்மத்தின் உறவினர்கள் பெரியப்பா, சித்தப்பா, அம்மா, அப்பா நினைவு இருக்கிறதா என்ன? கனவிலும் வருகிறதா என்ன? அப்படி உறவும் ஜென்மமும் மாறிவிட்டது இல்லையா? பரிஷ்தா என்றால் பழையவர்களோடு எந்த ரிஷ்தாவும் (உறவும்) இல்லை என்ற இந்த விளக்கம் தான் கூறுகிறீர்கள் இல்லையா. அப்படியானால் அந்த நேரத்தில் இவை எங்கிருந்து வெளிப்பட்டு வருகின்றன? அறுந்து போன உறவு மீண்டும் இணைந்து விடுகிறதா? இறந்தவரிலிருந்து உயிருள்ளவராக ஆகி விடுகின்றீர்களா? பரிஷ்தா என்றால் பழையவர்களோடு எந்த உறவும் இல்லை, அனைத்தும் புதியது. அசரீரியின் அர்த்தமே சரீரத்தின் எந்தவொரு கவர்ச்சியும் ஆத்மாவை தன் பக்கம் கவர்ந்திழுக்காமல் இருக்கட்டும். உயிரோடு இருந்தாலும் கூட எப்படி உயிரோடு இருந்தே இறந்தது போல் ஆவது. அதே போல் உங்கள் அனைவருக்கும் உங்களுடைய உடலோ இல்லவே இல்லை. என்னுடைய உடல் என்று கூறுவீர்களா அல்லது தந்தையின் சொத்து என்று கூறுவீர்களா? எப்பொழுது இருப்பதே தந்தையின் சொத்து என்றால் அசரீரி ஆவதில் என்ன கடினம்? மத்திய காலம் கூட உங்களுடையது, மிக உயர்ந்தது மற்றும் இப்பொழுது கடைசி ஜென்மத்தில் இந்த மர்ஜீவா பிராமண ஜென்மம் இருக்கிறது இல்லையா இதனுடைய தனித்தன்மையைப் பாருங்கள், எவ்வளவு பெரியது. எவ்வளவு மகிமைக்குரியது. எந்தவொரு உயர்ந்த காரியத்தையும் இது வரை உங்களுடைய பெயருடைய பிராமணன் தான் செய்கிறார். (வெளியுலக) பிராமணன் இப்பொழுது பிராமணனாக இல்லையென்றாலும் ஆனால் பெயரோ பிராமணன் தான் இல்லையா? உங்களுடைய பெயரினால், உங்களுடைய தனித்தன்மையின் காரணத்தினால் அவரும் உயர்ந்தவராக மகிமை செய்யப்படுகிறார். மர்ஜீவா ஆகி விட்டீர்கள் என்றால் பழைய சம்ஸ்காரத்தின் மரணமும் ஏற்பட்டு விட்டது, பழைய சம்ஸ்காரம் வெளிப்பட முடியாது. இது பழைய

ஜென்மத்தினுடையது, பிராமண ஜென்மத்தினுடையது இல்லை என்று முற்றிலும் மறந்து விடுங்கள். எப்பொழுது பழைய ஜென்மம் முடிந்து விட்டது புதிய ஜென்மம் எடுத்தாகி விட்டது என்றால், புதிய ஜென்மம், புதிய சம்ஸ்காரம். ஒருவேளை மாயா பழைய சம்ஸ்காரத்தை வெளிப்படுத்த வைக்கிறது என்றாலோ, ஒருவேளை யாராவது மற்றவர்களின் பொருளை உங்களுக்கு வந்து கொடுத்தார்கள் என்றாலோ நீங்கள் என்ன செய்வீர்கள்? கொஞ்சம் யோசியுங்கள். வைத்துக் கொள்வீர்களா? ஏற்றுக் கொள்வீர்களா? இது என்னுடைய பொருள் இல்லை, மற்றவருடைய பொருளை நான் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என்று யோசிப்பீர்கள் இல்லையா?. ஒருவேளை மாயா பழைய ஜென்மத்தின் சம்ஸ்காரத்தை வெளிப்படுத்தும் ரூபத்தில் வந்தாலும் கூட உங்களுடைய பொருளாக வரவில்லை, இது என்னுடைய பொருள் இல்லை, இது வேறு யாருடையதோ. கொஞ்சம் யோசியுங்கள். மற்றவரின் பொருளை எண்ணத்தில் கூட தன்னுடையது என்று ஏற்றுக் கொள்ள முடியாது. ஏற்றுக் கொள்வீர்களா? மற்றவரின் பொருள் அவசியம் துக்கம் கொடுக்கும், ஏமாற்றம் கொடுக்கும். இதை யோசியுங்கள். யோசித்து அதே விநாடி மற்றவரின் பொருளை விட்டு விடுங்கள். எரித்து விடுங்கள், அதாவது புத்தியிலிருந்து எடுத்து விடுங்கள். மற்றவரின் பொருளை தன்னுடைய புத்தியில் வைக்காதீர்கள். வைத்தீர்கள் என்றால் மிகவும் நொந்து போவீர்கள். பிராமண வாழ்க்கையில் தந்தை எனக்கு என்னென்ன கொடுத்திருக்கிறார் என்று இதை யோசியுங்கள். பிராமண வாழ்க்கையின் அர்த்தமே என்னுடைய உண்மையான சுபாவம், சம்ஸ்காரம், உள்உணர்வு, பார்வை, நினைவு ஆகியவை என்ன? இவை என்னுடையவை அவை இன்னொரு வருடையது. சாதாரண காரியம் முடிவடைந்து விட்டது, ஏனென்றால் மர்ஜீவா ஆகி விட்டோம் இல்லையா?. அப்படி சாதாரணவைகளிலிருந்து இறந்து விட்டீர்கள், விசேஷங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். அப்படியானால் புது ஜென்மம் எடுத்தாகி விட்டது. சாதாரண பழைய ஜென்மத்தின் இயல்பு, இப்பொழுதையது இல்லை ஏனென்றால் புதிய ஜென்மம் எடுத்தாகி விட்டது. அப்படி புதிய ஜென்மத்தின் இயல்பு, விசேஷத்தன்மை ஆகும். அந்த மாதிரி அனுபவம் இருக்கட்டும். அப்படியானால் இப்பொழுது என்ன செய்வீர்கள்? சாதாரணத்தன்மையின் முடிவு ஏற்பட வேண்டும். எண்ணத்தில் கூட சாதாரணத் தன்மை வேண்டாம். எனவே நான் எப்பொழுதும் ஆன்மீக வாழ்க்கையில் இருக்கிறேனா அல்லது சாதாரண வாழ்க்கையில்

இருக்கிறேனா என்று இதை சோதனை செய்யுங்கள். ஏனென்றால் புதிய ஜென்மம் ஏற்பட்டு விட்டது. ஜென்மம் புதியது என்றால் அனைத்தும் புதியது மேலும் அனைவருக்குமே புதியது தான் பிரியமானதாக இருக்கிறதேயன்றி பழையது அல்ல. அப்படி புதிய வாழ்க்கையில் புதிய விஷயங்கள். பழையவை முடிவடைந்து விட்டன. முடிவடைந்து விட்டதா அல்லது பாதி அங்கே உயிரோடு இருக்கிறீர்களா, பாதி இங்கு உயிரோடு இருக்கிறீர்களா? பாதி சூத்திரனின் பக்கம், பாதி பிராமணனின் பக்கம் அப்படி இருக்கவில்லையே? உயர்ந்த வாழ்க்கையை மறந்து சாதாரண வாழ்க்கையை யார் நினைவு செய்வார்கள். யாருக்காவது இராஜ பதவி கிடைத்து விட்டது இருந்தாலும் ஏழ்மையை நினைவு செய்து கொண்டே இருந்தார் என்றால் அவரை என்னவென்று சொல்வது? பாக்கியவான் என்று சொல்ல முடியுமா? எனவே கனவில் கூட பழைய வாழ்க்கை நினைவில் வர வேண்டாம். எப்பொழுது இறந்து விட்டீர்களோ நினைவு எங்கிருந்து வரும்? பாதி இறந்தவராக ஆகவில்லையே? முழுமையாக இறந்து விட்டீர்கள் தான் இல்லையா? யார் பாதி இறந்து, முழுமையாக இறப்பதில்லை என்றால் நன்றாக இல்லை தான் இல்லையா?. எப்பொழுது இந்த மாதிரி அருமையான வாழ்க்கை கிடைத்து விட்டது என்றால் பழைய வாழ்க்கையின் நினைவு வர முடியாது. அந்த மாதிரி மர்ஜீவாவாக ஆகியிருக்கிறீர்களா அல்லது பாதி இறந்தவர்களாக ஆகியிருக்கிறீர்களா? மர்ஜீவாவாக ஆகியிருப்பதே திருப்தியாக இருப்பதற்காகத் தான். ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலை இந்த மகிமை யாருடையது? தேவதைகளுடையதா அல்லது பிராமணர்களுடையதா? தேவதைகளின் வாழ்க்கையிலோ ஆசை மற்றும் ஆசையில்லாத நிலையின் கேள்விக்கே இடமில்லை. இங்கு தான் ஆசை என்றால் என்ன, ஆசையற்ற நிலை என்றால் என்ன என்ற ஞானம் இருக்கிறது. அப்படி ஞானம் இருந்து ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலை ஆவது இதைத் தான் பிராமண வாழ்க்கை என்று கூறப்படுவது. எந்த பொருளின் ஆசையாவது இருக்கிறதா? எப்பொழுது படைப்பவர் தன்னுடையவர் ஆகி விட்டார் என்றால். படைப்பு எங்கே செல்லும்? படைப்பவரை தன்னுடையவராக ஆக்கி விட்டீர்கள் இல்லையா? நல்ல முறையில் ஆக்கியிருக்கிறீர்களா, தொய்வாக ஆக்கவில்லையே? பிராமண ஆத்மாக்கள் உங்களுக்கு இந்த கடைசி மர்ஜீவா ஜென்மத்தில் ஒவ்வொரு காரியத்தின் வெற்றியின் பலன் அதாவது பிராப்தி கிடைப்பதற்கான வரதானம் கிடைத்திருக்கிறது.

தற்சமயம் மற்றும் எதிர்காலம் எப்பொழுதும் கதி, சத்கதி இருக்கவே இருக்கிறது. எதிர்காலத்திற்காக நீங்கள் காத்திக்கவில்லையே? சங்கமயுகத்தின் பிராப்தியின் மகத்துவமே இது தான். இப்பொழுது காரியம் செய்யுங்கள் மற்றும் இப்பொழுதே பிராப்தியின் அதிகாரத்தையும் (உரிமையை) எடுத்துக் கொள்ளுங்கள். இதைத் தான் ஒரு கையால் கொடுங்கள், இன்னொரு கையால் எடுங்கள் என்று கூறப்படுவது. சில நேரம் கிடைத்து விடும் மற்றும் எதிர்காலத்தில் கிடைத்து விடும் என்ற ஆறுதலுக்கான ஒப்பந்தம் இது இல்லை. உடனடி தானம் மகாபுண்ணியம் அந்த மாதிரி பிராப்தி இருக்கிறது. இதைத் தான் உடனடி ஒப்பந்தம் என்று கூறுவது. பிராமணன் என்றால் சக்திசாலியான சொரூபம். மர்ஜீவாவாக ஆனீர்கள் என்றால் முதல் உறுதி மொழியாக என்ன செய்திருப்பீர்கள். என்ன உறுதிமொழி செய்தேன் என்ற இதையும் மிக நன்றாக தெரிந்திருக்கிறீர்கள். தந்தை உறுதிமொழி செய்வித்தார். மேலும் நீங்கள் ஏற்றுக்கொண்டும் இருக்கிறீர்கள், ஏற்றுக் கொண்ட பிறகு என்ன செய்கிறீர்கள்? சூத்திரத்தன்மையின் விகார சம்ஸ்காரத்தை விடுங்கள் என்று தந்தை கூறினார். ஆத்மாவின் விகார சம்ஸ்காரம் என்ற ஆடையை மாற்றினீர்கள் மற்றும் ஈஸ்வரிய சம்ஸ்காரத்தின் தெய்வீக ஆடையை அணிந்தீர்கள். சூத்திர நிலையின் அடையாளங்களான அசுத்தமான உள்உணர்வு மற்றும் பார்வையை மாற்றி தூய்மையான பார்வை மற்றும் உள்உணர்வின் விசேஷ அடையாளங்களை தாரணை செய்தீர்கள்-அனைத்தையும் விட உயர்ந்ததிலும் உயர்ந்த உறவு மற்றும் செல்வத்தின் அதிகாரி ஆனீர்கள் என்ற இதுவும் மிக நன்றாக நினைவு இருக்கிறது. மாணவ வாழ்க்கை தான் சிறந்த வாழ்க்கை என்று கூறப்படுகிறது. அப்படியானால் நீங்கள் யார்? குழந்தைகளா அல்லது வயதானவர்களா? குழந்தை என்றால் பந்தனமற்றவர். ஒருவேளை தன்னை கடந்த கால வாழ்க்கையில் உள்ளவர் என்று புரிந்து கொண்டீர்கள் என்றால் பந்தனம் இருக்கிறது, மர்ஜீவா ஆகி விட்டீர்கள் என்றால் பந்தனமற்ற நிலை. குமாராக இருந்தாலும் அல்லது வயதானவராக இருந்தாலும் அனைவரும் குழந்தைகள். தந்தை கொடுத்துள்ள நினைவு செய்யுங்கள் மற்றும் சேவையில் இருங்கள் என்ற ஒரு காரியத்தில் மட்டும் எப்பொழுதும் பிஸியாக இருங்கள். இந்த இறப்பது என்றால் சொர்க்கத்தில் செல்வது எனவே இறப்பவர்களை சொர்க்கத்திற்குச் சென்று விட்டார்கள் என்று கூறுகிறார்கள். அந்த இறப்பவர்கள் செல்வதில்லை ஆனால் சங்கமயுகத்தில் யார் இறந்தாரோ

அவர் சொர்க்கத்திற்கு சென்றார். இதை காப்பி செய்து உடலால் இறப்பவர்களை இன்னார் சொர்க்கத்தை எய்தினார் என்று செய்தித் தாள்களில் போடுகிறார்கள். தாங்கள் விரும்பியே இறந்தீர்கள் தான் இல்லையா? நிர்பந்தத்தில் இறக்கவில்லையே, இந்த முழு சபையும் மர்ஜீவாவாக ஆகுபவர்களுடையது. எங்கேயாவது உங்களுடைய மூச்சு பழைய உலகத்தில் நின்று கொண்டிருக்கவில்லையே? இறந்தவர்கள் கூட சிரித்துக் கொண்டிருக்கிறார்கள், இது தான் அதிசயம்! எப்படி தந்தை கடனாக எடுக்கிறார், பந்தனத்தில் வருவதில்லை, எப்பொழுது விரும்புகிறாரோ வருகிறார், எப்பொழுது விரும்புகிறாரோ சென்று விடுகிறார். எந்த பந்தனமும் இல்லை. அப்படி அனைத்து சேவாதாரி உடலின், சம்ஸ்காரங்களின், சுபாவத்தின் பந்தனங்களிலிருந்து விடுபட்டு எப்பொழுது விரும்புகிறாரோ, எப்படி விரும்புகிறாரோ அப்படி தன்னுடைய சம்ஸ்காரத்தை உருவாக்க முடிய வேண்டும். இதைத் தான் மர்ஜீவா என்று கூறுவது நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**6) பாக்கியத்தின் ஆதாரம் தியாகம்!**

தன்னை அனைத்தையும் தியாகம் செய்தவராக, மிக உயர்ந்த பாக்கியசாலி ஆத்மாவாக அனுபவம் செய்கிறீர்களா? யார் தற்சமயம் அனைத்தையும் தியாகம் செய்தவராக இருக்கிறாரோ அவர் தான் எதிர்காலத்தில் மிக உயர்ந்த பாக்கியசாலியாக ஆகுகிறார். தன்னுடைய தியாகத்தினால் மற்றவர்களுக்கும் பாக்கியம் உருவாகிறது. எப்படி தந்தை தன்னுடையதை தியாகம் செய்தாரோ அப்பொழுது தான் அனேக ஆத்மாக்கள் மற்றும் உங்களுடைய பாக்கியம் உருவானது. தொடக்க நிலையில் தன்னுடைய அனைத்து சுகங்களின் தியாகம் இருந்தது. இதனால் இந்த பாக்கியம் உருவானது. இப்பொழுது எவ்வளவு தியாகமோ அவ்வளவு மற்றவர்களின் பாக்கியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே வாரிசு மறைந்து விட்டனர். அப்படி இப்பொழுது மீண்டும் அதே மகாதானி ஆவதற்கான சம்ஸ்காரம் மற்றும் எப்பொழுதும் அனைத்து பிராப்தி இருந்த போதிலும், அனைத்து சாதனங்கள் இருந்த போதிலும் சாதனத்தின் பக்கம் போகாதீர்கள், சாதனாவில் (இடைவிடாத பயிற்சி) இருங்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் ஒவ்வொரு ஆத்மாவின் கையில் பாக்கியத்தின் ரேகை போடுவதற்கான அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்.

தன்னுடைய தியாகத்தின் குறையின் காரணமாக அனேக ஆத்மாக்களின் பாக்கியத்தின் ரேகையை முழுமையாக்க முடியவில்லை என்று அப்படி இருக்க வேண்டாம். இது மிகப் பெரிய பொறுப்பாகும். எனவே தன்னுடைய சாதனங்களை மற்றும் தனக்காக நேரம் மற்றும் செல்வத்தின் தியாகம் செய்யுங்கள். அப்பொழுதுதான் இந்த பிரத்யக்ஷ பலனின் பாக்கியத்தை அடைய முடியும். தன்னை ஓய்வாக வைத்துக் கொள்வதினால், சேவைக்காக அர்ப்பணம் செய்யப்பட்ட செல்வத்தை தனக்காக பயன்படுத்துவதினால் ஒருபொழுதும் வெற்றி கிடைக்காது. எப்படி சேவையின் தொடக்க காலத்தில் தன்னுடைய வயிற்றுச் சாப்பாட்டையும் குறைத்துக் கொண்டு, ஒவ்வொரு பொருளையும் சேவையில் ஈடுபடுத்தியதினால் அதனுடைய பிரத்யக்ஷ பலனாகக் கிடைத்தவர்கள் ஆத்மாக்கள் நீங்கள். அதே போல் மத்திய காலத்தில் தந்தையும் நாடகமும் சாதனங்களை தனக்காக பயன்படுத்துவதின் அனுபவத்தையும் சுலபமாக செய்வித்தார்கள் ஆனால் இப்பொழுது கடைசியில் இயற்கை தாசி ஆகியும், சர்வ சாதனங்கள் கிடைத்தும் தனக்காக அன்றி சேவைக்காக பயன்படுத்துங்கள். ஏனென்றால் வரும் காலங்களில் அனேக ஆத்மாக்கள் சாதனம் மற்றும் செல்வத்தை உங்கள் எதிரே அதிகத்திலும் அதிகமாக அர்ப்பணம் செய்வார்கள் ஆனால் தனக்காக ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். தனக்காக ஏற்றுக் கொள்வது என்றால் தன்னை உயர்ந்த பதவியிலிருந்து வஞ்சித்துக் கொள்வது. எனவே அந்த மாதிரி தியாக மூர்த்தியாகி சேவையின் பிரத்யக்ஷ பலனைக் கொண்டு வாருங்கள். ஒருவேளை ஏதேனும் வெற்றி மற்றும் பிராப்தியை ஏற்றுக் கொண்டீர்கள் என்றால், அங்கு (சத்யுகத்தில்) குறைந்து விடும். சாதனம் கிடைத்தும் அதை தியாகம் செய்ய வேண்டும். பிராப்தி இருந்தும் தியாகம் செய்வது இதைத் தான் தியாகம் என்று சொல்வது. இருப்பதே பிராப்தியில்லாத நிலை, அப்போது தியாகம் செய்தீர்கள் என்றால் இது நிர்ப்பந்தமானதேயன்றி தியாகம் இல்லை. இந்த அளவு கவனம் தன் மேல் வைத்துக் கொண்டே மேலும் சகஜயோகத்தின் இந்த அர்த்தத்தை புரிந்து கொண்டீர்களா அல்லது சகஜ சாதனங்கள் மூலமாக யோகி ஆக வேண்டுமா? அனைவரும் அனைத்தையும் தியாகம் செய்தவர்களா அல்லது வெறும் தியாகிகள் தானா? அனைத்தையும் தியாகம் செய்தவர் என்றால் என்னென்ன தியாகம் செய்திருக்கிறீர்களோ உறவு. நெருக்கம், பாவ, சுபாவம், சம்ஸ்காரம் இவை அனைத்தையும் பழைய 63-ஜென்மங்களின் மீது

இருக்கின்ற கணக்கு வழக்கின் அம்சத்தையும் வம்சத்தையும் சேர்த்து தியாகம் செய்து விட்டிருப்பது எனவே அனைத்தையும் தியாகம் செய்வது என்று கூறப்படுகிறது. அந்த மாதிரி அனைத்தையும் தியாகம் செய்த, யாருடைய பழைய கணக்கு வம்சத்தோடு முடிந்து விட்டதோ அந்த மாதிரி அனைத்தையும் தியாகம் செய்தவர் என்னுடைய பழைய சுபாவ, சம்ஸ்காரம் என்று அந்த மாதிரி ஒருபொழுதும் எண்ணத்தைக் கூட வைக்க முடியாது. அனைத்தையும் தியாகம் செய்தவர். அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்டவர், அனைத்து சுமைகளிலிருந்தும் விடுபட்டவர் ஒவ்வொரு எண்ணத்திலும் பாக்கியத்தை உருவாக்கக்கூடிய பல கோடி மடங்கு பாக்கியசாலியாக இருப்பார். அவருடைய ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானம் தானாகவே இருக்கும். அந்த மாதிரி அனைத்தையும் தியாகம் செய்தவர்களாக ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? யார் தியாகியாக இருப்பாரோ அவர் ஒருபொழுதும் எந்தப் பொருளையும் ஏற்றுக்கொள்ள மாட்டார். எங்கு ஏற்றுக் கொள்வதற்கான எண்ணம் வந்தது என்றால் அங்கு தபஸ்யா முடிவடைந்து விடும். தியாகம் தபஸ்யாமூர்த்தியாக அவசியம் ஆக்கும். எங்கு தியாகம் மற்றும் தபஸ்யா இல்லையோ அங்கு சேவையும் இருக்காது. வெளித்தோற்றத்தில் யார் எந்த ரூபத்தில் சேவை செய்தாலும் ஆனால் தியாகம் மற்றும் தபஸ்யா இல்லை என்றால் சேவையில் வெற்றியும் இல்லை. எப்பொழுது நான் அனைவரையும் விட அதிகமாக சேவை செய்பவன், திட்டமிடும் புத்தி உள்ளவன், புதுப்புது கண்டுபிடிப்பு செய்பவன், பணத்தால் சகயோகம் செய்பவன், இரவு பகலாக உடலை சேவையில் ஈடுபடுத்துபவன் அதாவது கடினமாக வேலை செய்பவன் அல்லது இன்சார்ஜ் ஆக இருக்கிறேன் என்று இந்த எல்லைக்குட்பட்ட பதவிகளை எப்பொழுது பிடித்து விடுகிறீர்கள் என்றால் எல்லைக்குட்பட்ட பெயர், புகழ், மதிப்பு, மரியாதை தலைகீழான பதவியைப் பிடிப்பதினால் சரியான இலக்கை சென்றடையும் மார்க்கத்திலிருந்து விலகி வீணான மார்க்கத்தில் மிக வேகமாக சென்று விடுகிறீர்கள். எனவே இப்பொழுது எல்லைக்குட்பட்ட பதவிகளை விட்டு அனைத்தையும் தியாகம் செய்தவராக ஆகுங்கள். தியாகத்தின் மூலமாகத் தான் உயர்ந்ததிலும் உயர்ந்த பாக்கியம் உருவாகும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**7) அட்வான்ஸ் பார்ட்டியின் காரியம் என்ன நடந்து கொண்டிருக்கிறது?**

பதில்: அட்வான்ஸ் பார்ட்டியைச் சேர்ந்தவர்கள் உங்களுக்காக முழு மைதானத்தையும் தயார் செய்வார்கள். அவர்களுடைய குடும்பத்தில் செல்லுங்கள் அல்லது செல்லாமல் இருங்கள் ஆனால் ஸ்தாபனையின் காரியம் என்ன நடக்க வேண்டுமோ அதற்காக அவர்கள் பொறுப்பாளராக ஆவார்கள். ஏதாவது சக்திசாலியான நிலையைப் பெற்று பொறுப்பாளர் ஆவார்கள். ஸ்தாபனையின் காரியத்தில் உதவியாளராக ஆகிறார் போல் மாதிரி அந்த மாதிரியான பலத்தைப் பெற்றிருப்பார்கள். தற்சமயம் ஒவ்வொரு நாளும் புது இரத்தத்திற்கு (இளைஞர்களுக்கு) மரியாதை அதிகமாக இருக்கிறது என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். இன்னும் வரும் நாட்களில் எவ்வளவு இளைஞர்களின் புத்தி காரியம் செய்யுமோ அவ்வளவு வயோதிகர்களினுடையது செய்யாது. இந்த மாற்றம் ஏற்படும். பெரியவர்களும் குழந்தைகளின் கருத்திற்கு மரியாதை கொடுப்பார்கள். இப்பொழுது கூட பெரியவர்களாக இருப்பவர்கள் 'நாங்களோ பழைய காலத்தைச் சேர்ந்தவர்கள், இவர்கள் இக்காலத்தில் இருப்பவர்கள் இவர்களுக்கு மரியாதை கொடுக்கவில்லை என்றால், பெரியவர்கள் என்று புரிந்து நடத்தவில்லை என்றால் வேலை நடக்காது' என்று நினைக்கிறார்கள். முன்பு குழந்தைகளை அதிகாரத்தோடு நடத்தினார்கள், இப்பொழுது அப்படியில்லை. குழந்தைகளையும் எஜமானர் என்று நினைத்து நடத்துகிறார்கள். அப்படி இதுவும் நாடகத்தில் இருக்கிறது. சிறியவர்களும் அதிசயத்தக்க காரியம் செய்து காண்பிப்பார்கள். இன்னும் முன்னேறிச் செல்வதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய காரியமே உங்களுடைய தொடர்பில் தான் நடக்க வேண்டும். முழுக் காரியத்தின் ஆதாரம் விசேஷ ஆத்மாக்களின் மேல் இருக்கிறது. நடந்து கொண்டிருக்கும்போதே மிதமான நிலை வந்து விடுகிறது. நெருப்பு பிடிக்கிறது, பின்பு குளிர்ந்து விடுகிறது ஆனால் சீதளமாக ஆகக்கூடாது இல்லையா? வெளிப்படையாக என்ன ரூபம் இருக்கிறதோ அதை மனிதர்கள் பார்க்கிறார்கள். இதுவோ ஏற்கனவே நடந்து வந்து கொண்டு தான் இருக்கிறது, இதில் என்ன பெரிய விஷயம், பரம்பரையாக இவை நடந்து வந்து கொண்டுதானிருக்கின்றன ஆனால் இப்படி நடந்து கொண்டிருக்கும்போதே சீதளத்தன்மை ஏன் வந்து விடுகிறது? இதற்கான காரணம் என்ன? நீங்கள் லெக்சர் (சொற்பொழிவு) செய்கிறீர்கள் ஆனால்

லெக்சரின் கூடவே ஃப்யூச்சர்ஸ் (முகத்தோற்றம்) கூட கவர வேண்டும். அப்பொழுது தான் லெக்சரின் எஃபெக்ட் (பிரபாவம்) இருக்கும். அப்படி தன்னுடைய ஒவ்வொரு பாடத்தையும் சோதனை செய்யுங்கள். இன்றைய நாட்களில் சொற்பொழிவாற்றுவதில் உங்களோடு யாராவது போட்டியிட்டால் இதில் வேறு எவரோ கூட வெற்றி அடைந்து விடுவார் ஆனால் நடைமுறையில் எது இருக்கிறதோ அதில் அனைவரும் உங்களிடம் தோல்வி அடைவார்கள். முக்கியமான விசேஷம் நடைமுறை வாழ்க்கைக்கானது. நடைமுறை விஷயம் ஏதாவது நீங்கள் கூறினீர்கள் என்றால் முற்றிலும் வாயடைத்துப் போய் விடுவார்கள். அப்படி சொற்பொழிவு மூலமாக நடைமுறையின் மனோ பாவம் வெளிப்பட்டு விடும். அப்பொழுது தான் அந்த சொற்பொழிவு செய்தது தனிப்பட்டதாகத் தென்படும். என்ன வார்த்தை பேசுகிறீர்களோ அது கண்களின் மூலம் தென்படட்டும். இவர்கள் என்ன கூறுகிறார்களோ அது நடைமுறையில் இருக்கிறது, இவர்கள் அனுபவி மூர்த்திகள் என்பது வெளிப்படட்டும். அப்பொழுது தான் அதனுடைய பிரபாவம் ஏற்பட முடியும். மற்றபடி கேட்டுக் கேட்டு அனைவரும் களைப்படைந்து விட்டார்கள், மிக அதிகமாகக் கேட்டிருக்கிறார்கள். சொல்லக்கூடியவர்கள் அனேகர் ஆன காரணத்தினால் கேட்பதில் கூட களைப்படைந்து இருக்கிறார்கள். அதிகமாகக் கேட்டிருக்கிறோம் இப்பொழுது அனுபவம் செய்ய விரும்புகிறோம் ஏதாவது 'பிராப்தி' செய்வியுங்கள் என்று கூறுகிறார்கள். அப்படி உங்கள் சொற்பொழிவில் ஒவ்வொரு வார்த்தையும் அனுபவம் செய்விக்கக் கூடியதாக அந்த மாதிரி பலம் இருக்க வேண்டும். எப்படி நீங்கள் புரிய வைக்கிறீர்கள் இல்லையா? உங்களை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள், உடல் இல்லை. இந்த வார்த்தை சொல்வதில் கூட கேட்பவர்களுக்கு உங்களுடைய வார்த்தைகளின் பலம் அனுபவம் ஆக. வேண்டும். அந்த மாதிரி பலம் இருக்க வேண்டும். ஒரு நொடிக்காகக் கூட அவர்களுக்கு அனுபவம் ஏற்பட்டு விடுகிறது என்றால் அந்த அனுபவத்தை அவர்கள் விட முடியாது. கவரப்பட்டு அவர்கள் உங்களிடம் வந்து சேருவார்கள். எப்படி இடையிடையே நீங்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டே அவர்களை அமைதியில் கொண்டு செல்வதற்கான அனுபவம் செய்விக்கிறீர்கள், இந்தப் பயிற்சியை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். அவர்களை அனுபவத்தில் கொண்டு சென்று கொண்டேயிருங்கள். இந்த பழைய உலகத்திலிருந்து எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியத்தை கொடுக்க விரும்புகிறீர்கள்

என்றால், சொற்பொழிவில் என்ன கருத்துக்களை கூறுகிறீர்களோ அதைக் கூறிக்கொண்டே வைராக்கிய உள்உணர்வின் அனுபவத்தில் கொண்டு செல்லுங்கள். இந்த உலகம் உண்மையிலேயே அழியப்போகிறது, இதன் மேல் மனதைக் கொடுப்பது வீணானது என்று அவர்கள் உணரட்டும். அந்த பண்டிதர்கள் ஆகியோர் பேசுவதில் கூட பவர் இருக்கிறது என்றால் உங்களுடைய சொற்பொழிவில் பவர் இருக்க முடியாதா என்ன? அசரீரி ஆக்க விரும்புகிறீர்கள் என்றால் அதை அனுபவம் செய்விக்க முடியுமா? அந்த அலை அப்படியே பரவி விட வேண்டும். முழு சபையிலும் அன்பின் அலை பரவி விட வேண்டும். அதைத் தான் நடைமுறையில் அனுபவம் செய்விப்பது என்று கூறுவது, இப்பொழுது அந்த மாதிரியான சொற்பொழிவு இருக்க வேண்டும். அப்பொழுது தான் ஏதாவது மாற்றம் ஏற்படும். இவர்களுடைய சொற்பொழிவோ உலகத்தினருடையதை விட வேறுபட்டது என்று அனுபவம் ஆகட்டும். அவர்கள் சொற்பொழிவில் சபையை சிரிக்க வைக்கட்டும், அழ வைக்கட்டும் ஆனால் அசரீரி நிலையின் அனுபவம் செய்விக்க முடியாது, தந்தையோடு அன்பை ஏற்படுத்த முடியாது. கிருஷ்ணன் மேல் அன்பை ஏற்படுத்த முடியும், ஆனால் தந்தை மேல் ஏற்படுத்த முடியாது. அவர்களுக்குத் தெரியவே தெரியாது. அப்படி வேறுபட்ட விஷயமாக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு கீதை சொன்ன பகவானைப் பற்றி உங்களுடைய கருத்துக்களை கொடுக்கிறீர்கள் ஆனால் எதுவரை தந்தை என்னவாக இருக்கிறார், நாம் ஆத்மாக்கள், அவர் பரமாத்மா என்ற இந்த அனுபவத்தை எதுவரை செய்விக்கவில்லையோ அதுவரை இந்த விஷயமும் எப்படி நிரூபணமாகும். அவர்களுக்கு ஆத்மா மற்றும் பரமாத்மாவில் இரவு பகலுக்கான வித்தியாசம் இருக்கிறது என்று அனுபவம் செய்விக்கும் அளவிற்கு அந்த மாதிரி யாராவது சொற்பொழிவு நிகழ்த்துபவர்கள் இருக்கட்டும். எப்பொழுது வித்தியாசத்தை உணருவார்களோ அப்பொழுது கீதையின் பகவான் நிரூபணமாகி விடும். நீங்கள் சொல்லும் விஷயங்களினால் மட்டும் இது புத்தியில் ஏராது. இன்னும் அதிகமான எண்ண அலைகள் உருவாகும் ஆனால் அனுபவம் செய்வித்துக் கொண்டே சென்றீர்கள் என்றால் அனுபவத்தின் எதிரில் அனைவரும் அடிபணிவார்கள், உங்களை யாரும் வெற்றியடைய முடியாது. சொற்பொழிவில் இப்பொழுது இந்த முறையை மாற்றம் செய்யுங்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**8) பஞ்சாப் சகோதர சகோதரிகளுக்காக அவ்யக்த மகாவாக்கியம்!**

எப்படி பஞ்சாபின் பூமி மேல் அந்த அரசாங்கத்திற்கும் பெருமிதம் இருக்கிறது, அதே போல் பாண்டவ அரசாங்கத்திற்கும் பெருமிதம் இருக்கிறது. பஞ்சாபின் விசேஷத்தன்மை பலன் சொரூபமாக பாப்தாதாவின் காரியத்தில் உதவி செய்பவர்கள் அனைத்து இடங்களை விட அதிகமாக பஞ்சாபிலிருந்து வெளியாகியிருக்கிறார்கள். சிந்து விலிருந்து (பாகிஸ்தானில்) உருவாகி பொறுப்பிலிருப்பவராக ஆகியிருக்கும் இரத்தினங்கள் உங்களை பொறுக்கி எடுத்து இருக்கிறார்கள். இப்பொழுது அந்த மாதிரி நல்ல இரத்தினங்களை எடுப்பது உங்களுடைய கடமை ஆகும். பிரச்சனை செய்பவராக இருக்க வேண்டாம். உங்கள் மூலமாக உண்மையானவர் யார் வெளியாக வேண்டுமோ அதை நீங்கள் உங்கள் சோதனையைச் செய்யுங்கள். தன்னுடைய படைப்பினால் தன்னால் உருவாக்கப்பட்டவர்கள் மூலமாக) எப்பொழுதாவது தொந்தரவிற்கு உள்ளாகிறீர்களா என்ன? இவையனைத்துமோ தொடக்கத்திலிருந்தே நடந்து வந்து கொண்டிருக்கிறது. உங்களுக்கோ இன்னும் சுலபம். நீங்கள் ஏதாவது ஸ்தூலமான பாலனை செய்ய வேண்டியதில்லை, ஆன்மீக பாலனை தான் செய்ய வேண்டும் ஆனால் முதலில் ஆரம்ப கால நேரத்திலோ இரண்டு பொறுப்பும் இருந்தது. ஒரு பொறுப்பை நிறைவேற்றுவது சுலபம் ஆகும், இரண்டு பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு நேரம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இருந்தாலும் முதலில் இரண்டும் முழுமையாக வெளிப்பட்டது தான் இல்லையா? இப்பொழுது உங்கள் அனைவருக்கும் மிக விரைவில் தன்னுடைய நெருக்கத்தில் வருபவர்கள் மற்றும் பிரஜை - இரண்டு விதமான ஆத்மாக்களையும் இப்பொழுது பிரத்யக்ஷம் செய்ய வேண்டும். இந்த பிரத்யக்ஷ பலன் தென்படட்டும். இப்பொழுது கடினமான உழைப்பு செய்கிறீர்கள், பிரத்யக்ஷ பலன் அவ்வளவு தென்படவில்லை. இதற்கான காரணம் என்ன? பாப்தாதாவின் பாலனை மற்றும் உங்களுடைய ஈஸ்வரிய பாலனையில் முக்கியமாக என்ன வித்தியாசம் இருக்கிறது? அதன் காரணமாக எப்படி விளக்கொளி மேல் விட்டில் பூச்சிகள் பலியாகிறது அதே போல் ஏன் பலியாக முடியாமல் இருக்கிறார்கள்? டிராமாவில் பங்கு இருக்கிறது என்ற அந்த விஷயம் வேறு ஆனால் தந்தைக்குச் சமமாக ஆகத்தான் வேண்டும் இல்லையா? பிரத்யக்ஷ பலன் என்றால் ஒரு நாளில் வாரிசாகி விடட்டும் என்று அப்படி

யில்லை ஆனால் எவ்வளவு உழைக்கிறீர்கள், நம்பிக்கை வைக்கிறீர்கள் அதன் படி கூட பலன் வெளியானாலும் பிரத்யக்ஷ பலன் என்று கூறுவோம். அதே ஏன் வெளியாவதில்லை? பாப்தாதா எந்தவொரு காரியத்தின் பலனை அடைய வேண்டும் என்ற ஆசை வைப்பதில்லை. ஒன்றோ நிராகாரமானவராக இருக்கும் காரணத்தினால் பிராப்தியே கிடையாது என்றால் ஆசையும் இருக்க முடியாது. மேலும் சாகாரத்திலும் நடைமுறையில் பாகத்தை செய்தார் என்றாலும் கூட ஒவ்வொரு வார்த்தை மற்றும் காரியத்தில் எப்பொழுதும் தந்தையின் நினைவில் இருந்த காரணத்தினால், பலனிற்கான ஆசை எண்ண அளவில் கூட இருக்கவில்லை. மேலும் இங்கு என்ன நடக்கிறது? யார் ஏதாவது செய்கிறார் என்றால் இங்கேயே அதன் பலனின் பிராப்தியும் இருக்கிறது. எப்படி மரம் அவசியம் பழம் கொடுக்கும் ஆனால் அங்கேயே பழத்தை அருந்த தொடங்கி விட்டீர்கள் என்றால் அதனுடைய பலன் என்ற பழம் முழுமையாக பழுத்து நடைமுறையில் வர வேண்டும் என்பது ஒருபொழுதும் நடவாது. ஏனென்றால் பழுக்காமமேலே பழத்தைச் சாப்பிட்டு விட்டீர்கள். இதுவும் அதே போல் தான், நீங்கள் என்ன செய்தாலும் அதனுடைய பலனின் ஆசை சூட்சுமத்திலும் அவசியம் இருக்கிறது என்றால் செய்தீர்கள் மற்றும் பழத்தை சாப்பிட்டீர்கள், பின்பு பலன் சொரூபம் எப்படி தென்படும். பாதியிலேயே இருந்து விட்டது தான் இல்லையா? பலனின் ஆசைகளும் விதவிதமாக இருக்கின்றன. எப்படி அளவில்லா துக்கத்தின் பட்டியல் இருக்கிறது, அதே போல் பலனின் ஆசைகள் மற்றும் அதற்கான பிரதிபலன் அதை பெறுவதற்கான சூட்சும எண்ணம் அவசியம் இருக்கிறது. ஏதாவது ஒன்றிரண்டு சதவிதம் கூட அவசியம் இருக்கிறது. முற்றிலுமே எதிர்பார்ப்பற்ற உள்உணர்வு இருக்க வேண்டும் என்பது இருப்பதில்லை. முயற்சி செய்வதின் பிராப்தியின் ஞானம் இருந்தும் கூட அதன் மேல் பற்றுதல் இருக்க வேண்டாம். அந்த நிலை மிகக்குறைவாக இருக்கிறது. உதாரணமாக நீங்கள் யாருக்கு சேவை செய்தீர்களோ, எட்டு நபர்களுக்கு புரிய வைத்தீர்கள், அதனுடைய முடிவாக ஓரிருவர் உங்களின் மகிமை செய்கிறார்கள். மேலும் மற்றவர்கள் மகிமையும் செய்யவில்லை, நிந்தனையும் செய்யவில்லை, கம்பீரமாக நடந்து கொள்கிறார்கள். இருந்தாலும் எட்டு நபர்களிலிருந்து உங்களுடைய கவனம் ஓரிரு சதவிகிதத்தில் யார் உங்களை மகிமை செய்தார்களோ அந்த நபர்கள் மேல் அதிகமாகச் செல்லும், அவர்களுடைய கம்பீரத்தன்மையை அறிந்து கொள்வது குறைவாக

இருக்கும், வெளிப்படையாக என்ன அவர் மகிமை செய்தாரோ அதை ஏற்றுக் கொள்ளும் சம்ஸ்காரம் பிரத்யக்ஷம் ஆகி விடும். இதை மற்ற வார்த்தைகளில் இவர்களுடைய சம்ஸ்காரம், இவர்களுடைய சுபாவம் ஒத்துப்போகிறது என்று கூறுகிறார்கள். இன்னாருடைய சம்ஸ்காரம் ஒத்துப்போவதில்லை. எனவே விலகியிருக்கிறார்கள் ஆனால் உண்மையில் இது சூட்சுமமாக பலனை சுவீகாரம் செய்வதாகும். செய்வோம் மற்றும் முடிவிற்காகக் காத்துக் கொண்டிருப்போம் இந்த முக்கிய காரணம் தங்கிப்போய் விடுகிறது. இவர் என்னைப் பற்றி என்ன கூறினார் என்று முதல் கவனம் இந்த விஷயத்தில் செல்லும். நான் சொற்பொழிவு நிகழ்த்தினேன், அனைவரும் என்ன கூறினார்கள்? என்று இதில் கவனம் செல்லும். தன்னை முன்னேற்றிக் கொள்வதற்காக ஒருவரிடமிருந்து ரிசல்ட்டை பெறுவது, தன்னுடைய சேவைக்கான ரிசல்ட்டை தெரிந்து கொள்வது, தன்னுடைய முன்னேற்றத்திற்காக தெரிந்து கொள்வது என்பது வேறு விஷயம், ஆனால் நல்லது மற்றும் தீயதின் விருப்பத்தை வைப்பது வேறு விஷயமாகும். இப்பொழுது செய்வீர்கள் மற்றும் இப்பொழுதே அடைந்தீர்கள் என்றால் சேமிப்பாக எதுவுமே ஆகவில்லை, சம்பாதித்தீர்கள் மற்றும் சாப்பிட்டீர்கள். அதில் மனோபலம் இருப்பதில்லை. அவர் சக்திசாலியாக இருக்க மாட்டார். உள்ளே எப்பொழுதும் பலஹீனமானவராக இருப்பார். ஏனென்றால் காலியாக இருக்கிறது இல்லையா? நிரம்பிய ஒன்று சக்திசாலியாக இருக்கும். அப்படி இது தான் முக்கிய காரணம் ஆகும். எனவே பழம் பழுத்து எதிரில் வரட்டும் ஆனால் அது மிகக் குறைவாக இருக்கிறது. எப்பொழுது இந்த விஷயம் குறைந்து விடுமோ அப்பொழுது நிராகாரி, நிர்அகங்காரி மேலும் கூடவே நிர்விகாரி நிலை எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்று பாடங்களிலும் தென்படும். உடலிலிருந்தபோதிலும் நிராகாரி, ஆத்மீக ரூபம் தென்படும். எப்படி சாகார பாபாவில் பார்த்தீர்கள், வயதானவராக இருந்தார் இல்லையா? ஆனால் இருந்தாலும் உடலைப் பார்க்காமல் ஆத்மா தான் தென்பட்டது. வியக்த நிலை மறைந்து அவ்யக்த நிலையிலேயே தென்பட்டார். அந்த மாதிரியான நிலை நடைமுறையில் இருக்கும். இப்பொழுது நீங்களும் அடிக்கடி தேக அபிமானத்தில் வருகிறீர்கள் என்றால், மற்றவர்களுக்கு நிராகாரி மற்றும் ஆகார ரூபத்தின் சாட்சாத்காரம் ஏற்படுவதில்லை. மனதில் நிராகார நிலை வார்த்தைகளில் நிர்அகங்காரி மற்றும் காரியத்தில் நிர்விகாரி என்ற இந்த மூன்றுமே தேவையாக இருக்கிறது. கொஞ்சம் கூட விகாரம் இருக்க

வேண்டாம். எனது -உனது, மதிப்பு -மரியாதை, இதுவும் விகாரம் தான் அம்சம் இருந்தால் கூட வம்சமாகி விடும். எண்ணத்திலும் கூட விகாரத்தின் அம்சம் இருக்கக்கூடாது, எப்பொழுது இந்த மூன்று நிலையும் ஏற்பட்டு விடுமோ அப்பொழுது தன்னுடைய பிரபாவத்தினால் யார் யார் வாரிசாக மற்றும் பிரஜையாக உருவாக வேண்டுமோ அது உடனடியாக உருவாகி விடும். நீங்கள் இப்பொழுது கடும் உழைப்பு என்ற அழியாத விதையை விதைக்கிறீர்கள், அதனுடைய பலன் மற்றும் சில பிரத்யக்ஷத்திற்கான பிரபாவம் இரண்டும் சேர்ந்தே வெளியாகும். பின்பு துரிதமான சேவை தென்படும். அப்படி இப்பொழுது காரணத்தைப் புரிந்து கொண்டீர்கள் இல்லையா? இதற்கான நிவாரணம் செய்ய வேண்டும். வர்ணனை வரை மட்டும் வைக்காதீர்கள். பிறகு என்ன ஆகி விடும். சாட்சாத்காரமூர்த்தியாக ஆகி விடுவீர்கள். மூன்று நிலைகளும் பிரத்யக்ஷமாகத் தென்படும். இன்றைய நாட்களில் அனைவரும் நடைமுறை நிரூபணத்தை விரும்புகிறார்கள். ஒருவரும் கேட்க விரும்புவதில்லை. ஏனென்றால் துவாபரயுகத்தில் தொடங்கி அனைவரும் கேட்டுக் கொண்டே வந்திருக்கிறார்கள். அதிகமாகக் கேட்டுகேட்டு களைப்படைந்து விடுகிறார்கள். பெரும்பான்மையோர் களைப்படைந் திருக்கிறார்கள். பக்திமார்க்கத்திலும் கேட்டோம் மற்றும் தற்சமயத்தின் அரசியல் தலைவர்கள் அதிகமாகப் பேசுகிறார்கள், எனவே கேட்டுக்கேட்டு களைப்படைந்து இருக்கிறார்கள். இப்பொழுது பார்க்க விரும்புகிறார்கள். ஏதாவது செய்து காண்பியுங்கள், நடைமுறை நிரூபணம் கொடுங்கள். அப்பொழுது தான் கொஞ்சம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று புரிந்து கொள்வோம், அப்படி உங்களுடைய ஒவ்வொரு நடத்தையும் வெளிப் படையான நிரூபணம் ஆகும். பிரத்யக்ஷமானதற்கான எந்தவொரு நிரூபணம் கொடுப்பதற்கான அவசியம் இருப்பதில்லை. அப்படி நீங்கள் பிரத்யக்ஷமாக நடத்தையில் வர வேண்டும். எதிர்காலத்தில் ஏற்படப்போகும் மகாவினாஷம் மற்றும் வரக்கூடிய புதிய உலகம் இவையனைத்தும் உங்களுடைய முகத்தோற்றத்தின் மூலம் தென்படட்டும். பார்த்தார்கள் என்றால், பின்பு வைராக்கியம் தானாகவே வந்து விடும். ஒரு பக்கம் வைராக்கியம், இன்னொரு பக்கம் தன்னுடைய எதிர்காலத்தை உருவாக்குவதற்கான ஊக்கம் வரும். எப்படி ஒரு கண்ணில் முக்தி, இன்னொரு கண்ணில் ஜீவன்முக்தி என்று கூறுகிறீர்கள் அப்படி விநாஷம் முக்திக்கான வாசல் மற்றும் ஸ்தாபனை ஜீவன்முக்திக்கான வாசல். அப்படி இரண்டு

கண்களிலிருந்து இது தென்படட்டும். இந்த பழைய உலகம் அழியப்போகிறது என்பதை உங்களின் கண்கள் மற்றும் நெற்றி கூறட்டும். நெற்றியும் அதிகமாகப் பேசுகிறது. சிலருடைய பாக்கியத்தின் ரேகையாக நெற்றி காண்பிக்கிறது. இது மிக பெரிய அதிசயமாகும் என்று புரிந்து கொள்ளலாம். அப்படி எப்பொழுது இந்த மாதிரி சேவை செய்வீர்களோ அப்பொழுது வெற்றி முரசு கொட்டும். இப்பொழுது உலகின் எதிரில் ஒரு உதாரணம் ஆக வேண்டும். நல்லது - ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂